
கலைஞரின்
கடிதங்கள்



31

16.12.2000 - முதல்
23.07.2001 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 31

16.12.2000 - 23.07.2001

கி.ஆ.பெ. விசுவநாதம் பெரியார் ஆய்வக நூல் நிலையம் சென்னை-18 அண்ணா அறிவாலயம்

தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549 / 97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
SAI BABA TEMPLE BACK SIDE
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.**300.00** CODE :**2300**

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

A2238
894.8116

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் ஆய்வக நூல் நிலையம்
சென்னை-18
தமிழர் அறிவாலயம்



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

"கலைஞரின் கடிதங்கள்" அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் "அணி"யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க." என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்”
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”
“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”
“கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”
“அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
“இடர் எது வரினும், ஏற்பேன்“
“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட 54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
2562. உதவும் கரங்களாய் விளங்கும் உணவு கூட்டுறவுத்துறை!	16-12-2000	21
2563. கைத்தறி நெசவாளரின் காவலன் கழக அரசு!	17-12-2000	37
2564. தொழிலாளர் வர்க்கத்தின் தோழன் தி.மு.க.!	18-12-2000	51
2565. பழைய வரலாறு கொண்ட துறை; பயன்விளைவிக்கும் வருவாய்த்துறை!	19-12-2000	67
2566. எங்கெங்குக் காணினும் திட்டங்கள்; எண்ணிலடங்காச் சாதனைகள்!	22-12-2000	84
2567. பணப் புழுக்கமும்; மனப்புழுக்கமும்!	26-02-2001	100
2568. பழைய ஞாபகம் இல்லையோ; பாடம் கற்கவில்லையோ!	28-02-2001	106
2569. பட்டியலிட்ட குற்றங்கள் பறந்த மாயம் என்ன?	01-03-2001	112
2570. நடந்ததையும் நடப்பதையும் மறக்க முடியுமா?	02-03-2001	120
2571. ஊரையடித்து உலையில் போட்ட ஊழல் யாகம்?	03-03-2001	127
2572. பணப்புழக்கம் இல்லையெனும் பசப்புப் பிரச்சாரம்!	6-3-2001	136
2573. விடியற்காலை வெளிச்சக் கதிர்கள்!	29-03-2001	157

2574. எண்ணற்ற தம்பிமார்களின் இதயமறிவேன்!	03-04-2001	163
2575. வீண் வேலை மட்டுமல்ல; விபரீத வேலையுங்கூட!	5-4-2001	166
2576. கொட்டுவோம் முரசு: கோட்டையில் மீண்டும் நமது அரசு!	06-04-2001	170
2577. வழிகாண விழி விரித்துக் கிளம்புக திருச்சிக்கு!	08-04-2001	174
2578. வேறென்ன நம்மால் ஆறுதல் கூறமுடியும்?	09-04-2001	178
2579. அணிவகுத்து நிற்கிறோம்; பணி முடித்து திரும்புவோம்!	12-04-2001	182
2580. கழகம் காத்திடும் காவல் நெஞ்சங்கள்!	13-04-2001	186
2581. மழை பொழிகிறது; மனம் குளிர்கிறது!	14-04-2001	190
2582. என் நெஞ்சில் நீயும்! உன் நெஞ்சில் நானும்!	16-04-2001	194
2583. ஈரானில் வாஜ்பாய் இதயம் திறந்த பேச்சு!	17-04-2001	198
2584. பொன்னான நேரத்தை வீணே செலவிட வேண்டுமா?	23-04-2001	203
2585. நீலிக்கண்ணீர்; நீ பொருட்படுத்தத் தேவையில்லை!	24-04-2001	207
2586. விஷமுறிவுக்கு, நான் தேடிவந்த மூலிகை!	29-04-2001	211
2587. ஒன்றுபட்டு நின்றே உழைத்திடுக நன்றே!	30-04-2001	216
2588. கழகக் கூட்டணி, வெற்றிச் சிகரம் ஏறிடச் செய்க!	01-05-2001	219
2589. தமிழகத்தில், கேரளத்தில் ஏன் இந்தத் தடுமாற்றம்?	02-05-2001	223

2590. உடன்பிறப்புகளுக்கு அன்பு வேண்டுகோள்!	06-05-2001	227
2591. அவர்களே அறிவித்த உண்மை அறிவாய்! உழைத்திட உடன் எழுவாய்!	07-05-2001	231
2592. கூடிப் பணி புரிந்தால் நம் கூட்டணிக்கே வெற்றி!	08-05-2001	236
2593. மூத்த பிள்ளை வீட்டில் ஏற்பட்ட அனுபவங்கள்!	27-05-2001	241
2594. வென்றவன் சொல்வதெல்லாம் வேதம் அம்மா!	28-05-2001	244
2595. உழவர் சந்தை - வக்கிர முடிவும்; வாபஸ் படலமும்!	29-05-2001	249
2596. எம்.ஜி.ஆர். அடித்த எச்சரிக்கை மணி!	30-05-2001	254
2597. விடையும் விளக்கமும் விரைவில் கிடைக்கும்!	31-05-2001	259
2598. கைகளை மேலும் சேறாக்கிக் கொள்ளாதீர்!	01-06-2001	263
2599. தலைவர் கலைஞர் பிறந்தநாள் செய்தி!	02-06-2001	269
2600. காதலா? சதியா? கண்மூடி சோதிடமா?	07-06-2001	272
2601. மனச்சுமையை இறக்கி வைக்கிறேன்!	08-06-2001	277
2602. வரலாறு திரும்பும் என்பதை நிரூபிக்கும் வரலாறு!	09-06-2001	280
2603. மெகா எமர்ஜன்சியும்; மினி எமர்ஜன்சியும்!	10-06-2001	285

2604. தீர்மானம் நிறைவேறியது! திரை விலகி உண்மை தெரிகிறது!	11-06-2001	293
2605. கவர்னர் முடிவை யாரும் கேள்வி கேட்க முடியாது!	12-06-2001	300
2606. காணுங்கள்! கடந்த கால முன்மாதிரிகளை!	13-06-2001	305
2607. காவிரிப் பிரச்சினையும் கர்நாடகத்தின் பொறுப்பும்!	14-06-2001	311
2608. நல்லதைப் பாராட்டாத கல்நெஞ்சம் நமக்கில்லை!	15-06-2001	320
2609. தெளிவடையாத நெஞ்சங்கள் தெளியட்டும்!	20-06-2001	327
2610. மனித நேயமும் மத நல்லிணக்கமும்!	22-06-2001	334
2611. அம்பலம்! அம்பலம்! அரிசியை வைத்து ஆடிய கூத்து!	23-06-2001	343
2612. மனம் திறந்து சொல்லுகிறேன்; மறு பதிப்பு?	29-06-2001	349
2613. மருத்துவமனைக்குச் சென்று வருகிறேன்!	06-07-2001	353
2614. அண்ணாவின் 6342ம் ஆயிரம் நன்றியும்!	13-07-2001	357
2615. ஒரு வரிகூட விடாமல் வரலாறு பதிய வைக்கும்!	15-07-2001	361
2616. அந்த ஒரு நாள் வருவதற்கு வழி பிறக்குமா?	18-07-2001	369
2617. பச்சை பூசிக் கொண்டால் கழுகு கிளியாகுமா?	19-07-2001	379
2618. உண்மை கசக்கிறது, நாமென்ன மருந்து தர முடியும்?	22-07-2001	386
2619. எங்கள் நட்பின் ஈரம் காயப்போவதில்லை!	23-07-2001	393

2562. உதவும் கரங்களாய் விளங்கும் உணவு கூட்டுறவுத்துறை!

உடன்பிறப்பே,

மக்கள் நல அரசு, வாக்களித்தோர், வாக்களிக்காதோர் எனும் வேறுபாடகற்றி எல்லோருக்கும், பொதுவாகச் சமூகப் பாதுகாப்பையும் (Social Security), குறிப்பாக உணவுப் பாதுகாப்பையும் (Food Security) தடையின்றி வழங்கிட வேண்டும் என்பதே அடிப்படைச் சித்தாந்தம் ஆகும். இந்தச் சித்தாந்தத்தை உயிர்மூச்சாகப் போற்றிப் பின்பற்றி வருவது கழக அரசு என்பதை நீ நன்கறிவாய்.

உண்டி முதற்றே உலகு என்பதால், மாறி மாறி வரும் இயற்கை விளைவுகளாலும், சமூக விரோதிகளால் செயற்கையாக உருவாக்கப்படும் நிலைமைகளாலும், சமுதாயம் எவ்விதப் பாதிப்புக்கும் உள்ளாகிடாமல் காத்து, அத்தியாவசிய உணவுப் பொருள்களைச் சேமித்து, அவற்றைச் சிந்தாமல் சிதறாமல் உரியவர்களுக்கு, தேவையான நேரத்தில், தகுதியான அளவில் விநியோகிப்பதில் மிகுந்த கவனத்துடனும், எச்சரிக்கையுடனும் நாம் கடமையாற்றி வருகிறோம். அதன் காரணமாகத் தமிழகத்தில் உணவுப் பொருள்கள் விநியோகம் சீராகவும், செம்மையாகவும் நடந்தேறி வருகிறது.

தமிழகத்தில் உள்ள அனைத்து பிரிவு மக்களுக்கும் போதுமான அளவிற்கு நியாயமான விலையில் அத்தியாவசிய பண்டங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு பொதுவிநியோகத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அது குறித்த விளக்கங்களையும் பொது விநியோகத் திட்டத் துறையின் மூலம் இந்த அரசு கடந்த நான்காண்டு காலமாக ஆற்றி

வரும் பணிகளையும், பொது விநியோகத் திட்டம் பெருமளவிற்குக் கூட்டுறவுத் துறையின் மூலம் நிறைவேற்றப்பட்டு வருவதால் அத்துறை நிகழ்த்தியுள்ள சாதனைகளையும் இன்றைய கடிதத்தில் விவரமாகத் தந்துள்ளேன்.

* கூட்டுறவு அமைப்புகளும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், மகளிர் குழுக்களும் சேர்ந்து தமிழகத்தில் 27,306 நியாயவிலைக் கடைகள் மூலமாக 1 கோடியே 58 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்குத் தேவையான அரிசி, சர்க்கரை, கோதுமை, மண்ணெண்ணெய் போன்ற இன்றியமையாப் பொருட்களை வழங்கி வருகிறது.

* இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான் இந்தியாவிலே முதன் முதலாகக் கணினி மூலம் குடும்பங்களின் விவரங்களையும், குடும்பத் தலைவரின் புகைப்படத்தையும் பதிவு செய்து குடும்ப அட்டை வழங்கி இருக்கிறோம்.

* முந்தைய அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 31-12-1995 வரை ஒரு குடும்ப அட்டைக்கு மாதமொன்றுக்கு அதிகபட்சமாக வழங்கப்பட்ட அரிசி 12 கிலோ ஆகும்.

* தேர்தலுக்குச் சில மாதங்களுக்கு முன்பு அதாவது 1-1-96 முதல் தற்காலிக ஏற்பாடாகக் குடும்ப அட்டைக்கு 20 கிலோ என்று ஆணை பிறப்பித்தார்கள்.

* ஆனால் இந்த ஆட்சியில் நிரந்தர ஏற்பாடாகக் குடும்ப அட்டைக்கு மாதமொன்றுக்கு 20 கிலோ அரிசி வழங்கப்பட்டு வருகிறது. முந்தைய ஆட்சிக் காலத்தில் அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ.3.75 என்று வழங்கப்பட்டு வந்தது.

* இந்த அரசில் ரூ.3.75லிருந்து ரூ.3.50 ஆகக் குறைத்து வழங்கப்பட்டு வருகிறது. மைய அரசு தமது தொகுப்பிலிருந்து தமிழகத்திற்கு வழங்கும் அரிசியை வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு 1-4-2000லிருந்து கிலோ ஒன்றுக்கு ரூ.5.90 வீதம் என்றும், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.11.80 என்றும் நிர்ணயித்து வழங்கியது.

* 26-7-2000லிருந்து வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு ரூ5.65 என்றும், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கு ரூ.11.30 என்றும் நிர்ணயித்து வழங்கி வருகிறது.

* ஆனால் நமது தமிழக அரசு இந்த விலை உயர்வை மக்கள் மீது சுமத்தாமல் ஏற்கனவே வழங்கி வந்த கிலோ ஒன்றுக்கு ரூபாய் 3.50 என்ற விலைக்கே தொடர்ந்து வழங்கி வருகிறது.

* முந்தைய ஆட்சிக் காலத்தில் 1,60,000 டன் வரை சாதாரண ரக அரிசி கிலோ ஒன்றுக்கு 5.37 என்றும், சன்ன ரக அரிசி ரூ.6.17 என்றும் மத்திய அரசு தமிழகத்திற்கு வழங்கியது.

* ஆனால் மத்திய அரசு தற்போது தனது தொகுப்பிலிருந்து வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கென 91,580 மெட்ரிக் டன் அளவிற்குத்தான் கிலோ அரிசி ரூ. 5.65 விலைக்கு வழங்கி வருகிறது. இதற்கு மேல் மத்திய அரசிடமிருந்து நாம் அரிசி வாங்கினால் அதன் விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 11.30 ஆகும். முந்தைய ஆட்சிக் காலத்தில் பொது விநியோகத் திட்டத்தில் வழங்கிய அரிசியினுடைய அளவு குடும்ப அட்டைக்கு 12 கிலோ என்ற காரணத்தினால், சராசரியாக வழங்கப்பட்டு வந்த அரிசியினுடைய அளவு 1,30,000 டன்னிலிருந்து 1,60,000 டன் வரை இருந்தது. தற்போது குடும்ப அட்டைக்கு 20 கிலோ அரிசி வழங்கப்படுகின்ற காரணத்தினால், பொதுவிநியோகத் திட்டத்தில் 1,90,000 டன் சராசரியாக மாதம் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக வழங்கப்படும் அரிசியின் தேவையும் அதிகமாகிறது. அதனால் 1995-96-ல் உணவுப் பொருட்களுக்காக வழங்கப்பட்ட மான்யம் 615 கோடி ரூபாயிலிருந்து தற்போது இந்த ஆண்டு 1700 கோடி ரூபாய் வரை உயருமென எதிர்பார்க்கப்படுகிறது.

* விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யும் நெல்லுக்கு முந்தைய ஆட்சியில் 1995-96இல் பொது ரகத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு 360 ரூபாய் என்றும், சன்ன ரகத்திற்கு 375 ரூபாய் என்றும் விலை தரப்பட்டதற்கு மாறாக தற்போது இந்த ஆட்சியில் இந்த ஆண்டு பொது ரகத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு

510 ரூபாயும், சன்ன ரகத்திற்கு 540 ரூபாயும் என்று விலை தரப்படுகின்றது.

* மேலும் மத்திய அரசு நிர்ணயித்த இந்த விலையை வழங்குவதுடன் இணைக் கொள்முதல் செய்கின்ற காலத்தில் 35 ரூபாயும், ஏக போகக் கொள்முதல் செய்யும்போது 50 ரூபாயும் குவிண்டால் ஒன்றுக்கு இடை நிகழ் செலவாகக் கழக அரசு வழங்கி வருகிறது. ஆனால் முந்தைய அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இது போன்று இடைநிகழ் செலவாகத் தரப்படவில்லை. இந்த நான்கரை ஆண்டு காலத்தில் இடைநிகழ் செலவாக விவசாயிகளுக்கு 228 கோடியே 30 இலட்ச ரூபாய் மத்திய அரசு நிர்ணயித்த விலையைவிடக் கூடுதலாக வழங்கியுள்ளது. இந்த ஆட்சிக் காலத்தில்தான் அதிக அளவில் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

* 1995ஆம் ஆண்டு 3 இலட்சத்து 38 ஆயிரம் டன் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டதற்கு மாறாக இந்த ஆண்டு அதாவது நவம்பர் 30ஆம் தேதி வரை 17 இலட்சத்து 57 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அதனால் விவசாயிகளும் பயனடைந்துள்ளார்கள்.

* விவசாயிகளிடமிருந்து இவ்வாறு அதிக விலை கொடுத்துக் கொள்முதல் செய்து பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அரிசியின் அடக்க விலை கிலோ ஒன்றுக்கு ரூ.11.80-க்கு மேலாகும்.

* விவசாயிகளின் நலன் கருதியும், நுகர்வோரின் நலன் கருதியும் இந்த அரசு நெல்லை விவசாயிகளிடமிருந்து அதிக விலை கொடுத்துக் கொள்முதல் செய்து வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ளவர்கள் மேலுள்ளவர்கள் என்று வித்தியாசம் பாராமல் அனைவருக்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.3.50-க்கு வழங்குகிறது.

* கேரள மாநிலத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு ஒரு கிலோ அரிசி ரூ. 6.20 என்றும், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கு ரூ. 10 என்றும்; ஆந்திரப் பிரதேசத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு ரூ. 5.25 என்றும், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கு

ரூ.12 என்றும்; கர்நாடகத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு ரூ. 6.15 என்றும், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கு ரூ. 12.25 என்றும், மேற்கு வங்கத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கு ரூ. 6.40 என்றும், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கு ரூ. 12.60 என்றும் வழங்கப்பட்டு வருகிறது.

* தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கும், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கும் எந்த விதமான பாகுபாடும் இன்றி ஒரு கிலோ அரிசி ரூ. 3.50 வீதம் 20 கிலோ வீதம் வழங்கி வருகிறோம்.

* மைய அரசு 1-4-2000லிருந்து வருமான வரி செலுத்தக் கூடிய குடும்ப அட்டைதாரர்களுக்குச் சர்க்கரை ஒதுக்கீடு செய்வதில்லை. எனினும் மாநில அரசு பாகுபாடின்றி அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் சர்க்கரை வழங்கி வருகிறது.

லெவி இல்லாத சர்க்கரையை வெளிச் சந்தையிலே வாங்கி கிலோ ஒன்றுக்கு ரூ.13 என்று நியாயவிலைக் கடைகளில் விற்பனை செய்து வருகிறது. இதன் காரணமாக 4 கோடியே 75 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படுகின்றது

* ஏழையெளிய மக்களுக்குச் சரியான அளவிலும் விரைந்தும் மண்ணெண்ணெய் கிடைக்க வேண்டும் என்பதற்காக இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ்நாட்டில் 1997 ஆம் ஆண்டில் ஒரு புதிய திட்டமாக மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் (Kerosene Bunks) அமைக்கப்பட்டு உள்ளன. இன்றைய நிலையில் 214 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. மேலும், 300 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்கப்பட திட்டமிடப்பட்டு பல்வேறு நிலைகளில் பணி நடைபெற்று வருகிறது.

* முந்தைய ஆட்சிக் காலத்தின் இறுதியில் 20,266 முழுநேரக் கடைகளும் 1,749 பகுதி நேரக் கடைகளும் ஆக மொத்தம் 22,015 நியாயவிலைக் கடைகள் இருந்தன. தற்போது 23,082 முழுநேரக்

கடைகளும், 4,224 பகுதிநேரக் கடைகளுமாக மொத்தம் 27,306 கடைகள் நடைபெற்று வருகின்றன.

* இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு மகளிரே நடத்தும் நியாய விலைக் கடைகள் என்ற வகையில் புதிதாகத் திட்டம் வகுக்கப்பட்டு அதையொட்டி இதுவரையில் 210 கடைகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

* மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொது விநியோகத் திட்டத்தினை வாரம்தோறும் ஆய்வு செய்திட அரசு ஆணையிட்டுள்ளது. கிடங்குகளிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கு எந்தெந்தத் தேதிகளில் எந்தெந்தப் பொருட்கள் அனுப்பப்படுகின்றன என்ற விவரங்களைப் பொதுமக்களுக்குத் தெரிவிக்கின்ற வகையில் நிலையான மாத அட்டவணை (Fixed Calender System) தயாரிக்கப்பட்டு மக்களுக்கு ஒளிவு மறைவின்றி எதுவும் வெளிப்படையாகத் தெரியக் கூடிய திட்டமாகச் செயல்படுத்திடவும் மாதந்தோறும் 100 சதவீதம் அளவில் நியாயவிலைக் கடைகளில் அரிசி ஒதுக்கீடு செய்யவும் ஆணையிட்டு நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

* மாவட்ட அளவில் மற்றும் கோட்ட அளவில் பொது விநியோகத் திட்ட ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளும் தன்னார்வ நுகர்வோர் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் உறுப்பினர்களாக உள்ளனர்.

* குடிமைப் பொருட்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவினைச் சீரமைத்து அதனை ஒரு கூடுதல் காவல்துறை இயக்குநரின் (சிறப்பு நடவடிக்கை) கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து, அப்பிரிவிற்கு ஒரு காவல் துறைத் தலைவர் மற்றும் காவல் கண்காணிப்பாளர் பணியிடங்கள் கூடுதலாகத் தோற்றுவிக்கப்பட்டு பொது விநியோகப் பொருட்கள் கடத்தப்படுவதும், பதுக்குவதும் தடுக்கப்படுகிறது.

* இதில் குற்றம் புரிபவர்கள் மீது இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின்கீழும் மற்றும் கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் அத்தியாவசியப் பண்டங்களின் விநியோகத்தைப் பராமரிக்கும்

சட்டத்தின் கீழும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் தத்தம் அதிகார வரம்பிற்குட்பட்ட நியாயவிலைக் கடைகளைப் பார்வையிடுவதற்கும், அவர்கள் கண்டுபிடிக்கும் குறைபாடுகளை மாவட்ட மற்றும் வருவாய் கோட்ட அளவிலான பொது விநியோகத் திட்ட ஆலோசனைக் குழுக்களின் கவனத்திற்குக் கொண்டு செல்வதற்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

* வறியோர் நலன் காக்கும் பொது விநியோகத் திட்டத்தினைக் குடும்ப அட்டைதாரர்கள் அறிந்து கொள்ளும் வகையில் மக்கள் சாசனம் (Citizen Carter) தயாரித்து வெளியிடப்பட்டுள்ளது.

* கிராம அளவில் பொது விநியோகத் திட்டத்தினைக் கண்காணிக்க கிராமப் பஞ்சாயத்துகளின் பொது விநியோக ஆலோசனைக் குழுக்கள் அமைக்க ஊரக வளர்ச்சித் துறையில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் மற்றும் குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுத் துறை, கூடுதல் காவல்துறை இயக்குநர் ஆகியோருடன் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சிறப்பு ஆணையாளர், இரு வாரங்களுக்கு ஒரு முறை பொது விநியோகத் திட்ட செயல்பாட்டினை ஆய்வு செய்திட உத்தரவிடப்பட்டுள்ளது.

* தற்போது அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மொத்த எண்ணிக்கை 30 ஆகும். நுகர்வோர் விழிப்புணர்வு தொடர்புடைய நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி அளித்திடும் வகையில் 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சொந்தக் கட்டிடங்கள் இல்லாத நியாயவிலைக் கடைகளுக்கு ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் உள்ளிட்ட பல அரசு திட்டங்கள் மூலம் 8,109 கடைகள் கட்டப்பட்டு நியாய விலைக்கடைகள் அவற்றில் இயங்கி வருகின்றன.

* 1996 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அரிசியின் கையிருப்பு 3.79 இலட்சம் டன்களாக இருந்தது, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி தட்டுப்பாடின்றி வழங்க வேண்டுமென்பதற்காகவும், விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டும் நெல் கொள்முதல் செய்ததன் காரணமாக 2000 ஆம் ஆண்டில் அரிசியின் கையிருப்பு 10.57 இலட்சம் டன்களாக உயர்ந்துள்ளது.

* 1995-96ஆம் ஆண்டில் நவீன அரிசி ஆலைகள் மூலமாகவும், அரைவை முகவர்கள் மூலமாகவும் அரைக்கப்பட்ட நெல்லின் அளவு 3,26,754 டன்களாகும். இந்த ஆண்டு இதுவரை 13,51,819 டன்கள் அரைவை செய்யப்பட்டுள்ளன.

* ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தலைமைச் செயலாளர் தலைமையில் விலைவாசி கண்காணிப்புக் குழுக் கூட்டம் நடைபெறுகிறது. உன்னிப்பாகக் கண்காணித்துத் தேவைப்படும் நேரங்களில் வெளிச்சந்தையில் விலைவாசி ஏறும்போது கூட்டுறவு அமைப்புகளின் மூலமாகவும் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகவும் பொருட்களை வாங்கி விநியோகித்து விலைவாசி ஏற்றத்தைக் குறைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

* பொருளாதார வளர்ச்சியில் அனைத்துப் பொருட்களும் அன்றாடம் விலையேறி வந்தபோதிலும் பொதுவாக விலைவாசிகள் கட்டுக்குள் இருக்கின்றன. உதாரணமாக துவரம் பருப்பு 1995 நவம்பர் மாதம் ரூ.31.61 ஆக இருந்தது, இந்த ஆண்டு நவம்பர் மாதம் ரூ.25.50 என்றும், கடலெண்ணெய் ரூ.38.85 ஆக இருந்தது ரூ.37.34 என்றும், நல்லெண்ணெய் ரூ.42.70 ஆக இருந்தது ரூ.37.05 என்றும், தேங்காய் எண்ணெய் ரூ.48.55 ஆக இருந்தது ரூ.40.96 என்றும், காய்ந்த மிளகாய் ரூ.47.87 ஆக இருந்தது ரூ.29.53 என்றும், புளி ரூ. 22.36 ஆக இருந்தது ரூ.22.20 என்றும் இந்த ஆண்டு நவம்பர் திங்களில் விலை குறைந்துள்ளது.

* நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான நவீன அரிசி ஆலையில் உமி எரிபொருளாகப் பயன்படுத்தப்பட்டு வந்ததால் மாசு ஏற்பட்டுச் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டது. மாசுக்கட்டுப்பாடு செய்யும் நோக்கத்தில் உமி எரிவாயுவைப் (Gasifier) பயன்படுத்தி இயக்குவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு

நாகப்பட்டினம் மாவட்டத்தில் இயந்திர நிர்மாண வேலைகள் நடைபெற்று வருகின்றன.

* திருவாரூர் நவீன அரிசி ஆலையில் இயற்கை வாயுவைப் பயன்படுத்தி இயக்கச் செய்ய இயந்திரங்கள் பொருத்தி சோதனை ஓட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இயற்கை வாயு பயன்படுத்தியதால் நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு இந்த ஒரு ஆலையில் மட்டும் மாதம் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் சேமிப்பு ஏற்படும்.

* உமிக் கரியைப் பயன்படுத்தி உயிர் உரம் (Bio- fertilizer) தயாரிக்க முடியும் என்பதை அறிந்து வேளாண்மை பல்கலைக் கழகத்தின் தொழிற்நுட்ப உதவியுடன் இந்த ஆண்டு ஏப்ரல் முதல் கடைச்சநேந்தல், எருக்கூர், திருவாரூர், பட்டுக்கோட்டை, சிதம்பரம் மற்றும் திம்மாவரம் ஆகிய ஆறு நவீன அரிசி ஆலைகளிலும் கிடைக்கும் உமிக் கரியைப் பயன்படுத்தி உயிர் உரம் தயாரிக்கப்பட்டு விற்பனைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்த ஆண்டு நவம்பர் முடிய நாற்பது இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள உயிர் உரம் விற்பனையாகியுள்ளது. இத்திட்டம் முழு அளவில் செயல்படுத்தப்படும்போது ஆண்டு ஒன்றுக்கு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சுமார் ரூ.40 கோடி வரை வருவாய் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

* தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் தற்காலிகமாகப் பணிபுரிந்து வந்த 2,699 சுமை தூக்கும் தொழிலாளர்கள் இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

கூட்டுறவு

* கூட்டுறவு அமைப்புகள் பொருளாதார வளர்ச்சிக்கான செயலாக்க மிக்கதும் ஆற்றல் வாய்ந்ததுமான கருவியாக விளங்குகின்றன.

* பொருளாதாரத்தின் பல்வேறுபட்ட நிலைகளில் போதுமான வளர்ச்சியைத் தமிழகக் கூட்டுறவு இயக்கம் கண்டுள்ளது. வேளாண் கடன், சந்தைத் தலையீடு, வேளாண்மைப் பொருட்களுக்கான ஆதரவு விலை மற்றும் பொதுவிநியோகம்

போன்ற பல முக்கியக் கொள்கைகளைச் செயற்படுத்துவதற்கான கருவியாகக் கூட்டுறவுகள் அமைந்துள்ளன.

* தற்போது 23,000 கூட்டுறவுச் சங்கங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுக்கள் உள்ளன. மேற்படி சங்கங்களில் உள்ள நிர்வாகக் குழுக்களில் சுமார் 40,000 மகளிர் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஆகவும், சுமார் 20,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நிர்வாகக் குழு உறுப்பினர்களாகவும் உள்ளனர். கூட்டுறவு நிறுவனங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

* 20 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழகத்திலுள்ள கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக சபைகள் இல்லாத நிலைமையை மாற்றி ஜனநாயக முறையில் தேர்தல்கள் நடத்தப்பட்டுச் சிறப்பாக இயக்கி வருவதைப் பாராட்டும் முகத்தான் உலகின் மிகப் பெரிய உர நிறுவனங்களில் ஒன்றாகிய இப்கோ என்னும் உழவர் உரக் கூட்டுறவு நிறுவனம், 1998-99 ஆம் ஆண்டிற்குரிய சக ஹாரித்தா பந்து என்னும் விருதினை 51 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசுடன் தமிழகக் கூட்டுறவுத் துறைக்கு 19-11-1999 அன்று புதுடெல்லியில் வழங்கியது.

* பொதுவிநியோகத் திட்டத்தைச் செயல்படுத்தும் சங்கங்களுக்கு அரிசிக்கு வழங்கப்படும் விளிம்புத் தொகை (Marg Money) குறைவாக இருந்த காரணத்தினால் பல சங்கங்கள் நிதிநெருக்கடியைச் சந்தித்த நிலையில், அரசு பரிசீலனை செய்து, அரசுக்கு ஏற்படும் கூடுதல் நிதிச் சுமையைக் கூடப் பொருட்படுத்தாது, 19-7-2000 முதல் விளிம்புத் தொகையைக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.28லிருந்து ரூ.45 ஆக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது. அதே போன்று மண்ணெண்ணெய்க்கு 26-3-2000 முதல் பேரல் ஒன்றுக்கு ரூ.61.92 என்று இருந்ததை பேரல் ஒன்றுக்கு ரூ.72 ஆக உயர்த்தி ஆணையிட்டுள்ளது.

* மேலும், கோதுமைக்கு 21-1-2000 முதல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.17 என்றிருந்ததை ரூ.30 ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

* நியாயவிலைக் கடைகளில் பணிபுரியும் விற்பனையாளர்களின் ஊதிய விகித முறை ரூ.430-10-450-15-525 இல் இருந்து ரூ.1250-25-1325-45-1640 என 1-4-2000 முதல் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. தொகுப்பூதியம் பெறும் விற்பனையாளர்களுக்கு ரூ.900 என்பது ரூ.1300 ஆக உயர்த்தப்பட்டது. கட்டுனர்களின் தொகுப்பூதியம் ரூ.800 என்பது ரூ.1150 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

* இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, 3292 கூட்டுறவு நகர வங்கி பணியாளர்களுக்கும், 1573 கூட்டுறவு நிலவளவங்கி பணியாளர்களுக்கும், 3862 கூட்டுறவு பணியாளர் சங்க ஊழியர்களுக்கும் மற்றும் 22,548 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி பணியாளர்களுக்கும் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு மூலமாக
விவசாயிகளுக்கு அரசு அளித்த உதவிகள்

* குறுகிய காலப் பயிர்க் கடனுக்கு ஒரு சதவீத வட்டி 13-11-1997 முதல் குறைக்கப்பட்டது (13 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடு).

* 1996-97ல் வறட்சியாலும், 1997 நவம்பர் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குக் குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாகவும், மத்திய காலக் கடன்களை நீண்ட காலக் கடன்களாகவும் மாற்றியதால் அபராத வட்டித் தொகையாக ரூ.50 கோடி அளவுக்கு விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

* 1997-98ம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் குறுகிய காலக்கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்றியதால் 62 கோடியே 35 இலட்சம் ரூபாய் அரசு செலவிட்டது.

* 1998-99ல் குறுகிய காலப் பயிர்க்கடனை முறையாகத் திருப்பிச் செலுத்திய விவசாயிகளுக்குக் கடன் தொகையில் 6.25 சதவிகிதம் வட்டி ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட்டது. இதனால் 1,47,654 பேர் 6 கோடியே 58 இலட்சம் ரூபாய் அளவுக்குப் பயனடைந்தனர்.

* 1999-2000ல் வட்டி ஊக்குவிப்புத் தொகை 7 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 2,42,817 விவசாயிகளுக்கு 19 கோடியே 72 இலட்சம் ரூபாய் அளவிற்கு ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட்டது.

* 31-7-2000 வரை தவணை தவறிய வேளாண்மை சார்ந்த கடன்களை, வட்டியுடன் திருப்பிச் செலுத்திய 3,40,727 சிறிய, பெரிய விவசாயிகள் அனைவருக்கும் 13 கோடியே 20 இலட்சம் ரூபாய் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டது.

* 1995-96ல் கூட்டுறவு வங்கிகள் மூலம் ஒருவருக்கு வழங்கப்பட்ட நகைக் கடன் ரூ.25,000/-ஐ 6-9-96 முதல் ரூ.50,000/- ஆகவும் 27-5-98 முதல் ரூ.1,00,000 ஆகவும் உயர்த்தப்பட்டது.

* குறுகிய காலப் பயிர்க்கடனாக ரூ.3512.58 கோடியும், வேளாண் சார்ந்த மத்திய காலக்கடனாக ரூ.434.39 கோடியும் மற்றும் நில மேம்பாட்டுக்கென நீண்ட காலக்கடனாக ரூ.867.42 கோடியும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

* தமிழகத்தில் விவசாயிகள் கடன் அட்டை வழங்கும் திட்டம் 1999ம் ஆண்டு முதல் அமல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலம் 31-10-2000 வரை 1,64,837 விவசாயிகளுக்கு கிஸான் கடன் அட்டைகள் வழங்கப்பட்டு அவற்றிற்கு 606 கோடியே 29 இலட்ச ரூபாய் அளவிற்கு கடன் அளவு அனுமதிக்கப்பட்டுள்ளது.

* ரூ.5 கோடியும் அதற்கு மேலும் வைப்புத் தொகை வைத்துள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் புதிய வீடு கட்டிக்கொள்ள கடனுதவியாக ரூ.5 இலட்சம் வரையிலும், வணிகவளாகம் கட்டிக் கொள்ள கடனுதவி யாக ரூ.10 இலட்சம் வரையிலும், கணிப்பொறி மையம் அமைக்க கடனுதவியாக ரூ.10 இலட்சம் வரையிலும், விவசாய நிலம் வாங்க கடனுதவியாக ரூ.1 இலட்சம் வரையிலும், மூலப் பத்திர ஈட்டுக் கடனாக ரூ.1 இலட்சம் வரையிலும், மருத்துவமனை மற்றும் பொறியாளர் சேவை மையம் அமைக்க ரூ.10 இலட்சம் வரையிலும் நேரடியாகக் கடன் வழங்கி வருகின்றன.

* கூட்டுறவு வங்கிகள் மூலமாக வேளாண் சாரா கடன்கள் சிறு கைவினைத் தொழில்கள், தச்சுவேலை, வளையல், பிரம்பு, ரப்பர், தோல் தொழில், மண்பாண்டம் செய்தல், அச்சகங்கள் அமைத்தல் போன்ற தொழில்களுக்குக் கடந்த நான்காண்டுகளில் ரூ.761 கோடி அளவிற்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கடன் தொகையில் ரூ.427 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

* 1996ம் ஆண்டு முதல் அக்டோபர் 2000 வரை ரூ.14 கோடியே 64 இலட்சத்திற்குப் பூச்சிகொல்லி மருந்துகள் விவசாயிகளுக்குக் கூட்டுறவுத் துறையின் மூலம் விநியோகம் செய்யப்பட்டன..

* அதே போல, 1996ம் ஆண்டு முதல் அக்டோபர் 2000 வரை ரூ.10 கோடியே 79 இலட்சத்திற்கு விதைகள் விவசாயிகளுக்குக் விநியோகம் செய்யப்பட்டன.

* 1996ம் ஆண்டு முதல் அக்டோபர் 2000 வரை ரூ.3 கோடியே 13 இலட்சத்திற்கு வேளாண் கருவிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

* 1996-97லிருந்து 2000-2001 வரை 71 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு நவீன வங்கிக் கட்டிடங்கள் ரூ.6 கோடியே 14 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 18 தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு நவீன வங்கிக் கட்டிடங்கள் ரூ.2 கோடியே 34 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டது. 16 வங்கிகளின் கட்டிடப்பணி நடைபெற்று வருகிறது.

* 1643 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு பாதுகாப்பு அறை மற்றும் பாதுகாப்புக் கதவுகள் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

* நகர கூட்டுறவு வங்கிகள் கணினிமயமாக்கும் திட்டத்தின்கீழ் தமிழகத்திலுள்ள 127 நகர கூட்டுறவு வங்கிகளில் இதுகாறும் 43 வங்கிகள் கணினி மயமாக்கப்பட்டுள்ளது.

* 1997ம் ஆண்டு முதல், புதிதாக 26 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளும் 62 இடங்களில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக் கிளைகளும் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

* சரியான விலையில் தரமான பொருட்கள் பொதுமக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்ற சீரிய நோக்கத்துடன் மொத்த விற்பனை பண்டகசாலைகள் மாவட்ட அளவில் செயல்பட்டு வருகின்றன. புதியதாக ஆரம்பிக்கப்பட்ட மாவட்டங்களுக்கும் (விழுப்புரம், திருவண்ணாமலை, கரூர், நாமக்கல், திருவள்ளூர், பெரம்பலூர், தேனி) இதே நோக்கத்துடன் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் தொடங்கப்பட்டுள்ளன.

* நட்டத்தில் செயல்பட்ட பல மொத்த விற்பனை பண்டகசாலைகள் முறையாக நெறிமுறைப்படுத்தப்பட்டு இன்றைய நிலையில் 22 மொத்த விற்பனை பண்டக சாலைகள் நடப்பாண்டு இலாபத்தில் இயங்கும் நிலைக்கு வந்துள்ளன.

* தமிழகத்தில் திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம், திருவாரூர், நாகப்பட்டினம், திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர், நாமக்கல், தூத்துக்குடி, கரூர், பெரம்பலூர், சென்னை ஆகிய 13 மாவட்டங்களில் புதிய மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் துவக்கப்பட்டுள்ளன.

* நாகர்கோவில், தருமபுரி , விழுப்புரம், திண்டுக்கல், திருச்சி, திருவாரூர், சிவகங்கை, நாமக்கல் ஆகிய 8 மாவட்டங்களில் புதிய கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன. ஈரோட்டிலும், திருவண்ணாமலையிலும் புதிய கூட்டுறவு மேலாண்மை நிலையங்களைத் துவக்க அரசு ஆணையிட்டுள்ளது. நடப்பாண்டிலேயே இவை துவக்கப்பட உள்ளன.

* தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பில் விருதுநகர் மாவட்டம் திருச்சுழியில் புதிய தொழிற்பயிற்சி நிலையம் (ஐ.டி.ஐ) ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பில் திருச்சி மாவட்டம் இலால்குடியில் புதிய பாலிடெக்னிக் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

* தமிழகத்தில் செயல்படும் கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் வாயிலாக 43,288 நபர்களுக்கு முழுநேர கூட்டுறவு பட்டயப் பயிற்சியும், 10,172 நபர்களுக்கு அஞ்சல் வழி கூட்டுறவு பட்டயப் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

* தஞ்சாவூர், காஞ்சிபுரம், மதுரை ஆகிய இடங்களிலுள்ள கூட்டுறவு மேலாண்மை நிலையங்களுக்கு சொந்தக் கட்டிடம் கட்ட தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

* திருநெல்வேலி, மொரப்பூர் ஆகிய கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் சொந்தக் கட்டிடம் கட்டிக் கொள்ள தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

* கொத்தடிமைகளாக இருந்து விடுவிக்கப்பட்டவர்களின் புனர்வாழ்வுக்காக திண்டுக்கல் மாவட்டத்தில் 3 தொழிலாளர் தொழில் ஒப்பந்த கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கப்பட்டுள்ளன.

* காஞ்சிபுரம் மாவட்டத்தில் சுகாதார கூட்டுறவுச் சங்கம் ஒன்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் வழக்கறிஞர்கள் கூட்டுறவுச் சங்கம் ஒன்றும் துவக்கப்பட்டுள்ளன.

* மண்டல இணைப்பதிவாளர்களின் அலுவலகங்கள் கணினிமயமாக்கும் திட்டத்தின்கீழ் இதுகாறும் 15 அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

* இந்த நான்கரை ஆண்டுகளில் பணியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 1651 நபர்களும், நகரக் கூட்டுறவு வங்கிகளில் 796 நபர்களும், தமிழ்நாடு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் 78 நபர்களும், மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் 235 நபர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

* பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும், 18 மலைவாழ் மக்கள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பங்கு மூலதன மான்யம், வட்டி மான்யம், போக்குவரத்து மான்யம், வாகன ஓட்டுநர் மான்யம், வாகன பராமரிப்பு மான்யம் ஆகிய இனங்களுக்கு அரசு தொடர்ந்து நிதியுதவி வழங்கி வருகிறது. இதன்படி, 1996-97ம் ஆண்டில் ரூ.90 இலட்சம், 1997-98ம் ஆண்டில் ரூ.85 இலட்சம், 1998-99ம் ஆண்டில் ரூ.90 இலட்சம், 1999-2000ம் ஆண்டில் ரூ.90 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

மகளிர் சிறுவணிகக் கடன் திட்டம் -சேமிப்புடன் கூடியது

* 1-1-1999 அன்று சென்னையில் தொடங்கப்பட்டு, பின்னர் மற்ற மாநகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 2-5-1999 முதல் அனைத்து நகராட்சி, பேரூராட்சிகளுக்கும் நீடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 5 ஆயிரம் ரூபாய் வரை கடனாக வழங்கப்படுகிறது. இதன் மூலம் 29-11-2000 வரை பயன் பெற்ற மகளிர் 1,52,062 பேர். இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் தொகை ரூ.18 கோடியே 76 இலட்சம். நடப்பு ஆண்டில் கிராமப்புறங்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

* கிராமப்புறங்களில் மகளிரை உறுப்பினர்களாகக் கொண்ட சுய உதவிக் குழுக்களைத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ள 1999ல் அரசு ஆணை வழங்கியதை அடுத்து 31-10-2000 வரை 5,123 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, 651 சுயஉதவிக் குழுக்களுக்கு 2 கோடியே 49 இலட்ச ரூபாய் அளவிற்கு கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது.

உடன்பிறப்பே,

அனைத்து மக்களுக்கும் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் அளிக்க வேண்டியது ஒரு நல்லரசின் கடமையாகும். அந்தக் கடமையினைத் தன் மனதிலே நிறுத்திச் செயல்பட்டு வரும் இந்த அரசு கடந்த நான்கரை ஆண்டு காலத்தில் உணவுத் துறையிலே எந்தவிதமான பதற்ற நிலையும் வராமல் மத்திய அரசு அரிசியின் விலையைப் பல முறை ஏற்றிய போதிலும் அந்தச் சுமையை ஏழையெளிய மக்களின் தலையிலே ஏற்றாமல் கழக அரசு செயல்பட்டு வருவதை நீ நன்கறிவாய். இது ஒன்றே இந்த அரசு எந்த அளவிற்கு ஏழையெளிய, நடுத்தர மக்களுக்குப் பாதுகாப்பு அரணாகத் திகழ்ந்து வருகிறது என்பதற்குச் சிறந்த சான்றாகும்.

அன்புள்ள,

மு. க.

(16-12-2000)

2563. கைத்தறி நெசவாளரின் காவலன் கழக அரசு!

உடன்பிறப்பே,

தமிழகத்தின் மிகத் தொன்மையான தொழிலான நெசவுத் தொழில் விவசாயத்திற்கு அடுத்தபடியாகத் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியில் முக்கியமான பங்கை வகிக்கிறது. போதிய அளவு தரமான பஞ்சு கிடைக்காமை மற்றும் பஞ்சு விலை ஏற்றம் இவற்றால் பெரும் இடர்ப்பாடுகளைச் சந்தித்து வரும் நிலையிலும், கைத்தறி நெசவாளர்களின் நூல் தேவையைக் கூட்டுறவு நூற்பாலைகள் நிறைவு செய்து வருகின்றன. கைத்தறி நெசவாளர்களின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்யவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், தறிக்கூடத்துடன் இணைந்த வீட்டு வசதித்திட்டம், சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம், நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம், நெசவாளர் காப்பீட்டுத் திட்டம், நெசவாளர் நல்வாழ்வு திட்டம் போன்ற பல்வேறு நலத் திட்டங்களை நமது அரசு முனைந்து செயல்படுத்தி வருகிறது. கூட்டுறவு நூற்பாலைகளை வலுப்படுத்தவும், நலிவுற்ற கூட்டுறவு நூற்பாலைகளைப் புனரமைக்கவும் கழக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பல; வழங்கியுள்ள சலுகைகளும் பல. அவற்றுள் முக்கியமானவற்றை இன்றைய கடிதத்தில் தொகுத்து வழங்கியுள்ளேன். நெசவாளர் துயர் துடைக்க தனியாக ஜவுளிக் கொள்கை

* தமிழக வரலாற்றிலேயே முதன்முறையாகத் தமிழகத்திற்கெனத் தனியாக ஒரு ஜவுளிக் கொள்கை இந்த அரசால் 1997 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக்கொள்கையின் செயல்பாட்டினைக் கண்காணிக்க துணிநெசவு பெருமன்றம் (State Textile Council) ஒன்றினை அரசு அமைத்துள்ளது.

இந்த மன்றம் அவ்வப்போது கூடி ஜவுளித் துறையில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு வருகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட கோ-ஆப்டெக்ஸ் நிர்வாகக் குழு

அனைத்து பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கும் (கோ-ஆப்டெக்ஸ்) கழக ஆட்சியில் 1971-ல் நடைபெற்ற தேர்தலுக்குப் பிறகு மீண்டும் 27 ஆண்டுகளுக்குப் பின் இந்த ஆட்சியில்தான் 1998-ல் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு 1.9.98 முதல் உள்ளது.

கைத்தறி உயர்மட்டக்குழு

* 1995-96 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் ஜவுளித் துறையில் ஒரு மிகப் பெரிய அவல நிலை ஏற்பட்டது. கூட்டுறவு சங்கங்களிலே உற்பத்தியாகியுள்ள சரக்குகள் விற்பனையாகாமல் மிக அதிக அளவில் தேங்கிக் கிடந்தன. நெசவாளர்களுக்கு நெய்வதற்குப் பாவு கிடைக்காத ஒரு நிலை ஏற்பட்டு, அவர்களால் தொடர்ந்து நெசவுத் தொழில் செய்ய முடியாத நிலை தமிழகம் முழுவதும் காணப்பட்டது. 1996 ஆம் ஆண்டு கழக அரசு பதவியேற்ற பின் இந்த அவல நிலையை அறிந்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையிலே ஒரு உயர்மட்டக் குழுவினை அமைத்தது. அந்தக் குழு மாநிலம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து, நெசவாளர் பகுதிகளுக்கு நேரில் சென்று, நெசவாளர்களைச் சந்தித்து, அவர்களுடைய பிரச்சினைகளைக் கேட்டறிந்து, பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையிலே, ஒரே மாதத்தில் பரிந்துரைகளைச் செய்தது. இந்தக் குழுவின் பரிந்துரைகள் மீது உடனடியாக முடிவுகள் எடுத்து நாம் சட்டசபையிலே ஜவுளித் துறை புனரமைப்புக்காக 24 அறிவிப்புகளை வெளியிட்டோம். புரட்சிகரமான இந்த அறிவிப்பின் மூலம் நெசவுத் தொழிலுக்கே புத்துயிர் ஊட்டப்பட்டு, மிகப் பெரிய அபாயம் தவிர்க்கப்பட்டு, கைத்தறி நெசவாளர்களுக்கு புதிய வாழ்வு அளிக்கப்பட்டது.

* கைத்தறித் துணி விற்பனைக்கு வழங்கப்படும் தள்ளுபடி மானியத் தொகை ஆண்டுக்கு 100 நாள் என்றிருந்ததை மாற்றி

1.4.1998 முதல் ஆண்டு முழுவதற்கும் 20 விழுக்காடு தள்ளுபடி மானியம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு அவ்வாறே வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டொன்றிற்கு ஏறத்தாழ ரூபாய் 75 கோடி செலவில் தள்ளுபடி மானியத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

தேங்கிய கைத்தறித் துணிகளுக்குக் கூடுதல் தள்ளுபடி

* ரூபாய் 365 கோடி மதிப்புள்ள தேங்கியிருந்த கைத்தறித் துணிகளுக்கு மே 1998 முதல் அக்டோபர் 1998 முடிய 6 மாத காலத்திற்குக் கூடுதலாக 10 விழுக்காடு சேர்த்து 30 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி அனுமதிக்கப்பட்டது. இதனால் விற்பனையான துணியின் மதிப்பு ரூபாய் 202 கோடி.

* மேலும் சிறப்புக் கொள்முதல் திட்டத்தின் கீழ் 50 கோடி ரூபாய் அளவிற்குச் சரக்குகள் கோ-ஆப்டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்யப்பட்டது.

கைத்தறி லுங்கி ரகத்திற்கு
சிறப்புத் தள்ளுபடி

* லுங்கி சரக்கு தேக்கத்தினைக் குறைக்க 30 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடியினை லுங்கி ரகங்களுக்கு 31.3.99 முடிய நீட்டித்து அனுமதிக்கப்பட்டது. இதனால், கூடுதலாக விற்பனையான லுங்கியின் மதிப்பு ரூபாய் 11.45 கோடி.

கூட்டுறவு சங்கங்களுக்கு
தள்ளுபடி நிலுவை மானியத் தொகை

* 1994-95, 1995-96 ஆகிய ஆண்டுகளுக்கு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படாமல் இருந்த தள்ளுபடி நிலுவை மானியத் தொகை 43 கோடியே 25 இலட்சம் ரூபாய், இந்த அரசால் 1998-99ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

கோ-ஆப்டெக்சின் மொத்த விற்பனை உயர்வு

* கழக அரசின் சீரிய முயற்சிகளின் காரணமாக 1995-96ஆம் ஆண்டில் கோ-ஆப்டெக்சில் நடைபெற்ற மொத்த விற்பனையான 257 கோடியே 55 இலட்சம் ரூபாய் என்ற அளவிலிருந்து 1999-

2000ஆம் ஆண்டில் 326 கோடியே 79 இலட்சம் ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது.

கோ-ஆப்டெக்சின் சில்லறை விற்பனை உயர்வு

* தமிழக அரசினால் அளிக்கப்பட்ட 30 விழுக்காடு தள்ளுபடியின் காரணமாக, எந்த ஆண்டும் நடைபெறாத அளவிற்கு 1998-99ஆம் ஆண்டில் கோ-ஆப்டெக்சில் சாதனை அளவாக 163 கோடியே 77 இலட்சம் ரூபாய் அளவிற்கு சில்லறை விற்பனை நடைபெற்றது.

இழப்பிலிருந்து மீண்டு இலாபத்தில் இயங்கும் கோ-ஆப்டெக்ஸ்

* 1995-96ஆம் ஆண்டில் 7.28 கோடி ரூபாய் நிகர இழப்பில் இயங்கி வந்த கோ-ஆப்டெக்ஸ் கழக அரசின் சீரிய முயற்சியால் நிகர லாபம் ஈட்டியுள்ளது. இழப்பைச் சரிக்கட்டி லாபகரமாக இயக்குவதற்கு கோ-ஆப்டெக்சில் சில்லறை விற்பனையை அதிகப்படுத்துதல், பட்டு விற்பனையை அதிகப்படுத்துதல், மொத்த விற்பனையை அதிகப்படுத்துதல், நூல் விற்பனையை அதிகப்படுத்துதல், புதிய ரகங்கள் மற்றும் புதிய வடிவமைப்புகளை உருவாக்கி மேம்படுத்துதல், பழைய சரக்குகளை விற்று தீர்த்தல் மற்றும் சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகிய 7 அம்சத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

அதன் மூலம் அது வரையில் இழப்பில் இயங்கி வந்த கோ-ஆப்டெக்ஸ் தற்போது நிகர லாபம் ஈட்டத் தொடங்கியுள்ளது. 1995-96ஆம் ஆண்டில் 7 கோடியே 28 இலட்சம் ரூபாய் நிகர இழப்பில் இயங்கிய கோ-ஆப்டெக்ஸ் படிப்படியாகச் சீரடைந்து 1996-97ல் 10 இலட்சம் ரூபாய், 1997-98ல் 20 இலட்சம் ரூபாய், 1998-99ல் 1 கோடியே 36 இலட்சம் ரூபாய் மற்றும் 1999-2000ல் 1 கோடியே 5 இலட்சம் ரூபாய் என மொத்தம் நான்காண்டுகளில் 2 கோடியே 71 இலட்சம் ரூபாயை நிகர இலாபமாக ஈட்டியுள்ளது.

நெசவாளர்களுக்கு காப்பீட்டுத் தொகை உயர்வு

* 60 வயதிற்குமுன் இறக்கும் நெசவாளர்களின் வாரிசுகளுக்கு நெசவாளர் காப்பீட்டுத் திட்டத்தின் (Group Insurance Scheme

for Handloom Weavers) கீழ் வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை 1996-97ஆம் ஆண்டில் 15,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாக உயர்த்தப்பட்டு 1999-2000ல் 40,000 ரூபாயாக உயர்த்தப்பட்டது.

* 1.4.2000 முதல் இத்தொகை 50,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் பங்குத்தொகை 18.9.96ல் 5,000 ரூபாய் என்றிருந்ததை 1.4.99 முதல் 8,000 ரூபாய் எனவும், 1.4.2000 முதல் 10,000 ரூபாய் எனவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இந்த நெசவாளர் காப்புறுதித் திட்டத்தின்கீழ் மட்டும், 1996-97 முதல் இதுவரையில் 68 லட்சத்து 26 ஆயிரம் ரூபாய் 324 நெசவாளர் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆனால் முந்தைய ஆட்சிக் காலத்தில் ஐந்தாண்டுகளில் வழங்கப்பட்ட தொகை 48 லட்சத்து 31 ஆயிரம் ரூபாய் மட்டுமே.

நெசவாளர்களுக்கு கூலி உயர்வு

* 1997இல் நெசவாளர்களின் கூலியை இந்த அரசு பத்து விழுக்காடு அளவிற்கு உயர்த்தியது. மேலும் ஆண்டுதோறும் பத்து விழுக்காடு அகவிலைப்படி அளிக்கப்பட்டு வருகிறது.

நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம்

* கைத்தறி நெசவாளர்களுக்கு முதியோர் ஓய்வூதியத் திட்டத்தினை இந்த அரசு 1-4-1997 முதல் அறிமுகப்படுத்தி, கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களாக இருந்து 60 வயதை அடைந்த நெசவாளர்களுக்கு மாதம் ரூபாய் 150 வீதம் ஓய்வூதியம் வழங்கப்பட்டது. 2000-2001ஆம் நிதி ஆண்டிலிருந்து இந்த ஓய்வூதியம் 150 ரூபாயிலிருந்து 200 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. 7,151 நெசவாளர்கள் இந்த ஓய்வூதியப் பயனைப் பெறுகின்றனர்.

கைத்தறி பிரதம சங்கங்களிடமிருந்து துணி கொள்முதல் உயர்வு

* கடந்த ஆட்சியில் பிற மாநிலங்களில் உள்ள கைத்தறி நிறுவனங்களிடமிருந்து கணிசமான அளவு துணிகள் கொள்முதல் செய்யப்பட்டதால் தமிழ்நாட்டில் உள்ள பிரதம கைத்தறி

நெசவாளர் சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்த துணிகளின் அளவு பெருமளவு குறைந்து மிகுந்த பாதிப்பு இருந்தது.

1996-97 ஆம் ஆண்டிலிருந்து கழக ஆட்சியில் ஒவ்வொரு வருடமும் தமிழ் நாட்டிலுள்ள சங்கங்களிடமிருந்து செய்யப்படும் கொள்முதல் கணிசமாக உயர்ந்துள்ளது. இந்தத் துணிகள் அனைத்தும் தமிழ்நாட்டில் உள்ள பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டதால் நெசவாளர்களுக்கு நல்லமுறையில் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளித்ததுடன் பிரதம சங்கங்களிடம் சரக்கு தேக்கம் அதிக அளவில் இல்லாத சூழ்நிலையும் ஏற்பட்டது.

பிரதம சங்கங்களின் உற்பத்தியைச் சீர்படுத்தவும், கோ-ஆப்டெக்சின் தேவையைச் சங்கங்களுக்கு முன்கூட்டியே தெரிவித்து அதற்கேற்றாற்போல் உற்பத்தியை மாற்றியமைக்கவும், அனைத்து பிரதம சங்கங்களுக்கும் உற்பத்தித் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டு அத்திட்டத்தின்படி கொள்முதலும் நடைபெற்று வருகிறது.

* 1991-92 முதல் 1995-96 வரை கொள்முதல் செய்யப்பட்ட துணிகளின் மதிப்பு 720 கோடியே 14 லட்சம் ரூபாய். ஆனால், 1996-97 முதல் இதுவரையில் 1067 கோடியே 3 லட்சம் ரூபாய் மதிப்புள்ள துணிகள் கைத்தறி பிரதம சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

தரமான சரக்குகள்

* கைத்தறி துணிகளின் தரத்தை வாடிக்கையாளர்களுக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் எற்கனவே இருந்த நீளம் மற்றும் அகலக் குறைவைச் சரி செய்து தரமான துணிகளுடன் குறிப்பிட்ட நீளம் மற்றும் அகலம் உள்ள துணிகளை உற்பத்தி செய்து வாடிக்கையாளர்களுக்கு வழங்க தரக் கட்டுப்பாட்டு முறை சீர் செய்யப்பட்டது.

ரக அபிவிருத்தி

* கைத்தறி துணி என்றாலே ஒரே மாதிரியான டிசைன், ஒரே மாதிரியான கலர் என்ற எண்ணங்களை முழுமையாகக்

களையவும், கைத்தறியில் தொடர்ந்து புது வடிவமைப்பு மற்றும் புது வண்ணங்களில் துணிகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் நோக்கத்துடன் ரக அபிவிருத்தி திட்டம் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆண்டிற்கு ரூ.2 கோடி அளவிற்கு இருந்த ரக அபிவிருத்தி திட்டம் நடப்பு ஆண்டில் ரூ.20 கோடி அளவிற்கு விரிவாக்கம் செய்யப்பட்டு சேலைகள் மட்டுமல்லாமல் படுக்கை விரிப்புகள், துண்டுகள், வேட்டிகள், திரைச்சீலைகள் ஆகிய ரகங்களிலும் புதிய வடிவமைப்பு முறை அமல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இத்திட்டத்திற்கு முதன்முறையாக கணினிகள் உதவியுடன் உருவாக்கப்பட்ட வடிவமைப்புகள் நடைமுறைப்படுத்தப்படுவதால் அதிக அளவில் குறுகிய காலத்தில் வாடிக்கையாளர்கள் விரும்பும் வண்ணம் புதிய வடிவமைப்புகள் உருவாக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த முயற்சி யினால் வாடிக்கையாளர்களின் தேவையை அதிக அளவில் நிறைவு செய்வதால் விற்பனை பெருகியதோடு சங்கங்களில் தேக்கம் என்ற நிலை வெகுவாக மாறிவருகிறது.

இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டம்

* வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களுக்கும், நிலமற்ற ஏழை விவசாயிகள், கிராமப் புற கைவினைஞர்கள், இலங்கைத் தமிழ் அகதிகள் மற்றும் முதியோர் உதவித் தொகை பெறுவோருக்கும் ஆண்டுதோறும், பொங்கல் திருநாளையொட்டி இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தினைத் தொடர்ந்து செயல்படுத்தி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு மேலும் 5 விழுக்காடு கூடுதல் வினியோகம் செய்ய ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

* கடந்த ஆட்சியில் இலவச வேட்டி சேலை திட்டத்தின் கீழ் நீளம் மற்றும் அகலம் குறைந்த வேட்டி, சேலைகளும் பிற மாநிலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட வேட்டி சேலைகளும் இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்தது. இதை முற்றிலுமாக மாற்றி முழுமையாக தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட தரமான வேட்டி, சேலைகள் இத்திட்டத்தில் வழங்கப்பட்டதால் பயனாளிகளிடம் அமோக வரவேற்பு

இருந்ததுடன் தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நெசவாளர்களுக்கு நல்ல வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. கடந்த நான்கு ஆண்டுகளில் வருடந்தோறும் 77 இலட்சம் பெண்களும், 70 இலட்சம் ஆண்களுமாக மொத்தம் 147 இலட்சம் பயனாளிகளுக்கு எவ்வித குறைபாடுமின்றி குறித்த காலத்தில் இந்த திட்டத்தை நிறைவேற்றியது அரசின் சாதனையாகும். நடப்பு ஆண்டில் 155 இலட்சம் பயனாளிகளுக்கு இத்திட்டத்தின் மூலம் வேட்டி சேலை வழங்கப்பட உள்ளது.

பள்ளிச் சீருடை

* கடந்த ஆட்சியில் இத்திட்டத்தின் கீழ் தனியார் மில் மூலமாகப் பெறப்பட்ட துணிகள் வழங்கப்பட்டு வந்தது. இந்த ஆட்சியில் இந்தத் திட்டத்திற்குத் தேவைப்படும் துணிகள் அனைத்தும் தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையில் உள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவே தயாரிக்கப்பட்டு வழங்கப்படுவதால் நெசவாளர்களுக்குக் கூடுதல் வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்பட்டதுடன் தரமான துணிகளை உற்பத்தி செய்வது உறுதி செய்யப்பட்டது. அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்கள்,

உள்ளாட்சித் துறைகளுக்கு சீருடை வழங்குவது

* கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து நல்ல வேலைவாய்ப்பினை அளிக்கும் வகையில் அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்களின் அனைத்துத் துணித் தேவைகளுக்கும் கைத்தறித் துணிகளையே வாங்க வேண்டும் என அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது.

மகளிர் கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு விளிம்புத் தொகை (Marg Money)

* கைத்தறி நெசவில் பெண்கள் அதிக அளவில் ஈடுபடுவதால் மகளிருக்காகவே தனியாக கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதை ஊக்குவிக்க, அந்த சங்கங்களில் உள்ள மகளிர் உறுப்பினர்களுக்கு அரசு வழங்கும் விளிம்புத் தொகை அல்லாது கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மகளிர் உறுப்பினர்களுக்கு தலா 1000 ரூபாய் விளிம்புத் தொகையாக வழங்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

நூல் விநியோகம்

* பிரதம சங்கங்கள் நூல் கொள்முதல் செய்வதை ஒழுங்குபடுத்தவும், பணத்தட்டுப்பாட்டினால் நெசவாளர்களின் தொழில் வாய்ப்பு பாதிக்கப்படாமல் இருக்கவும், தரமான நூல்கள் தடையின்றிக் கிடைக்க மாதந்தோறும் கோ-ஆப்டெக்ஸின் துணி கொள்முதல் தொகையில், ஒரு குறிப்பிட்ட அளவு சங்கங்களுக்கு நூல் விநியோகம் செய்ய நூல் பாஸ் புக் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு வங்கியில் பணம் இல்லாத நேரத்தில்கூட நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

கோ-ஆப்டெக்ஸ் ஏற்றுமதி

* கோ-ஆப்டெக்ஸில் 1975-ல் தொடங்கப்பட்ட ஏற்றுமதி பிரிவின் மூலம் மேசை விரிப்பு, படுக்கை விரிப்பு, பிளேஸ்மேட், துண்டுகள், சமையல் அறையில் உபயோகிக்கும் துணிவகைகள், திரைச்சீலைகள், வீட்டு உபயோக துணிவகைகள் ஆகியவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சென்னிமலை, கவுந்தப்பாடி, விஜயமங்கலம், ஈரோடு, கோயம்புத்தூர், மதுரை மற்றும் கரூர் ஆகிய இடங்களில் ஏற்றுமதி ரகங்கள் தயாரிக்கப்படுகின்றன. 1995-1996-ல் ஒரு கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்களே ஏற்றுமதி செய்யப்பட்டன. 1999-2000-ல் 5 கோடியே ஒரு இலட்சம் ரூபாய் என்ற அளவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

நலிவுற்ற கூட்டுறவு நூற்பாலைகள் புனரமைப்பு

* தொடர்ந்து இழப்பில் இயங்கி வந்த நலிவுற்ற கூட்டுறவு நூற்பாலைகளுக்குப் புத்துயிர் அளித்திட ரூபாய் 185 கோடியே 76 இலட்சம் அளவிற்கு பணப்பயனும், பிற சலுகைகளும் அடங்கிய புனரமைப்புத் திட்டம் இந்த அரசினால் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. மேலும், விருப்ப ஓய்வில் செல்லும் தொழிலாளர் மற்றும் பணியாளர்களுக்கு அரசு நிதியுதவி ரூபாய் 17 கோடியே 50 இலட்சம் அளித்து விருப்ப ஓய்வுத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

* அரசு திட்டங்களை அறிந்து கொள்ள நெசவாளர் கையேடு அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்துத் திட்டங்களையும் நெசவாளர்கள் அனைவரும் அறிந்து, அனைத்துப் பயன்களையும் பெறும் வண்ணம் எல்லாத் திட்டங்களின் செயல்பாடுகளையும் உள்ளடக்கிய ஒரு நெசவாளர் கையேடு தயாரிக்கப்பட்டு அனைத்து நெசவாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் கட்டும் திட்டம்

* தறிக் கூடத்துடன் கூடிய வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் 1996-97 ஆம் ஆண்டு முதல் 1999-2000 ஆண்டு வரை 3120 தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் கட்டுவதற்கு ரூபாய் 7 கோடியே 51 இலட்சம் அரசு மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 2000-2001 ஆண்டு இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 1190 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இதில், சென்னிமலையில் 25 நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு ஒரே இடத்தில் 1010 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

நெசவாளர் நல்வாழ்வு திட்டம்

* நெசவாளர் நல்வாழ்வு திட்டத்தின் கீழ் 1996-97 ஆம் ஆண்டு முதல் 1999-2000 ஆண்டு வரை 29,980 நெசவாளர்கள் பயனடையும் வகையில் ரூபாய் 2 கோடியே 68 இலட்சம் அரசு மானியமாக வழங்கியுள்ளது.

பட்டு நூல் கடனுக்கு தண்டவட்டி ரத்து

* கடனில் வாங்கிய பட்டு நூலுக்கு தவணை தவறிய பாக்கிக்கு டான்சில்க் வசூல் செய்யும் 3 விழுக்காடு தண்டவட்டி 1998-ஆம் ஆண்டில் ரத்து செய்யப்பட்டது. ஏற்றுமதியைப் பெருக்க திட்டங்கள் உலக வர்த்தக நிறுவன ஒப்பந்தத்தால் ஏற்படும் தாக்கங்கள் குறித்து ஆய்வு நடத்தப்பட்டு ஒரு கருத்தரங்கு துறையால் நடத்தப்பட்டுள்ளது. இது போன்று, மீண்டும் ஒரு கருத்தரங்கம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், நெசவுத் துறையில் எதிர்கொள்ள விருக்கும் உள்நாட்டு மற்றும் வெளி நாட்டுச் சந்தை வழி சவால்களை சமாளிப்பதற்கும்,

உலக அளவில் ஏற்றுமதியை பெருக்குவதற்கும் அரசால் தகுந்த திட்டங்கள் தீட்டப்பட்டு, 200 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் 10,000 தறிகளில் ஏற்றுமதி உற்பத்தி தொடங்கப்பட்டு 1999-2000 ஆண்டில் ரூபாய் 27 கோடி அளவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. மேலும், நடப்பாண்டில் ரூபாய் 100 கோடி அளவிற்கு ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டு இதுவரை ரூபாய் 52 கோடி அளவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு ஏற்றுமதி ரக உற்பத்தியில் ஈடுபடுவதன் மூலம் சங்கங்கள் காசுக்கடன் கணக்கில் பெறப்படும் கடன் தொகை குறைந்து சங்கங்களின் வட்டி இழப்பு குறைக்கப்பட்டுள்ளதுடன், நெசவாளர்கள் பெறும் கூலியும் கணிசமாக உயர்ந்துள்ளது.

கூட்டுறவு நெசவுத் துணி வகைகளுக்கு வணிகப் பெயர்

* நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் துணி வகைகளுக்கு தனியாக வணிகப் பெயர் உருவாக்கி விற்பனை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

* நெசவுத் துணிவகைகளுக்கு சிறப்பு வணிக வளாகங்கள் லூம் வேர்ல்டு (Loom World) என்ற பெயரில் கோயமுத்தூர் மற்றும் சென்னையில் வணிக வளாகங்கள் தொடங்கப்பட்டுள்ளன. பல்வேறு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் துணிவகைகள் இங்கு விற்பனை செய்யப்படுகின்றன. இதற்கு நுகர்வோரிடையே நல்ல வரவேற்பு உள்ளதால் மற்ற முக்கிய நகரங்களிலும் இதுபோன்ற வணிக வளாகங்களைத் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

தனித்துவ பழம்பெருமை பெற்ற துணிவகைகளுக்கு காப்புரிமை

* பூகோளக் குறியீடு சட்டம் 1999ன் கீழ் காஞ்சிபுரம் பட்டு, மதுரை சுங்கடிச் சேலைகள், பவானி ஜமக்காளம் ஆகியவற்றைப் பதிவு செய்து காப்புரிமை (Patent Rights) பெற துறை தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஏற்றுமதியைப் பெருக்க ஏற்றுமதி மையம்

* ஏற்றுமதி விற்பனையை ஊக்குவிக்கும் முகத்தான் ஏற்றுமதி உற்பத்தி செய்யும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும் இடையே ஒரு பாலமாக அமையும் வகையில் கைத்தறி இயக்ககத்தில் ஒரு ஏற்றுமதி மையம் (Export Interact Centre) துவங்கப்பட்டுள்ளது. இம்மையத்தில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் உற்பத்தி செய்யும் ஏற்றுமதி ரகத் துணி வகைகளின் மாதிரிகள் ஏற்றுமதியாளர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகள் கணினிமயமாக்கம்

* இத்துறையின் அனைத்து அலுவலகங்கள் மற்றும் சங்கங்களின் செயல்பாடுகளை மேம்படுத்திட கணினி மயமாக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நெசவாளர் இடர் களைய குறை தீர்க்கும் பிரிவு நெசவாளர்களின் இடர்களை அவ்வப்போது களையும் நோக்கோடு ஒவ்வொரு அலுவலகத்திலும் குறை தீர்க்கும் பிரிவு துவங்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் குறைகள் தீர்க்கப்பட்டு வருகிறது. மேலும், ஒவ்வொரு சரகத்திலும் காலாண்டிற்கு ஒரு முறை சிறப்பு குறை தீர்க்கும் நாள் கைத்தறி இயக்குநர் அலுவலகத்திலிருந்து அனுப்பப்படும் உயர் அலுவலர் முன்னிலையில் நடத்தப்படுகிறது. இதற்கு நெசவாளர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

* தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் கடந்த 4 1/2 ஆண்டுகளில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் 104 கோடியே 17 இலட்சம் ரூபாய் அளவிற்கு கதர் மற்றும் பட்டுத் துணி உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளது. இவ்வாரியத்தின் மூலம் 115 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கதர் மற்றும் பட்டுத் துணி விற்பனை செய்யப்பட்டுள்ளது.

* தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் இதுகாறும் நூற்பாளர்கள், நெசவாளர்களுக்கு நலத்திட்டங்கள் ஏதும் இல்லாமல் இருந்து வந்தது. அவர்களது குடும்பங்களுக்கு பாதுகாப்பு வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழக அரசு தமிழ்நாடு

கதர் கிராமத் தொழில் வாரியத்தில் நூற்பு மற்றும் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்கள் இறக்க நேரிட்டால் அவர்களது குடும்பத்திற்கு 20 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்க ஆணையிட்டுள்ளது.

* கழக அரசு பொறுப்பேற்றதும் கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்தல்களை நடத்திட உத்திரவிட்டது. அதன்படி தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் உள்ள 1,416 தொடக்க கூட்டுறவு சங்கங்களுக்கு முறையாக தேர்தல் நடத்தப்பட்டு தொழிற் கூட்டுறவு சங்கங்களின் பொறுப்புகள் யாவும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் மற்றும் நிர்வாகக் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

* பெண்களுக்கெனத் தனியாக எல்லா இடங்களிலும் 33 சதவிகித ஒதுக்கீடு வேண்டும் என்ற கொள்கையினை ஆதரித்து வரும் கழக அரசு, இந்த நிதியாண்டில் முழுக்க முழுக்க பெண்களே நிர்வகிக்கக்கூடிய 20 கூட்டுறவு சங்கங்களைப் பதிவு செய்ய முடிவு செய்து இதுவரை 14 கூட்டுறவு சங்கங்கள் பதிவு செய்ய ஆணை வழங்கப்பட்டுள்ளது. தற்காலிக தினக்கூலி பணியாளர்கள் 33 பேரை 1997-98 ஆம் ஆண்டு நிரந்தரப் பணியாளர்களாக பணியமர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டில் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வந்த 97 முதுநிலை நூற்பாளர்கள் மாத தொகுப்பூதியம் 1000 ரூபாய் விகிதத்தில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 1999 ஆம் ஆண்டு முதல் திறமை மிக்க நெசவாளர் மற்றும் கைவினைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு சிறந்த கைவினைஞர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

* தற்பொழுது கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடும் வகையில், நூற்பவர்கள் மற்றும் தறி நெய்பவர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு அளித்திடும் வகையிலும் கதர் ரகங்களை அனைத்து தரப்பு மக்களும் விரும்பி அணிந்திட ஏதுவாக இந்த ஆண்டு அனைத்து கதர் பருத்தி, பாலிவஸ்திரா ரகங்களுக்கு ஆண்டு முழுவதும் 30 சதவிகிதம் தள்ளுபடியும், கதர் பட்டு ரகங்களுக்கு 20 சதவிகிதம் தள்ளுபடியும் வழங்கி தமிழக அரசு

ஆணை பிறப்பித்துள்ளது. 1996-97 ஆம் ஆண்டு தறிகளை நவீனப்படுத்திட 500 கதர் நெசவாளர்களுக்கு 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பிற்கு அச்சு விழுதுகள் மான்யத்தில் வழங்கப் பட்டுள்ளன. மேலும் 600 பட்டு நெசவாளர்கள் பயனடையும் வகையில் 200 ஜக்காடு பெட்டிகள் வழங்க 7 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மான்யமாக அரசு வழங்கியுள்ளது. கதர் ஆணைக்குழு அங்கீகரித்துள்ள 6 கதிர் மற்றும் 12 கதிர் இராட்டைகளில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் பருத்தி மற்றும் பாலியஸ்டர் நூற்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. நவீன முறையில் நூல் உற்பத்தித்திறனை அதிகரித்திட 8 கதிர் கொண்ட இராட்டையினை கதர் ஆணைக்குழு அறிமுகம் செய்துள்ளது. இப்புதிய 8 கதிர் நவீன இராட்டையினை கதர் ஆணைக்குழுவிடமிருந்து பெற்று 5 பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் கிராமப் புறங்களில் வாழும் 125 பெண் நூற்பாளர்கள் பயன் பெறுகிறார்கள்.

உடன்பிறப்பே,

இன்று ஆட்சியிலிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு அரசியல் கட்சியாகத் தோன்றிய அந்தக் காலத்திலேயே நெசவாளர்களின் துயர் துடைப்பதற்காக வேண்டி - அறிஞர் அண்ணா முதல், கழகத்தின் கடைசித் தொண்டன் வரையில், தேங்கிக் கிடந்த கைத்தறி ஆடைகளைத் தலையிலும் தோளிலும் சுமந்து வீதி வீதியாகக் கூவி விற்று புதியதோர் திருப்பத்தை அவர்கள் வாழ்வில் உருவாக்கியதை எண்ணிப் பார்த்தால்; அந்தக் கடமையுணர்வுதான் இன்னமும் தொடர்கிறது என்பதை எளிதில் புரிந்து கொள்ளலாம்.

அன்புள்ள,

மு. க.

(17-12-2000)

2564. தொழிலாளர் வர்க்கத்தின் தோழன் தி.மு.க.!

உடன்பிறப்பே,

ஒரு நாட்டின் தொழில் வளம், பொருளாதார முன்னேற்றம் மற்றும் தொழில் அமைதி ஆகிய மூன்றும் ஒன்றையொன்று சார்ந்தவையாகும். தொழில் முன்னேற்றத்தை ஊக்குவிக்கின்ற அதே நேரத்தில், தொழிலாளர் நலம் மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றைப் பேணுவதும் அரசின் நோக்கமாகும். இந்த அரசின் சரியான தொழிலாளர் கொள்கையின் மூலம் மாநிலத்தில் தொழில் அமைதி சிறப்பாக பராமரிக்கப்படுவதோடு வேகமான தொழில் முன்னேற்றமும், சிறப்பான தொழிலாளர் நலமும் பாதுகாக்கப்படுகிறது.

ஒரு நாட்டில் தொழிற் சாலைகள் பெருகுவதற்கு அங்கு தொழில் அமைதி மிக அவசியமானது. தொழிலாளர் நலன் காக்கப்பட்டால்தான் தொழில் அமைதி நிலவும். இதனை மனதில்கொண்டு 1969ஆம் ஆண்டு நான் முதல் முறையாக முதல்வர் பொறுப்பேற்றபோதே தொழில், தொழிலாளர் நலம், கூட்டுறவு என்ற மூன்று துறைகளும் ஒன்றாக ஒரே துறையாக இருந்ததிலிருந்து தொழிலாளர் நலத்திற்கெனத் தனித்துறையையும் தனி அமைச்சகத்தையும் உருவாக்கினேன். அந்தத் தொழிலாளர் நலத் துறையின் சார்பில் கடந்த நான்கரை ஆண்டுகளில் செய்யப்பட்ட சாதனைகள் வருமாறு :- தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (பணி வரன்முறைப் படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டம் 15-6-1997 முதல் தமிழ்நாடு முழுவதற்கும் பொருந்துவதாக அறிவிக்கப்பட்டு அதன்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தொழில் அமைதியில் தமிழகத்திற்கு முதலிடம்

* கடந்த நான்கரை ஆண்டுகால ஆட்சியில் தொழிலாளர் தகராறு காரணமாக தமிழகத்திலே எந்தவொரு பெரிய தொழில்

நிறுவனத்திலும் நீண்ட நாள் வேலை நிறுத்தம், கதவடைப்பு போன்ற சம்பவம் நடைபெறவில்லை என்ற ஒன்றே இந்த ஆட்சியின் தொழிலாளர் நலக் கொள்கைக்கு எடுத்துக் காட்டாகும். அகில இந்திய அளவில் ஒவ்வொரு மாநிலத்தின் வளர்ச்சியினை ஆராய்ந்து இந்திய தொழிற்குழுமம் (Confederation of India Industry) ஒரு அறிக்கை தயார் செய்துள்ளது. இந்த அறிக்கையில், இந்தியாவிலேயே தொழில் அமைதி நிலவுவதிலும், தொழிலாளர் நலன்களைப் பாதுகாப்பதிலும் தமிழகம் முதல் இடம் வகிக்கின்றது என்றும் குஜராத் இரண்டாவது இடம் என்றும் ஆந்திரப் பிரதேசம் மூன்றாவது இடம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்திய தொழிற்குழுமம் (C.I.I.) தொழில் முனைவோரின் ஒரு கூட்டமைப்பு ஆகும். இந்த கூட்டமைப்பே, தமிழகத்தில்தான் இந்தியாவிலேயே சிறப்பான முறையில் தொழில் அமைதி நிலவுகிறது என்று கூறியுள்ளது நமது அரசிற்குப் பெருமை சேர்ப்பதாகும்.

* அரசின் தொழிலாளர் நலத்துறையிடம் தொழிற்தகராறுகள் சட்டத்தின் கீழ் இந்த நான்கரை ஆண்டுகளில் பெறப்பட்ட 65,003 வழக்குகளில் 50,540 வழக்குகள் தீர்த்து வைக்கப்பட்டன. தொழிற் தகராறுகள் தீர்த்து வைக்கப்பட்ட முக்கிய தொழிற்சாலைகளில் சில காவேரி சுகர்ஸ் அண்டு கெமிகல்ஸ், பேட்டை வாய்த்தலை; ஓட்டல் காஞ்சி; பீடித் தொழிலாளர்கள் கூலி உயர்வு; பாட்டா இந்தியா லிமிடெட், ஓசூர்; திருமலை கெமிகல்ஸ், ராணிப்பேட்டை; எவரெடி இண்டஸ்ட்ரீஸ் இந்தியா லிமிடெட், சென்னை; இந்துஸ்தான் மோட்டார் லிமிடெட், திருவள்ளூர்; பி அண்டு சி மில்ஸ், சென்னை; திரு ஆரூரான் சர்க்கரை ஆலை; ஸ்பிக் ஆர்கானிக்ஸ் லிமிடெட், மணலி; மணலி பெட்ரோகெமிகல்ஸ்; சேஷசாயி பேப்பர் அண்டு போர்ட்ஸ், ஈரோடு; சவுத்தர்ன் ஸ்விட்ச் கியர்; வேலூர் மாவட்ட தோல் பதனிடும் தொழிற்சாலை; மதுரையிலே நடைபெற்ற போராட்டத்தையொட்டி சென்னையிலே அனுதாப வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தமிழ்நாடு பால்வள நிறுவனத்தைச் சேர்ந்த 1095 ஊழியர்கள் 1980இல் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். 1989இல் கழக ஆட்சி பொறுப்பேற்றபோது பணி நீக்கம் செய்யப்பட்டவர்களில் 370 பேருக்கு மீண்டும் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது. மீண்டும் 1997 ஆம் ஆண்டு நீதிமன்றத்திலே இதுகுறித்த வழக்கு விசாரணையிலே இருந்தபோதும் அதன் முடிவிற்காகக் காத்திராமல் மேலும் 427 பேருக்கு வேலை வாய்ப்பு

வழங்கிட கழக அரசு ஆணை பிறப்பித்தது. இவர்களில் பணியிலே 316 பேர் சேர்ந்தார்கள். மற்றவர்கள் எல்லாம் இடைக் காலத்தில் வெவ்வேறு பணிகளிலே சேர்ந்து விட்டார்கள்.

* அதுபோலவே தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிட்டங்கிகளில் பத்தாண்டுகளுக்கு மேலாகப் பணிபுரிந்த சுமைதூக்கும் தொழிலாளர்கள் சுமார் 2500 பேர் இந்த ஆட்சியிலே பணி நிரந்தரம் செய்யப்பட்டார்கள்.

* தமிழ்நாடு மின் வாரியத்திற்குச் சொந்தமான நான்கு அனல் மின் நிலையங்களிலும் இரண்டு எரிவாயு சுழல் மின் நிலையங்களிலும் பணியாற்றி வந்த ஒப்பந்தத் தொழிலாளர்கள் 7,651 பேர் இந்த ஆட்சியிலே 1-1-1999 முதல் பணி நிரந்தரம் செய்யப்பட்டார்கள்.

பதிவு செய்யப்பட்ட புதிய தொழிற்சாலைகள்

* 1996ஆம் ஆண்டின் துவக்கத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 23,053 என்றிருந்தது. கடந்த 4 ஆண்டுகளில் மேலும் 4,938 தொழிற்சாலைகள் புதியதாக தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு 2000ஆம் ஆண்டின் துவக்கத்தில் 27,991 பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் என்ற இலக்கை எட்டியுள்ளது.

* 1996ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளில் மொத்தம் 10,38,535 தொழிலாளர்கள் பயனடைந்து வந்தனர். கடந்த நான்காண்டுகளில் தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட கூடுதலான தொழிற்சாலைகளின் மூலம் மேலும் 1,23,876 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

தொழிலாளர்களுக்கு நிரந்தர நிலை வழங்குதல்

* தொழிலாளர்களுக்குப் பணி நிரந்தரம் வழங்குதல் சட்டம் 1981இன்படி கடந்த நான்காண்டுகளில் மொத்தம் 87,580 தொழிலாளர்கள் பல்வேறு தொழிற்சாலைகளில் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

போனஸ் பிரச்சினைக்குத் தீர்வு

* ஒவ்வொரு ஆண்டும் தீபாவளிப் பண்டிகை காலங்களில் அரசு பொதுத்துறை நிறுவனங்கள், பஞ்சாலை மற்றும் பொறியியல்

தொழில்களில் போனஸ் பட்டுவாடா செய்வது குறித்து எழுகின்ற தொழிற் தகராறுகள் மீது உரிய காலத்தில் தீர்வுகள் காணப்படவில்லை யெனில், மாநில அளவில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடக்கூடிய ஒரு பிரச்சினையாக இது மாறக்கூடும். இதை உணர்ந்து, தொழிலாளர் நலத் துறையைச் சார்ந்த அலுவலர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளாக மிகுந்த கவனத்துடனும், திறமையுடனும், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு வருகின்றனர்.

மூடிக் கிடந்த நிறுவனங்கள் திறப்பு

* தொழிற்தகராறு காரணமாக மூடப்பட்டோ அல்லது நீண்ட காலமாக இயங்காமலோ உள்ள நிறுவனங்கள் தமிழ்நாட்டில் இந்த நான்கரை ஆண்டுகளில் ஏதுமில்லை. குறிப்பிட்ட சில தொழில்களில் ஏற்பட்டுள்ள பொதுவான மந்தநிலை, வெளிநாடுகளில் இருந்து ஏற்பட்டுள்ள போட்டி, போதிய ஆர்டர்கள் கிடைக்காதது போன்ற காரணங்களினால் ஏற்படும் நிதிநெருக்கடி, பங்குதாரர்களுக்கிடையே ஏற்பட்ட உட்பூசல் வழக்குகள் ஆகிய காரணங்களினால்தான் சில தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டு இயங்காமல் இருந்தன. முக்கியமாக டன்லப் இந்தியா தொழிற்சாலை, கொங்குரார் காட்டன் மில்ஸ், தஞ்சாவூர் டெக்ஸ்டைல்ஸ், குவாலிட்டி ஸ்பின்னர்ஸ், பழனியாண்டவர் காட்டன் மற்றும் சிந்தடிக் டெக்ஸ்டைல்ஸ், காகா ஷூஸ், அண்ணாமலையார் டெக்ஸ்டைல்ஸ் போன்ற மூடிக்கிடந்த நிறுவனங்கள் 27 1996க்குப் பின் இந்த அரசின் முயற்சியால் திறக்கப்பட்டுள்ளன.

மூடிய தொழிற்சாலைகளில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு உதவித் தொகை

நீண்டகாலமாக மூடியிருக்கும் தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு ரூ.250/- மாதாந்திர உதவித் தொகை வழங்கும் புதிய திட்டத்தினை 1999 ஆம் ஆண்டில் மே மாதத்தில் இந்த அரசு அறிவித்தது. இவ்வாறு 87 தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்து பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு இத் திட்டத்தின் மூலம் பயன்பெற வகை செய்யப்பட்டுள்ளது. இதுவரை 7848 தொழிலாளர்களுக்கு ஒரு கோடியே 75 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

இவ்வரசு நீண்ட காலமாக மூடிக் கிடக்கும் தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு 1996 முதல் பண்டிகைகால நிவாரணமாக முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 4 கோடியே 24 லட்சத்து 41 ஆயிரத்து 300 ரூபாய் வழங்கியுள்ளது. 1996, 1997ம் ஆண்டுகளில் ஒவ்வொரு தொழிலாளருக்கும் ரூ.400/-ஆக வழங்கி வந்ததை 1998 முதல் ரூ,500/- ஆக உயர்த்தி வழங்கி வருகின்றது.

விபத்துக்கள் குறைவு

வருடா வருடம் புதிய தொழிற்சாலைகள் ஏராளமாக தொடங்கப்பட்ட போதிலும், துறை ஆய்வர்களின் சீரிய முயற்சியாலும், பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தி பாதுகாப்பு மேம்பாட்டுப் பணிகளில் அயராது ஈடுபட்டதாலும் கடந்த 4 ஆண்டுகளில் தொழிற்சாலைகளில் ஏற்பட்ட விபத்துக்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது. 1996ஆம் ஆண்டில் 61 மரண விபத்துக்கள் என்றிருந்தது, 1999ஆம் ஆண்டில் 41 மரண விபத்துக்களாகக் குறைந்துள்ளது. அதேபோல், 1996ஆம் ஆண்டில் 4,347 மரணமில்லாத விபத்துக்கள் ஏற்பட்டிருந்தும், 1999ஆம் ஆண்டில் இது 2,647 என்ற அளவுக்கு குறைக்கப்பட்டுள்ளது.

உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (கட்டிடத் தொழிலாளர்கள்) நலத் திட்டம்

சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய மாநகராட்சிகளில் மட்டுமே செயல்படுத்தப்பட்டு வந்த இந்தத் திட்டத்தை, 15-6-97 முதல் தமிழ்நாடு முழுவதும் இந்த அரசு விரிவுபடுத்தியுள்ளது. இதன் காரணமாக இவ்வாரியத்தில் பதிவு செய்துகொண்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை கடந்த ஆட்சிக் காலத்தில் வெறும் 25,000ஆக இருந்தது. இந்த ஆட்சியில் 2 லட்சத்து 70 ஆயிரத்து 170 ஆக உயர்ந்துள்ளது. கட்டிடத் தொழிலாளர்களின் நலத் திட்டங்களை அமல்படுத்துவதற்காக உடல் உழைப்புத் தொழிலாளர்கள் பொதுநல நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் எல்லைக்குள் கட்டுமானப் பணியினை மேற்கொள்ளும் எந்த ஒரு நபரும் அக்கட்டுமானப் பணியின் மொத்த மதிப்பீட்டில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தினை இந்நிதிக்கு செலுத்த வேண்டும். 14-6-97 வரை இத்தொகை கட்டுமான தொகையின் மொத்த மதிப்பீட்டில் 0.1 விழுக்காடு ஆக

மட்டுமே இருந்தது. 15-6-97 முதல் இது 0.3 விழுக்காடு ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக வாரியத்தின் வருவாய் 1996-ல் 90 லட்சம் ரூபாயில் இருந்து தற்போது 25 கோடியே 88 லட்சத்து 35 ஆயிரத்து 157 ரூபாயாக உயர்ந்துள்ளது.

கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள்

* 10-5-1995 முதல் 9-5-1996 வரையான அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 21,946 கட்டுமானத் தொழிலாளர்கள் மட்டுமே தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்து கொண்டனர். ஆனால் 13-5-1996 முதல் 30-11-2000 வரையுள்ள இந்த அரசின் நான்கரை ஆண்டு கால ஆட்சியில் 2,48,824 பேர் கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்து கொண்டுள்ளார்கள்.

* பதிவு செய்து கொண்டுள்ள அனைத்து கட்டிடத் தொழிலாளர்களும் குழு விபத்துத் திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ளனர். காப்பீடு செய்வதற்கான பிரிமியத் தொகையை வாரியமே செலுத்தி வருகிறது. பதிவு பெற்ற கட்டிடத் தொழிலாளி விபத்தில் இறந்தால் 1 இலட்சம் ரூபாய் காப்பீடு தொகையாகவும், விபத்தில் ஊனமுற்றால் ஊனத்தின் தன்மைக்கேற்ப அதிகபட்சமாக ஒரு இலட்சம் ரூபாய் வரையும் நிவாரணத் தொகையாக வழங்கப்படுகிறது. 9-5-1998 வரை மரண விபத்திற்கு வழங்கப்பட்டு வந்த 50 ஆயிரம் ரூபாய் என்பதை 10-5-1998 முதல் ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. இயற்கை மரணத்திற்கு 5000 ரூபாயும் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. 30-11-2000 வரை 391 பேருக்கு 5 ஆயிரம் ரூபாய் வீதம் 19 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இந்த 5 ஆயிரம் ரூபாய் என்பது இனி 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

* 10-5-1995 முதல் 9-5-1996 வரையான அதிமுக ஆட்சிக் காலத்தில் விபத்துக் காப்பீடு தொகை பெற்றவர்களின் எண்ணிக்கை ஒன்று. அவருக்கு வழங்கப்பட்ட காப்பீட்டுத் தொகை 50 ஆயிரம் ரூபாய். கடந்த நான்கரை ஆண்டு கால கழக ஆட்சியில் மரண விபத்துக் காப்பீடு தொகை பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை 75. வழங்கப்பட்ட காப்பீட்டுத்

தொகை 66 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய். காய விபத்துக் காப்பீடு தொகை பெற்ற பயனாளிகள் 29 பேர். அவர்களுக்கு வழங்கப்பட்ட தொகை 6 இலட்சத்து 70 ஆயிரத்து 750 ரூபாயாகும்.

* 3-11-98க்கு முன்பு விபத்துக் காப்பீடு தொகை மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. 3-11-98க்குப் பிறகு பின்வரும் நலத் திட்டங்கள் அமல்படுத்தப்பட்டு வருகின்றன.

* பதிவு பெற்ற கட்டிடத் தொழிலாளியின் மகன் அல்லது மகள் 10ஆம் வகுப்பு தேர்வு பெற்றால் 750 ரூபாயும், 12ஆம் வகுப்பு தேர்வு பெற்றால் 1000 ரூபாயும் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. 30-11-2000 வரை 867 பேருக்கு பத்தாம் வகுப்பு தேர்வு பெற்றமைக்காக ஆறு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், 450 பேருக்கு 12ஆம் வகுப்பு தேர்வு பெற்றமைக்காக நான்கு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது. இனி பத்தாம் வகுப்பு தேர்வு பெற்றால் ஆயிரம் ரூபாயும், 12ஆம் வகுப்பு தேர்வு பெற்றால் 1500 ரூபாயும் வழங்கப்படவுள்ளது.

* பதிவு பெற்ற கட்டிடத் தொழிலாளியின் மகன் அல்லது மகள் திருமணத்திற்கு ரூ. 1000/- உதவித் தொகை வழங்கப்படுகிறது. 30-11-2000 வரை 819 பேருக்கு ஆயிரம் ரூபாய் வீதம் 8 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இனி இந்த ஆயிரம் ரூபாய் என்பது இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்தப்படுகிறது.

* பதிவு பெற்ற கட்டிடத் தொழிலாளி மகப்பேறு அல்லது கருச்சிதைவுக்கு ரூ. 2000/- உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

* பதிவு பெற்ற கட்டிடத் தொழிலாளியின் ஈமச் சடங்கிற்கு 2000 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. 30-11-2000 வரை 566 பேருக்கு மொத்தம் 9 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

கட்டிடத் தொழிலாளர்களுக்கான நலத்திட்டங்கள் :
மத்திய அமைச்சர் பாராட்டு

* மத்திய தொழிலாளர் நல அமைச்சர் மாண்புமிகு திரு. சத்தியநாராயண ஜாட்டியா அவர்கள் தமிழ்நாட்டில்

கட்டுமான தொழிலாளர்களுக்கான நலத்திட்டங்கள் சிறப்பாக செயல்படுகின்றன என்றும், அவற்றை மற்ற மாநிலங்களும் பின்பற்ற வேண்டுமென்றும் கூறி தமிழ்நாடு அரசைப் பாராட்டி உள்ளார்.

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான வாரியங்கள்

* அமைப்பு ரீதியில் இல்லாத தொழிலாளர்களுக்கு பல்வேறு தொழிலாளர் நலத் திட்டங்களின் பயன்கள் கிட்டுவதில்லை என்பதை மனதில் கொண்டு இந்த அரசு 1997ஆம் ஆண்டு ஒரு குழுவினை நியமித்து அவர்களிடமிருந்து பெற்ற பரிந்துரையின் அடிப்படையில் மாநில அளவிலான அமைப்பு ரீதியில் இல்லாத தொழிலாளர் நல வாரியம் ஒன்று அமைக்கப்பட்டு அதன் மூலம் பல்வேறு தொழிலாளர் நல உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த வாரியத்தின் கீழ் இருந்த 61 தொழில்களிலிருந்து பிரித்து, தனித்தனியாக தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியம், தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் நல வாரியம், தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம், தமிழ்நாடு தையல் தொழிலாளர்கள் நல வாரியம், பனைமரத் தொழிலாளர் நலவாரியம், கைவினைத் தொழிலாளர் நலவாரியம், விவசாயத் தொழிலாளர் நலவாரியம், என்று மேலும் ஏழு வாரியங்கள் இந்தத் தொழிலாளர்களின் நலன்களுக்காக இந்த ஆட்சியிலே இந்த ஆண்டு அமைக்கப்பட்டுள்ளது.

* பத்திரிகை சுவரோவியம் போன்று ஓவியத்தையே தொழிலாகக் கொண்டிருக்கும் ஓவியக் கலைஞர்களின் கோரிக்கையை ஏற்று அவர்களுக்கென தனியாக ஓவியர் நல வாரியம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

* இந்த வாரியங்களின் தொடக்க விழா நேற்று 16ந்தேதியன்று சென்னை சீரணி அரங்கிலே நடைபெற்றது. இலட்சக்கணக்கில் தொழிலாளர்கள் கூடினர். இவ்வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு பின்வரும் நலத் திட்டங்கள் அமல்படுத்தப்படவுள்ளன. இந்த உதவிகள் பதிவு செய்து கொண்ட அமைப்பு சாரா தொழிலாளர்கள் அனைவருக்கும் கிடைக்கும்.

(அ) விபத்து நிவாரணத் திட்டம்:

* மரண விபத்து ஏற்படும் தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சம் வழங்கப்படும். விபத்தில் ஊனமுறும் தொழிலாளர்களுக்கு விபத்தின் தன்மைக்கேற்ப இழப்பீட்டுத் தொகை அதிகபட்சமாக ஒரு இலட்சம் ரூபாய் வரை வழங்கப்படும். இனி இயற்கையாக மரணமடையும் உறுப்பினர்களின் குடும்பத்திற்குப் பத்தாயிரம் ரூபாய் வழங்கப்படும்.

(ஆ) மகப்பேறு நலத் திட்டம்:

* பெண் தொழிலாளர்களுக்கு மகப்பேறு உதவியாக முதல் இரண்டு குழந்தைகளுக்கு தலா ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும். கருச்சிதைவு ஏற்படும் பெண் தொழிலாளர்களுக்கு ரூபாய் ஐநூறு உதவித் தொகை வழங்கப்படும்.

* இதுவரை அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்கள் மாதம் 20 ரூபாய் கட்ட வேண்டுமென்றும் கட்டிய தொகை இறுதியில் வட்டியுடன் திருப்பித் தரப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. இதை மாற்றி வாரிய உறுப்பினர்கள் முதலில் சேரும்போது 100 ரூபாய் ஒரேயொரு முறை கட்டினால் போதும், மாதாந்திர கட்டணம் கட்டத் தேவையில்லை, இரண்டாண்டிற்கு ஒரு முறை புதுப்பித்துக் கொள்ள பத்து ரூபாய் மட்டும் கட்டினால் போதும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

* இந்த வாரிய உறுப்பினர்களுக்குத் திருமண உதவித் திட்டமாக 2000 ரூபாய் வழங்கப்படும் என்று 16ந்தேதி அறிவிக்கப்பட்டுள்ளது.

* இந்த வாரிய உறுப்பினர்கள் பலன்களைப் பெற குறைந்தபட்சம் ஓராண்டு காலத்திற்காவது உறுப்பினராக இருந்திருக்க வேண்டுமென்று முன்பு இருந்தது. அது மாற்றப்பட்டு உறுப்பினரான தேதியிலிருந்தே பலன்கள் வழங்கப்படும் என்றும் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

* நேற்றைய தினம் (16-12-2000) தொடங்கப்பட்ட இந்த வாரியங்களின் தொகுப்பு நிதியாக அரசின் சார்பில் ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும்.

* தமிழ்நாடு அமைப்புசாரா தொழிலாளர்நல வாரியம் 5-11-99 முதல் சென்னையை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இவ்வாரியத்தின் அமைப்பு ரீதியற்ற உடலுழைப்புத் தொழிலாளர்களை உறுப்பினராகச் சேர்க்கும் பொருட்டு, சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், மதுரை, திருநெல்வேலி ஆகிய மண்டல அளவிலான வாரியப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாரியத்தில் 3,40,465 அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்கள் பதிவு செய்து கொண்டுள்ளனர். இவ்வாரியத்திற்கு அரசு அளித்த நாற்பது இலட்ச ரூபாய் மானியத் தொகைக்கு மேலாக, மோட்டார் போக்குவரத்து வாகன வரி செலுத்துவோரிடமிருந்து பெறப்படும் வாகன வரியில், ஒரு சதவிகிதத் தொகையும் சேர்ந்து இன்றுவரையில் 3 கோடியே 24 லட்சத்து 52 ஆயிரத்து 356 ரூபாய் வாரிய நிதியில் சேர்க்கப்பட்டுள்ளது. தோட்டத் தொழிலாளர் நலம் தோட்டத் தொழிலாளர் சட்டவிதிகள் அமலாக்கத்தினை தீவிரமாக்கும் பொருட்டு இவ்வாண்டு முதல் தேனி, கோத்தகிரி மற்றும் பந்தலூர் ஆகிய இடங்களை தலைமையிடமாகக் கொண்டு, மூன்று புதிய தோட்ட நிறுவன ஆய்வர் அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி: தமிழ்நாட்டில் மொத்தம் 43,694 வீடுகள் தோட்டத் தொழிலாளர்களுக்காக அந்த நிர்வாகத்தினரால் கட்டப்பட்டுள்ளன. தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி வழங்குதலில் மொத்தமுள்ள தோட்டத் தொழிலாளர் சட்டவிதிகள் அமலாக்கத்தினை தீவிரமாக்கும் பொருட்டு இவ்வாண்டு முதல் தேனி, கோத்தகிரி மற்றும் பந்தலூர் ஆகிய இடங்களை தலைமையிடமாகக் கொண்டு, மூன்று புதிய தோட்ட நிறுவன ஆய்வர் அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி: தமிழ்நாட்டில் மொத்தம் 43,694 வீடுகள் தோட்டத் தொழிலாளர்களுக்காக அந்த நிர்வாகத்தினரால் கட்டப்பட்டுள்ளன. தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி வழங்குதலில் மொத்தமுள்ள தோட்டத் தொழிலாளர்களில் 98 சதவீதம் தொழிலாளர்கள் வீட்டுவசதி பெற்று தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலாவதாகத் திகழ்கிறது.

(இ) மருத்துவ வசதிகள்:

* தமிழ்நாட்டில் உள்ள தோட்ட நிறுவனங்களில் தற்போது 136 மருந்தகங்களும், 29 தோட்ட மருத்துவமனைகளும் மற்றும் 4 தொகுப்பு மருத்துவமனைகளும் உள்ளன. மருத்துவமனை வசதிகள் இல்லாத தோட்ட நிறுவனங்களில், பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் அருகில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுக்கொண்டு, அதற்கான செலவை நிர்வாகத்திடமிருந்து திரும்ப பெற்றுக் கொள்கின்றனர்.

(ஈ) மின்வசதி:

* தோட்டத் தொழிலாளர்களுக்கான 43,694 வீடுகளில், 41,055 வீடுகளுக்கு மின்சார வசதி வழங்கப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் வீடுகளுக்கு மின்வசதி அளிப்பதில் முன்னேற்றம் குறித்து கண்காணிக்க அந்தந்த மாவட்ட ஆட்சியரின் கீழ் நிர்வாகத்தரப்பினர், தொழிலாளர் தரப்பினர் மற்றும் அலுவலர்கள் அடங்கிய கண்காணிப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

(உ) பணி நிரந்தரம்:

இந்த அரசு எடுத்த தீவிர நடவடிக்கையினால் நீண்டநாட்களாக பணியில் நிரந்தரம் செய்யப்படாத 4391 தோட்டத் தொழிலாளர்கள் தற்போது நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு

பள்ளிக்குச் செல்ல வேண்டிய சிறார்களை பணிக்கு அமர்த்தும் கொடுமை உலக அளவில் இருந்தாலும், இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் இந்த முறையை ஒழிப்பதில் அரசு மிகுந்த வேகத்துடன் செயல்பட்டு வருகிறது. குழந்தைத் தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படும் காரணங்கள் எதுவாக இருந்தாலும், இந்த முறை ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் அரசு தீவிர ஆர்வம் காட்டி வருகின்றது. குழந்தைத் தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்தியுள்ள உரிமையாளர்கள் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

(அ) அரசு உதவித் தொகை:

* உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி அபாயகரமான தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள குழந்தைத் தொழிலாளர்களின் குடும்பத்தில் உள்ள ஒரு நபருக்கு அரசே வேலை அளிக்க வேண்டும், இல்லையென்றால் அரசு தன்பங்காக ரூ. 5,000/- அளிக்கிறது. இதற்காக அரசால் ரூ. 4 கோடியே 75 இலட்சம் தொகை நிதியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிதியின் கீழ் இதுவரை 155 பேருக்கு 5000 ரூபாய் வீதம் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) சிறப்புப் பள்ளிகள்:

* விருதுநகர், புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருச்சி, சேலம், கோயம்புத்தூர், வேலூர் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் குழந்தைத் தொழிலாளர்களுக்காக 327 சிறப்புப் பள்ளிகள் அமைக்கப்பட்டு, அவற்றில் 15,405 குழந்தைகள் படிக்கின்றனர். திருநெல்வேலி மாவட்டத்தில் 2000ஆம் ஆண்டு

முதல் குழந்தைத் தொழிலாளர்களுக்கான சிறப்புப் பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், குழந்தைத் தொழிலாளர் குடும்பத்திற்கு உதவித் தொகையாக மாதம் ரூ.100/- அளிக்கப்பட்டு வருகிறது. இத்துடன் குழந்தைகளுக்கு இலவச உணவு, நோட்டு புத்தகம் மற்றும் கல்விக்குரிய அனைத்து சலுகைகளும் அளிக்கப்படுகின்றன.

(இ) குழந்தைத் தொழிலாளர் குறித்த விழிப்புணர்வு:

* யுனிசெப் நிறுவனம் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பிற்காக 1998 ஆம் ஆண்டு 24 லட்சத்து 31 ஆயிரத்து 500 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தது. இதன் மூலம் குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை பற்றிய விழிப்புணர்வு பேரணிகள், கருத்தரங்குகள், கலை நிகழ்ச்சிகள், மனிதச்சங்கிலி ஆகியவை நடத்தப்பட்டன. தொழிலாளர் நலத் துறையின் மூலம் அகில இந்திய வானொலி நிலையத்தில் குழந்தைத் தொழிலாளர் விழிப்புணர்வு விளம்பரங்கள் 60 நாட்களுக்கு ஒலிபரப்பப்பட்டன. மேலும், 20 இலட்சம் தபால் அட்டைகளில் இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான வாசகம் தபால் துறையின் மூலம் விளம்பரப்படுத்தப்பட்டது.

குறைந்தபட்ச ஊதியம்:

* 1996-ல் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு குறைந்தபட்ச ஊதியச் சட்ட அட்டவணையில் அமைப்பு ரீதியற்ற 17 தொழில் இனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. 1996 முதல் இன்றுவரை 5 தொழில்களுக்கு முதல்முறையாக குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இது தவிர, 64 தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இது குறித்து வந்த 4292 புகார்கள் மீது விசாரணை நடத்தி அதில் 2880 மனுக்கள் முடிவு செய்யப்பட்டு 5 கோடியே 2 லட்சத்து 86 ஆயிரம் ரூபாய் நிவாரணமாக வழங்க உத்தரவிடப்பட்டது.

வேலையாள் இழப்பீட்டுச் சட்டம்:

* பணியில் இருக்கும்போது விபத்து நேரிட்டு உயிரிழந்த மற்றும் காயம்பட்ட தொழிலாளர்கள் சார்பாக 1996 முதல் இன்று வரை தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளால் 7665 வழக்குகள் விசாரித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. அதன்படி 7 கோடியே

37 லட்சத்து 92 ஆயிரம் ரூபாய் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

பீடித் தொழிலாளர்கள்

*பீடித் தொழிலாளர்கள் குடும்பத்தினரின் விவரங்களுடன் கூடிய புகைப்பட அடையாள அட்டை அனைவருக்கும் வழங்கி முடிக்கப்பட்டுள்ளது. பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள் வழங்கும் திட்டத்தை இவ்வரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. ஒவ்வொரு வீடும் ரூ. 34,000/- செலவில் கட்டப்படுகிறது. இதற்கான வீட்டுமனையை தமிழக அரசு வழங்குகிறது. இதற்கு கட்டுமான செலவில் ரூ. 20,000/- அல்லது 50 விழுக்காடு மானியமாக மைய அரசு வழங்குகிறது. மீதித் தொகையை நீண்டகால தவணைக் கடனாக ஹட்கோ நிறுவனம் வழங்கி வருகிறது. பீடித் தொழிலாளர்கள் நல நிதியிலிருந்து மத்திய அரசிடமிருந்து மானியத் தொகை பெற்று தமிழ்நாட்டில் பீடித் தொழிலாளர்களின் துயர் துடைப்பதற்காக மேலப்பாளையம் மற்றும் முக்கூடலில் 1000 வீடுகள் கட்ட பணி ஆரம்பிக்கப்பட்டு 148 வீடுகள் 13-3-2000-ல் திறந்து வைக்கப்பட்டது. மற்ற வீடுகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. மேலும், மாநிலத்தில் பல்வேறு இடங்களில் 1650 வீடுகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வேலைவாய்ப்புத்துறை

1996ஆம் ஆண்டு 25,520 பேரும், 1997ஆம் ஆண்டு 34,785 பேரும், 1998ஆம் ஆண்டு 23,716 பேரும், 1999ஆம் ஆண்டு 25,506 பேரும் வேலைவாய்ப்புத் துறை மூலம் பல்வேறு பணியிடங்களில் பணியமர்த்தப்பட்டனர். வேலைவாய்ப்பு பதிவு நிறுவனங்களில் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு மீண்டும் புதுப்பிக்க அளிக்கப்பட்டு வந்த கால அவகாசம் 12 மாதங்கள் என்பது 2.9.1996 முதல் 18 மாதங்களாக அதிகரிக்கப்பட்டது.

1993, 1994, 1995 ஆகிய ஆண்டுகளில் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறியமையால் காலாவதியாக்கப்பட்ட பதிவுகளை மீண்டும் உயிர்ப்பித்துக்கொள்ள அவகாசம் அளித்து 28.10.1996 அன்று ஆணையிடப்பட்டது. இதன் மூலம்

1,08,201 விண்ணப்பதாரர்களின் காலாவதியான பதிவுகள் உயிர்ப்பிக்கப்பட்டன.

அதே போல, 1996, 1997, 1998 ஆகிய ஆண்டுகளில் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கும் சலுகை அளிக்கும் நோக்கில் 25.5.1999 அன்று அளிக்கப்பட்ட சலுகை காரணமாக 51,886 பதிவுகள் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டன. எஸ்.எஸ். எல்.சி.க்கும் குறைவான கல்வித் தகுதியுடன் வேலை தேடி பதிவு செய்துள்ளவர்களுக்கு, அவர்களுடைய பதிவு காலத்தில் ஒவ்வொரு மூன்று ஆண்டிற்கும் ஒரு ஆண்டு வீதம் அதிகபட்சமாக ஐந்து ஆண்டுகள் வரை வயது வரம்பில் சலுகை வழங்கிட 2.2.2000 அன்று ஆணையிடப்பட்டது. இதன் மூலம் 5 இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் பயனடைகிறார்கள்.

புதிதாகத் தொடங்கப்பட்ட திருவள்ளூர், நாமக்கல், தேனி, திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் 7.2.1997 அன்றும், பெரம்பலூர், கரூர் ஆகிய மாவட்டங்களில் 4.11.1997 அன்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் புதிதாக உருவாக்கப்பட்டன.

தொழிற்சாலைகளுக்குத் தேவையான தேர்ச்சி பெற்ற கைவினைஞர்களை உருவாக்கிடும் அரசின் சீரிய முயற்சிகளை நிறைவு செய்திடும் வகையில் தொழிற் பயிற்சி அளிக்க தனியார் துறையின் பங்கு ஊக்குவிக்கப்படுகிறது. 1996-97 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில், இளைஞர்கள் தொழிற் பயிற்சியின் பயனை அடையும் வகையில் 218 பஞ்சாயத்து யூனியன்களில் எங்கெல்லாம் தொழிற்யிற்சி நிலையங்கள் இல்லையோ அங்கெல்லாம் மூன்று ஆண்டு காலத்தில் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் தோற்றுவிக்கப்படும் என்று அறிவித்ததற்கிணங்க, அங்கீகாரம் பெற்ற தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை 438-லிருந்து 590-ஆக உயர்ந்துள்ளது. இத்தொழிற்பயிற்சி நிலையங்களின் மொத்த இருக்கைகளின் எண்ணிக்கை 60,796 ஆகும்.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் (E.S.I)

* 1995-96இல் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை 34.8 இலட்சம் பேர். இது இந்த ஆண்டில் 45.9 இலட்சம் பேர் என்ற அளவிற்கு பெருகியுள்ளது.

2 கோடியே 29 இலட்சம் ரூபாய் செலவில் திருச்சியில் 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை ஒன்று தொழிலாளர்களுக்காக ஏப்ரல் 99இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ராசிபுரம், நாங்குனேரி, காரைக்குடி, சோளிங்கர், வானூர், கழுகுமலை, சங்கரலிங்காபுரம், காரியாப்பட்டி, நல்லாற்றுபாளையம் ஆகிய இடங்களில் புதிதாக ஈஎஸ்.ஐ. மருந்தகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கோவை கணபதியில் சுமார் 15 இலட்சம் ரூபாய் செலவில் புதிய ஈஎஸ்.ஐ. மருந்தகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

சென்னை கலைஞர் கருணாநிதி நகரில் உள்ள ஈஎஸ்.ஐ. மருத்துவமனையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்காக 2 கோடியே 3 இலட்சம் ரூபாய் செலவில் கூடுதலாக 52 குடியிருப்புகள் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. சென்னை அயன்புரத்தில் 3 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் 193 கூடுதல் குடியிருப்புகள் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

* 1969ஆம் ஆண்டு நான் முதன் முதலாக முதல்வர் பொறுப்பையேற்ற போதுதான் மே தினத்திற்கு ஊதியத்துடன் விடுமுறை அளிக்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது.

* 1971ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதன் முறையாக குடியிருப்பு அனுபோகதாரர்கள் சட்டத்தை நடைமுறைப்படுத்தி விவசாயத் தொழிலாளர்களுக்கு அவர்கள் குடியிருந்த வீட்டு மனைகளை அவர்களுக்கே சொந்தமாக்கியது கழக அரசுதான். இதன் மூலம் வீட்டு மனைப்பட்டா பெற்ற விவசாயத் தொழிலாளர்கள் ஒரு இலட்சத்து 73 ஆயிரத்து 748 பேர்.

* 1990ஆம் ஆண்டு மே தினத்தின் நூற்றாண்டு விழாவையொட்டி சென்னை நேப்பியர் பூங்காவிற்கு மே தினப் பூங்கா எனப் பெயரிட்டு அங்கு மே தின நினைவுச் சின்னத்தை அமைத்ததும் கழக அரசுதான்.

உடன்பிறப்பே, தமிழகத்திலே தொழில் தொடங்குவோரை ஊக்குவிக்க இங்கே நிலவி வரும் தொழில் அமைதியும் ஒரு காரணமாகும். அந்தத் தொழில் அமைதியைக் காத்து, சுமூகமான தொழில் உறவினை நிலைநாட்டவும் தொழிலாளர்களின் நியாயமான உரிமைகள் பாதுகாக்கப்படவும் இந்த அரசு பாடுபட்டு

வருகின்றது. தொழிலாளர், நிர்வாகம் இவர்களிடையே பிரச்சினை ஏற்பட்டால் உடனடியாக அதனைத் தீர்த்து வைக்க அரசாங்கம் என்ற அளவிற்கு முத்தரப்பு நடவடிக்கைகளின் வாயிலாக இந்த நான்கரை ஆண்டு காலத்தில் செயல்பட்டு வருகின்ற இந்த அரசின் சார்பில் தொழிலாளர் நலத்துறையிலே செய்யப்பட்ட சாதனைகளைத் தொகுத்து இன்று அளித்துள்ளேன்.

அன்புள்ள,

மு. க.

(18-12-2000)

2565. பழைய வரலாறு கொண்ட துறை; பயன்விளைவிக்கும் வருவாய்த்துறை!

உடன்பிறப்பே,

நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்டதும், அரசு நிர்வாகத்தின் எல்லாத் துறைகளுக்கும் தாய்த் துறையாக, தலைமைத் துறையாக விளங்கி வருவதுமான வருவாய்த் துறையின் மூலம் இந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் கழக அரசு தமிழ்நாட்டு மக்களுக்காக நிகழ்த்தியுள்ள சாதனைகளைப் பற்றியது இன்றைய கடிதம்!

வருவாய்த் துறை வரலாற்றுச் சுருக்கம்

* வருவாய்த் துறை வாரியம் (Board of Revenue) என்ற அமைப்பு 1786ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. அப்பொழுது கிழக்கிந்தியக் கம்பெனியின் அனுபவம் மிக்க சிவில் பணியாளர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எனப் பெயர் சூட்டப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பொறுப்பாக அமர்த்தப்பட்டனர். தகவல் தொடர்பு வசதிகள் மிகவும் குறைவாக இருந்த அந்தக் காலகட்டத்தில், சட்டம்-ஒழுங்கு, நிலவரி வசூலித்தல், பொதுச் சட்டங்களை செயல்படுத்துதல் போன்ற உள்நாட்டு நிர்வாகம் தொடர்பான அதிகாரங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டு இருந்தன.

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பணிகளை வருவாய்த் துறை வாரியம் முறைப்படுத்தி, மேற்பார்வையிட்டு வந்தது. வருவாய்க் கிராமம் (Revenue Village), தாலுக்கா, வருவாய்க் கோட்டம் (Revenue Dvision), மாவட்டம் என்கிற அமைப்பெல்லாம் பிரிட்டிஷ் ஆட்சியின் தொடக்கத்திலேயே உருவானவை. அப்பொழுது நில வருவாய் (Land Revenue) மட்டுமே மாநில நிதிநிலையின் ஊற்றுக் கண்ணாக இருந்தது. வருவாய்த் துறையின் வாரியமும், மாவட்ட

ஆட்சியாளர்களும் நிலவரி வசூலுக்குப் பொறுப்பாக்கப்பட்டு இருந்தனர்.

தொடர்ந்து வரும் கழக அரசின் சாதனைகள்

* திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் போதெல்லாம் ஆற்றிவரும் பணிகள், வருவாய்த் துறையின் சரித்திரத்தில் சாதனை அத்தியாயங்களாக மிளிர்ந்து கொண்டிருக்கின்றன. எண்ணிலடங்காச் சாதனைகள் எனினும், ஒருசில எண்ணியெண்ணிப் பெருமை கொள்ளத்தக்கவை. அவைகளில் சில :-

புஞ்சை நிலவரி ரத்து

* 1967ஆம் ஆண்டு அண்ணா தலைமையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும், திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்த முதல் காரியங்களில் ஒன்று, அதுவரை புன்செய் நிலங்களின் மீது விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு வந்த அடிப்படைத் தீர்வையை ரத்து செய்ததுதான்.

மனுநீதித் திட்டம்

* கிராமங்களில் வாழும் ஏழை, எளிய, நலிந்த பிரிவினர் தங்கள் குறைகளைத் தெரிவிக்க அலுவலர்களைத் தேடிச் சென்று காத்திருக்க வேண்டியிருந்த நிலைமையை மாற்றி, அதிகாரிகள் மக்களைத் தேடிச் சென்று, மனுக்களைப் பெற்று, குறைகளை முடிந்த அளவில் அங்கேயே உடனுக்குடன் தீர்த்து வைத்திட மாபெரும் பொதுமக்கள் தொடர்புத் திட்டமான மனுநீதித் திட்டம் 15.9.1969 முதல் கழக அரசில் செயல்படுத்தப்பட்டது. இந்த மனுநீதித் திட்டப்படி 15.9.1969 முதல் 30.9.1974 வரை ஐந்தாண்டு காலத்தில் 8 இலட்சத்து 35 ஆயிரத்து 34 மனுக்கள் பெறப்பட்டு, 7 இலட்சத்து 70 ஆயிரத்து 616 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டு, மக்கள் குறைகளைத் தீர்த்த அளவு என்பது 92.2 சதவீதம் என்ற சாதனை படைக்கப்பட்டது.

* தற்பொழுது நான்காவது முறையாக கழக அரசு பொறுப்பேற்ற 1996, மே மாதத்திற்குப் பிறகு, 2000ஆம் ஆண்டு நவம்பர் வரை மனுநீதித் திட்டத்தின்கீழ் 11 இலட்சத்து 5 ஆயிரத்து 961 மனுக்கள் பெறப்பட்டு, 5 இலட்சத்து 42 ஆயிரத்து 607 மனுக்களில்

இருந்த கோரிக்கைகள் ஏற்கப்பட்டன; 4 இலட்சத்து 31 ஆயிரத்து 187 மனுக்களில் இருந்த கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன; ஆக மொத்தம் 9 இலட்சத்து 73 ஆயிரத்து 794 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

நிலச் சீர்திருத்தம்

* சமுதாய ஏற்றத்தாழ்வுகளைப் போக்க நிலஉடைமைகளுக்கு உச்சவரம்பு நிர்ணயித்து, மிகை நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கி, உழுபவனுக்கே நிலம் சொந்தமாக வேண்டும் என்ற நோக்கத்தோடு, நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. நோக்கம் நல்லதாக இருந்த போதிலும் காங்கிரஸ் ஆட்சியில் 1960ஆம் ஆண்டு ஏப்ரலில் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று சட்டம் கொண்டு வருவதற்கு முன்பே அந்தக் கட்சியிலே உள்ள பெரும் நிலச் சொந்தக்காரர்களுக்கெல்லாம் அந்தச் செய்தி பரவியதால் பயன் எதுவும் விளையவில்லை. கழக ஆட்சியில்தான், 1970ஆம் ஆண்டு உச்சவரம்பு 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று திடீரென்று அறிவித்து சட்டம் இயற்றப்பட்டது. இதன் விளைவாக காங்கிரஸ் ஆட்சியில் 19 ஆயிரத்து 20 ஏக்கர் நிலம் மட்டுமே உபரியாக அறிவிக்கப்பட்டிருந்ததற்கு மாறாக, கழக அரசு நிறைவேற்றிய சட்டத்தின் காரணமாகத்தான், ஒரு இலட்சத்து 78 ஆயிரத்து 880 ஏக்கர் நிலம் உபரி நிலம் என்று கைப்பற்றப்பட்டு தகுதியுள்ள, நிலமற்ற ஒரு இலட்சத்து 37 ஆயிரத்து 236 ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. அதில், 61 ஆயிரத்து 985 பேர் ஆதிதிராவிடர்கள்; 204 பேர் பழங்குடியினர்.

குடியிருப்பு உரிமைச் சட்டம்

* 1971ஆம் ஆண்டில் கழக அரசில் இந்தியாவிலேயே முதன்முறையாக குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்கல்) சட்டத்தை கொண்டுவந்து, விவசாயத் தொழிலாளர்களுக்கு, அவர்கள் குடியிருக்கும் வீட்டுமனைகள் அவர்களுக்கே சொந்தமாக்கப்பட்டன.

நிர்வாகச் சீர்திருத்தக் கமிஷன்
(Administrative Reforms Commission)

* மக்களுக்காக அரசு செய்திடும் பணிகளை விரைவாகவும், முழுமையாகவும் ஆற்றிடவும், அரசுத் துறைகளின் செயல்பாடுகளை

வரையறை செய்திடவும், வருவாய்த் துறை உள்ளிட்ட அரசுத் துறைகளை விரிவாக ஆய்வு செய்து, பரிந்துரைகளைச் செய்யவும், வருவாய்த் துறை வாரியத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்யவும், 1973ஆம் ஆண்டில் டி.ஏ.வர்கீஸ் அவர்களைத் தலைவராகவும், கே.எஸ்.சிவசுப்பிரமணியன், வி.கார்த்திகேயன், ஏ.ஆர்.சுப்பையா முதலியார், வி.கிருஷ்ணசுவாமி ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டு நிர்வாகச் சீர்திருத்தக் கமிஷன் அமைக்கப்பட்டது. கமிஷன் அளித்த பரிந்துரைகளில் பெரும்பாலானவற்றைக் கழக அரசு ஏற்று உடனடியாகச் செயல்படுத்தியது. வருவாய்த் துறை வாரியத்தைக் கலைக்க வேண்டுமென்ற நீண்ட நாள் எண்ணத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து கமிஷன் செய்த பரிந்துரையை ஏற்று வருவாய்த் துறை வாரியம் கலைக்கப்படாமல், தொடர்ந்து பணியாற்ற கழக அரசில் முடிவெடுக்கப்பட்டது என்பதும், வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க இந்த வருவாய்த் துறை வாரியம் பின்னர் 1980ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் கலைக்கப்பட்டது என்பதும், கடந்த காலத்தின் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாகும்.

* முன்னாள் தலைமைச் செயலாளர் திரு.பி. சபாநாயகம் அவர்கள் தலைமையில் வருவாய் நிர்வாகச் சீர்திருத்தக் குழு 1996இல் அமைக்கப்பட்டு அக்குழு செய்த 99 பரிந்துரைகள் ஏற்கப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

புதிய நிர்வாக அமைப்புகள்

* நீண்ட காலத்திற்குப் பிறகு, மாவட்ட எல்லைகளை மாற்றி அமைத்து, புதிய மாவட்டங்களை அமைக்கும் முயற்சி தொடங்கப்பட்டது. 14.1.1974 அன்று புதுக்கோட்டை மாவட்டம் அமைக்கப்பட்டது. 1989-91 காலகட்டத்தில் கழக அரசில் திருவண்ணாமலை, நாகப்பட்டினம் ஆகிய இரண்டு மாவட்டங்களும், வேலூர் வருவாய்க் கோட்டமும், பரமத்தி வேலூர் வருவாய் வட்டமும் புதியதாக உருவாக்கப்பட்டன. 1996க்குப் பின்னர் கழக ஆட்சியில், நாமக்கல், திருவள்ளூர், தேனி, திருவாரூர் ஆகிய 4 மாவட்டங்களும், திருச்செங்கோடு, மதுராந்தகம், திருத்தணி, பொன்னேரி, உத்தமபாளையம், திருவாரூர், குளித்தலை, ஆத்தூர் ஆகிய 8 வருவாய்க் கோட்டங்களும்,

எடப்பாடி, கங்கவள்ளி, தாம்பரம், திருக்கழுக்குன்றம், பூவிருந்தவல்லி, அம்பத்தூர், தேனி, போடிநாயக்கனூர், கீழ்வேளூர், மணச்சநல்லூர், கிருஷ்ணராயபுரம், வேப்பந்தட்டை, குந்தா, பந்தலூர், எட்டயபுரம், திருக்குவளை, வாழப்பாடி, மணமேல்குடி, இலுப்பூர், ஆலங்குளம், வீரகேரளம்புதூர், காட்பாடி, காரியாப்பட்டி, தொட்டியம் ஆகிய 24 வருவாய் வட்டங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. பெரம்பலூர் மாவட்டத்தைப் பிரித்து, அரியலூரைத் தலைமையிடமாகக் கொண்டு, புதிய அரியலூர் மாவட்டம் உருவாக்க, பூர்வாங்கப் பணிகள் 27.12.1999 முதல் தொடங்கப்பட்டுள்ளன. இஃதன்னியில், 11 புதிய பிர்க்காக்களும் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டம், சருகனி உள்வட்டத்தில் (பிர்க்கா) 22 கிராமங்களும், ஆனந்தூர் உள்வட்டத்தில் ஒரு கிராமமும் 1.9.1998 முதல் சிவகங்கை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டன.

வருவாய்த் துறைக் கட்டடங்கள்

* 1991 முதல் 1996 வரை கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வருவாய்த் துறை அலுவலகங்கள் கட்ட 10 கோடியே 12 இலட்சம் ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டது. ஆனால், கழக ஆட்சியில் 1996க்குப் பின்னர், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் தூத்துக்குடியில் 4 கோடி ரூபாய்ச் செலவிலும், சென்னையில் 9 கோடி ரூபாய்ச் செலவிலும், விழுப்புரத்தில் 4 கோடியே 3 இலட்சம் ரூபாய்ச் செலவிலும், திருவண்ணாமலையில் 5 கோடியே 77 இலட்சம் ரூபாய்ச் செலவிலும், நாமக்கல்லில் 6 கோடியே 14 இலட்சம் ரூபாய்ச் செலவிலும், கரூரில் 6 கோடியே 16 இலட்சம் ரூபாய்ச் செலவிலும், திருவாரூரில் 6 கோடியே 93 இலட்சம் ரூபாய்ச் செலவிலும், நாகப்பட்டினத்தில் 6 கோடியே 49 இலட்சம் ரூபாய்ச் செலவிலும், திருவள்ளூரில் 5 கோடியே 61 இலட்சம் ரூபாய்ச் செலவிலும் திராவிட கட்டடக் கலையம்சங்களை அடிப்படையாகக் கொண்டு, கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளன; தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் 5 கோடியே 94 இலட்சம் ரூபாய்ச் செலவில் கட்டப்பட்டு, வரும் 28-12-2000 அன்று திறந்து வைக்கப்பட உள்ளது. ஆக, 10 மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் 60 கோடியே 7 இலட்சம்

ரூபாய்ச் செலவில் இதுவரை கட்டப்பட்டுள்ளன. அத்துடன், 15 கோடியே 34 இலட்சம் ரூபாய்ச் செலவில் 11 வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்களும், 13 வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளன. ஒரு கோடியே 7 இலட்சம் ரூபாய்ச் செலவில் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கான குடியிருப்புகளும் கட்டப்பட்டுள்ளன; 38 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய்ச் செலவில் வருவாய்த் துறை அலுவலகங்களில் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

* தமிழகத்தைத் தொழில் மயமாக்கிட தேவைப்படும் நிலங்களைக் கையகப்படுத்திட புதிய சட்ட முன்வடிவு ஒன்று நிறைவேற்றப்பட்டு 14-3-2000 அன்று குடியரசுத் தலைவரின் ஒப்புதலையும் பெற்று 23-3-2000 அன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

வருவாய்த்துறைக்கு வாகனங்கள்

* கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் வருவாய்த் துறைக்கு 3 கோடியே 39 இலட்சம் ரூபாய்ச் செலவில், 129 வாகனங்களே வழங்கப்பட்டன என்பதற்கு மாறாக, கழக ஆட்சியில் இந்த நான்கரை ஆண்டுக் காலத்திற்குள்ளாகவே 7 கோடியே 83 இலட்சம் ரூபாய்ச் செலவில் 196 ஜீப்புகளும், 60 கார்களும் வழங்கப்பட்டன.

வீட்டுமனை ஒப்படை

* சமுதாயத்தில் பொருளாதார ரீதியாக நலிவுற்றவர் களை முன்னேற்றுவதற்கு அவர்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து தரவேண்டும் என்பது கழக அரசு தொடர்ந்து பின்பற்றி வரும் குறிக்கோளாகும். ஆண்டு வருமானம் 12 ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாக உள்ள குடும்பங்களுக்கு இலவசமாக வீட்டுமனைகள் ஒப்படை செய்யப்பட்டு வந்ததை மாற்றி, அதிக எண்ணிக்கையிலான ஏழை எளியோர் பயன்பெறவேண்டும் என்பதற்காக, தற்பொழுது 31.5.2000 முதல் அந்த ஆண்டு வருமானம் நகர்ப்புறங்களில் 24 ஆயிரம் ரூபாய் என்றும், கிராமப்புறங்களில் 16 ஆயிரம் ரூபாய் என்றும்

உயர்த்தப்பட்டுள்ளது. 1996ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பிறகு 2000ஆம் ஆண்டு செப்டம்பர் வரை 7 இலட்சத்து 51 ஆயிரத்து 235 வீட்டுமனைப் பட்டாக்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன; **இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைந்தவர்களில் 2 இலட்சத்து 44 ஆயிரத்து 879 பேர் ஆதிதிராவிடர்கள்; 8 ஆயிரத்து 654 பேர் பழங்குடியினர்; 4 இலட்சத்து 97 ஆயிரத்து 702 பேர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் உள்ளிட்ட ஏனையோர்.**

* மேலும், அரசுக்குத் தேவைப்படாத புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டிக் குடியிருந்து வருபவர்களுக்கு வீட்டுமனை ஒப்படை செய்வது பற்றி பரிசீலித்துப் பரிந்துரை செய்ய 5.2.2000 அன்று ஒரு குழு அமைக்கப்பட்டு, அக்குழு வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில், நீர்வழிப் புறம்போக்கு நிலங்கள், மேய்ச்சல், மந்தைவெளி, மயானம், பாட்டை என வகைப்பாடு செய்யப்பட்ட அரசு நிலங்கள், தற்போது அத்தகைய உபயோகத்தில் இல்லாமல் நத்தமாக இருந்து, அதில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வீடுகளைக் கட்டி குடியிருப்பவர்களுக்கு, அந்த நிலங்கள் அரசின் உபயோகத்திற்குத் தேவையில்லையெனில், அத்தகைய குடியிருப்புகளை பட்டா வழங்கி முறைப்படுத்தலாம் என 27.3.2000 அன்று ஆணையிடப்பட்டது. இதுகாறும் தமிழகத்தில் அமல்படுத்தப்படாத இந்தச் சிறப்புத் திட்டத்தின்கீழ் 30.11.2000 வரை ஒரு இலட்சத்து 63 ஆயிரத்து 348 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தால் 41 ஆயிரத்து 159 ஆதிதிராவிடர் வகுப்பினர்; 3 ஆயிரத்து 488 பழங்குடியினர்; 50 ஆயிரத்து 233 மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்; 64 ஆயிரத்து 734 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்; 3 ஆயிரத்து 734 இதர பிரிவினர் குடும்பங்கள் பலனடைந்துள்ளன.

இலவசமாக விவசாய நிலம் ஒப்படை

* நிலமற்ற ஏழைகளுக்கு இலவசமாக விவசாய நிலம் ஒப்படை செய்யும் திட்டத்தின்கீழ், 1996ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பிறகு 2000ஆம் ஆண்டு செப்டம்பர் வரை ஆதிதிராவிடர்களுக்கு 13 ஆயிரத்து 753 பட்டாக்கள், பழங்குடியினருக்கு 529 பட்டாக்கள், ஏனைய பிரிவினருக்கு 38 ஆயிரத்து 510 பட்டாக்கள் என்று

மொத்தம் 35 ஆயிரத்து 696 ஏக்கர் பரப்பளவுக்கு 52 ஆயிரத்து 792 விவசாய நிலப்பட்டாக்கள் வழங்கப்பட்டன. ஆனால், கடந்த ஆட்சிக் காலத்தில் 29 ஆயிரத்து 591 நிலப்பட்டாக்களே வழங்கப்பட்டன.

மேலும், கழக ஆட்சியில் 1996க்குப் பின்னர், 30.11.2000 வரை நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் 12 ஆயிரத்து 43 ஏக்கர் விவசாய நிலம், 9 ஆயிரத்து 426 பேருக்கு ஒப்படை செய்யப்பட்டது.

தண்ணீர்த் தீர்வையில் புதியமுறை

கீழ்பவானி பாசனத் திட்டத்தின்கீழ், தண்டத் தீர்வைக்குப் பதிலாக, ஏக்கர்வாரியாக தீர்வை நிர்ணயம் செய்யப்படவேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாகவே இருந்து வந்தது. கீழ்பவானி பாசனத் திட்டத்தில் பருவகால சுழற்சிமுறை நீர்ப்பாசனத் திட்டம் (Seasonal Sluice Turn System) நடைமுறைப்படுத்தப்பட்டு, இருபோக விவசாயத்திற்கு 36 டி.எம்.சி. தண்ணீர், 75 ஆயிரம் ஏக்கர் ஆயக்கட்டு நிலங்களுக்கு வழங்கப்படுகிறது. இரண்டாம் போகத்தில் தடை செய்யப்பட்டுள்ள நஞ்சைப் பயிர்களை பயிரிட்டால் தண்டத்தீர்வையாக முதல்முறை ஐந்து மடங்கு சாதாரண தண்ணீர்த் தீர்வை என்று தொடங்கி, நான்காவது முறை மற்றும் அதற்குப் பிறகு இருபது மடங்கு சாதாரண தண்ணீர்த் தீர்வை என்று தண்டத் தீர்வைகள் வசூல் செய்யப்பட்டு வந்தன. இதனால் விவசாயிகளுக்கு ஏற்படும் பிரச்சினைகளை ஆய்வு செய்து, தீர்வு காண அமைக்கப்பட்ட குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில், கீழ்பவானி பாசன ஆயக்கட்டு நிலங்களுக்கு தண்ணீர்த் தீர்வை விதிக்கும்போது, பயிர் வகையை அடிப்படையாகக் கொள்ளாமல், இனி நிலத்தின் பரப்பளவு, அதாவது ஏக்கர் அடிப்படையில் ஒரேமாதிரியான தண்ணீர்த் தீர்வையினை (Flat Rate) விதிக்க 21.11.2000 அன்று ஆணை வெளியிடப்பட்டது. அரசின் இந்த முடிவினால், கீழ்பவானி ஆயக்கட்டுதாரர்கள் நீண்டகாலமாக எதிர்கொண்டு வந்த பிரச்சினைக்கு நல்ல தீர்வு ஏற்பட்டுள்ளது.

* நீர்ப்பாசன மேம்பாட்டு வரிவிதிப்பில் இருந்து விலக்களிக்க நிர்ணயம் செய்யப்பட்டுள்ள பாசனத் திட்டப் பணிகளின்

மதிப்பீட்டு உச்சவரம்பை, ஒன்றரை இலட்சம் ரூபாயில் இருந்து, 25 இலட்சம் ரூபாயாக உயர்த்துவதற்கு, 1955ஆம் ஆண்டின் தமிழ்நாடு நீர்ப்பாசன மேம்பாட்டு வரிவிதிப்புச் சட்டம் 11.11.2000 அன்று திருத்தப்பட்டது.

நிவாரண உதவி உயர்வு

* இயற்கை இடர்ப்பாடுகளின் (Natural calamities) காரணமாக உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரண உதவியாக 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வந்ததை, 16.10.1996 முதல் 15 ஆயிரம் ரூபாய் என்று கழக அரசு உயர்த்தியது. இயற்கைச் சீற்றங்களினால் முழுவதுமாக சேதமடைந்த குடிசைகளுக்கு, தலா 500 ரூபாய் என்று வழங்கப்பட்டு வந்ததை 1000 ரூபாயாகவும், பகுதியாக சேதமடைந்த குடிசைகளுக்கு தலா 250 ரூபாய் என்று இருந்ததை 500 ரூபாயாகவும் உயர்த்தி 22.6.1996 முதல் கழக அரசு வழங்கி வருகிறது. மேலும், இயற்கைச் சீற்றங்களினால் ஏற்படும் மனித உயிரிழப்புக்கு வழங்கப்படும் நிவாரணம் போன்றே, இயற்கைச் சீற்றங்களினால் உயிரிழக்கும் கால்நடைகளுக்கும் நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்ற முடிவு கழக அரசால் முதன்முதலாக மேற்கொள்ளப்பட்டு, பசு, எருது, எருமைக்கு தலா 5000 ரூபாய், பசு மற்றும் எருமைக் கன்றுக்கு தலா 3000 ரூபாய், செம்மறியாடு மற்றும் வெள்ளாட்டுக்கு தலா 1000 ரூபாய் என்று 12.6.1996 முதல் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. 1996ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 1999ஆம் ஆண்டு வரை புயல் மற்றும் மழையினால் ஏற்பட்ட சேதங்களைச் சீர் செய்ய நிவாரணப் பணிகளுக்காக மட்டும் 342 கோடியே 71 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. அதைப் போலவே, 1996ஆம் ஆண்டு முதல் இதுவரை வறட்சியினால் பாதிக்கப்பட்டப் பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக மட்டும் 138 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

* 29.11.2000 அன்று வீசிய புயலாலும், பெய்த கன மழையாலும் ஏற்பட்ட சேதாரங்களின் நிவாரணப் பணிகளுக்காக, 14.12.2000 அன்று 8 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. புயல், மழையின்போது பாதிப்புக்குள்ளாகும் ஏழை எளிய மக்களை பாதுகாப்பான இடங்களில் தங்க வைப்பதற்காக கடலோர

மாவட்டங்களில் அமைந்துள்ள 91 மையங்களைச் செப்பனிட, 87 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டது.

* இயற்கைச் சீற்றங்களினால் பாதிக்கப்படும் ஏழை எளியோருக்கு உதவிட அரசின் அனுமதி கிடைக்கும் வரை காத்திராமல், உடனடியாக நிவாரணம் வழங்குவதற்காக வருவாய்த் துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டிருந்த நிதி உச்சவரம்பு 1999ஆம் ஆண்டு முதல், வருவாய் நிர்வாக ஆணையாளருக்கு 20 இலட்சம் ரூபாயில் இருந்து 50 இலட்சம் ரூபாயாகவும், மாவட்ட ஆட்சியருக்கு 10 இலட்சம் ரூபாயில் இருந்து 20 இலட்சம் ரூபாயாகவும், வருவாய்க் கோட்ட ஆட்சியருக்கு 2 இலட்சம் ரூபாயில் இருந்து 3 இலட்சம் ரூபாயாகவும், வருவாய் வட்டாட்சியருக்கு 1 இலட்சம் ரூபாயில் இருந்து 2 இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது

விபத்து நிவாரணத் திட்டம்

* ஏழைத் தொழிலாளர்கள் தாம் செய்யும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் போது, விபத்தினால் இறக்க நேரிட்டால் அல்லது காயங்களினால் அங்கங்களை இழக்க நேரிட்டால், அவர்களது குடும்பங்களுக்கு விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் நிவாரண உதவி வழங்கப்படுகிறது.

விபத்தில் பாதிக்கப்பட்டு, உயிரிழப்போர் குடும்பத்திற்கு நிவாரணமாக 10 ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை, 28.8.1996 முதல் 15 ஆயிரமாக உயர்த்தப்பட்டது. விபத்தில் உடல் ஊனமுற்றால், ஊனத்தின் தன்மைக்கு ஏற்றவாறு 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் ரூபாய் என்றிருந்ததை, 27.10.1999 முதல் 7 ஆயிரத்து 500 ரூபாய் முதல் 15 ஆயிரம் ரூபாய் வரை உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

* இத்திட்டத்தின்கீழ் 1996ஆம் ஆண்டிற்குப்பின் 30.11.2000 வரை 6,064 குடும்பங்களுக்கு மொத்தம் 7 கோடியே 17 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டது.

* தீ விபத்தில் மனித உயிரிழப்பு ஏற்படும்போது, பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு கடந்த கால ஆட்சியில் நிவாரண உதவி 10 ஆயிரம்

ரூபாய் மட்டுமே என்பது, 16.10.1996 முதல் 15 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டது.

* சென்னை மாநகரைப் பொறுத்தவரையில், தீ விபத்தின் காரணமாக முழுமையாகச் சேதமடையும் குடிசைகளுக்குத் தலா 600 ரூபாயும், பகுதியாகச் சேதமடையும் குடிசைகளுக்குத் தலா 300 ரூபாயும்; மற்ற மாவட்டங்களைப் பொறுத்தவரை முழுமையாகச் சேதமடையும் குடிசைகளுக்குத் தலா 500 ரூபாயும், பகுதியாகச் சேதமடையும் குடிசைகளுக்குத் தலா 250 ரூபாயும் கடந்த கால ஆட்சியில் வழங்கப்பட்டு வந்தது.

சென்னை மாநகரிலும், மற்ற மாவட்டங்களிலும் நிவாரண உதவி வழங்குவதில் முன்பிருந்த பாகுபாட்டை அகற்றி, 22.6.1996 முதல் தீ விபத்தால் முழுமையாகச் சேதமடையும் குடிசைகளுக்குத் தலா 1000 ரூபாய், பகுதியாகச் சேதமடையும் குடிசைகளுக்குத் தலா 500 ரூபாய் என உயர்த்தி நிவாரண உதவியாக வழங்கப்பட்டு வருகிறது.

* இயற்கைச் சீற்றங்களினால் உயிரிழக்கும் கால்நடைகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க முதல்முதலாக முடிவு மேற்கொள்ளப்பட்டதைப் போலவே, தீ விபத்தில் இறந்து போகும் கால்நடைகளுக்கும் இழப்பீட்டுத் தொகை 12.6.1996 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

நலிந்தோர் குடும்பநலத் திட்டம்

* பொருளீட்டிக் குடும்பத்தைக் காப்பாற்றக்கூடிய குடும்பத் தலைவர் மரணமடைந்தால், அவரை இழந்து, நலிவுற்று வாடும் குடும்பத்தின் துயர் துடைக்கும் பொருட்டு, இத்திட்டத்தின்கீழ் நிவாரண உதவி வழங்கப்பட்டு வருகிறது.

* பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு 5 ஆயிரம் ரூபாய் மட்டுமே நிவாரண உதவியாக வழங்கப்பட்டு வந்ததை, 28.8.1996 முதல் 7,500 ரூபாயாகவும், 1.8.1998 முதல் 10 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

* கழக அரசில் 30.11.2000 வரை இத்திட்டத்தின்கீழ் 1 இலட்சத்து 86 ஆயிரத்து 536 குடும்பங்களுக்கு, 130 கோடியே 10 இலட்சம் ரூபாய் நிவாரண உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் கிராம அலுவலர்களுக்குச் சலுகைகள்

* 14-11-1980-இல் அ.தி.மு.க. அரசின் அவசரச் சட்டத்தினால் பணியிழந்து, வாழ்ந்து வந்த முன்னாள் கிராம அலுவலர்களுக்கு மூன்றாவது முறையாக கழகம் 1989ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றதும் தகுதியுள்ள முன்னாள் கிராம அலுவலர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு அளித்தோம். அத்துடன் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தையும் பரிசீலித்தோம். அத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முன் கழக அரசு கலைக்கப்பட்டு விட்டது.

* பின்னர் வந்த அ.தி.மு.க. ஆட்சியில் ஓய்வூதியத் திட்டத்தைப் பரிசீலிக்க முன் வரவில்லை. இதனை எதிர்த்து முன்னாள் கிராம அலுவலர்கள் நீதிமன்றம் சென்று ஓய்வூதியம் பெற ஆணை பெற்றனர். அதற்குப் பிறகும் அ.தி.மு.க. ஆட்சியில் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க முன்வரவில்லை.

* எனவே நீதிமன்ற அவமதிப்பு வழக்காக கிராம அலுவலர்கள் சங்கத்தினர் உச்ச நீதிமன்றம் சென்றனர். அதனை எதிர்த்து அ.தி.மு.க. அரசு உச்ச நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்தது. நான்காவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் உச்ச நீதி மன்றத்தில் முந்தைய அ.தி.மு.க. அரசு செய்த மேல் முறையீட்டை கழக அரசு திரும்பப் பெற்று முன்னாள் கிராம அலுவலர்கள் 8500 பேர் பயன்பெறும் வகையில் ஆணை பிறப்பித்தது.

* அதாவது ஒவ்வொரு மாதமும் 175 ரூபாயை ஓய்வூதியமாக அதற்குரிய படிகளுடன் வழங்க 23-8-1996இல் ஆணையிட்டது. அத்துடன் 14.11.1980-இல் பணியிழந்தவர்களில் மறைந்துவிட்ட முன்னாள் கிராம அலுவலர்களின் குடும்பத்திற்கு மாதமொன்றுக்கு 100 ரூபாயைக் குடும்ப ஓய்வூதியமாக வழங்கவும் கழக அரசினால் 23.8.1996 அன்று ஆணைகள் வெளியிடப்பட்டன.

* இவ்வாணைகளின்படி 5-12-1986 முதலே முன் தேதியிட்டு முன்னாள் கிராம அலுவலர்கள் சிறப்பு ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள் என அறிவிக்கப்பட்டதால், ஒவ்வொரு முன்னாள் கிராம அலுவலரும் சிறப்பு ஓய்வூதிய நிலுவைத் தொகையாக ஏறத்தாழ 23,000/- ரூபாய் மொத்தமாகப் பெற்று மகிழ்ந்து இந்த அரசைப் பாராட்டினர்.

* மேலும் 22.7.1998 அன்று மீண்டும் இந்தக் கழக அரசு சிறப்பு ஓய்வூதியம் 175/- ரூபாய் என்பதை 250 ரூபாயாக உயர்த்தியும், குடும்ப ஓய்வூதியத்தை 100 ரூபாயிலிருந்து 150 ரூபாயாக உயர்த்தியும் ஆணைகள் வெளியிடப்பட்டது. இதனால் இதர படிகளுடன் சேர்த்து தோராயமாக மாதமொன்றுக்கு 800 ரூபாய் அளவில் தற்போது பெற்று வருகிறார்கள்.

* முன்னாள் கிராம அலுவலர்களுக்கு மேலும் சலுகைகள் வழங்கும் நோக்கத்தில் பதவி ஒழிப்பு நாளான 14-11-1980 அன்று பணியிலிருந்தவர்களுக்கு மட்டுமல்லாமல், அன்றைய நாளில் தற்காலிகப் பணி நீக்கத்தில் இருந்தவர்களுக்கும், விடுப்பில் இருந்தவர்களுக்கும் இச்சிறப்பு ஓய்வூதியச் சலுகை 9.9.1998 அன்று நீட்டிக்கப்பட்டது.

* பணி வரன்முறை செய்யப்பட்டு, 1.6.1995க்குப் பிறகு பணியில் இருக்கும்போது இறந்த கிராம உதவியாளர்களது வாரிசுகளுக்கு நடைமுறையில் உள்ள விதிகளுக்கு உட்பட்டு கருணை அடிப்படையில் அரசுப் பணி வழங்க 7.7.1999 அன்று ஆணையிடப்பட்டது.

நிலவரி தள்ளுபடி

* 1995ஆம் ஆண்டு 19 மாவட்டங்களில் நிலவிய வறட்சியினை அடிப்படையாகக் கொண்டு, 22 கோடியே 30 இலட்சம் ரூபாய் அளவுக்கு அரசுக்கு வசூலிக்கப்பட வேண்டிய நிலவரி முதலியவை, கழக அரசு பொறுப்பேற்றதும், 31.5.1996ல் தள்ளுபடி செய்யப்பட்டது. 1996ஆம் ஆண்டில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட விருதுநகர், திருநெல்வேலி, சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் 2 கோடியே 41 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாய் அளவுக்கு அரசுக்குச் சேரவேண்டிய நிலவரி முதலியவை 1998, ஜூன் மாதத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது.

* அதைப்போலவே, 1996ஆம் ஆண்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் 87.85 இலட்சம் ரூபாய் அளவுக்கு அரசுக்குச் சேரவேண்டிய நிலவரி முதலியவை தள்ளுபடி செய்யப்பட்டது.

* 1997 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில், தமிழ்நாடு முழுவதும் நிலவரி ரத்து செய்யப்படும் என 6.4.1998 அன்று சட்டமன்றத்தில் அறிவித்ததற்கு இணங்க, 43 கோடியே 48 இலட்சம் ரூபாய் அளவுக்கு நிலவரி முதலியன ரத்து செய்யப்பட்டன. கடந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் மட்டும் கழக அரசு 69 கோடியே 8 இலட்சம் ரூபாய் அளவிற்கு நிலவரியினை ரத்து செய்துள்ளது.

* முந்தைய அ.தி.மு.க. அரசால் உயர்த்தப்பட்ட 2சி மரப்பட்டா வரி விகிதம் குறைக்கப்பட்டு 30-8-1996 அன்று பழைய வரி விகிதமே செயல்படுத்தப்படும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது.

சான்றிதழ்கள் வழங்கிடப் புதிய முறை

* பள்ளிப் படிப்பை முடித்தபின், மேற்படிப்பிற்காகவும், வேலை வாய்ப்புக்காகவும் குடும்ப வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் மற்றும் இருப்பிடச் சான்றிதழ் ஆகியவற்றை பெறுவதற்கான முறை எளிமைப்படுத்தப்பட்டு, பள்ளிகளிலேயே இவைகளை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்புதிய முறையின்படி, 1999-2000 கல்வியாண்டில் 19 இலட்சத்து 68 ஆயிரத்து 375 சான்றிதழ்களும், 2000-2001 கல்வியாண்டில், நவம்பர் வரை 15 இலட்சத்து 7 ஆயிரத்து 427 சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

விவசாயத் தொழிலாளர்கள் நலன்

* அமைப்பு சாராத ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடும் நோக்கத்துடன், அவர்களின் நிலைகளைப் பரிசீலனை செய்து, பரிந்துரை வழங்க குழு ஒன்று அமைக்கப்படும் என்று 5.3.1997 அன்று அறிவிக்கப்பட்டு, **திரு.பி.கோலப்பன், ஐ.ஏ.எஸ்., தலைமையில் 27.8.1997 அன்று குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு 17.2.1998 அன்று அரசுக்குத் தனது அறிக்கையைத் தந்தது.** 4.4.1999 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியம் பற்றி கோலப்பன் குழு பரிந்துரைகள் விரிவாக விவாதிக்கப்பட்டு, உரிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டு, 5.4.1999 அன்று அறிவிக்கப்பட்டன.

இது குறித்து 26-11-2000 அன்றைய வேளாண்துறை பற்றிய கடிதத்தில் விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன்.

வேளாண்மைத் தொழிலாளர் நலவாரியம்

* அமைப்பு ரீதியில் அல்லாத வேளாண்மைத் தொழிலாளர்களுக்கான நலத் திட்டங்களைச் சிறப்பான முறையில் மேற்கொள்ள அவர்களுக்கென்று தனியே நலவாரியம் அமைத்திட வேண்டும் என்ற கோலப்பன் குழு பரிந்துரையையும், கழக அரசு ஏற்று, தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நலவாரியம் ஒன்றை 27.11.2000 அன்று அமைத்துள்ளது. வருவாய்த் துறை அமைச்சரைத் தலைவராகவும்; எட்டு துறைகளைச் சேர்ந்த உயரதிகாரிகளை உறுப்பினர்களாகவும்; நில உரிமையாளர்கள் பிரதிநிதிகளாக ஒன்பது பேரையும் விவசாயத் தொழிலாளர் பிரதிநிதிகளாக ஒன்பது பேரையும் உறுப்பினர்களாகவும் கொண்டு இவ்வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.

கணினி மயமாகிவரும் வருவாய்த் துறை

* ஒளிவு மறைவில்லாத, வெளிப்படையான நடைமுறைகளில் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ள கழக அரசில், வருவாய்த்துறை நிர்வாகம் வழங்கும் சேவைகள் தங்குதடையின்றி விரைவாகவும், முழுமையாகவும் மக்களைச் சென்றடைந்திட வேண்டும் என்ற நோக்கத்துடன் தஞ்சை, திருவாரூர், திருவள்ளூர் மாவட்டங்களில் மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும் முழுமையாகக் கணினி மயமாக்கப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. ஒரு கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவில், 50 வருவாய் வட்டங்களுக்கு கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

அனைத்து நிலப்பதிவுருக்களை கணினி மூலம் மேற்கொள்ளும் செயல்முறை அமலுக்கு வந்துவிட்டது. இதனால் இந்த 50 வருவாய் வட்டங்களிலும் நில உடைமைதாரர்கள் அ பதிவேடுகள் மற்றும் சிட்டா நகல்களை கணினி மூலம் பெறுவதற்கான வசதி ஏற்பட்டுள்ளது.

மேலும், சம்பளப்பட்டியல் முறை, முதியோர் ஓய்வூதியம் வழங்கும் முறை ஆகியவையும் கணினிகள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. மீதமுள்ள 156 வருவாய்

வட்டங்களிலும் 4 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவில் கணினி மயமாக்கும் நடவடிக்கை முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. இந்த மாதம் இறுதிக்குள் பணி முடிக்கப்பட வேண்டுமென்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. செங்கல்பட்டு, குடவாசல், ஈரோடு, கோபிசெட்டிப்பாளையம் ஆகிய நான்கு வருவாய் வட்டங்களில் ஒரு கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் புலப்படங்களை (Field sketches) கணினி மயமாக்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கணினி வசதிகள் கீழ்மட்டத்தைச் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தில் கிராமத்தில் தொடங்கி மாவட்டத் தலைநகர் வரை அனைத்து நில நிர்வாக நடைமுறைகளையும் கணினி மயமாக்கும் முன்னோடித் திட்டம் 42 இலட்சம் ரூபாய் செலவில் பெரம்பலூர் மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

பாரம்பரியமான கடாஸ்ட்ரல் நிலஅளவை முறை அதிகமான காலத்தை எடுத்துக்கொள்வதுடன், மிகப் பழமையான கருவிகளைக் கொண்டு மேற்கொள்ளப்படுவதால், சில சமயங்களில் துல்லியமாக இல்லாததாலும், நிலவியல் குறியீடு இல்லாதது இதிலுள்ள பெரும் குறை என்பதாலும், நிலவியல் தகவல் முறைக்கு அதிக முக்கியத்துவம் மற்றும் நம்பகத்தன்மை ஏற்பட்டுவரும் இன்றைய நிலையில் மிகத் துல்லியமான டிஜிட்டல் கடாஸ்ட்ரல் நிலஅளவையின் தேவை உணரப்பட்டு, விண்கோள் சமிக்ஞை கொண்டு அளவிடும் (Global Positong System) ஒரு முன்னோடித் திட்டம் ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வருவாய் வட்டத்தில் மேற்கொள்ளப்படுவதற்கான ஆணை 3.11.2000 அன்று வழங்கப்பட்டுள்ளது. இதனால், நிலஅளவையில் அதிநவீனத் தொழில்நுட்பம் செயல்முறைக்கு வரும்.

உடன்பிறப்பே!

நத்தம் நிலவரித் திட்டத்தின்கீழ் மனைவரி (Ground Rent) விதிக்கப்பட்டு வந்ததால், வழிவழியாக அனுபவ பாத்தியதை அடிப்படையில் எந்தவிதக் கட்டணமும் இன்றி வீட்டுமனைகளை அனுபவித்து வந்த மக்கள், நிர்ணயிக்கப்பட்ட மனைவரியைச் செலுத்த வேண்டியிருந்த சங்கடமான நிலை, 1996

சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்தின்போது என் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டவுடன், ஆட்சிப் பொறுப்பேற்றதும் மனைவரி ரத்து செய்யப்படும் என்று உறுதி அளித்தேன். ஆட்சிப் பொறுப்பேற்ற முதல்நாளான 13.5.1996 அன்றே, அந்த உறுதிமொழியை நிறைவேற்றும் வகையில், நானிட்ட முதல் கையெழுத்து மனைவரி ரத்து தொடர்பான கோப்பில்தான் என்பதை நீ மறந்திருக்க மாட்டாய்! ஒவ்வொரு கோப்பிலும் கையெழுத்திடும்போது, நானும், நமது அமைச்சர்களும், அதனால் எத்தனை ஏழை எளியோர், நலிந்த பிரிவினர், சிறுபான்மையினர் பயன்பெறுவர் என்பதை எண்ணி எண்ணிப் பார்த்துத்தான் கையெழுத்திட்டு வருகிறோம் என்பதை நீ அறிவாய்! ஒவ்வொரு கோப்பையும் காகிதங்களின் தொகுப்பு என்று கருதிடாமல், இந்த நாட்டு மக்களின் துயர் துடைத்திட வரும் ஒளிக்கீற்று என்று உணர்ந்தே அண்ணா வழியில் அல்லும் பகலும் அயராமல் உழைத்து வருகிறோம். நமது உழைப்பால் உருவாகும் கனிகளை நமது ஊரார் ஒன்றிணைந்து, முழுமையாகச் சுவைத்துக் களித்திட வேண்டுமென்பதில் மிகுந்த கவனத்தோடும், எச்சரிக்கையோடும் பணியாற்றி வருகிறோம் என்பதை நாட்டு மக்களுக்கு நயம்படப் பகர்ந்திடுக!

அன்புள்ள,

மு. க.

(19-12-2000)

2566. எங்கெங்குக் காணினும் திட்டங்கள்; எண்ணிலடங்காச் சாதனைகள்!

உடன்பிறப்பே,

கல்வி நீரோடையில் சாதனை மலர்கள் என்ற தலைப்பில் 25-11-2000 அன்று நான்கரை ஆண்டு கால கழக அரசின் சாதனைகளை; துறைதோறும் கடித வாயிலாக உனக்கு எழுதத் தொடங்கி பழைய வரலாறு கொண்ட துறை; பயன் விளைக்கும் வருவாய்த்துறை என்ற தலைப்பில் எழுதிய கடிதத்துடன் 23 நாட்கள் எழுதி இன்று 24வது கடிதத்துடன் இந்தத் தொடர் முற்றுப்பெறுகிறது. ஒவ்வொரு துறையின் சாதனைகளை எழுதிய பிறகு மேலும் பல சாதனைகள் நினைவிற்கு வந்து கொண்டேயுள்ளன.

கழகத்திற்கு வாக்களித்த மக்களின் எண்ணத்திற்கு ஊறு செய்யாமல் நம்முடைய மனதிற்கே ஒரு நிறைவு ஏற்படுகின்ற அளவிற்கு இந்த நான்கரை ஆண்டுகளில் பணிகளை ஆற்றியிருக்கிறோம் என்பதற்கு இன்று வரை எழுதப்பட்ட இந்தச் சாதனைகளின் குவியல்கள் விளக்கமளிக்குமென்று நம்புகிறேன். இன்னும் ஐந்தாறு துறைகள் பற்றிக் குறிப்பிடாமல் இருந்த போதிலும் அவற்றையெல்லாம் தொகுத்து ஒட்டு மொத்தமாக இன்றைய கடிதத்திலே எழுதியுள்ளேன்.

பொதுத்துறை

* பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாளையொட்டி, ஆண்டுதோறும் ஜூலைத் திங்கள் 17-ஆம் நாள் தியாகிகள் தினமாகக் கொண்டாடப்படும் என 17.7.99 அன்று அறிவிக்கப்பட்டு, தொடர்ந்து கொண்டாடப்பட்டு வருகிறது.

* சுதந்திரத் திருநாள் பொன்விழா கொண்டாட்டத்தையொட்டி, 15.8.1997 முதல் சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கும், மொழிப்போர் தியாகிகளுக்கும் மாத ஓய்வூதியம் ரூ.1500/-

என்பது ரூ.3000/- என கழக அரசால் உயர்த்தப்பட்டது. அத்துடன் அவர்களுக்கு 1.8.1990 முதல் மருத்துவப்படி ரூ.15/- வழங்கப்பட்டு வருவதும் குறிப்பிடத் தக்கது.

* 15.8.1997 முதல் அவர்களின் சட்டப்படியான வாரிசுகளுக்கு மாதாந்திர குடும்ப ஓய்வூதியம் ரூ.750/- என்பது ரூ.1500/- ஆக உயர்த்தப்பட்டது. மத்திய அரசின் தியாகிகள் ஓய்வூதியம் பெறு வோர்க்கு மாநில அரசு வழங்கும் மாத ஓய்வூதியம் ரூ.250/- என்பது ரூ.500/- ஆக 1.4.1997 முதல் உயர்த்தப்பட்டது. சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் சட்டப்படியான வாரிசுதார்களுக்கு வேலை வாய்ப்பகங்கள் மூலம் வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை அளிக்க 4.5.1999 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

* பொறியியல் பட்டப் படிப்பில், விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுகளுக்கு ஒதுக்கீடு ஓரிடம் என்று இருந்து வந்ததை 1999-2000 ஆம் ஆண்டு முதல் ஐந்து இடங்கள் என்றும், 2000-2001 ஆம் ஆண்டிலிருந்து அதனை பத்து இடங்கள் என்றும் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

* இயற்கை எய்திடும் விடுதலைப் போராட்ட வீரரின் ஈமச் செலவிற்காக 1000 ரூபாய் வழங்க வேண்டுமென்று 1989ஆம் ஆண்டு அறிவித்த கழக அரசு அந்த ஆயிரம் ரூபாயை 2000 ரூபாயாக தற்போது உயர்த்தியுள்ளது. மேலும் வட்டாட்சியர் தகுதிக்கு குறையாத அதிகாரி ஒருவர் நேரில் சென்று அரசு சார்பில் மரியாதை செய்ய வேண்டுமென்றும் கழக அரசு ஆணையிட்டது.

* மருதுபாண்டியர் சகோதரர்களின் வாரிசுதார்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.150/- வீதமும், வீரபாண்டிய கட்டபொம்மனின் வாரிசுதார்களுக்கு மாதம் ரூ.300/- வீதமும் வழங்கப்பட்டு வந்த உதவிப்பணம் 30.8.1996 முதல் மாதம் ஒன்றிற்கு ரூ.500/- ஆக உயர்த்தப்பட்டது.

* முன்னாள் முதலமைச்சர் பெரியவர் பக்தவத்சலம் அவர்களின் உதவியாளர் திரு. பாலு அவர்களுக்கு ரூ.3.50 இலட்சத்தில் இலவசமாக இல்லம் அளிக்கப்பட்டுள்ளது.

* ஓய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள், மொழிப்போர் தியாகிகளுக்கு 1990ஆம் ஆண்டு முதல் அரசு

போக்குவரத்துகளில் இலவசப் பயணச் சலுகை; 1996இல் இச்சலுகை அவர்களின் வாரிசுகளுக்கும் நீட்டிப்பு.

* மனித உரிமைகள் மீறல் காரணமாகப் பாதிக்கப்பட்டவர்கள் எளிதாகவும், விரைவாகவும் நிவாரணம் பெறும் பொருட்டு மாநில மனித உரிமைகள் ஆணையம் 17.4.1997 அன்று ஏற்படுத்தப்பட்டது. சாதிக்கலவரங்கள் ஏற்படாவண்ணம் தடுக்கும் எண்ணத்தோடு 15.5.97 அன்று அரசால் நடத்தப்பட்ட அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும் ஊராட்சி அளவிலும் அமைதிக் குழுக்களை அமைத்து சமுதாய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு அமைதிக் கூட்டங்களை நடத்துமாறு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அரசால் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

* சாதி / மதக் கலவரங்களில் இறந்தவர்கள் குடும்பத்திற்கு 1.1.97 முதல் நிவாரணத் தொகை ரூ.2 இலட்சம் வீதம் வழங்க 22.5.98 அன்று கழக அரசு ஆணை பிறப்பித்தது.

* தமிழகத்தில் குறிப்பாக தென் மாவட்டங்களில் ஏற்பட்ட வகுப்புக் கலவரங்களுக்கான அடிப்படை காரணங்களை கண்டறியவும், இதுபோன்ற வகுப்புக் கலவரங்கள் உருவாகாமல் தடுக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பரிந்துரைக்கவும், தீண்டாமைச் சட்டம் செம்மையாகச் செயல்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்டறியவும், உச்சநீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி திரு. எஸ். மோகன் அவர்கள் தலைமையில் உயர்மட்டக்குழு ஒன்று அரசால் அமைக்கப்பட்டது. அக்குழு அளித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகளில் பெரும்பாலானவை அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன.

* சாதிக் கலவரங்களை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்குடன் அரசால் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் 22.10.1998 மற்றும் 26.10.1998 ஆகிய இரு தினங்களிலும் சென்னையில் கூட்டப்பட்டது. சமத்துவ சமுதாய மறுமலர்ச்சியினை ஏற்படுத்த அரசாங்கத்தில் தனியாக சமூக சீர்திருத்தத் துறை என்ற ஒரு துறை உருவாக்கப்பட்டது. கோவையில் முஸ்லீம்கள் மற்றும் இந்துக்கள் மத நல்லிணக்கத்திற்காக பாடுபட்டு மதத் தீவிரவாதிகளால் கொலை செய்யப்பட்ட திரு. கோட்டை அமீர்

அவர்களின் பெயரால் கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கம் என்ற பதக்கம் வழங்க 16.6.2000 அன்று அரசால் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

* கார்கில் போராட்டத்தின்போது மரணமடையும் தமிழகத்தைச் சார்ந்த வீரர்களின் குடும்ப நலனுக்காக கார்கில் இராணுவ வீரர் நிதி என்ற நிதியை அரசு ஏற்படுத்தியது. இந்நிதியில் 18.10.2000 வரை பொது மக்களிடமிருந்து நன்கொடையாக ரூபாய் ஐம்பத்தொன்பது கோடியே இரண்டு இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து நூற்று அறுபத்து நான்கு மற்றும் பைசா ஒன்பது மட்டும் பெறப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து ரூ.50/- கோடி தேசிய பாதுகாப்பு நிதிக்கு பிரதமரிடம் அளிக்கப்பட்டது. போராட்டத்தின்போது மரணமடைந்த இராணுவ வீரர்களின் குடும்பம் ஒவ்வொன்றிற்கும், கருணைத் தொகை ரூ.5/- இலட்சம், உயர் வருவாய் குடியிருப்பு, குடும்பத்தில் ஒருவருக்கு கருணை அடிப்படையில் வேலை, உயிரிழந்த வீரரின் குழந்தைகளுக்கு தொழில் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு என கார்கில் போராட்டத்தில் உயிரிழந்த 19 வீரர்களின் குடும்பங்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டன.

* கடும் புயலினால் பாதிக்கப்பட்ட ஒரிசா மக்களுக்கு உடனடியாக உதவிடும் வகையில் தமிழக அரசின் சார்பில் ரூபாய் 50 இலட்சம் வழங்கப்பட்டது. மேலும், புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.3/- கோடி மதிப்புள்ள வேட்டி, சேலைகள், ரூ.1/- கோடி மதிப்புள்ள பால் பவுடர், ரூ.44 இலட்சம் மதிப்புள்ள உயிர்காக்கும் மருந்துகள் மற்றும் ரூ.2 இலட்சம் மதிப்புள்ள அவல், வெல்லம் ஆகியவைகள் தமிழக அரசின் சார்பில் அனுப்பி வைக்கப்பட்டன. 13.5.96-க்குப்பின் (19.10.2000 வரை) இந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் முதலமைச்சர் நிவாரண நிதியி லிருந்து 30,173 பேருக்கு வழங்கப்பட்டுள்ள நிவாரண தொகை 41 கோடியே 89 இலட்சம் ரூபாயாகும்.

* தென்மாவட்டங்களின் வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புக்கான திட்டங்களை வகுத்து அளித்திட, நீதியரசர் திரு.இரத்தினவேல் பாண்டியன் அவர்களைத் தலைவராகவும், திரு.ஆர்.ஏ.சீத்தாராமதாஸ் அவர்களைத் துணைத் தலைவராகவும், திரு.ஏ.வெங்கடராமன் அவர்களை உறுப்பினராகவும் கொண்டு அமைக்கப்பட்ட குழு, தனது அறிக்கையை அளித்தது. அந்த

அறிக்கையின் பரிந்துரைகளையொட்டி, தென்மாவட்டங்களில் புதிய தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்கள், தோட்டக்கலைப் பயிர் சிறப்புத் திட்டம், கண்மாய்களைப் பராமரிக்கும் திட்டம், மென் பொருள் வளர்ச்சிக்கான திட்டம் மற்றும் தொழில் வளர்ச்சிக்கான பல திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன.

போக்குவரத்துத்துறை

* தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்களின் சிறப்பான செயல்பாட்டிற்காக தேசிய உற்பத்தித் திறன் குழு ஆண்டுதோறும் வழங்கும் 10 விருதுகளில் 1997இல் 7 விருதுகளையும் 1998-99இல் 3 விருதுகளையும் பெற்றுள்ளது தமிழகம்.

* கடந்த நான்கரை ஆண்டுகளில் வாங்கப்பட்ட புதிய பேருந்துகள் 9477. புதிய வழித்தடங்கள் 1468 ஏற்படுத்தப்பட்டுள்ளன. பேருந்துகளுக்கு மேல் கூண்டு கட்டுதல், உதிரி பாகங்கள் வாங்குதல், பயணச்சீட்டு அச்சிடுதல் போன்றவைகளில் சிக்கன நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டு, ஊழல் வழிமுறைகள் அகற்றப்பட்டதன் வாயிலாக 141 கோடியே 44 இலட்சம் ரூபாய் அரசுக்குச் சேமிப்பு கிடைத்துள்ளது.

* கிராமப்புறங்களில் போக்குவரத்து வசதிகளைப் பெருக்கிட மினி பஸ் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதுவரை 2334 மினி பஸ்கள் இயக்கப்படுகின்றன. மேலும் 2112 மினி பஸ்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

* புறநகர் பேருந்துக் கட்டணங்களைப் பொறுத்தவரை ஒரு கிலோ மீட்டருக்கு ஆந்திராவில் 32 காசு, கர்நாடகாவில் 25.75 காசு, மராட்டியத்தில் 30 காசு, குஜராத்தில் 25.56 காசு, ராஜஸ்தானில் 28 காசு, அரியானாவில் 35.36 காசு, ஒரிசாவில் 26 காசு, கேரளாவில் 28 காசு, ஆனால் தமிழ்நாட்டில் 22 காசுதான். சொகுசுப் பேருந்துக் கட்டணத்தைப் பொறுத்தவரை ஒரு கிலோ மீட்டருக்கு ஆந்திராவில் 52 காசு, கர்நாடகாவில் 46 காசு, மராட்டியத்தில் 37.5 காசு, ராஜஸ்தானில் 46 காசு, அரியானாவில் 53.04 காசு, ஒரிசாவில் 32 காசு, கேரளாவில் 50 காசு, ஆனால் தமிழ்நாட்டில் 30 காசுதான்.

* வாகனங்களுக்கு அளிக்கப்படும் முன்பதிவு எண்கள் மற்றும் சிறப்பு எண்கள் பெற செலுத்த வேண்டிய பதிவுக் கட்டணத் தொகை, 50 சி.சி.க்கு திறன் மிகாத மோட்டார் வாகனங்களுக்கு

ரூ.5000லிருந்து ரூ.500 எனவும், 50 சி.சி.க்கு அதிகமான திறன் கொண்ட மோட்டார் வாகனம் மற்றும் மூன்று சக்கர (ஆட்டோ ரிக்சா உட்பட) வாகனங்களுக்கு ரூ.5000லிருந்து ரூ.1000 எனவும், ரூ.4 இலட் சத்திற்கு மிகாத விலையுள்ள வாகனங்களுக்கு ரூ.5000லிருந்து ரூ.3000 எனவும் குறைக்கப்பட்டுள்ளது.

* தற்போதைய சட்டமன்ற உறுப்பினர்களால் அவர்களது பெயரிலேயே பதிவு செய்யப்படும் வாகனங்களுக்கு முன்பதிவு எண் மற்றும் சிறப்பு பதிவு எண்கள் பெற பதிவுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

* போக்குவரத்துத் தொழிலாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஓய்வூதியத்திட்டம் கழக அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வழங்கப்படுகிறது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை

* இளைஞர் நலன்களைக் கவனிப்பதற்காகவே புதியதொரு துறையைத் தொடங்கி அதற்காக தனியொரு அமைச்சரை நியமித்தது கழக அரசுதான். மாணவர்கள் அல்லாத இளைஞர்கள் மத நல்லிணக்கத்துடனும் உடல் ஆரோக்கியத்துடனும் வாழ, 5,000 விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்கள் உருவாக்க ஆணை பிறப்பித்தபோதிலும் இதுவரை 6,998 மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையம் ஒன்றிற்கு 25000 ரூபாய் வீதம் 5000 மையங்கள் அமைக்க அரசு 12 கோடியே 50 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் திருத்தியமைக்கப்பட்ட பொதுக்குழு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் 8.2.97 அன்று கூடி, அதில் விளையாட்டுத்துறையில் சிறந்து விளங்கும் விளையாட்டு வீரர்/வீராங்கனைகளை ஊக்குவிக்கும் பொருட்டு விளையாட்டு ஊக்க உதவித்தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

* சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் தமிழகத்தைச் சார்ந்த விளையாட்டு வீரர்/வீராங்கனைகள் பல்வேறு வெற்றிகளையும் சாதனைகளையும் நிகழ்த்துவதை ஊக்குவித்திட, அவர்களுக்கு முதலமைச்சர் மாநில விளையாட்டு விருது வழங்கவும், இவ்விருதுடன் விருதுத் தொகை ரூ.1 இலட்சம் வீதம் வழங்கவும், கழக அரசு ஆணையிட்டு இதுவரை மொத்தம் 12 பேருக்கு 12

இலட்சம் ரூபாய் விருதுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. தமிழக அணிகளின் சார்பில் மணிப்பூரில் நடைபெற்ற 4வது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று பதக்கங்களை வென்ற 118 விளையாட்டு வீரர்/வீராங்கனைகளுக்கு தமிழக அரசு ரூ.24.15 இலட்சம் ரொக்கப் பரிசுகளாக வழங்கி ஊக்குவித்தது.

* நலிந்த நிலையில் உள்ள 13 முன்னாள் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு மாதம் ரூ.500/- வீதம் ஓய்வூதியம் வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது.

* 1999-2000இல் பன்னாட்டு விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு விமானக் கட்டணமாக நபர் ஒன்றுக்கு ரூ.25,000/- வீதம் 9 நபர்களுக்கு ரூ.2,25,000/- வழங்கப்பட்டுள்ளது

வனவளம் மற்றும் சுற்றுச்சூழல்துறை

* ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் ரூபாய் 499 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டம் எனும் மாபெரும் திட்டம் 1997-98 முதல் செயல்படுத்தப்படுகிறது. 1999 இறுதிவரை ரூபாய் 236 கோடி செலவில் ஏறத்தாழ 5.60 இலட்சம் ஏக்கர் பரப்பில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

2000-2001 இல் ரூ.109 கோடி செலவில் 1.89 இலட்சம் ஏக்கர் பரப்பில் 200 கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. வன விலங்குகளைப் பாதுகாத்திட 9 புதிய வன விலங்குகள் சரணாலயங்கள் அமைக்க மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டு, அனுமதி கிடைக்கப் பெற்ற திருச்சி கரைவெட்டி, ஈரோடு வெள்ளோடு வடமுகம் ஏரி ஆகிய இடங்களில் புதிய சரணாலயங்கள் அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. வனவிலங்குகளால் தாக்கப்பட்டு உயிரிழந்தோர் குடும்பத்திற்கும், நிரந்தரமாக ஊனமுற்றோர்க்கும் வழங்கப்பட்ட நிவாரணம் 5,000 ரூபாய் என்பது 4.10.1996 அன்று 50,000 ரூபாய் எனவும், 12.9.2000 அன்று அதுவே 1 இலட்சம் ரூபாய் எனவும் உயர்த்தப்பட்டுள்ளது. படுகாயம் அடைந்தோருக்கு வழங்கப்பட்ட நிதியுதவி 3,000 ரூபாய் என்பது 4.10.1996இல் ரூ.10,000 எனவும், பின்னர் 12.9.2000இல் ரூ.20,000 ஆகவும் உயர்த்தப்பட்டது.

* 3 கோடியே 26 இலட்சத்து 98 ஆயிரம் ரூபாய்ச் செலவில் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான எல்காட் (ELCOT)

நிறுவனத்தின் மூலம் வனத்துறையைக் கணினி மயமாக்குவதற்கு 13.7.2000 அன்று ஆணை வெளியிடப்பட்டது.

* வனப் பணியில் உபயோகப்படுத்தப்பட்ட 21 பழைய வாகனங்களுக்குப் பதிலாக ரூ.84 இலட்சம் செலவில் 21 புதிய பெட்ரோல் ஈப்புகள் 2000-2001ஆம் ஆண்டில் வாங்கி வனத்துறையிடம், 19.6.2000 அன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.

* சென்னைப் பெருநகர் நீர்வழிகளான கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி நல்லா, மாம்பலம் வடிகால், கேப்டன் காட்டன் கால்வாய் ஆகியவற்றைத் தூய்மைப்படுத்தி அதன் சுற்றுச் சூழல்களைச் சீரமைக்கும் பணிக்காக 1700 கோடி ரூபாய் செலவில் ஒரு பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டு தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் நிதியுதவி கோரி மைய அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டது.

மேலும் இந்த தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் திருச்சி, கரூர், மதுரை, நெல்லை, தஞ்சை, குடந்தை, மயிலாடுதுறை ஆகிய நகரங்களும், சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் திருச்செந்தூர், இராமேசுவரம் ஆகிய நகரங்களும் பயனடையும். இதனைப் பரிசீலித்த மைய அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் தேசிய நதிநீர்ப் பாதுகாப்பு இயக்ககம் ரூ.491.52 கோடி நிதி ஒதுக்கீட்டிற்கு 29.9.2000 அன்று ஒப்புதல் அளித்து வரும் 1-1-2001 அன்று இந்தப் பெருந்திட்டம் சென்னையில் தொடங்கி வைக்கப்படவுள்ளது.

கால்நடை வளம்

* ஆசியாவிலேயே முதலாவதாகக் கால்நடைக் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்காக 1990ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் ஒரு புதிய பல்கலைக்கழகம் தொடங்கப் பட்டது.

* கடந்த நான்கரை ஆண்டுகால கழக ஆட்சியில் 120 கால்நடை மருந்தகங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டதோடு 50 மருந்தகங்கள் மருத்துவமனைகளாக நிலை உயர்த்தப்பட்டன. கரூர், திருவாரூர், உதகமண்டலம், மேக்கிரிமங்கலம் ஆகிய 4 கால்நடை மருத்துவமனைகள் பிரதம மருத்துவமனையாகத் தரம் உயர்வு. 2126 பார்வை கிளை நிலையங்கள் கால்நடைகளுக்காகப் புதிதாகத் தொடங்கப்பட்டன. 91 முதல் 96 வரை நடைபெற்ற

அ.தி.மு.க. ஆட்சியில் 60 புதிய கால்நடை மருந்தகங்களே தொடங்கப்பட்டன.

* கால்நடை மருத்துவமனைகளில் வளர்ப்புப் பிராணிகளுக்கு 5 ரூபாய் வீதம் வசூலிக்கப்பட்டு வந்த மருத்துவக் கட்டணம் 1996இல் நீக்கப்பட்டது.

* கால்நடைகளுக்குக் குடற்புழு நீக்கத்திற்காக வசூலிக்கப்பட்ட ஒரு ரூபாய் கட்டணம் 1996இல் கழக ஆட்சியில் ரத்து செய்யப்பட்டதால் பயனடைந்த கால்நடைகள் 3 கோடியே 62 இலட்சத்து 37 ஆயிரம்.

* கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்திற்கு 2 கோடியே 56 இலட்ச ரூபாய்ச் செலவில் புதிய கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

* புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கால்நடை மருத்துவர்கள் எண்ணிக்கை 174.

* கால்நடைப் பண்ணைகளில் தினக்கூலிகளாகப் பணிபுரிந்த 1185 பேரில் 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்த 877 பேர் 1997-98இல் பணி நிரந்தரம் செய்யப்பட்டனர்.

* கால்நடைப் பாதுகாப்புத் துறையில் பணியாற்றி இறந்துபோன ஊழியர்களின் வாரிசுகள் 181 பேருக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம்..

* 1997-98இல் தென் மாவட்டங்களில் நீலநாக்கு நோய் தாக்கி இறந்த கால்நடைகளுக்காக ஏழை, எளிய விவசாயிகளுக்கு 1 கோடியே 5 இலட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்பட்டது.

* மீனவர் நலம் சிங்காரவேலர் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் மீனவர்களுக்காக கடந்த நான்கரை ஆண்டுக் கால கழக ஆட்சியில் 20,000 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டு 12,665 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. முந்தைய ஐந்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் 4824 வீடுகளே கட்டப்பட்டன. வீடு கட்டும் செலவு ரூ.32,000 என்பது ரூ.37,000 ஆக உயர்த்தப்பட்டது. 1998-99இல் ரூ.1 கோடி செலவில் பழுதுபார்க்க திட்டமிடப்பட்ட 2000 மீனவர் குடியிருப்புகளில், 1,841 குடியிருப்புகளில் பணிகள் முடிவடைந்துள்ளன.

* 323 மீனவ குடியிருப்புகளில் 1188 தெரு விளக்குகள் 95,40,270 ரூபாய் செலவில் பொருத்தப்பட்டுள்ளன. 36 மீனவ குடியிருப்புப் பகுதிகளுக்கு ரூ.1 கோடி செலவில் இணைப்புச் சாலைகள் போடப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் முந்தைய அ.தி.மு.க. ஆட்சியிலே செயல்படுத்தப்படவே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

* மீனவர் மகளிர் கூட்டுறவு சங்கங்களுக்கு 31.80 இலட்சம் ரூபாய்ச் செலவில் இலவசமாக 25 மோட்டார் பொருத்திய 5 சக்கர வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. மீனவர் காப்புறுதித் திட்ட நிதி ரூ.35,000 என்பது ரூ.50,000 ஆக 10.12.2000த்தில் உயர்த்தப்பட்டது. இது தவிர மாநில அரசு செயல்படுத்தும் காப்புறுதி திட்டத்தில் ரூ.15,000 வழங்கப்படுகிறது.

* மீனவர் குழு காப்புறுதி திட்டத்தின் கீழ் 201 மீனவ குடும்பங்களுக்கு 60 இலட்சத்து 62 ஆயிரத்து 500 ரூபாய் நிவாரண உதவி வழங்கப்பட்டுள்ளது. மீனவர் விபத்து காப்புறுதி திட்டத்தின் கீழ் 902 மீனவ குடும்பங்களுக்கு 2 கோடியே 45 லட்ச ரூபாய் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளன.

* சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் 1996க்குப்பின் ஒவ்வொரு ஆண்டிலும் மீன் பிடிப்பு இல்லாத நான்கு மாதங்களுக்கு மொத்தம் 8,32,259 மீனவர்களுக்கு மாதம் ரூ.270 வீதம் மொத்தம் 58 கோடியே 68 இலட்சத்து 39 ஆயிரத்து 780 ரூபாய் நிவாரண உதவி வழங்கப்பட்டுள்ளது.

* பாரம்பரிய மீன்பிடி படகுகளில் உள்பொருத்தும் இயந்திரத்திற்கு ரூ.12,000/- வீதமும், வெளிப்பொருத்தும் இயந்திரத்திற்கு ரூ.10,000/- வீதமும் கடந்த நான்கு ஆண்டுகளில் 6,675 இயந்திரங்களுக்கும், 1,521 வலைகளுக்கும் - மொத்தம் 8 கோடியே 34 இலட்சத்து 81 ஆயிரத்து 437 ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

* மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த டீசல் மானியம் லிட்டருக்கு 35 காசு என்பதை 45 காசாக உயர்த்தி 97-98ஆம் ஆண்டு முதல் கழக ஆட்சியில் வழங்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக 7 ஆயிரம் பயனாளிகள் 5 கோடியே 21 இலட்சம் ரூபாய் டீசல் மானியமாகப் பெற்றுள்ளனர். முந்தைய அ.தி.மு.க.

ஆட்சியில் 2498 பயனாளிகள் மட்டுமே வெறும் 62 இலட்சம் ரூபாய் அளவிற்கு டீசல் மானியமாகப் பெற்றனர்.

* தமிழக மீனவர்களைக் காத்திட ரூ.4.50 கோடி செலவில் நீலம், கயல், பவளம், முத்து, வலம்புரி என்னும் பெயர்களில் 5 ரோந்துப் படகுகள் 16.11.1999 முதல் இயக்கப்படுகிறது. விபத்தில் இறக்கும் மீனவ மகளிர் குடும்பங்களுக்கு 2000-2001இல் ரூ.15,000; காயமடையும் மகளிருக்கு ரூ.7,500 நிவாரண உதவி. கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர் காணாமல் போய் அவர் திரும்பி வரும் வரையில் அவரது குடும்பத்தைக் காத்திடும்பொருட்டு நாள் ஒன்றுக்கு 50 ரூபாய் வீதம் நிதி உதவி வழங்கிடவும், இலங்கை கடலோரக் காவல் படையினரால் சுடப்பட்டு உயிரிழக்கும் மீனவர் குடும்பத்திற்கு பாதுகாப்பு நிதியாக ஒரு இலட்சம் ரூபாயும் கழக ஆட்சியில்தான் தற்போது முதன் முதலாக வழங்கப்படுகிறது.

சிறுதொழில் வளர்ச்சி

* தமிழகத்திலுள்ள தேயிலை, ஜவ்வரிசி, கயிறு, தீப் பெட்டி, கைவினைப் பொருட்கள் முதலியவை சார்ந்த 335 தொழிற் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடந்த நான்கரை ஆண்டுகளில் ரூ.1630 கோடிக்கு விற்பனைகள் செய்யப்பட்டு சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. 1991 முதல் 1995-96 வரை நடைபெற்ற அ.தி.மு.க. ஆட்சியில் 1062 கோடி ரூபாய்க்குத்தான் விற்பனை நடைபெற்றது.

* நான்கரை ஆண்டு காலக் கழக ஆட்சியில் 4715 சிறு தொழில் நிறுவனங்களுக்கு 93.54 கோடி ரூபாய் முதலீட்டு மானியமாக வழங்கப்பட்டுள்ளது. முந்தைய ஐந்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் 3367 சிறு தொழில் நிறுவனங்களுக்கு 43.76 கோடி ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டது.

* நான்கரை ஆண்டுக் கால கழக ஆட்சியில் 14,779 சிறுதொழில் நிறுவனங்களுக்கு 32 கோடி ரூபாய் குறைந்த அழுத்த மின்கட்டண மானியமாக வழங்கப்பட்டுள்ளது. முந்தைய 5 ஆண்டுக் கால அ.தி.மு.க. ஆட்சியில் வெறும் 8.94 கோடி ரூபாய் மட்டுமே இந்த மானியமாக வழங்கப்பட்டது.

* கழக ஆட்சியில் 851 சிறுதொழில் நிறுவனங்களுக்கு 3.45 கோடி ரூபாய் ஜெனரேட்டர் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

முந்தைய ஐந்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் 1.30 கோடி ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டது.

* சிறு தொழில் நிறுவனங்களுக்கு கழக ஆட்சியில் 214 கோடியே 36 இலட்ச ரூபாய் அளவிற்கு வட்டியில்லாத விற்பனைவரி ஒத்திவைப்பு சலுகையாக வழங்கப்பட்டுள்ளது. முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் ஐந்தாண்டுக் காலத்தில் 137 கோடி ரூபாய் அளவிற்கு மட்டுமே இந்தச் சலுகை வழங்கப்பட்டது.

* நான்கரை ஆண்டுகளில் புதிதாகப் பதிவு செய்யப்பட்டுள்ள சிறுதொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 1,43,562. அவைகளில் 2,813.38 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 12,66,021 பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைத்துள்ளன.

வீட்டு வசதித் துறை

* பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்காக 5 கோடியே 67 இலட்சம் ரூபாய்ச் செலவில் 12,946 மனைகளும், குறைந்த வருவாயினருக்காக 21 கோடியே 71 இலட்சம் ரூபாய்ச் செலவில் 9,345 மனைகளும், 5,952 வீடுகளும், நடுத்தர வருவாயினருக்காக 126 கோடியே 8 இலட்சம் ரூபாய்ச் செலவில் 9,960 மனைகளும், 8,600 வீடுகளும், 493 அடுக்குமாடி குடியிருப்புகளும், உயர் வருவாயினருக்காக 234 கோடியே 74 இலட்சம் ரூபாய்ச் செலவில் 7,924 மனைகளும், 4,190 வீடுகளும், 2,907 அடுக்குமாடி குடியிருப்புகளும் புதிதாகக் கட்டப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கான வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 115 கோடியே 31 இலட்சம் ரூபாய்ச் செலவில் 2,790 அடுக்குமாடி குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* இந்த அரசின் இந்த நாலரை ஆண்டுகளில் மட்டுமே வாரியம் 982 கோடியே 82 இலட்சம் ரூபாயினை வருவாயாக வசூலித்துள்ளது. ஆனால் முந்தைய அரசு ஐந்தாண்டுகளில் ஈட்டியுள்ள வருவாய் 491 கோடியே 62 இலட்சம் ரூபாய் மட்டுமே! இந்த நாலரை ஆண்டுகளில் வாரியம் 785 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள மனை மற்றும் குடியிருப்புகளை விற்பனை செய்துள்ளது. முந்தைய ஐந்தாண்டுகளில் அ.தி.மு.க. ஆட்சியில் 517 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள மனை மற்றும் குடியிருப்புகள் மட்டுமே விற்பனை செய்யப்பட்டது.

மாவட்ட தலைமை இடங்களான திருவள்ளூர், விழுப்புரம், தேனி, பெரம்பலூர், கரூர், திருவாரூர், தூத்துக்குடி, நாமக்கல், நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் அரசு அலுவலர்களுக்கு 948 குடியிருப்புகள் 30 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

* இவை நீங்கலாக விழுப்புரம் பெருந்திட்ட வளாகப் பகுதி, திருப்பூர், மேட்டூர், சேலம், நாகர்கோயில், பாளையங்கோட்டை, ஈரோடு ஆகிய நகரங்களில் 636 குடியிருப்புகள் 24 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. இக்குடியிருப்புகள் சலுகை வாடகையில் அரசு அலுவலர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன. சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருக்க ஏதுவாக ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அனைத்து நவீன வசதிகள் அடங்கிய 240 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 44 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

* 1995 - 96ம் ஆண்டு வரை ஆண்டுதோறும் 40,000 முதல் 45,000 வரை புதிய வீடுகள் கட்ட நிதியுதவி வழங்கப்பட்டு வந்தது. தற்போது ஆண்டுதோறும் 70,000 முதல் 80,000 வீடுகள் கட்ட கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களின் மூலம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

* 1996க்கு முன்னர் புதிய வீடுகள் கட்ட ஆண்டுதோறும் 150 கோடி ரூபாய் முதல் 200 கோடி ரூபாய் வரை வழங்கப்பட்டு வந்த கடனுதவி உயர்த்தப்பட்டு தற்போது ஆண்டிற்கு 650 கோடி ரூபாயளவிற்கு கடனுதவி வழங்கப்படுகிறது.

* குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான கடனுதவி 55 ஆயிரத்திலிருந்து ஒரு இலட்சமாகவும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான கடன் 80 ஆயிரத்திலிருந்து 2 இலட்சம் ரூபாய் ஆகவும் மற்றும் நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் மூலம் வழங்கப்படுகின்ற வீட்டுவசதிக் கடன் 3 இலட்சம் ரூபாயிலிருந்து அதிகபட்சமாக 7 இலட்சம் ரூபாய் வரை உயர்த்தப்பட்டுள்ளது.

* 1996ம் ஆண்டிற்கு முன்னர் ஊரகப் பகுதிகளில் வசிக்கும் வீடற்ற ஏழை எளியோருக்கு ஆண்டுதோறும் 30,000 வீடுகள் கட்ட நிதியுதவி வழங்கப்பட்டு வந்தது. 1996க்குப் பின் 50,000 என உயர்த்தப்பட்டுள்ளது.

* கடந்த நான்கரையாண்டுகளில் கட்டப்பட்டுள்ள 2,68,654 வீடுகளில் ஊரகப் பகுதிகளில் மட்டும் 1,84,774 புதிய வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதில் குறிப்பாக 1,64,808 வீடுகள் பொருளாதாரத்தில் நலிவுற்ற ஏழை எளியோருக்கு கட்டப்பட்டதாகும். கடந்த நான்கரையாண்டுகளில் ஊரகப் பகுதிகளில் பயனடைந்தோரின் பங்கு 68 விழுக்காடாகும். இந்தியாவில் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் நிதியுதவி மூலம் கட்டப்பட்டுள்ள 15 லட்சம் வீடுகளில் தமிழ்நாட்டில் மட்டும் 66 விழுக்காடுகளுக்குமேல் - அதாவது 9,89,000 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

* தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் கழக அரசினால் 1972-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு ஏழை நடுத்தர மக்களின் வரப்பிரசாதமாக விளங்கும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் அ.தி.மு.க. ஆட்சியில் 1991 முதல் 1996 வரை 6,666 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 47 கோடியே 82 இலட்சம் ரூபாய்ச் செலவில் கட்டப்பட்டன. கடந்த நான்கரை ஆண்டு கழக ஆட்சியில் 13,001 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 138 கோடியே 39 இலட்சம் ரூபாய்ச் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1996-97 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் வசிப்பவர்கள் அவர்கள் விரும்பினால் அக்குடியிருப்புகளை எளிய முறையில் சொந்தமாக்கப்படும் என்று நான் அறிவித்ததைத் தொடர்ந்து அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் அந்த வகையில் சுமார் 41 ஆயிரம் குடியிருப்புகள் ஏழையெளிய மக்களுக்குச் சொந்தமாக்கப்பட்டுள்ளன.

* நகரங்களில் குடிசைப்பகுதிகளின் சுற்றுப்புறச் சூழ்நிலைகளை மேம்படுத்தும் பொருட்டு அடிப்படை வசதிகளான சாலைகள் அமைத்தல், தெரு மின் விளக்குகள் அமைத்தல், மழைநீர் வடிகால் அமைத்தல், குளியலறை மற்றும் கழிப்பறை கட்டுதல் போன்ற அடிப்படை வசதிகளைக் கொண்டு சுற்றுப்புறச் சூழ்நிலைகளை மேம்படுத்தி அப்பகுதிகளை நல்ல உறைவிடங்களாக மேம்படுத்தும் நோக்குடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

* இத்திட்டத்தின் கீழ் கடந்த ஆட்சிக்காலத்தில் 1991 முதல் 1996 வரை 65,007 குடும்பங்கள் பயனடைந்துள்ளனர்.

9 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டன. கடந்த நான்கரையாண்டு கழக ஆட்சியில் 1,04,903 குடும்பங்கள் பயனடைந்தனர். 20 கோடியே 10 இலட்சம் ரூபாய்ச் செலவிடப் பட்டுள்ளது.

* சென்னை மற்றும் இதர மாநகரங்களில் அமைந் துள்ள குடிசைப் பகுதிகளில் அடிக்கடி ஏற்படும் தீ விபத்துக்களால் பொருட்சேதமும், உயிர்ச் சேதமும் ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு ஓர் உடனடி நடவடிக்கையாக இம்மாநகரங்களில் குடிசைப்பகுதிகளில் வாழும் 50,025 குடும்பங்களுக்கு கல்நார் தகடு கூரைகளாலான வீடுகள் அமைக்கும் திட்டத்தை நான் 1998-1999 ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் அறிவித்தேன். இதுவரை 28,018 குடும்பங்களுக்கு 37 கோடியே 70 இலட்சம் செலவில் சுற்றுச் சுவர்களுடன் கூடிய கல்நார் தகடுகளாலான கூரை வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன.

* தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சென்னை, மதுரை, ஈரோடு, கோவை, சேலம், திருச்சி, வேலூர், திருப்பூர், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய நகரங்களில் குடிசைப்பகுதிகளில் வாழும் குடும்பங் களுக்கு உலக வங்கி நிதியுதவியுடன் அடிப்படை வசதிகள் அமைத்து மனை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1996-98 ஆண்டுகளில் 3,293 குடும்பங்களுக்கு 4 கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில் குடிசைப்பகுதி மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் சென்னை மற்றும் இதர நகரங்களில் வெவ்வேறு பகுதிகளில் பல்வேறு கட்டங்களில் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு மாடிப் படிகளை சீர் செய்தல், தளங்களைச் சீரமைத்தல், மழைநீர்க் கசிவினை தடுக்க ஓடுகள் பதித்து கூரைத் தளங்களை சீரமைத்தல், தரைகளைப் பூசுதல், வெளிப்புறச் சுவர்களைப் பூசுதல் போன்ற பழுதுபார்ப்புப் பணிகள் 1996-99 - ஆண்டுகளில் 47,500 குடியிருப்புகளுக்கு 14 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* திருமயிலை முதல் வேளச்சேரி வரையிலான பறக்கும் ரயில் திட்டம் (MRTS) 10.60 கிலோ மீட்டர் நீளப் பகுதிக்கான திட்டச் செலவான733 கோடி ரூபாயில் தமிழ்நாடு அரசு மூன்றில் இரண்டு பங்கு செலவினையும், மத்திய அரசு மூன்றில் ஒரு

பங்கு செலவினையும் ஏற்கிறது. 30.9.2000 முடிய மொத்தம் 281 கோடியே 16 இலட்சம் ரூபாய்ச் செலவிடப்பட்டு, பணிகள் முழுவீச்சில் நடைபெறுகின்றன. 2002 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் முடியும்.

* சென்னையில் தற்போது இயங்கிவரும் பேருந்து முனையங்களான எஸ்பிளனேட், எம்.யூ.சி, பேசின் பாலம் மற்றும் பிராட்வே ஆகிய இடங்களில் நிலவி வரும் போக்குவரத்து நெரிசல்களையும், சுகாதாரமற்ற நிலைமைகளையும் மற்றும் போக்குவரத்துப் பிரச்சினைகளையும் குறைப்பதற்காக, புறநகர் பேருந்துமுனையம் ஒன்றை நகரத்தையொட்டியுள்ள கோயம்பேட்டில் அமைப்பதற்கான வேலை நடைபெற்று வருகிறது. அரசு இத்திட்டத்திற்காக 89 கோடியே 21 இலட்சம் ரூபாய்க்குத் திருத்திய நிர்வாக ஒப்புதல் அளித்து, இத்திட்டப் பணிகளைச் செயல்படுத்த சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடம் அளித்துள்ளது.

உடன்பிறப்பே,

ஏற்றுக்கொண்ட பொறுப்பை இனிது நிறைவேற்றுவதிலும், கடமையாற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருப்பதிலும், சிந்தனை செயல் அனைத்தும் இந்த நாடு செழிப்பதற்காகவே செலவிடுவதிலும் எந்த அளவுக்கு இணையற்று விளங்குகிறது நமது கழக அரசு என்பதைச் சாதனைகளை விளக்கும் சரித்திரச் சான்றுகளாக இந்தக் கடிதங்கள் அமைந்து உனக்கும் நாட்டு மக்களுக்கும் உறுதிபடக் கூறியிருக்கின்றன என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அந்த நம்பிக்கையுடன் உவகை பூத்திட இந்தக் கடிதத் தொடரை நிறைவு செய்கிறேன். தேவையேற்படும் போதெல்லாம் வழக்கமான நமது கடிதத் தொடர்பு தொடரும்.

அன்புள்ள,

மு. க.

(22-12-2000)

2567. பணப் புழக்கமும்; மனப்புழக்கமும்!

உடன்பிறப்பே,

கழக அரசின் நாலரை ஆண்டுக் கால சாதனைகளை இருபத்தி ஐந்து கடிதங்களாக தொடர்ந்து எழுதி, அவற்றைத் தொகுத்து தி.மு.க. தலைமைக் கழகம் "சாதனைச் சரித்திரம்" என்ற தலைப்பில் 431 பக்கங்கள் கொண்ட நூலாக வெளியிட்டிருக்கிறது. முதல் பதிப்பு முற்றாக விற்பனையாகி அடுத்த பதிப்பும் வெளி வந்துள்ளது விலை ரூபாய் ஐம்பது தான்.

இடையே சில நாட்கள் கடிதம் எழுதி உன்னுடன் தொடர்பு கொள்ளவில்லையே தவிர, பல்வேறு நிகழ்ச்சிகளில் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் வாய்ப்பைப் பெற்று மகிழ்ந்து வருகிறேன். இந்தச் சில நாட்களில் புதுவை, திண்டிவனம், நாங்குநேரி, திருநெல்வேலி, மதுரை, திருவாதவூர், தும்பைப்பட்டி தேனி, உடுமலைப்பேட்டை, கோவை எனப் பல்லாயிரவரைச் சந்திக்கின்ற பொது நிகழ்ச்சிகளில் என் உள்ளமெலாம் பூரித்திடக் கலந்து கொண்டேன்.

தளிர்க் கரங்கள் அசைத்து "தாத்தா" எனக் கூவி அழைத்து மத்தாப்பூ போல சிரித்து மகிழ்ந்த மழலைகளையும் - அந்த மழலைகளை மடியிலேந்தியவாறு எனக்கு வரவேற்பு கூறி வாஞ்சை காட்டிய சகோதரிகளையும் - என் கார் நின்றவுடன் கால்கள் பின்னிட நடந்தோடி வந்து "நல்லாயிரப்பா" என்று ஆரத்தி எடுத்துத் திலகமிட்ட அஞ்சுகத் தாய்களையும் - பாட்டாளிகளையும் அவர்தம் கூட்டாளிகளாம் உன் போன்ற உடன்பிறப்புக்களையும் - வழிநெடுகக் கண்டு களித்து, அவர்தம் கனிவு நிறைந்ததும் நெஞ்சார்ந்ததுமான வாழ்த்துகளையெல்லாம் பெற்றுக் கொண்டுதான், அவற்றையே என் உடல் நலிவையும் உள்ளத்துச் சோர்வையும் ஒருங்கே தீர்த்து வைக்கும் மாமருந்தெனக் கருதி

42238
நிதி.கு116
உரை 0.31

அலைந்து திரிந்து தலைநகர் சென்னைக்குத் திரும்பினேன், திரும்பியவுடன் உனக்குக் கடிதம் எழுத வேண்டுமென்ற ஆவலைத் தூண்டியது எனக்குக் கிடைத்த ஆதாரபூர்வமான ஒரு புள்ளி விபரம்.

ஆம் தமிழகத்துச் சில ஏடுகளில் அந்தப் புள்ளி விபரம் குடத்துக்குள் ஏற்றப்பட்ட விளக்கொளி போல வெளி வந்திருந்தாலும் கூட வட மாநில ஏடுகளில் முக்கியத்துவம் தரப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

சட்டமன்றத் தேர்தலை எதிர்நோக்கி அணிகள் தயாராகிக் கொண்டிருக்கும் வேளையில்; சுமார் ஐந்தாண்டு காலத்தில் கழக அரசின் சாதனைகளை தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு நாம் விளக்கிக் கொண்டிருக்கும்போது; இந்தப் புள்ளி விபரமும் கிடைத்திருப்பது "பொன் குடத்திற்குப் பொட்டு வைத்தது போல" என்பார்களே; அதுபோல அமைந்திருப்பதால் இதனை உன்னோடு பகிர்ந்து மகிழ்வதில் பெருமிதம் கொள்கிறேன்.

23-2-2001 அன்று மத்திய திட்டக்குழு தேசிய மாதிரி ஆய்வு அமைப்பு (National Sample Survey Organisation NSSO) அளித்துள்ள மதிப்பீடுகளுக்கு ஒப்புதல் அளித்துள்ள செய்தி இந்தியாவின் அனைத்து ஏடுகளிலும் விரிவாக வெளிவந்துள்ளது. மத்திய திட்டக் குழுவின் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்கள் (Below Poverty Line) பற்றிய கணக்கெடுப்பு முடிவுகளும் அத்துடன் வெளியிடப்பட்டுள்ளன. இந்தியாவில் உள்ள மொத்த மக்கள் தொகையில் 1993-94 ஆம் ஆண்டில் 35.97 விழுக்காடாக இருந்த வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள்தொகை, 1999-2000 ஆம் ஆண்டில் 26.10 விழுக்காடாக குறைந்துள்ளது. இதில் கிராமப்புறங்களில் 37.27 விழுக்காட்டிலிருந்து 27.09 விழுக்காடாகவும், நகர்ப் புறங்களில் 32.36 விழுக்காட்டிலிருந்து 23.62 விழுக்காடாகவும் வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ள மக்கள் தொகையின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

இந்திய அளவிலே இந்த அளவிற்கு வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் தொகை ஒட்டுமொத்தமாக குறைந்திருக்க மாநிலங்களிலே எந்த அளவிற்கு வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் தொகையின், எண்ணிக்கை குறைந்திருக்கிறது என்பதையும் அந்தப் புள்ளி விவரம் சுட்டிக் காட்டியுள்ளது.

வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்கள் தொகை எண்ணிக்கை பெரிய மாநிலங்களில் ஐந்தாண்டுகளில் குறைந்துள்ள விழுக்காடு

எண்	மாநிலம்	1993-94	1999-2000	வித்தியாசம்
1.	ஒரிசா	48.56	47.15	1.41
2	பீகார்	54.96	42.60	12.36
3.	மத்தியப்பிரதேசம்	4252	3743	5.09
4.	உத்தரப்பிரதேசம்	40.85	31.15	9.7
5.	மேற்கு வங்காளம்	35.66	27.02	8.64
6.	மராட்டியம்	36.86	25.02	11.84
7.	தமிழ்நாடு	35.03	21.12	13.91
8.	கர்நாடகம்	33.16	20.04	13.12
9.	ஆந்திரா	22.19	15.7	6.42
10.	கேரளா	25.43	12.72	12.71
11.	ராஜஸ்தான்	24.41	15.28	12.13
12.	குஜராத்	24.21	14.07	10.14
13.	பஞ்சாப்	11.77	6.16	5.61

உடன்பிறப்பே,

இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து தமிழகத்திலே 1993-94ஆம் ஆண்டில் வறுமைக்கோட்டிற்குக் கீழேயிருந்த மக்கள் தொகை 35.03 விழுக்காட்டிலிருந்து 1999-2000ஆம் ஆண்டில் 21.12 விழுக்காடு என்ற அளவிற்கு அதாவது 13.91 விழுக்காடு அளவிற்கு குறைந்திருப்பதையும், இந்தியாவில் உள்ள அனைத்து பெரிய மாநிலங்களையும் எடுத்துக்கொண்டு பார்க்கும்போது வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் தொகை தமிழகத்திலேதான் இந்த ஐந்தாண்டுகளில் அதிக அளவிற்கு குறைந்திருக்கிறது என்பதையும் புரிந்து கொள்ள முடியும்,

வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் என்பதற்கு புரியும்படி விளக்கம் கூறவேண்டுமேயானால், ஐந்து நபர் கொண்ட

ஒரு குடும்பத்தின் ஆண்டு வருமானம் 16,144 ரூபாய்க்கு குறைவாக இருந்தால் அந்தக் குடும்பம் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பம் என்றும், இதற்கு மேல் ஆண்டு வருமானம் இருந்தால் அந்தக் குடும்பம் வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ள குடும்பம் என்றும் தற்போது மத்திய அரசினால் வரையறை செய்யப் பட்டுள்ளது. இப்படிப்பட்ட வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்கள் தொகை பற்றித்தான் மத்திய அரசின் திட்டக்குழு தனது புள்ளி விவரத்தை நேற்று நாட்டிற்கு தெளிவாக்கியுள்ளது. அதன்படிதான் தமிழகத்திலே உள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்கள் தொகை கடந்த ஐந்தாண்டுகளில் கணிசமாக குறைந்துள்ளது என்பதை இந்தப் புள்ளி விவரம் எடுத்துக் காட்டியுள்ளது.

தமிழ்நாட்டில் தனி நபர் வருமானம் (Per capital income) 1995-96இல் 11,894 ரூபாய் என்ற அளவிற்கு இருந்து, 1999-2000ஆம் ஆண்டில் 18,786 ரூபாய் என்ற அளவிற்கு அதிகரித்துள்ளது. இவ்வாறு தனி நபர் வருமானம் தமிழகத்திலே அதிகரித்த காரணத்தினால்தான் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் தமிழகத்திலே இந்தியாவிலே வேறு எந்த பெரிய மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு குறைந்து வருகிறார்கள்.

இன்னும் சொல்ல வேண்டுமேயானால், தமிழ்நாட்டில் மட்டும் கடந்த இரண்டாண்டுகளில் வருமான வரி செலுத்துவோரின் எண்ணிக்கை இரண்டரை மடங்காக உயர்ந்துள்ளது என்பதை தெரிந்து கொண்டால் எந்த அளவிற்கு தமிழகத்திலே தனி நபர் வருமானம் உயர்ந்து வருகிறது என்பதையும் பொருளாதார வளர்ச்சி மேலோங்கி யிருக்கின்றது என்பதையும் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

இந்த ஐந்தாண்டுகளில் தமிழ்நாடு வலுவான பொருளாதார நிலையை அடைவதற்கு மனித நேயத்தோடு இணைந்த பொருளாதார வளர்ச்சி (Economic Development with a human face) என்ற கழக அரசின் கொள்கை காரணமாக இருந்துள்ளது. 1996-97ஆம் ஆண்டிற்கும் 1998-99ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் நிலையான விலைகளின் அடிப்படையில் (At constant prices) மாநிலத்தின் மொத்த உற்பத்தியின் (Gross State

Domestic Product) வளர்ச்சி வீதம் சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு 6.05 விழுக்காடாக இருந்தது. கழக அரசு எடுத்து வரும் பல நடவடிக்கைகளின் காரணமாக 1999 2000ஆம் ஆண்டில் வளர்ச்சி 7.04 விழுக்காடாக அதிகரித்துள்ளது. அண்மையில் நான் சட்டப் பேரவையில் வெளியிட்ட நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டவாறு இந்தியாவிலேயே பொருளாதார வளர்ச்சி மிக உயர்ந்துள்ள மூன்று மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் விளங்குகிறது.

இதனை புரிந்து கொள்ளாமல்தான் சிலபேர் இந்த ஆட்சியிலே பணப்புழக்கம் இல்லை என்று தொடர்ந்து ஒரு குற்றச்சாட்டை இந்த அரசின் மீது சுமத்தி வருகிறார்கள். பணப் புழக்கம் இல்லாதது போன்ற ஒரு தோற்றம் தமிழகத்திலே ஏன் தென்படுகிறதென்றால் தற்போது இந்த ஆட்சியிலே லஞ்சம் கொடுப்பது, ஊழல் செய்வது, எல்லாப் பணிகளுக்கும் கமிஷன் கொடுப்பது, மோசடி நிதி நிறுவனங்களில் கடார் 1300 கோடி ரூபாய் அளவிற்கு நிதி புரண்டது, என்பதெல்லாம் தடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அறவே தடுக்கப்பட்டு விட வில்லை, ஒரு சில இடங்களில் நிலவில் களங்கம் போல் இருக்கிறது, அக்களங்கம் முழுக்க மறைந்து போனால் நான் மகிழ்ச்சியடைவேன். அதிக அளவிற்கு கறுப்புப்பணம், கள்ளப் பணம் புழங்காததால்தான் பணப் புழக்கம் இல்லாததைப் போல் தெரிகின்றது. மேலும் பங்களாக்களின் மதிப்பைக் குறைத்துக் காட்டி முத்திரை வரியை ஏய்ப்பு செய்து விற்பது, வாங்குவது, அங்கீகரிக்கப்படாத இடங்களை விற்பது போன்ற காரியங்களும் தற்போது தடுக்கப்பட்டு விட்டன.

அதனாலும் கறுப்புப் பணம் புழக்கத்திற்கு வரவில்லை . இவைகளின் காரணமாகத்தான் பணப் புழக்கம் இல்லாததைப் போல் தோன்றுகின்றது. இந்தக் கறுப்புப் பண, கள்ளப் பணப்புழக்கம் இல்லாததால் சாதாரண சாமான்ய மக்கள், உண்மையாக பாடுபடுவோர் யாரும் பாதிக்கப்பட மாட்டார்கள். தவறான முறையிலே பணத்தை சம்பாதித்து அதனை ஊதாரித் தனமாக செலவு செய்பவர்கள் ஒடுக்கப்பட்டு விட்டார்கள் என்பதுதான் இதற்கு உண்மையான பொருளாகும்.

இதனை மக்கள் மத்தியில் தெளிவாக உணர்த்திடவும்; ஊழல் செய்ய முடியாமல் ஊரை அடித்து உலையில் போட முடியாமல், மீண்டும் ஆட்சிக்கு வந்தால் ஓர் ஆட்டம் ஆடித் தீர்க்கலாமே என்று கனவு காண்போர், பணப்புழக்கம் பற்றி நடத்துகிற பொய்ப் பிரச்சாரத்திற்குப் பதிலடி கொடுத்திடவும் நமது கழக உடன்பிறப்புகள் தக்க ஆதாரங்களுடன் தயாராக வேண்டும் என்பதற்காகவே இந்தக் கடிதம்! பணப்புழக்கமும்; அதனை மறுக்கும் மாற்றாரின் மனப் புழுக்கமும் என்பதை விளக்கி விரைந்திடுக என் அன்பு உடன்பிறப்பே!

அன்புள்ள,

மு.க.

26-02-2001

2568. பழைய ஞாபகம் இல்லையோ; பாடம் கற்கவில்லையோ!

உடன்பிறப்பே,

தமிழகப் பொதுத் தேர்தல் விரைவில் வரவிருக்கின்ற நேரத்தில், கூட்டணிகள் எப்படி அமையவிருக்கின்றன என்பது பற்றிய பேச்சுவார்த்தைகளும் அவை பற்றிய பல்வேறு யூகங்களும் ஏடுகளில் வெளி வந்து கொண்டிருக்கின்ற நேரத்தில் 1996ஆம் ஆண்டுக்கு முந்தைய ஆண்டில் தமிழகத்தில் ஒருசில கட்சிகளிடையே இருந்த உறவினைப் பற்றி உனக்கு நினைவுபடுத்திடத்தான் இந்தக் கடிதம்.

1995ஆம் ஆண்டு பிப்ரவரி 27ந்தேதி மத்திய சிறையிலிருந்து ஒன்பது விடுதலைப் புலிகள் தப்பிய போது தமிழகத்தில் எதிர்கட்சித் தலைவராக இருந்த திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் மார்ச் 5ந்தேதி விடுத்த அறிக்கையிலே மாநில நிர்வாகத்தைச் சரிவர நடத்தத் தெரியாத, ஜெயலலிதா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், தெலுங்கு தேசம், பாரதீய ஜனதா போன்றவற்றுடன் கூட்டு சேர்ந்து கொண்டு காங்கிரசுக்கு எதிராக அணியை அமைக்க முயலுகிறார். இது வேடிக்கையானதாகும். தற்போது மத்திய சிறையிலிருந்து புலிகள் தப்பியதன் மூலம் தமிழகக் காவல்துறை எந்த அளவிற்குச் சீர்கேடு அடைந்துள்ளது என்பது வெளியாகி விட்டது. அதற்குப் பொறுப்பேற்று முதல்வர் பதவி விலக வேண்டும் என்று தெரிவித்தார்.

இதற்கடுத்த நாள் 6-3-1995 அன்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளரான திரு. சங்கரய்யா அளித்த ஒரு பேட்டியிலே அப்போது நடைபெற்ற ஜெயலலிதா ஆட்சி குறித்து கருத்து கூறிய போது, தமிழகத்தில் ஊழல் பெருகிவிட்டது. பஞ்சாயத்துத் தேர்தல்களை நடத்தினால் ஊழலைத் தடுக்க முடியும். இத்தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும். காங்கிரஸ் கட்சியுடன் கூட்டு சேர மாட்டோம் என தி.மு.க. அறிவித்தால்

நாங்கள் அதை வரவேற்போம். பாட்டாளி மக்கள் கட்சியுடன் மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சி கூட்டு வைத்துக் கொள்ளாது. சமீபத்தில் அவர்கள் நடத்திய வாழ்வுரிமை மாநாட்டில் பிரிவினை பற்றிப் பேசியுள்ளனர் என்று தெரிவித்தார்.

இதே கால கட்டத்தில் 16-3-1995 அன்று தடா சட்டத்தை வாபஸ் பெறக் கோரி சென்னையிலே பா.ம.க.வினர் ஒரு ஆர்ப்பாட்டம் நடத்த முற்பட்டபோது காவல்துறையினர் தடியடி நடத்தியதுடன் அந்தக் கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸ் உட்பட 150 பேரை கைது செய்தனர். அதனை நானும், தம்பி வைகோவும், தம்பி திருநாவுக்கரசும், திரு. நல்லக்கண்ணு அவர்களும் கண்டித்து அறிக்கை வெளியிட்டோம்.

இந்த நேரத்தில் அப்போதிருந்த முதல்வர் ஜெயலலிதாவை அன்னை மேரியாகச் சித்தரித்து ஒரு சுவரொட்டி அ.தி.மு.க.வினரால் தமிழகமெங்கும் ஒட்டப்பட்டது. அதனைக் கண்டித்து பாதிரியார்கள் உண்ணாவிரதம் இருக்க முயன்றபோது அதனை அனுமதிக்காமல் காவல் துறையினரை விட்டு அவர்கள் தூக்கி வெளியே போட்டனர். இந்தப் பிரச்சினையை பேரவையிலே எழுப்ப முயன்ற காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் பீட்டர் அல்போன்சுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. பேரவை விவாதத்தின்போது எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் அவர்களைப் பற்றி முதல்வர் ஜெயலலிதா குறிப்பிடும்போது எதிர்க்கட்சித் தலைவரின் அறியாமையைக் கண்டு என்றே வார்த்தைகளைப் பயன்படுத்தினார்.

மார்ச் 19ந்தேதி சட்டப் பேரவையிலே நடைபெற்ற விவாதத்தில் தாமரைக்கனி பேசும்போது பா.ம.க.வைத் தடை செய்ய வேண்டும் என்றும் டாக்டர் ராமதாசுக்கு கடுமையான தண்டனை விதிக்க வேண்டும் என்றும் கூறியபோது அ.தி.மு.க.வினர் மேஜைகளைத் தட்டி வரவேற்றனர் என்றே ஏடுகள் செய்தி வெளியிட்டன. டாக்டர் ராமதாசை விடுதலை செய்ய வேண்டுமென்று தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் பேரவையிலே வைத்த கோரிக்கையை யொட்டிய விவாதத்திலேதான் அவர் இவ்வாறு கருத்தறிவித்தார். காவல் துறையினரின் தடியடியிலே காயமடைந்து ராயப்பேட்டை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று பின்னர் வேலூர் சிறைச்சாலைக்கு டாக்டர் ராமதாஸ் அனுப்பப்பட்டதின் பேரில் 21-3-95 அன்று நான் வேலூர் சென்று டாக்டர் ராமதாசை சிறையிலே

சந்தித்து நலம் விசாரித்தேன். உடனடியாக அன்றைய தினம் இரவே ஜெயலலிதா அவசர அவசரமாக அவரை சிறையிலிருந்து விடுதலை செய்து ஆணை பிறப்பித்தார்.

இச்சம்பவம் குறித்து ஜெயலலிதா கொடுத்த அறிக்கை வருமாறு :-

பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர், ராமதாஸ் என்றைக்கு முதன் முறையாக வன்னியர் சங்கம் என்ற பெயருடன் ஒரு அமைப்பை ஆரம்பித்தாரோ அன்றிலிருந்து இன்றுவரை பாட்டாளி மக்கள் கட்சி வன்முறையையும் சட்ட ஒழுங்கை குலைப்பதையும், தங்களது பழக்கமாக ஆக்கிக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

ஒருசில தலைவர்களுக்கு கூட்டம் போடத் தெரியும். ஊர்வலம் நடத்தத் தெரியும். தொண்டர்களை தூண்டி வன்முறையில் ஈடுபடச் செய்து பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கவும் தெரியும்; தங்களது ஜனநாயக உரிமையை உபயோகப்படுத்துவதாகக் கூறி, பொது மக்களுக்கு முடிந்த வரை இடையூறும், இன்னலும் ஏற்படுத்தத் தெரியும். ஆனால், காவல் துறை மட்டும் சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்க ஆரம்பித்து விட்டாலோ, அவர்கள் பேசிய வசனங்கள் எல்லாம் காற்றில் பறந்தோடிவிடும். தொண்டர்கள் நினைவு மறந்து விடும். சிறையில் இருக்கின்ற அசௌகரியங்களை சிறிது நேரம் கூட தாங்கிக் கொள்ள முடியாமல், எப்படியாவது வெளியே வந்து விடத் தோன்றும். அதற்குத் தயாராக இடுப்பு வலி, நெஞ்சு வலி என்று இதுவரை இல்லாத வலிகள் எல்லாம் திடீரென முளைத்து விடும்.

ஏ.சி. அறையில் சுகமாக காலந்தள்ளியவர்களுக்கு என்னதான் சட்டத்திற்குப் புறம்பான காரியங்களில் ஈடுபட்டாலும், காவல் துறையினர் பிடிக்கக் கூடாது; அப்படியோ பிடித்தாலும் ரிமாண்ட் செய்யக் கூடாது. அலுங்காமல் குலுங்காமல் ஒரு போட்டோவை எடுத்துக் கொள்ள அனுமதித்து உடனே வெளியே அனுப்பி விடவேண்டும். அவர்களுக்குத் தேவையெல்லாம் மறுநாள் செய்தித் தாள்களில் ஒரு புகைப்படம்; அவ்வளவுதான். தப்பித் தவறி மாட்டிக் கொண்டாலோ சிறை அசௌகரியங்களைத் தவிர்க்க மருத்துவமனைக்கு சென்று விடுவார்கள். வேண்டிய ஆள் மூலமாக தூதனுப்பி, விடுதலைக்கும் ஏற்பாடு செய்து கொண்டு விடுவார்கள்.

டாக்டர் ராமதாஸைக் கைது செய்து ரிமாண்ட் செய்யும்போது, அதை எப்படியாவது தடுக்கவேண்டும் என்ற எண்ணத்தில் திடீரென இடுப்பு வலி, நெஞ்சு வலி என்று மருத்துவமனைக்கு கொண்டு செல்ல ஏற்பாடு செய்தார். அங்கு மருத்துவ பரிசோதனையில் அவருக்கு ஒன்றும் இல்லை என்று தெரிந்த பின்பு காவலர்கள் அவரை ரிமாண்ட் செய்ய முற்பட்டவுடன், வேறு வழியின்றி, சிறையில் உள்ள அசௌகரியங்களைப் பொறுத்துக் கொள்ள முடியாமலும், பழகிப் போன சுகங்களை விட்டுக் கொடுக்க முடியாமலும், தன்னை உடன் விடுவிக்க ஏற்பாடு செய்யும்படி தனது மனைவி மூலமாக எனக்கு ஒரு வேண்டுகோளை அனுப்பியிருக்கிறார்.

வெளியே தனது தொண்டர்கள் மத்தியில் வீர முழக்கங்கள் செய்பவர்கள், தாங்கள் ரிமாண்டு செய்யப்பட்டவுடன் அதை எப்படியாவது தடுப்பதற்கு இத்தனை பிரயத்தனங்கள் மேற்கொள்வது ஏன்?

ஜெயலலிதாவின் இந்த அறிக்கையை மறுத்து, மறுநாளே டாக்டர் ராமதாசின் மனைவி; தான் அவ்வாறு முதல் அமைச்சருக்கு கணவனை விடுதலை செய்ய வேண்டுமென்று கோரி எந்த மனுவையும் தரவில்லை என்று பதில் அறிக்கை விடுத்தார்.

இந்த நிகழ்ச்சியினையொட்டி 24-3-1995 அன்று ஒரு நாளிதழ் (தினமணி) எழுதிய தலையங்கத்திலே முதல்வர் (ஜெயலலிதா) விடுத்துள்ள அறிக்கை தர்க்கரீதியாக அமைந்திருக்கவில்லை. ராமதாஸைத் தனிப்பட்ட முறையில் விமர்சிப்பது துர்பாக்கியம். அவர் மீது முதுகு வலி - நெஞ்சு வலி என்று நாடகமாடியதாகப் பொருள் கொள்ளக் கூடிய புகாரைக் கூறியுள்ளது பொருத்தமல்ல. அந்த அளவுடனும் நிற்காமல் ஏ.சி. அறைகளில் சுகமாகக் காலம் தள்ளியவர்களால் சிறைச்சாலையிலுள்ள அசௌகரியங்களை சிறிது நேரம் கூட தாங்கிக் கொள்ள முடிவதில்லை என்று முதல்வரே கூறியிருக்கத் தேவையில்லை. ராமதாஸின் மனைவி செய்து கொண்ட முறையீட்டைப் பரிவுடன் பரிசீலித்ததாலேயே அவரை விடுதலை செய்ததாகக் கூறியிருப்பது முதல்வர் அறிக்கையின் இன்னொரு வேண்டத்தகாத பகுதி. ராமதாசும் அவருடைய மனைவியும் இதை மறுத்திருக்கிறார்கள். அப்படியே வாதத்துக்காக ராமதாசின் மனைவி முறையிட்டதாகவே வைத்துக்

கொண்டாலும் அதனால் தான் விடுதலை செய்ய நேர்ந்தது என்று கூறுவது நாகரிகம் தானா? முதல்வரே இப்படி இறங்கி வந்திருப்பது முறையாகுமா? ஆழ்ந்த கவலையுடன் இதைக் கூறுவது நமது ஜனநாயகக் கடமையாகிறது என்று எழுதியது.

அந்த நேரத்தில் நானும் திரு. மூப்பனாரும் கலந்து கொண்ட எம்.ஜி.ஆர். படத்திறப்பு விழாவிலே உரையாற்றிய மூப்பனார் அவர்கள் ஆட்சியில் இருப்பவர்கள் ஆணவத்தில் இருக்கக் கூடாது. இப்போது (ஜெயலலிதா ஆட்சியில்) அப்படி உள்ளது. அப்படி இருக்கும்போது ஜனநாயகம் எப்படி இயங்கும்? அதிகாரத்தோடு ஜனநாயகத்திற்கு விரோதியாக யார் செயல்படுகிறார்களோ அவர்களின் அரசியல் வாழ்வு அழிந்துவிடும் என்ற அளவிற்கு பேசியதும் ஆதாரபூர்வமாக அன்றைய ஏடுகளில் பதிவாகியுள்ளது.

இப்படிப்பட்ட விநோதங்கள் எல்லாம் நடைபெற்ற அதே கால கட்டத்தில் சென்னையிலே நிருபர்கள் சந்திப்பின் போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. என். சங்கரய்யா 26-3-95 அன்று அடிப்படையில் மாறுபட்ட கொள்கையுடைய காங்கிரஸ் கட்சியினருடன் கருணாநிதி எப்படி மேடையில் ஒன்றாக அமர முடிகிறது? அது என்ன கணக்கு என்பதுதான் என் கேள்வி என்றார். 95இல் அவ்வாறு கேட்ட அந்தக் கட்சி இப்போது எந்த நிலையிலே உள்ளது என்பதையும் நான் எண்ணிப் பார்த்து சிரிக்கத்தான் முடிகிறது.

30-3-1995 அன்று நடைபெற்ற சட்டப் பேரவை நடவடிக்கைகளைப் பார்த்தால் எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் உட்பட காங்கிரஸ் உறுப்பினர்கள் அவைக் காவலர்களால் தூக்கிச் செல்லப்பட்டு வெளியேற்றப்பட்டனர். இன்னும் வேடிக்கை என்னவென்றால், பேரவைத் தலைவர் காங்கிரஸ் உறுப்பினர்களை வெளியேற்றும்படி ஆணையிட்ட போது அவையிலே எதிர்க்கட்சித் தலைவரே இல்லை. அவர் தனது அறையிலிருந்து அப்போதுதான் அவைக்கு வந்து கொண்டிருந்தார். ஆனால் அவரையும் காவலர்கள் தூக்கிச் சென்று வெளியேற்றினர். அன்றையதினம்தான் நிதிநிலை மீது எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றுவதாக இருந்தது. அதனை தவிர்ப்பதற்காகத் தான் தன்னை அவ்வாறு வெளியேற்றியதாக, செய்தியாளர்களிடம் தெரிவித்த எஸ்.ஆர். பாலசுப்ரமணியம்

அவர்களும் மற்ற எதிர்க்கட்சிகளும் சேர்ந்து ஆளுநரைச் சந்தித்து இதுகுறித்து புகார் கூறினர்.

உடன்பிறப்பே,

நான் தொடக்கத்தில் கூறியவாறு தேர்தல் கூட்டணி பற்றிய பேச்சுவார்த்தைகள் வேகமாக நடந்து வரும் நேரத்தில் 1996 தேர்தலுக்கு முன்பு பல அரசியல் கட்சிகளின் நடவடிக்கை குறித்து ஒரு சில விவரங்களை உனக்கு நினைவூட்டிடுவதற்காக இத்தகவல்களைத் தெரிவித்துள்ளேன்.

அன்புள்ள,

மு. க.

(28-02-2001)

2569. பட்டியலிட்ட குற்றங்கள் பறந்த மாயம் என்ன?

உடன்பிறப்பே,

பிப்ரவரி 11, 12, 13 ஆகிய நாட்களில் தென் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடம் திறந்திடவும், தியாக சீலர் கக்கன் அவர்களின் மணி மண்டபம் திறந்திடவும், நாங்குநேரியில் சர்வதேச அளவிலானதும் சிறப்புப் பொருளாதார பகுதியாக அறிவிக்கப்பட்டதுமான இரண்டாயிரத்து ஐநூறு ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட மாபெரும் தொழில் வளாகத்திற்கான அடிக்கல் நாட்டிடவும் நான் திருநெல்வேலியில் முகாமிட்ட போது பாளையங்கோட்டை நகராட்சி முன்னாள் தலைவர் தம்பி சுப. சீதாராமன் என்னிடம் 24 பக்கங்கள் கொண்ட ஒரு சிறிய நூலைத் தந்தார்.

படித்துப் பார்த்தேன் - அந்நூலில் உள்ள "பொன்மொழிகள்" தான் நான் தொகுத்தளித்துள்ள இந்தக் கடிதமாகும். நூலின் பெயர் என்ன? நூலை வெளியிட்டவர்கள் யார் என்பதை; சற்று சுவைபட இக்கடிதத்தின் இறுதியில் தெரிவிக்கிறேனே!

இப்போது பொன்மொழிகளை மட்டும் நீயும் நானும் படிப்போம்.

"அதி.மு.க. அரசு, எதையெதையோ சாதித்துவிட்டது போலவும், தமிழக மக்களின் நல்வாழ்வில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டது போலவும், விளம்பரங்களும், பிரச்சாரங்களும் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் இந்த ஆட்சியின் செயல்பாடுகளையும், நடவடிக்கைகளையும் கூர்ந்து நோக்கும்போது, இந்த ஆட்சியின் சாதனைகள் (?) யாவும் தமிழக மக்களின் வேதனைக்கு சாட்சியாகவே உள்ளன.

* ஜனநாயக உரிமைகள் பறிப்பு
* பத்திரிகை சுதந்திரம் பறிப்பு
* தொழிலாளர், விவசாயிகளின் நலனுக்கு எதிரான நடவடிக்கைகள்
* விலைவாசி உயர்வு
* சட்டம் ஒழுங்கு சீர்குலைவு, லாக்கப் மரணங்கள்
* பகட்டு அரசியல்
* எங்கும் ஊழல், எதிலும் ஊழல் என ஜனநாயக விரோத, மக்கள் விரோத அரசாகத்தான் அ.தி.மு.க. அரசு செயல்பட்டு வருகிறது.

'தொழிலாளர்களின் தோழனாக செயல்படும்' என்று வாக்குறுதி அளித்த இந்த அரசின் செயல்பாடுகள் அனைத் தும், தொழிலாளர்களின் நலன்களுக்கு விரோதமான நிலையிலேயே உள்ளது என்பதைப் பார்க்க முடிகிறது.

'வன்முறைகளும்', 'அச்சுறுத்தல்களும்' ஒடுக்கப்படும் என்றும், தொழில் அமைதியை காப்பதற்கு உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் கூறும் இந்த அரசின் அறிவிப்பு தொழிலாளர்கள் தங்கள் நியாயமான கோரிக்கைகளுக்காக போராடினால்கூட 'குண்டாந்தடி' கொண்டு அடக்கப்படுவார்கள் என்ற எச்சரிக்கையே யாகும்.

தமிழகத்தில் விவசாயத்திற்கு அடுத்த தொழிலான கைத்தறி தொழிலில் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான நெசவாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகிறார்கள். கைத்தறி நெசவாளர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காண்பதாக கூறிய அ.தி.மு.க. அரசு, அவர்களுக்கான பாதுகாப்பு சட்டத்தைக்கூட அமல்படுத்தாமல் அசட்டை செய்து வருகிறது.

அமைப்பு ரீதியாக திரட்டப்படாத தொழிலாளர்களின் நிலையோ, ஏறிவரும் விலைவாசி உயர்வாலும், மக்களைத் தாக்கும் மத்திய மாநில அரசுகளின் கொள்கைகளாலும் பெரிதும் சீரழிக்கப்பட்டு மிகவும் அவலமாக உள்ளது. ஆனால், மாநில அரசிடம் இப்பகுதி தொழிலாளர்களின் துயர் துடைக்கத் திட்டங்கள் உண்டா என்றால் இல்லை என்பதே நிதர்சன உண்மை.

நல்ல இலாபத்துடன் இயங்கி வரும் அரியலூர் சிமெண்ட் ஆலையை தனியாருக்குத் தாரை வார்க்கும் முயற்சியில் அ.தி.மு.க. அரசு ஈடுபட்டுள்ளது.

கூட்டுத் துறையில் இயங்கி வரும் 'ஸ்பிக்' நிறுவனத்தில் தமிழக அரசுக்கு அதிகமான பங்குகளும், ஏ.சி. முத்தையாவிற்கு குறைந்த பங்குகளும் இருந்து வந்தன. ஆனால் அ.தி.முக. ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததும், தமிழக அரசுக்குச் சொந்தமான பங்குகளை குறைந்த விலைக்கு ஏ.சி. முத்தையாவிற்கு விற்றதுடன், சேர்மன் பதவியையும் அவரது குடும்பத்திற்கே விட்டுக் கொடுத்தது. இதனால் அரசுக்கு ஏற்பட்ட நஷ்டம் 40 கோடி இருக்கலாம் என்று மதிப்பிடப்படுகிறது. மிக நல்ல இலாபத்துடன் இயங்கி வரும் இந்நிறுவனத்தின் மீதான அரசின் கட்டுப்பாடு அனைத்தையும் தனி ஒரு முதலாளிக்கு தாரை வார்த்துள்ளது தமிழக அரசு...

இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிகப்படியாக சுமார் 45 ஆயிரம் சிறு தொழில்கள் மூடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஏற்கெனவே இருந்த நிலவரியினை மும்மடங்காக அ.தி.மு.க. அரசு உயர்த்தியுள்ளது.

மத்திய அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச கூலிக்கும் குறைவாக ரூ. 19 என தமிழக அரசு விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச கூலியை நிர்ணயித்துள்ளது. இதுவும் தொழிலாளர்களுக்கு கிடைக்கச் செய்ய எவ்வித நிர்வாக உத்தரவாதமும் இல்லை.

மூன்று இலட்ச ரூபாய்க்கு மேல் விற்பனையாகும் ஓட்டலுக்கு விற்பனை வரி விதித்ததன் மூலம், ஓட்டல் பண்டங்களின் விலை உயர்ந்து கணிசமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழக மக்களின் அத்தியாவசிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாத இந்த அரசு வீண் விளம்பரங்களிலும், பகட்டு ஆர்ப்பாட்டங்களிலும் மக்களின் கவனத்தை திசைதிருப்ப முயலுகிறது.

முதலமைச்சர் எங்கு சென்றாலும் 1000 கார்களில் பவனி, பாதுகாப்பு என்ற பெயரில் ஆயிரக்கணக்கான போலீஸ்காரர்கள் குவிப்பு; முதலமைச்சர் செல்லும் பாதையில் சில மணி நேரங்களுக்கு

முன்பாகவே போக்குவரத்து ரத்து செய்யப்பட்டு, மக்கள் படும் அவதி - இவை யாவும் மக்களைப் பற்றி அக்கறையில்லாத ஒரு அரசின் நடவடிக்கையாகவே உள்ளன.

சென்னை நகர போலீசில் கணிசமான பகுதியினர் முதல் அமைச்சரின் பாதுகாப்புக்கு மட்டுமே பயன்படுத்தப் படுவதும் இதன் விளைவாக நகரில் சட்டம் ஒழுங்கு நிலைமை மிகவும் சீர்குலைந்து, திருட்டு, கொள்ளை, கற்பழிப்பு ஆகிய நிகழ்ச்சிகள் அதிகரித்து வருவதும் அன்றாட நிகழ்ச்சிகளாக மாறி விட்டன.

அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா அவர்கள் தமிழக அரசியலில் புதியதொரு கட்-அவுட் கலாச்சாரத்தையே உருவாக்கியுள்ளார் என்பது பல்வேறு பத்திரிகைகளிலும் கடுமையான விமர்சனத்துக்குள்ளான பிரச்சினையாகும்.

மதுரையில் நடைபெற்ற 'வெற்றி மாநாட்டில்' மட்டும் ஜெயலலிதா அவர்களின் 100க்கும் மேற்பட்ட கட்-அவுட் டுகள் வைக்கப்பட்டதும், அவற்றில் சில மதுரை மீனாட்சியம்மன் கோபுர அளவிற்கு உயர்ந்து நின்றதும், இதற்கு மட்டுமே சில கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டதும் அவர்களின் விளம்பர அரசியலுக்கும், பகட்டு ஆர்ப்பாட்டத்திற்கும் மிகச் சிறந்த உதாரணங்களாகும்.

சென்னையில் சிறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்குக் கூட பல இலட்சக் கணக்கில் செலவு - வண்ண வண்ண போஸ்டர்களும், வானுயர கட்-அவுட்களும் வைக்கும் ஆடம்பரமான விளம்பர ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

தமிழகத்தில் கடுமையான வறட்சி என்று கூறி பழனி நாடாளுமன்றத் தேர்தலை தள்ளி வைத்த முதல்வர், அடுத்த சில தினங்களில் ஊட்டி செல்வதும், அவ்வாறு சென்ற முதல்வரை வரவேற்க அரசு பணத்திலிருந்து இலட்சக்கணக்கில் செலவு செய்து வரவேற்பு வளைவு களும், கட்-அவுட்களும், இதர ஏற்பாடுகளும் செய்ததும், மக்களின் நலனைப் பற்றி சிறிதும் கவலை இல்லாத முதல்வரின் போக்கிற்கு மேலும் ஒரு உதாரணமாகும்.

ஜெயலலிதா அவர்களின் விளம்பர அரசியலுக்கு நூற்றுக்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் கும்பகோணம் மகாமகத் திருவிழாவில் பலியான சம்பவமும் வேதனை நிறைந்த நிகழ்ச்சியாகும். இலட்சக் கணக்கானோர் நீராட வரும் ஒரு நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கான போலீசார் ஒரு தனி நபரின் பாதுகாப்புக்கு நிறுத்தப்படுவதும்,

அதன் விளைவாக நடைபெற்ற விபரீத விபத்தும் முழுக்க முழுக்க ஜெயலலிதா அவர்களையே சாரும்.

இத்தகைய ஆடம்பர விளம்பரங்களை செய்து வரும் அ.தி.மு.க. அரசு மற்ற கட்சிகளின் இயக்கங்களை தடுத்து வருகிறது.

அ.தி.மு.க. அரசின் மீது அதிருப்தியுறும் மக்கள் பகுதியினர் மற்றும் ஜனநாயக அமைப்புகள் தங்களது எதிர்ப்பினைக் காட்ட குரல் எழுப்பும் போதெல்லாம் அவர்களின் குரல்வளையை நெரிக்க முயலுகிறது இந்த அரசு.

எதிர்க்கட்சிகளின் நடவடிக்கைகளை ஒடுக்க அ.தி.மு.க. அரசு கொண்டு வந்துள்ள மற்றொரு சட்டம் 'பொதுச் சொத்துக்கு நஷ்ட ஈடு கோரும் சட்டம்' ஆகும். இந்தச் சட்டம் நேரடியாக ஜனநாயக இயக்கங்களை ஒடுக்கும் நோக்கம் கொண்டது.

ஜெயலலிதா அவர்கள் 'சட்டமன்றத்தில் எதிர்க்கட்சிகளுக்கு போதுமான பலமில்லாத நிலையில், அரசின் குறை பாடுகளை பத்திரிகைகள் சுட்டிக்காட்ட வேண்டும்' என்றும், எதிர்க்கட்சிகளின் பணியினை பத்திரிகைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறினார். ஆனால் இந்த வாக்குறுதி கொடுத்த சில தினங்களிலேயே தனது சுய ரூபத்தை வெளிப்படுத்தினார்.

'தராசு' பத்திரிகை, தன்னை விமர்சித்தது என்பதற்காக அ.தி.மு.க. ரௌடிக் கும்பல் ஒன்று அந்த அலுவலகத்தை அடித்து நொறுக்கியதுடன், அலுவலகத்தில் பணி புரிந்து வந்த இரு ஊழியர்களைக் கொலை செய்தது. சமீபத்தில் இந்த பத்திரிகையின் ஆசிரியரே இந்தக் கொலைக் குற்றத்தில் அ.தி.மு.க. அமைச்சர் ஒருவரும், அவரைச் சார்ந்த குண்டர்களும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று நீதிமன்றத்தில் குற்றம் சுமத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. நக்கீரன் பத்திரிகையினை தொடர்ந்து தாக்கியது மட்டுமல்ல; இந்த அலுவலகத்திற்கு மின்சாரம் வெட்டு, பத்திரிகையின் பதிப்பாளர் போலீஸ் தாக்குதலுக்கு ஆளாகி உயிர் நீத்த கொடுமை என அடுக்கடுக்கான கொடுமைகளை சந்தித்து வருகிறது இந்தப் பத்திரிகை.

அ.தி.மு.க. அரசின் பலகீனத்தைச் சுட்டிக்காட்ட முனைந்த குமுதம் பத்திரிகையினையும் விட்டு வைக்க வில்லை ஆளுங்கட்சியினர்.

சட்டமன்ற நடவடிக்கைகளை விமர்சித்து எழுதினார் என்பதற்காக இல்லஸ்டிரேடட் வீக்லியின் நிருபர் திரு. சுனில் என்பவரை சட்டமன்றத்தில் கூண்டில் ஏற்ற ஆணை பிறப்பிக்கப்பட்ட இப்பிரச்சினை உச்ச நீதி மன்றத்திற்கும், சட்ட மன்றத்திற்கும் இடையிலான பெரும் பிரச்சினையாகவும் ஆக்கப்பட்டது.

மாலைமுரசு, முரசொலி, சாவி ஆகிய பத்திரிக்கைகளின் ஆசிரியர்களையும் கைது செய்து தனது பழி தீர்க்கும் போக்கினை வெளிப்படுத்தியது இந்த அரசு. இந்தியா முழுவதும் உள்ள பத்திரிகையாளர்களும், ஜனநாயக இயக்கங்களும் அரசின் இத்தகைய போக்கினை கடுமையாக விமர்சித்தன.

சட்டமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கும் சூழ்நிலையில் அந்த ஓரிரு எதிர்க் கட்சித் தலைவர்கள், அரசின் நடவடிக்கைகளை சட்டமன்றத்தில் விமர்சிப்பதைக்கூட இந்த அரசால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

திரு. பண்ருட்டி ராமச்சந்திரன் பேச எழுந்தபோது அ.தி.மு.க. ஆதரவு எம்.எல்.ஏ.வான தாமரைக்கனி அவரை தாக்கியதும், அதற்கு முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் "லேசாக தட்டினார்" என்று கேலிக் கூத்தான ஒரு அறிக்கையினை விடுத்ததும், யாவரும் அறிந்த விஷயமே.

தமிழக கிராமங்கள் அனைத்தும் சரியான சாலை வசதி யின்றி, குடிநீர் வசதியின்றி, எரியாத சாலை விளக்குகளுடன் காட்சி அளிக்கின்றன. அம்மக்கள் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். இவற்றின் வளர்ச்சிக்கு திட்டமிடவும், கண்காணிக்கவும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி மன்றங்களும் செயல்படவில்லை. இதனால் இந்த அமைப்புகளுக்கு தற்போது செலவிடப்படும் தொகையும் அதிகாரிகளாலும் காண்ட்ராக்டர்களாலும் ஆளுங்கட்சியினராலும் கொள்ளை அடிக்கப்படுகிறது.

ஆனால், உள்ளாட்சி மன்றங்கள் தேர்தல்களை உடனடியாக நடத்துவதாகக் கூறிய அ.தி.மு.க. அரசோ, தொடர்ந்து இம்மன்றங்களின் தேர்தல்களை பல சாக்குபோக்குகளைக் கூறி நடத்த மறுத்து வருகிறது.

ஏற்கனவே ஆம்னி பஸ்களுக்கு ஒரு சீட்டுக்கு மூன்று மாதத்திற்கு 2000 ரூபாய் வீதம் வரி விதிக்கப்பட்டிருந்தது. பஸ் முதலாளிகள் நீதிமன்றத்திற்குச் சென்று இந்த வரியினை 1500 ரூபாயாக குறைத்துக் கொண்டனர். இருந்த போதிலும் அ.தி.மு.க. அரசு ஆட்சிப் பொறுப்புக்கு வந்த வுடனேயே, இந்த வரியினை 500 ரூபாயாக குறைத்து உத்தரவிட்டது. அரசுக்கு வருவாய் இல்லை என்று ஓயாது ஓலமிடும் இந்த அரசு, ஆம்னி பஸ்களுக்கு வரியை குறைத்ததன் காரணமாக அரசுக்கு வர வேண்டிய பல கோடி ரூபாய் பஸ் முதலாளிகளின் பாக்கெட்டிற்கு செல்ல வழி வகுத்தது. இதில் பல கோடி ரூபாய் கைமாறியதாகவும் பேசப்படுகிறது.

அதேபோல, ஏற்கனவே அரசுக்கு சொந்தமாக இருந்த மிகவும் இலாபகரமாக செயல்பட்டு வந்த பீர் ஆலையை அ.தி.மு.க. அரசு தனியாரிடம் ஒப்படைத்துள்ளது.

சத்துணவு திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கு வழங்கும் முட்டைகளை இதுவரை அரசுக்கு சொந்தமான கோழி அபிவிருத்திக்கழகம்தான் சப்ளை செய்து வந்தது. இந்த கழகத்துக்கு தமிழ்நாடு முழுவதும் கிளைகள் இருப்பதால் ஆங்காங்கே சத்துணவு மையங்களுக்கு சேதாரம் இன்றி முட்டைகள் தரப்பட்டு வந்தன.

ஆனால் அ.தி.மு.க. அரசு ஆட்சிக்கு வந்ததும் கோழி அபிவிருத்திக் கழகத்திலிருந்து முட்டை வாங்குவதை நிறுத்தி, ஆந்திராவில் தனியார் முதலாளிகளிடமிருந்து முட்டைகளை வாங்குகிறது. இவ்வாறு வாங்கப்படும் முட்டைகள், குறித்த காலத்திற்குள் கிடைக்காதது மட்டுமல்ல, ஏராளமான முட்டைகள் சேதாரமடைகின்றன. இதிலும் பல லட்ச ரூபாய் கைமாறியதாக பேசப்படுகிறது.

டான்சி என்ற அரசு நிறுவனத்துக்குச் சொந்தமான நான்கு கோடி ரூபாய் பெறுமான நிலத்தை, ஜெயலலிதாவிற்கும் அவரது தோழி சசிகலாவிற்கும் சொந்தமான ஜெயா பப்ளிகேஷன்ஸ் என்ற நிறுவனம் ஒன்னேமுக்கால் கோடி ரூபாய்க்கு வாங்கியிருப்பதில்

முறைகேடு நடந்திருப்பதாக தொடர்ந்து எழுப்பப்படும் குற்றச்சாட்டுகளுக்கு முதலமைச்சர் எந்தவித திருப்திகரமான பதிலும் அளிக்கவில்லை.

தமிழகத்தில் உள்ள ஜனநாயக சக்திகளும், எதிர்க் கட்சிகளும், சகல பகுதி மக்களும் ஒன்றிணைந்து வலுவான போராட்டத்தினை நடத்துவதன் மூலமே இந்த அரசின் மக்கள் விரோத, ஜனநாயக விரோத, எதேச்சாதிகார நடவடிக்கைகளை ஓரளவாவது தடுத்து நிறுத்த இயலும் என மார்க்சிஸ்ட் கட்சி சுட்டிக்காட்ட விரும்புகிறது.

உடன்பிறப்பே,

கடைசி வரியிலிருந்து உண்மையைப் புரிந்து கொண்டிருப்பாய் என கருதுகிறேன். 'அ.தி.மு.க. ஆட்சி மீது ஒரு குற்றப் பத்திரிகை - மக்கள் மன்றத்தில் முன் வைக்கிறது மார்க்சிஸ்ட் கட்சி' என்ற தலைப்பிலே 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலக் குழுவே வெளியிட்ட சிறு நூலிலே உள்ள குறிப்பிட்ட சில பகுதிகள்தான் இவை. இந்த நூலுக்கு அந்தக் கட்சியின் அன்றைய தமிழ் மாநிலக் குழு செயலாளர் திரு. ஏ. நல்லசிவம், எம்.பி., அவர்கள் முன்னுரையும் எழுதிக் கொடுத்துள்ளார். அ.தி.மு.க. அரசின் ஓராண்டு கால முடிவிலே அந்தக் கட்சியின் ஊழல்களையும் முறைகேடுகளையும் தொகுத்தளித்த புத்தகம்தான் இது. அ.தி.மு.க. அரசின் 5 ஆண்டு ஆட்சிக்குப் பிறகு மார்க்சிஸ்ட் கட்சி இப்படியொரு புத்தகத்தை வெளியிட்டிருந்தால் அது எத்தனை பக்கங்கள் கொண்டதாக இருந்திருக்குமோ? ஆனால் இவ்வளவிற்கும் பிறகு அந்தக் கட்சி இப்போது எடுத்துள்ள நிலையையும் எண்ணிப் பார்! நீ எண்ணிப் பார்ப்பதை விட உண்மையான ஒரு மார்க்சிஸ்ட் தோழராவது இதை எண்ணிப் பார்க்க மாட்டாரா என்பதற்காகத்தான் இந்த மடல்!

அன்புள்ள,

மு.க.

01-03-2001

2570. நடந்ததையும் நடப்பதையும் மறக்க முடியுமா?

உடன்பிறப்பே,

அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்றபோது அதனுடைய ஓராண்டு கால வேதனைகள் குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலே வெளியிட்ட நூலிலே உள்ள விவரங்களையெல்லாம் நேற்றைய கடிதத்திலே தொகுத்தளித்திருந்தேன். இன்றைய கடிதம் வேறு ஒரு கோணத்திலே சில பழைய நினைவுகளையும் இன்றைய நிகழ்வுகளையும் கிளறும் வண்ணம் அமைந்துள்ளது என்பதை படித்தறிந்தால் புரிந்து கொள்ள முடியும்.

9-2-1993 அன்று சட்டப்பேரவையில் முதல்வராக இருந்த ஜெயலலிதா காங்கிரஸ் கட்சியிடம் கேட்ட ஒரு கேள்வி!

எங்கள் கட்சியில் கட்டுப்பாட்டை ஒருவர் மீறினால் அவரை வெளியேற்றும் தைரியம் எங்களுக்கு இருக்கிறது. காங்கிரஸ் கட்சியில் கட்டுப்பாட்டை மீறுபவர்களை வெளியேற்றும் தைரியம் அவர்களுக்கு இருக்கிறதா?

மீண்டும் 19-3-1993இல் சட்டமன்றத்தில் ஜெயலலிதா காங்கிரஸ் பற்றி உதிர்த்த வாசகம் இதோ!

“எங்களோடு வர வேண்டுமென்று விரும்புகிறவர்கள்தான் எங்களுக்குப் பின்னால் வருகிறார்கள். இப்போது பின்னால் வந்து கொண்டிருந்த ஒரு எக்ஸ்டிரா லக்கேஜை வேண்டாமென்று நாங்கள் கழற்றி விட்டோம்”

எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு. எஸ்.ஆர்.பால சுப்ரமணியம் அவர்களைப் பற்றி பேரவையிலே 19-4-1995 அன்று மிகுந்த கண்ணியத்தோடு உதிர்த்த பொன் மொழிகள் என்ன தெரியுமா?

“விதிகள் எல்லாம் பேரவைத் தலைவருக்கு தெரியாததைப்போல எதிர்க்கட்சித் தலைவர் நீண்டதொரு விளக்கத்தைக் கொடுத்துக் கொண்டிருப்பது இந்த அவையின் நேரத்தை வீண் அடிப்பதாகும். ஒரு எதிர்க்கட்சித் தலைவர் நடந்து

கொள்ள வேண்டிய ஒரு dignified (டிக்னிபைட்) முறை, கண்ணியம் அவரிடத்தில் காணப்படவில்லை. அவர் இப்போது மட்டுமல்ல, கடந்த இரண்டாண்டு காலமாகவே அப்படித்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். அவர் பேசிய பேச்சுக்களுக்கு எத்தனையோ விபரீத விளைவுகள் இங்கே ஏற்பட்டிருக்க வேண்டும். நான் மட்டும் எங்கள் உறுப்பினர்களை கட்டுப்படுத்தவில்லை என்றால் சட்டப்பேரவையே ஒரு ரணகளமாக மாறியிருக்கும்.

இது மாத்திரமல்ல, 2-4-1993 அன்று அதே பேரவையிலே முதல்வர் ஜெயலலிதா உதிர்த்த சில வாசகங்கள் :-

“காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும், பொறுப்பான பதவியில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரும், வேறு எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் சட்டப் பேரவையின் விதிகளுக்கே ஒரு அர்த்தம் இல்லாமல் செய்து கொண்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே தினந்தோறும் இந்த விதிகளை மீறி முரணாகத்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். என்னைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் நடந்து கொண்ட விதத்தை விட பரிதி இளம்வழுதியின் செயல்பாடுகள் மோசமாகப் போய்விடவில்லை”

மத்திய அரசிலே நிதி அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த திரு. ப.சிதம்பரம் அவர்களைப் பற்றி ஜெயலலிதா 6-2-98 இல் எத்தகைய பண்பார்ந்த வார்த்தைகளைச் சொன்னார் என்பதையும் குறிப்பிடுகிறேன்.

“உலகத்திலேயே தான் மட்டும்தான் பெரிய புத்திசாலி என்று தம்பட்டம் அடித்துக்கொள்கிறார் நிதியமைச்சர் சிதம்பரம். சிதம்பரம் நிதியமைச்சரான பிறகு 130 கோடி ரூபாய் இந்தியன் வங்கி மோசடி நடந்தது. இந்த சாதனையைத்தான் கண்டோம். சிதம்பரம் நிதியமைச்சரான பிறகுதான் இந்தியா பொருளாதாரத்தில் வீழ்ச்சி அடைந்தது. முன் எப்போதும் இல்லாத அளவிற்கு ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி அடைந்துள்ளது. ரூபாயின் மதிப்பு மட்டுமா வீழ்ச்சி அடைந்தது? கடந்த 20 மாத கால ஆட்சியில் நமது நாட்டின் மதிப்பும் மரியாதையும் சேர்ந்து வீழ்ச்சி அடைந்து விட்டது.

ஜெயலலிதாவின் திருவாசகங்களை இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன். அவர் அப்போது பிரதமராக இருந்த திரு. நரசிம்மராவ் அவர்களைப் பற்றியும், ஆளுநராக இருந்த திரு.சென்னா ரெட்டி அவர்களைப் பற்றியும், மத்திய அமைச்சராக தற்போதும் இருக்கும்

திரு.பெர்னாண்டஸ் அவர்களைப் பற்றியும் கூறியவைகளை இங்கே நான் குறிப்பிடவில்லை.

உடன்பிறப்பே,

ஜெயலலிதாவைப் பற்றி இதோ த.மா.கா. தலைவரும், அதன் முன்னணியினரும் கூறிய கருத்துக்களையும் படித்துப் பார்! இந்த நேரத்தில் மறுபடியும் ஒருமுறை அவற்றை ஞாபகப்படுத்திக் கொள்வது தவறல்ல என்பதால் எழுதுகிறேன். காரைக்குடியில் 17-4-96 அன்று த.மா.கா. தலைவர் திரு. மூப்பனார் ஒரு கூட்டத்தில் பேசியது:-

அ.தி.மு.க.வுடன் கூட்டணி சேர்வது தற்கொலைக்குச் சமம். உயர்ந்த "அறிவுத் திறன்" உடையவர்கள் அ.தி.மு.க.வுடன் கூட்டணி சேர வேண்டும் என்றார்கள். போராடிப் பார்த்தேன், முடிய வில்லை. எனவே தமிழர்களின் தன்மானம் காக்கத் தமிழ் மாநிலக் காங்கிரசைத் தொடங்கினேன்

அது மட்டுமல்ல, இதோ 18-4-1996 அன்று மதுரையிலே நடைபெற்றக் கூட்டத்திலே திரு.மூப்பனார் அவர்களின் பேச்சிலே ஒரு பகுதி!

"என் நாற்பதாண்டு கால அரசியல் வரலாற்றில் இந்த மாதிரியான அராஜக ஆட்சியை நான் கண்டதே இல்லை. தமிழகத்தில் ஜனநாயகம் குழி தோண்டிப் புதைக்கப்பட்டு விட்டது. இதற்கு இடம் கொடுக்கக்கூடாது.

பெண் ஆட்சி என்றால் மரியாதை கொடுக்க வேண்டியதுதான். ஆனால், இது பெண் ஆட்சியாக இல்லை. பேய் ஆட்சி என்பதால்தான் வேண்டாம் என்கிறோம்.

19-4-1996 அன்று மீண்டும் தென்காசியிலே திரு.மூப்பனாரே கூறுவதையும் படித்துப் பார்!

"மதியாதார் தலைவாசல் மிதியாதே என்று பழமொழி உண்டு. நாங்கள் மதிக்கத் தெரிந்தவர்களுடன் கூட்டணி சேர்ந்து வெற்றி நடை போடுகிறோம். எங்கும் இந்த அ.தி.மு.க. ஆட்சியைத் தூக்கி எறிய வேண்டும் என்ற உணர்வு மேலோங்கி நிற்கிறது. இதுதான் இந்த அ.தி.மு.க. ஆட்சிக்கு அடிக்கப்படும் சாவு மணியாகும்."

24-4-1996 அன்று திருச்சி கூட்டத்தில் திரு.மூப்பனார் பேச்சிலே ஒரு பகுதி :-

"அ.தி.மு.க. அளவுக்கு இனி யாரும் மோசமான ஆட்சி செய்ய முடியாது. நமக்கு நல்வாழ்வு தரும் ஆட்சியாக இருக்க வேண்டும். நிச்சயம் கலைஞர் தலைமையில் நல்லாட்சி அமையும்"

28-4-1996 அன்று திருவண்ணாமலையில் மூப்பனார் பேசியதில் ஒரு பகுதி :

"எம்.ஜி.ஆர். உருவாக்கிய கட்சியை அரைக் காசுக்கும் செல்லாத கட்சியாக இந்த அம்மா உருவாக்கி விட்டார். இப்போது இருப்பது அ.தி.மு.க. அல்ல. அம்மா தி.மு.க.தான்.

உடன்பிறப்பே,

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் திருமதி சோனியாகாந்தி அவர்களையே ஜெயலலிதா சோனியா காந்தி வெளிநாட்டுக்காரர், அவர் இந்தியாவின் பிரதமராகக் கூடாது என்று கூறினார். அதற்குப் பதிலளித்து 3-2-1998 அன்று திரு.மூப்பனார் அளித்த பேட்டியில், சோனியாவை வெளிநாட்டுக்காரர் என்பது பைத்தியக்காரத்தனம் என்று கூறினார்.

மீண்டும் காஞ்சிபுரத்தில் 4-2-1998 அன்று திரு.மூப்பனார் அவர்கள் பேசும்போது தெரிவித்த கருத்துக்களையும் உன் நினைவிற்குக் கொண்டு வருகிறேன்.

"தமிழ்நாட்டில் கலைஞர், ஆட்சிப் பொறுப்பில் உள்ளார். தி.மு.க. ஆட்சி நடக்கிறது. இந்த ஆட்சியில் தவறு ஏதாவது நடந்துள்ளதா? கருணாநிதி ஏன் தவறு செய்யவில்லை? ஏன் இலஞ்சம் வாங்க வில்லை? ஏன் ஊழல் செய்யவில்லை? - என்று வேண்டுமானால் அவரிடம் கோபித்துக் கொள்ளலாம். யார் வரக்கூடாதோ அதை நாம் தவிர்க்க வேண்டும். அவர்களுக்கு அந்தச் சந்தர்ப்பத்தைத் தந்துவிட்டால் நிச்சயம் நாடு கெட்டுவிடும் என்னும் உணர்வு நமக்கு வர வேண்டும். இதில் தவறு வந்துவிடக்கூடாது. நம்முடைய எதிர்காலம் கெட்டால் அடுத்துவரும் நம்முடைய வருங்கால சந்ததியும் கெட்டுப்போய் விடும்.

"மத்தியில் 20 மாதங்களாக ஆட்சி புரிந்த ஐக்கிய முன்னணி அரசும், மாநிலத்தில் ஆட்சி செய்யும் தி.மு.க. அரசும் எவ்வித தவறும் செய்யவில்லை.தவறு செய்யவில்லையே என்றுதான் அவர்கள் மீது நாம் கோபம் கொள்ள முடியும். ஜெயலலிதாவுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனைகள் போதுமானதாக இல்லை. அவரை இன்னும் கடுமையாகத் தண்டிக்க வேண்டும்."

14-2-1998 அன்று சென்னையிலே நடைபெற்ற கூட்டத்தில் திரு. மூப்பனார் கூறிய முக்கிய பகுதி வருமாறு :-

"அ.தி.மு.க. கூட்டணியில் இருப்பவர்கள் பதவி அரிப்பு காரணமாக ஒன்று சேர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தத் தேர்தலில் பெரிய தோல்வியை கொடுக்க வேண்டும்"

5-2-98 அன்று நடைபெற்ற போரூர் கூட்டத்தில் திரு.மூப்பனார் கூறியதாவது :-

"அ.தி.மு.க. அணிக்கு வாக்கு அளித்தால், தவறு இழைத்தவர்களுக்கு ஆதரவு அளிப்பதைப் போல் ஆகிவிடும்; தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். கடந்த தேர்தலில் என்ன காரணங்களைச் சொல்லி, எந்த அடிப்படையைச் சொல்லி வாக்கு கேட்டோமோ அதே காரணங்கள் தற்போதும் அப்படியே உள்ளன. கடந்த தேர்தலைப் போல அல்லாமல், இத்தேர்தலில் நீங்கள் மாற்றி வாக்கு அளித்தால் அதன் அர்த்தம் என்ன தெரியுமா? தப்பு செய்தவர்களுக்கு ஆதரவு, தப்பு செய்யாதவர்களுக்கு ஆதரவு இல்லை என்பதாகிவிடும்.

இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் திரு.சோ.பால கிருஷ்ணன் அவர்கள் இராமநாதபுரத்தில் 6-2-1998 அன்று பேசும்போது தெரிவித்த கருத்தில் ஒரு பகுதி வருமாறு :-

"கருணாநிதி என்னை ஜெயிலில் தள்ளிக் கொடுமைப்படுத்திவிட்டார் என்று ஜெயலலிதா நீலிக் கண்ணீர் வடிக்கிறார். ஜெயலலிதாவை நிரந்தரமாக ஜெயிலில் தள்ள வேண்டும் என்பதற்காகவே தி.மு.க., த.மா.கா. கூட்டணி தொடரும். ஜெயலலிதா போன்ற அராஜக சக்தி அரசியலில் இருக்கும்வரை நமக்கு நிம்மதி கிடையாது. இனிமேலும் அந்த அராஜக சக்தி அரசியலில் தொடர அனுமதிக்க மாட்டோம். காமராஜர், பெரியார், அண்ணா நடத்திய அரசியலை அசிங்கமான அநாகரிக அரசியலாக்கிய ஜெயலலிதா, அரசியலில் நீடிக்க மக்கள் அனுமதிக்கக் கூடாது.

"12-2-1998 அன்று திரு. ப. சிதம்பரம் அவர்கள் பேசி ஒரு நாளிதழில் (தினமணி) வெளிவந்த சில கருத்துக்கள் இதோ :-

"தமிழக மக்களைக் கிள்ளுக் கீரைகளாக, ஏமாளிகளாக நினைத்து ஜெயலலிதா பேசி வருகிறார். இத்தகைய பேச்சுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். ஊழல், அதிகார துஷ்பிரயோக ஆட்சிக்கு கடந்த தேர்தலில் (1996 தமிழக சட்டமன்றத் தேர்தல்)

முற்றுப்புள்ளி வைத்தீர்கள். அதே தீர்ப்பை மக்கள் மீண்டும் அளிக்க வேண்டும்.

ஜெயலலிதா மீது 14 ஊழல் வழக்குகள் நடந்து வருகின்றன. அதில் ஒரு வழக்கில் சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. 28.29 கோடி ரூபாயை தண்டத் தீர்வையாக ஜெயலலிதா திரும்பச் செலுத்த வேண்டும் என்று கூறியிருப்பது தமிழகத்திற்கு எவ்வளவு பெரிய தலைக்குனிவு.

இன்னும் 13 வழக்குகள் நடந்து வருகின்றன. எதுவுமே பொய் வழக்குகள் இல்லை என்று நீதிபதிகள் பூர்வாங்கத் தீர்ப்பு அளித்துள்ளனர். முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவும், அவரது அமைச்சர்களும் விசாரணைக் கைதிகளாகச் சிறையில் இருந்துவிட்டு, ஜாமீனில் வந்து இப்போது தேர்தல் பிரச்சாரம் செய்து வருகின்றனர். இவர்கள் நிரபராதிகளா; குற்றவாளிகளா என்று நீதிமன்றம் தீர்ப்பு அளிக்கும் முன்னர் மக்கள் மன்றத்தில் இவர்களுக்கு என்ன வேலை? 1996 தேர்தலில் அடித்த சவுக்கை தயவு செய்து கீழே போட்டுவிடாதீர்கள். மீண்டும் அடித்தால்தான் அரசியல்வாதி ஒழுக்கமாக இருப்பான். கீழே போட்டுவிட்டால் நேர்மையான, ஒழுக்கமான அரசியல்வாதிகளுக்கும், ஊழல் வாதிகளுக்கும் வித்தியாசம் இல்லாமல் போய் விடும். ஊழல் அரசியல்வாதிகளுக்கு மீண்டும் வாய்ப்பு அளித்துவிட்டால் நாடு பிழைக்காது."

த.மா.கா. வரும் சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.வோடு கூட்டணி வைத்துக்கொள்ள வேண்டுமென்று பரிந்துரை செய்து வருபவர் என்று கூறப்படும் த.மா.கா. சட்டமன்ற உறுப்பினர் திரு.ஞானசேகரனின் சட்டப்பேரவைப் பேச்சிலே (12-8-1996) ஒரு பகுதி :-

"கடந்த கால ஆட்சியில், நீதியும் கெட்டது, நிர்வாகமும் கெட்டது. சட்டம் தன்னுடைய வேலையைச் செய்யாமல், சவக்குழிக்குப் போன கதை நாம் அறிந்த ஒன்று. எங்கு நோக்கினாலும் அல்லி ராணியினுடைய அட்டகாசங்கள், சாகசங்கள் என்ற பெயராலே பரிணமித்துக் கொண்டிருந்த நிலை மாறி, இன்று ரவுடி ராஜ்யங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு துப்பாக்கி குண்டுகள் அவர்கள் மீது பாயத் தொடங்கியிருக்கின்றது என்ற நல்ல செய்தியைக் கண்டு தமிழக மக்கள் மகிழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கடந்த கால ஆட்சியிலே சட்டம் ஏன் தன்னுடைய வேலையைச் செய்யாமல் போனது, ஏன் சட்டம்

கெட்டுவிட்டது என்ற நிலையில், எங்கு பார்த்தாலும் ஒரு அமைதி யின்மை தமிழகத்திலே உலா வந்த நேரத்திலே நாங்கள் எல்லாம் கடந்த காலத்தில் பேசுகின்ற போது எங்களையெல்லாம் குண்டுக்கட்டாக ஃபுட்பாலை உதைப்பார்களே, அதைப் போல உதைத்தோ அல்லது தூக்கியோ வெளியே போட்டார்கள். அந்த நிலையெல்லாம் மாறி இன்று பேசுவதற்கும் சுதந்திரம்; தவறே இருந்தாலும்கூட நீங்கள் தட்டிக் கேளுங்கள்; குட்டிக் கேளுங்கள் என்ற அளவிற்கு நல்ல சுதந்திரம் கிடைத்திருக்கிறது என்பதைக் கண்டு நாங்கள் மகிழ்ந்து கொண்டிருக்கிறோம். சட்டத்திற்கு முன் எல்லோரும் சமம் என்பது உண்மை. அந்த வகையில் இந்த அரசு இன்னும் கொஞ்சம் வேகமாக நடவடிக்கை எடுத்து யாரெல்லாம் தவறு செய்தார்களோ அவர்களையெல்லாம் உடனடியாக சிறைச்சாலைக்குக் கொண்டு வரவேண்டும். நீதி தமிழகத்திலே நிலைநாட்டப்பட வேண்டுமென்று சொன்னால் தவறு செய்த, கொள்ளை அடித்த அந்தக் கொள்ளைக்காரர்கள் உடனடியாக சிறைச்சாலைக்குள் அடைக்கப்பட வேண்டும்”

உடன்பிறப்பே,

இந்தப் பேச்சுக்களின் தொகுப்பையும் இன்றைய நடை முறை நிகழ்வுகளையும் பார்க்கும் உனக்கு வியப்பாக இருக்கலாம். அரசியல் ஒரு சாக்கடை என்று சொன்னவனைத் தேடிப் பார்த்து பாராட்டத் தோன்றலாம். என்ன செய்வது? மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்று விரும்பினால் ஒருசில நிலைமைகளை எதிர்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. நமக்கென்ன என்று இருந்துவிட்டால் நஷ்டம் நமக்கில்லைதான்! ஆனால் மக்களுக்காக உழைக்கப் பிறந்துவிட்டு நமக்கென்ன என்று இருக்க முடியவில்லையே? இந்தக் கருத்துக்களையெல்லாம் நீ படிப்பதோடு நிறுத்திக் கொள்ளாமல் நடுநிலையாளர்கள் மத்தியிலும், பொது மக்கள் மத்தியிலும் படித்துக்காட்டி அவர்களையெல்லாம் உண்மைகளை உணர்ந்து கொள்ளச் செய்வதும் தேர்தல் பணிகளிலே ஒரு பணியாக இருக்கட்டும்.

அன்புள்ள,

மு.க.

(02-03-2001)

2571. ஊரையடித்து உலையில் போட்ட ஊழல் யாகம்?

உடன்பிறப்பே,

ஆலயம் தோறும் சென்று அம்மையார் ஜெயலலிதா, அங்குள்ள அர்ச்சகர்கள் தயவாலோ அல்லது அதிகாரிகளின் ஒத்துழைப்பாலோ யாகங்களை நடத்தி வருகிறார். அந்த யாகங்களின் நோக்கம் ஜெயலலிதா மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டும் என்பது ஒன்று. அவருடைய எதிரிகள் வீழ்த்தப்பட வேண்டும் என்பது மற்றொன்று. இந்தக் குறிக்கோளுடன் கோயில் தவறாமல் யாகம் நடத்தி, குளங்கள் தவறாமல் தீர்த்தமாடி, தன்னால் முடியாத இடங்களில் தனது பகுத்தறிவு பக்தர்களைக் கொண்டு காவடியெடுக்கச் சொல்லி, கப்பறை ஏந்தச் சொல்லி, அங்கப் பிரதட்சணம் செய்யச் சொல்லி, அக்கினிக்குண்டம் இறங்கச் சொல்லி, ஆனமட்டும் பார்க்கிறார் ஆட்சிக்கு வருவதற்கு! ஆட்சிக்கு வருவதற்காகவும், எதிரிகளுக்கு முடிவு கட்டுவதற்காகவும் என்று யாகங்கள் செய்யும் ஜெயலலிதா; ஆட்சியிலே இருந்தபோது செய்த ஊழல் யாகங்கள், உச்சக்கட்ட யாகங்கள்!அந்த ஊழல் யாகங்களைப் பற்றி ஒரு சிறிது பார்ப்போம்!

முதலில்-டான்சி நிலம் சுருட்டிய ஊழல். அது உலகறிந்த ஊழல் எனினும் சற்று விரிவாகப் புரிந்து கொள்வதற்காகத்தான் இந்தக் கடிதம்.

ஜெயா பப்ளிகேஷன்ஸ் என்ற நிறுவனத்தின் பங்குதாரர்கள் ஜெயலலிதாவும் சசிகலாவும் ஆகும். இவர்கள் கிண்டி தொழிற்பேட்டையில் உள்ள அரசுக்குச் சொந்தமான டான்சி பவுண்டரியின் 3 ஏக்கருக்கு மேற்பட்ட நிலத்தையும், அதிலே உள்ள 2698 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள கட்டிடத்தையும் வழிகாட்டி மதிப்பீட்டிற்கு குறைவான விலையில் 29-5-1992 அன்று வாங்கினார்கள் என்பது முதல் குற்றச்சாட்டு.

இதன் மூலம் 3 கோடியே 50 இலட்சத்து 91 ஆயிரத்து 429 ரூபாய் மதிப்புள்ள முறைகேடான அனுகூலத்தை ஜெயலலிதாவும், சசிகலாவும் அடைந்துள்ளனர் என்பது இரண்டாவது குற்றச்சாட்டு.

விற்பனைப் பத்திரத்தை குறைவாக மதிப்பிட்டுப் பதிவு செய்ததின் மூலம் முத்திரை வரி மற்றும் பதிவுக் கட்டணமான 43 இலட்சத்து 9 ஆயிரத்து 474 ரூபாயை அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பது மற்றொரு குற்றச்சாட்டு.

இது குறித்து அரசின் சார்பில் சிறு தொழில் துறைச் செயலாளர் சோசம்மா ஐ.ஏ.எஸ்., அவர்கள் செய்த புகாரின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு 9-7-96 அன்று, முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. 15-11-96 அன்று குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது விசாரணையைத் தாமதப்படுத்துவதற்காகப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

வழக்கு விசாரணையின் போது தனக்குத் தமிழ் மட்டுமே தெரியும் என்பதால் குற்றப்பத்திரிகையைத் தமிழில் மொழி பெயர்த்துத் தரவேண்டுமென்று சசிகலா நீதிமன்றத்தில் தெரிவித்தார். 10-6-99 அன்று குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்ட போது உடல் நலம் பாதிக்கப்பட்டதாகக் கூறி மருத்துவ மனையிலே அனுமதிக்கப்பட்டார் முன்னாள் அமைச்சர் முகமது ஆசிப். இதன் காரணமாக நீதிபதி அவர்களே மருத்துவமனைக்குச் சென்று ஆசிப் மீது குற்றச்சாட்டினைப் பதிவு செய்தார். 5-7-99 அன்று அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை தொடங்கியது. மொத்தம் 27 சாட்சிகள் விசாரிக்கப்படவேண்டும். 25 சாட்சிகளை விசாரித்த நிலையில்தான் ஜெயலலிதாவை இந்த வழக்கிலிருந்து விடுவித்து 13-1-2000 அன்று உயர் நீதிமன்ற நீதிபதி தங்கராஜ் தீர்ப்பு வழங்கினார்.

அந்தத் தீர்ப்பை எதிர்த்துத் தமிழக அரசு 22-1-2000 அன்று உச்சநீதிமன்றத்திலே மேல் முறையீடு செய்தது. அதிலே உச்சநீதிமன்றம் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி தங்கராஜ் அளித்தத் தீர்ப்பு சட்ட விரோதமானது என்று தெரிவித்ததுடன் தனி நீதிமன்றம் இந்த வழக்கை விரைந்து விசாரித்துத் தீர்ப்பளிக்க வேண்டுமென்றும் உத்தரவிட்டது. எனவே 3வது தனி

நீதிமன்றத்திற்கு வழக்கு மீண்டும் வந்தது. வழக்கு விசாரணையில் 3-7-2000 அன்று நீதிமன்றத்தில் ஆஜராகி டான்சி நிலம் வாங்கியது தனக்குத் தெரியாது என்றும், ஒப்பந்தப் பத்திரத்தில் உள்ளது தன்னுடைய கையெழுத்தே அல்ல என்றும் ஜெயலலிதா வாக்குமூலம் அளித்தார்.

இந்த வழக்கு விசாரணையில் ஒரு தகவல்! தலைமைச் செயலாளராக இருந்த திரு.டி.வி. வெங்கட்ராமன் ஜெயலலிதாவை சந்தித்து அரசுக்குச் சொந்தமான சொத்துக்களை முதல்வரோ அவர் சம்பந்தப்பட்ட நிறுவனமோ வாங்குவது பொருத்தமாக இருக்காது என்று கூறியிருக்கிறார். அதனை ஏற்றுக் கொள்ளாமல் ஜெயலலிதா வேகமாகப் பேசி, மற்ற முதல்வர்களிடம் இதுபோலச் சொல்வீர்களா என்று கோபமாகக் கேட்டுள்ளார். விசாரணையில் கூறப்பட்ட இவருடைய சாட்சியத்தைப் பற்றி நீதிபதி தனது தீர்ப்பிலே கூறும்போது "ஜெயலலிதா டான்சி பவுண்டரி சொத்தை தான் பங்குதாராராக உள்ள ஜெயா பப்ளிகேஷன்ஸ் தொடர்ந்து இதைப்பற்றி நீதிபதி தனது தீர்ப்பிலே என்ன குறிப்பிட்டுள்ளார்? சாட்சிகள் அது ஜெயலலிதாவின் கையெழுத்தே என்பதை உறுதிப்படுத்தியுள்ளதாகக் கூறி, ஜெயலலிதாவும், சசிகலாவும் சட்டத்திற்கு விரோதமாக டான்சி சொத்தை குறைந்த விலைக்கு கிரயம் வாங்கவும், மற்ற குற்றங்கள் புரியவும் மற்ற எதிரிகளோடு சேர்ந்து குற்றமுறு சதி செய்திருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நீதிபதி தனது தீர்ப்பிலே, அரசு தரப்பு வழக்கறிஞர் வாதத்தையும் அவர் சுட்டிக் காட்டிய உச்ச நீதி மன்ற தீர்ப்புகளையும் பார்க்கின்றபோது குற்றஞ்சாட்டப்பட்ட ஜெயலலிதா உட்பட்ட எதிரிகள் குற்றமுறு சதியிலே ஈடுபட்டுச் சட்டத்துக்கு விரோதமான காரியங்களை செய்துள்ளார்கள் என்பது இந்த வழக்கிலே விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், எதிரிகளின் செயல்பாட்டிலிருந்தும் சந்தேகத்திற்கு இடமின்றி தெளிவாக நிரூபிக்கப்படுகின்றன என்றும் எதிரியின் வழக்கறிஞர் வாதிட்டது போல யூகம் மற்றும் குழப்பத்தின் அடிப்படையிலே எழுந்த சூழ்நிலை சாட்சியம்தான் இந்த வழக்கிலே இருக்கிறது என்ற வாதம் சரியானதல்ல என்றும் தெளிவாக்கியுள்ளார்.

தொடர்ந்து நீதிபதி தனது தீர்ப்பின் பிற்பகுதியிலே சாட்சியத்தையும், ஆவணங்களையும் வழக்கின் தன்மை சூழ்நிலைகளைப் பார்க்கின்ற போது எதிரிகள் ஜெயலலிதா, டி.ஆர். சீனிவாசன், முகமது ஆசிப், நாகராஜன் ஆகியோர் நோ்மையற்ற உள்நோக்குடன் பொது நலனுக்குத் தொடர்பு இல்லாமலும் பொதுஊழியர் என்ற பதவியை தவறாகப் பயன்படுத்தி உண்மையான சந்தை மதிப்புக்கு மிகக் குறைவாகக் காட்டி முத்திரை தீர்வை, பதிவுக் கட்டணம் ஆகியவற்றைக் குறைத்து ஜெயலலிதாவிற்கும் சசிகலாவிற்கும் சொந்தமான ஜெயா பப்ளிகேஷன்ஸ்க்கு கிரயம் செய்ததின் மூலம் 3 கோடியே 50 இலட்சத்து 91 ஆயிரத்து 429 ரூபாய் மதிப்புள்ள அனுகூலத்தை அடைந்ததின் காரணமாக ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் எதிரிகள் ஜெயலலிதா, டி.ஆர். சீனிவாசன், முகமது ஆசிப், நாகராஜன் ஆகியோர் குற்றம் புரிந்துள்ளார்கள் என்றும், சசிகலா மேற்படி குற்றத்திற்கு உடந்தையாக இருந்தார் என்றும் தீர்மானிக்கப்படுகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இறுதியாக, தனது தீர்ப்புரையில் மூன்றாவது சிறப்பு நீதிமன்ற நீதிபதி அவர்கள் ஜெயலலிதா மீது சுமத்தப்பட்டக் குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகத் தீர்மானிக்கப்படுகிறது என்று கூறி இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவு 120 பி உ/இ 1988 ஊழல் தடுப்புச் சட்டப் பிரிவு 13(2) உ/இ 13(1) (சி) மற்றும் (டி), இந்தியத் தண்டனைச் சட்டம் 409 பிரிவுகளின் கீழான குற்றத்திற்கு மூன்று ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும், அபராதம் பத்தாயிரம் ரூபாயும், கட்டத் தவறினால் மூன்று மாதங்கள் சாதாரண சிறைவாசமும் விதித்தும், 1988ஆம் வருடத்திய ஊழல் தடுப்புச் சட்டப் பிரிவு 13 (2) உ/இ 13 (1) (சி) பிரிவுகளின் கீழான குற்றத்திற்கு மூன்றாண்டுகள் கடுங்காவல் தண்டனையும், அபராதம் பத்தாயிரம் ரூபாயும் கட்டத் தவறினால் மேலும் மூன்று மாதங்கள் சாதாரண சிறைவாசமும் விதித்தும், 1988ஆம் வருடத்திய ஊழல் தடுப்புச் சட்டப் பிரிவு 13 (2) உ/இ 13 (1) (டி) பிரிவுகளின் கீழான குற்றத்திற்கு மூன்றாண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனையும், அபராதம் பத்தாயிரம் ரூபாயும் கட்டத் தவறினால் மேலும் மூன்று மாதங்கள் சாதாரண சிறைவாசமும் விதித்தும், இந்தியத் தண்டனைச் சட்டம் 409வது

பிரிவின் கீழான குற்றத்திற்கு மூன்றாண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனையும் அபராதம் பத்தாயிரம் ரூபாயும், கட்டத் தவறினால் மேலும் மூன்று மாதங்கள் சாதாரண சிறைவாசமும் விதித்து 9-10-2000 அன்று தீர்ப்பளித்தார்.

இது அரசுக்குச் சொந்தமான டான்சியின் நிலத்தை ஜெயா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்திற்கு வாங்கிய வழக்கிலே அளிக்கப்பட்ட தீர்ப்பாகும். அதைப்போலவே அன்றைய தினமே, டான்சிக்குச் சொந்தமான மற்றொரு இடத்தை ஜெயலலிதாவும் சசிகலாவும் பங்குதாரராக உள்ள சசி எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு வாங்கி டான்சிக்கு 66,11,075 ரூபாய் இழப்பு ஏற்படுத்தியது குறித்த வழக்கிலே இதே நீதிபதி நான்கு பிரிவுகளின்கீழ் தலா இரண்டாண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனையும், 5 ஆயிரம் ரூபாய் வீதம் அபராதமும் கட்டத் தவறினால் இரண்டு மாதங்கள் வீதம் சாதாரண சிறைவாசமும் என்று தண்டனை அளித்து தீர்ப்பளித்தார்.

உடன்பிறப்பே,

ஜெயலலிதா மீது இந்த இரு வழக்குகளிலே மாத்திரம் தீர்ப்பு கூறப்படவில்லை. அவர் மீது தீர்ப்பு கூறப்பட்ட மற்றொரு வழக்கைப் பற்றியும் உன்னுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1.11.1991 அன்று அ.தி.மு.க. ஆட்சியிலே கொடைக்கானல் ப்ளசண்ட் ஸ்டே ஓட்டலுக்கு, தரைத்தளம் (Groundfloor) மற்றும் மேலும் ஒரு தளத்துடன் ஓட்டல் கட்டிக் கொள்ள உரிமம் வழங்கப்பட்டது. 29.1.1992 அன்று தரைத்தளத்துடன் மேலும் ஆறு தளங்கள் கொண்ட ஓட்டல் கட்டுவதற்கானத் திருத்தப்பட்ட திட்ட வரைவுகள் ஓட்டல் உரிமையாளர்களால் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்டன. இது கொடைக்கானல் பெருந்திட்ட விதிமுறைகளுக்கு முரணாக இருந்ததால், 7.2.1992 அன்று கொடைக்கானல் நகரியச் செயல் அலுவலரால் அனுமதி மறுக்கப்பட்டது. இதற்கு எதிராக, ஓட்டல்காரர்கள், அரசுக்கு அப்பீல் செய்துகொண்டனர்; கட்டிட விதிகளைப் பெருமளவுக்கு மீறுவதாகத் திட்ட வரைவுகள் அமைந்திருந்ததால், மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென கொடைக்கானல் உள்ளூர் திட்டக் குழுமம், கட்டிடக் கலை மற்றும் நுண்கலைக் குழு,

நகர் மற்றும் ஊரகத் திட்டத் துறை ஆகிய அரசின் அமைப்புகள் குறிப்பிட்டிருந்தன.

மேல்முறையீடு தொடர்பான கோப்பு, அரசின் நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு வந்தபோது, அத்துறையின் அதிகாரிகள் அனைவரும் பல்வேறு விதிமீறல்களைத் தெளிவாகச் சுட்டிக்காட்டி, ஓட்டல்காரர்களின் மேல்முறையீட்டு மனு நிராகரிக்கப்பட வேண்டுமெனக் குறிப்பு எழுதி இருந்தனர். அந்தக் குறிப்பை அப்படியே ஏற்றுக்கொண்டு அன்றைய அத்துறையின் செயலாளர் திரு. பி.சி.சிரியாக் ஐ.ஏ.எஸ்., 24.8.1993 அன்று துறையின் அமைச்சர் செல்வகணபதிக்கு கோப்பை அனுப்பினார். 250 நாட்களுக்கும் மேலாகத் தன்னிடமே கோப்பை வைத்திருந்த அமைச்சர் செல்வகணபதி 5.5.94 அன்று விதிகளிலிருந்து விலக்களித்து, ப்ளசண்ட் ஸ்டே ஓட்டல் திட்ட வரைவுகளுக்கு அனுமதி வழங்கப் பரிந்துரை செய்து நீண்டதொரு குறிப்பை எழுதி அன்றைய முதல்வர் ஜெயலலிதாவிற்கு கோப்பினை அனுப்பினார். ஆட்சேபணைகளைப் பற்றியெல்லாம் எவ்விதக் கவலையும் கொள்ளாமல், கோப்பு அனுப்பப்பட்ட அன்றே, அதாவது 5.5.94 அன்றே முதலமைச்சர் ஜெயலலிதா அனுமதி வழங்கலாம் என்று கையெழுத்திட்டு உத்தரவு பிறப்பித்து விட்டார்.

6.5.94 அன்று கோப்பு, ஆணை வெளியிடுவதற்காகத் துறைக்கு வந்தது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 166-ஆவது பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, தமிழ்நாடு அரசு நடைமுறை விதிகளை வகுத்துள்ளது. அவ்விதிகளில், சட்டத்திற்குப் புறம்பாக முதலமைச்சர், முடிவெடுத்து ஆணையிடும்பொழுது, சட்டத்திற்குப் புறம்பாக ஆணையிட்டுள்ளதைச் சுட்டிக்காட்டி மீண்டும் கோப்பை முதலமைச்சருக்கு அனுப்ப வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

துறையின் செயலாளர் திரு.பி.சி.சிரியாக் 7.5.94 அன்று அமைச்சர் செல்வகணபதியை, கோப்பு மற்றும் புதிதாகத் தயாரிக்கப்பட்ட விவரமான அறிக்கை ஆகியவற்றுடன் சந்தித்து, தனது பலமான ஆட்சேபணைகளைத் தெரிவித்து, கோப்பு அந்த அறிக்கையுடன் மீண்டும் முதலமைச்சர் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படவேண்டும் என்று கோரினார்.

அந்தக் கட்டத்தில்தான், திரு.பி.சி.சிரியாக் மாற்றப்பட்டு, அவரது இடத்தில் திரு எச்.எம்.பாண்டே அவர்கள் 10.5.94 அன்று நியமனம் செய்யப்பட்டார். அவர் நியமனம் செய்யப்பட்டதும், தரைத்தளத்துடன் மேலும் ஆறு தளங்கள் கொண்ட ஓட்டல் கட்டுவதற்கான அனுமதி வழங்கி 13.5.1994 அன்று அரசு ஆணை எண் 126 என்பது வெளியிடப்பட்டது.

பின்னர் பழநிமலைப் பாதுகாப்புக் கவுன்சில் என்ற அமைப்பு சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. 10.4.1995 அன்று உயர்நீதிமன்றம், ஏற்கனவே கொடைக்கானல் நகரியம் அங்கீகாரம் செய்து கொடுத்தத் திட்ட வரைவுகளை மீறிக் கட்டப்பட்ட ஓட்டல் பகுதிகளை இடித்துத் தள்ளவேண்டும் என்று தீர்ப்பளித்ததுடன்,

"சட்டத்தின் நடைமுறையிலிருந்துச் சட்டத்தை உடைப்பதற்கு அரசு விதிவிலக்கு அளித்துள்ளதானது, கட்டிலின் அளவுக்கு ஏற்ப மனிதனின் அளவை வெட்டுவது போன்றது ஆகும் (TN Government ad exempted the law-breaker from the operation of the law, whc would tantamount to cutting a man to the size of a cot) என்று கடுமையாகத் தீர்ப்புரைத்தது.

அந்தத் தீர்ப்பில் மேலும், இந்த வழக்கின் தீர்ப்பை முற்றாக்குவதற்கு முன்பாக திருவள்ளுவர் சொன்ன அறிவு செறிந்துள்ள கருத்தை அரசுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்

சட்டத்தை உடைப்பவர்க்குச் சட்டத்தின் செயலாக்கத்தில் இருந்து, அரசு விலக்களித்துள்ள இந்தச் செயலால் ஏற்படும் ஆபத்தான விளைவுகள் பற்றி இந்த நீதிமன்றம் கருத்துரைக்க வேண்டியதில்லை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்தக் குறளின் வாயிலாக அதைப்பற்றித் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார் என்று இடித்துரைக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு, அனுமதி வழங்கிய 13.5.1994 நாளிட்ட அரசாணையையும், 6.12.94 அன்று வெளியிட்ட அரசாணையையும் ரத்து செய்தது.

உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு உச்சநீதிமன்றத்திலும் உறுதி செய்யப்பட்டது.

சிறப்பு நீதிமன்றத்தில் இது குறித்த வழக்கு விசாரிக்கப்பட்டு 2-2-2000 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. தீர்ப்பில் பொது நலன் ஏதுமின்றி, சட்ட விதிகளை மீறி, உள்நோக்கத்தோடு ஓட்டலில் கூடுதல் மாடிகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டிருப்பது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்று நீதிபதி தெரிவித்தார். கூடுதல் மாடிகள் கட்டுவதற்கு அனுமதி அளிக்கக் கூடாது என்று அரசு செயலாளர் பி.சி. சிரியாக் ஆட்சேபணை தெரிவித்திருந்தார். ஆனால் சிரியாக்கை மாற்றி விட்டு அந்த இடத்தில் இந்த வழக்கின் மூன்றாவது எதிரியான பாண்டேயை ஜெயலலிதா நியமித்துள்ளார். இச்செயல் அவர் நேர்மையற்ற முறையிலே செயல்பட்டிருப்பதை நிரூபிக்கின்றது என்றும் நீதிபதி தனது தீர்ப்பிலே கூறியுள்ளார்.

சந்தர்ப்ப சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு பார்க்கும் போது குற்றஞ் சாட்டப்பட்ட ஐந்து பேரும் ஒருவரோடு ஒருவர் கூட்டுச்சதி புரிந்து ஊழல் மற்றும் கிரிமினல் குற்றங்கள் புரிந்ததை அறிய முடிகிறது. உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம் தெரிவித்த பலத்த கண்டனத்தையும் மீறி பொதுநலனை கருத்திற்கொள்ளாமல் இந்த வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட பொது ஊழியர்கள் குற்றம் புரிந்துள்ளனர். செய்த குற்றத்தை மறுத்து அவர்கள் கூறும் காரணம் சாத்தான் வேதம் ஓதுவது போல உள்ளது. எனவே இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஐந்து பேரும் கூட்டு சதி புரிந்து ஆவணங்களை திருத்தி (falsification of records) ஊழலில் ஈடுபட்டுள்ளனர் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்று நீதிபதி தெரிவித்து தண்டனை வழங்கியிருக்கிறார்.

இந்திய தண்டனைச் சட்டம் 120(பி) - சதி செய்தல் - இந்தச் சட்டத்தின் கீழ் குற்றம் நிரூபிக்கப்பட்டதால் ஜெயலலிதா, செல்வகணபதி உட்பட ஐந்து பேருக்கு ஓராண்டு கடுங்காவல் தண்டனையும், ஆயிரம் ரூபாய் அபராதமும், ஊழல் தடுப்புச் சட்டம் 13(2) உடன் 13(1), (டி) - பொது ஊழியர் தவறாக நடத்தல் - இதில் குற்றம் நிரூபிக்கப்பட்டதால் ஜெயலலிதா, செல்வகணபதி,

பாண்டே ஆகியோருக்கு ஓராண்டு கடுங்காவலும், அபராதம் ஆயிரம் ரூபாயும் விதித்தார். இந்தத் தீர்ப்பின் எதிரொலியாகத் தான் அ.தி.மு.க. வில் உள்ள வன்முறையாளர்கள் ஊரெங்கும் பேருந்துகளைக் கொளுத்தியும், உடைத்தும் தர்மபுரி மாவட்டத்தில் கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்து மாணவிகள் மூவரை மலர்களைக் கருக்குவது போலக் கொளுத்திக் கருக்கினர்.

உடன்பிறப்பே,

தனி நீதிமன்றத்தால் தீர்ப்புக் கூறப்பட்ட மூன்று வழக்குகளைப் பற்றிய விவரங்களை மட்டும் இந்தக் கடிதத்திலே குறிப்பிட்டுள்ளேன். மற்றவை அடுத்து வரும் மடல்களில்!

அன்புள்ள,

மு.க.

03-03-2001

2572. பணப்புழக்கம் இல்லையெனும் பசப்புப் பிரச்சாரம்!

உடன்பிறப்பே,

இஃதோர் நீண்ட கடிதம். பொறுமையாகப் படித்திடல் வேண்டும்.

கழக ஆட்சியிலே பணப்புழக்கம் இல்லை என்ற ஒரு குற்றச்சாட்டை ஒருசிலர் செவிவழிச் செய்தியாக, Wisper Propaganda என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே அதுபோலத் திட்டமிட்டப் பிரச்சாரமாகத் தொடர்ந்து செய்து கொண்டு வருகிறார்கள். படித்தவர்களும், சில பத்திரிகையாளர்களும்கூட இந்தப் பிரச்சாரத்தை நம்பிவிடுகிறார்கள் என்பதுதான் வேதனையான வேடிக்கை. இப்படி நம்பிவிட்டவர்களைப் பார்த்து யார் சொன்னது இப்படிப்பட்டக் குற்றச்சாட்டை என்று கேட்டால், யாரோ சிலர் பேசிக் கொள்கிறார்கள் என்ற பதில்தான் வருகிறது.

யாரோ சிலர் ஏன் இப்படிச் சொல்கிறார்கள், ஏன் இப்படிப்பட்ட பொய்யான குற்றச்சாட்டைப் பரப்புகிறார்கள், ஏன் இல்லாத ஒன்றை இருப்பதுபோல இட்டுக் கட்டி எல்லோரையும் ஏமாளிகளாக்க முயற்சிக்கிறார்கள், ஏன் மாயமானைத் துரத்திப் பிடிக்க முயல்கிறார்கள் என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்த்தால்தான் உண்மை விளங்கும். பொய்மைக்குக் கவசம் போட்டுவிட்டதாலேயே அது உண்மையாகிவிடுமா? உண்மை ஊமையாகிவிடுமா?

இந்தப் பிரச்சாரத்தைத் தொடங்கி வைத்தவர்கள் அரசியலை - மக்களுக்குப் பணியாற்றும் வாய்ப்பெனக் கருதிடாமல், தொழிலாகக் கருதுபவர்கள், ஆதிக்க சக்திகள், நெல்லுக்கு இறைத்த நீரை முழுக்க முழுக்க புல்லுக்கே கொண்டு சேர்த்தவர்கள், ஊரை அடித்து உலையிலே போட்டுக் கொண்டவர்கள், ஊழலையே வாழ்க்கை நெறியாகக் கொண்டவர்கள், மீண்டும் ஆட்சிக்கு

வந்து ஆட்டம் போடலாம் என்று பகல் கனவிலே மிதந்து கொண்டிருப்பவர்கள்தான். அவர்கள் தொடங்கி வைத்த இந்தப் பிரச்சாரம் இது உண்மையாக இருக்குமோ என்கிற அளவுக்கு பரவியிருக்கிறது. பொய், புகை போன்றது; வேகமாகப் பரவிடும் தன்மை அதற்குண்டு; காற்று வீசத் தொடங்கினால் வந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும்.

இருட்டில் பரப்பப்படும் இந்தப் பிரச்சாரம் பொய்யானது; போலியானது; மாயமானது; மயக்கம் தருவது என்பதை வெளிச்சத்தைப் பாய்ச்சி, உண்மை விபரங்களை உரக்கச் சொல்லி ஊருக்கு விளக்கிட வேண்டியதும், சந்தேகத்தைச் சாய்த்திட வேண்டியதும் நமது பொறுப்பாகும்.

அனுதாப அலையால் அம்மையார் அரியணையிலிருந்த அந்த ஐந்தாண்டுக் கால ஆட்சியில்,

மக்களின் வரிப்பணம் லஞ்சப் பணமாக மாறியது;

சாலை அமைத்ததாகவும், பாலம் கட்டியதாகவும், பழுது பார்த்ததாகவும் கணக்கெழுதிக் கொண்டு, அந்தப் பணத்தையெல்லாம் சுருட்டினர்;

வளர்ச்சிப் பணிகளுக்கான தொகை ஒரு சிலரின் வளர்ச்சிக்குப் போய்ச் சேர்ந்தது;

தொட்டில் குழந்தைத் திட்டம் முதல் சுடுகாட்டுக் கொட்டகை வரை ஊழலின் நெடிவீசும் பயணம்;

கடந்த கால ஆட்சியில், கிரானைட் உரிமம் வழங்குவதில் மலிந்திருந்த ஊழல் தொடர்பான வழக்கில், முதல் தகவல் அறிக்கையைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற கோரிக்கையுடன், ஜெயலலிதா ஆட்சியில் தொழில் அமைச்சராக இருந்த திரு.சின்னசாமி சென்னை உயர்நீதிமன்றத்திற்குச் சென்றார். அவரது கோரிக்கையை தள்ளுபடி செய்த உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில்,

“குத்தகை உரிமம் பெற்றவர்கள் பெரும் தொகைகளை லஞ்சமாகக் கொடுத்துள்ளார்கள். குற்றம் சாட்டப்பட்டவர்களுடைய வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட துண்டுச் சீட்டுகளில் எவ்வகையான கரன்சி நோட்டுகள் கொடுக்கப்பட்டன என்று குறித்து வைத்துள்ளதிலிருந்தும்,

சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும் இது தெளிவாகின்றது என்றும்,

'அரசுக்குப் போய்ச் சேரவேண்டிய பணத்தை குற்றம் சாட்டப்பட்டோர் உறிஞ்சி எடுத்துக் கொண்டதன் மூலம் பல கோடி ரூபாய் அளவிற்கு லாபம் அடைந்துள்ளனர் என்றும் குறிப்பிட்டிருந்ததை இந்த இடத்தில் நினைவுபடுத்திக் கொள்வது பொருத்தமாக இருக்கும்.

வருமான வரிச் சோதனையில் அ.தி.மு.க. அமைச்சரின் சாதாரண உதவியாளரிடம்கூட கோடிக் கணக்கில் பணம்;

அதிகாரிகளின் வீட்டில் மலையெனக் கரன்சி நோட்டுகள், தங்கம், வெள்ளி, வெளிநாட்டுச் செலாவணி;

இந்த இடத்தில் இரண்டு நாட்களுக்கு முன்பு சென்னை தனிநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பொன்றை உனக்கு நினைவூட்ட விரும்புகின்றேன்.

அந்தத் தீர்ப்பில், "தன் கீழ் பணியாற்றிய அலுவலர்களுக்கு எந்த மாதிரியான பயிற்சியைக் குற்றஞ்சாட்டப்பட்ட அதிகாரி வழங்கியிருப்பார் என்பதைக் கற்பனை செய்துகூடப் பார்க்க இயலவில்லை. எல்லா நிலையிலும் நேர்மையையும், நெறிபிறழாத் தன்மையையும் கடைப்பிடித்துவரும் மற்ற ஐ.ஏ.எஸ். அலுவலர்களுக்கிடையே, குற்றஞ்சாட்டப்பட்ட இந்த அலுவலரின் நடவடிக்கை அகில இந்தியப் பணிக்கே அவமானத்தை உருவாக்கிவிட்டது. மக்களுக்குப் பணியாற்றவேண்டும் என்ற முடிவு மேற்கொண்ட அறிவுக்கூர்மை மிக்க அலுவலர் ஒருவர், அதிகமாகச் சொத்து சேர்த்திட வேண்டும் என்ற தணியாத ஆசையின் காரணமாக ஊழல் எனும் கேட்டிற்கு இரையாகிவிட்டாரே என்பது மிகவும் பரிதாபகரமானது"

- என்ற தீர்ப்பு இங்கே சுட்டிக்காட்டத்தக்கது.

அமைச்சர்கள், ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள், கட்சிப் பிரமுகர்கள் பகட்டான வாழ்வு, பங்களா வாசம், ஆயிரங்களென்றும், இலட்சங்களென்றும், கோடிகளென்றும் அவரவர் கை வலிமைக்கேற்ற சுருட்டல்;

இப்படி ஊரே நாறியது; நாடே காறி உமிழ்ந்தது;

அதிகார துஷ்பிரயோகம், ஆடம்பர ஊதாரிச் செலவுகள், ஆணவ நடவடிக்கைகள், நிர்வாகச் சீர்குலைவு என்று பொது வாழ்விற்கே பேரிழுக்கு உருவாக்கப்பட்டிருந்தது; மக்களாட்சியின் மதிப்பிற்குரிய அங்கமான அரசியல்வாதி என்று சொல்லிக் கொள்வதற்கே பெருத்த அவமானம் இழைக்கப்பட்டிருந்தது.

சகதிச் சாகரத்தில் மூழ்கிக் கொண்டிருந்த ஜனநாயகத் தேரை மீட்டு, விருப்பு வெறுப்பின்றித் தக்க நடவடிக்கைகள் எடுத்து தமிழ்நாட்டு மக்களுக்கு நல்லாட்சி வழங்குவோம்; நேர்மையான, தூய்மையான, வெளிப்படையான நிர்வாகத்தை வழங்குவோம் என்று தி.மு.கழகம் உறுதி கூறி, அந்த உறுதிமொழியை உவகையுடன் ஏற்று தமிழகத்து மக்களின் பேராதரவுடன் 1996-ல் நான்காவது முறையாகக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டது.

இந்த ஐந்தாண்டுக் காலத்தில் கழக அரசு அனைத்து முனைகளிலும் உருவாக்கியுள்ள சாதனைச் சரித்திரம் தனிச்சிறப்பு வாய்ந்தது.

இவர் ஆட்சிக்கு வந்தால் முழுமையாக ஐந்தாண்டுகள் ஆட்சியில் இருக்கமாட்டார் என்று பிரச்சாரம் செய்தார்கள்; அது பொய்த்து விட்டது.

இவர் ஆட்சிக்கு வந்தால் மழை பெய்யாது என்று சொல்லிப் பார்த்தார்கள்; அதுவும் பலிக்கவில்லை; பொய்யாகிவிட்டது; பாலாற்றிலேகூட நீண்ட காலத்திற்குப் பிறகு வந்த வெள்ளத்தைப் பார்த்து பூஜை செய்ய பாலாற்றங்கரைக்கே சென்றார் காஞ்சி சங்கராச்சாரியார் அவர்கள்.

இவர் ஆட்சிக்கு வந்தாலே உணவுத் தட்டுப்பாடு வந்துவிடும் என்று பரப்பிப் பார்த்தார்கள்; உணவுப் பொருள்கள் உற்பத்தியில் தமிழகம் இன்று முன்னணி மாநிலமாக வந்துவிட்டது; பழி பரப்பப் பார்த்தவர்கள் வாயடைத்துப் பதுங்கிவிட்டார்கள்.

பகட்டு, படாடோபம், பளபளப்பு எதுவுமின்றி எளிமை, அமைதி, இனிமை என்று மக்களாட்சியின் மாண்புகள் பேணப்பட்டு வாக்களித்தோர், வாக்களிக்காதோர், ஆளும் கட்சியினர், எதிர்க் கட்சியினர், பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பேதம் போக்கி, வேறுபாட்டின் வேரகற்றி, சமத்துவ நோக்குடன் நடைபெற்று, அனைத்துத் தரப்பு மக்களின் ஆதரவினையும் பெற்றுவரும்

கழக ஆட்சியின்மீது எந்தக் குற்றச்சாட்டையும் கூறமுடியாதோர், குற்றச்சாட்டைக் கூறி சட்டத்தின் சன்னிதானத்திலே சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க முடியாமல் நிலைகுலைந்தோர், கடைசியாகக் கண்டெடுத்த காகிதக் கணைதான் பணப் புழக்கம் இல்லை என்பது.

இவர்கள் சொல்லுகின்ற பணம் வெள்ளைப் பணம் அல்ல; கள்ளப் பணம், கறுப்புப் பணம், லஞ்சப் பணம்.

ஊழலின் ஊற்றுக் கண்கள் முழு அளவுக்கு இல்லை என்றாலும் பெருமளவுக்கு அடைக்கப்பட்டு வருகிறது.

திறந்த வெளியிலேயே ஊழல் உலவிக் கொண்டிருந்த நிலை இன்று மாறிவிட்டது; திரை மறைவில், இருட்டறையில், நிழல் மடியில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இன்றும் இருக்கலாம், நான் மறுக்கவில்லை.

ஊழல், மகத்துவ வேடமணிந்து மரியாதை பெற்றிருந்த காலம் மலையேறி வருகிறது; ஊழல், ஒரு கொடுமை, புற்றுநோய் என்பதைப் பெரும்பாலானோர் உணர்ந்து வருகிறார்கள்.

எனவே ஊழல் உலா பெருமளவுக்கு முற்றுப் பெற்றாகிவிட்டது.

1996 - தேர்தலின்போது கழகம், தமிழக மக்களுக்கு வாக்களித்தபடி, ஊழல் புரிந்தோரை விசாரித்து உண்மைகளை ஊரார்க்கு அறிவித்திட மூன்று தனி நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு 46 வழக்குகள் தொடரப்பட்டன. சில வழக்குகளில் தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன; பல வழக்குகளில் விசாரணைகள் நடை பெற்றும் வருகின்றன.

விசாரணைகளைத் தவிர்ப்பது எப்படி, தாமதப்படுத்துவது எப்படி என்று சட்டத்தின் சந்து பொந்துகளில் எல்லாம் நுழைந்து ஆராய்ச்சிகள் நடப்பதையும், அவை அரங்கேறி வருவதையும் நாட்டு மக்கள் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டுதான் வருகிறார்கள். இந்த வழக்குகளில் வருவாய்க்கு மீறிய சொத்துக்கள் என்றும், அரசுப் பணத்தை மோசடி செய்து, சதி எண்ணத்தோடு கைப்பற்றிக் கொண்ட ஊழல் பணம் என்றும், குறிப்பிடப்பட்டுள்ள தொகை சுமார் ஆயிரம் கோடி ரூபாயாகும். இது இன்று புழக்கத்தில் இல்லாத பணம்தான்.

அன்றைய ஆட்சியாளர்கள், அவர்களது பினாமிகள், பினாமிகளின் உறவினர்கள், உறவினர்களின் நிழல்கள், நிழல்களின் மாயங்கள் என்று கடலுக்கடியில் கால்வாய் கட்டி, ஆகாயத்தில் பாதை அமைத்து வெளிநாடுகளுக்குக் கொண்டு சென்று முதலீடுகள் செய்துள்ள தொகை சுமார் ஆயிரம் கோடி ரூபாயாகும். இது இன்று இங்கே புழக்கத்திலே இல்லாத பணம்தான்.

சட்டத்தின் கண்களில் மிளகாய்ப் பொடியைத் தூவிவிட்டு, அதன் காதுகளில் நெருப்புக் குழம்பை நிரப்பிவிட்டு, இங்கேயே யாரும் கண்டுகொள்ள முடியாத அளவுக்கு வரிஏய்ப்பு செய்து, முத்திரைக் கட்டண மோசடி புரிந்து, தோட்டங்கள் - துரவுகள் என்றும், பண்ணைகளென்றும், பண்ணை வீடுகளென்றும், நிலபுலன்களென்றும், டன் டன்னாக தங்கமென்றும், வைர வைடூரியமென்றும் குவித்துள்ளவை மட்டும் சுமார் ஐநூறு கோடி ரூபாய் மதிப்புள்ளவை. இது இன்று புழக்கத்திலே இல்லாத பணம்தான்.

1996 - மே மாதம் தேர்தல்கள் முடிவுபெற்று, உடன்பிறவாச் சோதரியார் நேரு ஸ்டேடியத்தில் பதவியேற்பை வைத்துக் கொள்ளலாம் என்று முடிவெடுத்து, அன்றைய தலைமைச் செயலாளரும், காவல்துறைத் தலைவரும் அதற்கான ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்த நிலையில், தேர்தல் முடிவுகள் வெளிவரத் தொடங்கியதும் மக்களின் மனநிலையை உணர்ந்து, தோட்டத்தில் அடைத்து வைத்திருந்த கரன்சி மூட்டைகளை சில புல்லுருவிப் போலீசார் துணையுடன் கன்டெய்னர்களில் ஏற்றி திராட்சைத் தோட்டத்திற்கும், திக்கு தெரிந்தறிந்துகொள்ள முடியாத எல்லைகளுக்கும் கடத்திய வகையில் சுமார் ஆயிரம் கோடி ரூபாய். இது இன்று புழக்கத்திலே இல்லைதான்.

வட்டி விகிதத்தை உயர்த்தியும், முதலீடு செய்த பணத்தைக் குறுகிய காலத்தில் இரட்டிப்பாக்கித் தருவோம் என்றும், அப்பாவிப் பொதுமக்களை ஏமாற்றி ஆளுங்கட்சிக்காரர்களின் ஆசிகளுடன் மோசடி நிதி நிறுவனங்கள் திரட்டிய தொகை மொத்தம் 1,300 கோடி ரூபாய் - இந்தப் பணம் முழுவதும் ஒரு சிலர் பெயர்களில் அசையாச் சொத்துக்களாக ஆழப் புதைந்து கிடக்கிறது. அது புழக்கத்திலே இல்லாத பணம்தான். அதனை மீட்டு அப்பாவிப் பொதுமக்களைக் காப்பாற்றக் கழக ஆட்சியில் தனிச் சட்டமியற்றி

நடவடிக்கை எடுக்கப்பட்டு இதுவரை 300 கோடி ரூபாய் மீட்கப்பட்டுள்ளது.

அரசுக்குச் சொந்தமான நிலங்களை ஆளுங்கட்சியினரே ஆக்கிரமித்துக் கொள்வது, அவற்றை அரசு அங்கீகாரம் இல்லாமலேயே மனைகளாகப் பிரித்து ஏதுமறியா ஏழை மக்களின் தலையிலே கட்டி, அவர்கள் உழைத்துச் சேர்த்த ஊதியத்தைக் கறுப்புப் பணமாகப் பெற்றுக்கொண்டு பத்திரப்பதிவின்றி கைமாற்றியது பெருமளவுக்கு இன்று தடுக்கப்பட்டுள்ளது. ஏழைமக்கள் வியர்வையால் விளைந்த வெள்ளைப் பணம், கறுப்பாக மாற்றப்பட்டது இன்று புழக்கத்திலே இல்லைதான்.

கழக ஆட்சியில் அரசுப் பணிகளுக்கு ஆளெடுப்பதில் ஒளிவு மறைவில்லாமல் வெளிப்படையாக முறைப்படுத்தப் பட்டுள்ளதால், வேலை வாங்கித் தருகிறேன் என்று சொல்லி ஆளுங்கட்சிக்காரர்கள் நடத்திய லஞ்ச வேட்டை நசுக்கப்பட்டு விட்டது. உதாரணத்திற்கு ஒன்று சொல்ல வேண்டுமானால் கழக ஆட்சியில் இதுவரை 41 ஆயிரத்து 887 இடைநிலை ஆசிரியர்கள் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் யாருடைய பரிந்துரையுமின்றி, யாருக்கும் கையூட்டு வழங்காமல், வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள முதுநிலைப்படி பணி நியமனம் பெற்றுள்ளனர். ஒவ்வொரு நியமனத்தின்போதும், தனது முதுநிலை தனக்கே தெரியுமாதலால், தனக்கு நிச்சயம் பணி கிடைக்குமா, கிடைக்காதா என்பது பதிவு செய்து கொண்டுள்ள ஒவ்வொருவருக்கும் தெரியும். பல்வேறு பணி நிலைகளுக்கும், வேலைவாய்ப்புப் பதிவு முதுநிலை என்ற முறை விரிவுபடுத்தப்பட்டு, நியமனங்கள் கழக ஆட்சியில் நேர்மையான முறையில் நடைபெறுகின்றன; அதனால் லஞ்சப் பணப் புழக்கம் என்ற நேர்மை தவறும் நேர்வுகள் முறியடிக்கப்படுகின்றன.

ஆனால், அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நியமனங்கள் இப்படியா நடைபெற்றன? 8 ஆயிரத்து 450 இடைநிலை ஆசிரியர்கள் நியமனங்களுக்கும் குறைந்தபட்சம் தலா 20 ஆயிரம் ரூபாய் என்று வைத்துக் கொண்டால்கூட, 16 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவு செய்திருக்கவேண்டும். இளைஞர்களின் வேலை வாய்ப்புகளில், எதிர்காலத்தைப் பற்றிய அவர்தம் கனவுகளைக் கசக்கிப் பிழிந்து, கந்து வட்டிக்குக் கடன் வாங்கச் சொல்லிக் கறந்த கறுப்புப்பணம் இன்றைக்குப் புழக்கத்திலே இல்லைதான்.

மாநிலத்தில் பணப் புழக்கம் என்பது அரசாங்கம் நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கின்ற மொத்த வருவாய்-மொத்தச் செலவு, வேளாண் உற்பத்தி மதிப்பு, தொழில்களில் செய்யப்படும் முதலீடு-தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் மதிப்பு, உற்பத்தி மற்றும் விற்பனைகளின் மதிப்பு, ஏற்றுமதியாகும் பொருள்களின் மதிப்பு, வங்கிகளின் மூலமாக வழங்கப்படும் கடன் அளவு, வைப்பீட்டு அளவு, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், விவசாயத் தொழிலாளர்கள், தொழிற்சாலைப் பணியாளர்கள், பல்வேறு வகைப்பட்ட வியாபார நிறுவனங்களிலே வேலை செய்வோர், அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாராத தொழிலாளர்கள் என்று சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரும் மாதந்தோறும் பெற்று வரும் ஊதியங்கள் என்ற பலவகைக் காரணக்கூறுகளைச் சார்ந்தே அமையும்.

1993-94ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் வருவாய்க் கணக்கில் வரவு 7,215.13 கோடி ரூபாய்; வருவாய்க் கணக்கில் செலவு 8,407.41 கோடி ரூபாய். 1994-95ஆம் ஆண்டு வரவு 8,135.44 கோடி ரூபாய்; செலவு 9,187.16 கோடி ரூபாய். 1995-96ஆம் ஆண்டு வரவு 9,689.22 கோடி ரூபாய்; செலவு 10,857.84 கோடி ரூபாய். 1996-97ஆம் ஆண்டு வரவு 11,760.33 கோடி ரூபாய்; செலவு 13,047.20 கோடி ரூபாய். 1997-98ஆம் ஆண்டு வரவு 13,418.40 கோடி ரூபாய்; செலவு 14,893.59 கோடி ரூபாய். 1998-99ஆம் ஆண்டு வரவு 14,198.52 கோடி ரூபாய்; செலவு 17,183.94 கோடி ரூபாய். 1999-2000ஆம் ஆண்டு வரவு 16,465.29 கோடி ரூபாய்; செலவு 20,166.02 கோடி ரூபாய். 2000-2001ஆம் ஆண்டு வரவு 18,396 கோடி ரூபாய்; செலவு 22,318 கோடி ரூபாய்.

அ.தி.மு.க. ஆட்சியின் கடைசி ஆண்டான 1995-96ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கழக ஆட்சியின் 2000-2001ஆம் ஆண்டில் வருவாய் கணக்கில் வரவு ஏறத்தாழ இரண்டு மடங்காகி இருக்கிறது. அதைப்போலவே செலவும் இரண்டு மடங்கிற்கு மேல் உயர்ந்திருக்கிறது. இந்தப் பணம் அனைத்தும் நேரடியாக புழக்கத்திற்கு வருவதுதான். இஃதன்னியில் பல்வேறு திட்டப் பணிகளை நிறைவேற்றுவதற்கு உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் போன்ற பன்னாட்டு மற்றும் உள்நாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து வாங்குகிற கடன்

தொகைகள் அனைத்தும் நேரடியாகப் புழக்கத்திற்கு வந்து, பொதுச் சொத்துக்களாக உருமாற்றம் பெறுபவைதான்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை ஆசிரியர்கள் உள்ளிட்ட அரசு ஊழியர்களின் எண்ணிக்கை பனிரெண்டரை இலட்சம் பேர். அடுத்து தொழிலாளர்களை இரண்டு வகையாகப் பிரித்துக்கொள்ளலாம். முழுநேரமும் வேலை செய்யும் அடிப்படைத் தொழிலாளர்கள் என்பது முதல்வகை. இந்த முதல் வகையில் விவசாயத்தில் நேரடியாக ஈடுபட்டிருப்போர், விவசாயத் தொழிலாளர்கள், தொழிற்சாலைகளில் பணியாற்றுவோர், இன்னபிறர் என்று 94.23 சதவீதம் பேர், அதாவது, 2.30 கோடி அடிப்படைத் தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். பகுதிநேரத் தொழிலாளர்கள் என்ற வகையில், அதாவது, ஆண்டு முழுவதும் தொடர்ந்து வேலை கிடைக்காமல், ஆனால் குறிப்பிட்ட பருவ காலங்களில் மட்டுமே வேலை செய்து வாழ்க்கை நடத்துவோர் இரண்டாவது வகை. இந்த வகையில் 5.77 சதவீதம் பேர், அதாவது, 15 இலட்சம் பேர் இருக்கிறார்கள்.

விவசாயத்திலே நேரடியாக ஈடுபட்டிருப்போர் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் என்பவர்களின் எண்ணிக்கையை மட்டும் பார்த்தால் 56 சதவீதம் பேர் இதிலே அடங்குவர். தொழிற்சாலைகளிலே பணியாற்றுவோர், மற்ற வணிக நிறுவனங்களிலே வேலை செய்வோர் எண்ணிக்கை 39 சதவீதமாகும். இவர்கள் அனைவரும் மாதந்தோறும் பெற்றுவரும் வருவாய் அல்லது ஊதியம் அவர்கள் செய்யும் சேமிப்பு போகப் பெருமளவுக்குப் புழக்கத்திலே வரும்.

ஆசிரியர்களை மட்டும் எடுத்துக்கொண்டால், ஐந்தாவது சம்பளக் கமிஷன் பரிந்துரைகளை ஏற்று, கழக அரசு 20.7.1989 அன்று வெளியிட்ட ஆணையில் ஊதியங்களை 1.6.1988 என்று முன்தேதியிட்டு திருத்தி வழங்கியபடி, இடைநிலை ஆசிரியர் சராசரியாக மாதச் சம்பளம் 1,564 ரூபாய் பெற்றவர், கழக அரசு 13.4.1998 அன்று வெளியிட்ட ஆணையில் ஊதியங்களை 1.1.1996 என்று முன்தேதியிட்டு திருத்தி வழங்கியபடி 5,750 ரூபாய் பெற்று வருகிறார், பட்டதாரி ஆசிரியர் 1,920 ரூபாய் பெற்றவர் இன்று 7,250 ரூபாய் பெற்று வருகிறார்; முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் 2,510 ரூபாய் பெற்றவர் இன்று 8,500 ரூபாய் பெற்று வருகிறார்; இடைநிலைப்பள்ளி தலைமையாசிரியர் 2,291

ரூபாய் பெற்றவர் இன்று 7,900 ரூபாய் பெற்று வருகிறார். இப்படி ஏழரை ஆண்டுக்கால இடைவெளியில் சராசரியாக மூன்று மடங்கு சம்பளம் உயர்ந்திருக்கிறது.

அரசுப் பணியாளர்களை மட்டும் எடுத்துக்கொண்டால், ஐந்தாவது சம்பளக் கமிஷன் பரிந்துரைகளை ஏற்று, கழக அரசு 20.7.1989 அன்று வெளியிட்ட ஆணையில் ஊதியங்களை 1.6.1988 என்று முன்தேதியிட்டு திருத்தி வழங்கியபடி, இரவுக் காவலர் உள்ளிட்ட அலுவலக உதவியாளர் சராசரியாக மாதச் சம்பளம் 861 ரூபாய் பெற்றவர், கழக அரசு 13.4.1998 அன்று வெளியிட்ட ஆணையில் ஊதியங்களை 1.1.1996 என்று முன்தேதியிட்டு திருத்தி வழங்கியபடி 2,973 ரூபாய் பெற்று வருகிறார்; கிராம நிர்வாக அலுவலர் உள்ளிட்ட இளநிலை உதவியாளர், தட்டச்சர், ஓட்டுநர் 1,249 ரூபாய் பெற்றவர் இன்று 4,050 ரூபாய் பெற்று வருகிறார்; உதவியாளர் 1,564 ரூபாய் பெற்றவர் இன்று 5000 ரூபாய் பெற்று வருகிறார்; கண்காணிப்பாளர் 2,353 ரூபாய் பெற்றவர் இன்று 7,450 ரூபாய் பெற்று வருகிறார்; போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் 2,130 ரூபாய் பெற்றவர் இன்று 6,600 ரூபாய் பெற்று வருகிறார்; போலீஸ் இன்ஸ்பெக்டர், தாசில்தார், வட்டார வளர்ச்சி அலுவலர் 2,660 ரூபாய் பெற்றவர் இன்று 8,500 ரூபாய் பெற்று வருகிறார்; தலைமைச்செயலக பிரிவு அலுவலர் 2,750 ரூபாய் பெற்றவர் இன்று 8,570 ரூபாய் பெற்று வருகிறார்; உதவி இயக்குநர், வணிகவரி அலுவலர், உதவி ஆணையாளர், துணைப் பதிவாளர், உதவி செயற் பொறியாளர் 3,100 ரூபாய் பெற்றவர் இன்று 10,750 ரூபாய் பெற்று வருகிறார்; துணை இயக்குநர், கூடுதல் போலீஸ் கண்காணிப்பாளர், சிவில் சர்ஜன், தலைமைச்செயலக சார்புச் செயலாளர் 3,925 ரூபாய் பெற்றவர் இன்று 12,831 ரூபாய் பெற்று வருகிறார்; இணை இயக்குநர், இணைப் பதிவாளர், போலீஸ் கண்காணிப்பாளர், அரசு துணைச் செயலாளர் 4,545 ரூபாய் பெற்றவர் இன்று 14,650 ரூபாய் பெற்று வருகிறார். இந்தப் பிரிவிலும் சுமார் மூன்று மடங்கு ஊதியம் உயர்ந்துள்ளது.

அரசுப் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் மொத்தம் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் பேர் வேலை செய்து வருகிறார்கள். இவர்களது ஊதியமும் படிப்படியாக உயர்த்தப்பட்டு வருகிறது. 2.9.1989 அன்று கழக ஆட்சியில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி

போக்குவரத்துத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியம் மாதம் ஒன்றுக்கு 1,296.20 ரூபாய் என்றும், அதிகபட்ச ஊதியம் 1,652.90 ரூபாய் என்றும் நிர்ணயிக்கப்பட்டது. அதே ஒப்பந்தத்தின்படி, போக்குவரத்துக் கழக மேற்பார்வையாளர்களின் குறைந்தபட்ச ஊதியம் 1,689.80 ரூபாய் என்றும், அதிகபட்ச ஊதியம் 2,021.90 ரூபாய் என்றும் நிர்ணயிக்கப்பட்டது. 13.2.1999 அன்று மீண்டும் கழக ஆட்சியில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி போக்குவரத்துத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியம் மாதம் ஒன்றுக்கு 6,195.60 ரூபாய் என்றும், அதிகபட்ச ஊதியம் 7,055.60 ரூபாய் என்றும்; அதே ஒப்பந்தத்தின்படி, போக்குவரத்துக் கழக மேற்பார்வையாளர்களின் குறைந்தபட்ச ஊதியம் 7,423.95 ரூபாய் என்றும், அதிகபட்ச ஊதியம் 8,767.85 ரூபாய் என்றும் நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. அது மட்டுமன்றி, போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு, போக்குவரத்துக் கழக வரலாற்றிலேயே முதல்முறையாக ஓய்வூதியம் வழங்கிடவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்படிப் பத்தாண்டு கால இடைவெளியில் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களின் ஊதியம் நான்கு மடங்காக உயர்ந்துள்ளது.

தனியார் போக்குவரத்து பஸ்களில் பணியாற்றும் ஓட்டுநர்களுக்கும் குறைந்தபட்ச ஊதியத்தை அரசு நிர்ணயிக்கிறது. ஒரு தனியார் போக்குவரத்து பஸ் ஓட்டுநர் 1995ஆம் ஆண்டில் மாதம் ஒன்றிற்கு குறைந்தபட்ச ஊதியமாக 1,740 ரூபாய் பெற்று வந்தார். கழக ஆட்சியில் 22.9.1999 அன்று வெளியிடப்பட்ட ஆணையின்படி, அதே ஓட்டுநர் 1999ஆம் ஆண்டில் மாதம் ஒன்றிற்கு 2,723.88 ரூபாயும், 2000ஆம் ஆண்டில் 2,848.84 ரூபாயும் ஊதியமாக பெற்று வருகிறார். தனியார் பஸ் ஓட்டுநரின் ஊதியம் ஐந்தாண்டுக் காலத்தில் 63 சதவீதம் உயர்ந்திருக்கிறது.

பெருவாரியாக உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் பற்றி கோலப்பன் குழு பரிந்துரைகள் ஏற்கப்பட்டு, 5.4.1999 அன்று அறிவிக்கப்பட்டு அதுமுதல் நடைமுறையில் இருந்து வருகின்றன. சொந்த ஏர் மாட்டுடன் உழவு செய்தால் நாளொன்றுக்கு குறைந்தபட்ச ஊதியம் 55 ரூபாய் என்றிருந்ததை 100 ரூபாயாக உயர்த்தியும்; சொந்த ஏர் மாடு இல்லாமல் உழவு செய்தால் குறைந்தபட்ச ஊதியம் 32

ரூபாய் என்றிருந்ததை 54 ரூபாயாக உயர்த்தியும்; நெல் அறுவடை செய்யும் விவசாயத் தொழிலாளர் அறுவடைக் களத்திற்கு எடுத்துச்சென்று கதிரடித்தல், அளந்து மூட்டைகளில் கட்டுதல் ஆகிய பணிகளிலே ஈடுபடுவோருக்கு ஊதியம் நாளொன்றுக்கு 32 ரூபாய் அல்லது விளைச்சலில் எட்டில் ஒரு பகுதி என்றிருந்ததை, ஆண் தொழிலாளர்களும், பெண் தொழிலாளர்களும் ஒரேவிதமாக இந்தப் பணியை மேற்கொள்வதால், இந்தப் பணியிலே ஆறுமணி நேரம் ஈடுபடும் ஆண் தொழிலாளர்களுக்கு 54 ரூபாய், ஐந்துமணி நேரம் மட்டும் ஈடுபடும் பெண் தொழிலாளர்களுக்கு 45 ரூபாய் என்று உயர்த்தியும், அதாவது, இருபாலாரையும் ஒரேவிதமாகக் கருதி மணிக்கு 9 ரூபாய் வீதம் ஊதியம் இருக்கவேண்டும் என்றும்; விதைத்தல், நாற்று பறித்தல், நடுதல், களை எடுத்தல் போன்ற தொழில்களில் ஈடுபடும் விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நாளொன்றுக்கு விதைத்தலுக்கு 32 ரூபாய், நாற்றுப் பறித்தல், நாற்று நடுதல் ஆகியவற்றிற்கு 30 ரூபாய், களை எடுப்பதற்கு 29 ரூபாய் என்றிருந்ததை ஒருங்கிணைத்து இத்தகைய பணிகளில் ஈடுபடும் ஆண் தொழிலாளர்களுக்கு 54 ரூபாய், பெண் தொழிலாளர்களுக்கு 45 ரூபாய் என்று மணிக் கணக்குப்படி குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்தியும்; பிற விவசாயப் பணிகளிலே அதாவது வரப்பு வெட்டுதல், கோழி வளர்த்தல், தேனீ வளர்த்தல், பால்பண்ணை மற்றும் மரம் ஏறுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு குறைந்தபட்ச ஊதியம் 32 ரூபாய் என்றிருந்ததை, ஆண் தொழிலாளர்களுக்கு 54 ரூபாய், பெண் தொழிலாளர்களுக்கு 45 ரூபாய் என்று உயர்த்தியும் அறிவிக்கப்பட்டு, நடைமுறையில் இருந்து வருகின்றன.

இலவசமாக வழங்கிடும் திட்டத்திற்குத் தேவைப்படும் வேட்டி, சேலைகள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் நெய்யப்படுகின்றன. நெசவாளர்களுக்கு வழங்கப்படும் கூலி ஒரு சேலை நெய்வதற்கு, 1994ஆம் ஆண்டில் 21.45 ரூபாய் என்றிருந்ததை 2000ஆம் ஆண்டில் 34.32 ரூபாயாக, அதாவது 60 சதவீதம் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. ஒரு வேட்டி நெய்வதற்கு 1994ஆம் ஆண்டில் 20.07 ரூபாய் என்றிருந்ததை, 2000ஆம் ஆண்டில் 32.11 ரூபாயாக, அதாவது 60 சதவீதம் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

பீடி தொழிலாளர்களுக்கு 1994ஆம் ஆண்டில் 1000 சாதா பீடி உருட்ட 17.75 ரூபாய் என்பது 20.5.1998ல் கழக ஆட்சியில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் தற்பொழுது 52.81 ரூபாயாக, அதாவது 200 சதவீதம் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

கட்டட வேலை செய்யும் கொத்தனார் 1995ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதிய விவரப்படி நாளொன்றுக்கு ஊதியமாக 68.30 ரூபாய் பெற்று வந்தவர், 2000ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதிய விவரப்படி இன்று 122.98 ரூபாய் பெற்று வருகிறார். அதாவது கொத்தனார் ஊதியம் ஐந்தாண்டுகளில் 80 சதவீதம் உயர்ந்துள்ளது.

கிரேடு-1 தையல் கலைஞர்களுக்கு அரசு குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயித்து வருகிறது. 1995ஆம் ஆண்டில் தையல் கலைஞருக்கு மாதம் ஒன்றிற்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியம் 1,136 ரூபாய். அது 2000ஆம் ஆண்டில் 1,616.40 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. அதாவது ஐந்தாண்டுக் காலத்தில் கிரேடு-1 தையல் கலைஞரின் குறைந்தபட்ச ஊதியம் 42 சதவீதம் உயர்ந்துள்ளது.

வியாபாரம் செய்யும் கடைகள் மற்றும் நிறுவனங்களில் வேலை செய்யும் விற்பனைப் பணியாளர்களின் குறைந்த பட்ச ஊதியம் 1995ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டிருந்தபடி மாதம் ஒன்றிற்கு 1085 ரூபாய். 2000ஆம் ஆண்டில் இந்த ஊதியம் 1,841 ரூபாயாக, அதாவது 70 சதவீதம் உயர்ந்துள்ளது. ஓட்டல்கள் மற்றும் உணவகங்களில் பணியாற்றும் கிரேடு-4 தொழிலாளர்கள் குறைந்தபட்ச ஊதியமாக 1995ஆம் ஆண்டில் மாதம் ஒன்றிற்கு 930 ரூபாய் பெற்று வந்தனர். 2000ஆம் ஆண்டில் அந்த குறைந்தபட்ச ஊதியம் 1,853.20 என்று, அதாவது சுமார் இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் தினச் சம்பளம் 1990ஆம் ஆண்டில் 24.31 ரூபாய்; 1993ஆம் ஆண்டில் 33.20 ரூபாய்; 1996ஆம் ஆண்டிலிருந்து 46.30 ரூபாய்; 1999ஆம் ஆண்டிலிருந்து 69 ரூபாய்; 2000ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இருந்து 74.62 ரூபாய். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் தினச் சம்பளம் பத்தாண்டுக் காலத்தில் மூன்று மடங்காக உயர்ந்துள்ளது.

முடிதிருத்துவோர் 1995ஆம் ஆண்டில் பெற்றுவந்த குறைந்தபட்ச மாத ஊதியம் 1,105 ரூபாய். 2000ஆம் ஆண்டில் குறைந்தபட்ச மாத ஊதியம் 1,864 ரூபாயாக உயர்ந்துள்ளது. அதாவது ஐந்தாண்டுகளில் குறைந்தபட்ச மாத ஊதியம் 68 சதவீதம் உயர்ந்துள்ளது.

சுமைகளை ஏற்றி இறக்கும் தினக்கூலிப் பணியாளர்களின் குறைந்தபட்ச ஊதியம் நாளொன்றுக்கு 1995ஆம் ஆண்டில் 20 ரூபாய்தான். இது 1988ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியம். 1988ஆம் ஆண்டில் அடிப்படை ஊதியத்தை மட்டும் நிர்ணயித்துவிட்டு, அகவிலைப்படியை நிர்ணயிக்கவில்லை. ஆனால், கழக அரசில்தான் 2.6.2000 அன்று சுமைகளை ஏற்றி இறக்கும் தினக்கூலிப் பணியாளர்களுக்கு நாளொன்றுக்கு அகவிலைப்படியாக 25.38 ரூபாய் என்றும், அடிப்படை ஊதியம் 70 ரூபாய் என்றும், ஆகமொத்தம் நாளொன்றுக்கு 95.38 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டது.

ஆட்டோ மற்றும் டாக்சி ஓட்டுநர்களின் மாத ஊதியம் 1995ஆம் ஆண்டில் குறைந்தபட்சமாக 950 ரூபாய் என்றும், அதிகபட்சமாக 1,351 ரூபாய் என்றும் நிர்ணயம் செய்யப் பட்டிருந்தது. அது படிப்படியாக உயர்ந்து, 2000ஆம் ஆண்டில் குறைந்தபட்ச மாத ஊதியம் 1,922 ரூபாய் என்றும், அதிகபட்ச மாத ஊதியம் 2,402 ரூபாய் என்றும் நிர்ணயம் செய்யப்பட்டு ஆட்டோ மற்றும் டாக்சி ஓட்டுநர்கள் பெற்று வருகிறார்கள். ஐந்தாண்டுக் காலத்தில் ஆட்டோ மற்றும் டாக்சி ஓட்டுநர்களின் குறைந்தபட்ச ஊதியம் இரண்டு மடங்காகவும், அதிகபட்ச ஊதியம் 78 சதவீத அளவிற்கும் உயர்ந்துள்ளது.

ஆட்டோ வாடகை 1995ஆம் ஆண்டில் குறைந்தபட்சம் 5.60 ரூபாய் என்றும், ஒரு கிலோ மீட்டருக்கு 2.80 ரூபாய் என்றும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 1996,நவம்பர் மாதம் இந்த வாடகை விகிதம் மாற்றியமைக்கப்பட்டு, குறைந்தபட்சம் 7 ரூபாய் என்றும், ஒரு கிலோமீட்டருக்கு வாடகை 3.50 ரூபாய் என்றும் உயர்த்தப்பட்டது. ஆயிரக்கணக்கான ஆட்டோக்கள் சாலைகளில் ஓடிக்கொண்டு இருக்கின்றன. உயர்த்தப்பட்ட ஆட்டோ வாடகை நேரடியாகப் புழக்கத்திற்கு வரும் பணம்தான்.

செங்கல் மற்றும் ஓடுகள் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பணியாளர்களின் குறைந்தபட்ச மாத ஊதியம்

828 ரூபாய் என்றும், அதிகபட்ச மாத ஊதியம் 1,208 ரூபாய் என்றும் 1995ஆம் ஆண்டில் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. 2000ஆம் ஆண்டில் அவர்களின் குறைந்தபட்ச மாத ஊதியம் 1,419 ரூபாய் என்றும், அதிகபட்ச மாத ஊதியம் 2,009 ரூபாய் என்றும் உயர்ந்துள்ளது. அதாவது ஐந்தாண்டுக் காலத்தில் செங்கல் மற்றும் ஓடுகள் தயாரிக்கும் தொழிலில் வேலை செய்பவர்களின் குறைந்தபட்ச ஊதியம் 71 சதவீத அளவிற்கும், அதிகபட்ச ஊதியம் 66 சதவீத அளவிற்கும் உயர்ந்துள்ளது.

அப்பளம் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பணியாளர்களின் குறைந்தபட்ச மாத ஊதியம் 865.50 ரூபாய் என்றும், அதிகபட்ச மாத ஊதியம் 915.50 ரூபாய் என்றும் 1995ஆம் ஆண்டில் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. 2000ஆம் ஆண்டில் குறைந்தபட்ச மாத ஊதியம் 1,724.80 ரூபாய் என்றும், அதிகபட்ச மாத ஊதியம் 1,856.80 ரூபாய் என்றும் உயர்த்தி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஐந்தாண்டுக் காலத்தில் இவர்களின் குறைந்தபட்ச மாத ஊதியமும், அதிகபட்ச மாத ஊதியமும் இரண்டு மடங்குகளுக்கு மேல் உயர்ந்துள்ளது.

இப்படி அரசு ஊழியர்களிலிருந்து அப்பளம் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் வரை அனைத்துத் தரப்பினரும் பெற்று வருகிற ஊதியத்தில் ஓரளவு சேமிப்பு போக, பெருமளவுக்கு நேரடியாக புழக்கத்திலே வருகிற பணம்தான். அனைத்துத் தரப்பினரும் பெற்றுவரும் ஊதியம் தொடர்ந்து உயர்ந்து வருகிறபோது, புழக்கத்திலே வருகிற பணத்தின் அளவும் தொடர்ந்து அதிகரித்தே வரும். இவர்கள் பெறுகிற சம்பளம் வெள்ளைப்பணம். இது கறுப்புப்பணமாக மாறுவதற்கு வழி உண்டா? கடல் கடந்து போவதற்குப் பாதை உண்டா? இங்கேதானே புழக்கத்தில் இருந்தாக வேண்டும். புழக்கத்திலே இருக்கிற வெள்ளைப்பணத்தின் அளவு தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருகிறபோது, பணப்புழக்கம் இல்லை என்ற பிரச்சாரம் எப்படி வருகிறது? ஆக இது செயற்கையாக செய்யப்படுகிற பொய்ப் பிரச்சாரமே அன்றி வேறென்ன? அறிவியல் ரீதியாக, நிலவிவரும் எதார்த்த நிலைகளின் அடிப்படையில் இதற்கு ஏதேனும் ஆதாரம் உண்டா?

அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் வாங்கிக் குவித்த லஞ்சப் பணத்தை, 500 ரூபாய் கரன்சி நோட்டுகளை கட்டுக் கட்டுகளாக

சாக்குகளில் அடைத்து, சென்னையில் இருந்து காரில் ஏற்றி ஊர் செல்லும் வழியில் மேலூர் கடைவீதியில் சாக்குமூட்டை கீழே விழுந்து 500 ரூபாய் கரன்சி நோட்டுகள் சிதறி, போனவர்கள் வந்தவர்கள் எல்லாம் ஓடி ஓடி கைப்பற்றிக் கொண்டார்களே, அந்தமாதிரியான அநாகரிகமான நிகழ்ச்சி எந்த ஆட்சியிலாவது நடந்ததுண்டா? அப்படி கட்டுக்கட்டுகளாக வாங்கி குவித்தவர்கள்தானே இன்று பணப்புழக்கம் இல்லை என்று மாய்மாலம் காட்டுகிறார்கள்!

அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் இடைத்தரகர்கள், அமைச்சர்கள், அமைச்சர்களின் உதவியாளர்கள் ஊழல் பணத்தை பங்கு போட்டுச் சுருட்டிக் கொண்டு கைநிறையப் பணத்தை எடுத்து, ஊதாரிச் செலவு செய்து, ஊரை ஏமாற்றித் திரிந்ததற்கு ஏராளமான உதாரணங்கள் உண்டு. அப்படிப்பட்ட ஊழல் பணம் இன்று புழக்கத்தில் இல்லை என்பது உண்மைதான்.

கடந்த ஆட்சிக்கால எம்.எல்.ஏ., வேலை வாங்கித் தருகிறேன், மாறுதல் வாங்கித் தருகிறேன் என்று ஆசை காட்டி இரண்டு, மூன்று பேரை ஊரிலிருந்து அழைத்துக் கொண்டு சென்னைக்கு வருவார். சென்னைக்கு வருவதற்கு அவருடன் வருபவர்கள் எம்.எல்.ஏ.க்கும் சேர்த்து புகைவண்டிப் பயணச்சீட்டை வாங்குவார்கள். எழும்பூர் இரயில் நிலையத்தில் இறங்கியதும், ஆட்டோவிலோ அல்லது டாக்சியிலோ நேராக சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்கல்ல, மூன்று நட்சத்திர ஓட்டல் அல்லது ஐந்து நட்சத்திர ஓட்டலுக்குச் செல்வார்கள். ஓட்டலுக்குச் சென்றதும், டாக்சி வாடகை எவ்வளவு என்று எம்.எல்.ஏ.கேட்பார். 135 ரூபாய் என்று டாக்சி டிரைவர் சொல்வார். உடனே எம்.எல்.ஏ., தன்னுடன் வந்தவர்களிடம் டாக்சி டிரைவரிடம் 200 ரூபாய் கொடுக்கச் சொல்வார். ஓட்டலில் தங்கியிருக்கும்பொழுது எம்.எல்.ஏ., தன்னுடன் வந்தவர்களை அழைத்துக் கொண்டு உணவு விடுதிக்குச் செல்வார். சாப்பிட்டு முடிந்ததும், பில் எவ்வளவு என்று கேட்பார். 210 ரூபாய் என்று பதில் வரும். உடனே எம்.எல்.ஏ., 250 ரூபாய் கொடுக்கச் சொல்வார். நேரே அமைச்சரின் வீட்டிற்குச் செல்வார்கள். சென்றதும், டாக்சி டிரைவருக்கு முன்பு கொடுத்ததைப் போலவே வாடகைப் பணம் கொடுக்கச் சொல்வார். அமைச்சரைப் பார்த்துவிட்டு வெளியே வந்ததும், வேலைக்கோ அல்லது மாறுதலுக்கோ பரிந்துரை செய்துவிட்டதாகவும், காரியம் முடிந்துவிடும் என்றும் சொல்லி

தன்னுடன் வந்தவர்களிடம் தனக்குரிய 50,000 ரூபாயையோ, ஒரு இலட்சம் ரூபாயையோ பெற்றுக் கொள்வார். அமைச்சரின் உதவியாளருக்கு, அமைச்சரின் ஓட்டுநருக்கு தன்னுடன் வந்தவர்களைப் பார்த்து, ஆயிரம் என்றும் இரண்டாயிரம் என்றும் பணம் கொடுக்கச் சொல்வார். இப்படி தாராளமாகப் பணம் புழங்குவதற்குக் காரணமான லஞ்சப் பழக்கம் என்பது அங்கிங்கு என்று இல்லாமல், எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருந்த நிலை இன்று வெகுவாக மாறிவிடவில்லையா? நியமனங்களும், மாறுதல்களும் முறைப்படுத்தப்பட்டு விட்டதால் பரிந்துரைகளுக்கு இடமேதும் இல்லாமல் அப்பாவி மக்களை ஏய்த்துப் பிழைப்பதற்கு வழியேதுமில்லாமல் பெருமளவுக்கு அடைக்கப்பட்டு விட்டதல்லவா? அதனால் பாதிக்கப்பட்டவர்கள் ஒன்று சேர்ந்து, மறைமுகமாக பொத்தாம்பொதுவில் தூவி வரும் விஷ விதைதான் பணப்புழக்கம் இல்லை என்பது. இந்த விஷ விதை சொத்தை விதைதான். மண்ணிலும் விழாது, விழுந்தாலும் முளைக்காது, மண்ணோடு மண்ணாய் மக்கிப் போகும்.

2001, ஜனவரி 23 அன்று வெளியிடப்பட்ட இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மைய (Centre for Monitoring Indian Economy) அறிக்கையின்படி, 1996 மே திங்களில், தமிழகத்தில் 90 ஆயிரத்து 650 கோடி ரூபாய் என இருந்த தொழில் முதலீடு, 1996 மே திங்களுக்குப் பிறகு, 378 தொழில் திட்டங்களில் மொத்தம் 1 இலட்சத்து 65 ஆயிரத்து 40 கோடி ரூபாய் என உயர்ந்துள்ளது என்பது தெரிகிறது. அதாவது, கழக ஆட்சியில் தொழில் முதலீடுகள் மொத்தம் 74 ஆயிரத்து 390 கோடி ரூபாய். இந்தப் பணம் அனைத்தும் வெள்ளைப்பணம். நேரடியாகப் புழக்கத்திற்கு வந்துள்ள பணம்.

கடந்த ஆட்சிக் காலத்தில், 1992-93ஆம் ஆண்டில் 6 ஆயிரத்து 808 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் மட்டுமே தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி ஆயின. ஆனால் கழக ஆட்சியில், 1996-97ஆம் ஆண்டில் 17 ஆயிரத்து 802 கோடி ரூபாய் அளவிற்கும், 1997-98ஆம் ஆண்டில் 18 ஆயிரத்து 982 கோடி ரூபாய் அளவிற்கும் ஏற்றுமதி உயர்ந்துள்ளது. 1999-2000ஆம் ஆண்டில் தமிழகத்திலிருந்து ஏற்றுமதி மதிப்பு 21 ஆயிரத்து 387 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளது.

1994-95ஆம் ஆண்டில் மென்பொருள் ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்கு 12.17 கோடி ரூபாய் என்கிற அளவிற்குத்தான் இருந்தது. ஆனால், 1998-99ஆம் ஆண்டில் அது 1,246 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்தது. 1999-2000ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்து மென்பொருள் ஏற்றுமதியின் அளவு 1,914 கோடி ரூபாய் ஆகும்.

இப்படி ஏற்றுமதி மூலம் தமிழகத்திற்குக் கிடைத்திடும் அன்னியச் செலாவணி கழக ஆட்சிக்காலத்தில் பெருமளவிற்கு உயர்ந்து வருகிறது. கிடைத்திடும் அன்னியச் செலாவணி அனைத்தும் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அரணாக அமைவதோடு, கொல்லைப்புறமாக அல்லாமல் நேரடியாகவே புழக்கத்திற்கு வரும் பணம்தான்.

தமிழகத்தின் முதல்நிலைத் தொழில்களான (Primary sector) வேளாண்மை, வனவளம், மீன்வளம், கனிமவளம் ஆகியவற்றின் மொத்த உற்பத்தி மதிப்பு 1995-96ஆம் ஆண்டில் 14,660.10 கோடி ரூபாய். 1999-2000ஆம் ஆண்டில் மொத்த உற்பத்தி மதிப்பு 24,669.18 கோடி ரூபாய். அதாவது கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற நான்காண்டுகளில் 68 சதவீதம் முதல்நிலைத் தொழில்களின் உற்பத்தி மதிப்பு உயர்ந்துள்ளது.

1996-97ஆம் ஆண்டிற்கும், 1998-99ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் நிலையான விலைகளின் அடிப்படையில்(At constant prices) தமிழ்நாட்டில் மொத்த உற்பத்தியின்(Gross State Domestic Product) வளர்ச்சி வீதம் சராசரியாக ஆண்டொன்றுக்கு 6.05 சதவீதமாக இருந்தது. கழக அரசு மேற்கொண்டு வரும் பலவகைப்பட்ட முற்போக்கு நடவடிக்கைகளின் காரணமாக, 1999-2000ஆம் ஆண்டில் வளர்ச்சி 7.04 சதவீதமாக அதிகரித்துள்ளது. அண்மையில் சட்டப்பேரவையில் வெளியிட்ட இடைக்கால நிதிநிலை அறிக்கையில் நான் குறிப்பிட்டவாறு இந்தியாவிலேயே பொருளாதார வளர்ச்சி மிக உயர்ந்துள்ள மூன்று மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் விளங்குகிறது.

வங்கிகள் வழங்கும் கடன்கள் (Credits), வங்கிகள் ஈட்டும் வைப்புத் தொகைகள்(Deposits) பணப்புழக்கத்தை நிர்ணயிக்கும் மிக முக்கியமான பொருளியல் குறியீடுகள் ஆகும். கடன்

வைப்புத்தொகை விகிதாச்சாரத்தில் (Credit Deposit Ratio) அகில இந்திய அளவில் தமிழகம் முதலிடத்தைப் பெற்றிருக்கிறது. அனைத்திந்திய அளவில் கடன் வைப்புத்தொகை விகிதாச்சாரம் 55.5 சதவீதம் என்ற நிலையில், தமிழகத்தில் 92.3 சதவீதமாகும். இப்படிப் பணப்புழக்கத்திற்கான அடிப்படை பொருளியல் குறியீடுகள் தமிழகத்தைப் பொறுத்தவரை மிக உயர்ந்த அளவில் பிரகாசமான நிலையில் இருக்கும்பொழுது, பணப்புழக்கம் இல்லை என்ற வாதம் எப்படிப் பொருந்தும்?

தமிழ்நாட்டில் ஆண்டொன்றுக்குத் தனிநபர் வருமானம் (Per capita income) 1995-96ல் 11,894 ரூபாய் என்ற அளவிற்கு இருந்து, 1999-2000ஆம் ஆண்டில் 18,786 ரூபாய் என்ற அளவிற்கு அதிகரித்துள்ளது. இவ்வாறு தனிநபர் வருமானம் தமிழகத்திலே அதிகரித்து வருகிற காரணத்தினாலேதான் வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ள மக்கள்தொகை தமிழகத்திலே இந்தியாவில் வேறு எந்த பெரிய மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு குறைந்து வருகிறது.

மத்திய திட்டக்குழு 23.2.2001 அன்று தேசிய மாதிரி ஆய்வு அமைப்பின் (National Sample Survey Organisation) மதிப்பீடுகளுக்கு ஒப்புதல் அளித்து, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் (Below Poverty Line) பற்றிய கணக்கெடுப்பு முடிவுகளையும் வெளியிட்டது. இந்தியாவிலே உள்ள மொத்த மக்கள் தொகையில் 1993-94ஆம் ஆண்டில் 35.97 விழுக்காடாக இருந்த வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள்தொகை, 1999-2000ஆம் ஆண்டில் 26.10 விழுக்காடாக குறைந்துள்ளது. இதில் கிராமப்புறங்களில் 37.27 விழுக்காட்டிலிருந்து 27.09 விழுக்காடாகவும், நகர்ப்புறங்களில் 32.36 விழுக்காட்டிலிருந்து 23.62 விழுக்காடாகவும் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்கள்தொகையின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

இந்திய அளவிலே இந்த அளவிற்கு வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள்தொகை ஒட்டுமொத்தமாகக் குறைந்திருக்க மாநிலங்களிலே எந்த அளவிற்கு வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் தொகையின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது என்பதையும் அந்தப் புள்ளிவிவரம் சுட்டிக்காட்டி இருக்கிறது. தமிழகத்திலே 1993-94ஆம் ஆண்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழேயிருந்த மக்கள்தொகை 35.03 விழுக்காட்டிலிருந்து, 1999-

2000ஆம் ஆண்டில் 21.12 விழுக்காடு அளவிற்கு அதாவது 13.91 விழுக்காடு குறைந்திருக்கிறது. இந்தியாவிலே உள்ள அனைத்துப் பெரிய மாநிலங்களையும் எடுத்துக்கொண்டு பார்க்கும்போது, வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ள மக்கள்தொகை தமிழகத்திலேதான் இந்த ஐந்தாண்டுகளில் அதிக அளவிற்கு குறைந்திருக்கிறது.

தமிழ்நாட்டில் மட்டும் கடந்த இரண்டாண்டுகளில் வருமான வரி செலுத்துவோரின் எண்ணிக்கை இரண்டரை மடங்காக உயர்ந்துள்ளதை மத்திய அரசு வருமானவரித் துறைப் புள்ளிவிவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை மேற்கொண்ட கணக்கெடுப்பின்படி தமிழகத்தில் 1995ஆம் ஆண்டில் தனிநபர்கள் பயன்படுத்துவதற்கென்று 4,66,950 மோட்டார் சைக்கிள்களும், 3,47,789 ஸ்கூட்டர்களும், 10,00,494 மொபெட்களும், 2,76,399 கார்களும் இருந்தன. 1998ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தனிநபர்கள் பயன்படுத்துவதற்கென்று 7,21,679 மோட்டார் சைக்கிள்களும், 4,88,743 ஸ்கூட்டர்களும், 16,06,398 மொபெட்களும், 3,47,977 கார்களும் என்று எண்ணிக்கைகள் அதிகரித்தன. இன்னும் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. தனிநபர்கள் பயன்படுத்தும் வாகனங்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவது பணப்புழக்கம் இல்லை என்பதையா காட்டுகிறது?

இப்படி தனிநபர் வருமானம் உயர்ந்து, வருமானவரி செலுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்து, வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள்தொகை வெகுவாகக் குறைந்து, தனிநபர்கள் பயன்படுத்திக்கொள்ள சொந்தமாக வாங்கும் வாகனங்களின் எண்ணிக்கை உயர்ந்துவரும் உன்னதமான நிலை உருவாகிவரும் இந்தக் காலகட்டத்தில் பணப்புழக்கம் இல்லை என்ற பிரச்சாரம் எப்படி எடுபடும்?

தமிழகத்து மக்களிடையே சம்பாதிப்பதில் ஒரு பகுதியை எதிர்காலத்திற்கு சேமிக்கும் பழக்கம் தொடர்ந்து வளர்ந்து வருகிறது. தேசிய சேமிப்புத் திட்டத்தின் மூலம் 1985-86ஆம் ஆண்டில் சேர்ந்த தொகை 184.06 கோடி ரூபாய்; 1990-91ல் 408.86 கோடி ரூபாய்; 1995-96ல் 490.70 கோடி ரூபாய்; 1998-

99ல் 1,154.95 கோடி ரூபாய்; 1999-2000ல் 1,604.74 கோடி ரூபாய். இப்படி வேகமாக உயர்ந்துவரும் சேமிப்பு ஆரோக்கியமான பணப் புழக்கத்தைத்தான் புலப்படுத்துகிறது.

இந்த அரசு 1989ல் தொடங்கிய மகளிர் குழுக்கள் வளர்ச்சி பெற்று இன்று 11 இலட்சத்து 5 ஆயிரத்து 577 மகளிர் உறுப்பினர்களைக் கொண்ட 63,598 சுய நிதிக் குழுக்களின் மூலம் சேமிக்கப்பட்டுள்ள தொகை 68.71 கோடி ரூபாய் என்பதையும் மறந்து விடக்கூடாது. கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் இப்படி சேமிக்கப்பட்ட தொகை, ஒரு கோடியே 92 இலட்சம்தான்!

உடன்பிறப்பே,

இவ்வளவு புள்ளிவிவரங்களையும் சேகரித்து இரண்டு மூன்று நாள் கண் விழித்து, உதவியாளர்களின் துணையையும் பெற்று, ஆய்ந்து, தோய்ந்து வழங்கி யிருக்கிறேன். பணப்புழக்கம் இல்லை என்பது ஒரு மாயத்தோற்றமே; பொய்யை மெய் போலப் புனைந்துரைத்திடும் வித்தையே என்பதுதான் இந்தப் புள்ளிவிவரங்கள் நமக்குப் புரியவைக்கும் செய்தியாகும். தமிழ்நாட்டில் தனிநபர் வருமானம் உயர்கிறது, பொருள்கள் உற்பத்தி அதிகரிக்கிறது; எல்லா முனைகளிலும் ஏற்றம் தெரிகிறது; வெள்ளைப் பணப்புழக்கம் தொய்வின்றித் தொடர்ந்து உயர்ந்து வருகின்றது. கறுப்புப் பணத்தில் இச்சை மிகக் கொண்டோர் பசப்பு வார்த்தை காட்டி, அப்பாவிப் பொதுமக்களை திசைத் திருப்பிட எத்தனித்துக் கொண்டிருக்கிறார்கள். விழிப்புடனும், அறிவுபூர்வமாகவும் பணியாற்ற வேண்டிய வேளை இது. நீ புரிந்துகொண்டது அனைத்தையும் ஊரார் அனைவர்க்கும் புலப்படுத்துக!

அன்புள்ள,

மு.க.

6-3-2001

2573. விடியற்காலை வெளிச்சக் கதிர்கள்!

உடன்பிறப்பே,

நிகழ்ச்சிகள் வாயிலாக நான் வந்து உன்னைச் சந்திக்காத நேரங்களில் எல்லாம் நீ வந்து என்னைத் தாராளமாக சந்திக்கும் எளிமையான மனிதன்தான் நான்! எளிமையான மனிதனாக இருப்பதில் பலமும் இருக்கிறது - பலவீனமும் இருக்கிறது என்பதை அனுபவம் எனக்குக் கற்றுத் தராமல் இல்லை! மனிதனா? தலைவனல்லவா நீ என்று என்னைப் பார்த்துக் கேட்பாய். என்னதான் தலைவராக இருந்தாலும் மனிதனாக இருப்பதுதானே முக்கியம்! மதிக்கத் தகுந்த பண்பாடு!

இப்போது தேர்தல் களம் நுழைகிறோம் - ஆம்; நுழைந்தே விட்டோம். தினந்தோறும் நம் சந்திப்புதான்!

தேர்தலுக்கான ஜனநாயகக் கதவுகள் அடைக்கப்பட்டிருந்த எமர்ஜன்சி காலத்திலேயே உம் என்றால் சிறைவாசம், ஏன் என்றால் சித்ரவதை எனக் கொடுமை கோர நர்த்தனமாடிய போதே கூட்டம் கூட்டமாக சென்னை வந்து என்னை சந்தித்து ஆறுதல் கூறிய அன்பு உடன்பிறப்பு நீ என்பதை என் ஆயுள் உள்ளவரை மறக்க முடியுமா? வரலாறுதான் மறைக்க முடியுமா?

இந்த அடிப்படை உணர்வுடன் எழுந்து உட்கார்ந்து விடியற்காலை நேரத்தில் இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

சென்னையிலே உள்ள அண்ணா அறிவாலயம் கடந்த ஒரு வார காலமாக கண்கொள்ளாக் காட்சியாகத் திகழ்கின்றது. அடுத்த மாதம் வரவிருக்கின்ற தேர்தல் களம் இறங்கும் ஆயத்த ஏற்பாடுகளுக்காகத்தான்! 1996ஆம் ஆண்டு நம்மை நம்பி நான்காவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர வைத்தனர் தமிழ் நாட்டு மக்கள். அவர்களது நம்பிக்கையை வீணடிக்காத அளவிற்கு ஐந்தாண்டு காலம் நாம் பணியாற்றியிருக்கிறோம் - என்பதற்கு

மதிப்பெண் போடுவதற்காக ஆவலோடு காத்திருக்கிறார்கள் அவர்கள்.

நான்கரை ஆண்டு காலத்திலே நாம் சாதித்த சாதனைகளைப் பட்டியலாகத் தொகுத்து சாதனைச் சரித்திரம் என்ற பெயரிலே 427 பக்கங்களைக் கொண்ட நூல் ஒன்றே தலைமைக் கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்டுள்ளது. அந்தப் புத்தகமே நாம் கடந்த ஐந்தாண்டுகளில் ஆற்றிய பணிக்கு அத்தாட்சியாக விளங்கிக் கொண்டிருக்கின்றது.

1996ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின் போது அதற்கு முன் ஆட்சியிலே இருந்தவர்கள் இதைப் போல அவர்கள் சாதித்த சாதனைகளைப் பற்றி ஏதாவது மக்கள் மன்றத்தின் முன் நூலாகத் தொகுத்துக் காட்டிட முன் வந்தார்களா என்றால் இல்லை. அவர்கள் சாதனைகளைச் செய்திருந்தால் அல்லவா அவற்றைத் தொகுத்து நூலாக வெளியிட்டிருக்க முடியும். மாறாக அவர்களின் ஐந்தாண்டு கால ஆட்சியிலே நடைபெற்ற ஊழல்களையெல்லாம் பட்டியல் பட்டியலாக நாம் தொகுத்து தமிழ்நாட்டு மக்களிடம் காட்டினோம். ஐந்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியிலே முதலமைச்சராக இருந்தவரும் அவருடைய உடன்பிறவா சகோதரியும் தமிழ்நாட்டிலே வாங்கிய கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களின் பட்டியலை எடுத்து பக்கம் பக்கமாக வெளியிட்டோம். நூறு கோடி ரூபாய் செலவழித்து வளர்ப்பு மகனுக்கு அவர்கள் நடத்திய திருமணக் கோலாகலத்தைப் படமாக எடுத்து மக்கள் மன்றத்தின் முன்னால் வைத்தோம். அதனையெல்லாம் பார்வையிட்டுத்தான் அப்போது தமிழ்நாட்டு மக்கள் மதிப்பெண் அளித்தார்கள். அதே மக்கள் இப்போதும் மதிப்பெண் போடுவதற்காக காத்திருக்கின்றார்கள்.

இந்த நிலையிலேதான் நாம் தேர்தல் பணியைத் துவக்கியிருக்கிறோம். என்னுடைய வயது 77. பேராசிரியரின் வயது 78. இந்த வயதை நாங்கள் இருவரும் மறந்து விட்டு, கழகத் தேர்தல் குழு உறுப்பினர்கள் ஆர்க்காடு வீராசாமி, கோ.சி. மணி, துரைமுருகன், துணைப் பொதுச் செயலாளர்கள் க. சுந்தரம், சுப்புலட்சுமி ஜெகதீசன் ஆகியோரின் துணையோடு தேர்தல் பணிச் செயலாளர்கள் ஒத்துழைப்புடன் கழக வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியிலே ஈடுபட்டு வருகிறோம். இன்று வரை 31 மாவட்டங்கள் முடிவுற்றுள்ளன. 150 தொகுதிகளைச் சார்ந்த

விண்ணப்பதாரர்களைப் பார்வையிட்டுள்ளோம். கடந்த 21-3-2001 அன்று காலையிலே தொடங்கிய நேர்காணல் காலை 9.30 மணிக்குத் தொடங்கி இரவு 9 மணி வரை அன்றாடம் நடந்து கொண்டு வருகின்றது.

21-ந்தேதியன்று 492 பேர்களையும், 22-ந்தேதி 334 பேர்களையும், 23-ந்தேதி 657 பேர்களையும், 24-ந்தேதி 288 பேர்களையும், 25-ந்தேதி 316 பேர்களையும், 26-ந்தேதி 461 பேர்களையும், 27-ந்தேதி 483 பேர்களையும் ஆக மொத்தம் 3,031 பேர்களை நேரிலே சந்தித்து அவர்களைப் பற்றி விசாரித்துள்ளோம். இவர்களையன்னியில், வேட்பாளர்களைப் பற்றி பரிந்துரை செய்வதற்காக வருகை தந்திருந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள், ஒன்றிய, நகரக் கழகச் செயலாளர்கள் 560 பேர்களையும் சந்தித்து அவர்களிடமிருந்து கருத்துக்களை அறிந்துள்ளோம். இன்னும் 31ந்தேதி வரை 19 மாவட்டங்களைச் சேர்ந்த வேட்பாளர்கள் 1,532 பேர்களைச் சந்திக்க வேண்டிய நிலையிலே உள்ளோம்.

சுமார் 5 ஆயிரம் பேரைச் சந்தித்து அவர்களுடைய தகுதி, அவர்கள் கட்சிக்காக ஆற்றிய பணி, கலந்து கொண்ட போராட்டங்கள் இவைகளையெல்லாம் கேட்கும் போது அவர்களில் பலர் அதற்கான ஆதாரங்களையும் கூட்டம் நடத்திய விவரங்கள், சிறை சென்ற விவரங்களையும் எடுத்துக்காட்டித் தங்களுக்கு வாய்ப்பு தரவேண்டும் என்றனர். ஒரு சில வேட்பாளர்களாம் உடன்பிறப்புகள் தங்களின் மழலைப் பருவத்தில் தங்கள் பெற்றோருடன் சேர்ந்து என்னுடன் எடுத்துக் கொண்ட புகைப்படங்களை என்னிடம் காட்டியபோதும், பெரியார் - அண்ணா - நாவலர் - சம்பத் - எம்.ஜி.ஆர். - அன்பில் - மன்னை - மதுரை முத்து - ஆசைத்தம்பி - தென்னரசு - சத்தியவாணிமுத்து - விளநகர் கணேசன் - வீரமணி போன்ற முன்னணித் தலைவர்களுடன் நானும் பேராசிரியரும் இருக்கும் பழைய நிழற்படங்களை நீட்டி நினைவலைகளை எழுப்பிடும் போதும் கண்கள் குளமாகின்றன! நெஞ்சம் நெகிழ்கிறது!

வேறு சிலரோ, தாங்கள் தேர்தலிலே போட்டியிடுவதற்காக பணம் செலுத்தி நேர்காணலுக்கு வரவில்லை என்றும், என்னைச் சந்தித்து உரையாடிட ஒரு வாய்ப்பாக இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதற்காகவே வந்ததாகவும் பாசம் பீறிடத் தெரிவிக்கிறார்கள். மேலும் இந்த முறை ஆண்களுக்கு ஈடாக

பெண்களும் நேர்காணலுக்கு வந்திருந்தனர். கழகத் தோழர்களில் பலர் தாங்கள் மனு செய்ததோடு நில்லாமல் தங்கள் துணைவியாரின் பெயரிலும் பணம் கட்டி இருவரும் சேர்ந்து நேர்காணலுக்கு வந்திருந்தனர். உங்களுக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை என்றால் வேறு யாருக்குத் தரலாம் என்ற கேள்வியை வைத்த போது யாரும் முகம் சுணங்காமல் இன்னாரைத் தேர்ந்தெடுக்கலாம் என்று அதற்கான விவரங்களோடு வேறொருவரைத் தெரிவித்தார்கள்.

ஏழு நாட்கள் தொடர்ந்து பல மணி நேரங்கள் ஒரே இடத்தில் அமர்ந்து இந்தப் பணியை ஆற்றிய போதிலும் நாங்கள் சற்றும் களைப்புற வில்லை. காரணம், நித்த நித்தம் நேர்காணலிலே தொடர்ந்து நீ என்னைக் காணவும், உரிமையோடு பேசவும், வேண்டுகோள் விடுக்கவும், நான் உன்னைக் காணவும், உன் வேண்டுகோளைக் கேட்கவுமான இனிமையான வாய்ப்பு அல்லவா இது? எனவே களைப்பே எங்களை எட்டிப் பார்க்கவில்லை.

நாம் இந்த அளவிற்கு ஒவ்வொருவரிடமும் பொதுத் தொகுதியாக இருந்தால் 5000 ரூபாய் என்றும், தனித் தொகுதியாகவோ, மகளிராகவோ இருந்தால் 2,500 ரூபாய் என்றும் பெற்றுக் கொண்டு அதற்கே இத்தனைச் சிரமம் எடுத்துக் கொண்டு ஒவ்வொருவராக நேர்காணலிலே ஈடுபட்டுள்ளோம். ஆனால் உடன்பிறப்பே, மற்றொரு முகாமிலே என்ன நடக்கிறது? யாருக்காவது தெரியுமா? இடம் வாங்கித் தருவதாகக் கூறி இலட்சக்கணக்கிலே பணம் கைமாறியது பற்றி அவர்களே ஒப்புக் கொண்டு அறிக்கை விடும் நிலை! பத்தாயிரம் ரூபாய் வீதம் பணம் கட்டி மனு செய்து கொண்டவர்களை நேரில் அழைத்துப் பேசுகின்ற நிலை உண்டா? கிடையாது. தோழமைக் கட்சிகளின் மதிப்புமிக்கத் தலைவர்களுக்கே அந்த வாய்ப்பில்லை என்கிறபோது பாவம் கட்சியின் தொண்டர்களுக்கு அந்த வாய்ப்பா? அம்மையார் சொல்பவர்தான் அங்கே வேட்பாளர். எந்த நேர்காணலும் கிடையாது. தோழமைக் கட்சிகளுக்கு பங்கிட்டுக் கொள்ளும் இடங்களைப் பற்றியாவது அழைத்து வைத்துப் பேசி பங்கிட்டுக் கொள்ளப்படுமா? யாருக்குத் தெரியும்?

இதெல்லாம் முடிந்து பிரச்சாரத்திற்குச் செல்லும்போது மேடையிலே அமர்வதற்காவது கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படுமா? இதற்கு முன்பு அந்த அனுபவம் கிடையாது, வரும் தேர்தலில் என்னவாகுமோ? வேட்பாளரே ஏழாவது

வண்டியிலோ அல்லது எட்டாவது வண்டியிலோ வர வேண்டும். மேடையிலே ஒரேயொரு நாற்காலி மட்டுமே போடப்பட்டிருக்கும். இதெல்லாம் நாம் கடந்த காலத்தில் கண்ட காட்சிகள் தானே! அந்தக் காட்சிக்காகத்தான் நாம் தந்த மரியாதையையெல்லாம் உதறித் தள்ளி விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

இந்த நேர்காணலுக்கு மத்தியிலே தோழமைக் கட்சிகளோடு பேசி அவர்களுக்கான இடங்களைப் பகிர்ந்து கொள்ளும் பணியிலேயும் ஈடுபட வேண்டும். இடையிடையே ஒவ்வொரு தோழமைக் கட்சியாக வந்திருந்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அந்தப் பேச்சுவார்த்தையிலே ஏற்படுகின்ற பிரச்சினைகள், ஒரே தொகுதியை இரண்டு மூன்று தோழமைக் கட்சிகள் கேட்கும்போது ஒருவரோடு ஒருவர் கலந்து பேசித் தீர்க்க வேண்டிய நிலைமை! அது மாத்திரமல்ல; அன்றாடம் நாங்கள் வருவதற்கு முன்பே வந்து, நாங்கள் சென்ற பிறகு செல்லும் பத்திரிகைத் துறையின் நண்பர்கள், புகைப்பட நிபுணர்கள், வீடியோ கருவிகளைத் தூக்கிக் கொண்டு பல்வேறு தொலைக்காட்சிகளின் செய்தி சேகரிப்போர் என்று இரவு நாங்கள் புறப்படுகின்ற வரைக் காத்திருந்து கேட்கின்ற கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய பணி. அதோடும் நிற்கவில்லை.

இடையிடையே கோட்டைக்குச் சென்று கையெழுத்திட வேண்டிய முக்கியக் கோப்புகளிலே கையெழுத்திட வேண்டிய தவிர்க்க முடியாத நிலை. இத்தனைப் பணிகளையும் ஆற்றிக் கொண்டு இதுவரை பாரதிய ஜனதா கட்சி, புதிய தமிழகம், விடுதலை சிறுத்தைகள், தமிழக முஸ்லீம் ஐக்கிய ஜமாத் ஆகிய கட்சிகளோடு பேச்சுவார்த்தை நடத்தி அவர்களுக்கான தொகுதிகள் எவையென்று பேசி முடிவெடுத்து ஒப்பந்தமும் கையெழுத்தாகி விட்டது. இன்னும் சில கட்சிகளோடு பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இன்னும் இரண்டொரு நாட்களில் முடிவடைந்து அவைகளும் முற்றாக வெளியிடப்படும்.

அதன் பிறகே நமக்கு எஞ்சியுள்ள தொகுதிகளுக்கான வேட்பாளர்களை முடிவு செய்து அறிவிக்க வேண்டும். அதனையும் செய்து முடித்து விட்ட பிறகுதான் உன்னை நேரில் காண்பதற்கான பயணத்தைத் தொடங்கிட வேண்டும்.

உடன்பிறப்பே,

இந்தத் தேர்தலில் கடந்த முறை நம்மோடு அணி சேர்ந்திருந்த சிலர் தொடர்ந்து வர இயலாமல் போய் விட்டது. அதனைப்பற்றி பெரிதாக எடுத்துக் கொள்ளாமல், நம் பணியை என்றும் போல் தொடரவேண்டும். கடந்த முறையை விட இந்த முறை நம்மோடு பத்துக்கு மேற்பட்ட கட்சிகள் நேரடியாக தொகுதிகளைப் பங்கிட்டுக் கொண்டு போட்டியிட முன் வந்துள்ளன. அணியில் இடம் பெறாவிடினும் ஆதரவளிக்க முன் வந்துள்ள பல்வேறு கட்சிகள், அமைப்புகள், இயக்கங்களுக்கு எல்லாம் நன்றி கூறி அவர்களின் துணையையும் ஆங்காங்கு பெற்று வெற்றியினைக் குவிக்க வேண்டியது களத்தில் நிற்கும் நமது அணியினர் அனைவரின் கடமையாகும்.

அந்தக் கடமையை நிறைவேற்றும்போது - அதற்காக கடுமையான இன்னல்களை ஏற்றிடும்போது - நாகரிகமான முறையில், ஜனநாயக ரீதியில் செயல்படவும் எதிர் அணியில் சேர்ந்துள்ள சில முக்கிய கட்சிகளின் தலைவர்கள் நம்முடன் நட்புடன் பழகியவர்கள் என்பதை அணுப்பொழுதும் மறந்து விடாத அணுகுமுறையுடன் பேசவும், எழுதவும், பழகிடவும் கற்றவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் என்ற உண்மையை நிலைநாட்ட வேண்டுகிறேன்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் அண்ணா தந்த தாரக மந்திரம் ஜனநாயகக் களத்தில் நாம் ஏந்தும் அறப்போர் வாளாகவும், கவசமாகவும், கேடயமாகவும் திகழட்டும். விடியற்காலையின் இந்த வெளிச்சக் கதிர்கள் பொற்காலம் தொடர்வதற்கு வழிகாட்டும் உதய மலராக ஆகட்டும்!

அன்புள்ள,

மு.க.

29-03-2001

2574. எண்ணற்ற தம்பிமார்களின் இதயமறிவேன்!

உடன்பிறப்பே,

தேர்தல் களத்தில் நடைபெறும் ஜனநாயக யுத்தத்தில் நீயும் ஒரு தளபதியாகப் போர்கோலம் கொள்ள வேண்டுமென்று விரும்புவது இயல்புதான். அது உனக்கு உரிமையும்கூட. அதை நான் மறுப்பதற்கில்லை. களம் காண வேண்டி நீ ஆயத்தமாக இருந்த சில பகுதிகளில் நமது தோழமைக் கட்சிகளுக்கு இடமளித்துப் பகிர்ந்து கொள்ள வேண்டிய சூழ்நிலை தவிர்க்க முடியாதது என்பதை மீண்டும் மீண்டும் உனக்கு நினைவுபடுத்தத் தேவையில்லை.

நீண்ட காலமாகவே நான் வேடிக்கையாக நம்முடைய செயற்குழு, பொதுக்குழு கூட்டங்களில் சொல்லி வருகிறேன்; கூட்டணி கட்டாயம் வேண்டும். ஆனால் எங்கள் தொகுதியை மட்டும் விட்டுக் கொடுத்து விடாதீர்கள் என்று பிடிவாதம் செய்வீர்கள் என்று! அந்த நிலை எப்போதும் தொடர்ந்து கொண்டு தானிருக்கிறது - எல்லாக் கட்சிகளிலுமே இந்தச் சங்கடம் உண்டு. அந்தச் சங்கடத்தைப் புரிந்து கொண்டு பிரச்சினைக்குத் தீர்வு கண்டிடத் தலைமையுடன் ஒத்துழைத்திடும் சமயநல்லூர் செல்வராசு போன்ற தம்பிமார்களும் கழகத்தில் நிரம்ப உண்டு. அவருக்காவது மாற்றுத் தொகுதியொன்று வழங்கப்படுமென தலைமைக் கழகச் சார்பில் உறுதியளிக்கக் கூடிய அளவுக்கு வாய்ப்பு இருந்தது. இல்லாவிட்டாலும் பரவாயில்லையென்று கூறி என் இதயத்தில் தேன் பாய்ச்சி அறிக்கை விட்டுள்ளார் அவர்!

நேற்று காலையில் மாவட்டச் செயலாளர்களில் ஒருவரும் இதுவரையில் நாட்டரம்பள்ளி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருப்பவருமான தம்பி மகேந்திரன் என்னை வீட்டிற்கு வந்து சந்தித்து அண்ணே! என் தொகுதியை எம்.ஜி.ஆர். கழகத்திற்கு ஒதுக்கி விட்டீர்களேயென்று ஒரு நாள்

வேதனைப்பட்டேன். இப்போது அந்த வருத்தம் சிறிதுமின்றி உங்களின் வாழ்த்து பெற வந்துள்ளேன். என் தொகுதி கூட்டணிக்குப் போய்விட்டாலும் அந்தக் கூட்டணியின் வேட்பாளர் உட்பட என் நிர்வாகத்தில் உள்ள ஆறு தொகுதிகளிலும் வெற்றியை ஈட்டி வந்து உங்களைச் சந்திக்கிறேன் என்று கூறி என்னை மெய் சிலிர்க்க வைத்தார். கொடி பிடித்துக் கட்சி வளர்த்துச் சிறை சென்று தியாகம் புரிந்த உடன்பிறப்புகளில் ஒருவரல்லவா! எனவே, அந்தத் தம்பியின் தோளைத் தழுவித் தட்டிக் கொடுத்துக் கண்கலங்க வாழ்த்தி அனுப்பினேன். இந்த வாழ்த்து போதுமண்ணே! என்று மகிழ்ச்சி மலர மகேந்திரன் சொன்னபோது என் குரல்தான் தழுதழுத்தது. அவர் குரல் கம்பீரமாகத்தான் இருந்தது.

நேற்று மாலை நானும் பொதுச் செயலாளரும், பொருளாளரும், கழக முன்னோடிகளும் அண்ணா அறிவாலயத்தில் அமர்ந்திருக்கிறோம். இன்றைய திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் தம்பி விஜயன் வருகிறார். என்ன விஜயன்? என்று கேட்கிறேன்.

அண்ணே! நான் வெற்றி பெற்ற தொகுதியை குமரி ஆனந்தன் அவர்களின் தொண்டர் காங்கிரசுக்கு அளித்திருக்கிறீர்கள். அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் எனக்கொரு சந்தேகம்; என் பதவிக் காலத்தில் நான் ஏதேனும் தவறு செய்து விட்டதாகக் கருதினீர்களா என்பதை மட்டும் சொல்வீர்களா?

இல்லை தம்பி! அப்படியொன்றுமில்லை. நீ தவறு செய்யவில்லை. நீ நன்கு பணியாற்றி வைத்திருந்த தொகுதியைக் கூட்டணிக்குத் தந்து விட்டது வேண்டுமானால் என் தவறாக இருக்கலாம்! நீ தவறு செய்யவில்லை;

அது போதும் அண்ணே எனக்கு! நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக உழைத்துக் கூட்டணி வேட்பாளரை வெற்றி பெறச் செய்கிறோம்.

அந்தத் தம்பி விஜயன் விடை பெற்றுச் சென்றதும் எங்கள் அனைவர் கண்களும் காலையில் பனித்துளியுடன் பூத்திருக்கும் மலர்களாகக் காட்சியளித்தன.

என்ன குண்டன்! உங்கள் தொகுதி உதகையை பா.ஜ.க. கேட்கிறதே என்றபோது உவகையுடன் ஒப்புக்கொண்டு என்னை

மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்திய தம்பி குண்டனைத்தான் மறக்க முடியுமா?

இக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ள இருவர் மூவர் மட்டுமல்ல; இக்கழகத்தில் எண்ணற்ற தம்பிமார்கள், என் உயிரினும் மேலான உடன்பிறப்புகள் நேரில் வந்து சந்தித்து விஜயனைப் போல், மகேந்திரனைப் போல் பேசிட வாய்ப்பில்லாத சூழலில் அவர்கள் எங்கிருந்தாலும் எனது சிரமங்களைப் பகிர்ந்து கொண்டு, என் துன்ப துயரங்களைத் துடைத்திடும் தூயவர்கள் இருப்பதால்தான் நானும் இந்த எழுபத்தி ஏழு வயது வரையில் இந்த இயக்கத்தை வளர்க்கும் பணியில் தளர்ச்சியுறாமல் இருக்க முடிகிறது.

தொகுதிப் பங்கீடுகள் ஓரளவு முடிந்துவிட்டது. அடுத்து எந்தத் தொகுதியில் யார் வேட்பாளர் என்பதற்கான பட்டியல் வர இருக்கிறது.

அந்தப் பட்டியலில் இடம் பெறும் வாய்ப்பை யார் பெற்றாலும் அந்தப் பெயருக்குரியவர் நாம்தான் என்ற பெருமனத்தைப் பெற்று, இன்னும் சொல்லப் போனால் நமதண்ணன் கருணாநிதிதான் நமது கூட்டணிக் கட்சிகளின் தொகுதிகள் அனைத்திலும் நிற்கிறான்; பிறகேன் நமக்குக் கவலை எனும் நல் நினைவுடன் தொண்டாற்றிடத் தோள் தட்டிப் புறப்படுக என் கண்மணியே! என உன்னை அழைக்கிறேன்.

எனக்கு வரும் வேதனைகளை, கழகத்திற்கு வரும் சோதனைகளை புராணத்திலே கூறுவார்களே பரமசிவம் பாற்கடலில் தோன்றிய விஷத்தைத் தானே அருந்தி உலகைக் காத்ததாக ஒரு கதை - அதுபோலத் தாங்கிக் கொள்ள நீ இருக்கிறாய் என்ற நம்பிக்கையுடன் தான் என் வாழ்நாளை நகர்த்திக் கொண்டிருக்கிறேன் என்பதை மட்டும் நீயும் உன் போன்ற உடன்பிறப்புகளும் மறந்து விடாதீர்கள்!

அன்புள்ள,

மு. க.

(03-04-2001)

2575. வீண் வேலை மட்டுமல்ல; விபரீத வேலையுங்கூட!

உடன்பிறப்பே,

சில விஷயங்களைப் பெரிதுபடுத்தி விரிசலையும் விரோத உணர்வுகளையும் அதிகப்படுத்தி விடாமல் இருக்க வேண்டுமென்ற மன இயல்பு கொண்டவன் நான் எனினும், உண்மைக்கு மாறான செய்திகளைத் தொடர்ந்து பரப்பிக் கொண்டிருப்பதையே பணியாகக் கொண்டு சிலர் என்னையும், கழகத்தையும் குற்றம் சாட்டிக் கொண்டிருக்கும் போது அதற்கு விளக்கமளித்திட வேண்டிய அவசியம் தவிர்க்க முடியாததாகி விடுகிறது. இல்லையேல் இலாவணிக் கச்சேரிகளை என்றைக்குமே விரும்பாத நான் - சிலவற்றைக் கண்டும் காணாதது போல் இருந்திட அண்ணா அவர்களிடம் கற்றுக் கொண்ட நான், பொது மக்களிடையே குழப்பங்களையேற்படுத்தும் விஷயங்களை இடைவிடாது கூறிக் கொண்டிருப்பவர்களுக்குப் பதில் அளிக்க வேண்டியிருக்கிறது.

"பொய்ப் பழி கூறி என்னை விரட்டி விட்டார்கள். கேட்ட தொகுதிகளைத் தருவதாக வாக்களித்து விட்டு வாக்குறுதி மீறி விட்டார்கள்"

இப்படிப் பேட்டிகளைத் தொடர்ந்து அளித்துக் கொண்டு வருகிறார், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் தம்பி வைகோ அவர்கள்!

இது பற்றி ஏற்கனவே செய்தியாளர்கள் கூட்டத்தில் அவர்களே கையெழுத்திட்டு தந்த ஆதாரபூர்வமான பட்டியல் ஆவணத்தை நான் காட்டி விபரம் கூறியிருக்கிறேன்.

நமது கூட்டணியின் பிரதானக் கட்சிகளில் ஒன்றான பாரதிய ஜனதாக் கட்சியுடன்தான் முதன் முதலாக ஒப்பந்தமே கையெழுத்தானது. ஆரம்பத்தில் அக்கட்சிக்கு 23 தொகுதிகள் என்று உறுதி செய்யப்பட்டு, பின்னர் நமது

வேண்டுகோளுக்கிணங்க 21 தொகுதிகள் என்று குறைத்துக் கொண்டனர். ஐம்பதுக்கு மேற்பட்ட தொகுதிகளின் பெயர் கொண்ட பட்டியலைக் கொடுத்து, அதற்குள் 21 தொகுதிகள் தங்கள் கட்சிக்குத் தேவையெனக் கூறினர். அவ்வாறு வழங்கப்படும்போது மூன்று, நான்கு தொகுதிகளைத் தருவதில் இடையூறு ஏற்பட்டதால் இரண்டொரு நாட்கள் பேச்சுவார்த்தை நடத்திப் பிரச்சினை தீர்க்கப்பட்டது.

பாரதிய ஜனதாவைப் போலவே 21 தொகுதிகளைப் பகிர்ந்து கொள்ளுமாறு என்னிடம் தம்பி வைகோ பேச்சு வார்த்தையில் ஈடுபட்ட போது நான் கேட்டுக் கொண்டேன். இறுதியாக அதற்கு அவரும் ஒப்புதல் அளித்து அவர் கொடுத்துள்ள 43 தொகுதிகளின் பெயர் கொண்ட பட்டியலில் இருந்தே அந்த 21 தொகுதிகளும் ஒதுக்கப்பட வேண்டுமெனக் கூறிச் சென்றார். இதோ அவர் கொடுத்த 43 தொகுதிகள் குறிப்பிடப்பட்ட பட்டியல்; ஆம் ம.தி.மு.க. நிர்வாகிகள் கையொப்பமிட்டுக் கொடுத்த பட்டியல்:-

1. நாகர்கோவில் 2. குளச்சல் 3. சங்கரன்கோவில் 4. கோவில்பட்டி 5. விளாத்திகுளம் 6. சாத்தான்குளம் 7. விருதுநகர் 8. சிவகாசி 9. கம்பம் 10. தேனி 11. சோழவந்தான் 12. காரைக்குடி 13. திருப்பத்தூர் (சிவகங்கை) 14. ஆலங்குடி 15. தஞ்சாவூர் 16. திருச்சி 1 17. முசிறி 18. அரியலூர் 19. பெரம்பலூர் 20. மயிலாடுதுறை 21. சிதம்பரம் 22. செஞ்சி 23. திண்டிவனம் 24. அரவாக்குறிச்சி 25. கரூர் 26. சத்தியமங்கலம் 27. ஈரோடு 28. தொண்டாமுத்தூர் 29. கோவை கிழக்கு 30. திருப்பூர் 31. உடுமலைப்பேட்டை 32. கபிலர்மலை 33. தர்மபுரி 34. பாலக்கோடு 35. திருப்பத்தூர் (வ.ஆ) 36. குடியாத்தம் 37. பூவிருந்தவல்லி 38. வில்லிவாக்கம் 39. திருப்போரூர் 40. தாம்பரம் அல்லது ஆலந்தூர் 41. தியாகராயநகர் 42. மயிலாப்பூர் 43. இராயபுரம்

தம்பிகள் எல். கணேசன், செஞ்சி ராமச்சந்திரன், கே.எஸ். ராதாகிருஷ்ணன் ஆகிய நிர்வாகிகள் கையெழுத்திட்டுத் தந்த பட்டியல்தான் இது! அதில் மூன்று தொகுதிகள் நீங்கலாக 18 தொகுதிகளுக்கான பெயர்களைப் பட்டியலிட்டு - விடுபட்டுள்ள மூன்று தொகுதிகளுக்குப் பதிலாக வேறு தொகுதிகளை குறிப்பிட்டு, அதிலே பிரச்சினையிருந்தால் அந்த மூன்றையும் பற்றிப் பேசி முடிவு செய்து கொள்ளலாம் என்றும் என்னைச்

சந்தித்த வைகோ அவர்களிடம் நானும் பேராசிரியர் அவர்களும் எடுத்துச் சொன்னோம்.

முக்கியமாக "சங்கரன்கோயில் தனித் தொகுதி" இடம் பெறவில்லையே என்பதற்காக வைகோ மிகுந்த ஆத்திரப் பட்டார். புதிய தமிழகக் கட்சி அத்தொகுதியைப் பிடிவாத மாகக் கேட்பதை வைகோவிடம் விளக்கியதோடு, "முதலில் இந்தப் பட்டியலை உங்கள் கட்சி நிர்வாகிகளிடம் காட்டி விவாதித்து விட்டு, பிறகு சந்தியுங்கள். கலந்து பேசி முடிவெடுப்போம்" என்று கேட்டுக் கொண்டோம். அவரோ பேச்சை முறித்துக் கொள்வது போல சீற்றத்துடன் எழுந்து அண்ணா அறிவாலயத்தை விட்டு வேகமாக வெளியேறி விட்டார். வைகோ கோபமாக வெளியேறினார் என்று சில ஏடுகளும் செய்தி வெளியிட்டன.

இந்த நிகழ்ச்சிக்கு இரண்டு நாட்களுக்கு முன்பிருந்தே ம.தி.மு.க.வினரால் பல ஊர்களில் எதிர்ப்பு சுவரொட்டிகள் - "தனித்து நிற்போம் தன்மானம் காப்போம்" என்ற வாசகங் களைத் தாங்கி ஒட்டப்பட்டு விட்டன. கருணாநிதியை செயிண்ட் ஜார்ஜ் கோட்டைக்கல்ல; பாளையங்-கோட்டைக்குத்தான் அனுப்புவோம் என்பது போன்ற வாழ்த்து கோஷங்கள்!

உடன்பிறப்பே, என்ன தவறு நடந்து விட்டது? ஏன் இப்படி ஆத்திரம் தூண்டிவிடப்பட்டது?

அவர்கள் கொடுத்த 43 தொகுதிகள் அடங்கிய பட்டியலில் நாம் குறித்துக் கொடுத்த 18 தொகுதிகளும்; அவர்கள் கொடுத்த பட்டியலில் இடம் பெற்றவைதானே! இதோ, அந்தப் பட்டியலையும் பார்த்திடுக!

1. நாகர்கோவில் 2. கோவில்பட்டி 3. விளாத்திகுளம் 4. சிவகாசி 5. சோழவந்தான் 6. திருப்பத்தூர் (சிவகங்கை) 7. ஆலங்குடி 8. முசிறி 9. பெரம்பலூர் 10. மயிலாடுதுறை 11. சிதம்பரம் 12. செஞ்சி 13. அரவாக்குறிச்சி 14. சத்தியமங்கலம் 15. தொண்டாமுத்தூர் 16. பாலக்கோடு 17. குடியாத்தம் 18. பூவிருந்தவல்லி

இவையன்னியில்

1. சேரன்மாதேவி 2. சங்ககிரி 3. ஓமலூர் அல்லது தாரமங்கலம்

ஆகிய நான்கு தொகுதிகளில் மூன்று தொகுதிகளையும் தருவதற்கு ஒப்புக் கொண்டு, இவற்றில் பிரச்சினையிருந்தால்

- மற்ற தோழமைக் கட்சிகளுடன் கலந்து பேசி நல்ல முடிவுக்கு வந்தது போல வரலாம் என்று கூறியதை அலட்சியப்படுத்தி விட்டு, என் கொடும்பாவி கொளுத்துவதையே இலட்சியமாகக் கொண்டது ஏன்?

பா.ஜ.க. கொடுத்த பட்டியலில் மொத்தம் ஐம்பது தொகுதிகள் - முடிவானவை 21; புதிய தமிழகம் பட்டியலில் மொத்தம் 33 தொகுதிகள் - முடிவானவை 10; விடுதலை சிறுத்தைகளின் பட்டியலில் மொத்தம் 31 இடங்கள் - முடிவானவை 8; இப்படி ஒவ்வொரு கட்சியும் பெரிய பட்டியல்களைக் கொடுத்து விட்டு உரிய இடங்களைப் பகிர்ந்து கொண்டது போலவும் அவற்றில் ஏற்பட்ட சிக்கல்களைப் பேசித் தீர்த்துக் கொண்டது போலவும் அல்லாமல் ம.தி.மு.க. மட்டும் தனி வழி கண்டு தி.மு.க.வைத் தரக் குறைவாக இழித்தும் பழித்தும் உருவப் பொம்மை எரித்தும் திட்டமிட்டு வெளியேறிவிட்டு - வெளியேற்றப்பட்டதாக, விரட்டப்பட்டதாக இட்டுக் கட்டிச் செய்திகளைப் பரப்புவதுதான் இதயத்தில் ஆயிரம் ஈட்டிகளைப் பாய்ச்சுவது போல் இருக்கிறது.

இனி இது குறித்து நான் எதுவும் சொல்வதற்கில்லை; மதம் பிடித்த யானையை வேட்டையாட வேலேந்திச் செல்லும் வேளையில் மான் மீதும் மயில் மீதும் வேல் எறிவது வீண் வேலை மட்டுமல்ல, விபரீத வேலையுங் கூட அல்லவா!

அன்புள்ள,

மு.க.

5-4-2001

2576. கொட்டுவோம் முரசு:
கோட்டையில் மீண்டும் நமது அரசு!

உடன்பிறப்பே,

தேர்தலில் தமிழகத்திலும் புதுவையிலும் போட்டியிட வேண்டுமென்று விருப்பம் தெரிவித்துத் தங்களைப் பற்றிய விபரங்களுடன் தலைமைக் கழகத்திற்கு உரிய கட்டணத்துடன் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட கழக உடன்பிறப்புகள் விண்ணப்பித்திருந்தனர். பத்து நாட்களுக்கு மேலாக அவர்களை ஒவ்வொருவராக அழைத்து நேர்காணல் மூலம் விபரங்களை அறிந்தோம்.

இந்த அயராப் பணிக்கிடையேதான் நமது கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களையும் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடி எந்தக் கட்சிக்கு எத்தனை தொகுதி என்ற பட்டியலை வெளியிட்டோம்.

தி.மு. கழகத்திற்குப் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ள தொகுதிகளுக்கான கழக வேட்பாளர்கள் யார் என்பதைத் தேர்வு செய்யும் வேலையில் இப்போது ஈடுபட்டிருக்கிறோம். இன்னும் ஓரிரு நாட்களில் இறுதிப் பட்டியல் தயாராகி விடும்.

நமது தோழமைக் கட்சிகளும் நம்முடன் தொகுதிப் பங்கீட்டை முதலிலேயே முடித்துக்கொண்டு, அந்தந்தக் கட்சிகளின் வேட்பாளர் பட்டியலைத் தயாரித்துக் கொண்டிருக்கின்றன.

மாற்று முகாமில், ஏதோ வாயு வேக மனோவேகத்தில் தேர்தல் பணிகளைத் தொடங்கி நடத்துவது போலச் செய்திகள் பரப்பப்பட்டாலுங்கூட இன்னமும் தோழமைக் கட்சிகளின் மதிப்புக்குரிய நண்பர்கள், தாங்கள் பெற்றுள்ள மிகச் சில இடங்களின் எண்ணிக்கையில் கூட அந்த இடங்கள் எவை எவை என்பதை அறிந்து கொள்ளும் விபரம் கிடைக்காமல் அலைந்து

தவித்துக் கொண்டிருப்பதைக் காணும் போதும், கேட்கும் போதும் - "அந்தோ! இவர்களுக்கா இந்த நிலைமை!" என்று மன வருத்தம் ஏற்படத்தான் செய்கிறது. அவர்களாகத் தேடிக்கொண்ட அவலத்திற்கு நாம் வருந்துவதாலோ அல்லது அவர்களே வருந்து வதாலோ என்ன பயன் விளைந்து விடப் போகிறது?

ஒருவேளை அந்நிலையை நான் இந்தக் கடிதத்தில் குறிப்பிட்டு சுட்டிக் காட்டுவதாலேயே அவர்களின் வேதனைக்கு ஒரு விடிவு காலம் விரைவில் ஏற்படுமென்றே நம்புகிறேன். அப்படி ஏற்படின் அவர்கள் தங்கள் மனத்திற்குள்ளாகவே எனக்கு நன்றி கூறிக் கொள்வர்.

எதிர் எதிர் அணிகளில் நிற்கும் போதுகூட அந்தத் தலைவர்கள் சிலருக்காக நான் பரிந்து பேசுவதும் - பிரலாபிப்பதும் ஏன் என்று நீ என்னிடம் ஆதங்கம் கொள்ளக் கூடும். அந்தச் சில தலைவர்களின் சிறப்பும் பெருமையும் அவர்கள் பொது வாழ்வுப் பணி பற்றிய வரலாற்று விபரங்களையும் நானறிவேன், இந்த நாடும் அறியுமல்லவா!

விடுதலைப் போரில் விழுப்புண் ஏற்றவர்கள் - சிறை பல கண்ட செம்மல்கள் - விவசாயத் தொழிலாளர்களுக்காக, வெகு பாட்டாளி மக்களின் கோரிக்கைகளுக்காக வயல் வெளிகளிலும், ஆலை வாசல்களிலும் கொடி தூக்கிப் போராடியவர்கள் அதனால் சிறை புகுந்த சீயங்கள் - இத்தனை கீர்த்திகளும் கேட்பாரற்றுக் காண்பாரற்று ஏன், மதிப்பாரற்றுப் போவதை அவர்களின் தோளோடு தோள் நின்று தோழமையுடன் களம் பல கண்ட இந்த நண்பனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லைதான் எனினும்; அதே கவலையில் அவர்களுக்காகக் கன்னத்தில் கை வைத்துக் கொண்டு முழங்காலைக் கட்டிக் கொண்டு நமது பணிகளை மறந்து முடங்கிக் கிடக்க முடியாதல்லவா!

ஒரு காலம் வரும் - உண்மைகள் ஒளியுமிழ்ந்து வெளிக் கிளம்பும் - அப்போது உணர்வர், நம்முடன் இப்போது உரசிக் கொண்டிருப்பவர்கள் என்ற நம்பிக்கையுடன், நாம் நமது அடுத்த கட்டப் பணியாக திருச்சியில் வருகிற ஒன்பதாம் தேதி தேர்தல் பிரச்சாரத் தொடக்க விழா மாநாட்டை நடத்த இருக்கிறோம்

திருச்சியில் நாம் "அண்ணா நகர்" என்று பெயர் சூட்டி, கொட்டப்பட்டு மைதானத்தில் 1996ஆம் ஆண்டு நடத்திய

மாநாடு உனக்கு நினைவிருக்கிறதா? அப்பொழுது எந்தத் தம்பி நேருவின் பொறுப்பில் அந்த மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றதோ அதே இடத்தில் அதே நேருவின் மேற்பார்வையில் இப்போதும் நடைபெற இருக்கிறது.

நேற்று சேலத்துக்கு என்னிடம் விடைபெற்றுச் செல்லும் போது தம்பி வீரபாண்டி ஆறுமுகம், "திருச்சி தேர்தல் பிரச்சார மாநாட்டுக்கு உடன்பிறப்புகளை அழைத்து கடிதங்கள் எழுதுங்கள் அண்ணே !" என்று கூறிப் புறப்பட்டார்.

மாநாடு நடத்துகிறோம் என்றாலே, ஏதோ மணவிழாவுக்கு அழைப்பு அனுப்புவது போல உன் போன்ற உடன்பிறப்புகளுக்கு மடல் தீட்டுகிற வழக்கத்தை நமது அண்ணன் நாநிலம் போற்றும் சிந்தனை மன்னன் உருவாக்கியதை நான் தொடர்ந்து பின்பற்றி வருகிறேனல்லவா?

கடிதத்தைப் படிக்கிற உடன்பிறப்புகள் (படிக்காத உடன்பிறப்புகளையும் அறிவேன்) என் வேண்டுகோளைக் கட்டளையாக ஏற்று கடல் மடை திறந்தாற்போல நமது கழக விழாக்களில் மாநாடுகளில் கூடிடும் இயல்பையொட்டி, இன்று நான் விடுத்திடும் அழைப்போலையை ஏற்று திருச்சிக்கு வருவாய் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறேன்.

மாநாடு என்பதால் மைதானம் முழுவதும் பந்தலிட்டு, காலை முதல் இரவு முடிய நடைபெறும் நமது வழக்கமான மாநாடு அல்ல இப்போது திருச்சியில் நடைபெறப்போவது திறந்தவெளி மாநாடு. அதாவது; முத்தமிழ்க் காவலர் (கி.ஆ.பெ. வளாகத்தில் என் அருமைத் தம்பி அன்பில் பொய்யாமொழி அரங்கில் நடைபெறும் இந்த மாநாட்டில், நானும், நமது பொதுச் செயலாளர் பேராசிரியரும், பொருளாளர் ஆர்க்காடும் கழக முன்னணியினரும் மட்டுமல்லாது கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.

சட்டமன்றப் பொதுத் தேர்தல் களத்தில் இறங்குவதற்கான - முரசம் கொட்டப்பட இருக்கிறது. கொட்டப்பட்டு மைதானத்து அண்ணா நகரில் - ஆம் கோட்டையில் மீண்டும் நமது நல்லரசு அமைந்திட கொட்டப்பட்டில் கொட்டுவோம் முரசு" என முழங்கிட வருக என உடன்பிறப்பே உன்னை அழைக்கிறேன்.

“விளைவயலின் நெற்கதிரை
வளையினிலே பதுக்குகின்ற
எலிக்கூட்டம் தமை ஒழிக்க
புலிப்போத்தாய் வாருங்கள்!

தேர்க்காலில் மடுத்தாலும்
குறிக்கோளை இழக்காத
போர்க்காலப் புலிகளெலாம்
ஆர்ப்பரித்தே வாருங்கள்!

தாய்த்திரு நாடு, இனம், மொழியை
காப்பதற்கே ஆர்த்தெழுந்து
ஆயிரத் தெட்டு அண்டங்களும்
கிடுகிடுக்க வாருங்கள்! .

வஞ்சத்தைக் குலைக்கும் புயல்!
சூழ்ச்சிகளைத் தகர்க்கும் இடி
வஞ்சின(ம்) முரைத்து வெற்றி
வாகைசூட வாருங்கள்!

என்று கவிஞர் தம்பி தனசேகரன் தீட்டியுள்ள கவிதை வரிகளை என் நெஞ்சில் பதித்து உன்னை அழைக்கிறேன் - உன் வஞ்சியுடன் வா. உள்ளைக் கொஞ்சி மகிழ்ந்து வளர்த்த தாய் தந்தையுடனும்; நீ கொஞ்சி மகிழும் குழந்தையுடனும் வா, வா, கொட்டப்பட்டு நோக்கி வா

கொட்டுவோம் முரசு கோட்டையில்
மீண்டும் நமது அரசு’ என்று.

அன்புள்ள,

மு.க.

06-04-2001

2577. வழிகாண விழி விரித்துக் கிளம்புக திருச்சிக்கு!

உடன்பிறப்பே,

பேருந்துகளிலோ, புகைவண்டிகளிலோ, வேன் போன்ற எந்தவகைப் பயண வசதிகளை மேற்கொண்டோ நீ திருச்சி மாநாட்டுக்குப் புறப்படுவதற்கும், வந்து சேர்வதற்கும், இடையிலே ஒரு நாள் மட்டுமே இருக்கிறது. திருச்சி மாநாடு இத்திங்கள் 9ந்தேதி நடைபெற இருப்பதற்கும், தேர்தல் வாக்களிக்கும் நாள் அடுத்த திங்கள் 10ஆம் தேதிக்குமிடையே ஒரு மாதகாலம் தேர்தல் பணிகளுக்கென இருப்பினும், வேட்புமனு தாக்கல் செய்து அதற்கான விதிமுறைப்படியான நடவடிக்கைகள் முடிவுற்றுத் தேர்தல் பிரச்சாரத்திற்கென இருக்கும் நாட்கள் அதிகமில்லை எனினும் நமது மாவட்டக் கழக, ஒன்றியக் கழக, கிளைக்கழக அமைப்புகளின் சார்பாகவும், அணிகளின் சார்பாகவும், பிரச்சாரத்தைத் தொடங்கியிருப்பாய், இல்லையேல் தொடங்கிடுவாய் என்று நான் நம்புகிறேன்.

இப்போதே நம்மீது எரிச்சல் கொண்டோர் - உண்மையான திராவிட இயக்க உணர்வு கொண்ட இக்கழகத்தை நசுக்கிட வேண்டுமெனும் நச்சு நினைவு படைத்தோர் நாம் பெற இருக்கிற வெற்றியில் ஐயப்பாட்டை உருவாக்கிடும் முயற்சியில் ஈடுபட்டு வாக்காளர் பெருமக்களைக் குழப்பும் பணியில் இறங்கியுள்ளனர்.

நல்லெண்ணத்துடன் நாம் உருவாக்கிய கூட்டணியிலிருந்து சில கட்சிகள் விலகிவிட்டதைக் காரணமாகக் காட்டி கழகம் வலிவற்றுப் போய்விட்டது; எனவே வெற்றி பெற வழியில்லையென்று புள்ளி விபரங்களை அள்ளித் தெளித்திடப் புறப்பட்டு விட்டார்கள். இந்த விஷமப் பிரச்சாரத்திற்கான வேர் எங்கிருந்து கிளம்பியுள்ளது, அந்த வேரை நடுவதற்குக் காரணகர்த்தா யார் என்பதையும், அதற்கெனக் கணக்கின்றிப்

பெரும்பொருள் செலவிடப்பட்டிருப்பதையும் நான் நன்றாகவே அறிவேன்.

புள்ளிவிபரம் ஒருபுறம் இருக்கட்டும்; இன்னொரு தவறான பிரச்சாரத்தையும் சில ஏடுகள் பரப்பத் தொடங்கியிருக்கின்றனவே; அதுபற்றித்தான் நான் உனக்கு விளக்கமளிக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

பாரதிய ஜனதா கட்சி வேட்பாளர்களுக்கு தி.மு.க.வினர் வாக்களிப்பார்கள் என்றும் - ஆனால் பா.ஜ.க.வினரும் பா.ஜ.க. ஆதரவாளர்களும் தி.மு.க.வுக்கு வாக்களிக்கமாட்டார்கள் என்றும்; நரித்தந்திர வதந்தியொன்றை அந்த ஏடுகள் பரப்பத் தொடங்கியுள்ளன.

ஆரம்பகாலத்திலும் சரி; இப்போதும் சரி - பாரதிய ஜனதா கட்சிக்கும் தி.மு.க.வுக்குமிடையே கொள்கை வேறுபாடுகள் உண்டெனினும், இன்று சேர்ந்துள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு, முரண்பாடில்லாத கொள்கை கோட்பாடுதான் என்பதை நான் பலமுறை சுட்டிக்காட்டியிருக்கிறேன்.

முன்பெல்லாம் பாரதிய ஜனதா கட்சிக்கு எதிரான நடைமுறைகளில் தி.மு.க. திகழ்ந்தபோதும் கூட, ஒரு முடிவை பா.ஜ.க. கட்சியினர் கலந்து பேசி எடுத்துவிட்டால், அதைக் கட்டுப்பாடாக நிறைவேற்றக்கூடிய மனஉறுதியும், மனத்தூய்மையும் படைத்தவர்கள் என்பதை நான் நமது கழக முன்னணியினரிடம் பலமுறை பாராட்டிப் புகழ்ந்திருக்கிறேன். எதிர்ப்பதாயினும், ஆதரிப்பதாயினும் இரண்டிலும் உறுதியாக இருப்பது பாரதிய ஜனதாக் கட்சியின் பண்பு என்பதை எவரும் மறுக்க இயலாது. அனுபவரீதியாகக் காணக்கூடிய இந்த உண்மையைக்கூட மறைத்து அந்தக் கட்சியின் முன்னணிச் செயல்வீரர்களையும், தொண்டர்களையும் ஆதரவாளர்களையும் களங்கப்படுத்துவதன் மூலம் கழகத்தினருக்கு ஒரு சோர்வையும் - வாக்காளப் பெருமக்களுக்கு ஓர் அவநம்பிக்கையையும் ஏற்படுத்தித் தங்களின் அன்பையும், ஆசியையும் பெற்ற அணிக்கு ஆதாயத்தையும் தேடிக் கொள்வதற்காக இந்த அநாகரீகமான சூழ்ச்சியில் ஈடுபடுகிறவர்களைக் கண்டு அனுதாபப்படத்தான் தோன்றுகிறது.

ம.தி.மு.க. தம்பிமார்களுக்கும் நமக்குமிடையே இந்தக் கூட்டணிப் பேச்சுவார்த்தையில் மனச்சங்கடம் விளைவிக்கும் நிகழ்வுகள் ஏற்பட்டு அவர்கள் அணியிலிருந்து விலகியுள்ளதைக் காட்டி, ஆகா! ஊஹூ! கழகத்தின் வெற்றிவாய்ப்பு அறவே போய்விட்டது என்று சிலர் ஆகாயத்துக்கும் பூமிக்குமாக குதித்து மகிழ்கிறார்கள். ஒருசிலரோ நண்பர் சிதம்பரம் அவர்களைப் போல, திரு. வெங்கய்யா நாயுடு அவர்களைப் போல, ஒரு வாரத்துக்கு முன்பே உள்ளம் திறந்து பேட்டி கொடுத்த திரு. ஜனா கிருஷ்ணமூர்த்தி அவர்களைப்போல வருத்தமும் கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களின் கருத்தை அலட்சியப்படுத்துகிற அளவுக்கு ஆணவம் கொண்டவனல்ல என்பதை என் அருமை உடன்பிறப்பே நீ நன்றாகவே அறிவாய்!

ம.தி.மு.க.வினர் பிரிந்துவிட்டதைத்தான் மாற்றார் மகிழ்ச்சியுடன் வரவேற்றுப் பேசி, கழகம் இனி அவ்வளவுதான் என்று கணக்கிடுகிறார்களே தவிர, நமது அணியில் இடம்பெற்றுள்ள புதிய தமிழகம் ஆனாலும் - விடுதலைச் சிறுத்தைகள் இயக்கம் ஆனாலும், அவை கடந்தகாலத் தேர்தல்களில் பெற்றுள்ள வாக்குகளின் எண்ணிக்கை வலிமையை மறந்து விடுகிறார்கள் என்று கூறமுடியாது, மறைத்துவிட முனைகிறார்கள் என்பதே உண்மை.

இஃதன்னியில் எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. - எம்.ஜி.ஆர். கழகம் - மக்கள் தமிழ் தேசம் - தமிழக முஸ்லீம் ஐக்கிய ஜமாம் - தி.மு.க. ஆதரவு நண்பர்கள் - தொண்டர் காங்கிரஸ் - உழவர் உழைப்பாளர் கட்சி - கொங்குநாடு மக்கள் கட்சி - உழவர் உழைப்பாளர் கட்சி - முத்தரையர் சங்கம் - தமிழர் பூமி ஆகிய அமைப்புகளும் நமது அணியில் உள்ளன. மற்றும் பல்வேறு அமைப்புகளின் ஆதரவும் பெருகி வருகிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக, வழக்கத்திற்கு மாறாக எந்தவொரு அரசுக்கும் இல்லாத அளவுக்கு நமது அரசுக்கு மக்கள் நலத்திட்டங்களின் காரணமாகப் பொதுமக்களிடத்தில் அபரிதமான ஆதரவு குவிந்திருக்கிறது.

எனவே, வெற்றி குறித்துச் சிறு சந்தேகமும் இல்லாமல் நடைபோடும் கழகத்திற்கு ஆதரவு தருவதுபோல் அணியில் இணைந்துகொண்டே வேறுகட்சிக்கு பா.ஜ.க.வினர் ஆதரவு

தருவார்கள், வாக்களிப்பார்கள் என்று சிலர் கலகம் விளைவிக்க எண்ணுவது அவர்கள் காணும் பகற்கனவாகவே முடியும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

உடன்பிறப்பே,

நமது பாதை சரியாக இருக்கிறது - பயணமும் வெற்றிகரமாக நிறைவுறும் அறிகுறிகள் தெரிகின்றன. தெளிவாக - திறந்த மனத்துடன் நமது தோளொடு தோள் நின்று தொண்டாற்றும் பா.ஜ.க.வினர் மீது வீண்பழி சுமத்தி நமது வெற்றிப்பாதையில் குறுக்கே நிற்க முனைவோர் தங்களின் குள்ள நினைப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துக்கொள்வது நல்லது.

இப்படிப் பல வதந்திகள், உண்மையான மாறான பிரச்சாரங்கள், இட்டுக்கட்டிடும் புள்ளிவிபரங்கள், மேலும் ஏச்சுக்கள், பேச்சுக்கள், இழிமொழிகள் - ஏராளமாக, தாராளமாக நம் எதிரே குவியும்!

அவற்றை அற்பமெனத் தள்ளிடவும், அயர்வுறாமல் நமது இலட்சியத்தை வென்றெடுக்கவும் - நமக்குரிய முறைகளில் ஒன்றான தேர்தல் எனும் ஜனநாயக முறையில் கீர்த்திக் கொடி நாட்டிட வழிகாண, விழி விரித்துக் கிளம்புக திருச்சிக்கு!

அன்புள்ள,

மு. க.

(08-04-2001)

2578. வேறென்ன நம்மால் ஆறுதல் கூறமுடியும்?

உடன்பிறப்பே,

இரண்டு விருந்து நிகழ்ச்சிகள் இரண்டு வீடுகளில் - ஒன்று எளிய மனிதன் ஒருவனின் வீடு - மற்றொரு வீடோ ஏழடுக்கு மாளிகையொன்று நடுவில் அமைந்த எழிலார் தோட்டம் - இந்த இரண்டு விருந்துகளுக்கும் தங்களின் சொந்தக்காரர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. விருந்துகள் இரண்டும் ஒரே நாளில் அல்ல; வெவ்வேறு நாட்களில்! வெவ்வேறு வீடுகளில் என்பதைத்தான் முதலிலேயே விளக்கியிருக்கிறேன்.

குறிப்பிட்ட தேதியில் எளியோன் வீட்டு விருந்துக்கு அழைக்கப்பட்ட விருந்தினர் அனைவரும் வந்தனர். வீட்டு வாசலில் நின்று கரங்கூப்பி அவர்களை வரவேற்று மகிழ்ந்து, வீட்டுக் கூடத்தில் அமைக்கப்பட்டிருந்த விருந்து மேஜையைச் சுற்றி போடப்பட்டிருந்த நாற்காலிகளில் அமர வைத்தான். அவர்களுடன் அந்த எளியோனும் உட்கார்ந்து கொண்டு அவரவர்களுக்குத் தேவையான உணவுப் பண்டங்களைப் பரிமாறச் செய்வதில் அக்கறையும் ஆர்வமும் காட்டினான். எல்லோரும் ஒரே நேரத்தில் விருந்து அருந்திட அழைக்கப்பட்டதிலும், விருந்தினர்கள் அன்புடனும், மரியாதையுடனும் கவனிக்கப்பட்டதிலும் சொந்தக்காரர்கள் மிகவும் இன்புற்று மகிழ்ந்தனர்.

அனைவரும் உண்டு முடிக்கும் வரையில் தானும் அவர்களுடன் அமர்ந்து விருந்தருந்தி அனைவரும் எழுந்த பிறகே அவனும் எழுந்து, பின்னர் வரவேற்பறையில் அவர்களுக்கு வெற்றிலைத்தாம்பூலம், சந்தனம் ஆகியவற்றை அளித்து வழியனுப்பி வைத்தது வரையில் அந்த எளியோன் காட்டிய பண்பாட்டில் கவரப்பட்ட உறவினர்கள் அனைவரும் அவனுக்கு நன்றி தெரிவித்துப் புன்னகை தவழ விடைபெற்றுப் புறப்பட்டனர்.

அடுத்த சிலநாட்களுக்குப் பிறகு நடைபெற்ற அந்த இரண்டாவது விருந்து நிகழ்ச்சியைச் சற்றுக் கவனிப்போமே!

விருந்துக்கு வந்தோர் அனைவரும் தோட்டத்துக் கதவோரம் நின்றுகொண்டும், அயர்ந்தோர் அந்தக் கதவில் சாய்ந்துக் கொண்டும் - தோட்டத்தின் நடுவிலுள்ள மாளிகையிலிருந்து அழைப்புக் கூப்பாடு ஏதாவது வருகிறதா என எதிர்பார்த்துச் செவிகளை நீட்டிக் கொண்டிருந்தனர். நீண்ட நேரமாகியும் எந்தவிதமான ஜாடையும் அழைப்புக்காகக் காட்டப்படவில்லை. காதுகள் வளைந்து போயின ஒலி ஏதேனும் வருகிறதா என எதிர்பார்த்து! கண்கள் பூத்துப் போயின மாளிகை ஜன்னல் வழியாகாவாவது ஏதாவது ஒரு கரம் அசைகிறதா எனப்பார்த்து!

இறுதியாக விருந்தாளிகளில் ஒருசிலர் அசட்டுத் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு, தோட்டத்துச் செடிகொடிகளை விலக்கிக் கொண்டு, மாளிகைச் சுவரோரம் சென்று பலகணியொன்றின் வழியே உள்ளே பார்த்தனர்.

என்ன ஆச்சரியம்! விருந்துக்கு அழைக்கப்பட்டோர் நாவில் உமிழ்நீர் ஊறிடக் காத்திருக்க; விருந்துக்கு அழைத்த சீமான் மட்டும் மாளிகையில் விருந்து மண்டபத்தில் அமர்ந்து தனக்கு மட்டுமே போடப்பட்ட தனி இலையில் விருந்தருந்திக்கொண்டிருந்த காட்சியினை பலகணி வழியே பார்த்தவர்கள் பதைத்துப் போயினர்.

எல்லோரையும் அழைத்துவிட்டு இப்படியொரு அநாகரீகச் செயலா? அவமானப்படுத்தும் நிகழ்வா? ஆத்திரச் சொற்களும், முணுமுணுப்புகளும் அந்தக் கூட்டத்தில் எழுந்தன. அப்போது மாளிகையின் கதவு திறந்தது.

பெரும் எதிர்பார்ப்பு! எல்லோரையும் உள்ளே அழைக்கப் போகிறார்கள் என்று!

ஆனால் நடந்தது வேறு; கதவைத் திறந்துகொண்டு வந்த வேலைக்காரி அந்த நிலைப்படியோரம் நின்றவாறு உள்ளே சீமான் சாப்பிட்டு முடித்த அந்த ஒரு இலையைக் கொண்டுவந்து வெளியே வீசிவிட்டு, கதவை மூடிக்கொண்டு போய்விட்டாள்.

எச்சில் இலையில் கிடந்த மிச்சத்தை அருந்திடக் காக்கைகள் ஒன்றுக்கொன்று ஒற்றுமையாகப் போட்டியிட்டுக் கொண்டிருந்தன.

என்ன இது; இரண்டு விருந்து நிகழ்ச்சிகள் பற்றிய வேடிக்கையான கதை! இதை எதற்குச் சொல்ல வந்தாய்? உடன்பிறப்பே; நீ கேட்பது என் காதில் விழுகிறது! சரி; கதையை மறந்துவிடு!

தேர்தல் நேரம் இது. கட்சிகளின் கூட்டணிகள் உருவாகியிருக்கின்றன. பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து கொண்டும் - முடிவாகிக்கொண்டும் - அவை குறித்த அறிவிப்புகள் வெளிவந்துகொண்டும் இருக்கின்றன.

எளியோனாகிய என் தலைமையிலும் ஒரு கூட்டணி - அக்கூட்டணியில் நம்முடன் இணைந்திருக்க விரும்பியோர் இறுதிவரை இருக்கின்றனர். சிலர், இல்லை! வருந்தத்தக்க நிகழ்வுதான்!

யார் யாருக்கு எத்தனை தொகுதிகள் என்று பேசினோம் - பேசி எடுத்த முடிவை அறிவித்தோம் - பிறகு எண்ணிக்கை எத்தனை என அறிவித்தால் மட்டும் போதாது; எந்த எந்தத் தொகுதிகள் என்பதைப் பெயர்களுடன் இந்த எளியோன் அறிவித்தேன். எல்லாக் கட்சிகளின் பெயர்களையும் குறிப்பிட்டு ஒவ்வொரு கட்சிக்கும் பகிர்ந்து கொள்ளப்பட்ட தொகுதிகளின் பெயர்களும் ஒரேநாளில் அறிவிக்கப்பட்டுள்ளன. எந்தெந்தத் தொகுதிகளின் பெயர்கள் என் அறிவிப்பில் இடம்பெறும் என்று ஒவ்வொரு கட்சிக்கும் முன்கூட்டியே தெரியும். அவர்களின் ஒப்புதலுடன்தான் அந்தப் பட்டியல் ஏப்ரல் 2ஆம் தேதி ஏடுகளில் வெளியிடப்பட்டது. ஆம்; இது எளியோன் வீட்டு விருந்து! முறைப்படி நடந்தது!

இன்னொரு கூட்டணியின் தலைவர் அறிவித்த பட்டியல் - மாளிகைத் தோட்டத்து விருந்துபோல அமைந்தது!

அழைக்கப்பட்டோர் யாரும் உள்ளே நுழைய அனுமதியில்லை - அழைத்தவரோ ஓரிலை மட்டும் போட்டுக்கொண்டு ஒய்யாரமாக உணவருந்தி மகிழ்ந்து வேலைக்காரியைவிட்டு இலையை மட்டும் வெளியே எறியச் செய்திருக்கிறார்.

விருந்துக்கே அனுமதிக்காதபோது, இலைப் பொத்தல் என்று விமர்சிக்கத் விருந்தருந்தச் சென்றோருக்கு உரிமை உண்டா? கிடையாதே! இந்த நிலையில் இந்த எளியோன் வருந்திடுவதைத்

தவிர வேறென்ன ஆறுதல் கூறமுடியும்; விருந்தையெண்ணி வருந்திக் கொண்டிருப்போருக்கு?

அன்புள்ள,

மு. க.

(09-04-2001)

பின்குறிப்பு : தி.மு.க. வெற்றி பெற்றிருந்த தொகுதிகள் 26ஐ தோழமைக் கட்சிகளுக்கு விட்டுக்கொடுத்து கூட்டணி அமைத்துள்ளது. எதிரணியிலோ வெற்றி பெற்றிருந்த இடம் 21ஐ த.மா.கா.விடமிருந்து, 3 இடங்களை இந்திய கம்யூனிஸ்டுகளிடமிருந்தும் பறித்துக்கொண்டு ஒரு கூட்டணிப் பட்டியல் வெளிவந்துள்ளது. நமது அணியில் ஒரு மூன்று தொகுதிகள் பிரச்சனையை பேசி தீர்த்துக் கொள்ளலாமென உறுதியளித்தும், இங்கே முடியாதெனக் கூறி வெளியேறி விட்டது ஒரு கட்சி! எல்லாம் நம் ராசிதான்!

2579. அணிவகுத்து நிற்கிறோம்; பணி முடித்து திரும்புவோம்!

உடன்பிறப்பே,

“கிளம்பிற்று காண் தமிழச் சிங்கக் கூட்டம்!” என்று சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்பு திருவாரூரில் நான் முன்னின்று நடத்திய தமிழ் மாணவர் மன்றப் பேரணி விழாவுக்குப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுதியனுப்பிய வாழ்த்துக்கு எடுத்துக்காட்டாக அமைந்தது திருச்சியில் இத்திங்கள் ஒன்பதாம் நாள் நடைபெற்ற தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தேர்தல் பிரச்சாரத் தொடக்க விழாவுக்கான தி.மு.க. திறந்த வெளி மாநாடு!

தம்பி நேருவும் மாவட்ட, நகரக் கழகச் செயலாளர்களும் நான்கைந்து நாட்கள் இடைவெளியில் இந்த மாநாட்டை இவ்வளவு சிறப்பாக நடத்தி வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்கிறபோது பாராட்டு மழையிலே அவர்களைக் குளிப்பாட்டி மகிழலாம் என்றே தோன்றுகிறது.

திருச்சியில் நாங்கள் தங்கியிருந்த சங்கம் விடுதியிலிருந்து மாநாட்டு முகப்பை எட்டுவதற்குள் பாதையின் இருபுறமும் துள்ளிக்குதித்து மலர்களை அள்ளி வீசி, அம்மலர்களைவிட மலர்ந்திருந்த முகத்தைக் காட்டி வாழ்த்து முழக்கமிட்ட பல்லாயிரக்கணக்கான அந்த வாலிப ஜீவரத்தினங்களை நான் எப்படி மறைக்க முடியும்!

ஆம், வாலிப ஜீவரத்தினங்களே! என்ற இந்த வார்த்தைகளுக்கு ஒரு வரலாறு உண்டு.

இதே திருச்சி மாநகரத்தில் திராவிடர் கழகத்தினர் அனைவரும் கறுப்புச் சட்டை அணிய வேண்டுமென கட்டளை பிறப்பித்துப் பெரியார் அவர்கள் கலந்து கொண்ட எழுச்சி மிக்கதோர் மாநாட்டில்

சற்றொப்ப அறுபது ஆண்டுகளுக்கு முன்பு, மாநாட்டில் குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான இளைஞர்களைப் பார்த்து விளிக்கும்போது என் வாலிப ஜீவரத்தினங்களே! என்று தான் பெரியார் விளித்தார்.

உளியிட்டுச் செதுக்கிய ஒளிமிகு அழகுமொழியிலோ - அணிமணி பூட்டிய எழிலார் சொற்கள் கொண்டோ - எப்போதுமே உரை நிகழ்த்தாது, எளிய நடையில் இமாலயக் கருத்துக்களை எடுத்து வைக்கும் தந்தை பெரியார்; முதன் முதலாக அந்த மாநாட்டில் பகுத்தறிவுப் பட்டாளத்தின் சிப்பாய்களை நோக்கி - திராவிட இயக்கத்தின் திறல் மறவர்களைப் பார்த்து; தன் வெண்தாடி நிமிர்ந்து நின்றிட, புதுக் கம்பீரத்துடன் சிங்கத்தின் குரலை வெல்லும் குரல் எழுப்பி, என் வாலிப ஜீவரத்தினங்களே! என்றழைத்த போது மாநாட்டில் எழுந்த கையொலி மாநாட்டுப் பந்தலை மட்டுமல்ல; மாநகரத்தையே உலுக்கியது. அன்றைக்கு அய்யாவின் அருகிருந்து அந்தக் காட்சியைக் கண்டு களித்து நானும் ஆனந்தக் கூத்தாடி - பக்கமிருந்த பராங்குசத்தையும், அன்பில் தர்மலிங்கத்தையும், திராவிடப் பண்ணை முத்துகிருஷ்ணனையும், எஸ்.ஏ.ஜி. ராபியையும், எம்.எஸ். மணியையும் கட்டித் தழுவிக் குதூகலித்த அந்த நிகழ்ச்சி என் நெஞ்சை விட்டு அகலுமோ!

அவ்வாறே இப்போது நடைபெற்ற இந்த மாநாட்டில் என்னுரையில் இதுதான் எனக்குக் கடைசி தோ்தல் என இறுதியாக நான் குறிப்பிட்ட ஓரிரு வாக்கியங்களால் உணர்ச்சிவசப்பட்டு அருவி கொட்டும் கண்களுடன் மாநாட்டிலிருந்து கலைந்து சென்றிட அடி மேல் அடி வைத்து நடந்த உடன்பிறப்புகளை என்னால் காண முடிந்தது.

அறுபது ஆண்டுகள் இடைவெளியில், அன்று பெரியார் பேச்சைக் கேட்டு ஆனந்த உணர்வு அருவியாகப் பெருகிற்று - இன்று இந்தச் சிறியோன் உரையினால் சோகப் புயல் வீசிற்று; அதை மாற்றிடும் வண்ணம் கவிப்பேரரசு தம்பி வைரமுத்து எழுதி இசை முரசு நாகூர் அனிபா பாடி ஒலிநாடாவில் எழுந்த வெற்றி காற்று வீசுதே என்ற கீதம், அந்த அலைகடல் பெருக்கில் ஓர் ஆறுதல் ஓடமாக மிதந்தது.

அறுபது ஆண்டுகளுக்கு முன்பு அய்யா உரையின் ஆரம்பத்தில் ஏற்பட்ட அந்த உணர்வும் - அந்த அறுபது

ஆண்டுக்குப் பிறகு இன்று என் உரையின் இறுதியில் ஏற்பட்ட இந்த உணர்வும் - வித்தியாசமானவை என்றாலும் கூட, இரண்டுமே நம் குடும்ப பாச உணர்வு! ரத்த பந்த உணர்வு! ஒன்றில் கலந்து விட்ட உடன்பிறப்பு உணர்வு!

அதனால் தானே நெடுந்தூரம் பயணித்து நீ என்னுரை கேட்கப் பொதுக் கூட்டங்களுக்கோ, மாநாடுகளுக்கோ வந்தால் கூட, என் உயிரினு மேலான உடன்பிறப்புகளே! என்று நான் விளித்து முடித்தவுடன் வந்த வேலை முடிந்தது என்பது போல வாஞ்சையை முகத்தில் தேக்கி, வந்த களைப்பின் சாயலையும் உடலை விட்டு நீக்கி எழுந்து போக முனைகிறாய்; எஞ்சியுள்ள பேச்சை ஏடுகளில் மறுநாள் படித்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையுடன்!

உடன்பிறப்பே! இனி நீ பேச்சுக்களை கவனிக்கும் ரசிகனாக மட்டும் இருக்கக் கூடாது! இதுவரை கேட்ட உரைகள், எழுதப்பட்ட கருத்துகள் அனைத்தும் செயல்படுத்தப்பட வேண்டிய கால கட்டத்தில் நீ கால் எடுத்து வைத்துள்ளாய் என்பதை மறந்து விடாதே!

களம் அமைகிறது! கவனம்! கவனம்! சீறிக் கிளம்பட்டும் சிறுமதிச் செயல்களை வீழ்த்திட, தி.மு.க. கூட்டணியின் தீரர் கூட்டம்!

களம் என்றதும் - கட்க மேந்துதல்; கட்டாரி வீசுதல் - வாள் வேல் தூக்குதல் - எனும் தொன்மைப் போர் முறை நிகழ்த்தப்படும் இடமும் அல்ல!

நவீன யுத்த முறைக்கான துப்பாக்கி வெடிகுண்டுகளின் வன்முறைக் கலாச்சாரமுமல்ல!

நாம் காணப் போவது, ஜனநாயகக் களம் - வெறும் உதட்டளவில் ஜனநாயகத்தை உச்சரித்துக் கொண்டு, சர்வாதிகார சண்டமாருதமாகத் தோற்றமளிப்போரையும் அறிவோம்! அவர்களால் வரும் தீங்கினை எவ்வாறு களைவோம் என்பதையும் உணர்வோம்!

மாற்றாரும் மனத்துக்குள் போற்றும் வண்ணம் ஐந்தாண்டு கால ஆட்சியில் சாதனைகள் புரிந்துள்ளோம் - திட்டங்கள் தீட்டியுள்ளோம் - தொடங்கிய திட்டங்களைத் தொடர்ந்திடவும்;

புதிய திட்டங்களைத் தொடங்கிடவும் - தமிழக மக்கள் மேலும் ஓர் ஐந்தாண்டு காலத்தை நமக்கு நீட்டித்து வழங்குவர்.

நோய் நீக்கப் பயன்பட்டு பலித்த மருந்தை மீண்டும் வாங்கியருந்திச் சுகம் பெற எவரும் மறுத்திடார்!

அகம் முகம் ஆய்வு செய்து ஆரோக்யம் பேணுவதற்கு அணுக வேண்டிய முறைகள் கூட, அல்லும் பகலும் பாடுபடும் மருத்துவ மேதையை விட்டு விட்டு - அகப்பட்டதைச் சுருட்டலாம், நோயாளி மயக்கமுற்றிருக்கும்போதேயென்று பேயாக செயல்பட்டவர்களை மருத்துவர்களாக மீண்டும் ஏற்பதற்கு மன நோயாளி கூட உடன்பட மாட்டாரே!

எனவே தான் உடன்பிறப்பே! கடந்த கால ஐந்தாண்டு ஆட்சியை - நடந்து கொண்டிருக்கும் இந்த ஐந்தாண்டு ஆட்சியை - ஒப்பிட்டுக் காட்டு ஊராரிடம் - இனி அடுத்து எந்த ஆட்சி வேண்டும், என்பதைச் சிந்தித்து மக்கள் நல்ல தீர்ப்பளிக்க; நல்லாட்சி மலர நடத்துக செயலை! இதுதான் திருச்சி மாநாடு நமக்கு வழங்கும் வாழ்த்தும்; வழி காட்டுதலுமாகும்!

கழகத்தில் மட்டுமல்ல; நமது கூட்டணிக் கட்சிகளின் செயல்திறன் படைத்த வீரர்கள் முன்னணித் தோழர்கள், ஊக்கம் தளராத் தளநாயகர்கள், தலைவர்கள் அனைவருமே தமது ஆற்றலைக் காட்டிட அணி வகுத்து நிற்கிறோம். பணி முடித்துத் திரும்புவோம்.

அன்புள்ள,

மு. க.

(12-04-2001)

2580. கழகம் காத்திடும் காவல் நெஞ்சங்கள்!

உடன்பிறப்பே,

இன்னும் இரண்டு நாட்கள் இடையில் இருக்கின்றன; தேர்தல் களம் புகும் தி.மு.க. தீரர்கள் யார் யார் என்ற பட்டியலை வெளியிடுவதற்கு!

வாய்ப்பு பெற்றோர் சில பலர் களத் தளபதிகளாக அமைந்திடுவர். வாய்ப்பு பெறாதவர்கள் அல்லது வாய்ப்பை விரும்பி, விண்ணப்பம் செய்யாதவர்கள் அனைவருமே இந்த ஜனநாயக யுத்தத்தில் நால்வகைப் படையினராக அணி வகுத்துப் பணிபுரிவர்!

மனுக்கள் மலையெனக் குவிந்தன அண்ணா அறிவாலயம் தலைமை அலுவலகத்தில்! ஐயாயிரத்துக்கு மேற்பட்டோர் தமிழகத்திலும் புதுவையிலும் ஆர்வம் காட்டினர், இந்த அறவழி ஜனநாயகப் போராட்டத்தில் தளகர்த்தர்களாக விளங்கிட வேண்டுமென்று!

என் செய்வது! 234 தொகுதிகள்தானே இருப்பவை. கூட்டணி அமைக்காமல் கழகம் மட்டுமே போட்டியிட்டால்கூட இந்த ஐயாயிரவருக்கும் இடமளித்தல் என்பது இயலாத காரியம்.

இப்போது கூட்டணிக் கட்சிகளுக்கு பங்கிட்டுக் கொள்ளப்பட்ட தொகுதிகள் போக எஞ்சியுள்ள தொகுதிகளில்தான் கழக உடன்பிறப்புகளுக்கு வாய்ப்பளிக்கக் கூடிய சூழ்நிலை!

இந்தச் சூழ்நிலையின் தேவையை உணர்ந்துள்ள உடன்பிறப்புகள் யாரும் களத்தின் முகப்பில் நிற்கும் வாய்ப்பு தனக்களிக்கப்பட வில்லையே என்று வருந்திட மாட்டார்.

பயிருக்கிடையே களைபோல - பதர் போல - ஒரு சிலர் இருக்கக் கூடும் எனினும் பச்சைப் பட்டு விரித்தாற் போன்று காட்சியளிக்கும் இந்தக் கழகக் கழனியின் கட்டுப்பாட்டுணர்வை

எவராயினும் நெஞ்சில் கை வைத்துக் குறை கூடத் துணிந்திடார்!

உடன்பிறப்பே, ஓர் உதாரணம் பாரேன் - 25க்கு மேற்பட்ட தொகுதிகள்; ஆம், வெற்றி பெற்றுக் கழகத்தினர் சட்டமன்ற உறுப்பினர்களாக வீற்றிருக்கும் தொகுதிகள்; கூட்டணி சுமுகச் சூழலில் அமைய வேண்டுமென்பதற்காக தோழமைக் கட்சிகளுக்கு விட்டுத் தரப்பட்டுள்ளன.

அணியில் உள்ள கட்சிகளுடன் பங்கிட்டுக் கொண்டது போக, 170க்கு மேற்பட்ட தொகுதிகளில் மட்டுமே கழகம் போட்டியிடுகிறது என்றால்; தோழமைக் கட்சிகளுக்கு விட்டுக் கொடுத்த தொகுதிகளுக்காக வருத்தம் தெரிவிக்காமலும் - வெற்றி பெற்று வீற்றிருந்த இடங்களையும் விட்டுக் கொடுத்து விட்டீர்களே என்று வேதனைப்படாமலும், உன் உடன்பிறப்பல்லவோ நான்; கழக வெற்றிக்காகவும் வளர்ச்சிக்காகவும் நீ எடுக்கும் முடிவை இதயபூர்வமாக ஏற்றுக் கொள்கிறேன் என்று அவர்களில் பலர் அண்ணா அறிவாலயம் வந்து என்னிடம் கூறிடும் நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்க்கிறேன்; அடேடே! இந்தக் கழக மாமணி களன்றோ நம் இயக்கம் காத்திடும் காவல் தெய்வங்கள்! என்று எண்ணிப் பூரித்துப் போகிறேன்.

ஒரு முறை அண்ணா அவர்கள், பொதுத் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியலை வெளியிட்டு உரை நிகழ்த்திய போது சொன்னார்.

> “ஒரு பெண்மணி, ஏதோ விழாவுக்குச் செல்வதற்காக, பீரோவைத் திறந்து சேலையொன்றை எடுத்து உடுத்திக் கொள்கிறாள். பீரோவில் உள்ள நாற்பது ஐம்பது சேலைகளும் அய்யோ! நம்மை விட்டு விட்டு அந்தச் சேலையை எடுத்துக் கொண்டாளே என்று கவலைப்பட முடியுமா? இன்றைக்கு இந்தச் சேலை; இன்னொரு நாளைக்குத் தொடர்ச்சியாக மற்ற சேலைகளுக்கும் அந்த வாய்ப்பு கிடைக்குமல்லவா; அது போலத்தான் இன்று அறிவித்துள்ள பட்டியலில் உள்ள பெயர்களும் - இடம் பெறாத பெயர்களும் - இன்றில்லா விட்டாலும் அடுத்தொருமுறை இடம் பெறும்”

அண்ணன் சொன்ன அந்தக் கருத்தின் ஆழத்தைக் கழக உடன்பிறப்புகள் சிந்தித்து ஆறுதல் பெற்றால் மட்டும் போதாது! கடமையினை ஆற்றிடவும் அதன் வாயிலாகக் கழகத்தின் வெற்றியையும், இந்த அணியில் உள்ள தோழமைக் கட்சிகளின் வெற்றியையும் உறுதிபடுத்திடவும் போட்டி போட்டுக் கொண்டு முன் வந்தாக வேண்டும்.

இல்லையேல் ஐந்தாவது முறையும் நாம் தான் என்ற முழக்கம் வெறும் சொல் அலங்காரமாகி விடும்.

கருமமே கண்ணாயினார் எதையும் பொருட்படுத்தமாட்டார்; கழகம் காத்திடவும், நமது கூட்டணிக்கு வெற்றி குவித்திடவும் மார் தட்டிப் புறப்பட்டுள்ள மானமறவர்களாம் என் உடன்பிறப்புகளை எந்தத் தடையும் நிறுத்தி விட முடியாது!

எவர் மூட்டி விடும் கலகமும் நிலை குலையச் செய்து விட முடியாது!

எதிர் முகாம்களிலிருந்து நரகல் நடையழகர்கள், நடுங்கா நாக்கழகர்கள் கிளம்புவர் - கிளம்பிக் கொண்டிருக்கின்றனர் - உண்மையில் அவர்களுக்கு நம்மீது கோபமில்லை - எனக்கும் அவர்கள் மீது வருத்தமில்லை. நாராச நடையில் நம்மைத் திட்டுவதால், ஆதாரமற்ற அவதூறுகளைப் பொழிவதால் அவர்களுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கிறது எனக் கேள்வியுற்று பழைய நண்பர்கள்தானே அனுபவிக்கட்டுமே என்று மனத்துக்குள் சிரித்துக் கொள்கிறேன்.

நீயும் மற்ற உடன்பிறப்புகளும்கூட வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்ட பிறகு அது குறித்து விமர்சனத்தில் கவனம் செலுத்தாமல், நமக்குப் பதிலாக நமது மற்றொரு உடன்பிறப்புக்கு இந்த வாய்ப்பு கிட்டியிருக்கிறது; அடுத்து நமக்குக் கிடைத்திடக் கூடிய நம்பிக்கையை இந்தப் பட்டியல் வழங்குகிறது என உறுதியாக நீ எடுத்துக்கொண்டு, உழைக்கும் களத்தில் இறங்கலாம்.

170க்கு மேற்பட்டோர் கொண்ட இந்தப் பட்டியலில் சுமார் நூறுக்கும் குறைவானவர்களே ஏற்கனவே உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள். சுமார் எழுபதுக்கும் அதிகமாக எண்ணிக்கையினர் புதியவர்கள். இதிலிருந்தே வாய்ப்புகள் மாறி மாறி புதியவர்கள் வருவதற்கு வழி காட்டப்பட்டுள்ளது என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

பட்டியலை நான் வெளியிட்டுப் படிக்கும்போது மலர்ந்திடும் உன் முகத்தையும் காண்பேன் - மழை காணாத நிலம் போல உன் முகம் வாடியிருப்பதையும் காண்பேன். அப்படியொரு நிலையை நீ எனக்கு ஏற்படுத்தாமல் இடம் கிடைப்பினும், கிடைக்காவிடினும் இரண்டையும் ஒன்று போலக் கருதி என் அன்பு உடன்பிறப்பு என்பதை நிரூபிப்பாய் என்று என்றும்போல் எதிர்பார்த்துத்தான் மனதைத் தேற்றிக் கொண்டு பட்டியலை வெளியிடப் போகிறேன்.

> "தண்டவாளத்தில் தலை வைத்துப் படு என்றாலும் அமைச்சர் பதவியை ஏற்றுக் கொள் என்றாலும் இரண்டையும் சமமாகக் கருதுபவன்தான் என் தம்பி கருணாநிதி."

என்று எந்த அண்ணன் பாராட்டினாரோ, அந்தத் தம்பி தான் அவனது இனிய உடன்பிறப்புகளுக்கு முன்கூட்டியே ஆறுதலைக் கூறுவதோடு ஆற்ற வேண்டிய கடமையையும் உணர்த்தி வேண்டுகோள் விடுக்கிறான் என்பதை மட்டும் மறவாதே!

அன்புள்ள,

மு. க.

(13-04-2001)

2581. மழை பொழிகிறது; மனம் குளிர்கிறது!

உடன்பிறப்பே,

இளமைக்காலம் முதல் இதுவரையில் எவ்வளவு மழை பொழிந்தாலும் வெள்ளப்பெருக்கே வீட்டுக்குள்ளே நுழைந்து விட்டாலும் அதற்காகப் பயப்படமாட்டேன். ஆனால் லேசாக ஓர் இடிச்சத்தம் கேட்டால்கூட காதுகளைப் பொத்திக் கொள்வேன். அதற்காக அர்ச்சுனா! அர்ச்சுனா! என்று கிராமத்தார் சிலர் ஓங்கி ஒலிப்பது போல ஒலிக்கின்ற பழக்கமும் கிடையாது. அத்தி, இத்தி, அல், அரசு, மா, பலா, களா என்றும் உச்சரித்து இடியை சமாளிக்க முயற்சி செய்ததுமில்லை. எனினும் வானம் குமுறி இடி முழக்கம் செய்யும்போது ஓர் ஒவ்வாமை (அலர்ஜி) ஏற்படுவது எனக்கு வாடிக்கையாகிவிட்டது.

ஆனால் நேற்றிரவும் சரி; இக்கடிதம் எழுதும் இந்த விடியற்காலை வேளையிலும் சரி; வானத்தில் இடியொலி கேட்டுக் கொண்டுதானிருக்கிறது. ஆனால் அந்த ஒலி எனக்கு அச்சமூட்டிடவில்லை. மாறாக சங்கீத ஒலியாக முழங்கிக் கொண்டிருக்கிறது. தவில் அடிக்கும் சப்தமாகக் கூட இல்லை; மகர யாழ் மீட்டும் போது எழும் இன்ப கீதமாகத் தோன்றுகிறது. என்ன இது, புதிராக இருக்கிறது? இடியின் முழக்கம் இனிய ஓசையாகத் தெரிகிறதா? ஏதாவது மனக் குழப்பமா? இப்படிக் கேட்கத் துணியாவிட்டாலும் நினைத்தாவது கொள்வாய்!

ஆம், உடன்பிறப்பே, சென்னையிலும் சுற்றுப்புறப் பகுதிகளிலும் தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களிலும் ஆண்டுதோறும் தவறாது பொழிந்துகொண்டிருந்த பருவ மழை, இந்தத் தேர்தல் ஆண்டாகப் பார்த்து திடீரென ஓய்வெடுத்துக் கொண்டது. சில மாதங்களாக வானங் கறுக்கிறதா எனப் பார்த்துப் பார்த்து நம் முகம் கறுத்ததுதான் மிச்சம்!

மழை பொய்த்த நிலையிலும் நிலத்தடி நீரைக் கொண்டும் - கிணறுகளை ஆழப்படுத்தியும் - கிருஷ்ணா தண்ணீரைச்

சற்றுக் கூடுதலாகப் பெற்றும் - கிராமப்புற, நகர்ப்புற குடிநீர்த் தேவைகளைப் பெருமளவு பூர்த்தி செய்யும் சலியாத முயற்சிகளை நமது கழக அரசு மேற்கொண்டுள்ள போதிலும், இந்த இயற்கையின் செயலைப் பயன்படுத்தித் தேர்தலில் தி.மு.க.வுக்கு எதிரான பிரச்சாரம் செய்யலாம் எனத் திட்டமிட்டோரைத் திடுக்கிடச் செய்யுமளவுக்கும் - திகைத்திடச் செய்யுமளவுக்கும், திடீரென மாநிலத்தில் பல மாவட்டங்களில், சென்னையில் மழை பெய்து கொண்டிருக்கிறது. என் நெஞ்சில் மகிழ்ந்து பொழிந்து கொண்டிருக்கிறது. தேர்தலை எண்ணியல்ல; தீயிற் கருகுவது போல் மக்கள் கடும் கோடையில் கருகுகின்றனரே என்ற கவலையில் தோய்ந்திருந்த எனக்கு இது எவ்வளவு பெரிய ஆறுதல்!

வண்ணமிகு எண்ணமுடையோர்க்கு இம்மழை வானம் தெளிக்கும் பன்னீர்! பாவேந்தர் நடையில் சொல்வதென்றால் வைரத்தின் தொங்கல்! வஞ்ச மனம் கொண்டோர்க்கோ வானம் வடிக்கும் கண்ணீர்! ஆம்; அவர்களுக்குப் பதிலாக!

என் கார் ஓட்டுநர் சொன்னார், அய்யா டீக்கடைக்குப் போயிருந்தேன் - அங்கே ரெண்டு பேர் பேசிக் கொண்டார்கள்; "இந்தப் பாவி ஆட்சியிலே மழை பேயாது என்று ஜனங்களிடம் சொல்லிக் கொண்டிருந்தோம்; பாழும் வானம் நம்மை ஏமாத்திட்டுதே - என்ன கூத்துடா இது? இயற்கையும் அவன் பக்கம்தான் இருக்கு!" ன்னு பேசிக் கொண்டார்கள் என்று!

உடன்பிறப்பே, இப்படித்தான் நாம் இரண்டாம் முறையாக ஆட்சியில் இருந்த போது 1975ஆம் ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில் கடுங்கோடை மக்களை வாட்டி வதக்கிக் கொண்டி ருந்தது அப்போது நான் மனம் மிக நொந்து முரசொலியில் ஒரு கவிதை எழுதினேன். அந்தக் கவிதை எனக்கு ஒரு வார காலமாகவே நினைவில் வந்து வந்து தலை நீட்டி விட்டுப் போனது.

"வானமே பொழிக நீ!
வறட்சியின் நெருப்புக் காட்டை - நீ
வடித்திடும் கண்ணீராவ் அணைத்துவிடு!
மின்னிடும் உன் சிரிப்பெங்கே?
முழங்கிடும் இடிப் பேச்செங்கே?
பன்னெடும் நாளாய் நின்றன்
பன்னீர்க் குளியலின்றி

என்னருந் தமிழகம்தான்
ஏங்குதல் உணர்ந்திடுக!
வானமே பொழிக நீ!
எம்மானோர் வாட்டம் துடைத்திடவே -
மானமே பெரிதென்றெண்ணும்
மறத் தமிழ் குலத்தார் மீது
மாசுகள் கற்பித்தேனும்
மகுடத்தை பறிக்கலாமென்று
மத்தியில் உள்ளோர் சிலர் அவதூறுக்
கத்தியை வீசுகின்றார் - அவர்தம்
புத்தியைத் தீட்டிடவே
பொழிந்திடுக வானமே நீதான்!
இந்துக்கள் முஸ்லீம்கள் இங்குள்ள
கிறித்தவர்கள் - உன்
பந்துக்கள் வேண்டுகின்றார்
முந்து தமிழ்போல் மும்மாரி பொழிக என்று!
நல்லவர்கள் அழைக்கின்றார்
நன்றியற்றவரோ நீ கருணைகாட்டாமல்
இருக்கவேண்டுமென நினைக்கின்றார் - அவர்தம்
அனல் நெஞ்சம் குளிரடைய உன்
புனல் கரத்தை நீட்டிடுக!
வானமே பொழிக நீ - தமிழ்
வையமே வாழுவே!"

(முரசொலி - 23.3.1975)

இந்தக் கவிதை எழுதியதும் அப்போது மழை வந்ததா என்று கேட்காதே!

உடனே வந்திருக்காவிடினும், அதன்பிறகு மழை வந்ததால்தான் இந்த 25 ஆண்டுகளுக்கு மேலாகப் புல்லினம், புள்ளினம், விலங்கினம் மற்றும் நமது மனித இனம் தமிழகத்தில் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்க முடிகிறது.

வந்துள்ள மழை போதுமானதா? அடுத்து வரப்போகிற மழை தேவையை நிறைவு செய்யுமா? எனக்கு நம்பிக்கையிருக்கிறது,

பொழியும் மழையைப் பொறுத்தும்; நமது அரசின் துறையினர் எடுக்கும் போர்க்காலம் போன்ற நடவடிக்கைகளைப் பொறுத்தும்; ஐந்தாண்டுக் காலமாக தமிழக மக்கள் கண்டு வரும் பொற்காலம் தொடர்வதற்கேற்ப மேற்கொள்ளும் செயல் முறைகளில், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதும் ஒரு பணியெனக் கொண்டு ஆற்றிடும் அற்புதச் சாதனை நிச்சயம் வெற்றி பெறும்! அந்த வெற்றிக்கு இந்த அரசின் முயற்சிகளுக்கு ஆங்காங்கு உன் போன்ற உடன்பிறப்புகளும் துணையிருந்து தூய தொண்டாற்றிட வேண்டும்.

அன்புள்ள,

மு. க.

(14-04-2001)

2582. என் நெஞ்சில் நீயும்!
உன் நெஞ்சில் நானும்!

உடன்பிறப்பே,

பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியர், பொருளாளர் ஆர்க்காடு வீராசாமி, த.மா.கா. ஜனநாயகப் பேரவைத் தலைவர் என் இனிய நண்பர் ப. சிதம்பரம் ஆகியோர் முன்னிலையில் - உடன்பிறப்புகள் நீங்கள் பல்லாயிரவர் திரண்டிருக்க, ஜனசமுத்திரம் எனக் கூறத்தக்க அளவுக்கு மக்கள் வெள்ளத்துக்கிடையே சட்டமன்றப் பொதுத் தேர்தலுக்கான கழக வேட்பாளர்களின் பட்டியலைப் படித்து வெளியிட்ட நிகழ்ச்சி வானம் பன்னீர் தெளிக்க, கடற் காற்றின் சுகம் இதயத்தைத் தழுவிட வெகு சிறப்பாக நடந்து முடிந்து என்னை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது.

கழகம் களம் புகும் நேரத்தில் எல்லாம், அது எந்தக் களமாக இருந்தாலும், அறப் போராட்டக் களமாக இருந்தாலும், அல்லது நாம் தேர்தலில் ஈடுபடும் ஜனநாயகம் காத்திடும் களமாக இருந்தாலும் - கழகத்திற்கும், கழகத்தின் தலைமைப் பொறுப்பில் உன்னால் உயர்த்தி அமர்த்தப்பட்டுள்ள எனக்கும் துளிக் கவலையும் தோன்றிடக் கூடாது என்பதற்காக உன்போன்ற உடன்பிறப்புகள் காட்டும் அக்கறையையும் - அதன் காரணமாகக் கிளர்ந்தெழும் எழுச்சியையும் என் பொது வாழ்வில் பல முறை கண்டுள்ளேன்.

எப்பக்கமிருந்து வந்துவிடும் இக்கழகத்தை அழிக்கும் பகை? என வீறுகொண்டு கேட்டு விழிப்புடன் இருந்து, விழுந்தாலும் விதை போல விழுவோம் என்று கவிக்கோ அப்துல் ரகுமானின் கவிதை வரிகளுக்கு எடுத்துக்காட்டாக இக்கழகத்தைத் தழைத்து செழிக்கச் செய்யும் கடமை வீரனல்லவா என் கண்மணியாகிய நீ!

வேட்பாளர் அறிவிப்பு நிகழ்ச்சி முடிவுற்று மேடையிலிருந்து நாங்கள் இறங்கும் வேளையில், இடிமுழக்கும் வானத்தைக் கிழித்துக் கொண்டு நீ எழுப்பிய வாழ்த்துக் குரலைக் கேட்டு,

ஏ அப்பா, எவ்வளவு பெரிய ஒலி! எனும் வியப்புடன் திரும்பிப் பார்த்தால், இத்தேர்தலில் தொகுதிக்கு விண்ணப்பித்து, அது கிடைக்காமற் போய்விட்ட நிலையில் அதைப் பற்றிக் கிஞ்சிற்றும் கவலைப்படாத நீதான் அப்படி முழக்கமிட்டாய் என அறிந்து என் மனத்தில் எவ்வளவு தெம்பு பிறந்தது தெரியுமா?

வேட்பாளர் அறிவிப்புக் கூட்டம் முடிந்து, இரவு ஒரு மணி வரையில் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டேன். விடியற்காலை 4 மணிக்கு எழுந்து விட்டேன்; உனக்குக் கடிதம் எழுதத் தொடங்கும் நேரத்தில் என் கண் எதிரேயிருக்கும் அலமாரியில் என்னைப் பார்த்து சிரித்துக்கொண்டிருக்கும் **"நெஞ்சுக்கு நீதி"** புத்தகம் என்னை எடுத்துக் கொஞ்சம் படியேன் என்று கண் சிமிட்டியது. முதல் பாகத்தைப் புரட்டினேன்.

77 வயது வரையில் வாழ்ந்ததால் எத்தனை நிகழ்ச்சிகள், மகிழ்ச்சி தரக் கூடியவையும், மனச்சோகம் ஏற்படுத்தக் கூடியவையும் நம் வாழ்வில் வந்து போயிருக்கின்றன எனப் பல நேரம் நான் எண்ணுவதுண்டு. அதேபோன்ற எண்ணத்துடன் புத்தகத்தைப் புரட்டினேன்.

எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு நான் எழுதி அச்சேறிய **'நெஞ்சுக்கு நீதி'** நூலில், இதோ இந்தப் பகுதிதான் முந்திக்கொண்டு என் விழிகளைக் கவர்ந்து இழுத்தது; ஏன் - இதயத்தையும் கூட!

அந்தப் பகுதியைத் திரும்ப எழுதுகிறேன்; நீயும் படித்துப் பார் -

> "சாலிவாகன சகாப்தம் 1846-கலி யுகாப்தம் 5025 - கொல்லம் 1099 - இதற்குச் சரியான ரக்தாட்சி ஆண்டு, வைகாசி மாதம் 21-ம் நாள் செவ்வாய்க்கிழமை, அதாவது 1924-ம் ஆண்டு சூன் மாதம் 3-ம் நாள் முத்துவேலருக்கும் அஞ்சுகத்து அம்மையாருக்கும் சுபயோக சுப தினத்தில் ஒரு குழந்தை அவதரித்தது. அந்தக் குழந்தை தான் நான். நான் பிறந்து சிசுவாக இருக்கும்போதே என் தாயார் தாலியை இழந்தார்கள். தந்தை சாகவில்லை. ஆனாலும் என் தாய் தாலியை இழந்தார்கள்!
>
> ஒரு நாள் விடியற்காலை. சிசுப் பருவத்தில் தூங்கிக்கொண்டு இருக்கிறேன். தந்தையும் தாயும்

சகோதரிகளும்கூட ஆழ்ந்த தூக்கத்தில்! அந்த நேரம் பார்த்துத் திருடர்கள் வீட்டிற்குள்ளே நுழைந்து விட்டார்கள். வீட்டிலே இருந்த பண்டம் பாத்திரங்கள், ஒன்று விடாமல் சுருட்டிக் கொண்டு போய்விட்டார்கள். எனக்குக் கட்டப்பட்டிருந்த ஏணைத் துணியைக்கூட விடவில்லை. திருடர்களிலும் பிச்சைக்காரத் திருடர்கள் போலும்! பாவம், ஆழ்ந்த நித்திரையிலிருந்த அன்னையின் கழுத்தில் மின்னிய பொற்றாலியையும் அவர்கள் கத்தரித்துக் கொண்டு போய்விட்டனர். என் தாயார் சாகும் வரையில் சொல்வார்கள். நல்ல வேளை, திருடர்கள் நுழைந்த போது கத்தாமல் இருந்தாய், கத்தியிருந்தால் உன் கழுத்தை நெரித்துப் போட்டு விட்டுப் போயிருப்பார்கள் என்று!

இதை அம்மா சொன்னபோது நான் நினைத்துக் கொள்வதுண்டு ஐயோ நாம் அப்போது கத்தியிருக்கக்கூடாதா? கத்தியிருந்தால் இப்போது நான்கு பக்கமிருந்தும், தொல்லைகளை அனுபவிக்க வேண்டியதில்லையே என்று!

வீட்டிலே எங்களைத் தவிர மற்ற எல்லாவற்றையும் கொள்ளையடித்துக் கொண்டு திருடர்கள் வெளியேறிவிட்டார்கள். அவர்கள் போன பிறகு எங்கள் வீட்டுக் காவல்கார நாய் குரைத்ததாம்! விழித்துக் கொண்ட தாயார் தன் கழுத்திலே தாலியைக் காணாமல் அழுது புரண்டார்களாம். உடனே தந்தை, நான்தான் இருக்கிறேனே! ஏன் அழுகிறாய்? என்று ஆறுதல் சொல்லி, வேறொரு தாலியை அம்மாவின் கழுத்திலே கட்டினார்களாம். ஆக, எங்கள் அப்பா மூன்று மனைவிக்கு நான்கு தாலிகள் கட்டினார்!

“தாலியைக் கூடத் திருடிக்கொண்டு போய்விட்டானே” என்று அம்மா வருத்தத்தோடு கேட்டார்களாம்.

அதற்கு அப்பா, ஆமாம்! தாலியைப் பித்தளையால் செய்து போட்டிருந்தால், ஐயோ, எதைத் திருடினாலும் தாலியைத் திருடக் கூடாது பாவம்! என்று திருடன் அதைத் தொடாமல் போயிருப்பான். தாலி பொன்னால்

அல்லவா செய்யப்பட்டிருக்கிறது! பொன்னுக்குப் பாவம் இல்லை என்று கருதியிருப்பான்! என்ற விதத்தில் திருட்டிற்குத் தத்துவம் கூறினாராம்."

உடன்பிறப்பே, இதையேன் நினைவூட்டுகிறேன் என்றால் என் குழந்தைப் பருவத்தில் வீட்டில் திருடன் நுழைந்தபோது கத்தியிருக்கக் கூடாதா என்று நான் பட்ட கவலை ஏதோ ஒரு வகையில் சரியாக இருந்தாலும் இன்றைக்கு இந்த 77 வயது மனிதனை, தமையனுக்கு நிகராய் - தாய் தந்தைக்கு நிகராய் - உன் வீட்டிலுள்ள தாத்தா பாட்டிகளுக்கு நிகராய் - கருதிக்கொண்டு பாசம் பொழிகிற உடன்பிறப்புகளைக் காண வேண்டும், கண்டு மகிழ வேண்டும், தேர்தலிலோ வேறு பொறுப்பிலோ வாய்ப்பு தந்தாலும், தராவிட்டாலும் அதுபற்றிக் கவலையில்லாமல் என்னுடனேயே கலந்திருக்கும் உன் போன்றோரின் அழியாத அன்பையெல்லாம் பார்த்துப் பரவசமடையத்தான் போலும் அன்று அந்தத் திருடர்கள் என்னை உயிரோடு விட்டு விட்டுச் சென்றார்களோ என எண்ணிக் கொள்கிறேன்.

எந்த நிலையிலும் ஒரு பதவிக்கான இடம் கிடைத்தாலும் கிடைக்காவிடினும் - வாய்ப்பு வழங்கப்பட்டாலும், வழங்குவதற்குக் காலம் கடந்தாலும் - என்றுமே கிடைக்காமலே போனாலும் என்னுடன் இத்தனை லட்சம் உடன்பிறப்புகள் கவலைக்கு மருந்தாக சூழ்ந்திருக்கிறீர்கள் என்பதே இதுதான் நான் ஈடுபடும் கடைசித் தேர்தல் எனச் சுட்டிக்காட்டும் கால கட்டத்திலும் எனக்கேற்படும் ஆறுதலாகும். ஆமாம் உடன்பிறப்பே! என் நெஞ்சில் நீயும் உன் நெஞ்சில் நானும் இருக்கும் போது எனக்கு எந்தக் கவலையுமில்லை. இந்தத் தேர்தல் களத்திலும் நீ குவிக்கப் போவது வெற்றி! வெற்றி! வெற்றியேதான்!

அன்புள்ள,

மு. க.

(16-04-2001)

2583. ஈரானில் வாஜ்பாய்

இதயம் திறந்த பேச்சு!

உடன்பிறப்பே,

ஏற்கனவே அறிவித்துள்ளபடி 17 ஆம் தேதி பிற்பகல் சென்னை சைதாப்பேட்டையில் நமது பொதுச் செயலாளர் பேராசிரியர் தலைமையில் கழகத் தேர்தல் அறிக்கையை வெளியிட்டுவிட்டு, சுற்றுப்பயணத்தைத் தொடங்குகிறேன். ஆம், உன் இனிய முகம் காண! இதய வாழ்த்துக்களைப் பெற! தமிழ்ப் பெருமக்களாம் பேரன்பு கொண்டோரை - பெற்ற தாய்மார்களை - அருமைச் சகோதரிகளை - நல் இளஞ்சிங்கங்களைக் கண்டு களித்திட - அமைந்திடும் இந்தப் பயணம் வழக்கம்போல் ஒரு பாசப் பயணமாகவே திகழும் என்பதில் ஐயமில்லை.

தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டு, தன் பெயர் பட்டியலில் இடம் பெற்றோர் கடமையுணர்ந்து காரியமாற்றிடவும், பெயர் இடம் பெறாதோர், அவர்களுக்குத் துணையாக நின்று தேர்தல் பணியாற்றிடவும் என்னிடம் விடைபெற்றுப் புறப்பட்டுவிட்டார்கள்.

ஆங்காங்கு என்றில்லாவிடினும்; அபூர்வமாக ஏதோ ஒரு இடத்திலே அல்லது இரண்டு இடத்திலே பதவிக்காகவே இந்தப் பாசறையில் இருந்த உண்மையை வெளிப்படுத்தி விட்டு ஓரிருவர் விலகிக் கொண்ட செய்திகளும் வராமல் இல்லை. துரும்பைக் தூணாக்கித் தி.மு.கழகத்தை எள்ளி நகையாடிடத் துள்ளிக் கிளம்புவர் தூயவர் (?) சிலர் என்பது கழக வரலாற்றில் கடந்த காலந்தொட்டு நாம் கண்டதுதான். அதற்காக நான் கவலைப்படவே இடம் தராமல் கணக்கற்ற உடன்பிறப்புகள் பட்டியலில் இடமில்லாவிடினும் இந்த இயக்கம் காத்திட இலட்சிய வெறி கொண்டோர் நாங்கள் இலட்சக்கணக்கில் இருக்கிறோம்

அண்ணே! என்று விழி விரித்து உறுதிமொழி உதிர்த்து என்னைச் சூழ்ந்திருப்பதை நாடு பார்த்துக் கொண்டு தானிருக்கிறது.

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல இதோ ஒரு நிகழ்ச்சியைக் கூறுகிறேன்; கேளேன்!

1975ஆம் ஆண்டு நெருக்கடி காலப் பிரகடனம் செய்யப்பட்டு, அதனை எதிர்த்து தி.மு.கழகம் தீர்மானம் நிறைவேற்றியது என்பதற்காக நமது ஆட்சியைக் கலைத்து நமது கழகத்தினர் நூற்றுக்கணக்கானவர்களை மிசாக் கைதிகளாக சிறையில் அடைத்து வாட்டி வதைத்துக் கொண்டிருந்த கால கட்டத்தில், பொதுக் கூட்டங்கள் தடை செய்யப்பட்டு திருமண நிகழ்ச்சிகள் என்ற பெயரால் மட்டுமே நான் மக்களைச் சந்திக்க முடிந்த சூழ்நிலை இருந்தது.

அப்போது ஈரோடு நகரில் ஒரு திருமண நிகழ்ச்சி. ஆட்சியை இழந்து அடக்குமுறைக்கு உள்ளாகியிருந்த தி.மு.க.வின் தலைவனாகிய எனக்கு அரசினர் விடுதிகளில் எதிலும் இடம் தர இயலாது என மறுக்கப்பட்டு வந்தது. திரு. மா. சுப்பிரமணியம் இல்லத்தில் தங்கலாம் - அங்கேயே உணவருந்தி விட்டு ஏனைய நிகழ்ச்சிகளுக்குச் செல்லலாம் என்று நண்பர்கள் தெரிவித்தனர். என்னை அழைப்பதற்கு மா. சுப்பிரமணியத்தின் துணைவியாரும், மகளும் வந்திருந்தனர். ஏன் அவர்கள் வந்தார்கள்? சுப்பிரமணியம் ஏன் வரவில்லை? என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

அவர்தான் மிசாக் கைதியாக சிறைக் கொட்டடியில் அடைக்கப்பட்டிருந்தாரே! ஓராண்டு அடைபட்டிருந்த மிசாக் கைதிகளில் மா. சுப்பிரமணியமும் ஒருவர்! அந்த வட்டாரத்தில் அவரது முழுப் பெயரைச் சொல்லி நமது உடன்பிறப்புகள் அழைப்பதில்லை! மா.சு. என்றே அழைப்பார்கள். மாசு என அழைக்கப்படினும், மாசற்ற மனம் படைத்தவர். அழுத்தமான இலட்சியவாதி.

அவர் சிறையிலிருந்த நேரம் அவர் வீட்டில் தங்கியது - சாப்பிட்டது இவற்றையெல்லாம் குறிப்பிடுவதற்கு ஒரு காரணம் இருக்கிறது.

அவர் இப்போது ஈரோடு நகர்த் தொகுதியில் போட்டியிட விண்ணப்பித்து நேர்காணலுக்கு வந்தவர், ஒரு வார காலத்திற்கு மேலாகவே சென்னையில் தங்கிவிட்டார்.

காலையிலும், மாலையிலும் நான் அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்திற்குச் செல்லும்பொழுதெல்லாம் அந்தத் தாழ்வாரத்தில் என் கண்ணில்படும் படியாக நின்று கொண்டிருந்து வணக்கம் தெரிவித்துக் கொண்டிருப்பார். வாய் திறந்து பேசாமலே தான் வந்திருப்பது தொகுதியில் போட்டியிட வாய்ப்பு கேட்பதற்காக! என்பதை அந்த மௌனத்திலேயே உணர்த்திக் கொண்டிருப்பார்.

இப்படிப் பல நாட்கள் கழிந்த பிறகு நானும் பட்டியலைப் படித்து விட்டேன். பட்டியலில் இடம் பெறாத அவரும், முன்னாள் எம்.பி. கந்தசாமியும், முன்னாள் ராஜ்ய சபா உறுப்பினர், இந்நாள் எம்.எல்.ஏ., நாமக்கல் வீரப்பனும் இந்த மூவருமாக அறிவாலயத்தில் என்னைச் சந்தித்தனர். தேர்தலில் வாய்ப்பு அளிக்க இயலாத காரணங்களை அவர்களுக்கு விளக்கினேன். ஆறுதல் பெற்றனர். ஊர் திரும்ப விடைபெற்றனர். அவர்களில் மா. சுப்பிரமணியம் மட்டும் ஒரு கவரை என் கையில் கொடுத்தார். என்ன கண்டனமா என்று கேட்டுக் கொண்டே அந்தக் கவரைப் பிரித்தால்; தேர்தல் நிதி என்று குறிப்பிடப்பட்டு 2,300 ரூபாய் அதற்குள் இருந்தது.

உடன்பிற்பபே, நீ சொல் - உண்மையிலேயே தம்பி மாசு மாசற்ற கழக மாணிக்கம்தானே!

இத்தகைய மாணிக்கங்களுக்கு மத்தியில் பயணத்தை மேற்கொண்டு-மக்களைச் சந்தித்துக் கழகக் கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டக் கிளம்புகிறேன் என்கிற போது, நலிவுற்றுள்ள என் உடலிலே எவ்வளவு தெம்பு ஏற்படுகிறது தெரியுமா?

இந்தத் தீரர்கள் கோட்டமாம் தி.மு.க.வைத்தான் இன்றைக்கு எதிர்த்துக் களம் இறங்கியுள்ளோர், கொஞ்சமும் மனச்சாட்சியின்றி மதவாதக் கூட்டணியில் உள்ள கட்சி என்று வாய் கூசாமல் பேசுகின்றனர். காரணம் திரு. வாஜ்பாய் தலைமையில் உள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணியில் நாம் இருப்பதுதானாம்!

அந்த வாஜ்பாய் அவர்கள்தான் சில நாட்களுக்கு முன்பு தெஹ்ரான் சென்றிருந்தார். அங்கே ஈரான் நாடாளுமன்றத்தில் உரையாற்றினார். அது குறித்து வந்துள்ள செய்தித் துணுக்கை நமது பேராசிரியர் அவர்கள் பத்திரிகையில் இருந்து கத்தரித்து

வைத்திருந்ததை என்னிடம் கொடுத்து இதைப் பயன்படுத்திக் கொள்ளலாம் எனக் கூறினார்.

நமது பிரதமர் வாஜ்பாய் அவர்கள் ஈரான் நாடாளுமன்றத்தில் பேசியது, பத்திரிகையில் வந்ததை அப்படியே தந்துள்ளேன் படித்துப்பார்!

"இந்தியா மதச்சார்பின்மைக் கொள்கையை ஒருபோதும் கை விடாது. அது எமது கலாச்சாரம் மற்றும் பண்பாட்டுப் பாரம்பரியத்தின் அடிப்படை அம்சம்" என்று பிரதமர் வாஜ்பாய் உறுதிபடக் கூறினார்.

ஈரான் நாட்டு நாடாளுமன்றத்தில் அவர் புதன்கிழமை உரையாற்றினார். அப்போது, மதச்சார்பின்மைக் கொள்கைகளை இந்தியா கடைப்பிடித்து வருவதை அவர் வலியுறுத்திப் பேசினார்.

அயோத்தி சம்பவத்தை மறைமுகமாகக் குறிப்பிட்ட வாஜ்பாய், "ஆங்காங்கே சில தவறுகள் நடந்திருக்கலாம். ஆனால், மதச்சார்பின்மைக் கொள்கை மீதான எமது நம்பிக்கை, எமது பாரம்பரியத்தில் வேரூன்றி இருக்கிறது. மனிதனின் ஆன்மீகத் தேடலையும் விரும்பும் முறையில், தெரிவு செய்த வழியில் ஆன்மீகத்தைக் கடைப்பிடிக்க மனிதனுக்குள்ள சுதந்திரத்தையும் மதிப்பதே அந்தப் பாரம்பரியம்" என்றும் கூறினார்.

தமது உரையில், பாரசீகக் கவிஞர் ஹைஃபீஸின் கவிதைகளை மேற்கோள் காட்டிப் பேசினார் வாஜ்பாய். அப்போதெல்லாம் நாடாளுமன்றத்தில் நிறைந்திருந்த உறுப்பினர்கள் கரவொலி எழுப்பினர். வாஜ்பாய் பேசியதாவது :-

"சுமார் ஆயிரம் ஆண்டுகளாக, எமது தேசிய மற்றும் சமூக வாழ்க்கையின் அங்கமாகத் திகழ்கிறது இஸ்லாம். எமது கலாச்சாரத்துக்கு இஸ்லாம் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளது. எந்த மதத்தையும் எமக்கு அன்னியமானதாக நாங்கள் கருதுவதில்லை.

மசூதியின் தொழுகை அழைப்பும், கோயில்கள் மற்றும் கிறிஸ்தவத் தேவாலயங்களின் மணியோசையும் குருத்

துவாராக்களின் குரு கிரந்த சாஹிப் ஓதுதல்களும் இன்னிசை போல் இணைந்து, இறைவனுக்கு அர்ப்பணிக்கப்படுகின்றன.

இந்தியாவின் மதச்சார்பின்மைக் கொள்கையை எந்த வெளிச் சக்தியும் சீர்குலைக்கவோ, அதன் மூலம் இந்திய ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் சீர்குலைக்கவோ அனுமதிக்க மாட்டோம்.

லக்னௌ தொகுதியிலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவன் நான். இந்தியாவில் ஷியா மரபின் முக்கிய மையமாகத் திகழ்வது லக்னௌ. நான் சிறுவனாக இருந்த காலத்திலிருந்து முகரம் ஊர்வலத்தை நான் பார்த்து வருகிறேன். கர்பலாவில் இமாம் ஹூசைன் செய்த பெரும் தியாகத்தின் வரலாற்றைக் கேட்டு வியந்தவன் நான்.

இந்தியா, ஈரானின் நாகரிகங்கள் மிகவும் பழமை வாய்ந்தவை. பொருளாதார, சமூக ரீதியில் பெரும் மாற்றங்கள் நம் நாடுகளில் நிகழ்ந்து கொண்டு இருக்கின்றன. ஆனால் நமது சமூக, அரசியல் அமைப்புகள் உறுதியானவையாக உள்ளன. உலக மயமாக்கலின் சூறைக் காற்றும், புதிய தொழில் நுட்பங்கள் எனும் புயலும் நமது கலாச்சார உறுதியை அசைக்க முடியாது. நமது தனித் தன்மையையும் சிறப்பையும் கட்டிக் காப்போம்" என்றார்.

உடன்பிறப்பே, இதனை என் பயணத்தில் நான் பயன்படுத்துவது மட்டுமல்ல; கழகக் கொள்கை பரப்பும் உடன்பிறப்புகளும், தாங்கள் கலந்து கொள்கிற நிகழ்ச்சியிலும் பயன்படுத்த வேண்டும். இந்த வேண்டுகோளுடன் உன்னைக் காண்பதற்கும், தமிழ்ப் பெருமக்களைக் காண்பதற்கும், மா.சு.க்கள் போன்ற கொள்கைப் பற்றாளர்களைக் கண்டு ஊக்கம் பெறுவதற்கும் நீ இந்தக் கடிதம் படித்துக் கொண்டிருக்கும் வேளையில் பயண ஏற்பாடுகளில் ஈடுபட்டிருப்பேன்.

அன்புள்ள,

மு. க.

(17-04-2001)

2584. பொன்னான நேரத்தை வீணே செலவிட வேண்டுமா?

உடன்பிறப்பே,

தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து மக்களிடம் வாக்கு சேகரிக்க நான் மேற்கொண்ட நான்கு நாட்கள் முதல் கட்ட சுற்றுப்பயணம், ஒவ்வொரு நாளும் 250 கிலோ மீட்டர் தொலைவு என்ற கணக்கில் நடைபெற்று 21ந்தேதி காலை சென்னை வந்து சேர்ந்தேன்.

23ந்தேதி சேப்பாக்கம் தொகுதிக்கான வேட்பு மனு தாக்கல் செய்து விட்டு இரண்டாம் கட்ட சுற்றுப்பயணத்தைத் தொடங்குகிறேன்.

முதல் கட்டப் பயணத்தில் முகமும் அகமும் மலர நீ அணி வகுத்து வரவேற்ற காட்சியும், லட்சோப லட்சம் தமிழ்ப் பெருங்குடி மக்கள் கையசைத்து வாழ்த்துரைத்த காட்சியும் என் மனத்திரையில் அச்சடித்த ஓவியங்களாகப் பதிந்து விட்டன என்றே சொல்லலாம்.

அரும்புகளைச் சுமந்து நிற்கும் கொடிகள் போல அன்பு மழலைகளைச் சுமந்தவாறு அருமைச் சகோதரிகள் - ஒரு கையில் தடியூன்றி மற்றொரு கையசைத்து மகிழ்ச்சி பொங்கிட ஆசி கூறிடும் அகவை முதிர்ந்த பெரியோர்கள் - தேர்தல் பிரச்சாரக் கூட்டந்தானா? அல்லது மாநில மாநாட்டுப் பெருந்திரளா? என வினா எழும் வண்ணம் அப்படியொரு ஜன சமுத்திரம் ஆங்காங்குப் பொங்கிப் பிரவாகித்த காட்சியால் நான், இந்தக் குள்ள உருவம் விட்டு ஆகாயத்தைத் தொடுமளவுக்கு உயர்ந்து நின்றேன். துள்ளிக் குதிக்கும் மான்களையொத்த இளைஞர் கூட்டம் - அதற்கு இணையாக மகளிர் கூட்டம் - வணிகர்கள், விவசாயிகள், பாட்டாளிகள், மாணவர்கள் என அவர்களையொத்தோர் அலைகடலென ஆங்காங்கு ஆர்ப்பரித்த நிகழ்ச்சி - எனக்கோ அளவு கடந்த மகிழ்ச்சி!

ஐந்தாண்டு காலக் கழக ஆட்சியின் சாதனைகளை விவரிக்கும் போதும், இந்தப் பொற்காலம் தொடருமேயானால் மேலும் நிகழ்த்த இருக்கிற சாதனைகளை எடுத்துரைக்கும் போதும், ஏதோ தேர்தல் அறிக்கைதானே என்று எண்ணாமல்; சொன்னதைச் செய்யும் இந்தக் கழகம்! செய்ததையே சொல்லும்! என்று ஒரு நம்பகத்தன்மையுடன் தமிழ்ப் பெருமக்கள் கவனிக்கின்றனர்.

வாக்குறுதிகளைக் காற்றில் பறக்க விட்டவர்களின் காலம் மாறி, அவற்றைக் கல்லிலே செதுக்கி வைத்து நிறைவேற்றிக் காட்டிடும் காலத்தையன்றோ கழக அரசு படைத்துள்ளது.

இந்த உண்மையை உணர்ந்த காரணத்தால்தான் ஊரார் நம்மைப் போற்றுகின்றனர். அடுத்த முறையும் உமக்கே வாக்களிப்போம் என்று உறுதி அளிக்கின்றனர்.

அந்த மக்களின் ஆதரவு, அருவிகள் ஆயிரம் இணைந்தாற்போல் பெருக்கெடுக்கும் இந்த வேளையில் அதனைப் பயன்படுத்திக் கொள்ளும் ஆர்வத்தையும் ஆற்றலையும் உன் போன்ற உடன்பிறப்புகள் பெற்றிட வேண்டும்.

வெட்டி வா! என்றுரைத்தால் கட்டி வரும் வீரர்கள் என் உடன்பிறப்புகள் என்பதை நானறிவேன். கடமையினைக் காலம் தாழ்த்தாது உடனுக்குடன் செய்திடல் வேண்டும். நமது கூட்டணிக் கட்சி செயல்வீரர்கள் ஒத்துழைப்பையும் பெற வேண்டும். கழகச் செயல்வீரர்கள் ஒத்துழைப்பையும் அவர்களுக்கு வழங்க வேண்டும். 234 தொகுதிகளிலும் கழக வேட்பாளர்கள் களத்தில் நிற்பதாகவே கருதிப் பணியாற்ற வேண்டும்.

தோழமைக் கட்சிகளுக்கும் நமக்குமிடையே பகைமூட்ட சில பசப்புக்காரர்கள் கிளம்புவர் - அவர்களின் சூழ்ச்சியைப் புரிந்து கொண்டு நமது அணியினர் சூழ்ந்து நின்று வெற்றித் திருவிளக்கை அணையாமல் காத்திடல் வேண்டும்.

ஜனநாயகத்தைப் பணநாயகத்தினால் வீழ்த்திடவும் - சாகச நாடகத்தினால் மாய்த்திடவும் புறப்பட்டிருப்பவர்களுக்குப் புத்தி புகட்டும் நாள் மே 10ஆம் நாள் என்பதை மறந்து விடக்கூடாது.

ஜெயலலிதாவின் வேட்பு மனுதான் செல்லாமல் போகப் போகிறதே பிறகென்ன கஷ்டம்? சுலபமாக வெற்றி பெற்று விடலாம் என்று உன் போன்ற உடன்பிறப்புகள் சிலர் எண்ணினால்

அது பெருந்தவறு! அந்த வேட்பு மனு என்னவாயினும் அது பற்றி நமக்குக் கவலையில்லை. நாம் ஜனநாயகக் களத்தில் போட்டியை விரும்புகிறவர்களே தவிர, எதிரியை மறைமுகமாக வீழ்த்த வழியிருக்கிறதா என்று சிந்தித்துச் செயல்படுகிறவர்கள் அல்லர்!

ஜெயலலிதா வெல்ல முடியாதவருமல்ல; 1996ஆம் ஆண்டு பர்கூரில் போட்டியிட்டுத் தோல்வியுற்றவர்தான்!

இப்போது எழுந்துள்ள பிரச்சினை அதுவல்ல, சட்டத்தின் முன்னால் அனைவரும் சமம்தானே! என்ற கேள்விக்கு விடை காணும் பிரச்சினை!

தேர்தலுக்கு நிற்பவர்களுக்குரிய தகுதிகளை இன்றைய தேர்தல் ஆணையம் மட்டுமல்ல, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஊராட்சி முறை வகுத்து, மக்களாட்சிக்கு வழிகாட்டிய பெருமை தமிழ் மன்னர்களான மூவேந்தர்களைச் சாரும். இவர்கள் ஆட்சியில் ஊராட்சி சிறந்து விளங்கிய செய்திகளைக் கல்வெட்டுகள், செப்பேடுகள், இலக்கியங்கள், வரலாற்றுச் சான்றுகள் மூலமாக அறியலாம். காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் கிராமத்திலுள்ள வைகுண்ட பெருமாள் கோவில் மதில் சுவர்களில் பல கல்வெட்டுகள் உள்ளன.

முதலாம் பராந்தகச் சோழன் காலத்தில் கி.பி. 921ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று உள்ளது. அதில் கிராம சபைகள் மிகவும் தெளிவாகவும், திறமையாகவும் செயல்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராமங்கள் பல குக்கிராமங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குக்கிராமமும் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதிக்கும் குடவோலை மூலம் உறுப்பினர்கள் சேர்ந்து தேர்ந்து எடுக்கப்பட்ட விவரம் இந்தக் கல்வெட்டுகளிலிருந்து தெரிய வருகின்றது. தேர்தலுக்கு நிற்கும் வேட்பாளர்களின் அறிவு, ஆற்றல், தொண்டுள்ளம், தூயஒழுக்கம் இவற்றைக் கணக்கிலெடுத்து ஆராய்ந்த பின்னரே நிற்பதற்கே அனுமதிக்கப்பட்டனர் என்றால், அவர்களைத் தேர்ந்தெடுப்பதில் எத்துணைக் கண்டிப்பு இருந்திருக்கும் என்பதை எளிதில் உணர முடியும். இந்தக் கிராமக் குடியரசுகள் நல்ல முறையில் வளர்ந்து சீராகச் செயலாற்றி, சமுதாயத்திற்குப் பேருதவிகள் பல புரிந்துள்ளன.

குறிப்பிடப்பட்டுள்ள தகுதியுடையோர்க்கே அப்போது தேர்தலுக்கு நிற்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இது வரலாற்று ஆதாரம்!

அதுவே இன்றைக்கும் கடைப்பிடிக்கப்படுகிறது - அன்றைக்கு தேர்தல் கமிஷன் வேறு பெயரிலே இருந்தது; அதுதான் வேறுபாடு!

இப்போது இந்த அம்மையாருக்குத் தகுதியுண்டா? அனுமதியுண்டா? தகுதியில்லாவிடினும் அனுமதியுண்டா? இந்தக் கேள்விக்கு விடை காண நாம் ஆவல் காட்டத் தேவையில்லை. நமது பணியை நாம் தொடர்ந்து செய்வோம். ஜெயலலிதா தேர்தலில் நிற்கக் கூடாது என்பது நமது குறிக்கோள் அல்ல! தகுதியின் அடிப்படையில் அது ஆராயப்பட இருக்கும் போது, நாமேன் அதற்காக நமது பொன்னான நேரத்தை வீணே செலவிட வேண்டும்?

அன்புள்ள,

மு. க.

(23-04-2001)

2585. நீலிக்கண்ணீர்; நீ பொருட்படுத்தத் தேவையில்லை!

உடன்பிறப்பே,

மே 10ஆம் நாள் நடைபெறும் தமிழகச் சட்டப்பேரவை பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்வதற்கு இன்று கடைசி நாள். சேப்பாக்கத்தில் போட்டியிடுவதற்கான என் வேட்புமனு தாக்கலும் இன்றுதான் - அப்பணியை நிறைவேற்றிவிட்டு இரண்டாவது கட்டத் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப் பயணம் வெளி மாவட்டங்களுக்குப் புறப்படுகிறேன்.

என்னைப் போலவே நமது கூட்டணியின் வேட்பாளர்கள் அனைவரும் வேட்புமனு தொடர்பாக விதிமுறைகள், கடமைகள் அனைத்தையும் செம்மையாக நிறைவேற்றிவிட்டு, வாக்காளர்களைச் சந்திக்கும் பொறுப்பு மிகுந்த வேலைகளில் இறங்கியிருப்பார்கள் என்று நம்புகிறேன்.

பணிகள், பல குழுக்களுக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டு அக்குழுவிலே இடம்பெறும் செயல்வீரர்கள் ஓய்வு உறக்கமின்றிப் பாடுபட சூளுரை மேற்கொண்டு அணி வகுத்தால்தானே நமது அணிக்குக் கிடைக்க இருக்கிற வெற்றி உறுதிப்படுத்தப்பட்ட ஒன்றாகத் திகழும் என்பதை மறந்துவிட வேண்டாம்.

எந்தவொரு வளங்கொழிக்கும் நிலத்திலும் - பாங்கான பூமியிலும் - தானாகவே பயிர் வளர்ந்து கதிர்கள் தழைத்திடும் என்று கனவு காண முடியாது. நிலத்தை உழுது, பரம்படித்து, பறித்த நாற்றுகளைப் பக்குவமாக நடவு செய்து, களையெடுத்து, கால்நடைகளால் சேதமுறாமல் காவல் காத்து - களத்து மேட்டுக்குக் கொண்டு போய்ச் சேர்க்கும் வரையில் விவசாயி ஒருவர் வடிக்கும் வியர்வைத் துளியை எண்ணிப் பார்த்தால்தான், அந்த உழைப்பு நமது தேர்தல் வெற்றிக்கும் தேவை என்பது புலப்படும்.

வாக்காளர் பட்டியலைச் சரி பார்த்தால் - இடம் பெயர்ந்திருக்கும் வாக்காளர்கள் எத்தனை பேர்? - எங்கே இருக்கிறார்கள் என்ற விபரம் அறிதல் - வாக்காளர் இருக்குமிடம் தேடிச் சென்று வேண்டுகோள் விடுத்தல் - தமிழகத்தில் கழக அரசு ஆற்றிவரும் பணிகள் குறித்தும் - அப்பணிகளுக்கு ஊக்கமூட்டும் வகையில் உதவிடும் மத்தியில் உள்ள திரு.வாஜ்பாய் அரசு குறித்தும் - இவ்விரு அரசுகளும் இணக்கமாக இருந்து மாநில மக்களுக்கு ஆற்றிடும் நற்காரியங்கள், வகுத்திடும் திட்டங்கள் பற்றியும் விபரமாக எடுத்துக் கூறுதல் - வாக்களிக்க வேண்டிய ஜனநாயகக் கடமையை உணர்த்துதல் - இயந்திரத்தின் வாயிலாக வாக்களிக்கும் விதம் எப்படி என்பதை விளக்கிக் காட்டுதல் - வாக்குச்சாவடிகளில் அல்லது அவற்றின் சுற்று வட்டாரங்களில் ஒரு துளிக் கலவரமும் தோன்றாத அளவுக்குக் காவல் துறையினர்க்கு உதவியாக இருந்து அமைதியை நிலை நாட்டுதல் போன்ற இத்தனை பணிகளிலும் நமது கூட்டணியின் செயல்வீரர்கள் ஒருமித்த கருத்துடன் ஈடுபடுவார்களே யானால் நாம் பெற இருக்கிற வெற்றி, ஈடு இணையற்ற வெற்றியாகவே இருக்கும்.

இதற்கிடையே ஒரு வேடிக்கை பார்த்தாயா உடன்பிறப்பே!

நமது கூட்டணிக்கு தோல்வி பயம் வந்துவிட்டதாம், அதனால் பயங்கரமான சதித் திட்டம் தீட்டியிருக்கிறோமாம். பெரிய கலவரத்தில் ஈடுபடப் போகிறோமாம். காவல்துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகளே இத்தகவலைத் தனக்குச் சொன்னார்களாம்.

இப்படி ஒரு கதை (கயிறு) விட்டு ஜெயலலிதா ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

யார் அந்தக் காவல்துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள்? இன்னமும் பணியில் இருப்பவர்களா? அல்லது ஓய்வு பெற்றவர்களா?

ஜெயலலிதா விடுத்த ஒரிஜினல் அறிக்கை - அவரது கட்சி அலுவலகத்திலிருந்து தட்டச்சு செய்து வெளியிடப்பட்டதை ஏடுகள் முழுமையாக வெளியிடவில்லை. அந்த ஏடுகளுக்கேயுரிய நாகரிகத்தால் அப்படியே அவைகள் வெளியிடவில்லை.

இந்தச் சதித் திட்டத்தைப் பற்றிச் சைதை கிட்டுவும், கென்னடி என்பவரும் ஒரு ஓட்டலில் உணவருந்திக் கொண்டே வாய்

விட்டுப் பேசியதை ஜெயலலிதாவுக்கு வேண்டியவர்கள் கேட்டு, பிறகு ஜெயலலிதாவிடம் தெரிவித்ததாகவும் அந்த அறிக்கையில் ஒரு பகுதி இருக்கிறது.

மேலும் அந்த அறிக்கையில், சைதை கிட்டு, தனது கூட்டாளிகளிடம் 24ந்தேதி வரை காத்திருங்கள். மனு தள்ளுபடியான செய்தி வந்தவுடன் தளபதியின் ஆணைப்படி கொளுத்திடுவோம். அதோடு அந்தக் கட்சி காலி! எனப் பேசி உள்ளார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதையும் நாகரிகமான ஏடுகள் வெளியிடவில்லை. ஆனால் ஒரிஜினல் அறிக்கையில் இருக்கிறது.

மேலும், மிக பயங்கரமான சதித் திட்டத்தை கருணாநிதி தீட்டியுள்ளார் என்பதும் அதை மு.க. ஸ்டாலின், சைதை கிட்டு போன்றவர்கள் செயல்படுத்த உள்ளார்கள் என்றும் தெரிய வருகிறது என்றும் ஜெயலலிதாவின் ஒரிஜினல் அறிக்கை கூறுகிறது.

இதனை வெளியிட்டிருந்தால் அந்தப் பத்திரிகைகளும் வழக்குகளைச் சந்திக்க நேரிட்டிருக்கும்.

தம்பி சைதை கிட்டு ஒரு மாத காலமாகவே உடல் நலிவுற்று, இரு முறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு - இப்போதும் ஒரு வார காலமாக மீண்டும் உடல்நிலை கெட்டு, மீண்டும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அதன் காரணமாகவே சைதைத் தொகுதிக்கு வேட்பாளர் மாற்றம் செய்யும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

ஆனால் இந்தப் பெண்மணி, அறிக்கை விடுகிறார், இவரது மனு தள்ளுபடி செய்யப்பட்டால் கலகம் செய்யுமாறு சைதை கிட்டு ஓட்டலில் சாப்பிட்டுக் கொண்டே சதித் திட்டம் வெளியிட்டதாக!

மனு தள்ளுபடி செய்யப்பட்டால் ஜெயலலிதாவின் கூலிப் பட்டாளமும், காலிப் பட்டாளமும்தான் கலவரத்துக்கு தயாராகத் தூண்டி விடப்பட்டு அதற்கான திட்டம் தீட்டப்பட்டுள்ள நிலையில், வேண்டுமென்றே திட்டமிட்டு நம்மீது பழி போட ஜெயலலிதா ஆடுகிற நாடகமே அவரது நீலிக் கண்ணீர் அறிக்கை!

இது குறித்து கழகச் சார்பில் நமது பொருளாளர் வீராசாமி, காவல் துறைக்குக் கடிதம் எழுதி அமைதி காத்திட உதவுமாறு

கேட்டுள்ளார். காவல்துறையும் சட்டம் ஒழுங்கு அமைதி காத்திட உரிய நடவடிக்கைகளைத் தீவிரமாக எடுத்திடும் என்பதில் ஐயமில்லை.

உடன்பிறப்பே, ஜெயலலிதாவின் அறிக்கையிலிருந்து அங்கே தோல்விக்கான அறிகுறிகள் தோன்றிவிட்டன என்பது தெளிவாகவே தெரிகிறது.

அதனால்தான் எம்.ஜி.ஆர். மறைந்த போது அவரை அவரது மனைவி ஜானகி அம்மையார் விஷம் கொடுத்துக் கொன்று விட்டார் என்று அறிக்கை விட்ட பொய்க்குளி ஜெயலலிதா இப்போதும் இந்த அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

எனவே இந்த நீலிக் கண்ணீர் அறிக்கைகளைப் பொருட்படுத்தாமல் நீ ஆற்ற வேண்டிய கடமைகளை அமைதியுடனும் - அறநெறி பிறழாமலும் - அண்ணா வழியில் ஆற்றிடுக என அழைக்கின்றேன்.

அன்புள்ள,

மு. க.

(24-04-2001)

2586. விஷமுறிவுக்கு, நான் தேடிவந்த மூலிகை!

உடன்பிறப்பே,

என் குருகுலத்திலிருந்து இந்தக் கடிதம் எழுதுகிறேன். ஆம்; ஏறத்தாழ ஐம்பத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு ஈரோடு நகரத்தில் குடியரசு அலுவலகம் என்னும் பகுத்தறிவுப் பாசறையில் அறிவாசான் அய்யா பெரியாரிடம் பக்கமிருந்து பாடம் கேட்ட மாணவர்களாம், தோழர்கள் ஏ.பி. ஜனார்த்தனம், கவிஞர் கருணானந்தம், தவமணி இராசன் ஆகியோருடன் இந்தக் குருகுலத்து சீடர்களில் ஒருவனாக இருந்தவனன்றோ நான்.

எப்போது இந்நகருக்கு நான் வந்தாலும் அப்போதெல்லாம் என் நெஞ்சம் நெகிழ்ந்திடக்கூடிய நிலைதான்! மிகுந்த சிரமப்பட்டு அதனை அடக்கிக் கொண்டுதான் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறேன்.

பத்து நாட்களாக தினந்தோறும் தேர்தல் பிரச்சாரத்தை ஓய்வுக்கு ஓய்வளித்துவிட்டு, நடத்தி வரும் எனக்கு இந்த நகரில் அடியெடுத்து வைத்ததும் என் களைப்புக்கெல்லாம் மருந்து கிடைத்ததுபோல் இருக்கிறது.

ஒரு முறை பெரியார் அவர்களின் முன்னிலையில் சென்னையில் நான் பேசும்போது குறிப்பிட்டேன்.

“அய்யா! கீரிக்கும் பாம்புக்கும் சண்டை நடக்கும். கீரிதான் கடைசியில் ஜெயிக்கும். ஜெயித்த போதிலும் சண்டையின்போது பாம்பின் விஷப் பற்கள் பட்டு கீரியின் உடலில் பல காயங்கள் இருக்கும். அந்த விஷத்தன்மை முறிவுக்காக கீரி, வேலியோரம் உள்ள ஒரு மூலிகையில் தன் உடலைத் தேய்த்துக் கொண்டு நலம் பெறுமாம். அதுபோலத்தான் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் என் மீது எரிச்சல் கொண்டோர் கக்கிடும் விஷத்தை

முறிப்பதற்காக கீரி, பச்சிலை நாடிச் செல்வது போல நான் தங்களிருப்பிடம் நாடி வருகிறேன்.”

இப்படி அன்று நான் பேசியது இன்றைக்கும் பொருந்துமல்லவா! அதனால்தான் ஈரோடு நகருக்கு வந்தவுடன் அந்தப் பேச்சு என் நினைவுக்கு வந்து என்னை உருக்கியது.

உடன்பிறப்பே, பாம்பின் விஷப்பல்லில் இருந்து கசியும் நஞ்சைவிடக் கொடிய சொற்கள் கொண்டும் - அந்தச் சொற்களை விடக் கொடுமையான நெஞ்சு கொண்டும், சிலர் என்னையும், கழகத்தையும் வசை பாடித் திரியும் நிலையில் எதையும் தாங்கும் இதயம் வேண்டும் தம்பி!” என்ற அண்ணாவின் அறிவுரை ஒருபுறம் என்னைத் திடப்படுத்தினாலும்; மேலும் தெளிவு பெற்றுத் திகழ்ந்திட ஈரோடு மூலிகையையும் தேடிக் கண்டுபிடித்து ஆறுதல் பெறுகிறேன்.

என் செய்வது, ஜெயலலிதா அம்மையார் தமிழக அரசுக்குச் சொந்தமான டான்சி நிலத்தை வாங்கியது, அவர் குற்றமே தவிர நம் குற்றமல்ல!

அரசுக்குரிய நிலத்தை அம்மையார் வாங்கி அதன் காரணமாக வழக்கில் சிக்கிக் கொள்ள வேண்டுமென்று நான் யாரும் சதி செய்யவில்லை. சட்டம் அவர்களைத் தண்டிக்கிறது.

அப்படியொரு சட்டம் ஜெயலலிதாவுக்காக நாம் இயற்றவுமில்லை. இருக்கிற சட்டத்தை ஏறி மிதித்தார்கள். அது, கொட்டி விட்டது.

அரசு நிலத்தை - அதுவும் அடிமாட்டு விலைக்கு வாங்கியது குற்றம் என்று நீதிமன்றம் தண்டனை வழங்கியது.

அந்தத் தண்டனை இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக என்பதும் நான் செய்த சதியல்ல! நமது தீர்ப்புமல்ல! நீதிமன்றத் தீர்ப்பு!

இப்படியொரு தீர்ப்பு பெற்ற காரணத்தால் தேர்தலில் நிற்கத் தகுதியில்லை என்கிறது தேர்தல் ஆணைய விதிமுறை!

அந்த விதிமுறைகளை எழுதி வைத்ததும் நாமல்ல; தேர்தல் ஆணையம்! தேர்தல் ஆணையம்!

தவறுக்கு மேல் தவறு என்பதுபோல் - இரண்டு தொகுதிகளுக்கு மேல் போட்டியிட வேட்பு மனு செய்தால், எல்லா

வேட்பு மனுக்களும் தகுதியற்றதாகி விடும் என்று சட்டமிருந்தும் - நாலு தொகுதிகளிலே வேட்பு மனு செய்த தவறைப் புரிந்தது நாமல்ல! இதற்கு ஜெயலலிதாவே பொறுப்பு!

ஆங்காங்கு ஒவ்வொரு தொகுதிக்கும் தேர்தல் அதிகாரிகள் - அவர்கள் சரியாகச் செயல்படுகிறார்களா எனக் கண்காணிக்க வேறு மாநிலங்களைச் சார்ந்த "அப்சர்வர்கள்" - அதாவது தலைமைத் தேர்தல் ஆணையத்தால் அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.

இவ்வளவு கண்டிப்பான சூழலுக்கிடையே கருணாநிதி சதி செய்து இந்த அம்மையார் தேர்தலில் நிற்பதைத் தடுத்துவிட்டதாக ஒரே புலம்பல்!

ஆம்! வேண்டுமென்றே சந்திரமதி வேடம் கட்டிக் கொண்டு; ஒப்பாரி வைக்கிறார் - ஓலமிடுகிறார் - உளறிக் கொட்டுகிறார்.

உண்மையை ஊராருக்கு உணர்த்திட என் சுற்றுப் பயணம் மெத்தவும் பயன்படுகிறது.

இருப்பினும் எல்லா இடங்களுக்கும் செல்ல இயலவில்லை. தேர்தல் ஆணையம் பிறப்பித்துள்ள உத்தரவின்படி இரவு 10 மணிக்குள் நகர்களிலும், 11 மணிக்குள் கிராமங்களிலும் பிரச்சாரம் முடிய வேண்டுமே என்ன செய்வது.

இதோ நீலகிரி முபாரக் வந்து நிற்கிறார் - உதகைக்கு வாருங்கள் என்று உருக்கமாகக் கேட்கிறார். என் தொகுதி பக்கம் வரவே இல்லையே" - நமது கழகத் துணைப் பொதுச்செயலாளர் சுப்புலட்சுமி ஜெகதீசனே ஆதங்கப்படுகிறார்.

இப்படிப் பல பகுதிகளில் நான் வரவில்லை என்ற குறை இருக்கிறது.

இக்குறையை நமது பொதுச் செயலாளர் பேராசிரியரும், கழக முன்னணிப் பேச்சாளர்களும், கழகத்தின் கலைமாமணிகளும் போக்கிடுவர் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

நீதான் என்ன சாமான்யமா! இக்கடிதத்தில் உள்ள குறிப்புகளையே விரிவுபடுத்தி, ஜெயலலிதா நம்மீது சுமத்தும் பொய்க் குற்றச்சாட்டுகளைப் பொடிப்பொடியாக்கலாமே!

கேரளத்தில் பாலகிருஷ்ண பிள்ளையினுடைய மனு மாத்திரம் எப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று கேட்பார்கள். அதற்கான

விளக்கத்தை எல்லா பத்திரிகைகளும் வெளியிட்டிருக்கின்றன. அது வருமாறு :-

"ஊழல் வழக்கில் 5 ஆண்டு சிறைத்தண்டனை பெற்ற கேரள முன்னாள் அமைச்சர் பாலகிருஷ்ண பிள்ளை கேரள சட்டசபைத் தேர்தலில் போட்டியிட தாக்கல் செய்த மனு அதிகாரியால் ஏற்கப்பட்டுள்ளது. மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் 8 (4)வது பிரிவின்கீழ் தேர்தலில் போட்டியிடும் தகுதியை அவர் இழக்கவில்லை என்று தேர்தல் அதிகாரி கூறியுள்ளார். தேர்தல் அதிகாரி சுகுதன் எடுத்த முடிவு சரியானதுதானா என்பதை மக்கள் பிரதிநிதித்துவச் சட்டமும், கடந்த 1997 ஆம் ஆண்டு தேர்தல் கமிஷன் பிறப்பித்த உத்தரவும் தெளிவாக்குகின்றன."

1997 ஆம் ஆண்டில் தேர்தல் கமிஷன் பிறப்பித்த உத்தரவின் 7 ஆம் பத்தியில் இதுபற்றிக் குறிப்பிட்டிருப்பதாவது :-

> "ஒருவர் குற்றவாளி என்று கூறி குறிப்பிட்ட காலம் தண்டனை விதித்து தீர்ப்பு வெளியான தினத்தன்று சம்பந்தப்பட்டவர் எம்.பி. அல்லது எம்.எல்.ஏ. பதவி வகித்தால் அவர் தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதி இழப்பு உடனடியாக அமலுக்கு வராது. தீர்ப்பளிக்கப்பட்ட 3 மாதத்துக்குப் பிறகுதான் தகுதி இழப்பு அமலுக்கு வரும். அல்லது 3 மாதத்துக்குள் சம்பந்தப்பட்டவர் தண்டனையை அல்லது தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்தால் அந்த அப்பீல் மனு மீதான விசாரணை முடியும் வரை அவர் தேர்தலில் போட்டியிடும் தகுதியை இழக்க மாட்டார் என்று மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 8 (4) வது பிரிவு கூறுகிறது."

> 5 ஆண்டு சிறைத்தண்டனை பெற்றபோது பாலகிருஷ்ணபிள்ளை கேரள சட்டசபை உறுப்பினராக இருந்தார். இதனால்தான் தேர்தலில் போட்டியிடும் தகுதியை அவர் இழக்கவில்லை.

ஆனால் ஜெயலலிதாவுக்கு டான்சி நில ஊழல் வழக்கில் சென்னை தனிக்கோர்ட் கடந்த ஆண்டு 3 வருட சிறைத் தண்டனை விதித்தபோது அவர் எம்.எல்.ஏ.வாக பதவி வகிக்கவில்லை.

எனவே ஜெயலலிதாவுக்கு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 8 (4)வது பிரிவு பொருந்தாது. ஜெயலலிதா தேர்தலில் போட்டியிட மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 8 (3)வது பிரிவின் கீழ் தகுதி இழந்தார். இந்தப் பிரிவின் அடிப்படையில்தான் அவரது மனுக்களை 4 தொகுதியிலும் உள்ள தேர்தல் அதிகாரிகள் தள்ளுபடி செய்தனர்.

ஆனால் இந்தச் சாதாரண விஷயம் கூட தெரியாமல் அ.தி.மு.க.வினரும் ஒரு சில அரசியல் தலைவர்களும் தமிழகத்தில் உள்ள தேர்தல் அதிகாரிகள் வேண்டுமென்றே ஜெயலலிதாவின் மனுக்களை தள்ளுபடி செய்து விட்டனர் என்று பொய்ப் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

பாலகிருஷ்ண பிள்ளை போன்றவர்கள் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கும் இப்படிப்பட்ட தேர்தல் சட்டப் பிரிவு 8(4) என்பது திரும்பப் பெறப்படாத வரையில் யார்தான் என்ன செய்ய முடியும்!

அன்புள்ள,

மு. க.

(29-04-2001)

2587. ஒன்றுபட்டு நின்றே உழைத்திடுக நன்றே!

உடன்பிறப்பே,

குறிப்பாக தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகளின் ஆங்காங்கு நிர்வாகத்தில் உள்ள அமைப்புகளின் அன்பு உடன்பிறப்புகளுக்காக இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

என்னுடைய தேர்தல் பிரச்சார சுற்றுப்பயணத்தில் இரண்டு கட்டங்கள் நிறைவுற்று மூன்றாவது கட்டச் சுற்றுப்பயணம் மே1ஆம் நாளன்று தொடங்குகிறது.

ஆம்! அயர்வை அச்சத்தால் போக்கி - ரத்தத்தை வியர்வைக் குளமாக்கி வாடுகின்ற பாட்டாளியும் ஆடுகின்றான் திருநாளென்று - என நான் மே தினச் செய்தி எழுதுவேனே அது நினைவில் நிற்கும் என நம்புகிறேன் - அந்த மே தினத்தன்றுதான் சென்னை மே தினப் பூங்காவில் மே தினச் சின்னத்துக்கு மலர் வளையம் வைத்து விட்டு அன்றிரவே தென் மாவட்டங்களை நோக்கிப் புறப்படுகிறேன்.

இரண்டு கட்டங்கள் நிறைவுற்றுள்ள என் சுற்றுப்பயணத்தில் தமிழ்ப் பெருங்குடி மக்களின் எல்லையற்ற மகிழ்ச்சியையும், நமது கூட்டணிச் செயல்வீரர்களின் அளவற்ற எழுச்சியையும் கண்டு பூரித்துப் போயிருக்கிறேன்.

வெற்றி! வெற்றி! அது நம் கண்ணுக்கெதிரே தெரிந்து விட்டது. அதனை நம் கைக்குள் கொண்டு வந்து உறுதிப்படுத்தி விட்ட பிறகே சற்று ஓய்வெடுக்கலாம் என்று என் உடன்பிறப்புகளுக்குத் தோன்ற வேண்டும்.

அதுவரையில் அந்தந்தக் கட்சிகள் போட்டியிடுகிற தொகுதிகளில் நம் கூட்டணிக் கட்சிக்குரிய தேர்தல் சின்னம் எதுவாயினும் அந்தச் சின்னங்களை வாக்காளர்கள் மத்தியில் விளம்பரப்படுத்திப் பரப்புவதிலும், அச் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு வாக்காளர்களைத் திரட்டுவதிலும் பெரும் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

ஆர்ப்பாட்டங்கள், ஆரவாரங்கள் - அறவே தேவையில்லை என்று கண்டிப்பாகக் கூற மாட்டேன்; ஆனால் அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு என்ற பழமொழியை மறந்துவிடக் கூடாதல்லவா!

அவற்றில் காட்டும் அக்கறையை வாக்காளப் பெருமக்களை நாள்தோறும் சந்திப்பதில் காட்டலாமே!

அவற்றில் காட்டும் ஆர்வத்தை வாக்காளர் பட்டியல்களைச் சரி பார்த்துச் சீர்செய்வதில் காட்டலாமே!

வாக்குச்சாவடிகளில் அமைதியாகவும், கண்ணியமாகவும், நேர்மை தவறாமலும் வாக்குப் பதிவுகள் நடைபெறுவதற்கான கண்காணிப்புடன்கூட, அத்தகைய நியாயபூர்வமான சூழ்நிலையும் உருவாகிடுவதற்கு அக்கறை காட்டுவதில் தானே ஜனநாயகத்தின் வெற்றியே இருக்கிறது!

நீ, கழகத்தின் உடன் பிறப்பா? அப்படியானால் தோழமைக் கட்சி போட்டியிடும் தொகுதியில் நமது கூட்டணிக் கட்சியின் உடன்பிறப்புகளுடன் சேர்ந்து நின்று பணியாற்ற முற்படு!

அதேபோல, கழகம் போட்டியிடும் இடங்களில் நமது கூட்டணிக் கட்சி உடன்பிறப்புகளை ஒன்று சேர்த்துப் பணியாற்ற முற்படு!

கழக அமைப்புகளுக்குள்ளேயே ஓரிரு இடங்களில் கசப்பு இருக்கக் கூடும் - அந்தக் கசப்பு எல்லாம் மறைந்து களிப்பும் இனிப்பும் களி நடம் புரிய கழகக் கண்மணிகள் எனைச் சூழ்ந்து கொண்டு தேர்தல் பணிகள் குறித்து பல இடங்களில் கலந்துரையாடிய காட்சி என் நெஞ்சைப் பன்னீரில் குளிப்பாட்டியது.

கசப்பு இருக்கக் கூடும். என்ன? - இருந்தது! இப்போது போய் விட்டது என்பதைத் தம் செயலால் விளக்கிய தம்பிமார்களுக்கெல்லாம் என் நல்வாழ்த்து! பாராட்டு!

இதேபோல் நமது கூட்டணிக் கட்சிகளுக்குள்ளேயும் ஒரு சில அமைப்புகளில் ஏதேனும் மாறுபாடு இருப்பின் அவற்றையும் அகற்றி விடுமாறு அன்புடன் வேண்டுகிற கடமையும் எனக்கிருக்கிறதே இந்த அணியின் தலைவன் என்ற முறையில்!

துரும்பைத் தூணாக்கும் தூயவர்கள் சிலர் இருந்திடும் அரசியலில் - நமது கட்சிகளின் தோழமை தூய்மையாகத்

திகழ்ந்திடுவதற்குப் பணியாற்றுவதில் அனைத்து உடன்பிறப்புகளுக்கும் பங்கு உண்டு. பொங்கும் வெள்ளமெனப் பொது மக்கள் திரளுகின்றனர், வீதிகளில் வேனில் இருந்து பேசும் போதுகூட! கூட்டங்களோ பெரிய மாநாடுகள்தான்!

இந்தச் சக்தியை வகைப்படுத்திடும் பொறுப்பு உன் போன்ற உடன் பிறப்புகளுக்குத்தான்!

வெள்ளத்தை, வாய்க்கால்கள் அமைத்துக் கழனிகளுக்குப் பாசனத்துக்குப் பயன்படுத்தும் விவசாயிகள் நிறைந்த தமிழகத்தில்; இந்த மக்கள் வெள்ளத்தை நாம் பெற இருக்கும் மகத்தான வெற்றிக்கு வகைப்படுத்திடும் ஆற்றல் மிகு பணியினை நீவிர் ஒன்றாக இணைந்து நன்றாக முனைந்து செயல்படுத்திடல் வேண்டும்.

இரண்டு கட்டச் சுற்றுப்பயணம் முடிந்த களைப்புடன் நான் விடுக்கும் இந்த வேண்டுகோளை உள்ளத்தில் பதித்து, உழைத்திடுக! ஒன்று பட்டு உழைத்திடுக! தமிழகம், தொடர்ந்து தழைத்திடுவதற்காக உழைத்திடுக!

“ஒருதமிழன் தமிழர்க்கே உயிர்வாழ் கின்றான்;
உயிர்வாழ்வோன் தமிழர்க்கே தனைஈ கின்றான்;
அரியபெருஞ் செயலையெலாம் தமிழ்நாட் டன்பின்
ஆழத்தில் காணுகின்றான்! தமிழன், இந்நாள்
பெரிதான திட்டத்தைத் தொடங்கி விட்டான்;
பிறந்துளார் தமிழறிஞர் ஆதல் வேண்டும்;
வருந்தமிழர் வையத்தை ஆளவேண்டும்.
வாழ்கதமிழ்! இவ்வையம் வாழ்க நன்றே!”

என்ற புரட்சிக் கவிஞரின் கவிதையை அப்பெருமகனார் பிறந்த நாளாம் இன்று என் கடிதத்துடன் இணைத்திடுவதில் பெருமிதம் கொள்கிறேன்; படித்து நீயும் நம் தமிழ் இனமும் பயனடைய வேண்டுமென்பதற்காக!

அன்புள்ள,

மு. க.

(30-04-2001)

2588. கழகக் கூட்டணி, வெற்றிச் சிகரம் ஏறிடச் செய்க!

உடன்பிறப்பே,

உடல் நலிவுற்று சில நாட்கள் மருத்துவ மனையில் தங்கி சிகிச்சை பெற்று நலம் பெற்றுள்ள திரு. மூப்பனார் அவர்கள் தொடர்ந்து நலமுடன் திகழ என் இதயமார்ந்த விழைவினைத் தெரிவித்து இந்தக் கடிதத்தைத் தொடங்குகிறேன்.

செய்தியாளர்கள் அதாவது பத்திரிகை நிருபர்கள் இருக்கிறார்களே அவர்களில் சில பேர் சில்மிஷம் செய்வதில் கெட்டிக்காரர்களாக இருப்பார்கள்.

இல்லாததை, சொல்லாததை இருப்பது போலவும் - சொன்னது போலவும் இட்டுக் கட்டிக் கேள்விகளைக் கேட்டு, அந்தக் கேள்வி சரியானதுதானா என்று யோசிக்காமலே சில தலைவர்கள் பதில் சொல்வதை வைத்துக் கொண்டு இரு தலைவர்களிடையே கலகமூட்டுவதில் வெற்றியும் பெற்று விடுவார்கள்.

இப்படி ஒரு கேள்வி கேட்கிறாரே நிருபர் - அந்தத் தலைவர், நம்மைப் பற்றி அப்படிச் சொல்லியிருப்பாரா சொல்லக் கூடியவரா - இதையெல்லாம் பற்றிச் சிந்திக்காமல் பதில் சொல்லி விடுவதால் அந்த நிருபருக்கு தற்காலிக வெற்றி பெற்ற மன ஆறுதல் ஏற்படுகிறது. பாவம்! அந்தச் சில நிருபர்கள் இந்த ஆறுதலில் என்னதான் சுகம் காணுகிறார்களோ தெரியவில்லை!

இதோ, உதாரணத்திற்கு ஒன்று பாரேன்! - திரு. மூப்பனார் அவர்கள் உடல் நலம் பெற்று அவரது கட்சியின் தேர்தல் அறிக்கையை வெளியிடுகிறார் என்ற செய்தி கேட்டு மெத்த மகிழ்ச்சியுடன் அவரது செய்தியாளர் சந்திப்பு பேட்டியையும் படித்தேன் ஆர்வமுடன்!

ஒரு நிருபர் - நான் எங்குமே எப்போதுமே திரு. மூப்பனார் அவர்களைப் பற்றிச் சொல்லாத ஒன்றை, தனக்கேயுரிய தந்திரத்துடன் கேள்வியாக்கிக் கேட்டிருக்கிறார்.

கேள்வி :- த.மா.கா. தொகுதிப் பங்கீட்டில் மூப்பனார் விலை போய் விட்டதாக முதலமைச்சர் கருணாநிதி கூறியிருக்கிறாரே?

மூப்பனார் பதில் :- இதற்கு முன் தி.மு.க.வுடன் த.மா.கா. கூட்டணி அமைத்த போது கருணாநிதி என்ன தந்தார்? அதே நிலைதான் இப்போதும்!

இதைப் படித்தபோது வியப்பு மட்டுமல்ல; வேதனையும் என்னைப் பற்றிக் கொண்டது. சுற்றுப் பயணம் புறப்படுவதற்கு முன்பு கூட அவரை அவரது இல்லத்தில் சந்தித்து நலம் விசாரித்து விட்டு புறப்பட்ட எனக்கு அவரைப் பற்றி இவ்வளவு அநாகரிகமாகப் பேச எப்படி மனம் இடம் தந்திருக்க முடியும்?

எனக்கும் அவருக்கும் அரசியலில் கருத்து மாறுபாடுகள் ஏற்படுவதுண்டு - ஏற்பட்ட காலமும் உண்டு - இடையில் யாரோ சில விஷமிகள் கலக விதை தூவுவதற்காகவே கட்டிவிட்ட இந்தக் கதையில் பயன்படுத்தப்பட்டுள்ள விலை போவது போன்ற சொற்களை திரு. மூப்பனார் அவர்கள் விஷயத்தில் நான் என்றைக்குமே கூறியிருக்க மாட்டேன். அவ்வாறு கூற வேண்டிய அவசியமுமில்லை. பல ஆண்டுகள் அவருடன் பழகி அவரது பண்பை உணர்ந்தவன் நான் என்ற முறையில். அந்தக் கேள்வி கேட்ட அந்த நிருபரைப் பார்த்து கருணாநிதி அப்படி எங்கே பேசினார்? என்னைப் பற்றி அவர் அப்படிப் பேசியிருக்க மாட்டார்! என்று மூப்பனார் அவர்கள் சொல்லியிருந்தால் கேள்வி கேட்ட நிருபருக்கு வாயடைத்துப் போயிருக்கும். நானும் மகிழ்ச்சி அடைந்திருப்பேன்.

ஆமாம்! உடன்பிறப்பே, அவரைப் பற்றி நான் இத்தகைய கடுமொழி எங்கும் கூறியதில்லை. கூறவும் மாட்டேன்.

என் செய்வது, தேர்தல் நேரம் இப்படிப் பல செய்திகள் சிறிய கற்பனைகளாக - பெரிய கற்பனைகளாக - அவைகளும் சீழ் பிடித்த கற்பனைகளாகச் சீறிக் கிளம்பும். அது கண்டு சினம் கொள்ளல் தேவையற்றது.

தேர்தல் நேரத்தில்தானே கொள்கைத் திடம் கொண்டோர் யார் - பதவிப் பித்தர் யார் என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

இரு வண்ணக் கட்சிக் கொடியை என் பிணத்தின் மீது போர்த்தும் வரையில் இதே கொள்கைதான் - இதே லட்சியம்தான் - இதே கட்சிதான் எனக் கர்ச்சித்தோர், தொடக்கத்திலிருந்தே எவ்வளவு பதவி வெறியர்களாக இருந்தார்கள் என்பது இப்போது அவர்கள் சுயேச்சைகளாக மாறி நிற்கும்போதல்லவா புரிகிறது! அந்த சுயநலவாத சுயேச்சைகளுக்கு எத்துணை விளம்பரம் ஏடுகளில்! எத்துணை கலகமூட்டும் செய்திப் பின்னல்கள்! அதிலும் குறிப்பாக தி.மு.கழகத்தில் எங்காவது கடுகு சிதறினால்கூட கடல் பொங்கிவிட்டதாக அல்லவா எரிச்சல் ஏடுகள் குதியாட்டம் போடுகின்றன! இத்தகையதொரு நிலை பத்திரிகாதர்மம் என்று ஆகிவிட்ட இந்த நாளில் திரு.மூப்பனார் அவர்களைப் பற்றி நான் சொல்லாத ஒன்றை சொன்னதாக சொறிந்து விட்டுக் கொண்டு அரிப்பைத் தணித்துக் கொள்வதாக எண்ணி, உள்ளத்தை ரணமாக்கிக் கொண்டவர்களைக் கண்டு பரிதாபப்பட வேண்டியுள்ளதே தவிர, பதற்றமடைந்து என்ன பயன்?

உடன்பிறப்பே,

தேர்தல் நேரத்தில் தென்றல் வீசுமிடம் தேடிப் போக முடியாது. புயலையும், புகையையும் எரிமலைகளையும் கண்டு அஞ்சாமல் நமது போர்க் குணத்தையும் உறுதிப்பாட்டையும் நிலைகுலைய விடாமல் கொண்ட குறிக்கோள் எதுவோ அதில் கண்ணும் கருத்துமாக இருந்து கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்து வெற்றிக் கொடி நாட்டுவதிலேயே கவனம் செலுத்த வேண்டும்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தமிழகத் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கும் தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்பில் அமர வேண்டுமென்பதும் ஐந்தாண்டு காலம் நடந்த ஆட்சியின் பொற்காலம் தொடர வேண்டுமென்பதும் - அந்த ஆட்சிக்கும் அடியேன்தான் தலைமை வகிக்க வேண்டுமென்பதும் - பதவிப் பொறுப்பை பணியாற்றும் வாய்ப்பாகக் கருதிடும் நிலையில் நானும் அதற்கு இணங்கியிருப்பதும் - இன்றுள்ள நிலவரம்!

என் வயதின் தள்ளாமை காரணமாகவும் - பணிப்பளுவைத் தாங்க இயலாத களைப்பின் காரணமாகவும் - இதுவே எனது கடைசித் தேர்தல் களம் என நான் உறுதிபடக் கூறி வருகிறேன். இதனைச் சிலர் நான் வளர்த்த தம்பிமார்கள் நையாண்டி செய்தாலும், உண்மையை அது நிகழும் போது உணர்ந்து கொள்ளத்தான் போகிறார்கள்.

அதனால்தான் கோவை மாவட்டத்தில் ஒரு தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் நான் பேசும்போது;

வேட்பாளர் மீது ஏதாவது குறையிருந்தாலும், அவருக்காக அளிக்கிற வாக்கு என்று எண்ணாமல் எனக்காக அளிக்கிற வாக்கு எனக் கருதி வாக்களித்திட உழைத்திடுக, வாக்களித்திடுக!

என்று வேண்டிக் கேட்டுக் கொண்டேன். இந்த வேண்டுகோள் எல்லாத் தொகுதிகளுக்கும் பொருந்தும். பேராசை பார்த்தாயா என நீ நினைத்திடமாட்டாய்! பேயாட்சி வந்துவிடக் கூடாதே என்பதற்காக உன் போன்றோரின் உத்திரவுக்குக் கட்டுப்பட்டுத்தான் இந்த ஒரே ஒரு முறை மட்டும் பொறுப்பேற்க முன் வருகிறேன்.

நீ கட்டளையிட்டால் மட்டும் போதுமா? கடமையும் ஆற்றி, கழகக் கூட்டணியை வெற்றிச் சிகரம் ஏறிடச் செய்திட வேண்டாமோ!

அன்புள்ள,

மு. க.

(01-05-2001)

2589. தமிழகத்தில், கேரளத்தில் ஏன் இந்தத் தடுமாற்றம்?

உடன்பிறப்பே,

மத்தியில் ஐக்கிய முன்னணி ஆட்சி நடைபெற்ற போது அந்த முன்னணியில் தி.மு.கழகமும் அங்கம் வகித்தது. அந்த முன்னணியின் செயல் திட்டக் குழுவில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் இந்திக் கம்யூனிஸ்ட் கட்சியும் இடம் பெற்றிருந்தன.

குறிப்பாக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதான தலைவர் சுர்ஜித் அவர்கள் தான் அந்தச் செயல் திட்டக் குழுவின் கொள்கைகளையும் நடைமுறைகளையும் வகுத்து, முடிவுகளை எடுக்க அறிவுரைகளையும் வழங்கக் கூடிய வசிஷ்ட முனிவராகவே திகழ்ந்தார் என்று சொன்னால் அனுபவ ரீதியாகச் சொல்கிறேன், அது மிகையாகாது.

உண்மையைச் சொல்வதென்றால், ஐக்கிய முன்னணியின் செயல் திட்டக் குழுவில் அதிக நேரம் பேசியவர் என்ற ராஜ முத்திரை சுர்ஜித் அவர்களுக்கே உரியதாக இருந்தது.

தேவகௌடே அவர்கள் பிரதமராக இருந்து, பின்னர் குஜ்ரால் அவர்கள் அந்தப் பொறுப்புக்கு வந்தவுடன், செயல் திட்டக் குழுவில் என்னைப் போல் ஒரு உறுப்பினராக இருந்த திரு. லல்லு பிரசாத் யாதவ் அவர்கள் மீது ஒரு ஊழல் புகார் கூறப்பட்டு, அதற்கான குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படாத நேரத்தில், விசாரணைகூட நடைபெறாத வேளையில் மார்க்சிஸ்ட் தலைவர் சுர்ஜித் அவர்கள் சிங்கம் போல் கர்ச்சித்து புகாருக்கு ஆளாகியிருக்கிற லல்லு பிரசாத் யாதவ், ஐக்கிய முன்னணியிலிருந்து விலக்கப்பட வேண்டுமென்றும் இல்லையேல் இரு கம்யூனிஸ்டு கட்சிகளும் செயல் திட்டக் குழுவில் இருக்க முடியாது என்றும் உரத்த குரலில் முழக்கம் செய்தார்.

லல்லு மீது புகார் மட்டும் தானே கூறப்பட்டிருக்கிறது; குற்றப் பத்திரிகை தாக்கல் இல்லை. வழக்கு இல்லை. தீர்ப்பு இல்லை.

தண்டனை இல்லை. அதற்குள் அவசரப்பட்டு லல்லுவை வெளியேற்றுவானேன் என்று செயல் திட்டக் குழுவில் என்னைப் போன்ற சிலர் வாதிட்டும் பயனில்லை. கம்யூனிஸ்டு தலைவர்கள் வெளிநடப்பு செய்யக்கூடிய சூழ்நிலை உருவானதும், அதைத் தவிர்க்க அவர்களது வற்புறுத்தலின்படி லல்லு பிரசாத் யாதவ் அவர்கள் ஐக்கிய முன்னணியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

ஊழல் பிரச்சினையில் விசாரணை நடைபெற்றுக் குற்றம் நிரூபிக்கப்படாத நேரத்திலும், புகார் நிலையிலேயே லல்லு பிரசாத் யாதவ் அவர்களை வெளியேற்றுவதுதான் ஒரே வழி என்று கூறுகிற அளவுக்கு கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள் கற்பூரத்தில் தீக்குச்சி பட்டது போல அவ்வளவு நெருப்பு ஜுவாலையாக இருந்தார்கள்.

ஆனால்? இன்று, அவர்களின் செயல், சொல் இரண்டிலும் ஏற்பட்டுள்ள முரண்பாடுதான் என்னே!

அரசு நிலத்தை வாங்குவதே அமைச்சருக்கு இழுக்கு - விதிமுறை இடம் தரவில்லை - அதிலும் அதனை அடிமாட்டு விலைக்கு வாங்கி டான்சி நிலத்தை ஏப்பம் விட்டது குற்றமென்று வழக்கு - விசாரணை பல நாட்கள் - பின்னர் தீர்ப்பு - தண்டனையோ மூன்றாண்டுக்கு மேல்!

இப்படியொரு நிலைக்கு ஆளானது வேறு யாருமல்ல; வேறு யாராவதாவது இருந்தால் சுர்ஜித் அவர்களை சுட்டெரித்து இருப்பார். பொது ஒழுக்கம் எனும் சுக்கானில் மாட்டியிருப்பார். ஊழல் என்பது அவருக்குப் பிடிக்கவே பிடிக்காது. அவர் எதிரில் அந்தச் சொல்லை யாரும் உச்சரிக்கவும் முடியாது. காரணம் அவர் கம்யூனிஸ்டு கட்சியின் சகலவிதமான சட்ட திட்டங்களுக்கு பிதாமகன் அல்லவா!

ஆனால் ஒன்று - ஒரே ஒரு விதிவிலக்கு - அம்மையார் ஜெயலலிதா விஷயத்தில் மட்டும் ஊழல் என்பது ஒரு பிரச்சினையே அல்ல! அவர் டான்சி வழக்கு மூன்றாண்டு தண்டனை பெற்றால் என்ன? முப்பது ஆண்டுகள் தண்டனை பெற்றால் என்ன? அதை திரு.சுர்ஜித் அவர்களோ இந்திய கம்யூனிஸ்டு தலைவர் நண்பர் பரதன் அவர்களோ, ஒரு பொருட்டாக மதிக்க மாட்டார்கள்.

இதனை அனுபவ ரீதியாக நாட்டு மக்கள் கண்டு வருகிறார்கள் என்பதில் யாருக்கும் ஐயமில்லை! முரண்பாடு என்பதற்கு உதாரணம் காட்ட வேண்டுமென்பதற்காகவே கம்யூனிஸ்டுகள்

லல்லு பிரசாத் விஷயத்திலும் ஜெயலலிதா விஷயத்திலும் வெவ்வேறு நிலையை எடுத்திருக்கிறார்கள்.

மேலும் உண்டு முரண்பாடுகள்!

கேரளத்தில் பாலகிருஷ்ண பிள்ளை என்ற அமைச்சர் ஊழல் வழக்கில் ஐந்தாண்டு தண்டனை பெற்று அதன் பிறகு சட்டமன்ற உறுப்பினராக நீடிக்கிறார். இப்போது கேரளத்தில் நடக்க இருக்கும் தேர்தலுக்காக கொட்டாரக்காரா தொகுதியில் வேட்பு மனு தாக்கல் செய்கிறார். தேர்தல் ஆணைய விதிமுறையின்படி ஊழல் வழக்கில் தண்டனை பெற்ற பாலகிருஷ்ண பிள்ளை தேர்தலில் நிற்பதற்கு தடை விதித்து அவரது வேட்பு மனுவை நிராகரிக்கச் சொல்லி அவரை எதிர்த்துப் போட்டியிடும் மார்க்சிஸ்ட் வேட்பாளர் தேர்தல் ஆணையத்திடம் வற்புறுத்துகிறார்.

ஒருவர் சட்டமன்ற உறுப்பினராகவோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினராகவோ இருக்கும் பட்சத்தில் அந்தச் சட்டப் பிரிவு அவரைப் பாதிக்காது என்றிருக்கும் தேர்தல் ஆணைய விதிமுறையைக் காட்டி பாலகிருஷ்ண பிள்ளை வேட்பு மனு ஏற்கப்படுகிறது.

"ஊழல் பேர்வழியின் வேட்பு மனுவை எப்படி ஏற்கலாம்!" என்று கேரளத்தில் மார்க்சிஸ்ட் கட்சி ஓங்கிக் குரல் ஒலிக்கிறது - ஆனால் அதே நேரம் ஜெயலலிதாவின் வேட்பு மனுவை எப்படித் தள்ளுபடி செய்யலாமென்று, இங்கே அதே மார்க்சிஸ்ட் தலைவர் சுர்ஜித் மார்தட்டிச் சவாலுக்கு அழைக்கிறார் தேர்தல் ஆணையத்தை!

என்ன விந்தை இது! கேரளத்தில் பாலகிருஷ்ண பிள்ளை வேட்பு மனு செல்லாது எனப் போர் முழக்கமிடும் மார்க்சிஸ்டுகள், தமிழ்நாட்டில் மட்டும் ஜெயலலிதாவின் மனு செல்லுமென அறிவிக்கப்பட வேண்டுமென அறைகூவல் விடுவது ஏன்? ஏன்? ஏன்?

உடன்பிறப்பே,

என் கருத்தும் என்னைப் போலவே வேறு சில சட்ட வல்லுநர்கள் கருத்தும் பாலகிருஷ்ண பிள்ளையைக் காப்பாற்றுவதற்குப் பயன்படுத்தப்பட்ட அந்த 8 (4) என்ற சட்டப் பிரிவு, நீக்கப்பட வேண்டுமென்பதுதான்!

அதாவது ஊழலின் காரணமாக தண்டனை பெற்றவர்கள் கிரிமினல்கள் - அந்தக் கிரிமினல்கள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்றால் அப்பதவிகள் அவர்களைக் காப்பாற்றும் கவசங்களாக இருத்தலாகாது.

முக்கியமான கருத்து என்னவென்றால் பாலகிருஷ்ண பிள்ளைக்கும் ஜெயலலிதாவைப் போலவே தேர்தலில் நிற்க முடியாது தகுதியிழப்பு வேண்டும்! அதற்கான வகையில் சட்டத்தின் விதிவிலக்கு அகற்றப்படல் வேண்டும்!

இரு ஊழல் குற்றச்சாட்டுகள் - வழக்குகள் தண்டனைகள் - இதில் தேர்தல் கமிஷனில் எப்படியோ எந்தக் காலத்திலோ, எவரோ ஒருவருக்கு சட்டமன்ற, நாடாளுமன்ற பதவிகள் கேடயங்களாகப் பயன்படுத்தப்பட்டு அதுவே மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தில் ஒரு பிரிவாக சேர்க்கப்பட்டு விதி விலக்காகியிருக்கிறது. அந்த விதிவிலக்கின் பயனை, பாலகிருஷ்ண பிள்ளை அனுபவிக்கிறார்.

இது போன்ற விதி விலக்குகள் அவசியமா? தேவையா? என்பதை தேர்தல் ஆணையம் சிந்தித்து உரிய முறைப்படி உரிய வகையில் முடிவெடுக்க வேண்டும்.

அதுவரையில் இப்போதுள்ள சட்டப் பிரிவின்படி தேர்தல் ஆணையம் செயல்பட்டிருப்பதை திரு. கில் அவர்கள் தெளிவாக விளக்கியிருப்பதைப் புரிந்து கொள்வது வீண் விவாதங்களைக் குறைத்திட உதவும்.

இதில் பெரிய முரண்பாடே என்னவென்றால் த.மா.கா. ஜனநாயகப் பேரவைத் தலைவர் நண்பர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் கூறுவது போன்று ஜெயலலிதாவின் வேட்பு மனுவை ஏற்காததைக் கண்டிக்கும் கம்யூனிஸ்டுகள், கேரளத்தில் பாலகிருஷ்ண பிள்ளையின் வேட்பு மனுவை ஏற்றுக் கொண்டதைக் கண்டித்து வழக்காடுவதுதான்! பாவம்! கம்யூனிஸ்டுகளுக்கு தமிழகத்திலும் கேரளத்திலும் ஏனிந்த தடுமாற்றம்?

அன்புள்ள,

மு. க.

(02-05-2001)

2590. உடன்பிறப்புகளுக்கு அன்பு வேண்டுகோள்!

உடன்பிறப்பே,

“எங்கெங்குக் காணினும் சக்தியடா
ஏழு கடல் அவள் வண்ணமடா”

எனப் புரட்சிக் கவிஞர் அவரது இளமைக் காலத்தில் முதலில் பாடிய கவிதையை பாரதியாருக்கு நேராக இவ்வாறு பாடியதாக ஒரு செய்தி உண்டு!

நான் இரண்டு மூன்று கட்டங்களாகச் சென்று வந்த தேர்தல் சுற்றுப் பயணத்தைப் பற்றிக் கூறுவதென்றால் அதேபாணியில்தான்

“எங்கெங்குக் காணினும் எழுச்சியடா
எட்டுத் திக்கும் மக்கள் வெள்ளமடா!”

என்றே பாட வேண்டும்! அவ்வளவு எழுச்சி! அப்படி கூட்டங்கள்!

சாலைகளின் இரு மருங்கிலும் - கூட்டம் நடைபெறும் இடங்களிலும் - வாகனத்தில் இருந்து நான் உரையாற்றும் பகுதிகளிலும் - மரங்களிலும், வீடுகளிலும் தேனடை போலத் திரண்டு நின்று வரவேற்றனர், வாழ்த்தினர், வெற்றிதான் சென்று வா! என முழங்கினர்.

அடடா! அந்தத் தாய்க்குலம் பொழிந்த பாச மழையில் - இளங்காளைகள் துள்ளிக் குதித்துப் புலப்படுத்திய அன்பு வெள்ளத்தில் - பேரன்பு கொண்ட பெரியோர் கையசைத்து வழங்கிய ஆசிமொழிகள் எனும் அருவிப் பெருக்கில் முற்றாக நனைந்துதான் சென்னை திரும்பியிருக்கிறேன். களிப்பில் ஆடும் இந்த உள்ளத்திலே ஏக்கப் பெருமூச்சுடன் கூடிய ஒரு கவலையும் உண்டு.

ஆம், இத்தனை எழுச்சியையும் வாக்குகளாக மாற்ற வேண்டுமே! அது நம்மால் முடியக் கூடிய காரியம்தானே! வெட்டி வா என்றுரைத்தால் கட்டி வரும் உடன்பிறப்புகளாக உன் போன்றோர் இருக்கும்போது ஏன் வீண் கவலை என்ற ஆறுதலும், தானாகவே ஏற்படுகிறது!

இருந்தாலும் செயல்படக் கூடிய உடன்பிறப்புகள் ஒரு சிலர், ஒதுங்கியிருக்கின்றனர் - அவர்கள் அப்படியிருப்பது அவர்களை அறியாமலேயே எதிர் அணிக்கு வலுச்சேர்ப்பது போல் ஆகிவிடுகிறது என்கிற ஆதங்கத்துடன் உணர்ச்சியைக் கொட்டி என்னிடம் கண் கலங்கிய உடன்பிறப்புகளையும் நான் காணத் தவறவில்லை.

ஒரு நிமிட நேரங்கூட ஓய்வில்லாமல் சுற்றுப் பயணத்தில் ஈடுபட்ட காரணத்தால் ஒரு சிலரைத்தான் சந்தித்து சமாதானம் கூற முடிந்தது. மற்றவருடன் இதுபோன்ற கடிதங்கள் - கூட்டங்கள் மூலம்தான் பேச முடிந்தது. இவற்றுக்கு மதிப்பளிக்கும் உடன்பிறப்புகளும் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கை இருப்பதால் நான் இன்னமும் அவர்களும் செயல்பட முன் வருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். வர வேண்டுமென என்றுமுள்ள வாஞ்சையுடன் அழைக்கிறேன்.

ஒதுங்கியிருப்பதாலோ - அல்லது தனித்து நின்று போட்டியிடுவதாலோ, அந்த உடன்பிறப்புகள், தங்கள் உள்ளத்திற்கு ஒரு தற்காலிக ஆறுதல் தேடிக் கொள்ளலாமே தவிர - கழகத்திற்குத் துரோகம் விளைத்தனர் என்ற நிரந்தரமான சாபக்கேட்டுக்கு அல்லவா ஆளாகி விடுகிறார்கள்.

அந்தக் களங்கத்திலிருந்து விடுபட இப்போதுகூட ஒன்றும் கால தாமதமாகி விடவில்லை; அவர்கள் தங்களைத் திருத்திக் கொண்டு, கழகம் எனும் உயிர் மூச்சைக் காப்பாற்றத் துடித்தெழலாம். இந்தக் கடமையிலிருந்து தவறினால், என் கடைசி வேண்டுகோளையும் நிராகரித்தால் காலம், அவர்களைப் பிறகு மன்னிக்கவே செய்யாது.

என் வேண்டுகோள் நிறைவேறுகிற அளவுக்குச் செயல்படுத்த, நிர்வாகப் பொறுப்பில் உள்ள உடன்பிறப்புகள் உடனடியாகப் பொறுப்பை உணர்ந்து, சோர்ந்திருப்போரை சோர்வு

போக்கிப் பணியாற்றச் செய்யவும் - பிணக்கு கொண்டிருப்போரை இணக்கமுடன் செயலாற்ற ஒன்று சேர்க்கவும் முற்பட வேண்டும்.

மீண்டும் சொல்கிறேன், தமிழகமெங்கும் எழுச்சி மகிழ்ச்சி தரக் கூடிய அளவுக்கு இருக்கிறது - நமது கூட்டணியின் தோழமைக் கட்சியினர் நமது கழகத்துடன் இணைந்து ஆற்றும் பணி அற்புதமாக அமைந்து விட்டிருக்கிறது.

வெற்றி நமது அணியை நோக்கி விரைந்து வருதல் கண்டுதான் எதிர் அணியினர் நம்மை ஏசிப் பேசிடத் தலைப்பட்டு விட்டனர்.

என்ன துணிவு இருந்தால், ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஒரு துணை நடிகை கருணாநிதியை இன்னும் பத்து நாளில் சிறையில் அடைப்போம் என்று பிரச்சாரம் செய்து கொண்டிருப்பார். உன்போன்ற உடன்பிறப்புகள் சிலரிடம் உள்ள ஒற்றுமைக் குறைவால் அந்தத் துணை நடிகைக்கு ஏற்பட்ட தைரியமல்லவா அது!

ஆமாம்! உடன்பிறப்பே ஒற்றுமையில்லாத காரணத்தால் அதைப் பயன்படுத்தி நம் கழக அணியைத் தோற்கடித்து விடுவார்களாம் - அத்துடன் என்னையும் சிறையில் போட்டு விடுவார்களாம்!

இதனை நீ விரும்புகிறாய் என்றால், இத்தேர்தலில் நீ ஒரு பணியும் ஆற்றாமல் ஒதுங்கியிருக்கலாம் - அல்லது தனித்து போட்டியிடலாம் - அல்லது ஒற்றுமையின்றி ஏதோ பெயரளவுக்குச் செயல்படலாம்!

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் என்ன பேசியிருக்கிறார் பார்த்தாயா? கருணாநிதிக்கு சேப்பாக்கத்தில் தோல்வி கொடுப்போம் - அடுத்து அவரைக் கீழ்ப்பாக்கத்தில் சேர்த்து விடுவதே நல்லது என்று பேசியிருக்கிறார்.

அவர் வயதுக்கு என்னைப் பற்றிப் பேச வேண்டிய பேச்சுத்தான் அது என்று அவர்களது காங்கிரஸ் கலாச்சாரம் கூறுகிறது போலும்!

சிறையில் தள்ளுவது, கீழ்ப்பாக்கம் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் அடைப்பது இவைகள்தான் இவர்கள் ஆட்சிக்கு வந்தால் செய்யக்கூடிய சாதனைகள்போலும்!

இந்தத் தரக் குறைவான தாக்குதல்களுக்கெல்லாம் நாம் அளிக்கும் ஒரே பதில் - கழகக் கூட்டணியை வெற்றி பெற வைப்பதுதான்!

நமது அணி வெற்றி பெறத்தான் போகிறது. இதில் உன் பங்கு உண்டா இல்லையா? என்பதை அதிருப்தியில் இருக்கும் உடன்பிறப்பே நன்றாக சிந்தித்து முடிவுக்கு வா!

என்று உன் போன்ற உடன்பிறப்புகள் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கெங்குக் காணினும் எழுச்சி, எட்டுத் திக்கும் மக்கள் வெள்ளம் என நான் கண்ட காட்சிதான் நமது வெற்றிக்கு அறிகுறி என்பதையும் திடமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(06-05-2001)

2591. அவர்களே அறிவித்த உண்மை அறிவாய்! உழைத்திட உடன் எழுவாய்!

உடன்பிறப்பே,

அவர்களுக்கே அர்த்தம் புரிகிறதோ இல்லையோ, எதற்கெடுத்தாலும் எங்கள் அணி மதச் சார்பற்ற அணி என்று மார்தட்டிச் சொல்லிக் கொள்வதிலே தமிழ்நாட்டு காங்கிரஸ்காரர்களுக்கும், த.மா.கா.வின் முன்னோடிகளுக்கும், கம்யூனிஸ்டு கட்சியின் முன்னணி தலைவர்களுக்கும் பா.ம.க.வுக்கும் ஒரு தனி ஆர்வமே உண்டு.

அதிலும் கம்யூனிஸ்ட் தலைவர்கள் சில பேர் நண்பர் நல்லகண்ணு போன்றோர் கூட நாம் நம்பவில்லை! ஆமாம், அவர் கூட என்னை மஞ்சள் துண்டு என்றும் காவியாடை என்றும் கேலி பேசி தனது மதச் சார்பின்மைக் கொள்கையின் மகத்துவத்தை மக்கள் மத்தியில் எடுத்துக் கூறத் தவறுவதில்லை.

அந்த ஆர்வத்தின் அடிப்படையிலேயே இங்கே அ.தி.மு.க. தலைமையில் மதச்சார்பற்ற கூட்டணியை அமைத்துக் கொண்டார்கள். அந்த அணியில் இந்திய யூனியன் முஸ்லீம் லீகுக்கும், இந்திய தேசிய லீகுக்கும் கூட இடம் உண்டு. முஸ்லீம் லீக் கட்சியை வகுப்பு வாத இயக்கம் என்று காங்கிரசார் தள்ளி வைத்திருந்த காலமெல்லாம் உண்டு அது சரித்திரம்!

அதே போலத் தாங்கள் இருக்கும் மேடையில் வகுப்புவாதக் கட்சிக்காரர்கள் என்பதால் முஸ்லீம் லீக்கினர் ஏறக் கூடாது என கம்யூனிஸ்டுகள் நிபந்தனை விதித்து நிறைவேற்றிக் காட்டிய வரலாறும் உண்டு!

ஆதாரங்கள் இல்லாமல் இதனை நான் குறிப்பிடவில்லை. அச்சிலே உள்ளன ஆதாரங்கள் தேதிவாரியாக! தேவைப்பட்டால் அதைப் பிறகு பார்க்கலாம்.

இப்போது திடீரென ஒரு பிரச்சினை வெடித்திருக்கிறது. காங்கிரஸ், கம்யூனிஸ்டு, த.மா.கா., அ.தி.மு.க., தலைமையில் அமைந்துள்ள கூட்டணிக்கு மதச் சார்பற்ற கூட்டணி என்ற பெயரல்லவா!

பிரச்சினை என்னவென்றால், காங்கிரஸ், கம்யூனிஸ்டு இவையிரண்டும் கட்சிகளில் உண்மையிலேயே மதச் சார்பற்ற கட்சி எது என்ற சொற்போர் தொடங்கியிருக்கிறது. தொடங்கி வைத்தவர் சோனியா காந்தி அவர்கள். எப்படி? எப்போது? ஏன்? இந்தக் கேள்விகளுக்கு விடையாக இதோ சில விளக்கங்கள்.

மே திங்கள் இரண்டாம் நாள் கேரளத்தில் காங்கிரசுக்கு ஆதரவு கேட்டு தேர்தல் பிரச்சாரத்திற்காக சென்ற சோனியா காந்தி அவர்கள், கேரளத்தை ஆளுகிற கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட இடதுசாரிக் கட்சி அரசாங்கத்தைப் பிடிபிடியெனப் பிடித்துள்ளார்.

* இடதுசாரி என்ற தீய சக்தியிடமிருந்து கேரள மாநிலத்தை விடுதலை செய்யுங்கள்.

* கேரளாவில் மார்க்சிஸ்ட் தலைமையிலான ஆட்சி நடக்கிறது. இந்த ஆட்சியில் தேசிய நீரோட்டத்திலிருந்து கேரளா விலகி விட்டது.

* மேலும் கேரளாவில் வன்முறை அதிகரித்து விட்டது. வன்முறையை மாநில அரசு நிர்வாகமே தூண்டி விடுகிறது. போலீஸ் அதைக் கைகட்டி வேடிக்கை பார்க்கிறது.

* அரசின் கஜானாவில் உள்ள பணம் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

* பொதுத்துறை நிறுவனங்கள் இந்த ஆட்சியில் புறக்கணிக்கப்பட்டுள்ளன. புதிய தொழில்கள் எதுவும் தொடங்கப்படவில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து விட்டது. சாலைகள் இல்லை. பாலங்கள் இல்லை. விவசாயத் தொழிலாளர்க்குப் பாதுகாப்பு இல்லை.

* எனவே மதச் சார்பற்ற கேரளாவை உருவாக்கிட இந்த மாநிலத்தை இடதுசாரிகள் பிடியிலிருந்து மீட்க காங்கிரஸ் அணிக்கு வாக்களியுங்கள்.

கேரளத்தில் சோனியா காந்தி உதிர்த்த வாசகங்கள் இவை.

கேரள அரசின் மீது இத்தனை குற்றச்சாட்டுகளையும் கூறி விட்டு இடதுசாரியினர் மதச் சார்பற்ற ஆட்சியும் நடத்தவில்லையென்று சுட்டிக்காட்டி, ஆகையால் அந்த ஆட்சி மாற்றப்பட வேண்டுமென்று அறைகூவல் விட்டிருக்கிறார்.

கேரள இடதுசாரிக் கட்சி ஆட்சியைச் சாடியதோடு நிற்காமல், சோனியா காந்தி அவர்கள் மேற்கு வங்க மார்க்சிஸ்ட் ஆட்சியின் மீது கடுமையான தாக்குதல் நடத்தியுள்ளார்.

* மேற்கு வங்கத்திலுள்ள இடதுசாரி முன்னணி அரசு கடந்த 24 ஆண்டுகளாக ஊழலையும், சமூக விரோதச் சக்திகளையும் ஊக்குவித்து வந்துள்ளது.

* இதற்கு எதிராக நாம் போராட வேண்டும். ஆட்சி செய்வதற்கு அதற்கு உரிமை இல்லை. ஆட்சியை விட்டுப் போக வேண்டும்.

* ரவீந்திர நாத் தாகூர், நஸ்ருல் இஸ்லாம் ஆகியோரின் மேற்கு வங்கத்தை இடதுசாரி அரசு அழித்து விட்டது. வறுமையும் வேலையின்மையும் அதிகரித்துள்ளது. பஞ்சாயத்துக்கள் மக்களைச் சுரண்டுகின்றன.

* மாற்றத்தை விரும்பும் மக்களின் குரலைக் கேட்க விடாமல் ஒடுக்குகிறது மார்க்சிஸ்ட் கட்சி.

* ஜனநாயகத்துக்குச் சவால் விடும் மார்க்சியக் கம்யூனிஸ்ட் கிராமப்புறங்களில் வன்முறையைத் தூண்டுகிறது. பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விடுகிறது.

* இடதுசாரிக் கட்சி கொலை, கொள்ளைகளில் ஈடுபடுகிறது. இங்கு சட்டம், ஒழுங்கு எதுவுமில்லை.

* வாக்குப் பதிவு நாள் நெருங்கி வரும் நிலையில் போலீசுடன் சேர்ந்து எதிர்க்கட்சி வேட்பாளர்கள் பிரச்சாரத்தில் ஈடுபடாதவாறு அச்சுறுத்துகின்றனர் மார்க்சிஸ்டுகள்.

அதாவது தேர்தல் நேரத்தில்தான் சோனியா அவர்களுக்கும் அவர் தலைமையில் உள்ள காங்கிரசுக்கும் இடதுசாரியான

மார்க்சிஸ்ட் உள்ளிட்ட ஆளுங்கட்சியினர் மதச் சார்பற்ற கொள்கை உடையவர்கள் அல்ல என்பது புரிந்திருக்கிறது. வன்முறையாளர் கட்சி என்ற ஞானோதயமும் ஏற்பட்டிருக்கிறது.

சோனியா அம்மையாரின் இந்தத் தாக்குதலுக்குப் பதில் அளிக்கும் முறையில் மார்க்சிஸ்ட் தலைவர் சுர்ஜித் அவர்கள் மே 4 ஆம் நாள் காங்கிரசுக்கு சூடு கொடுத்திருக்கிறார்.

பாபர் மசூதி இடிக்கப்பட்ட போது மத்தியில் காங்கிரஸ்தான் ஆட்சியில் இருந்தது. பாபர் மசூதிக்குப் போதிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று தேசிய பாதுகாப்பு கவுன்சில் பரிந்துரை செய்திருந்தது. ஆனால் பிரதமராக இருந்த நரசிம்மராவ், பாபர் மசூதிக்கு போதிய பாதுகாப்பு அளிக்கத் தவறி விட்டார். எனவே இனிமேல் மதச்சார்பின்மை பற்றி காங்கிரஸ் பேசுவதற்கு எந்தத் தார்மீக உரிமையும் கிடையாது

இவ்வாறு கடுமையாகப் பதில் அளித்து காங்கிரசின் மதச் சார்பின்மைப் பேச்சு ஒரு மாய்மாலம் என்பதை வெளிப்படுத்த முயன்றிருக்கிறார்.

அதாவது, காங்கிரஸ் தலைவர் சோனியா கம்யூனிஸ்டுகளின் மதச் சார்பற்ற கொள்கைப் பேச்சு வெறும் போலித்தனம் என்று குற்றம் சாட்ட, கம்யூனிஸ்டு தலைவர் சுர்ஜித் அவர்களோ மதச் சார்பின்மை பற்றிப் பேச காங்கிரசுக்குத் தகுதியே கிடையாது என்று ஒரே போடாகப் போட்டுவிட்டார்.

நல்ல காலம், இந்தத் தேர்தல் மட்டும் இப்போது வராமல் இருந்திருந்தால் இவர்கள் இரண்டு பேருக்குமே மதச்சார்பற்ற கொள்கையில் அழுத்தமான பிடிப்பு கிடையாது என்ற உண்மை இவர்களின் வாய்மொழி மூலமே உலகிற்குத் தெரியாமலே போயிருக்கும்.

அது போகட்டும், கம்யூனிஸ்ட், காங்கிரஸ் கட்சிகளுக்கிடையே நடைபெறும் இந்த சொற்போரை வேடிக்கை பார்ப்பதல்ல, இப்போது நமக்குள்ள வேலை!

இன்னும் ஓரிரு நாட்கள் மட்டுமே இடையில் இருக்கின்றன - மே 10ஆம் நாள் தேர்தல் - ஒரு நிமிடம் கூடத் தாமதிக்காமல் நீ பணிகளை ஆற்றிட வேண்டும்.

வகைப்படுத்திப் பணிகளை ஆற்றினால், வெற்றித்தாய் உனைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டு நெற்றியில் முத்தமிடுவாள்.

புறப்படு! வாக்காளர்களுக்கு நினைவூட்டு! ஒவ்வொருவரும் வாக்களித்துத் தங்கள் உரிமையை நிலைநாட்டுவதுதான் ஜனநாயகம். அந்த ஜனநாயகக் கடமையைத் தவிர்க்க முடியாத காரணங்களுக்காகக்கூட நிறைவேற்றாமல் நடுநிலை வாக்காளர்கள் இருந்து விடுவார்களேயானால், அது, நம் வெற்றியைப் பாதிக்கும் என்பதை மறந்து விடாதே! எல்லா வாக்குகளும் நம் அணியில் உள்ள கட்சியினரின் சின்னங்களுக்குக் கிடைத்திட அரும்பணியாற்று!

அந்தப் பிரச்சாரப் பணியை முதலில் செய்!

அதன் பிறகு காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகளின் கொள்கைக் குழப்பச் சொற்போரைச் சுவைக்கலாம்.

அன்புள்ள,

மு. க.

(07-05-2001)

2592. கூடிப் பணி புரிந்தால் நம் கூட்டணிக்கே வெற்றி!

உடன்பிறப்பே,

தேர்தல் பிரச்சாரத்துக்குக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி அம்மையார் அவர்கள் தமிழ்நாட்டின் பக்கமே தலை காட்டாமல் போனது காங்கிரஸ் தொண்டர்களுக்குப் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதை ஓரளவாவது சரிக்கட்டும் வகையில் கர்நாடக முதலமைச்சர் திரு. கிருஷ்ணா அவர்களும் வேறு சில மாநிலங்களின் காங்கிரஸ் முதலமைச்சர்களும் வந்ததும் - தேர்தல் பிரச்சாரம் செய்ததும் அந்தத் தொண்டர்களுக்குச் சற்று ஆறுதல் தரக் கூடிய விஷயம்தான்.

பிரச்சாரத்துக்கு வந்த காங்கிரஸ் முதலமைச்சர்களிலேயே நட்சத்திர அந்தஸ்து உள்ளவராக கர்நாடக முதல்வர் மட்டுமே காணப்பட்ட காரணத்தால்; அவர் தமிழகத் தேர்தல் களத்தில் உதிர்த்த கருத்துக்களைப் பற்றி நாமும் சில கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகியுள்ளோம்.

வந்தவர்; சென்னைக்குப் புறப்படுவதற்கு முன்னரே பல ஆண்டுகளாக பெங்களூரில் மூடப்பட்டுக் கிடக்கும் அய்யன் திருவள்ளுவர் சிலையைத் திறந்து வைத்துவிட்டோ அல்லது திறப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டோ புறப்பட்டிருப்பாரேயானால் - காங்கிரஸ் கட்சியினர் பறைசாற்றிப் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிற தேசிய நீரோட்டம் - தேசியப் பார்வை - தேசிய உணர்வு எனும் வார்த்தைகளுக்கு அர்த்தம் இருப்பதையும் - அவர்களின் வாய்ச்சொல்லில் வாய்மையில்லாமற் போகவில்லை என்பதையும் கர்நாடக முதல்வர் தமிழ் மக்களின் உணர்வை மதிக்கிறார் என்பதையும் ஒப்புக்கொள்ள முடியும்.

பாவம்; உலகம் புகழும் வள்ளுவரையே உதாசீனப்படுத்துகிற கலாச்சாரம். காங்கிரஸ் கலாச்சாரம் - காரணம் கேட்டால் திரு. கிருஷ்ணா சொல்லுவார்; என்ன செய்வது? இங்கே திருவள்ளுவர் சிலையை மறுக்கும் தீவிரவாதிகள் இருக்கிறார்களே என்று!

அப்படிப்பட்ட தீவிரவாதிகளைத் தனது மாநிலத்திலே தட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிற நண்பர் கிருஷ்ணா அவர்கள்தான் தமிழ் நாட்டிலே தீவிரவாதிகள் நடமாட்டம் அதிகம் என்று இங்கே வந்து தேர்தல் பிரச்சாரம் செய்கிறார்.

எத்தனை தீவிரவாதிகள் மீது தமிழ்நாட்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது - எத்தனை பேர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற ஒரு புள்ளி விபரத்தைக் கர்நாடக மாநிலத்திலும் தமிழ்நாட்டிலும் சேகரித்தால்; தீவிரவாதம் எங்கே தீவிரமாயிருக்கிறது என்பதை திரு கிருஷ்ணா அவர்கள் தெரிந்து கொள்ள முடியும். அ.தி.மு.க. ஆட்சிக்கு அவர் அவசர அவசரமாகக் கொடுத்துள்ள சர்டிபிகேட்டையும் மாற்றிக் கொள்ள முடியும்!

இதோ; அதற்கான ஆதாரபூர்வமான புள்ளி விபரம் :-

1991 முதல் 1996 வரை ஜெயலலிதா ஆட்சியிலே இடதுசாரி தீவிரவாதிகள் தமிழகத்திலே நடத்திய வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கை 30. இதில் கொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 7.

1996 முதல் 2001 வரை நடைபெற்ற கழக ஆட்சியில் இதே இடதுசாரி தீவிரவாதிகள் தமிழகத்திலே நடத்திய வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கை வெறும் 11 தான். அதில் இறந்தவர்களின் எண்ணிக்கை 1 தான்.

விடுதலைப் புலிகள் மற்றும் அவர்களது ஆதரவாளர்கள் அதிமுக ஆட்சியிலே கைது செய்யப்பட்டவர்கள் 118 பேர். தி.மு.கழக ஆட்சியில் கைது செய்யப்பட்டவர்கள் 247 பேர். இதிலிருந்து கழக ஆட்சியிலே தீவிரவாதிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை நண்பர் கிருஷ்ணா அவர்கள் தெரிந்து கொள்ளலாம். தீவிரவாத இயக்கங்கள் 1984ஆம்

ஆண்டிலும், 1986ஆம் ஆண்டிலும் அதிமுக ஆட்சியின்போதுதான் தோன்றின. அப்போது அவற்றை முளையிலேயே கிள்ளி எறியவில்லை. கழக ஆட்சியில்தான் முக்கிய தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டு, தீவிரவாத இயக்கங்களின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அந்த இயக்கங்களைத் தடை செய்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காவிரிப் பிரச்சினை குறித்தும் கிருஷ்ணா அவர்கள் கருத்துக் கூறியிருக்கிறார்.

வேடிக்கையான கருத்து - வேதனையான கருத்து - இப்போது நடுவர் மன்றத்தின் இடைக்கால தீர்ப்புதான் வந்திருக்கிறது. முழுமையான தீர்ப்பு வரும்வரையில் பிரச்சினை இருக்கத்தான் செய்யும் என்பது போலப் பேசியிருக்கிறார் கர்நாடக முதலமைச்சர்.

இடைக்காலத் தீர்ப்புக்குக் கட்டுப்படுவதாக; காவிரிப் பிரச்சினைக்காக பிரதமர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள ஆணையத்தில் உறுதியளித்து விட்டு; இப்போது இறுதித் தீர்ப்பு வரும்வரையில் இப்படித்தான் இழுத்தடிப்போம் என்ற ரீதியில் கர்நாடக முதல்வர் கருத்து வெளியிட்டிருப்பது கவலை தரக்கூடியதும், தமிழக விவசாயிகளின் கண்டனத்துக்குரியதுமாகும்.

இடைக்காலத் தீர்ப்பு ஒன்று வெளிவந்து விட்டால் அந்தத் தீர்ப்பை மதித்து செயல்படுவதுதான் இறுதித் தீர்ப்பு வரும் வரையில் முறையானதும் நியாயமானதுமாகும்.

இந்த நியாயத்தை மறந்து விட்டு, அல்லது மறுத்து விட்டு தேசிய நீரோட்டக் கொள்கையைத் தூக்கித் தெருவிலே போட்டு விட்டு; இப்போது மட்டும் அகில இந்திய காங்கிரஸ் தேர்தல் பிரச்சாரத்துக்கு வந்து என்ன பயன்? தமிழ் நாட்டு மக்கள் ஏமாளிகள் என்று எனது நண்பர் கிருஷ்ணா எடை போடலாமா?

அகில இந்தியா என்பது எங்கள் தமிழ் மக்களின் ஞான ஆசிரியன் - தமிழ் மறை தந்த வள்ளுவப் பெருந்தகைக்குப் பொருந்தாதோ?

அகில இந்தியா என்பது; தமிழ்நாட்டுக்கும் கர்நாடகத்துக்கும் பாதகமற்ற நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை ஏற்றுக்

கொள்ளாமல் முழுமையான தீர்ப்பு வரட்டும் என்று முரண்டு பிடிப்பதுதானோ?

வாக்கு கேட்க வந்த நேரத்தில்; ஏற்கனவே முறைப்படி அளித்த வாக்கிலிருந்து வழுக்கி விழுவது என்பது வாய்மையா? நேர்மையா?

முழுமையான இறுதித் தீர்ப்பு விரைவில் வர வேண்டுமென்ற கிருஷ்ணா அவர்களின் கருத்தில் எனக்கு மாறுபாடு இல்லை. ஆனால் அதையே காரணமாகக் காட்டி நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை நடுக்கடலில் தூக்கி எறிந்து விடுகிறோம் என்பது என்ன நியாயம்? கர்நாடகம்தான் இப்படியென்றால் கேரளத்துக் கம்யூனிஸ்டுகளின் அரசு என்ன செய்கிறது?

மத்திய அமைச்சர் தலைமையில் மாநில முதல் அமைச்சர்களின் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்தி மத்தியில் ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் குழுவின் கருத்துப்படி நடப்பதாக தமிழகம், கேரளம் இரு மாநிலங்களும் ஒத்துக் கொண்டுள்ள நிலையிலும்கூட முல்லைப்பெரியாறு அணையில் தண்ணீர் தேக்குகிற அளவை சிறிதுகூட உயர்த்துவதற்கு தடையாகக் கேரளத்து இடதுசாரி அரசு இருக்கிறது.

ஆனால்; காங்கிரசும் கம்யூனிஸ்டுகளும் தேச ஒற்றுமை - தேசிய நீரோட்டம் பற்றி இடி முழக்கம் செய்வதில் மட்டும் ஒருவருக்கொருவர் இளைத்தவர்கள் அல்லர்!

அதே நேரம், தமிழ்நாட்டு மக்களை இளித்தவாயர்களாகக் கருதிக் கொண்டு இந்த அண்டை மாநிலத்து அமைச்சர் பெருமக்கள் இங்கே தேர்தல் பிரச்சாரம் செய்ய வருவதும் - வந்து போவதோடு நில்லாமல்; தமிழ் மக்களின் உள்ளம் நொந்து போகும் கருத்துக்களை வெளியிடுவதும் ரசிக்கத் தக்கதாக இல்லை.

உடன்பிறப்பே, இந்த விஷயங்களில் இன்னும் இரண்டு நாட்களுக்கு நீ என் அளவுக்குக் கூட அலட்டிக் கொள்ளாமல் நமது கூட்டணியின் அமோக வெற்றிக்கான தேர்தல் பணியில் ஈடுபட வேண்டுகிறேன்.

ஆம்; இரண்டு நாட்களுக்கு உணவு, உறக்கம், ஓய்வு என்பன பற்றிக் கவலைப்படாமல் வாக்காளர்களைச் சந்திப்பதிலும் -

அவர்களின் ஆதரவுடன் வெற்றி வாகை சூடிட முனைவதிலும் கவனத்தைச் செலுத்திடுக! களத்தில் முழு வெற்றி பெற்றிடுவதில் கண்ணும் கருத்துமாக கடமையாற்றிடுக! ஒவ்வொரு வாக்கும் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கக் கூடியது என்ற உண்மையை மறந்திடாதே!

வாக்களிக்கும் நேரம் உன் எதிரே வந்து விட்டது! துள்ளி வரும் வேலாக - ஆவேசத்தை அள்ளி வரும் வாளாக இந்த ஜனநாயக அறப்போரில் நீ செயல்பட வேண்டும். உன் கையில்தான் இருக்கிறது தமிழகத்தின் எதிர்காலம்; மறவாதே! மறவாதே!

அன்புள்ள,

மு. க.

(08-05-2001)

2593. மூத்த பிள்ளை வீட்டில் ஏற்பட்ட அனுபவங்கள்!

உடன்பிறப்பே,

இன்று என் முதல் பிள்ளையின் வீட்டுக்கு வந்தேன். இங்கிருந்துதான் உனக்கு இக்கடிதம் எழுதுகிறேன். உனக்குப் புரிந்திருக்குமென்று நம்புகிறேன். ஐம்பத்தெட்டு வயதிலே எனக்கு ஒரு பிள்ளை இருப்பதுதான் உனக்குத் தெரியுமே. நான் பெற்ற பிள்ளைகளிலேயே நான் அதிகம் நேசிக்கும் பிள்ளை இதுதான்.

ஆம்! 1942 ஆம் ஆண்டு திருவாரூரில் துண்டு நோட்டீஸ் அளவில் "வரட்டுமே வள்ளலார்" என்ற முதல் கட்டுரையுடன் வெளி வந்ததுதானே முரசொலி!

இப்போது 58 வயது என்பது சரிதானா? என் நண்பன் தென்னனைச் செயலாளராகவும், தோழர் வி.எஸ்.பி. யாகூப் அவர்களையும், நான் அண்ணன் என்று அழைத்து மகிழ்ந்த டி.எஸ். ராஜகோபால் அவர்களையும் புரவலர்களாகவும் கொண்டு, ஆசிரியர் சேரன் என்ற பெயரில் நான் எழுதி அச்சடித்து வெளியிட்ட அந்தக் காலம், அடடா! எத்துணை பசுமையாக என் நினைவிலே படர்ந்து என்னை நிமிர்ந்து நோக்கச் செய்கிறது தெரியுமா?

காலையில் எத்தனை ஏடுகள் என் கண் எதிரே கொண்டு வந்து வைக்கப்பட்டாலும், என் விழிகள் தேடியெடுத்து என் விரல்களில் தொத்திக் கொள்ள வைப்பது முரசொலியைத்தானே!

இன்று முரசொலியின் அலுவலகம் சென்னையில்! ஆசிரியர்க்கான அறையும், அலுவலர்கள் பலருக்கான அறைகளும் பளபளப்பாக இல்லாவிடினும், பார்ப்பதற்கு அழகாக!*

ஆனால் திருவாரூரில் முரசொலி பிள்ளையாண்டான் தவழும்போது, அழுக்கேறியச் சுவர்கள் - மூன்று கால் நாற்காலிகள் - தரையெங்கும் குப்பைக் கூளங்கள்!

அப்போதுதான் ஒரு நாள் என் பாசமிகு மனைவி பத்மா, குழந்தை பெற்ற பின்னர் தொடர்ந்திட்ட நோயினால் நீங்காத்துயில் கொண்டார் - உடல் அடக்கம் செய்துவிட்டு அந்த வாரம் முரசொலி தலையங்கம் எழுத முயன்றேன் முடியவில்லை. துக்கம் கேட்க என் ஆருயிர் நண்பர் கடலூர் இளம்வழுதி (இன்றைய புகழேந்தி எம்.எல்.ஏ.யின் தந்தை) வந்திருந்தார். அந்த வாரத் தலையங்கத்தை எனக்குப் பதிலாக அவரே எழுதித் தந்தார்.

இளம்வழுதி - அண்ணா அவர்களால் கறுப்பு இளவரசன் என்று அழைக்கப்பட்டவர். அந்தக் கால திராவிட நாடு இதழிலேயே முதல் பக்கத்து அட்டையில் அவர் படத்தை வெளியிட்டு அண்ணா குறிப்பு எழுதியிருந்தது பழைய கதை! அதாவது பகுத்தறிவு இயக்கத்தின் கதையில் ஒரு பக்கக் கதை!

சென்னைக்குக் குடியேறியபோதுதான் பராசக்தி படத்தை அடுத்து மனோகரா படம் வெளிவந்தது. அந்த வசன புத்தகங்களை அச்சிட்டு விற்கும் உரிமையைப் பெற்று அந்த விற்பனையில் கிடைத்த மிச்சத் தொகையில்தான் முரசொலிப் பிள்ளையாண்டான் சொந்தத்தில் அச்சு இயந்திரம் வாங்கி அதில் ஏறிச் சவாரி செய்யத் தொடங்கினான். அடடா! அவன் கொட்டிய முரசின் காரணமாகப் பொறி தட்டிய பொல்லாங்குப் பேர்வழிகள் அவனது அலுவலகத்தையே அடித்து நொறுக்கினர். கொளுத்தி மகிழ்ந்தனர்.

இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து முரசொலி வெளியிட்ட போர் முழக்கக் கட்டுரைகளுக்காக - நானும் தம்பி முரசொலி மாறனும் சிறைப்படுத்தப்பட்டோம். என் தம்பி அடைப்பட்டிருக்கும் பாளையங்கோட்டை சிறை எனக்கு யாத்திரை ஸ்தலம் என்றாரே அண்ணா! அந்தச் சிறப்பை எனக்கு நல்கியதும் என் மூத்த பிள்ளையாம் முரசொலிதான்!

அன்னை இந்திராகாந்தி பிரதமராக இருந்தபோது அறிவித்த நெருக்கடி காலக் கொடுமையை எதிர்த்து முரசொலி வெளியிட்ட கார்ட்டூன் அயல்நாட்டு ஏடுகளில் எல்லாம் மறுபிரசுரம் செய்யப்பட்டன. கழகக் காவலர்கள் பலரும் மிசாக் கைதிகளாக ஓராண்டுக் காலம் சிறைகளில் பூட்டப்பட்ட போது எத்தனை வழக்குகள் என்மீதும் - **என் பிள்ளையாண்டான் இந்த முரசொலி மீதும்!** அனைத்தையும் உன்போன்ற உண்மையான உடன்பிறப்புகளை நினைத்துப் பார்த்துத் தாங்கிக் கொண்டேன்.

இதோ! இப்போது உட்கார்ந்து இந்தக் கடிதம் எழுதுகிறேனே - இதே இடத்தில் அமர்ந்துதான் 1976ஆம் ஆண்டு எமர்ஜென்சியின்போது உனக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருந்தேன். அப்போதெல்லாம் முரசொலி செய்திகளுக்கும், கடிதங்களுக்கும் சென்சார்! அந்த அதிகாரிகள் ஒப்புதல் அளித்த பிறகே ஒவ்வொரு நாளும் முரசொலி வெளிவர முடியும்.

ஒருநாள் முரசொலி அலுவலகத்தில் அமர்ந்து கடிதம் எழுதிக் கொண்டிருக்கும்போது படபடவென பல பூட்ஸ் கால்களின் ஒலி முழக்கம் கேட்டது. ஒலியைத் தொடர்ந்து என் அறைக்குள் பத்து பதினைந்து போலீஸ் அதிகாரிகள் தாட்பூட் என்று கத்தியவாறு நுழைந்தனர்.

நான் அமைதியாகக் கேட்டேன் என்ன வேண்டுமென்று! சோதனையிட வேண்டும் என்றனர். நான் தடுக்கவில்லை; தாராளமாகச் செய்யுங்கள் என்றேன். அவர்கள் சோதனைகளில் ஈடுபட்டனர். நானோ கழகத்திற்கு வந்த சோதனைகளை எப்படி வென்றோம் என்பது குறித்து அமைதியாக எழுதிக்கொண்டிருந்தேன்.

எழுதி முடித்துவிட்டு, அலுவலகம் விடுத்துப் புறப்பட்டேன். போலீசார் சோதனை இரவு 3 மணி வரை தொடர்ந்தது. பாவம்! வெறுங்கையுடன் திரும்பினர். இப்படி என் மூத்த பிள்ளை இல்லத்தில் எத்தனையோ அனுபவங்கள் எனக்கு! அதையெல்லாம் இன்று இங்கு வந்தபோது நினைத்துக் கொண்டேன். அதையே உனக்குக் கடிதமாக்கினேன்.

அன்புள்ள,

மு. க.

(27-05-2001)

2594. வென்றவன் சொல்வதெல்லாம் வேதம் அம்மா!

உடன்பிறப்பே,

யானை குழியில் விழுந்தால், அப்போது எறும்புகூட ஒரு உதை கொடுக்கும் என்ற பொன் மொழிக்கேற்ப, திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி இந்தத் தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்தவுடன், ஆளுங்கட்சிக்கேற்பத் துண்டுகளை மாற்றிக்கொண்டு துண்டுச் சீட்டு மொத்த வியாபாரம் நடத்தும் சில்லறை வியாபாரிகள்கூட நமது ஒவ்வொரு அசைவுக்கும் அர்த்தம் கற்பித்துக் கொண்டு அலறித் துடிப்பதைக் காணும்போது விலாநோகச் சிரிக்கத்தான் வேண்டியிருக்கிறது.

ஆனாலும், இவர்களுக்கு இடையிலேயும் கழகத்தின் தோல்வி குறித்தும், கழக அணியின் தோல்வி குறித்தும் உண்மை சுடும் என்று சுட்டிக் காட்டி ஒருவார இதழில் (ஜூனியர் விகடன்) நண்பர் சோலை எழுதியுள்ள ஒரு கட்டுரை, முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட முடியாவிட்டாலும் முக்கால் பகுதியாவது நம்மால் ஏற்றுக் கொள்ளப்பட்டு நம்மை சிந்திக்க வைத்து, அதற்கேற்ப நம்மைச் செயல்படத் தூண்டக் கூடியதாகும் என்பதை விருப்பு வெறுப்புக்கு இடம் தராமல் சீர்தூக்கிப் பார்த்து முடிவுக்கு வர வேண்டிய ஒன்றாகும்.

உன் போன்ற உடன்பிறப்புகள் அதைப் படித்திருப்பீர்கள் என்பதால், நமக்கு எதிரணியில் உள்ள சில நண்பர்களுக்கு திடீரென ஜனநாயகத்தின் மீது கொள்ளை ஆசை வந்திருப்பது குறித்து இன்றைய கடிதத்தில் குறிப்புகள் சிலவற்றைத் தர விரும்புகிறேன்.

கவர்னர் சட்டமன்றத்தில் உரையாற்றும்போது தி.மு.க.வும் மற்ற சில கட்சிகளும் கலந்து கொள்ளாதது ஜனநாயகத்துக்கு விரோதமானது என்று சொல்லி ஜெயலலிதா முன்மொழிந்ததுதான்

தாமதம், அதனைத் தொடர்ந்து வழிமொழிவோர் வரிசையில் அவரது கூட்டணிக் கட்சிகள் அனைத்தும் வரிந்து கட்டிக் கொண்டு வந்து, கவர்னர் உரை புறக்கணிப்பு ஜனநாயக விரோதம் என்று கோரஸ் பாடிக் கொண்டிருக்கின்றன.

வாஜ்பாய் அரசுக்கு எதிராக டெல்லி பாராளுமன்றத்தில் மன்றமே நடக்காத அளவுக்குக் குழப்பம் விளைவிப்பதும், கூச்சல் கிளப்புவதும், அதனால் மன்றம் ஒத்தி வைக்கப்படுவதுமான நித்திய நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கும் கட்சியினரும் கட்சிகளின் உறுப்பினர்களும், தம் செயல் ஜனநாயக ரீதியானது என வாதிடும்போது, தமிழக சட்டப்பேரவையில் கவர்னர் உரையாற்றும்போது அவைக்குச் சென்று கலந்துகொள்ளாமல் - ஆளுநர் உரையை அமைதியாகப் படிக்க விட்டது மாத்திரம் எவ்வாறு ஜனநாயக விரோதமாகுமென்று எனக்குப் புரியவில்லை.

பைபிள் நூலில் ஒரு கதையுண்டு. ஒரு பெண்மணி தவறிழைத்தார் என்று அதற்குத் தண்டனையாகப் பலர் கூடிக்கொண்டு சுற்றி நின்று அவள் மீது கற்களை வீசுகிறார்கள். அப்போது இயேசுபிரான் குறுக்கிட்டு உங்களில் யார் ஒருவர் தவறே செய்யவில்லையோ அவர்கள் அந்தப் பெண் மீது கல் வீசலாம் என்றுரைக்கிறார். கல்வீச்சு நின்று விடுகிறது. தண்டிக்க முனைந்த கூட்டமும் கலைந்து விடுகிறது.

அதேபோல கவர்னர் உரையைப் புறக்கணித்ததாக நம் மீது குற்றம் சாட்டி, ஜனநாயக விரோதிகள் என நம்மைச் சாடுவோர், இதே குற்றத்தைப் பல நேரங்களில் செய்தவர்கள்தானே? இன்றைக்கு நம்மைக் குறை கூறுவோர், கடந்த காலங்களில் கவர்னர் உரையைப் புறக்கணித்தது கிடையாதா? கவர்னர் அவைக்கு வந்து அமர்ந்தவுடன், முன் வரிசையில் எழுந்து நின்று ஆளுக்கொரு அறிக்கையைப் படித்துவிட்டு வெளிநடப்பு செய்தது கிடையாதா?

அவர்கள் ஒவ்வொரு கட்சியாக அறிக்கை படித்து விட்டு வெளியேறும் வரையில் கவர்னர் தமது உரையை மூடி வைத்துவிட்டு அவையில் மௌனமாக இருந்தது கிடையாதா?

இதே கவர்னர் செல்வி பாத்திமா பீவி அவர்கள் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, சரியாகச் சொல்ல வேண்டுமானால் 18.3.1998 அன்று காலை 9.30 மணியளவில் பேரவைக்கு வந்து

தனது உரையைப் படிக்கத் தொடங்கினார். அப்போது அன்றைய அ.தி.மு.க.வின் சட்டமன்றத் தலைவராக இருந்த தாமரைக்கனி எழுந்து மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கத் தவறிய அரசு பதவியில் நீடிக்க எந்தத் தார்மீக உரிமையும் இல்லை, நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்ட அரசு தயாரித்துள்ள உரையை ஆளுநர் படிக்கக் கூடாது. மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து மாநில அரசைப் பதவி நீக்கம் செய்யவேண்டும் என்று கூறிவிட்டு ஆளுநர் உரையைப் புறக்கணித்து வெளிநடப்புச் செய்கிறோம் என்று பேரவையிலிருந்து வெளியேறி விட்டார்.

அவரைத் தொடர்ந்து பா.ம.க. சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.கே. மணி, ஐ. கணேசன், கோவிந்தன் ஆகியோர் திண்டிவனத்தில் அம்பேத்கர் சிலை அவமதிக்கப்பட்டதையும், அதைத் தொடர்ந்து காமராஜ், அண்ணா, காந்தி சிலைகள் உடைக்கப்பட்டதையும் கண்டிப்பதாகக் கூறிவிட்டு மூவரும் வெளிநடப்புச் செய்தனர்.

அதன் பின்னர் அ.தி.மு.க. சட்டமன்றத் தலைவர் தாமரைக்கனி வெளிநடப்புச் செய்தபோது உடன் செல்லாமல் அவையிலே அமர்ந்திருந்த அ.தி.மு.க. உறுப்பினர்களான ராசிபுரம் சுந்தரம், சங்கரன்கோயில் கருப்பசாமி ஆகிய இருவரும் திடீரென்று எழுந்து நின்றுகொண்டு கறுப்புக் கொடி காட்டி அரசு ராஜினாமா செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினர். மேலும் தனது சட்டைக்குள் மறைத்து வைத்திருந்த துணி பேனரை வெளியே எடுத்து மேஜை மீது ஏறி நின்றார் கருப்பசாமி. அந்தப் பேனரை சுந்தரமும் கருப்பசாமியும் பிடித்துக்கொண்டு அரசு ராஜினாமா செய்ய வேண்டுமென்று கோரினர். அப்போது அவைக் காவலர்கள் உள்ளே வந்து அந்த இருவரையும் பேரவையிலிருந்து வெளியேற்றியதோடு அவர்களிடமிருந்து துணி பேனர், கறுப்புத் துணிகளையும் கைப்பற்றினர்.

அந்தத் துணி பேனரில் கோவை குண்டு வெடிப்பு, தேர்தலில் தோல்வியை அடுத்து இந்த அரசு பதவியில் நீடிக்கும் தகுதியை இழந்துவிட்டது என்று எழுதப்பட்டிருந்தது.

அப்போது இந்தக் கட்சிகளோடு தோழமை கொண்டிருந்த பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் வேலாயுதம் வெளிநடப்பிலே கலந்து கொள்ளாமல் அவைக்குள் இருந்தார். இப்படிப்பட்ட

செயல்களை மேற்கொள்ளப் போவதாகத் தன்னிடம் முன்கூட்டியே தெரிவிக்காததால் தான் வெளிநடப்பிலே பங்கேற்கவில்லை என்று அவர் பின்னர் செய்தியாளர்களிடம் விளக்கினார்.

மறுநாள் சட்டப்பேரவையிலே பேரவைத் தலைவர் பி.டி.ஆர். அவர்கள் ஆளுநர் உரை நிகழ்த்தும்போது இடையூறு ஏற்படுத்தக் கூடாது என்பது பேரவை விதி, கடந்த காலங்களில் ஜனநாயக மரபின் அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவர்கள் தங்கள் கருத்துக்களைத் தங்கள் இருக்கைகளிலிருந்து சுருக்கமாகக் கூறி, வெளியேறுவது மரபாக ஏற்கப்பட்டது. அந்த வகையில் அ.தி.மு.க. தலைவர் தாமரைக்கனி செய்தது விதிகளுக்கு விரோதமாக இருந்தாலும், மரபின் அடிப்படையில் ஏற்கக் கூடியதே. ஆனால் சுந்தரம், கருப்பசாமி ஆகியோரின் செயல்கள் கடுமையான நடவடிக்கைக்கு உள்ளாகக் கூடியவை. தாமரைக்கனி தன் கட்சியின் சார்பில் கருத்தைத் தெரிவித்து, தாங்கள் வெளியேறுவதாகச் சொன்னார். அதன் பிறகு அவருடன் வெளியேறாமல் எந்த அடிப்படையில் சுந்தரமும், கருப்பசாமியும் பேசினர்?

கறுப்புக் கொடி பேனரைக் கொண்டு வருவது எனக்குத் தெரியாது என அவர்கள் நினைத்திருக்கலாம். கொண்டு வருவார்கள் என்று எனக்குத் தெரியும். தெரிந்து நடவடிக்கை எடுக்காததற்குக் காரணம் உறுப்பினர்களைச் சோதனை செய்து உள்ளே விட வேண்டும் என்ற அவமரியாதை நிலையை ஏற்படுத்த விரும்பவில்லை. மன்னிக்க முடியாத குற்றத்தை இருவரும் செய்திருந்தாலும் கூட்டத் தொடர் ஆரம்பம் ஆகும் போதே அவர்களுக்குத் தண்டனை விதிக்க எனக்கு விருப்பம் இல்லை. எனினும் அவர்களைக் கடுமையாக எச்சரிக்கிறேன். குறிப்பாக கருப்பசாமி தன் இருக்கையின் மீது எழுந்து நின்றது மிகவும் அநாகரிகமான செயல் என்று தனது தீர்ப்பிலே கூறினார்.

உடன்பிறப்பே,

1998ல் பேரவையில் கவர்னர் உரையாற்றியபோது அ.தி.மு.க.வினர் நடத்திக் காட்டிய முறையைத்தான் சல்லடை போட்டு சலித்தெடுத்த ஜனநாயக முறையென்று, இன்று அ.தி.மு.க. கூட்டணியில் உள்ள கட்சிகளின் தலைவர்கள் கருதுகிறார்கள் போலும்.

அதனால்தான் அமைதியான முறையைக் கடைப்பிடித்து, அறவழியில் நமது கண்டனக் கருத்தை தெரிவிக்க அவைக்குள் நமது கூட்டணியினர் செல்லாமலே இருந்துவிட்டதை ஜனநாயக விரோதம் என்று நாக்கூசாமல் கூறுகிறார்கள்.

என் செய்வது! "வென்றவன் சொல்வதெல்லாம் வேதம் அம்மா!" என்று கவியரசு கண்ணதாசன் அப்போதே பாடல் புனைந்திருக்கிறாரே!

அன்புள்ள,

மு. க.

(28-05-2001)

2595. உழவர் சந்தை - வக்கிர முடிவும்; வாபஸ் படலமும்!

உடன்பிறப்பே,

கழக ஆட்சியில் உழவர் சந்தை திட்டம் அறிவிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு, நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் மாநிலம் முழுவதும் பல்வேறு பகுதிகளில் இரண்டு அல்லது இரண்டரை ஆண்டுக் காலத்தில் சுமார் 250 கோடி ரூபாய் அளவிற்கு காய்கறிகள் விற்பனையாகி இருக்கின்றன என்று செவியில் தேன்பாயும் செய்திகள் வெளி வந்து கொண்டிருக்கும்பொழுது - லட்சக்கணக்கான நுகர்வோரும், விவசாயப் பெருங்குடி மக்களும் இந்த உழவர் சந்தைகளால் பயனடைகிறார்கள், இடைத் தரகர்கள் எங்கோ ஓடிவிட்டார்கள் என்ற உண்மை நிலை ஆதாரங்களுடன் அமைந்துள்ளபோது; அந்த சந்தைகளை மூடிவிடுகிறேன் என்று சொன்னால் அதற்குப் பெயர் வக்கிரபுத்தியா? அல்லது வயிற்றெரிச்சலா? என்றுதானே கேட்கத் தோன்றும்!

தன்னுடைய பெயரில் ஜெயலலிதா திரைப்பட நகர் என்று பெயர் சூட்டி மகிழ்ந்ததை மாற்றி இந்த கருணாநிதி எம்.ஜி.ஆர். திரைப்பட நகர் என்று வைத்துவிட்டானே; என்கிற ஆத்திரத்தில் தி.மு.க. ஆட்சியின் உயிரனைய திட்டங்களில் ஒன்றான உழவர் சந்தையைப் பற்றி அவர்களுடைய கட்சியின் தேர்தல் அறிக்கையிலேயே குறிப்பிட்டு அதை ஒழிக்க அப்போதே முடிவு கட்டிவிட்டார். அந்த வாசகங்களைப் படித்தால் உழவர் சந்தைகளைக் குறித்து அவர்களுடைய உண்மையான எண்ணத்தை நாம் தெரிந்து கொள்ள முடியும்.

> "கருணாநிதி அரசால் உருவாக்கப்பட்டுள்ள உழவர் சந்தைகள் விளம்பர நோக்கமும், கட்டிடங்கள் கட்டுவதில் முறைகேடுகளும் நிறைந்த திட்டமாக செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்தால் உழவர்களின் விவசாய விளைபொருட்களுக்கு நல்ல

விலை கிடைக்கும் என்று கூறுவது விவசாயிகளை ஏமாற்றுவதாக உள்ளது. இந்த உழவர் சந்தைகளில் இடைத் தரகர்களும், வியாபாரிகளும் விவசாயிகள் என்ற பெயரில் போலி உறுப்பினர்களாகி பெரும் கொள்ளை அடிக்கிறார்கள்"

அந்தத் தேர்தல் அறிக்கையின் தொடர்ச்சியாகத்தான் கவர்னர் உரையிலும் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

"உழவர் சந்தைகளால் விவசாயிகளும் பயனடையவில்லை; நுகர்வோரும் பயனடையவில்லை. எனவே இத்திட்டம் தோல்வி அடைந்துள்ளது. இவ்வரசு, செயல்படாமல் உள்ள உழவர் சந்தைகளை மூடிவிடக் கருதியுள்ளது. தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு நடைபெற்று வருகின்ற உள்ளூர் சந்தைகளுக்குக் கிராமச் சந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் மூலமாக, புத்துணர்ச்சி அளிக்கவும் அவற்றை வேளாண் விளைபொருள் விற்பனை மையங்களாக மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கக் கருதப்பட்டுள்ளது."

இதுபற்றி செய்தி வெளியிட்ட அனைத்து ஏடுகளும் தமிழ்நாட்டில் உள்ள எல்லா உழவர் சந்தைகளும் மூடப்படும் என்றுதான் செய்தி வெளியிட்டிருந்தன.

"விவசாயிகள், பொதுமக்கள் ஆகியோரின் கிளர்ச்சிகளைத் தொடர்ந்து செயல்படாமல் உள்ள உழவர் சந்தைகள் மட்டுமே மூடப்படும் என்று தற்போது பம்மாத்துச் செய்பவர்கள் உழவர் சந்தைகளைப் பற்றி ஏற்கனவே பல்வேறு விவசாய சங்கப்பிரதிநிதிகளும், நடுநிலை ஏடுகளும் வெளியிட்டிருந்த கருத்துக்களை அலட்சியப்படுத்துவது ஏனோ தெரியவில்லை.

உழவர் சந்தை விவசாயிகளுக்கு ஒரு கொடை என்ற தலைப்பில் இந்து ஏட்டில் திரு. ஜி. சத்தியமூர்த்தி என்பவர் எழுதிய கட்டுரையில் சில முக்கிய பகுதிகள் வருமாறு :-

உழவர் சந்தை திட்டத்தைப்பற்றி தி.மு.க. அரசின் எதிரிகளால் கூட குற்றம் காண்பது மிகவும் கடினமான ஒன்றாகும்.

சந்தைகளில் காய்கறிகளை விற்க வரும் விவசாயிகளிடமிருந்து அதிக அளவிற்கு வாடகை கேட்டு வலியுறுத்தும் சந்தை குத்தகைதாரர்களிடமிருந்து காப்பாற்ற வேண்டுமென்று வேண்டுகோளை வைக்காத விவசாயிகளின் கூட்டங்களே மாவட்டங்களில் நடைபெறுவதில்லை. அந்தக் குண்டர்களிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள ஏழை விவசாயிகள் அதிகத் தொகை செலுத்தி வந்தனர். எனவே உழவர் சந்தை திட்டம் இந்த ஆபத்திலிருந்து விவசாயிகளை பெரிதும் காப்பாற்றி உள்ளது.

ஒருங்கிணைந்த விவசாய சங்கத்தைச் சேர்ந்த திரு. சி. வையாபுரி போன்ற அரசாங்கத்தைத் தீவிரமாக எதிர்ப்பவர்கள் கூட விவசாய சமுதாயத்திற்கு கிடைத்த கொடைதான் உழவர் சந்தை என்று கூறி பாராட்டுகிறார்கள்."

இவ்விதம் இந்து ஏடு மாத்திரமல்ல; இன்று (28.5.2001) இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏடு வெளியிட்டுள்ள ஒரு பெரிய கட்டுரையின் சில பகுதிகளை மாத்திரம் இங்கே கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தியாளரிடம் கூறிய ஒரு அதிகாரி, உழவர் சந்தையை மூடுவதன் மூலம் சில பகுதிகளில் விவசாயிகளின் கடுமையான எதிர்ப்பை சந்திக்க நேரிடும் என்றார். வெளிநாட்டைச் சேர்ந்த ஒரு செய்தியாளர் நூறு உழவர் சந்தைகளையும் நேரில் பார்த்து விட்டு வந்தவர் கூறும்போது, உழவர் சந்தைகளை நடத்துவதில் சில சிறு குறைபாடுகள் இருந்தபோதிலும் ஒட்டு மொத்தத்தில் அவைகள் விவசாயிகளுக்கும், வாங்கி நுகர்வோருக்கும் மிகுந்த பலனை தரக்கூடியதாக அமைந்துள்ளன.

மக்கள் குறைந்த விலையில் காய்கறிகளையும், பழங்களையும் வாங்குகிறார்கள். உழவர்களும்கூட தங்களுடைய விளைபொருட்களுக்கு அதிக விலையைப் பெறுகிறார்கள். அ.தி.மு.க. அரசு அறிவித்துள்ள சந்தை, வாரத்திற்கு ஒருமுறைதான் நடைபெறும். ஆனால் உழவர் சந்தை வாரம் முழுவதும் நடைபெறும். மதுரையில் உள்ள பல சங்கங்கள் உழவர் சந்தை மூடுவதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாகத்

தெரிவித்ததோடு, செயல்படாத உழவர் சந்தைகள் என்று எதை வைத்துத் தீர்மானிப்பார்கள் என்று கேட்டுள்ளார்கள்.

கோவையில் அ.தி.மு.க. அரசு உழவர் சந்தைகளை மூடுவதென்று அறிவித்ததற்கு எதிர்ப்பு தெரிவித்ததோடு தங்கள் விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைத்ததற்கு மாறாக இந்த முடிவு இருப்பதாகத் தெரிவித்தார்கள். ஆர்.எஸ். புரம் பகுதியில் உள்ள சந்தைதான் இந்த மாநிலத்திலே சிறந்தது என்றும், அன்றாடம் நாலாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் நான்கு லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட காய்கறிகளை வாங்குவதாகவும் தெரிவித்தனர்."

இந்து, எக்ஸ்பிரஸ் ஏடுகளில் இவ்விதம் கருத்துக்கள் வெளிவரும் வேளையில்; விவசாயிகளும், பொதுமக்களும் நடத்துகின்ற உழவர் சந்தை வேண்டும் என்கிற கிளர்ச்சியைப் பற்றி நேற்று ஒரு அமைச்சர் இது தி.மு.க.வின் சதி என்று குறிப்பிட்டிருக்கிறார். இப்படி திசை திருப்புவதிலேயே தங்கள் நேரம், நினைப்பைச் செலவிடுகின்றவர்கள் நீதி நியாயங்களையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அ.தி.மு.க.வைச் சேர்ந்த சில அமைப்புகளின் நிர்வாகிகளேகூட உழவர் சந்தைகளை மூடுகின்ற இந்த அறிவிப்பைக் கடுமையாகக் கண்டித்திருக்கிறார்கள். எல்லா சந்தைகளையும் நாங்கள் மூடப் போவதில்லை. உழவர்களுக்கும், நுகர்வோருக்கும் ஆதாயம் குறைவாகக் கிடைக்கின்ற ஒரு சில சந்தைகளைத்தான் மூடப்போகிறோம் என்று ஜெயலலிதா அரசு இறங்கி வருமேயானால் அதை வரவேற்கிற அதே நேரத்தில், இந்தத் தெளிவும் அறிவும் ஆளுநர் உரையைத் தயாரிக்கும்போதே அவர்களுக்கு ஏற்பட்டு அந்த அடிப்படையில் செம்மையாக நடைபெறாத ஒரு சில உழவர் சந்தைகளைத்தான் மூடப் போகிறோம் என்று தெரிவித்திருக்கலாம்.

உழவர் சந்தை திட்டம் என்பது உழவர்கள் தாங்கள் விளைவித்த காய்கறிகளை இடைத்தரகர் இல்லாமல் தாங்களே கொண்டு வந்து ஒரு இடத்தில் விற்பது; அப்படி கொண்டு வரப்படும் காய்கறிகளுக்கு சிறப்புப் பேருந்து வசதிகள் செய்து தரப்பட்டு, அந்த பேருந்துகளில் அவர்கள் கொண்டு வரும் காய்கறிகளுக்கு லக்கேஜ் கட்டணம் இல்லை என்பது; சந்தைகளில் விவசாயிகளுக்கு ஒதுக்கப்படும் கடைகளுக்கு வாடகை இல்லை என்பது; ஒவ்வொரு நாளும் விவசாயிகளிலேயே ஒரு சிலர்

அமர்ந்து ஒரு குழுவை உருவாக்கிக் கொண்டு அந்தக் குழு நிர்ணயிக்கும் விலைக்கே ஒவ்வொரு நாளும் காய்கறிகளை விற்பது; ஒவ்வொரு கடைக்கும் தேவையான தராசு, எடைக்கற்கள் ஆகியவைகளையெல்லாம் இலவசமாக அரசாங்கம் தருவது; கடைகளுக்கான பாதுகாப்பு; காய்கறிகள் கெடாமல் சேமிப்பு ஆகிய இத்தனை வசதிகளும், சலுகைகளும் கொண்டதுதான் உழவர் சந்தைகளாகும்.

இவற்றில் ஒன்றோ, இரண்டோ சரியாக செயல்படவில்லையென்பதற்காக நூறு சந்தைகளை மூடுவேன் என்று சொல்லிவிட்டு, அதை எதிர்த்து கிளர்ச்சி வெடித்ததும் சமாளிக்க புது வேடம் கட்டுகிறார் ஜெயலலிதா. கவர்னர் உரையில் வந்த அறிவிப்பையொட்டி பல உழவர் சந்தைகளுக்கு காய்கறிகள் கொண்டு வரும் சிறப்புப் பேருந்துகள் நிறுத்தப்பட்டு விட்டன என்று செய்திகள் தொடர்ந்து வந்து கொண்டுள்ளன.

ஏற்கனவே தேர்தல் அறிக்கையில் தலித் முஸ்லிம்கள் என்று அறிவித்துவிட்டு அதற்கு முஸ்லிம் சமுதாயத்தில் பெரும் எதிர்ப்பு ஏற்பட்டவுடன் அது அச்சுப் பிழை என்று சொல்லி ஜெயலலிதா தப்பித்துக் கொள்ளப் பார்த்தார். அச்சுப்பிழை என்றால் ஒரு இடத்தில்தான் வரும். அவர் சொன்ன அச்சுப் பிழையோ இரண்டு மூன்று இடங்களில் அந்த அறிக்கையில் இடம் பெற்றுள்ளது. எப்படியோ தவறை உணர்ந்து கொண்டதற்கு மகிழ்ச்சி தெரிவிக்கலாம். அதைப்போல இப்போதும் நாங்கள் எல்லா உழவர் சந்தைகளையும் மூடப் போவதில்லை என்று பொய்யான சமாதானத்தையாவது நடைமுறையில் உண்மையென்று காட்டி மீண்டும் உழவர் சந்தைகள் செயல்பட இந்த அரசு ஆவன செய்யுமா? அல்லது அவ்வாறு செயல்பட வைப்பதற்கு உழவர்களும், பொதுமக்களும் நடத்துகின்ற கிளர்ச்சிதான் மேலும் தேவையா?

அன்புள்ள,

மு. க.

(29-05-2001)

2596. எம்.ஜி.ஆர். அடித்த எச்சரிக்கை மணி!

உடன்பிறப்பே,

மீண்டும் முதலமைச்சர் பொறுப்பில் எப்படியோ அமர்ந்துவிட்ட செல்வி ஜெயலலிதா சர்க்காரியா கமிஷன் எனும் சலங்கை கட்டிக் கொண்டு சதிராட ஆரம்பித்திருக்கிறார்.

நெருக்கடி காலப் பிரகடனத்தைத் தீவிரமாக எதிர்த்து நின்றதற்காகவும் - ஜெயப்பிரகாஷ் நாராயண் தலைமையில் இந்தியாவின் இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தில் அணிவகுத்தமைக்காகவும் - தி.மு.க. ஆட்சியைக் கலைக்கவும், தி.மு.க. மீது களங்கம் சுமத்தவும் பழிவாங்கும் முனைப்போடு அமைக்கப்பட்டதுதான் சர்க்காரியா கமிஷனும் வேறு சில வழக்கு ஜோடனைகளும் என்பது நாடறிந்த உண்மையாகும்.

1972-ல் எம்.ஜி.ஆர். அவர்களால் தரப்பட்ட புகார்களின்மீது 1976ல்தான் சர்க்காரியா கமிஷன் அமைக்கப்பட்டு விசாரணை தொடங்கப்பட்டது. புகார் கொடுத்த எம்.ஜி.ஆர். அவர்கள் அந்தக் கமிஷன் முன் ஆஜராகி விளக்கமளிக்கத் தயாராக இல்லை என்பது மட்டுமல்ல, விசாரணைக் கமிஷனுக்கு அவர் எழுத்து மூலம் தந்த வாக்குமூலத்தில்கூட, அந்தப் புகார்கள் குறித்துத் தனக்கு எதுவும் தெரியாதென்றும் சேலம் கண்ணன் என்ற வக்கீல் சொன்னதைத்தான் தனது புகார் மனுவில் குறிப்பிட்டிருப்பதாகவும் தெரிவித்து விட்டார்.

சேலம் கண்ணன் யார் என்று ஜெயலலிதாவுக்கு விளக்கமளிக்கத் தேவையில்லை. அதே பெயரில் அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் அப்போது இருந்தார். எம்.ஜி.ஆர். உடல்நலம் குன்றி அமெரிக்கா சென்று சிகிச்சை பெற்று வந்து சரியாகப் பேச முடியாத நிலையில் ஆட்சியில் அமர்ந்திருந்த போது, இந்த அம்மையார் அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கு அந்த கண்ணன் மூலமாகத்தான் ஒரு கடிதம் எழுதி அனுப்பி வைத்தார். அம்மையார் கைப்பட எழுதிய அந்த

ஆங்கிலக் கடிதத்தில் கோடு போட்டு வைக்க வேண்டிய வாசகம் என்ன தெரியுமா?

MGR himself who does not want to give me due importance and does not want to induct me into the cabinet. No one here can really dare to oppose him for without him they are zeros.

"The root cause of everything that is happening here is that the CM is terribly jealous of my popularity. He cannot stomach the fact that I have become so popular. So he is doing everything possible to eliminate me from the political scene and from public life."

அதாவது :-

எனக்கு உரிய முக்கியத்துவம் தர விரும்பாத எம்.ஜி.ஆர்., என்னை அமைச்சரவையில் சேர்க்கவும் விரும்பவில்லை. அவரை எதிர்க்க இங்கு யாருக்கும் தைரியமில்லை. ஏனென்றால் அவரில்லாவிட்டால் மற்றவர்கள் எல்லாம் பூஜ்யங்கள்!

இங்கு நடைபெறும் அத்தனைக்கும் அடிப்படைக் காரணம் முதல்அமைச்சர் (எம்.ஜி.ஆர்.) என்னுடைய செல்வாக்கு கண்டு வெகுவாகப் பொறாமைப்படுகிறார். நான் செல்வாக்குப் பெறுவதை அவரால் ஜீரணிக்க முடியவில்லை. அதனால் அரசியலில் இருந்தும், பொது வாழ்விலிருந்தும் என்னைத் தூக்கி எறிய தன்னால் முடிந்ததை எல்லாம் செய்துகொண்டிருக்கிறார்!

உடன்பிறப்பே, இந்தக் கடிதம், அப்படியே ஆங்கிலத்தில் உள்ளபடி பிளாக் செய்யப்பட்டு அன்றைய மக்கள் குரல் பத்திரிகையில் வெளிவந்தது.

மக்கள் குரல் ஏடு தி.மு.க. ஏடல்ல! அந்த ஏட்டில்தான் ஜெயலலிதா கைப்பட எழுதிய இந்தக் கடிதம் அப்படியே வெளியிடப்பட்டிருக்கிறது.

அந்தப் பத்திரிகை ஆசிரியர் டி.ஆர். ராமசாமி அவர்கள் துணிவுமிக்க பத்திரிகையாளர்களில் ஒருவர் - அவர் எம்.ஜி.ஆர். மறைந்த பிறகு அவரது பத்திரிகையில் பின்வருமாறு எழுதியிருந்தார். ஆம் உடன்பிறப்பே டி.ஆர். ராமசாமி அவர்கள்

எழுதி அச்சில் வெளிவந்ததை எழுத்துப் பிசகாமல் அப்படியே தருகிறேன்; படித்துப் பார்! 1987 டிசம்பர் 18 இந்தச் சந்திப்பு - அதற்குப் பிறகு இன்னும் ஒரு வாரம் எம்.ஜி.ஆர். அவர்கள் உயிருடன் இருந்திருப்பாரேயானால் தமிழ் நாட்டு தலைவிதி மாற்றி எழுதப்பட்டிருக்கும்.

இதோ! திரு. டி.ஆர். ராமசாமி அவர்கள் அவரது பத்திரிகையில்1.1.89 அன்றைய தினம் எழுதியுள்ளவை பின்வருமாறு :-

> எம்.ஜி.ஆர். இறப்பதற்கு ஒரு வாரம் முன்னால் டிசம்பர் 18ஆம் தேதி 1987-ல் அவர் என்னைக் கூப்பிட்டு அனுப்பி ஜெயலலிதா பற்றித் தாம் பேசப் போவதை என்னிடம் சொன்னார்.
>
> எம்.ஜி.ஆர். என்னிடம் சொன்னது இதுதான்! எல்லாமே அவருடைய சொந்த வார்த்தைகள்தான்.
>
> "எனக்கு இப்போது ரொம்ப கவலையாக இருக்கிறது. யாரையும் நம்ப முடியவில்லை. இந்த அம்முவின் அட்டகாசம் தாங்க முடியவில்லை! எதையோ நினைத்து இந்த அம்முவை அரசியலில் ஈடுபடுத்தினேன். பிள்ளையார் பிடிக்கப் போய் அது குரங்காய் முடிந்துவிட்டது!
>
> அம்முவுக்கு சினிமா சான்ஸ் போய்விட்டது. அவள் சும்மாயிருந்தால் சாத்தானைப் போல எதையாவது செய்வாள். பாவம், ஏதோ பழகி விட்டாளே, எதிலாவது மனதை ஈடுபடுத்தினால் உபத்திரவம் குறையும் என்று அவளைக் கட்சி மேடைக் காட்சிப் பொருளாக அறிமுகப்படுத்தினேன். சூதும், வாதும், வஞ்சகமும், சூழ்ச்சியும் கற்ற இந்த அம்மு எனக்கே உலை வைக்கிறாள் இப்போது! சும்மா ஓடுகிற ஓணானை முகத்திலே நுழைய விட்ட கதையாக என் விஷயம் போய்விட்டது.
>
> இன்று (டிசம்பர் 18, 1987) ஒரு காரியத்தைச் செய்து விட்டேன். மூன்று இரும்புப் பெட்டிகளில் கரன்சிகளை நிரப்பி, அவளுக்கு அனுப்பி செட்டில்மெண்ட் செய்துவிட்டேன். கூட இருந்தவர்கள் இப்படிச் செய்ய வேண்டாம் என்று சொன்னார்கள். நான் கேட்கவில்லை.

எப்படியோ இது ஒழிந்து போனால் போதும்! எங்கேயாவது, பெங்களூருக்கோ, ஐதராபாத்திற்கோ போய் இந்தப் பணத்தை வைத்துக் கொண்டு பிழைத்துப் போகட்டும்!

அவள் அரசியலில் இருந்தால் என் பெயர் கெட்டு விடும். பரிதாபப்பட்டு நான் செய்த காரியம் தமிழ்நாட்டின் குடியைக் கெடுத்து விடும். இதை நான் புரிந்து கொண்டு விட்டேன்.

அவளோடு நான் சம்பந்தப்பட்டவர்கள், தொடர்பே கொள்ளக் கூடாது என்று அவளுக்கு இருந்த கட்சி அலுவலக டெலிபோனை கட் செய்து விட்டேன். கட்சியினர், எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள் யாரும் அவளோடு தொடர்பு கொள்ளக்கூடாது என்று உத்தரவு போட்டுவிட்டேன்.

இந்த அம்மு அபாயகரமானவள். யாரையும் அவள் தனக்காக பயன்படுத்துவாள். எதையும் செய்யத் தயங்க மாட்டாள். மிகவும் கெட்டவள்!

நீ கூட அவள் இருக்கும் திக்குக்குக் கூட போகாதே. ஆபத்தில் சிக்காதே!

இதையெல்லாம் விரைவில் அறிக்கைவிட்டு சொல்லி விடப்போகிறேன். நானே சொல்லும்வரை நான் சொன்னதை ரகசியமாக வைத்திரு. என்ன, செய்வாயா?"

இப்படி மிகவும் கஷ்டப்பட்டு எம்.ஜி.ஆர். பேசினார். விஷயத்தைச் சொன்னார்.

இதுவரை அவர் நேரிடையாக என்னிடம் சொன்னதை நான் யாரிடமும் சொல்லவில்லை.

ஆனால், இப்போது இந்தப் பெண் தன்னை வாரிசாக, எம்.ஜி.ஆரே சொல்லிவிட்டதாகக் காசு கொடுத்து விளம்பரம் செய்வதால், எம்.ஜி.ஆரை மதித்து, அவருடைய புகழைக் காப்பாற்ற நான் உண்மையைச் சொல்ல நேரிட்டுள்ளது.

நான் எழுதியிருப்பது சத்தியம். சத்தியத்தைத் தவிர வேறு எதுவும் அல்ல. என்னிடம் சொன்னதை வேறு

பலரிடமும் எம்.ஜி.ஆர். சொல்லியிருப்பதைப் பிறகு அறிய வந்தேன்.

நாங்கள் எல்லோருமே கோர்ட்டுக்கு வந்து, எம்.ஜி.ஆர். சொன்னதை சத்தியப் பிரமாணம் செய்து கூறத் தயார்.

ஜெயலலிதா சொல்வதைப் போல, அவர் மட்டுமே அறிந்த ஏதோ ஒரு வாரிசு விஷயம் அல்ல இது.

சுருக்கமாக, ஜெயலலிதாவை ஒரு விஷக்கன்னியாக எம்.ஜி.ஆர். புரிந்து கொண்டிருந்தார்.

உடன்பிறப்பே,

அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களால் எப்படிப்பட்டவர் அடையாளம் காட்டப்பட்டு எச்சரிக்கை மணி அடிக்கப்பட்டிருக்கிறது பார்த்தாயா?

என்ன விநோதம் –

எத்தகைய வேடிக்கை –

கழுத்து மணி அறுப்பவர்கள் கையில் உள்ள தண்டு கமண்டலங்களில் கத்தி கட்டாரிகளை ஒளித்து வைத்துக் கொண்டு;

கந்தா!
கடம்பா!
கழுகுமலைவேலா!

என்று கடவுள் பக்தியைப் பொழிந்து காட்டி ஊரை ஏமாற்றுவது போல –

என் ஆசான் எம்.ஜி.ஆர்.
என் ஆட்சி எம்.ஜி.ஆர். ஆட்சி!
என்றல்லவா உருகுகிறார் அம்மையார்!
சிலரைப் பல நாட்கள் ஏமாற்றலாம் –
பலரைச் சில நாட்கள் ஏமாற்றலாம்.

எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது. இதை அம்மையார் புரிந்து கொள்வது நல்லது.

அன்புள்ள,

மு. க.

(30-05-2001)

2597. விடையும் விளக்கமும் விரைவில் கிடைக்கும்!

உடன்பிறப்பே,

ஓர் அரசியல் கட்சியின் தலைவனாக இருக்கிறேன் என்ற முறையில், நான் எல்லாக் கட்சிகளின் செய்திகளையும் கவனிப்பதிலும், எல்லாக் கட்சிகளின் பத்திரிகைகளையும் படிப்பதிலும் அக்கறையுள்ளவன் என்பதை நீ அறிவாய்! ஆனால் என்ன காரணத்தாலோ மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் அல்லது அந்தக் கட்சியின் பத்திரிகை ஆசிரியர்கள் சில பிரச்சினைகளில் தி.மு.க. எடுக்கும் நிலை குறித்து முரசொலியிலும், வேறு பல ஏடுகளிலும் வந்துள்ள செய்திகளை ஒருவேளை கவனிக்காமலோ அல்லது கவனித்துப் படித்திருந்தாலும்கூட வேண்டுமென்றே இட்டுக்கட்டி உண்மைக்குப் புறம்பானவற்றை எழுதுகிறார்களோ அல்லது பேசுகிறார்களோ என்று கருத வேண்டியிருக்கிறது.

30.5.2001ல் வெளிவந்த மார்க்சிஸ்ட் கட்சியின் நாளேடான தீக்கதிரில் எழுதியுள்ள தலையங்கத்தில் பின்வருமாறு வாசகம் காணப்படுகிறது.

தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் இருந்தவரையில் மத்திய அரசு மானியத்தை வெட்டியதை அன்றைய முதலமைச்சர் எந்த நேரத்திலும் விமர்சித்தது இல்லை.

இது தி.மு.க. மீது தீக்கதிர் தலையங்கம் சுமத்தும் குற்றச்சாட்டு! தலையங்கம் எழுதிய ஆசிரியரை 29.1.2001 அன்று நடைபெற்ற சட்டப்பேரவை நிகழ்ச்சியைப் படித்துப் பார்க்குமாறு அழைக்கிறேன். அன்றைய தினம் பேரவையில் 2001-2002ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையை வைத்து நான் உரையாற்றும்போது அந்த அறிக்கையிலேயே அச்சிடப்பட்டுள்ள வாசகங்களை மார்க்சிஸ்ட் கட்சியின் தலையங்க எழுத்தாளருக்கு நினைவூட்டுகிறேன்.

அது வருமாறு :-

11-வது நிதி ஆணையத்தின் பரிந்துரைகளால் தமிழகத்திற்குப் பெருத்த நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. மத்திய அரசின் மொத்த வரி வசூலில் மாநிலங்களுக்கு அளிக்க வேண்டிய பங்கை 40 சதவிகிதமாக நிர்ணயிக்கும்படி தமிழக அரசு கோரியிருந்தது. இதற்கு மாறாக 11-வது நிதி ஆணையம் நிகர வரி வசூலில் 29.5 சதவிகிதம் மட்டுமே பகிர்ந்தளிக்க வேண்டுமென்று பரிந்துரை செய்துள்ளது. அத்துடன் அந்த நிதியையும் பகிர்ந்தளிப்பதற்குப் பதினோராவது நிதி ஆணையம் நிர்ணயித்த வழிமுறைகளில் பின்தங்கிவிட்ட மாநிலங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதால் தமிழகத்தைப் போன்று சிறப்பாகச் செயல்படும் மாநிலங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக 2000ஆம் ஆண்டிலிருந்து தொடங்கும் ஐந்தாண்டுக் காலத்தில் தமிழ்நாட்டிற்கு ஏற்படவுள்ள இழப்பு ரூபாய் 4,711 கோடி ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நிதி ஆணையத்தின் பரிந்துரைகளால் பாதிக்கப்பட்ட மாநிலங்கள் 21-8-2000ஆம் நாளன்று இதை ஏற்றுக் கொள்ள இயலாத, சமநிலையற்ற நிலையைச் சீரமைக்குமாறு பிரதமரிடம் கோரிக்கை ஒன்றினைக் கொடுத்துள்ளன. சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களுக்கு வழங்குவதற்கான ஊக்க நிதி ஒன்றையாவது ஏற்படுத்துமாறும் வலியுறுத்தி உள்ளோம். 11-வது நிதி ஆணையம், அதன் துணை அறிக்கையில் அனைத்து மாநிலங்களுக்கும் மொத்த ஊக்க நிதியாக அடுத்த 5 ஆண்டுகளுக்கு ரூபாய் 5,304 கோடிதான் எனப் பரிந்துரைத்துள்ளதும், அதிலும் மொத்தமாக ஐந்தாண்டுகளுக்கு தமிழகத்தின் பங்கு ரூபாய் 402 கோடி ரூபாய் மட்டுமே என்று கூறியிருப்பதும் முனைப்பாக செயல்படும் மாநிலங்களுக்குக் கடும் தண்டனையாக அமைந்துள்ளது

இதனை மீண்டும் பல்வேறு நிகழ்ச்சிகளில் நான் குறிப்பிட்டுக் காட்டியிருப்பது ஏடுகளில் வெளி வந்துள்ளது.

முரசொலியில்கூட மே மாதம் 23ஆம் தேதி வெளி வந்த இதழில் அந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையின் வாசகங்கள் மீண்டும் ஒருமுறை வெளியிடப்பட்டுள்ளன. இவற்றுக்கு முன்பே 23.8.2000 அன்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது 11-வது நிதிக் குழுவினால் கைவிடப்பட்ட மாநிலங்களுக்கு தனி நிதி வழங்குவதற்கான ஒரு ஏற்பாட்டை மத்திய அரசு செய்ய

வேண்டும். வளர்ச்சி அடையாத மாநிலங்களுக்குச் சற்று அதிகரித்து நிதி ஒதுக்குவது தவறல்ல. அதேநேரத்தில் வளர்ச்சியடைந்த மாநிலங்கள் என்று பகுத்துப் பார்த்து ஏற்கனவே வழங்கிய நிதியைக் குறைப்பது வருந்தத்தக்கது என்றும் கூறியிருக்கிறேன்.

இதையெல்லாம் வசதியாக மறந்துவிட்டு அல்லது மறைத்துவிட்டு தி.மு.க. ஆட்சிப் பொறுப்பிலே இருந்த வரையில் மத்திய அரசு இப்படி மானியத்தை வெட்டியதை அன்றைய முதலமைச்சர் எந்த நேரத்திலும் விமர்சித்தது இல்லை என்று சல்லடை போட்டுச் சலித்துக்கூட அல்ல, ஜமுக்காளத்திலேயே வடிகட்டப்பட்ட ஒரு பொய்யைச் சொல்ல வேண்டுமென்று தீக்கதிருக்கு ஏன்தான் தோன்றியதோ எனக்குப் புரியவில்லை.

உடன்பிறப்பே, இஃதன்னியில் இந்த அரசு கஜானா காலி என்றும் 700 கோடி ரூபாய் பற்றாக்குறையென்றும் 210 கோடி ரூபாய் வருவாய் பற்றாக்குறையென்றும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட புள்ளி விவரங்கள் தருவதைப் பற்றி எதையுமே ஆய்வு செய்து சிந்தித்து விமர்சிக்கும் திறன் பெற்ற மார்க்சிஸ்ட்டுகள் இதில் மட்டும் பொத்தாம்பொதுவாக அ.தி.மு.க. ஆட்சியோடு சேர்ந்து கொண்டு புழுதிவாரித் தூற்றுவது ஏன் என்று புரியவில்லை. இல்லை! இல்லை! புரிகிறது. இது அவர்களுக்கும் புரியும். இந்தப் பற்றாக்குறை பற்றிய புள்ளி விவரங்களை விரைவில் விளக்க இருக்கிறேன் எனினும் 2001 ஜனவரி 29ஆம் தேதியன்று அதாவது நான்கு மாதங்களுக்கு முன்பு சட்டப்பேரவையில் நான் படித்த இடைக்கால நிதிநிலை அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டிருப்பதையும் காய்தல், உவத்தல் இன்றி நடுநிலையில் சிந்திக்கும் மார்க்சிஸ்ட்டுகள் யாராவது இருப்பார்களானால் அவர்கள் உண்மையை உணரக் கூடும்.

அந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையில் நான் குறிப்பிட்டிருப்பது வருமாறு :-

2001-2002ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தில் ஒட்டுமொத்த பற்றாக்குறை ரூ. 996 கோடி என்ற அளவில் மதிப்பிடப்பட்டுள்ளது. பதினோராவது நிதி ஆணையம் நமக்கு நியாயம் வழங்கியிருந்தால் இந்த அளவு பற்றாக்குறை ஏற்பட்டு இருக்காது. எனவே நிதி ஆதாரத்தைப் பெருக்க எடுக்கும் முயற்சிகளில் ஒன்றாக மாநில அரசுக்கான ஊக்க

உதவியை அதிகரித்துத் தரும்படி மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்துவோம்.

இந்த நிலையில் இன்றைய முதலமைச்சர் நிதி நிலவரங்கள் குறித்தும், தி.மு.க. ஆட்சியைத் தொடர்ந்து குறை சொல்லி வருகிறாரே அதற்கான விடையும் விரைவில் கிடைக்கும்.

அன்புள்ள,

மு. க.

(31-05-2001)

2598. கைகளை மேலும் சேறாக்கிக் கொள்ளாதீர்!

உடன்பிறப்பே,

அவர் சொன்னார், இவர் சொன்னார் என்று எவரையோ விட்டு ஒரு புகார் தருமாறு வற்புறுத்தி அந்தப் புகாரின் அடிப்படையில் எந்த விசாரணையும் நடத்தாமல் முதல் கட்டமாக கைது படலத்தை நிறைவேற்றிவிட்டு அதன் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்கள் சார்பில் நீதிமன்றத்தில் வாதாடி ஜாமீனில் விடுவிக்குமாறு கேட்டால் இன்னும் அந்தப் புகார் குறித்து விசாரணையே ஆரம்பிக்கவில்லை என்று சொல்லுகிற அரசின் காவல்துறையினரின் நவீன நாடகத்தை இன்று தமிழ்நாட்டில் காணுகிறோம். இதுபற்றி கேட்டால் - விமர்சித்தால் - கண்டித்தால் - தி.மு.க. ஆட்சியில் மாத்திரம் அம்மா மீதும், அமைச்சர்கள் மீதும் வழக்குப் போடவில்லையா? அதற்கு பழிக்குப் பழி வாங்குகிறோம் என்று போயஸ் வட்டாரத்திலிருந்து பதில் வருகிறது.

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் யாரோ கூறிய புகார் மீதோ அல்லது அப்படி ஒரு புகாரைக் கொடுங்கள் என்று எவரிடமும் வற்புறுத்தியோ அந்த அடிப்படையில் எந்த ஒரு வழக்கும் தொடரப்படவில்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்ற உண்மையாகும்.

டான்சி நிலம் இன்றைக்கும் இருக்கிறது. அதிலே உள்ள 2,698 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள கட்டிடமும் இன்றைக்கும் இருக்கிறது. அதை 1992ஆம் ஆண்டு ஜெயலலிதா வாங்கியதை ஜெயலலிதாவே 30.6.1992 அன்று மதுரையிலே நடைபெற்ற அ.தி.மு.க. மாநாட்டில் திட்டவட்டமாக ஒப்புக்கொண்டு அவ்வாறு வாங்கியது ஒன்றும் குற்றம் இல்லை என்று பேசி அது எல்லா ஏடுகளிலும் வெளிவந்தது. அரசு நிலத்தை அமைச்சர்கள் வாங்கக் கூடாது என்ற வரம்பு மீறி டான்சி நிலத்தை வாங்கியதின் மூலம் 3 கோடியே 50 லட்சம் ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்பட்டது என்பது

எல்லோருக்கும் தெரியும். அதுமட்டுமல்ல, விற்பனைப் பத்திரத்தில் பதிவுத்துறை அதிகாரிகளின் உதவியோடு முறைகேடு செய்து அதன் மூலம் 43 லட்சத்து 9 ஆயிரம் ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

இப்படி வெட்ட வெளிச்சமாகத் தெரிந்த ஒரு விவகாரத்தில் அந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஜெயலலிதா மீதுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்று கூறி மூன்று ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும், பத்தாயிரம் ரூபாய் அபராதமும் விதித்தார்.

அதேபோல டான்சிக்குச் சொந்தமான மற்றொரு இடத்தை சசி எண்டர்பிரைசஸ் வாங்கியதற்காக இரண்டாண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கப்பட்டது.

இதைப்போலவே வெறும் புகார்களின் அடிப்படையில் இல்லாமல் கொடைக்கானல் ப்ளசண்ட் ஸ்டே ஓட்டல் விவகாரத்திலும் தீர்ப்பு வழங்கப்பட்டதை நாடு நன்றாக அறியும்.

கொடைக்கானல் பெருந்திட்ட விதிமுறைகளுக்கு முரணாக ஓட்டல் அதிபருக்கு மேலும் ஒரு தளம் கட்டிக் கொள்ள உரிமம் வழங்கப்பட்டதுதான் வெளிப்படையான குற்றச்சாட்டு. ஓட்டல் அதிபர் அரசுக்கு முறையீடு செய்து கொண்டார். அரசு அதிகாரிகள் விதி மீறியது உண்மைதான் என்பதைச் சுட்டிக்காட்டி ஓட்டல் அதிபர் மனுவை நிராகரிக்கலாம் என்று கோப்பில் எழுதினார்கள்.

ஆனால் ஜெயலலிதா அரசின் அன்றைய அமைச்சர் செல்வகணபதி அந்தக் கோப்பை 250 நாட்களுக்கும் மேலாக வைத்திருந்து விதிகளிலிருந்து விலக்களித்து அனுமதி வழங்கி அதே நாளில் அந்தக் கோப்பை ஜெயலலிதாவிற்கு அனுப்பி அவரும் அதேநாளில் கோப்பில் அதிகாரிகளால் எழுதப்பட்டிருந்த ஆட்சேபணைகளைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் ஓட்டல் அதிபருக்குச் சாதகமாக கையெழுத்திட்டு உத்தரவு பிறப்பித்திருப்பது அந்தக் கோப்பில் இன்றைக்கும் சாட்சியாக உள்ளது.

அறிவிக்கப்படாத எமர்ஜென்சியை அமல்படுத்தியுள்ள ஜெயலலிதா அரசின் நடவடிக்கைபோல யாரோ எவரோ சொன்ன புகாரின் அடிப்படையில் அந்த வழக்கு தொடரப்படவில்லை. விதிகளை மீறி கட்டப்பட்ட ஓட்டல் பகுதிகளை இடித்துத் தள்ள

வேண்டுமென்று உயர்நீதிமன்ற நீதிபதி ஜெயலலிதா ஆட்சியில் இருக்கும்போதே உத்தரவிட்டார். வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தத் தீர்ப்பின் முடிவில்தான் "நாடொறும் நாடி முறை செய்யா மன்னவன் நாடொறும் நாடு கெடும்" என்ற திருக்குறளை நீதிபதி சுட்டிக்காட்டியிருந்தார்.

அந்தத் தீர்ப்பை எதிர்த்து ஜெயலலிதா உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தபோது அங்கு உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பே உறுதி செய்யப்பட்டது. இப்படி ஜெயலலிதா அரசின் முறைகேடுகள் உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் இரண்டிலும் விசாரிக்கப்பட்டு அரசின் தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டு அதன்பிறகுதான் சிறப்பு நீதி மன்றத்திலே இந்த வழக்கு விசாரிக்கப்பட்டு, 2-2-2000 அன்று ஜெயலலிதா மற்றும் முன்னாள் அமைச்சர் செல்வகணபதி உட்பட ஐந்து பேருக்கு ஓராண்டு கடுங்காவலும், அபராதமும் விதிக்கப்பட்டது.

உடன்பிறப்பே, 1995-96இல் 45,302 வண்ணத் தொலைக் காட்சி பெட்டிகள் வாங்குவதற்கு முடிவெடுக்கப்பட்டது. அப்போது வெளி மார்க்கெட்டில் ஒரு வண்ணத் தொலைக்காட்சி பெட்டியின் விலை ரூ. 12,500. ஆனால் அரசு ஒவ்வொரு பெட்டிக்கும் 14,500 ரூபாய் விலை என்று நிர்ணயித்து வாங்கியது. இதன்மூலம் அரசாங்கத்திற்கு ஒன்பது கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த வழக்கில் 11 பேர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட போதே தங்களை வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று 9 பேர் மனு கொடுத்தனர். அதன்மீது 14-5-98 அன்று தீர்ப்பளித்த நீதிபதி ராதாகிருஷ்ணன் இந்த வழக்கில் எல்லா எதிரிகளும் சதித் திட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்பதற்கு போதுமான ஆதாரம் உள்ளது. சட்டத்திற்குப் புறம்பாக அரசாங்கப் பணத்தை கையாடல் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் செயல்பட்டுள்ளனர். நம்பிக்கை மோசடி மூலமாக தங்களுக்கும் மற்றவர்களுக்கும் பண ஆதாயம் ஏற்படுத்திக் கொண்டுள்ளனர் என்பது ஆவணங்களிலிருந்து தெளிவாகப் புலனாகிறது. இந்த வழக்கில் கலர் டி.வி. மூலம் அரசுக்குப் பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுத்தியுள்ளனர் என்பதைக் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட பல்வேறு ஆவணங்களைப் பார்க்கிறபோது கண்கூடாக வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது. ஜெயலலிதாவும் மற்ற ஆறு பேரும் பொது ஊழியர்களாக இருந்து கொண்டே அதிகாரத்தைத்

துஷ்பிரயோகம் செய்து சட்ட விரோதமாக சதித் திட்டம் தீட்டி 45,302 கலர் டி.வி. பெட்டிகளை வெளிமார்க்கெட்டில் 12,500 ரூபாய்க்கு கிடைத்தும், 14,500 ரூபாய் வீதம் வாங்கி அரசுக்கு 9 கோடி ரூபாய் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளனர் என்றெல்லாம் கூறித்தான் வழக்கைப் பதிவுசெய்தார்.

பிறகு இந்த வழக்கு தொடர்ந்து நடைபெற்று சிறப்பு நீதி மன்றத்திலே இறுதியாக தீர்ப்பு வழங்கப்பட்ட போது ஜெயலலிதா வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டு, அமைச்சர் செல்வகணபதி உட்பட 7 பேருக்கு ஐந்தாண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டதும் அனைவரும் அறிந்ததொரு செய்திதான்.

ஜெயலலிதா முதல் அமைச்சராக ஆவதற்கு முன்பு அவருக்கு இருந்த சொத்து மதிப்பு அதாவது 1-7-1991 அன்றைய தேதியில் 2 கோடியே 1 லட்சத்து 83 ஆயிரத்து 957 ரூபாய். ஜெயலலிதா முதலமைச்சர் பதவியை ஐந்தாண்டுகள் அனுபவித்து முடிந்த பிறகு 12-5-1996 அன்று ஜெயலலிதாவின் சொத்து மதிப்பு 66 கோடியே 65 லட்சத்து 20 ஆயிரத்து 395 ரூபாயாகும். இந்தச் செய்தியும் தமிழ்நாட்டு மக்களும் இந்திய மக்களும் நன்கறிந்த செய்திதான். நாமாக இட்டுக் கட்டிப் பரப்பிய செய்தியல்ல. திரு. சுப்பிரமணிய சுவாமி அவர்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் இந்த வழக்கு விரிவாக விசாரணை செய்யப்பட்டது. விசாரணையைத் தடுத்திட ஜெயலலிதா உச்சநீதி மன்றத்திலே வழக்கு தொடுத்து விசாரணை சிறிது காலம் தடை செய்யப்பட்டிருந்த போதிலும் பின்னர் தடையை நீக்கி விசாரணையைத் தொடர உயர்நீதி மன்றம் ஒப்புதல் அளித்தது.

இந்த வழக்கிலே ஜெயலலிதா உயர்நீதி மன்றத்தில் தனக்கு முன் ஜாமீன் கோரினார். அதனை நிராகரித்த உயர்நீதி மன்றம் ஜெயலலிதா மீது சாட்டப்பட்டுள்ள ஊழல் வழக்கிற்கு அடிப்படை ஆதாரம் உள்ளது என்றும் அரசியல் பகை காரணமாக இவ்வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்று கூறுவது சரியல்ல என்றும் தீர்ப்பு கூறியது.

ஏனென்றால் ஜெயலலிதா வீட்டைச் சோதனையிட்ட போது கண்டு பிடிக்கப்பட்ட நகைகள், வெள்ளிச் சாமான்கள், ஏனைய சொத்துக்கள், மற்றும் திருவான்மியூர் தொடங்கி மாமல்லபுரம் வரை வாங்கப்பட்டுள்ள பங்களாக்களின் பத்திரங்கள்

ஆகியவைகளைக் கணக்கிட்டு எடுக்கப்பட்ட ஆதாரங்களின் பேரில் இத்தீர்ப்பு வழங்கப்பட்டது. தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் தொலைக்காட்சிப் பெட்டிகளிலும், ஏடுகளிலும் பார்த்துப் பார்த்து ஆச்சரியப்பட்ட சொத்துக்கள்தான் அவை. எனவே இதிலும் திராவிட முன்னேற்றக் கழக அரசு இட்டுக்கட்டி எதையும் செய்து விடவில்லை என்பதை நன்கு தெரிந்து கொள்ள முடியும்.

அதைப் போலவே ஜெயலலிதா வங்கிக் கணக்கிலே மூன்று லட்சம் டாலர் வரவு வைக்கப்பட்டது. அந்நியச் செலாவணி சட்டத்தின் கீழ் இதன் மீது வழக்கு தொடுக்கப்பட்டது. டாலரை அனுப்பியது யார் என்றே தனக்குத் தெரியாது என்று ஜெயலலிதா கூறி விட்டார். அது குறித்த வழக்கும் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கின் மீது ஜெயலலிதா ஜாமீன் மனு தாக்கல் செய்த போது 6-12-1996 அன்று உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிலே வேண்டுமென்றே அரசியலில் காழ்ப்புணர்ச்சியோடு தன் மீது பொய் வழக்குகள் போடப்பட்டிருப்பதாக ஜெயலலிதா தரப்பிலே கூறப்பட்ட வாதத்தை ஏற்க முடியாது. இந்தக் குற்றச்சாட்டுக்கான ஆரம்ப ஆதாரங்கள் உள்ளன. தனி மனித சுதந்திரத்தை விட கூறப்பட்ட ஊழலைக் கண்டுபிடிப்பது விசாரணையில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு முக்கியமாகும். அரசுத் தரப்பு ஆவணங்களை ஆராய்ந்த போது இந்த வழக்குகள் உள் நோக்கத்துடன் போடப்படவில்லை என்று தோன்றுகிறது என்று தீர்ப்பளித்தது. அதுவும் அனைத்து ஏடுகளிலும் வெளிவந்த செய்தியாகும்.

உடன்பிறப்பே, செல்வி ஜெயலலிதா மீதும், அவரது அமைச்சர்கள் மீதும் தொடரப்பட்ட வழக்குகள் அனைத்துமே யாரோ ஒருவர் கொடுத்த புகாரைப் பெற்றுக் கொண்டோ அல்லது ஒருவரைப் புகார் கொடுக்கச் சொல்லி தூண்டி அதைப் பயன்படுத்திக் கொண்டோ, உடனடியாக எந்த விதமான விசாரணையும் இல்லாமல், ஆதாரங்களோ, ஆவணங்களோ, சாட்சிகளோ இல்லாமல் தொடரப்பட்டவைகள் அல்ல. அத்தனைக்கும் ஆவணங்கள் இருக்கின்றன, ஆதாரங்கள் இருக்கின்றன, கோப்புகள் இருக்கின்றன. அந்தக் கோப்புகளில் முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்களின் கையெழுத்துக்கள் இருக்கின்றன, அதிகாரிகள் எழுதியுள்ள மறுப்புக் குறிப்புகள் இருக்கின்றன, அவற்றையும் மீறி அமைச்சர்கள் செயல்பட்ட செய்திகள் இருக்கின்றன. ஆனால் இன்றைக்கு பழிக்குப் பழி

வாங்குவது என்று முடிவு செய்து நம் மீதும் நமது தோழமைக் கட்சியினர் மீதும் தொடுக்கப்படுகிற வழக்குகள், மின்னல் வேகத்தில் புகார்கள் தரப்பட்டு அதே வேகத்தில் கைதுப் படலங்கள்! வழக்குகள்! என்று எவ்வித முன் விசாரணையும் இல்லாமல் நடைபெறுபவைகளாகும். அதாவது ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ள கைது செய்துவிட்டு; அதன்பிறகு வழக்குத் தொடர்வதற்கான ஆதாரங்களைத் தேடி அலைகிறார்கள். இது குறித்த நீதிமன்ற நிகழ்வுகளைப் பார்த்தாலே இந்த உண்மை தெளிவாகப் புரியும்.

நான் இப்போதும் சொல்கிறேன். திட்டவட்டமாகச் சொல்கிறேன். தெளிவாகச் சொல்கிறேன். கழகத்தைச் சேர்ந்தவர்கள் யார் ஒருவர் மீதும் ஆதாரபூர்வமான குற்றச்சாட்டு எனக்கும் தெரியாமல் இருந்து அது நிரூபிக்கப்படுமேயானால், அவர்களுக்கு நீதிமன்றம் தரும் தண்டனைக்கு என்றைக்கும் தலைவணங்குபவனாகத்தான் நான் இருப்பேன். இதனைப் புரிந்து கொள்ளாமல் கழகத்தைக் களங்கப்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு சேறு வாரி வீசக் கிளம்பியிருக்கும் அம்மணியாருக்கு நான் சொல்லிக்கொள்வதெல்லாம் பாவம், மேலும் உங்கள் கைகளைச் சேறாக்கிக் கொள்ளாதீர்கள்" என்பதுதான்!

அன்புள்ள,

மு. க.

(01-06-2001)

2599. தலைவர் கலைஞர் பிறந்தநாள் செய்தி!

உடன்பிறப்பே,

ஜூன் 3 - இந்த நாளை நினைக்கும் போதெல்லாம் உனக்கு என் பிறந்தநாள் நினைவுக்கு வருகிறது. எனக்கு நினைவுக்கு வருவது; இதே ஜூன் 3ஆம் நாள் அன்றுதானே இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து 1938 ஆம் ஆண்டு தந்தை பெரியார் அவர்களால் போர் முரசு கொட்டப்பட்டு தமிழனின் தன்மானம் காத்திடும் யுத்தம் தொடங்கப்பட்டது என்பதேயாகும்.

1924 நான் பிறந்த அந்த ஆண்டுதானே அன்றைய மைசூர் அரசுக்கும் சென்னை ராஜதானிக்கும் காவிரி நதி நீர்ப் பிரச்சினை குறித்த ஒப்பந்தம் ஏற்பட்டது என்பதும் என் நினைவில் படராமல் இருப்பதில்லை.

ஒன்று; தமிழ்மொழியைக் காத்து வளர்த்து, அதனை உலக அறிவியல் மொழிகளில் ஒன்றாக செழிக்கச் செய்து - இந்தியாவின் மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக தமிழும் இடம் பெறவேண்டுமென்ற விருப்பம் நிறைவேறிடப் பணியாற்றுகிற தமிழ்த் தொண்டு!

மற்றொன்று; காவிரிப் பிரச்சினையில் நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு கிடைத்து - இன்று காவேரி ஆணையத்தினால் கிட்டும் பலன்களை விட அதிகப் பலனை; அதாவது நிலையான முழுமையான பயனைத் தமிழ் மக்கள் பெற்றிட ஆற்ற வேண்டிய அரும்பணி!

எனவே பிறந்த நாளும், பிறந்த ஆண்டும் நினைவூட்டுகிற இப்பொறுப்புகளைத் தவிர; நாடு வாழவும் நல்லதோர் சமதர்ம சமத்துவ சமுதாயம் மலரவும் - ஆக்கப்பணிகள் ஆயிரமாயிரமாகக் காத்திருக்கின்றன.

அனைத்துப் பணிகளையும் ஊக்கமுடனும் உறுதியுடனும் நிறைவேற்றும் நெஞ்சுரத்தைப் பெற்றிடத்தான் உன் போன்ற

உடன்பிறப்புகளின் வாழ்த்துகள் எனக்குத் துணை நிற்கின்றன. ஆன்றோர் சான்றோரின் அன்பான ஆசிகள் எனக்கு அரணாக அமைகின்றன.

உடன்பிறப்பே, நீர்க்குமிழி - நிலையற்றது - இன்றைக்கிருப்பார் நாளைக்கு இல்லை - இப்படிப் பல வர்ணனைகளுக்கும் விமர்சனங்களுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குவதே வாழ்க்கை என்பதாகும்.

வாழ்க்கை குறித்து இவற்றையே எண்ணிக் கொண்டு புழுக்களைப் போல உடலையும் உள்ளத்தையும் சுருட்டி வளைத்துப் படுத்திருப்போர் பலருண்டு உலகில்!

புழுவல்ல நீ; புலி! விழி! எழு! பகுத்தறிவுத் தலை தூக்கிப் பாய்ந்திடுக பழமையாம் மடமையின் மேல்!

என்றெழுந்த ஈரோட்டு முழக்கம் கேட்டு, படை திரண்டது! பகை மிரண்டது! அப்படையில் ஒரு வீரனாய் பதினான்காம் வயதிலேயே பதிவு செய்துகொண்டவன் நான் -

அன்று முதல் இன்று வரை அண்ணனுக்கும் அக்காள்களுக்கும் தம்பியாய் - தம்பியர்க்கும் தங்கையர்க்கும் தமையனாய் - பேரன்பு கொண்டவர்க்குப் பிரியமுள்ள பிள்ளையாய் - பேரக் கொழுந்துகளுக்குப் பாட்டனாய் - ஈரோட்டு அய்யனும் காஞ்சி அண்ணனும் ஈன்றெடுத்த இந்த இயக்கக் குடும்பத்தில் ஒருவனாய் திகழ்ந்து - இன்று உன் போன்றோர்க்கு தலைவனாய் இருக்கின்றேன் இந்தத் தலைமைத்தொண்டன்!

வெற்றிகள் என் பாதங்களில் அலைமோதிய போதும் - தோல்விகள் என் தோள்களில் உரசிய போதும் - அந்த இரு நிலைகளையும் உன்னை நினைத்து ஒரே நிலையாகக் கருதி வாழ்ந்து கொண்டிருப்பவன் நான்.

அதனால், இன்பத்திலே மட்டுமே நமை நத்திக் கிடப்போர் யார்? துன்பத்தில் தொலைதூரம் ஓடவிடுவோர் யார்? அதிலும் துணையிருப்போர் யார்? என்பதையெல்லாம் என் வாழ்வில் அனுபவ ரீதியாக கண்டுணர்ந்தவன் நான்!

என்னிடம் எதையும் எதிர்பாராமல்; என் வாழ்விலும் சரி; கழகத்தின் வாழ்விலும் சரி; ஏற்றத் தாழ்வுகள் குறித்து எள் முனையளவும் கவலைப்படாமல் - இந்த இயக்கத்தின் இரத்த

நாளங்களாய் இருந்திடும் உடன்பிறப்புகளாகிய உங்களை - உங்களது பாதங்களை - கோடி மலர் கொண்டு அர்ச்சனை செய்கிறேன்.

நேரில் வரினும் வராவிடினும், எங்கிருந்தோ வாழ்த்தும் என் உடன்பிறப்பின் உணர்வு அதிர்வுகளால் வாழ்ந்து கொண்டேயிருப்பேன்.

என் வாழ்க்கையை எதற்காக அர்ப்பணித்திருக்கிறேனோ; அதற்கே என் உடன்பிறப்புகளின் வாழ்க்கையும் அர்ப்பணிக்கப்படுமேயானால்; அது நான் பிறவி எடுத்த பயன் என்பேன்.

அன்புள்ள,

மு. க.

(02-06-2001)

2600. காதலா? சதியா? கண்மூடி சோதிடமா?

உடன்பிறப்பே,

அம்பிகாபதி அமராவதி - லைலா மஜ்னு - அனார்கலி சலீம் - ரோமியோ ஜூலியட் போன்ற காதல் காவியங்களை அறிந்து வைத்திருக்கிற நமக்கு அந்தக் காவியங்களில் காதல் ஈடேறாத நிலையில் காதலனோ, காதலியோ அல்லது இருவருமோ பிணமாயினர் என்பதே முடிவாக இருக்கும். ஆனால் வெள்ளை முடி முனிவர்களின் உயர்ந்து நிற்கும் கிரீடக் கொண்டைகள் போல பனிச்சிகரங்கள் கொண்ட இமயமலைத் தொடரையொட்டி அமைந்துள்ள பூங்கொத்து போன்ற நேபாளத்தில் காதல் நிறைவேறாததன் காரணமாக மரணப் புயல் புகுந்ததாகக் கூறப்படும் உச்சக்கட்ட முடிவு (Climax) ராஜ குடும்பம் ஒன்றின் 13 உயிர்களைக் குடித்துள்ளது.

நேபாளத்தில் நடைபெற்றுள்ள இந்த அதிர்ச்சி நிகழ்ச்சி பற்றி எத்தனையோ செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. மன்னர் குடும்பத்தின்மீது ராஜகுமாரன் திபேந்திரா தனது தந்தையும் மகுடாதிபதியுமான மன்னர் பிரேந்திரா, மகாராணி ஐஸ்வர்யா மற்றும் இளவரசி உள்ளிட்ட குடும்பமே விருந்து மண்டபத்தில் விருந்து அருந்திக் கொண்டிருந்தபோது திபேந்திராவின் காதலி தேவயானி பற்றிப் பேச்சு வந்ததாகவும், அவளைத் தவிர வேறு யாரையும் மணக்க மாட்டேன் என்று இளவரசன் திபேந்திரா கடுமையும் பிடிவாதமும் கலந்து குரலில் கனல் கக்கியதாகவும், அதனை மறுத்து அவன் தாயார் ராணி ஐஸ்வர்யா பதிலுரைத்ததாகவும் அதனால் ஏற்பட்ட மன உளைச்சலில் திபேந்திரா அந்தக் குடும்பத்தையே மரணக் குழியில் போட்டுப் புதைத்து விட்டதாகவும் ஏடுகள் அனைத்தும் கதறி அழுகின்றன.

மன்னரை மகாவிஷ்ணுவின் அவதாரம் என்று எண்ணிக் கொண்டிருக்கும் அந்த நேபாளத்து மக்கள் பேரதிர்ச்சியால் துடித்துத் துவண்டு போய் உள்ளனர்.

உண்மையில் நடந்தது என்ன? இன்னும் உலகத்திற்குத் தெரிவிக்கப்படவில்லை.

இப்போது ராஜகுமாரனுக்கு திருமணம் செய்து வைத்தால் மன்னர் குடும்பத்திற்கே ஆபத்து என்று ஒரு ஜோதிடர் சொன்ன வார்த்தையை நம்பி ஏற்கனவே அதுபோன்ற மூட நம்பிக்கைகளை அழுத்தம் திருத்தமாக பிடித்துக் கொண்டிருந்த மகாராணி, 35 வயது வரையில் இளவரசன் ராஜகுமாரனுக்கு திருமணம் கிடையாது. எனவே தேவயானியை மறந்து விடுக என்று கடுமையான சொற்களால் அறிவுரை கூறியுள்ளார். இதுதான் நடந்திருப்பதாக செய்திகள் வருகின்றன. ஆனால் இதற்காகவா ஒரு இளவரசன் இயந்திரத் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு வந்து பெற்ற தாயையும், தந்தையையும், உடன் பிறந்தோரையும் மொத்தமாக குடும்பத்தையே ஒருவர் இருவர் நீங்கலாக அத்தனை பேரையும் கொன்று குவித்திருப்பான் என்று எண்ணாமல் இருக்க முடியவில்லை.

இப்பொழுது புதைந்து கிடக்கும் ரகசியம் ஒருநாள் வெளியே வரத்தான் போகிறது. ஜோதிடன் சொல்லால் அதை நம்பிய மூடநம்பிக்கையால் ஒரு அரச குடும்பம் அழிந்து ஒழிந்ததா? காதல் தீவிரத்தால் தன்னையே மறந்து ராஜகுமாரன் தாய் தந்தையர் என்றும் உடன்பிறந்தோர் என்றும் பாராமல் அவர்களது உடல்களையெல்லாம் ரத்தச் சகதியில் மிதக்க விட்டுவிட்டானா? தன்னை மன்னர் ஆக்குவார்கள் என்ற எதிர்பார்ப்பில் மன்னரின் சகோதரர் ஞானேந்திரா இந்தப் படுகொலைக்குப் பின்னால் இருக்கிறாரா? இந்த உண்மைகள் இப்போது அமைக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவினாலோ அல்லது நேபாளத்தை நெருப்பு பூமியாக ஆக்கியிருக்கிற மக்களின் புரட்சியாலோ இவைகளன்னியில் வேறு புதிதாகக் காணப்படும் வழியினாலோ எதிர்காலத்தில் இருள் கிழித்து வெளியே வரத்தான் போகின்றன.

உடன்பிறப்பே, நேபாளம் இந்தியாவிற்கும் திபெத்திற்கும் இடையே உள்ள நாடு. 29,000 அடி உயரமுள்ள எவரெஸ்ட் சிகரம்

நேபாளத்தில்தான் உள்ளது. நேபாளத்தில் தெற்குப் பகுதியின் பாதி காடாகவும், மீதி வேளாண்மை நிலமாகவும், வடக்குப் பகுதி மலைப்பாங்கான குன்றுகளைக் கொண்ட பகுதியாகவும் வியாபித்துள்ளது. இன்றைய அரச பரம்பரையினுடைய நிறுவனர் பிருத்வி நாராயண் ஷா என்பவர், 1768-ல் நேபாள பள்ளத்தாக்கில் பரந்து கிடந்த பல குறுகிய கூர்க்க ராஜ்யங்களை ஒன்றிணைத்து ஒரு குடையின் கீழ்கொண்டு வந்தார். உலகத்திலேயே இந்து மத நாடு என்றழைக்கப்படுகின்ற நாடு நேபாளம் ஒன்றுதான். 1 லட்சத்து 40 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவு உள்ளதும், 2 கோடியே 47 லட்சம் மக்கள் தொகை கொண்டதும், காத்மாண்டு நகரை தலைநகரமாகக் கொண்டதும், லலித்பூர், பிராட்நகர் எனும் இரு நகரங்களை உள்ளடக்கியதும், நேபாளி, நிவாரி, புத்தியா, மைதலி ஆகிய மொழிகள் பேசுவோரைக் கொண்டதுமான நேபாளத்திற்கு 1972ஆம் ஆண்டு மணிமுடி சூட்டிக் கொண்டவர்தான் இப்போது கொலையுண்ட ராஜா பிரேந்திரபீர் பிக்ரம் ஷா தேவா அவர்களாகும்.

அங்கு அவ்வப்போது தோன்றிய முடியரசுக்கு எதிரான கிளர்ச்சிகள் குறிப்பாக மாவோயிஸ்டுகள் நடத்திய புரட்சிகள் இவற்றின் காரணமாக 1990ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் மன்னர் பிரேந்திரா ஒரு புதிய அரசியல் அமைப்பை அறிவித்து அனைத்துக் கட்சி ஜனநாயகத்தை உருவாக்கி அந்த அமைப்புக்கு மேலே மன்னராகப் பதவி வகித்தார்.

மன்னர் பிரேந்திரா மக்களோடு நெருங்கிப் பழகக் கூடியவர் என்பதற்குப் பல உதாரணங்கள் உண்டு. அதிகாரிகள் தங்கள் அலுவலகங்களிலே குறிப்பிட்ட நேரத்திற்கு வந்து பொறுப்போடு பணியாற்ற வேண்டும் என்பதை பெரிதும் விரும்புபவர் அவர். 20 ஆண்டுகளுக்கு முன்பு பிரேந்திரா நேபாளத்தின் கிழக்குப் பிராந்தியப் பகுதிகளுக்கு அதிகார பூர்வமான சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். அப்போது ஒரு நாள் பிராட்நகர் அரசு வரித்துறை சம்பந்தப்பட்ட அலுவலகம் ஒன்றின் உள்ளே திடீரென காலை 10 மணி அளவில் மன்னர் பிரேந்திரா நுழைந்தார். அங்கே பெரிய அதிகாரியின் நாற்காலி அதுவரை காலியாக இருந்தது. யாரும் எதிர்பாராத வண்ணம் மன்னர் அந்த இருக்கையில் சென்று அமர்ந்து கொண்டார். அந்த நேரத்தில் அந்த நாற்காலியில் இருக்க வேண்டிய பெரிய அதிகாரி நீண்ட

நேரத்திற்குப் பிறகுதான் அங்கே வந்தார். அதுவரை மன்னர் பிரேந்திரா அதே நாற்காலியில் அமர்ந்திருந்தார். தாமதமாக வந்த அதிகாரிக்கு எதுவும் புரியவில்லை. தான் அமர்ந்து பணியாற்ற வேண்டிய இடத்தில் நாட்டின் மன்னரே அமர்ந்திருப்பதைப் பார்த்ததும் தான் தாமதமாக வந்ததை எண்ணி வெட்கித் தலைகுனிந்தார். தான் தாமதமாக வந்ததையும் பொறுப்பில்லாமல் நடந்து கொண்டதையும் உணர்ந்து மன்னரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

இது போல மற்றும் ஒரு சம்பவம். இந்திய ரிக்ஷா இழுப்பவர் சம்பந்தப்பட்ட ஒரு நிகழ்ச்சி. மன்னர் பிரேந்திராவும் மகாராணி ஐஸ்வர்யாவும் பிர்கானி என்ற பகுதிக்கு சுற்றுப் பயணம் சென்றிருந்த போது ஒரு ரிக்ஷாவில் அமர்ந்து செல்ல வேண்டுமென்று இருவரும் விரும்பினார்கள். உடனே ஒரு ரிக்ஷாவை அழைத்து அதிலே ஏறி அமர்ந்து குறிப்பிட்ட இடத்திற்கு செல்லுமாறு கூறுகிறார்கள். ரிக்ஷா ஓட்டிக்கோ தன் ரிக்ஷாவில் அமர்ந்து பயணம் செய்பவர்கள் நேபாள நாட்டின் மன்னரும் அவரது துணைவியாரும் என்பது தெரியாது. மன்னர் தம்பதிகள் அவனிடம் அவனுடைய குடும்பத்தைப் பற்றியும் அவனது வருமானத்தைப் பற்றியும் பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டே வருகிறார்கள். மிகவும் ஏழையான அந்த ரிக்ஷா ஓட்டி தன் குடும்பத்தைப் பற்றியும் தனது ஏழ்மை நிலையையும் விவரித்தவாறு செல்கிறான். சில பர்லாங் தூரம் சென்ற பிறகு இருவரும் ரிக்ஷாவிலிருந்து இறங்கிக் கொண்டு, அவனுக்கு நன்றி தெரிவிக்கிறார்கள். அவனது ஏழ்மை நிலையை உணர்ந்து அவர்கள் அவனுக்கு வெகுமதியாக ஒரு பெருந்தொகையைத் தருகிறார்கள். அதுவரை அவனுக்கு அவர்கள் மன்னர் என்பதும் மகாராணி என்பதும் தெரியவில்லை. பிறகு தன்னுடைய ரிக்ஷாவில் பயணம் செய்தவர்கள் மன்னரும் மகாராணியும் என்பதை எப்படியோ யூகித்துக் கொள்கிறான். மகிழ்ச்சியிலே மிதக்கிறான். இந்தியச் செய்தியாளர்களிடம் அதுபற்றிய செய்திகளையெல்லாம் தெரிவிக்கிறான்.

இப்படி மன்னர் குடும்பத்தினரின் எளிமைக்கும் மக்கள் தொடர்புக்கும் எத்தனையோ உதாரணங்கள் உண்டு.

இத்தகைய மன்னர் குடும்பம்தான் காதலும் சோதிடமும் போட்டி போட்டுக்கொண்டு ஒன்றையொன்று தாக்கிக் கொண்டதின் காரணமாக செத்தொழிந்திருக்கிறது.

இப்போதுள்ள கேள்வியெல்லாம் இந்தப் போட்டியால் தான் நேபாளத்தில் நெருப்பு மூண்டிருக்கிறதா? அல்லது பதவிப் போட்டியால் பயங்கர சதி ஒன்று நடந்து மன்னர் குடும்பம் இந்தக் கதிக்கு உள்ளாகியிருக்கிறதா?

இந்தக் கேள்விக்கான பதில் இன்னும் கிடைக்கவில்லை. என்றோ ஒரு நாள் அந்தப் பதில் கிடைத்தே தீரும்.

அன்புள்ள,

மு. க.

(07-06-2001)

2601. மனச்சுமையை இறக்கி வைக்கிறேன்!

உடன்பிறப்பே,

"காரிருள் அகத்தில் நல்ல கதிரொளி நீதான்" என்று பத்திரிகையைப் பற்றிப் பாவேந்தர் குறிப்பிட்டுள்ளார். பத்திரிகையைப் 'பெண்' என்றும் சிறப்பித்துப் பெருமை சேர்த்துள்ளார்.

ஒரு காலத்தில் வாய்மூலம் பரப்பப்படுகிற செய்திகள் உண்மையானவைகளாக இருந்தாலும்கூட அதனை மக்கள் உடனடியாக நம்பமாட்டார்கள்.

பத்திரிகையில் அந்தச் செய்தி வந்திருக்கிறதா என்று கேட்டு அப்படி வந்திருந்தால்தான் அதனை நம்பி ஏற்றுக்கொள்வார்கள். ஆனால் இன்றைக்கு நிலைமை தலைகீழாக மாறிவிட்டது.

உண்மையில் நடந்த ஒரு செய்தியைச் சொல்லி, அது பத்திரிகையில் வந்திருக்கிறது என்று கூறினால் போதும்; த்சு! பத்திரிகையில் தானே வந்திருக்கிறது! பத்திரிகையில் தவலை காணாமல் போனால் தலை போனதாகக்கூடச் செய்தி வரும். அதையெல்லாம் யார் நம்புவது?" என்று மக்கள் பேசுகிற ஒரு நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது.

நம்ப முடியாததும் நடக்காததுமான பல செய்திகள் நாளேடுகளிலும் அச்செய்திகளை வெளியிடுவதற்கென்றே நடைபெறுகிற சில வார ஏடுகளிலும் வெளி வந்தது பற்றிய இரண்டு எடுத்துக்காட்டுக்களை எரிச்சலுக்கு ஆட்படாமல் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். நாளேடு ஒன்று நையாண்டி, கேலி, கிண்டல்கள் கலந்த கற்பனைச் செய்திகளை உரையாடல் வடிவத்தில் வெளியிட்டு மகிழும் வழக்கம் கொண்ட ஏடு - அந்த ஏட்டில் பின்வருமாறு ஒரு செய்தி!

மாநில பா.ஜ.க. முன்னணித் தலைவர்கள் அனைவரும் ஜூன் 3 என் பிறந்தநாளன்று மாமல்லபுரத்தில் அவர்கள்

கட்சி செயற்குழுவை முடித்துவிட்டு மாலை 5 மணிக்கு என் இல்லத்துக்கு வந்து வாழ்த்து தெரிவித்து சென்றார்கள். அவர்களோடு வர இருந்த மாநிலத் தலைவர் திரு. கிருபாநிதி அவர்கள் இல்லம் வந்து என்னை வாழ்த்த இயலாமற்போய் மாலையில் தியாகராய நகர் கூட்டத்தில் சால்வை அணிவித்து வாழ்த்தினார். ஆனால் இந்தச் சம்பவத்திற்குக் காலும் கையும் வைத்து, கண்ணும் மூக்கும் எழுதி ஏதோ திரு. கிருபாநிதி அவர்கள் மேடையிலே அகௌரவப்படுத்தியதுபோல அந்தப் பத்திரிகை செய்தி விமர்சனம் செய்திருக்கிறது. அவர் மேடைக்கு வந்தார் - மாலையில் வரமுடியாமைக்குக் காரணம் சொன்னார் - சால்வை அணிவித்தார் - பிறகு விடைபெற்றுச் சென்றார்.

தோழமைக் கட்சித் தலைவர்கள் பெயரையெல்லாம் போஸ்டரிலே போட்டுவிட்டு திரு. கிருபாநிதி பெயரை மாத்திரம் போடாதது போல அந்த ஏடு எழுதியிருக்கிறது.

எதையும் தீர விசாரித்துத் தெளிவுபெற்று செய்திகளை வெளியிடுவதையும் - ஒருவேளை தவறான செய்தி வெளியிட்டுவிட்டால், அது சுட்டிக் காட்டப்பட்டவுடன் திருத்திக் கொண்டு அந்தத் திருத்தத்தை வெளியிடுவதும் பத்திரிகா தர்மம் போற்றுகின்ற ஏடுகள் கடைப்பிடிக்க வேண்டிய இலக்கணமாகும்.

இதோபார்! இன்னொரு வேடிக்கை ஒரு வார இதழில் படத்துடன் வெளியாகியுள்ள கடைந்தெடுத்த தவறான தகவல்,

என் பிறந்த நாளன்று அண்ணா அறிவாலயம் அரங்கில் என்னைக் காண என் பேரன் அறிவுநிதி (மு.க. முத்துவின் மகன்), அவன் துணைவி பூங்கொடி முதலியோர் வந்தார்கள். அப்போதுதான் பிரதமர் அவர்கள் என்னுடன் "செல்போன்" மூலம் வாழ்த்துரை பேசினார். அந்தக் காட்சியைப் படம் பிடித்து படத்துடன் செய்தி வெளியிட்ட அந்த வார இதழ், இந்தச் செய்தியை எவ்வாறு வெளியிட்டுள்ளது தெரியுமா?

கலைஞரை வாழ்த்த வந்திருந்த குடும்பத்து உறுப்பினர்களில், அனைவரின் கவனத்தையும் ஈர்த்தவர்கள் - முரசொலி செல்வத்தின் மகன், மருமகள், பேரன் ஆகியோர்தான்! வாழ்த்துவதற்காகக் கலைஞரின் அருகில் அவர்கள் போன போது, செல்போனில் ஒரு அழைப்பு வர... அவர்களைக் கையமர்த்திக் கலைஞர் நிற்கச் சொன்னார். செல்போனில் பேசி முடித்தபின்

அவர்களிடம் பரிவுடன் சில வார்த்தைகள் பேசிவிட்டு, போட்டோவுக்கு போஸ் கொடுக்குமாறு சொல்லி, போட்டோ எடுத்துக்கொண்ட பிறகே அனுப்பி வைத்தார் கலைஞர்!

என்பதாக செய்தி வெளியிட்டுள்ளது. இது குற்றமான செய்தியல்ல! ஆனால் தவறான செய்தியாயிற்றே; கேட்டுத் தெரிந்து கொள்ளாமல் இப்படி வெளியிடுவது நல்லதா? சரியா?

முரசொலி செல்வத்துக்கு மகள் இருக்கிறாள்; பெயர் எழில்! எழிலுக்கு ஒரு பெண் இருக்கிறாள் பெயர் ஓவியா! எழிலின் கணவன் அதாவது செல்வத்தின் மருமகன் ஜோதிமணி!

இவையனைத்தையும் மாற்றி; மருமகனை மருமகள் என்றும் பேத்தியைப் பேரன் என்றும் பிரசுரித்து - அறிவுநிதியும், பூங்கொடியும் உள்ள படத்தை முரசொலி செல்வம் குடும்பம் என்று இப்படி அவசரப்பட்டு வெளியிடுவானேன்!

இதில் உள்நோக்கம் எதுவும் இருக்கவே முடியாது - தீர விசாரித்து ஒரு விஷயத்தை வெளியிட வேண்டுமென்ற அக்கறை துணை ஆசிரியர் குழுவுக்கோ - நிருபர்களுக்கோ இல்லாமற்போன குறைதான்!

இதுபோன்ற சிறிய விஷயங்களில் மட்டுமல்ல; பெரிய விஷயங்களிலும் தவறுகள் நேர்ந்து விடுகின்றன.

பேரறிவாளர் நெஞ்சில் பிறந்த பத்திரிகைப் பெண்ணே! என்று பாவேந்தர் பிரியமுடன் அழைத்த பத்திரிகைப் பெண் இப்படி இருக்கலாமா என்ற மனச் சுமையைத்தான் இக்கடித வாயிலாக இறக்கி வைத்துள்ளேன்.

குறையைச் சுட்டிக்காட்டி திருத்துவது - அறிவுரை கூறுவது - இவைகள் ஏடுகளின் தர்மமாக இருப்பின் அதன் பெயரே பத்திரிகா தர்மம் எனப்படும். இல்லாத ஒன்றை இருப்பதாக குற்றம் கூறுவது பத்திரிகைப் பெண்ணுக்கு உரிய நெறி ஆகாது!

இதைச் சுட்டிக்காட்டவும் இந்த இரண்டு சிறிய செய்திகள் பயன்பட்டுள்ளன. எனவே செய்தி வெளியிட்டவர்க்கு என் நன்றி!

அன்புள்ள,

மு. க.

(08-06-2001)

2602. வரலாறு திரும்பும் என்பதை நிரூபிக்கும் வரலாறு!

உடன்பிறப்பே,

தமிழகத்துத் தலைவர்களாயினும், ஆன்றோர் சான்றோர்களாயினும், தேசியத் தலைவர்களாயினும் கலைஞர்கள் கவிஞர்களாயினும் தியாகசீலர்களாயினும் அவர்களின் நினைவு போற்றும் வகையில் கட்சி வேறுபாடுகளைப் புறந்தள்ளிவிட்டு அந்தப் பெரியோரை மதித்து மரியாதை செலுத்தும் வண்ணம் பல்வேறு நினைவுச் சின்னங்களை அமைத்த பெருமை தி.மு.கழக ஆட்சிக்கு உண்டு என்பதை எவரும் மறுத்திடார்.

அறிஞர் அண்ணா மறைந்தபோது அவர் உடலை எங்கே அடக்கம் செய்வது என்பது குறித்து நானும், அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களும், அமைச்சர்களும் கலந்து பேசி, தேர்ந்தெடுத்த இடம்தான் இன்று கடற்கரையில் அண்ணா துயில் கொள்ளும் அண்ணா சதுக்கமாகும்.

அந்த நினைவிடம் சுற்றுலாப் பயணிகளும்கூட ஆவலுடன் வந்து காணுகின்ற இடமாக கழக ஆட்சியில் அமைக்கப்பட்டது.

தந்தை பெரியார் மறைந்தபோது அவருக்கு அரசாங்க மரியாதை கூடாது, ஏனெனில் அவர் ஆட்சிப் பொறுப்பில் இருந்தவரல்ல எனக் கூறிய அதிகார வர்க்கத்தின் பேச்சுக்கு மறுப்புக்கூறி ஆட்சிப் பொறுப்பில் இல்லாத காந்தியடிகளுக்கு அரசு மரியாதை நடத்தப்பட்டது போல பெரியாருக்கும் அரசு மரியாதை செய்வது தவறல்ல என்று சுட்டிக்காட்டி - அவ்வாறே அவர் உடல் அடக்கத்தை பெரியார் திடலில் செய்து முடித்து, அந்த இடத்தில் "புரட்சித்தீபச் சுடர்" பெரியார் கையில் ஏந்தியிருப்பது போன்ற சின்னத்தை அமைத்திட அன்னை மணியம்மையாருடனும் நண்பர் வீரமணியுடனும் கலந்துபேசி அவ்வாறே அரசு உதவியுடன் அந்த நினைவிடம் உருவாக்கப்பட்டது.

மூதறிஞர் ராஜாஜி மறைந்தபிறகு கிண்டி ஆளுநர் தோட்ட வளாகத்தில் நினைவு மண்டபம் ஒன்று எழுப்பப்பட்டதும் கழக ஆட்சியில்தான்! அந்த மண்டபத்தை ராஜாஜிக்கு மிகவும் பிடித்தமான இராமனின் கிரீடத்தைப் போல அமைக்க விரும்பி என் விருப்பத்திற்கேற்ப அந்த நினைவாலயம் அமைந்து அதனை ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் திறந்து வைத்தார்.

பெருந்தலைவர் காமராஜர் நெருக்கடி காலக் கொடுமை கண்டும் கேட்டும் மனஉளைச்சல் கொண்டு திடீரென காலமாகிவிட்டபோது அவர் உடல் அடக்கம் எங்கே நடைபெறுவது என்பது குறித்து காங்கிரஸ் முன்னோடிகள் ஒரு முடிவுக்கு வராதபோது இரவோடிரவாக மழையில் நனைந்தவாறு கிண்டியில் காந்தி மண்டபத்திற்கு அருகில் காமராஜர் நினைவிடம் அமைவதுதான் பொருத்தமாக இருக்குமென்று அதற்கான பணிகளில் நேரடியாக ஈடுபட்டவன் நான். அவ்வாறே அமைந்த அந்த மண்டப முகப்பில் 1976 ஜனவரி 30-ந் தேதி மாலை என் ஆலோசனைக்கு இணங்க பழைய காங்கிரஸ் தேர்தல் சின்னமும் காமராஜர் பெரிதும் விரும்பியதுமான "இராட்டை" வைக்கப்பட்டு பொலிவூட்டப்பட்டது. அந்தப் பணியை முடித்து விட்டுத்தான் வீடு திரும்பினேன். மறுநாள் ஜன. 31 காலையில் கிண்டி ராஜ்பவன் காந்தி விழாவில் என் முன்னிலையில் கவர்னர் கே.கே. ஷா அவர்கள் காந்தீய வழியில் நடைபெறுகிற ஆட்சி கலைஞர் ஆட்சி என்று புகழ்ந்தார். அந்த ஆட்சி அன்று மாலையில் கலைக்கப்பட்டதாக அந்த கவர்னர் ஷா அவர்களைக் கொண்டே அறிவிக்கப்பட்ட ஆச்சரியமும் நிகழ்ந்தது.

அடுத்த 15 நாட்கள் கழித்து காமராஜர் நினைவாலயத் திறப்பு விழாவுக்கு இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியின் வருகையையொட்டி காமராஜர் மண்டப முகப்பில் இருந்த இராட்டை சின்னம் உடைக்கப்பட்டு அந்த இடத்திலிருந்து அகற்றப்பட்டுவிட்டது.

பின்னர் 1977 தேர்தலில் இந்திராகாந்தி தோல்வி அடைந்து மொரார்ஜி தேசாய் பிரதமரான பிறகுதான் காமராஜர் மண்டபத்தில் மீண்டும் இராட்டை சின்னம் அமைக்கப்பட்டது. வரலாறு திரும்பும் என்பதை நிரூபிக்கும் வரலாறு இது!

காந்தி மண்டப வளாகத்திலேயே பெரியவர் பக்தவத்சலம் அவர்களுக்கு மணிமண்டபம் அமைத்து, நானே திறப்பு

விழாவையும் எழுச்சிகொண்ட தமிழ் இயக்கங்கள் சிலவற்றின் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தையும் மீறி நடத்தி வைத்தேன்.

கிண்டி ராஜ்பவன் வளாகத்திலேயே தியாகிகள் மணி மண்டபம் - சங்கரலிங்கனார் சிலை - ஆர்யா என்கின்ற பாஷ்யத்தின் சிலை - மொழிப்போர் தியாகிகள் மணிமண்டபம் ஆகியவை கழக ஆட்சிக் காலத்தில்தான் அமைக்கப்பட்டுள்ளன. கோவை சிறையில் கவனிப்பாரற்றுக் கிடந்த சிதம்பரனார் இழுத்த செக்கினையும் அங்கேதான் வைத்துள்ளோம்.

நாகர்கோயிலில் ஜீவா மணி மண்டபம் - பட்டுக்கோட்டையில் மக்கள் கவிஞர் கல்யாணசுந்தரம் மணி மண்டபம் - உடுமலையில் நாராயணக் கவிராயர் மணி மண்டபம் - குன்றக்குடியில் தவத்திரு அடிகளார் நினைவு மண்டபம் - திருப்பத்தூரில் மருதுபாண்டியர் நினைவிடம் - தியாக சீலர் கக்கன் மணி மண்டபம் - திருமங்கலத்தில் தியாகி விசுவநாததாஸ் நினைவு மண்டபம் - நெற்கட்டுஞ்செவல் பூலித்தேவன் நினைவு மாளிகை - கவர்னகிரியில் வீரன் சுந்தரலிங்கம் நகர் - காமராஜருக்கு கன்னியாகுமரியில் மணி மண்டபம் -

டாக்டர் அம்பேத்கருக்கு சென்னையில் மணி மண்டபம், காயிதே மில்லத்துக்கு சென்னையில் மணி மண்டபம் - கவியரசு கண்ணதாசனுக்கு காரைக்குடியில் நினைவரங்கம் - கமுதியில் தேவர் திருமகனுக்கு நினைவு மண்டபம் - இப்படி எத்தனையோ பெருமக்களைப் போற்றும் வண்ணம் நினைவுச் சின்னங்களையும், சிலைகளையும், மண்டபங்களையும், அரங்குகளையும் நிர்மாணித்த அரசுதான் நமது கழக அரசு!

1987-ல் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். மறைந்தபோது ஜானகி அம்மையார் - ஜெயலலிதா சண்டையில் எம்.ஜி.ஆர். அடக்கம் செய்யப்பட்ட இடத்தைப் பற்றியே கவலைப்படாமல், அங்கே புதர்கள் மண்டிடும் நிலையை உருவாக்கிவிட்டார்கள். இந்த நிலை கவர்னர் ஆட்சியிலும் தொடர்ந்தது.

பின்னர் 1989-ல் கழகம் என் தலைமையில் ஆட்சிக்கு வந்தபிறகுதான், எம்.ஜி.ஆர். நினைவிடம் அழகுற அமையும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

அவருடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் உயரமானதும் அகன்ற வடிவங் கொண்டதுமான ஒரு குடை வைக்கப்பட்டது. எம்.ஜி.ஆர். பலருக்கு நிழலாக இருந்தார் என்பதை விளக்குவதற்காக அந்தக் குடையென்று அப்போது நான் சொன்னேன்.

பூங்கா, நீரூற்று இவைகள் எல்லாம் அமைக்கப்பட்டன.

பின்னர் 1991ல் ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா கழக ஆட்சியில் அமைக்கப்பட்ட அனைத்தையும் அகற்றிவிட்டு, அந்த நினைவிடத்தை புதிதாகவே கட்டி, வாசல் முகப்பில் இரட்டை இலைச் சின்னத்தையே வடிவமைத்து வைக்கச் செய்தார்.

1996ல் அண்ணா நினைவு சதுக்கம் ஐந்தாண்டு காலத்தில் மிகவும் பழுதடைந்து கிடந்ததைப் பார்த்து அதனைப் பழுதுபார்த்து புதுப்பிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டபோது, சதுக்கத்தின் முகப்பில் வைக்கப்பட்ட வரவேற்பு வாசலில் சூரியக் கதிர்கள் பதிக்கப்பட்டன.

உதயசூரியன் சின்னமல்ல; எனினும் சூரியக் கதிர்கள் போன்ற தோற்றமுடையவை.

இந்தத் தேர்தல் முடிந்து ஜெயலலிதா, பதவியேற்றவுடனேயே அண்ணா சதுக்கத்தில் உள்ள அந்த முகப்புக் கதிர்கள் தாள்கள் ஒட்டப்பட்டு மறைக்கப்பட்டன.

இப்போது அவை ஆட்களைக்கொண்டு அரசாங்க அனுமதியுடன் இடித்து அகற்றப்பட்டுள்ளன.

பக்கத்தில் எம்.ஜி.ஆர். சதுக்கத்தின் முகப்பில் நீண்டு உயர்ந்த நிலையில் இரட்டை இலை சின்னம் இருக்கலாமாம்!

அண்ணா சதுக்க முகப்பில் சூரியக் கதிர் கலை வண்ணம் இருக்கக் கூடாதாம்!

கழக உடன்பிறப்பே! உன் கண் கலங்குகிறதா? நன்றாகக் கலங்கட்டும்! உன் சோர்வும் மெத்தனமும் - நீ காட்டிய அலட்சியமும்தானே இந்தத் தேர்தல் முடிவு!

அந்த முடிவினால் ஏற்பட்ட அராஜகத் தொடர் கதையினால் ஒரு அத்தியாயம்தானே இந்த அற்ப்பத்தனமான நடவடிக்கை!

ஆனால் நமது புத்தன் அண்ணன் என்ன சொல்லுகிறார் தெரியுமா?

முகப்பில் உள்ள சூரியக் கதிரை மறைத்தால் என்ன தம்பி! என் கல்லறையின் மீது ஒளிவிசிக் கிளம்பும் உதயசூரியனை நீ நாள்தோறும் காணத்தானே போகிறாய்! அதனால் கவலை விடு" என்கிறார்.

அவர் - நீயோ கண்ணீர் விடுகிறாய். இது உனக்குத் தேவையான தண்டனைதான் இப்போது!

அன்புள்ள,

மு. க.

(09-06-2001)

2603. மெகா எமர்ஜன்சியும்; மினி எமர்ஜன்சியும்!

உடன்பிறப்பே,

ஒருவர் மீது குற்றஞ்சாட்டின் புகார் எழுதித் தரப்படுமேயானால்; அதனை முதல் தகவல் அறிக்கையாகப் (F.I.R.) பதிவு செய்துகொண்டு, அதன்மீது விசாரணை நடத்தி, புகார் உண்மையென அறியப்படின் அவரைக் கைது செய்தல் அல்லது அவர் மீது வழக்கு தொடர்தல் என்பது காலம் காலமாகக் காவல்துறையில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் முறையாகும்.

காலம் அவசரக் காலமாக இருந்தாலோ; அல்லது அபஸ்வரக் காலமாக இருந்தாலோ காவல்துறையினர் கடைப்பிடிக்கும் முறைகளே வேறு!

நான் குறிப்பிடும் இவற்றில் இந்த இரண்டாவது முறைதான் இப்போது காவல்துறையினர் கையில் எடுத்திருப்பதாகும்.

அவசரக் காலம் - அபஸ்வரக் காலமென தனித்தனியே பிரித்துக் கூறிடத் தேவையில்லை; அவசரக் காலம் என்றாலே அங்கே அபஸ்வரம்தான் ஆதிக்கம் செலுத்தும்.

யாரிடமிருந்தாவது ஒரு புகார் - அதனடிப்படையில் கைது, ரிமாண்ட், ஜாமீன் மறுப்பு, போலீஸ் காவல் - இவற்றுக்குப் பிறகு வழக்கு நடத்துதல் என்ற முறையில் தமிழ்நாட்டில் ஓர் அவசரக் காலம் அதாவது அபஸ்வரக் காலம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

இதைத்தான் நான் மினி எமர்ஜன்சி என்று குறிப்பிட்டுள்ளேன். ஏனெனில் நானும் நமது கழகமும் மெகா எமர்ஜன்சி கொடுமைகளையே அனுபவித்தவர்கள்.

அந்தக் கொடுமைகளுக்கும் - கோர விளைவுகளுக்கும் தனக்குப் பொறுப்பு கிடையாது என அறிவித்து திருமதி இந்திரா காந்தி அவர்கள் அதிகாரிகள் மீது கண்டனம் தெரிவித்து, அந்தச்

செயல்களுக்காக சென்னைக் கடற்கரையில் வருத்தம் தெரிவித்தது 1979-ஆம் ஆண்டு என்பதை நாடறியும்.

1975 - ஆம் ஆண்டு மெகா எமர்ஜன்சி அறிவிக்கப்பட்டபோது அதை எதிர்த்து, ஆளுங்கட்சியாக இருந்த தி.மு.கழகம், தனது செயற்குழுவைக் கூட்டி வடித்தெடுத்த தீர்மானம் உலக நாடுகள் முழுவதும் பரவிய ஒன்றாகும்.

தீர்மானத்தைத் திரும்பப் பெறுக; இல்லையேல் ஆட்சி கலைப்பு என்றனர். நாம் இணங்கவில்லை. ஆட்சியும் கலைக்கப்பட்டு நம்மீது வழக்குகளும் தொடரப்பட்டன. கழகத்தினர் ஐநூறு பேர் அளவுக்கு மிசா கைதிகளாக சிறைப்பட்டனர். அவர்களில் சிறையிலேயே செத்து மடிந்தவர்கள்தான் மாவீரன் சிட்டிபாபுவும், சாத்தூர் பாலகிருட்டிணனுமாவார்கள்.

சிறையில் பூட்டப்பட்ட கழகச் சிங்க ஏறுகள் எப்பாடுபட்டனர்! எப்படி சித்திரவதைக்குள்ளாயினர்! அம்மோதார் நெடிய பெருமூச்சை வரவழைக்கும் கொடிய வரலாறு!

அந்த வரலாற்றை நாட்குறிப்பு என்ற நிலையில் சென்னை மேயராக இருந்தவரும் - நாடாளுமன்ற உறுப்பினராக வீற்றிருந்து நாடு பல சுற்றியவரும் - கழகத்தின் கொள்கைபரப்புச் செயலாளராக விளங்கியவரும் - மிசாக் கைதியாக சிறை சென்று அங்கே தாக்குண்டு பிணமாக வெளியே வந்தவருமான என் தம்பி சிட்டிபாபு; ஆம் கழகத்தின் செல்லப்பிள்ளை - அவர் தீட்டியுள்ளார் ஒரு புத்தகமாக!

அப்போதே வெளிவந்த இரத்தத் துளிகளாலும் கண்ணீர்த் துளிகளாலும் தம்பி சிட்டிபாபுவினால் எழுதப்பட்ட அந்நூலில் இருந்த நூலின் ஆரம்பப் பகுதியை மட்டும் நீ படித்துப் பார்ப்பதற்காக இங்கே தருகிறேன்.

> மாலை 5 மணி. களியுடன் கூடிய தட்டு! யாரோ பயன்படுத்திய தட்டுகள்! யாரோ பயன்படுத்திய சிறுநீர் பானைகள்! யாரிடம் கேட்பது, கேட்டால் யார் பதில் சொல்வது! இரவு 7.30 மணி. அறைக்குள்ளே இருட்டுதான்! ஆயினும் வெளிவாசலில் ஓரிரு விளக்குகள்! மங்கலான ஒளியில் 8 மணி அளவில் சில உருவங்கள் வருவதைக் காணமுடிந்தது. காரணம்,

நான் இருந்த இடம் வருவோரை போவோரைப் பார்க்கும் வகையில் அமைந்திருந்தது.

காக்கி உடைகள், வெள்ளை உடைகள், சற்றேறக்குறைய இருபதுக்கும் மேற்பட்டோர், சிறை அதிகாரி...! அழகான பெயர்! அன்பு என்ற சொல்லுக்கு அளித்திட்ட உருது சொல்தான்...! ஆமாம், அந்த அன்புதான் அரசியல் கைதிகளை அடித்திட ஆட்களுடன் அங்கே நின்றிருந்தார். அவர் மட்டும் அல்ல. அவருக்குக் கீழே உள்ள அதிகாரிகள் உள்பட! அவரது கை அசைவில் அத்தனைப் பேரும் நாங்கள் இருக்கும் இடத்துக்குள் நுழைந்தனர்.

இரு கோடுகளைத் தனித்தனியே படுக்க வைத்தால் எப்படி இருக்குமோ அப்படிப்பட்ட அமைப்பில் அவர்கள் நின்றனர். அவர்களது கையில் இருந்த தடிகளை அவர்கள் நீட்டினால் ஏற்படும் அளவே இக்கோடுகளும் நடுவே உள்ள இடைவெளி!

பட்டாளத்தின் பதுமைபோல் அவர்கள் நின்றனர். இதற்குள் காக்கி உடை அணிந்த... கம்பீரமாகக் குரல் எழுப்பினார். (பத்தாம் நம்பர் அறைக்கு) அருகில்! கண்ணுக்குத் தெரியாமல் காலன் கவர வருவான் உயிரை என்பார்கள் கட்டையாக விழப் போகிறவர்கள்! ஆனால் கதவருகே காக்கி உடையில் காவலாளிகள் காலனைப் போல்! கதவு திறக்கப்படும் ஒலி! கம்பீரமான குரல் பேசியது! பெயர் சொல்லி அறைவிட்டு வருதல் வேண்டும் SEARCH என்ற பெயரால் திறக்கப்பட்ட கதவு பளீர் என்ற சத்தத்துடன்! ஏதோ சினிமாவில் காணும் காட்சிபோல் இருந்தது. கொலைக்காரக் கைகளின் கைத்தடிகள் அரசியல்வாதிகளின் உடலைச் சுவைத்துக் கொண்டிருந்தன!

அலறல்! அழுகுரல்! அய்யோ! அப்பா! அம்மா! என்னும் அபயக் குரல்கள்!

ஓடு உள்ளே என்ற உத்தரவு! சர்க்கஸ் புலி ஆட்டுக்குட்டி தலையைத் தன் அகண்ட வாயில் வைத்துச் சுவைக்காமல் காண்போருக்கு வித்தைகாட்டுவது போல் கண நேர அதிர்ச்சி!

ஓடு என்றவுடன் தீ வளையத்தில் தாண்டிச் செல்லும் சிங்கம்போல் கூண்டுக்குள் அடங்கியது அறை பத்து. அடுத்த அறை ஒன்பது! அப்படியே ஐந்து வரை வந்து கொண்டிருந்தது. அடுத்து ஓர் அறைதான். அதற்கு அடுத்து எங்கள் அறை!

அறையில் உள்ளவர்கள் அடுத்தடுத்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் காட்சியிலேயே அவர்கள் அடிபட்டது போன்ற உணர்வு! தங்களை அறியாமல் இது என்ன என்ற கேள்வி! அழுவதா சிரிப்பதா என்றிருக்கும் நிலை எனக்கு! காரணம் இது போன்ற காட்சிகளை நான் இரண்டு முறை கண்டவன் மட்டுமல்ல!

நானே ஓர் அங்கமாக அகப்பட்டு உள்ளவன்! அதனால் எனக்கு அதிர்ச்சி இல்லை! ஆனாலும் எனது நண்பர்களைப் பார்த்து ஆடை அணிந்து கொண்டே வெளியே போக வேண்டும்! அவன் சொல்வதுபோல் ஆடையைக் கழற்றிவிட்டுப் போகக்கூடாது என்று சொன்னேன். ஆனால் அனைவரும் மழையில் நனைந்த குழந்தைகள் போல் உடல் ஆடிக் கொண்டிருப்பதையும் காணாமல் இருக்க முடியவில்லை. அறை நான்கு முடிந்து பூட்டும் போடப்படுகிறது!

அடுத்து நாம்தான்.

பூட்டுத் திறப்பது மட்டுமே கேட்டது! கதவைத் தள்ளினார்கள்!

வாங்கடா என்ற குரல்! கடைசி அறையானது உக்கிரம் அதிகமாக உள்ள நிலை. அலுத்துப் போய்விட்டவர்கள் அல்ல அவர்கள்! அதிகாரி வேறு வெளியில் நின்றபடி என்னடா மெதுவாக அடிக்கிறீர்கள் என்று அதட்டல்!

உத்தரவு உக்கிரமாக வருகிறபோது உதை வேகத்தைக் கேட்கவா வேண்டும்!

கதவு திறந்ததும் யார் முன்னே வெளியில் செல்வது என்ற நிலை! காலம் கதவுகளை மூடப் போவதில்லை; அர்ச்சனைக்குக் கொண்டு வந்த அரசியல் மலர்கள் அல்லவா நாங்கள்! எனவே திரும்பிப் பார்த்தேன்! தீர்மானமாக நானே முதலில் வெளியே வந்தேன் பெயர்

சொல்லி! எதிர்பார்த்த ஆள் அல்லவா நான்! எனவே ஓர் அடி எடுத்து வைப்பதற்குள் கன்னத்தில் வீழ்ந்தன அறைகள்!

நிலைக்கண்ணாடி கல்பட்டு உடைந்து விழுவது போல் எனக்குத் தோன்றியது. கண்கள் கணநேரம் காண்பது எல்லாம் காரிருள் போல் இருந்தது.

இரு கோடுகளுக்கு இடையில் தள்ளப்பட்ட எலி! ஆம்; அவர்கள் அடித்ததும் அப்படித்தான்! ஆனால் அவர்கள் அசந்தனர். இது எலி அல்ல புலி என்று! காரணம். அத்தனை அடிக்கும் என் உடல் விழவில்லை தரை நோக்கி! தள்ளினார்கள் மதில்சுவர் மீது! சட்டென்று திரும்பிக் கொண்டேன். வயிற்றில் எட்டி உதைத்து விட்டான்! சுவரின் மீதே சாய்ந்து கீழே உட்கார நினைத்தேன்!

ஆனால் நீண்ட நெடுமரத்தை மதயானை இடக்காலாலும் வலக்காலாலும் துதிக்கையாலும் வெறிபிடித்து உதைப்பது போல் உள்ள நிலையில். ஆர்க்காடு வீராசாமி நெடுமரமாகக் கீழ் சாய்ந்து கிடந்தார்!

வெறிக்கூட்டம். முரசு பறை அறைவது போல், இரு கைகளால் அறை கொடுத்துக் கொண்டே இருந்தனர்.

ஒரு புறத்தில் இக்காட்சி பள்ளிக்கூட மாணவன் பெஞ்சு மீது நிற்பது போல் இரும்பு ஏணி அருகில் கன்னத்தில் கை வைத்துக் கொண்டு கதறும்...!

ஒரே குத்துதான் நீலத்துக்கு! (நீல நாராயணனுக்கு) குள்ள உருவம். நீலம் மேலே நிமிர்ந்து பார்த்திட மார்பகத்தில் மற்றொரு குத்து முதுகில் இரண்டு தடியடி! அவ்வளவுதான் குலை நோயில் கேவிக்கொண்டு கீழே விழும் நோயாளி போல் சுருண்டு விழுவதைக் கண்டேன்.

கால் எடுத்து வைத்துக் கைகொடுக்க முடியுமா என்று அசைந்தேன்! தொண்டையில் ஓர் குத்து எனக்கு. மீண்டும் சுவரில் தள்ளப்பட்டேன்! அய்யோ என்று சாய்ந்தேன் நான்! அங்கே என் அன்புத் தம்பி!

ஆமாம்; மு.க.ஸ்டாலின்தான்! தமிழகத்து முதலமைச்சர் மகன் நேற்றுவரை! அறிந்தே அந்த... தன் கால் பூட்ஸால் அவன் அழகிய முகத்தைச் சுவை பார்க்க சுழற்றி உதைத்தான்! அடுத்துக் கொலைகாரன் ஒருவன் ஓங்கிய கோல் அவனது தோள்பட்டையில்!

காக்கி உடை அணிந்த வார்டர் ஒருவன் கன்னத்தில் கை நீட்டினான். கண்டேன் காட்சியை! கண நேரத்தில் இவர்கள் இவனை அடித்தே கொன்று விடுவர் என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. மற்றவர்கள்தான் மண்ணுடன் சாய்ந்து கிடப்பவர்களாக இருக்கின்றனர். உதவிக்கு அவர்கள் எழ முடியாதபடி! எமதூதர்கள்! என்ன செய்வது, எனக்கென்று ஓர் துணிவு!

திடீர் என்று குறுக்கே பாய்ந்தேன். தம்பியைத் தள்ளிக் கொண்டே! தடிகள் கழுத்தில்!

அவை அடிகள் அல்ல! உலைக்களத்தில் பழுக்கக் காய்ச்சிய இரும்பைத் தட்டிப் பதப்படுத்தும் உளியாக மாற்ற விழும் சம்மட்டி அடிகளாக எனக்கு அமைந்தது கழுத்தில். அத்தனையும் பெற்று அன்புத் தம்பியை அறைக்குள்ளே ஓடவிட வழி கிடைத்தது என்ற நிம்மதி. அதேபோல் வீராசாமியைத் தூக்கி நிறுத்தி ஒரு குத்துவிட்டு உள்ளே தள்ளினர்!

நீலம் மூச்சுத் திணற... தாங்கிப் பிடித்து அழைத்துச் சென்றார்! தம்பியோ தான் பட்ட அடி மறந்து தன் உடன்பிறப்புகளை உள்ளே அழைத்துச் செல்லும் காட்சி! அவர்களைப் படுக்க வைக்கத் தன் தோள் துண்டைத் தரையில் போட்டு, தாக்கப்பட்டவர்களைத் தாங்கிப் படுக்க வைத்த காட்சி!

என்னையோ அவர்கள், வாடா தம்பி வா என்று வாயில் ஓர் குத்துவிட்டு உள்ளே தள்ளினார்கள்! இல்லை, இல்லை!

கொடிய காற்றில் நெடிய மரம் சாய்ந்து விழுவதுபோல் அறையில் நான் வீழ்ந்தேன். இல்லை தள்ளப்பட்டேன்.

அறை முழுவதும் இருள் அல்லவா! நினைவு வேறு எனக்குப் பாதியாகத் தானேயிருக்கிறது.

பூட்டுப் பூட்டப்பட்டது! உள்ளே அழுகுரல்! முனகல்! அப்பா, அம்மா என்று ஒலி! அன்புத் தம்பியோ! அருகில் வந்தான். அண்ணன் நீலத்தை... மார்பில் சாத்திவிட்டு! அவன் தன் பிஞ்சுக் கரங்களால் என் முகத்தைத் தடவிக் கொண்டே கேட்டான்.

அண்ணே! இன்னும் உயிருடன் இருக்கிறீர்களா?

ஆமாம்; அவன் கேட்டதில் நியாயம் இருக்கிறது! அடிக்க வந்தவர் அல்லவே அவர்கள்! கொலை வெறித்தாக்குதல் அல்லவா நடத்தினார்கள்...

ஆண்டுகள் ஒன்பது அதிகாரம், அடுத்து ஒன்பதாவது மணி சர்வாதிகாரம்!

இரண்டும் ஒரே நேரத்தில் கிடைப்பது என்ன அவ்வளவு சுலபமா? இரண்டின் தன்மையை ஒரு மனிதன் பெறுவது அரசியல் கணக்குப்படி கூட்டலும் கழித்தலும் அல்லவா! மிச்சம் முதிர்ச்சிதானே! அந்த அனுபவம் கிடைப்பதற்கு நாங்கள் அடிபட்டது பலன்தானே! அன்புத்தம்பி ஸ்டாலினோ அதிர்ச்சி அடைந்திடவில்லை. அழுகையில் என்னைக் காண்கிறான்! அவன் அச்சங் கொள்ளக்கூடாது என்று அன்பொழுகக் கேட்டேன். அடி பலமா உனக்கு என்றேன்.

அதெல்லாம் இல்லை அண்ணே என்று அனுபவம் பெற்றவனைப் போலப் பேசினான். தெம்பு குறையக்கூடாது என்பதற்காக. தம்பி உன்னையும் அடித்தார்களே பாவிகள் என்றேன். இருக்கட்டும் அண்ணே என்று சொல்லி என்னைத் தன் கரங்களால் அடிபட்ட இடங்களைத் தடவிக் கொடுத்துக் கொண்டே என் கிழிந்த சட்டையைக் கழற்றிட உதவி புரிந்தான்!

முகத்தைத் துடைத்துக் கொண்டே தம்பி, தண்ணீர் தேவை என்றேன்! பாவம். அவன் என்ன செய்வான் - அறையில் இருந்தால் தானே தர! அதற்குள் அதட்டல் குரல்!

யார்ரா சிட்டிபாபு, வீராசாமி, நீலநாராயணன்? வாங்கடா வெளியில்!

பூட்டுத் திறக்கப்பட்டது. தம்பி ஸ்டாலினைப் பார்த்தேன்! அவன் எங்களை மீண்டும் அடிக்கப் போகிறார்கள் என்று எண்ணியிருப்பான் போலும்! பாவம். தண்ணீர் கேட்டதற்கு அவன் அப்போது கண்ணீர் விட்டான்!

அந்தக் காட்சிகளில் இதய் இணைவு அல்லவா!

அகமும் புறமும் ஒன்றாக இணைய என் இதயம் முடிவெடுத்த நேரம் அதுதானே!

ஆமாம்! அன்னையிடம், அன்பு மனைவியிடம், அருள்மிகு மக்களிடம் பெற முடியாத அன்பை அன்று அவனது கண்ணீர்த் துளிகள் எனக்கு தன் கண் பார்வையில் எனது இதயத்தையே தானாகத் தந்துவிட்டது அவனிடம்!

இது சிட்டிபாபு எழுதிய டைரியின் முதல் நாள் நிகழ்ச்சி.

இந்த டைரி தொடர்ந்து வெளி வந்தது முரசொலியில்! நூல் வடிவிலும் வெளியிடப் பட்டது. இவைகளைப் படித்தோர் கண்ணீர் வடித்தனர். கேட்டோர் குமுறி அழுதனர். என் செய்வது; நாட்டு நடப்பை உணரும் பக்குவம் பெற்றோர் - நல்லது கெட்டது எது என்பதை ஆய்ந்திடும் அறிவுடையோர் மட்டுமே ஜனநாயக நாட்டில் மனித உரிமைகள் இப்படியும் மாய்க்கப் படுவதோ என மலைத்தனர். தவித்தனர்.

உடன்பிறப்பே,

மறைந்த தம்பி சிட்டிபாபுவின் நாட்குறிப்பையும் அந்தக் குறிப்புக்குள் அடங்கிக் கிடக்கும் கொடுமைகளையும் நான் இப்போது நினைவூட்டுவதற்குக் காரணம்; நாமும் நமது கழகமும் அன்றைய மெகா எமர்ஜன்சியையே எதிர்த்து நின்ற எஃகு உள்ளத்திற்குச் சொந்தக்காரர்கள்; இன்றைய மினி எமர்ஜன்சி கண்டா கையது கொண்டு மெய்யது போர்த்தி வணங்கித் தாழ்ந்து வீழ்ந்துவிடுவோம்! இல்லை; முக்காலும் இல்லை!

அன்புள்ள,

மு. க.

(10-06-2001)

2604. தீர்மானம் நிறைவேறியது!
திரை விலகி உண்மை தெரிகிறது!

உடன்பிறப்பே,

பொதுத் தேர்தல் முடிவுகள் 13-ந்தேதி வந்தவுடன் தி.மு.க. கூட்டணியின் தலைவர் என்ற முறையிலே தோல்விக்கான காரணங்களை நான் விளக்கிய அறிக்கையில் தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகள் மற்றும் சட்டத்தின்படி வேட்பு மனு தள்ளுபடி செய்யப்பட்டதற்கு நாங்கள் தான் காரணம் என்ற பொய்ப் பிரச்சாரத்தினால் ஏற்பட்ட அனுதாபத்தின் விளைவாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. தலைமைத் தேர்தல் ஆணையர் கில் அவர்களே வேட்பு மனு தள்ளுபடி என்பது சட்டப்படியாக செய்யப்பட்டது என்று அறிவித்த பிறகும் பொய்ப்பிரச்சாரம் தான் வெற்றி பெற்றிருக்கிறது என்று கூறியிருந்தேன்.

அதாவது ஜெயலலிதா வேட்பு மனு தள்ளுபடி செய்யப்பட்டதற்கு நாங்கள்தான் காரணம் என்று பொய்ப் பிரச்சாரம் செய்யப்பட்டது என்று கூறியிருந்தேன். அந்தக் கூற்றுக்கு ஆதாரம் தருகின்ற வகையிலே தான் தஞ்சையிலே கூடிய திராவிடர் கழக மத்திய நிர்வாகக் குழு கூட்டத்திலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தீர்மானத்தின் தொடக்கமே அ.தி.மு.க. பொதுச் செயலாளரை தேர்தலில் போட்டியிட விடாமல் செய்ய வேண்டுமென்று முன்கூட்டியே திட்டமிட்டு அதற்கான பல்வேறு தடைகளை உருவாக்கிய தி.மு.க. என்றுதான் உள்ளது. தேர்தல் முடிவிற்குப் பிறகும் இவ்வாறு கூறுகின்ற அவர்கள் தான் தேர்தலுக்கு முன்பே தேவையில்லாமல் நான்கு இடங்களில் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்து விட்டு, அவை சட்டப்படியும் முறைப்படியும் தேர்தல் அதிகாரிகளால் தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு நாம் தான் அவர்களைத் தேர்தலில் நிற்க முடியாமல் செய்து விட்டோம் என்று

திரும்பத் திரும்பக் கூறி அனுதாபத்தைப் பெற்று வெற்றி பெற்று விட்டார்கள் என்று தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடன் நான் செய்தியாளர்களிடம் கூறினேன்.

இதை மெய்ப்பிக்கும் வகையில், தஞ்சையில் கூடிய திராவிடர் கழக மத்திய நிர்வாகக் குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு :-

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவை தேர்தலில் போட்டியிட விடாமல் செய்யவேண்டுமென்று முன்கூட்டியே திட்டமிட்டு அதற்கான பல்வேறு தடைகளை உருவாக்கிய தி.மு.க.வும் அதன் கூட்டணிகளும் செய்த சதியை ஆத்திர உணர்வுடன் புரிந்து கொண்டு அமோக வெற்றியை மதச் சார்பற்ற கூட்டணிக்குத் தந்து தி.மு.க.வுக்கு தண்டனையை ஜனநாயக ரீதியில் அளித்துள்ளனர் தமிழக வாக்காளர்கள்.

இத்தீர்மானத்தின் மூலம் அ.தி.மு.க. பொதுச் செயலாளரை தேர்தலில் போட்டியிட விடாமல் செய்ய வேண்டுமென்று தி.மு.க.வும் அதன் கூட்டணிக் கட்சிகளும் முன்கூட்டியே திட்டமிட்டு தடைகளை உருவாக்கியதாக திராவிடர் கழகம் குற்றம் சாட்டியிருக்கின்றது.

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951, பிரிவு 8 (3)ன்படி நீதிமன்றத்தால் குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாமல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதால் அவர் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்ட நாள் முதல் தேர்தலில் போட்டியிட தகுதியை இழந்தவராக ஆகிறார். இந்தத் தகுதி இழப்பு அவர் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட நாளிலிருந்து மேலும் 6 ஆண்டுகளுக்கு நீடிக்கும்.

இது தேர்தல் ஆணையத்தின் சட்டம். அந்தச் சட்டத்தை யாரும் மீற முடியாது. இது திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் நண்பர் வீரமணி அவர்களுக்குத் தெரியாதது அல்ல.

ஜெயலலிதா அரசாங்கத்திற்குச் சொந்தமான டான்சி நிலத்தை வாங்கியது தவறு என்பது ஆதாரப்பூர்வமாக நீதிமன்றத்திலே நிரூபிக்கப்பட்டுதான் அவருக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. டான்சி நிலத்தை வாங்கும்படி அவரை

நாங்கள் யாரும் தூண்டவில்லை. அந்த நிலத்தை வாங்கவில்லை என்று அவரும் மறுக்கவில்லை. மாறாக, மதுரையிலே நடைபெற்ற அ.தி.மு.க. மாநாட்டிலே டான்சி நிலத்தை வாங்கியதாக அவரே ஒப்புக்கொண்டு பேசி அதிலே எவ்வித தவறும் இல்லை என்று கூறி அனைத்து ஏடுகளிலும் அந்தப் பேச்சு வெளிவந்துள்ளது.

இந்த டான்சி வழக்கில் அளிக்கப்பட்ட மூன்றாண்டு கால தண்டனை காரணமாக தேர்தலில் நிற்க இயலாது என்ற சட்டவிதி அனைவருக்கும் தெரிந்த நிலையிலே தான் ஜெயலலிதா கிருஷ்ணகிரியிலும், ஆண்டிப்பட்டியிலும் தனது வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார். அதற்குப் பிறகு ஏப்ரல் 24-ஆம் தேதி வேட்பு மனுக்கள் பரிசீலனை என்ற நிலையிலே அவசர அவசரமாக 23-ஆம் தேதியன்று யாருக்கும் தெரியாமல் ஜெயலலிதா தனது ஆட்களை அனுப்பி கையெழுத்தை மாத்திரம் போட்டு வேட்பு மனுக்களை புவனகிரியிலும் புதுக்கோட்டையிலும் தாக்கல் செய்ய வைத்தார். இவ்வாறு நான்கு இடங்களிலே வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யும்படி நாங்கள் யாரும் அறிவுரை வழங்கவில்லை. பொதுவாக யாரும் இரண்டு இடங்களுக்கு மேல் மனுக்கள் போட மாட்டார்கள். ஏனென்றால் தேர்தல் விதிமுறையே தெளிவாக இருக்கின்றது. அந்த விதிமுறை எல்லா தேர்தல் அதிகாரிகளுக்கும் தலைமை தேர்தல் ஆணையத்தால் அச்சியற்றப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. அந்த தேர்தல் விதிமுறை என்னவென்றால் --

"If it is found at the time of scrutiny that a candidate has been nominated from more than two constituencies of the same class of a general election or the simultaneous by-elections, his nomination paper will be rejected.

A candidate who has been nominated from more than two constituencies will also be guilty of making a false declaration that in his nomination paper which contains a categorical declaration that he has not been nominated from more than two constituencies.

(வேட்பு மனுக்கள் பரிசீலனை செய்யப்படும்போது ஒரு வேட்பாளர் பொதுத் தேர்தலிலோ இடைத் தேர்தலிலோ இரண்டு இடங்களுக்கு மேல் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தால் அவருடைய வேட்பு மனு தள்ளுபடி செய்யப்படும்.

இரண்டு இடங்களுக்கு மேல் வேட்பு மனு தாக்கல் செய்பவர், அவரது வேட்பு மனுவிலே இரண்டு இடங்களுக்கு மேல் போட்டியிடவில்லை என்ற திட்டவட்டமான உறுதிமொழிக்கு மாறாக நடந்து கொண்டார் என்ற குற்றச்சாட்டிற்கும் உரியவர் ஆவார்)

இவ்வாறு தெளிவாக சட்ட விதிகள் இருந்தும் அதை மீறி ஜெயலலிதா நான்கு இடங்களிலே மனுக்களைத் தாக்கல் செய்வதற்கு நாங்களா காரணம்? நண்பர் வீரமணி அவர்களுக்குத் தெரியாத சட்டங்களா? விதிமுறைகளா?

இப்போது நம்மீது குற்றஞ்சாட்டி தீர்மானம் போடும் வீரமணி அவர்கள் ஜெயலலிதா நான்கு இடங்களிலே வேட்பு மனு தாக்கல் செய்த போது அவ்வாறு போடக்கூடாது என ஏன் ஜெயலலிதாவுக்கு அறிவுரை வழங்கவில்லை? தேர்தலில் போட்டியிடுபவர் குறித்துச் சட்டங்களும், வேட்புமனு குறித்து விதிமுறைகளும் ஏற்கனவே இவ்வாறு அமைந்திருக்கும்பொழுது எந்த ஒரு சட்டப் பிரச்சினையையும் அலசி ஆராய்ந்து பொதுமக்களுக்கு விளக்கமளிப்பதற்காக பெரியார் திடலில் இரண்டு நாள், மூன்று நாள் தொடர் கூட்டங்கள் நடத்தக்கூடிய ஆற்றலும் அறிவுச் செறிவும் பெற்ற நண்பர் வீரமணி அவர்கள் வேண்டுமென்றே இந்தச் சட்டங்கள் எல்லாம் தனக்கு தெரியாததைப் போலவும், இந்த விதிமுறைகளையெல்லாம் அறியாதவர் போலவும் தங்களுடைய கட்சி நிர்வாகக் குழுவிலே இப்படியொரு தீர்மானத்தை நிறைவேற்றுவதுதான் விந்தையாக இருக்கிறது. ஒருவேளை ஜெயலலிதாவை திருப்திப்படுத்த இப்படியொரு தீர்மானத்தை நிறைவேற்றியிருப்பாரேயானால் அவருடைய சட்ட அறிவைப் பற்றியோ, தர்க்க வாதத் திறையைப் பற்றியோ நாம் குறை கூறாமல் அவருடைய உள் நோக்கத்தைப் புரிந்து கொண்டு அதற்கொரு சபாஷ் போட்டு விட்டு நிம்மதியாக இருந்து விடலாம்.

அப்போது தமிழகத்திலே உள்ள ஆங்கில இதழ்கள் இரண்டும் தலையங்கம் எழுதியதே! 26-4-2001 தேதியிட்ட தலையங்கத்தில் தர்ம சங்கடம் - அது தான் ஜெயலலிதா என்ற தலைப்பிலே (எக்ஸ்பிரஸ்) எழுதியதில் சில குறிப்பிட்ட பகுதிகள் வருமாறு :-

அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா நான்கு இடங்களிலே தாக்கல் செய்த வேட்பு மனுக்கள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. தேர்தல் ஆணையம் 1997-இல் பிறப்பித்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்ட இரண்டாண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்ற ஒருவர் தேர்தலிலே நிற்க முடியாது என்ற ஆணையை தேர்தல் அதிகாரிகள் கண்டிப்பாக பின்பற்றியிருக்கிறார்கள். இரண்டு தொகுதிகளுக்கு மேல் வேட்பு மனு தாக்கல் செய்யக் கூடாது என்று சட்டத்திலே இருந்த போதிலும் நான்கு தொகுதிகளிலே தனது அதிர்ஷ்டத்தை ஜெயலலிதா சோதிக்க முயற்சித்தார். பொது மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்காத ஜெயலலிதா வேட்பு மனு தள்ளுபடி செய்வதின் காரணமாக தனக்கு ஏற்படும் அனுதாப அலையை வைத்து ஆட்சிக்கு வந்து விடலாம் என்று கணக்கிட்டுள்ளார்.

இந்த ஏடு மட்டுமல்ல; மற்றொரு ஆங்கில ஏடும் (இந்து) இந்தப் பிரச்சினை பற்றி ஒரு தலையங்கம் 26-4-2001 தேதியிட்ட இதழில் எழுதியிருந்தது. அதன் முக்கிய பகுதிகள் வருமாறு :-

"எதிர்பார்த்தவாறே தேர்தலில் போட்டியிட ஜெயலலிதாவிற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. தேர்தல் கமிஷன் 1997-ஆம் ஆண்டு தகுதியின்மை குறித்து பிறப்பித்த உத்தரவை உறுதிப்படுத்திய பிறகு ஜெயலலிதாவின் தகுதியின்மை என்பது நிச்சயமாகிவிட்டது. அந்த ஆணைப்படி இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தண்டனை தள்ளி வைக்கப்பட்ட போதிலும் அவர் தேர்தலிலே போட்டியிட முடியாது என்பதாகும். மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்படி ஒரு வேட்பாளர் இரண்டு இடங்களுக்கு மேல் போட்டியிடக் கூடாது என்று தெரிவித்திருந்த போதிலும் அ.தி.மு.க. தலைவி நான்கு இடங்களில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவை தாக்கல் செய்து குழப்பமான நிலையை உருவாக்கினார். ஜெயலலிதா நான்கு இடங்களில் போட்டியிடுவதன் மூலம் தனக்கு ஏதாவதொரு இடத்தில் போட்டியிடுவதற்கான வாய்ப்பு ஏற்படாதா என்று எண்ணியிருந்தால் அது தவறான முடிவாகும் என்பதோடு அவருடைய தகுதியின்மையை உறுதி செய்வதற்கு அதுவே மற்றொரு காரணமாகவும் ஆகிவிட்டது. அரசியல் காரணமாக தான்

பாதிப்புக்கு ஆளாகி விட்டதாக தன்னைக் காட்டிக் கொள்வதின் மூலம் தேர்தலில் சில பயன்களைப் பெறலாம் என்றாலும் உண்மை என்னவென்றால் அவர் போட்டியிட தகுதி இழந்ததற்கு அவர்தான் முற்றிலும் காரணமாகும்."

எனவே வீரமணி அவர்கள் குற்றச்சாட்டியிருப்பதைப் போல ஜெயலலிதா தேர்தலிலே போட்டியிடாமல் போனதற்கு தி.மு.க.வோ அதன் கூட்டணிக் கட்சிகளோ எந்தவிதத்திலும் காரணமல்ல. ஆனால் சட்ட வல்லுநரான நண்பர் வீரமணி தி.மு.க.வும் அதன் கூட்டணிக் கட்சிகளும்தான் காரணம் என்கிறார். தலைமைத் தேர்தல் ஆணையத்தின் வெப்தளத்தில் http:i/www/eci/gov/in/faq/eleccond.htm. என்கிற முகவரியிலே வெளியிடப்பட்டுள்ள தகவலையும் பார்க்கலாம். அதிலே இரண்டு கேள்விகள் கேட்கப்பட்டு அதற்கு பதிலும் அளிக்கப்பட்டுள்ளது. அது வருமாறு :-

கேள்வி :- ஒருவர் நீதி மன்றத்தால் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டு மூன்று வருட சிறைத் தண்டனை பெற்றிருந்தால் அவர் தேர்தலில் போட்டியிட முடியுமா?

பதில் :- முடியாது. 1951-ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் எட்டாவது பிரிவின் கீழ் மூன்றாவது விதியின்படி, ஒருவர் குற்றவாளி என நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டு, அவர் இரண்டு வருடம் அல்லது அதற்குமேல் சிறைத் தண்டனை பெற்றிருந்தால், அவர் தேர்தலில் போட்டியிடும் தகுதியை இழக்கிறார்.

கேள்வி :- சிறைத் தண்டனை பெற்றவர் ஜாமீனில் வெளியில் இருந்தாலோ அல்லது அவருடைய மேல் முறையீட்டு வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தாலோ அவர் தேர்தலில் போட்டியிட முடியுமா?

பதில் :- முடியாது. தேர்தல் ஆணையத்தின் விதிகளின்படி சிறைத் தண்டனை பெற்ற நபர் ஜாமீனில் வெளியே இருந்தாலோ அல்லது அவருடைய மேல் முறையீட்டு வழக்கு நீதி மன்றத்தில் நிலுவையில் இருந்தாலும்கூட அவர் தேர்தலில் போட்டியிட முடியாது.

உடன்பிறப்பே, திராவிடர் கழகத்தின் தீர்மானம் ஜெயலலிதா அணியினர் திரையிட்டு இதுவரையில் மறைத்திட முயன்ற தெளிவான உண்மையை அதாவது நிராகரிக்கப்படும் எனத் தெரிந்தும் திட்டமிட்டு வேண்டுமென்றேதான் இரண்டுக்கு மேற்பட்ட வேட்பு மனுக்களை தாக்கல் செய்து அவர்கள் எதிர்பார்த்தவாறே அவை நிராகரிக்கப்பட்டவுடன், அய்யோ! 4 மனுக்களையும் தள்ளி விட்டார்களே, என ஒப்பாரி வைத்து ஓட்டுப் பெறும் உத்தியைக் கடைப்பிடித்து அதில் வெற்றி பெற்றதை, இப்போது திரை விலகி மக்களுக்குத் தெளிவுபடுத்தியிருக்கிறது என்பதை ஏமாந்த வாக்காளர்கள் புரிந்து கொண்டார்கள்!

அதற்காகத் திராவிடர் கழகத்தின் தீர்மானத்தை நாமும் பாராட்டலாம்!

அன்புள்ள,

மு. க.

(11-06-2001)

2605. கவர்னர் முடிவை யாரும் கேள்வி கேட்க முடியாது!

உடன்பிறப்பே,

ஆளுநரை திரும்ப அழைக்கச் சொல்லி தீர்மானம் நிறைவேற்றுவதா? ஆகா! என்னே கொடுமை இது? இதற்குப் பெயரா ஜனநாயகம்? இதற்குப் பெயரா அண்ணா வழி?

இப்படியெல்லாம் உலகதிரக் கேட்டு, ஓங்கி ஓங்கித் தலையில் அடித்துக் கொண்டு - வரிந்து கட்டியவாறு வானத்துக்கும் பூமிக்குமாகக் குதிப்பவர்களைப் பார்க்கிறோம் இப்போது!

ஆளுநர் அவர்கள் குறித்து 18.5.2001 அன்று தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

> "மாநில அரசின் நிர்வாகம் ஆளுநரிடம் ஒப்படைக்கப்பட்டு, அந்த ஆளுநருக்கு உதவவும், ஆலோசனைகள் வழங்கவும், ஒரு முதல் அமைச்சர் தலைமையில் ஒரு அமைச்சரவையை அந்த ஆளுநர் நியமித்துக் கொள்வதற்கு இந்திய அரசமைப்புச் சட்டம் வழி வகுத்துள்ளது. சட்டமன்றத்தின் ஒரு அங்கமாகவும் ஆளுநர் உள்ளார். முதல் அமைச்சராகப் பதவியில் இருந்த ஒருவர் கிரிமினல் குற்றங்கள் செய்துள்ளதற்கு அடிப்படை ஆதாரங்கள் இருப்பதாக முடிவு செய்து, அவர் மீது கிரிமினல் வழக்குத் தொடர ஆளுநர் அனுமதி அளித்து, நீதிமன்றமும் கடுங்காவல் சிறைத் தண்டனை வழங்கியிருக்கும் நிலையில் ஒரு முதலமைச்சராக இருந்தவர் சட்டங்களை மீறி வெளிநாடுகளில் சொத்துக்களைக் குவித்துள்ளதற்கு அடிப்படை ஆதாரங்கள் உள்ளதால் அவர் மீது கிரிமினல் வழக்கு தொடரச் சட்டரீதியாக அனுமதி வழங்கிய ஆளுநரே

அந்தக் குற்றவாளியையே தனக்கு ஆலோசனைகள் வழங்க முதல் அமைச்சராக நியமித்துக் கொள்கிறேன் என்று கூறுவது, அரசமைப்புச் சட்டப் பிரிவுகளுக்கு முற்றிலும் முரணான செயலாகும். அரசமைப்புச் சட்ட நோக்கங்களுக்கு எதிராகச் செயல்பட்டுள்ள தமிழக ஆளுநரின் நடவடிக்கைக்கு எங்களுடைய ஆட்சேபணையைத் தெரிவிக்கும் வண்ணம் தமிழக புதிய சட்டப்பேரவையில் ஆளுநர் உரையாற்றும்போது அதில் கலந்து கொள்வதில்லை என்று முடிவு செய்கிறோம்"

இந்தத் தீர்மானம் பற்றி செய்தியாளர்கள் ஜெயலலிதாவிடம் கேட்டபோது, அவர் கூறிய பதில் வருமாறு :-

"கவர்னர் முடிவை யாரும் கேள்வி கேட்க முடியாது. தி.மு.க.வினர் ஜனநாயகக் கடமையை செய்யத் தவறுவது வருந்தத்தக்கது."

இப்படிச் சொன்ன ஜெயலலிதாவின் கட்சியினர், தி.மு.க. ஆட்சியின்போது கவர்னரை உரையாற்ற விடாமல் கறுப்புக்கொடியை அவைக்குள்ளேயே காட்டினார்கள். கழக அரசு ராஜினாமா செய்ய வேண்டுமென்று அவைக்குள்ளேயே "பதாகை" பிடித்தனர். இப்படி புதிய விதமாக ஜனநாயகக் கடமையை (?) செய்தவர்களை அன்றைய பேரவைத் தலைவர் (பி.டி.ஆர்.) அவர்கள் மன்னித்து விட்டார்.

ஆனால் இன்று கவர்னர் உரையாற்றும்போது கலந்து கொள்வதில்லையென ஜனநாயக முறையில் முடிவெடுத்த கழகத்தின்மீது காய்ந்து விழுவோர் - பாய்ந்து பிராண்டுவோர் - கவர்னரைத் திரும்பப் பெற வேண்டுமென்று தீர்மானம் போட்டது தி.மு.க., பாரதிய ஜனதா கட்சிகளின் வன்மத்தையும், ஜனநாயக விரோதப் போக்கையும் காட்டுகிறது எனக் கனல் கக்குவோர் - கழகத்தின்மீது சீறிப்பாய்வதைச் சற்று நிறுத்திக் கொண்டு; 1995ஆம் ஆண்டு ஏப்ரல் 26-ஆம் நாள் சட்டப் பேரவை நிகழ்ச்சியை "பிளாஷ்பேக்" காட்சியாகக் காண வேண்டுமென விரும்பி அழைக்கிறேன்.

சட்டப்பேரவையில் கவர்னரை விமர்சித்து எதுவும் பேசக்கூடாது. அப்படிப் பேசினால் அது அவைக்குறிப்பில் ஏறாது. இப்படியொரு விதி இருக்கிறது.

ஆனால் இந்த விதியையே நான் குறிப்பிட்டுள்ள அந்த நாளில் நிறுத்தி வைத்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு - அதைத் தொடர்ந்து பின்வரும் தீர்மானத்தை ஜெயலலிதா அரசு கொண்டு வந்து நிறைவேற்றுகிறது. அது என்ன தீர்மானம்?

"கவர்னர் சென்னா ரெட்டி அவர்களை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டுமென்று மத்திய அரசை இப்பேரவை கோருகிறது"

ஆமாம், உடன்பிறப்பே, இது சட்டமன்றக் கட்சிக் கூட்டத் தீர்மானமோ அல்லது பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமோ அல்ல!

சட்டமன்றப் பேரவை கூட்டப்பெற்று அதிலே அவை முன்னவர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களால் முன்மொழியப் பெற்று அன்றும் முதலமைச்சராக இருந்த ஜெயலலிதாவின் வழிமொழிதலுடன் கவர்னரை திரும்பப் பெறுக எனக் கோரும் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானம் நிறைவேறியதைத் தொடர்ந்து பேரவைத் தலைவர் அவர்கள், "இத்தீர்மானத்திற்கு உரிய வகையில் அரசு நடவடிக்கை எடுக்கக் காலதாமதம் செய்தால் தமிழகத்தில் ஒட்டுமொத்தக் கொந்தளிப்புக்கு ஆளாக நேரிடும்" என்று எச்சரித்தார்.

அப்போது மத்தியில் நரசிம்மராவ் அவர்களின் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த (?) தீர்மானத்தின் மீது முதலமைச்சர் ஜெயலலிதா பேசியது வருமாறு :-

"இதுவரை ஆளுநர் சம்மந்தப்பட்ட சில கசப்பான உண்மைகளை வெளியிடக் கூடாது, வெளியிடுவது மரபல்ல என்பதற்காகத்தான் நான் பேசாமல் இருந்தேன். மேதகு ஆளுநர் டாக்டர் சென்னா ரெட்டி அவர்கள் இங்கே தமிழகத்திற்கு நியமிக்கப்பட்ட புதிதில் அடிக்கடி சென்று அவரை நான் சந்தித்துக் கொண்டு தான் இருந்தேன். பல சந்தர்ப்பங்களில் நான் ராஜ்பவனத்திற்குச் சென்று அவரைச் சந்தித்திருக்கிறேன். ஆனால், 1993 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நான் ராஜ் பவனத்திற்குச் சென்ற போது அவர் என்னிடம் தவறான முறையிலே

நடந்து கொண்டார். தகாத வார்த்தைகளைப் பேசினார். என்னை அவமானப்படுத்தினார். எந்த ஆளுநரும் இப்படி நடந்து கொண்டிருக்க முடியாது. இந்திய வரலாற்றிலேயே இதையெல்லாம் வெளியே சொன்னால் நன்றாக இருக்காது என்பதற்காக இத்தனை நாட்கள் நான் வாளா இருந்தேன். ஆனால் இன்றைக்கு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இதைச் சொல்ல வேண்டிய ஒரு கட்டாயத்தை இங்கே ஏற்படுத்தி விட்டார். இதுதான் காரணம்.

ஒரு முதலமைச்சருக்கும் ஒரு ஆளுநருக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் எப்படி நடைபெற வேண்டும் என்பதற்குச் சில வரைமுறைகள் இருக்கின்றன. எத்தகைய வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும். என்று சில வரைமுறைகள் இருக்கின்றன. At any time an exchange between a Governor and a Chief Minister has to be conducted with decorum, decency and dignity. இவற்றையெல்லாம் மறந்து காற்றிலே பறக்க விட்டு தகாத வார்த்தைகளால் ஆளுநர் என்னை ஏசினார். என்னை அவமதித்தார். அதனால் தான் இத்தனை நாட்கள் ஆளுநர் பதவிக்கு - சென்னா ரெட்டி அல்ல - ஆளுநரின் பதவிக்கு ஒரு கண்ணியக் குறைவோ, ஒரு களங்கமோ ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக இதைப் பற்றி நான் பேசாமல் இருந்தேன்."

உடன்பிறப்பே, ஜெயலலிதாவின் இந்தப் புகார் குறித்து 1-5-1995 தேதிய துக்ளக் இதழில் திரு சோ அவர்கள் எழுதிய கருத்து நினைவிற் கொள்ளத்தக்கது.

கவர்னரைப் பற்றி சட்டசபையில் தமிழக முதல்வர் கூறியுள்ள குற்றச்சாட்டு இந்த ஆட்சியின் தரம் எந்த அளவிற்கு தாழ்ந்துவிட்டது என்பதைத்தான் காட்டுகிறது. கவர்னரை திரும்ப அழைக்குமாறு சட்டசபையில் அரசியல் சட்டத்துக்கு விரோதமாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இந்த ஆட்சியின் ஆணவத்தைக் காட்டுகிறது. முதல்வரின் தரம் தாழ்ந்த பேச்சும், சட்டசபையின் முறைகேடான தீர்மானமும் இந்த மாநிலத்திற்கே தலை குனிவு

நண்பர் சோ அன்றைக்கு எழுதியதுபோல அத்தனை கடுமையான சொற்களைப் பயன்படுத்தி இப்போது நான் எழுத விரும்பவில்லை.

கவர்னர் முடிவை கேள்வி கேட்க முடியாது என்று கர்ச்சனை செய்யும் ஜெயலலிதா அன்றைக்கு கவர்னரையே திரும்ப அழைக்கச் சொல்லும் தீர்மானத்தைச் சட்டப்பேரவையிலேயே நிறைவேற்றியவர் என்பதை மறந்து விட முடியுமா?

அந்தத் தீர்மானம் அன்றைக்கு தேவைப்பட்டதற்கு என்ன காரணம்?

இரண்டு வழக்குகளை முதல்வர் ஜெயலலிதா மீது தொடர்வதற்கு 1995 ஏப்ரல் 1ந் தேதியன்று சுப்பிரமணியம் சுவாமி அவர்களுக்கு ஆளுநர் சென்னா ரெட்டி அனுமதி அளித்துவிட்டார் என்பதுதான் - ஏப்ரல் 26ந் தேதி தீப்பொறி பறக்கும் இந்தத் தீர்மானம் வருவதற்கான காரணம் என்பதை யாரே அறியாதார்?

கவர்னர் முடிவை கேள்வி கேட்க முடியாது என இப்போது கூறும் ஜெயலலிதா அன்றைக்குக் கவர்னர் முடிவை எதிர்த்து உச்சநீதிமன்றம் வரை சென்று வழக்காடித் தோற்றார் என்பதும் கடந்த கால சரித்திரம்!

அன்புள்ள,

மு. க.

(12-06-2001)

2606. காணுங்கள்! கடந்த கால முன்மாதிரிகளை!

உடன்பிறப்பே,

தமிழகத்தின் முதலமைச்சராக ஜெயலலிதா பதவியேற்று ஒரு திங்கள் முடிவடையப் போகின்றது. நான்கு தொகுதிகளிலே வேட்பு மனு தாக்கல் செய்ததால் அவர் சட்டமன்ற உறுப்பினராகவே போட்டியிட தகுதியற்றவர் என்ற சட்டப்படி அவரது வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது. அவர் மீது தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர் என்ற அடிப்படையிலும் அவரது வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது. இந்த நிலையில் அவரது கட்சி சட்டமன்ற உறுப்பினர்களால் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டவர் என்பதைக் காரணமாகக் கூறி தமிழக ஆளுநர் அவருக்கு பதவிப் பிராமணம் செய்து வைத்து, இந்த ஒரு மாத காலமாக அவர் தமிழகத்தின் தலையெழுத்தை நிர்ணயிக்கும் பல கோப்புகளிலே கையெழுத்திட்டு வருகிறார். அவர் தண்டிக்கப்பட்ட வழக்கு இனிதான் உயர்நீதிமன்றத்திலே மேல்முறையீட்டின் அடிப்படையிலே விசாரிக்கப்படவுள்ளது. நீதிமன்றத்திலே ஜெயலலிதாவின் மேல் முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டு விடுமேயானால் அவர் மீதுள்ள தண்டனை உறுதி செய்யப்பட்டுவிடும். அந்த நிலையிலே அவர் தற்போது கையெழுத்திட்டு முடிவெடுக்கப்பட்டுள்ள கோப்புகளின் கதி என்ன ஆகும்?

தண்டிக்கப்பட்ட ஒரு குற்றவாளி முதலமைச்சராகவே பதவி வகிக்கலாம் என்று கூறி தற்போது பதவி வகித்து வரும் ஜெயலலிதா கடந்த காலத்திலே கூறியதென்ன என்பதை ஒருமுறை நினைவு படுத்திக் கொள்வது நல்லது.

ஜெயலலிதா ஆட்சியிலே பேரவைத்தலைவராக இருந்த திரு. சேடப்பட்டி முத்தையா மீது வருமானத்திற்கு மேல் சொத்து

சேர்த்த வழக்கு ஒன்று சிறப்பு நீதிமன்றத்திலே தொடுக்கப்பட்டது. மத்திய அரசிலே 1998ஆம் ஆண்டு அமைச்சராக நியமிக்கப்பட்ட சேடப்பட்டி முத்தையா அந்த வழக்கிலிருந்து தன்னை விடுவிக்க வேண்டுமென்று சிறப்பு நீதிமன்றத்திலே மனுத் தாக்கல் செய்தார். கொடுக்கப்பட்ட புகாரிலே அடிப்படை ஆதாரம் உள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது என்று கூறி நீதிபதி சேடப்பட்டி முத்தையாவின் மனுவைத் தள்ளுபடி செய்து குற்றச்சாட்டை பதிவுதான் செய்தார். விசாரித்து தண்டனை கூட வழங்கப்படாத நிலையில் அப்போது ஜெயலலிதா செய்தது என்ன தெரியுமா?

நீதிபதியின் முடிவிற்குப் பிறகு சேடப்பட்டி முத்தையா மத்திய அமைச்சர் பதவியை ராஜினாமா செய்யமாட்டேன் என்று 7-4-1998 அன்று பகல் திட்டவட்டமாக தெரிவித்த பிறகும் அன்றிரவே ஜெயலலிதா, பெரியகுளத்திற்கு மதுரை மகால் எக்ஸ்பிரஸ் ரயிலில் சென்று கொண்டிருந்த சேடப்பட்டியை ரயிலை விட்டு இறங்கி தொலைபேசியில் தன்னுடன் தொடர்பு கொள்ளுமாறு கூறி அவருடன் பேசி விட்டு, ஜெயலலிதா பத்திரிகைகளுக்கு கொடுத்த அறிக்கையிலே தான் அவரைப் பதவி விலகும்படி அறிவுறுத்தியதாக தெரிவித்து அது அனைத்து ஏடுகளிலும் அப்போது வெளி வந்தது.

ஆனால் அண்மையில் சட்டமன்றத்தில் கழக உறுப்பினர் பொன்முடி, திரு சேடப்பட்டி மீது குற்றம் பதிவு செய்யப்பட்ட நிலையிலேயே பதவி விலகச் சொன்னீர்களே என்று கேட்டபோது, ஜெயலலிதா குறுக்கிட்டு சேடப்பட்டி முத்தையாவை பதவி விலகும்படி சொன்னது நான் அல்ல என்றும் பிரதமர் வாஜ்பாய்தான் என்றும் முன்னுக்குப் பின் முரணாகப் பதில் அளித்தார்.

ஜெயலலிதா அப்போது சேடப்பட்டி முத்தையாவை பதவி விலகும்படி சொன்னதோடு மாத்திரமல்ல, 15-4-1998 அன்று சென்னையிலே நடைபெற்ற அ.தி.மு.க. செயற்குழு கூட்டத்திற்குப் பிறகு செய்தியாளர்களைச் சந்தித்த போது ஊழல் உள்ளிட்டவை தொடர்பாகக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டவர்களோ, அன்னியச் செலாவணி மோசடி வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களோ மத்திய அமைச்சரவையில் இடம் பெற்றிருந்தால் அவர்கள் பதவி விலக வேண்டும். இல்லாவிட்டால் அவர்களை பிரதமர் அமைச்சரவையிலிருந்து

நீக்க வேண்டும். இந்தக் கருத்தை வலியுறுத்தி பிரதமருக்கு கடிதம் எழுதுவேன் என்றும் தெரிவித்தார்.

ஜெயலலிதாவின் இந்தக் கருத்தை காங்கிரஸ் கட்சி ஆதரித்ததோடு, ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்கள் பதவி விலகுவது காலம் காலமாக பின்பற்றப்பட்டு வரும் மரபு என்று அந்தக் கட்சியின் மூத்த தலைவர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.

அதையொட்டி 20-4-1998 அன்று ஒரு நடுநிலை இதழ் (தினமணி) தனது தலையங்கத்தில், குற்றச்சாட்டுக்கு ஆளானவர்கள் அமைச்சர்களாக நீடிக்கக் கூடாது என்பதால் சேடப்பட்டியை விலகச் செய்து, அதே கோரிக்கையை மத்திய அமைச்சர்கள் மீதும் வலியுறுத்தும் ஜெயலலிதா, தன்மீது எண்ணற்ற வழக்குகளும் ஒரு வழக்கில் தண்டனையும் விதிக்கப்பட்ட நிலையில் எப்படி முதல்வர் பதவியை ஏற்க முடியும்" என்று எழுதியிருந்தது.

ஜெயலலிதாவின் வலியுறுத்தல் காரணமாக பிரதமர் வாஜ்பாய் மத்திய அமைச்சராக இருந்த பூட்டாசிங் அவர்களை அமைச்சர் பதவியிலிருந்து விலக்கினார். குற்றச்சாட்டு பதிவான எவருக்கும் தனது அமைச்சரவையிலே இடம் கிடையாது என்று பிரதமர் வாஜ்பாய் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த அளவிற்கு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டாலே அமைச்சர் பதவியிலே இருக்கக்கூடாது என்று தனது கட்சியைச் சேர்ந்த ஒருவரும் மத்தியிலே அமைச்சர்களாக இருந்தவர்களும் பதவி விலகக் காரணமாக இருந்த ஜெயலலிதா மீது கொடைக்கானல் ப்ளசண்ட் ஸ்டே ஓட்டலுக்கு அனுமதி வழங்கியது தொடர்பான வழக்கிலே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு சாட்சியங்கள் எல்லாம் முடிவுற்று இறுதியாக ஓராண்டுக் காலம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அதைப் போலவே டான்சி நில ஊழல் வழக்கிலே மூன்றாண்டுக் காலம் ஜெயலலிதாவிற்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தாலே பதவியிலிருந்து விலக்க வேண்டும் என்று வலியுறுத்திய - வாதிட்ட ஜெயலலிதா தற்போது அவசர அவசரமாக ஆளுநர் மூலமாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டு பதவியிலே நீடிப்பது என்ன நியாயம்?

இதையும்கூட நியாயப்படுத்தி, கவர்னர் அவர்கள் ஜெயலலிதாவுக்கு செய்து வைத்த பதவிப் பிரமாணம் சரியானதே எனப் பாராட்டும் உரிமை ஜெயலலிதாவோடு தோழமை கொண்ட காரணத்தினால் கம்யூனிஸ்டுகளுக்கு உண்டு எனினும், தி.மு.க. கூட்டணியினர் இந்தக் கவர்னர் உரையை புறக்கணித்தது கண்டிக்கத்தக்கது என்று கூறிட என்ன உரிமை இருக்கிறதோ தெரியவில்லை.

கவர்னரைக் கேள்வி கேட்க யாராலும் முடியாது என்று ஜெயலலிதா விடுத்த அறைகூவலை மௌனமாக ரசித்துக் கொண்டிருக்கும் கம்யூனிஸ்டுகள் 1952ஆம் ஆண்டினை சற்றுத் திரும்பிப் பார்க்கட்டும்!

இந்தியா சுதந்திரம் அடைந்த பின் முதலாவது பொதுத்தேர்தல் 1952 பிப்ரவரியில் நடைபெற்றது. அதற்கு முன் வெள்ளையர் ஆட்சியின் போது நடைபெற்ற தேர்தல்களில் வருமான வரி கட்டுபவர்கள், வீட்டு வரி செலுத்துபவர்கள் போன்ற பணக்கார வர்க்கத்துக்குத்தான் வாக்குரிமை இருந்தது. 21 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வாக்குரிமை கிடைத்தது 1952 தேர்தலிலேதான். அந்தத் தேர்தலில் சென்னை மாகாணத்தில் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையில் எதிர்க்கட்சிகள் ஐக்கிய முன்னணி அமைத்து, காங்கிரசை எதிர்த்தன. தேர்தலில் மக்கள் முன் வைக்கப்பட்ட முக்கிய பிரச்சினை ரேஷன்தான். 6 அவுன்ஸ் அரிசி கொடுக்கும் ஆட்சி உங்களுக்கு வேண்டுமா? என்று எதிர்க்கட்சிகள் கேட்டன. மாட்டுப் பெட்டியில் ஓட்டுப் போடாதீர், மண்ணைப் போடுங்கள் என்றார் தந்தை பெரியார். ஐக்கிய முன்னணியை தி.மு.க.வும் ஆதரித்துப் பிரச்சாரம் செய்ததுடன் பல வேட்பாளர்களின் வெற்றிக்காக தேர்தல் பணியும் ஆற்றியது. இப்போது இருப்பது போல தேர்தல் இயந்திரங்களோ. ஓட்டுச் சீட்டில் வேட்பாளர்களின் சின்னங்களை அச்சிடும் முறையோ அப்போது இல்லை. எத்தனை வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்களோ அத்தனை ஓட்டுப் பெட்டிகள் மறைவான இடத்தில் வைக்கப்பட்டிருக்கும். வேட்பாளர்களின் சின்னங்கள் அந்தப் பெட்டியில் ஒட்டப்பட்டிருக்கும். ஓட்டுச் சீட்டை விருப்பமான பெட்டியிலே போட வேண்டும். இந்த முறையினால் ஓட்டுச் சீட்டுகளை ரகசியமாக வெளியே கொண்டு வரவும், அவைகளை ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் பணம் கொடுத்து வாங்கி மொத்தமாகக் கொண்டு போய் பெட்டியிலே போடவும் வழி இருந்தது.

அப்போது சென்னை மாகாணத்தில் மொத்தம் 375 தொகுதிகள். அதில் 360 தொகுதிகளில் காங்கிரஸ் போட்டியிட்டது. தேர்தலில் காங்கிரஸ் பெரும் தோல்வியைத் தழுவியது. முதல் அமைச்சர் குமாரசாமி ராஜாவும், பக்தவத்சலம், கோபால் ரெட்டி, சஞ்சீவ ரெட்டி உட்பட மூத்த அமைச்சர்களும் தோல்வியடைந்தனர். இரண்டு அமைச்சர்கள் மட்டுமே வெற்றி பெற்றனர். 375 தொகுதிகளில் காங்கிரசுக்கு 150 இடங்கள் மட்டுமே கிடைத்தன. காங்கிரசுக்கு பெரும்பான்மை கிடைக்காததால்; ஐக்கிய முன்னணி கட்சி அமைச்சரவை அமைக்க முயற்சி மேற்கொண்டது. காங்கிரஸ் அல்லாத கட்சிகளும் சுயேச்சைகளும் மொத்தம் 223 இடங்களைப் பிடித்திருந்தனர். கம்யூனிஸ்ட் கட்சி 61, மக்கள் கட்சி 35, உழைப்பாளர் கட்சி 19, ரங்கா கட்சி 15, சோசலிஸ்ட் 13, பொது நலக் கட்சி 9, முஸ்லிம் லீக் 5, பார்வார்டு பிளாக் 3, இதரக் கட்சிகள் 3, சுயேச்சைகள் 60 பேர் எதிரணியிலே வெற்றி பெற்று ஆட்சி அமைக்க ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தனர்.

இந்த நெருக்கடியான நேரத்தில் மூதறிஞர் ராஜாஜி அவர்களே முதல் அமைச்சர் பொறுப்பையேற்று காங்கிரஸ் அமைச்சரவை அமைக்க வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியின் மேலிடத் தலைவர்கள் விரும்பினர். ராஜாஜியை பெருந்தலைவர் காமராஜரே நேரில் சந்தித்து முதல்வர் பொறுப்பையேற்குமாறு கேட்டுக் கொண்டார். கவர்னர் ஜெனரல் பதவியிலிருந்து ஓய்வு பெற்றிருந்த ராஜாஜிக்கு முதல் மந்திரியாவதில் அவ்வளவு விருப்பமில்லாவிடினும் எல்லோரும் கேட்கவே இறுதியில் இணங்கினார். மாணிக்கவேலரின் பொது நல (காமன் வீல்) கட்சி சார்பில் 9 பேர் வெற்றி பெற்றிருந்தார்கள். மாணிக்கவேலருக்கு வருவாய்த் துறை அமைச்சர் பதவியை அளித்து அந்தக் கட்சியை காங்கிரசுடன் ராஜாஜி இணைத்துக் கொண்டார்.

ஆனால் தேர்தலில் நின்று சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்படாத ராஜாஜி முதல் மந்திரி ஆகலாமா என்ற கேள்வி எழுந்தது. ஏதாவதொரு தொகுதியில் சட்டப்பேரவைக்கு ராஜாஜி நின்று வெற்றி பெறலாம் என்று காமராஜர் எண்ணினார். ஆனால் ராஜாஜி தேர்தலிலே போட்டியிட விரும்பவில்லை. கவர்னர் ஜெனரலாக இருந்துவிட்டு சட்டப் பேரவை தேர்தலில் ஒரு தொகுதியிலே சென்று வாக்குகளைக் கேட்பது சரியாக

இருக்காதென்று அவர் நினைத்தார். அப்போதுதான் சென்னை மாகாணத்துக்கு மத்திய அரசினால் ஆளுநராக ஸ்ரீ பிரகாசா நியமிக்கப்பட்டார். அவர் ராஜாஜியை மேல் சபை உறுப்பினராக நியமித்து, 1952ஆம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் தேதி முதல் அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

அப்போதுதான் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர்களில் ஒருவரான தோழர் பி. ராமமூர்த்தி அவர்கள், காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவளிக்கும் நோக்கத்துடன் சென்னை கவர்னர் நடந்து கொண்டுள்ளார். அரசியலிலிருந்து விலகிய ராஜாஜி அவர்களை காங்கிரஸ் மேலிடத்திற்குக் கட்டுப்பட்டு திடீரென சட்டமன்ற மேலவை உறுப்பினராக நியமனம் செய்ததின் நோக்கம் இதுதான் என்று கூறி சென்னை உயர்நீதி மன்றத்திலே வழக்குத் தொடுத்தார்.

இந்தச் சம்பவம் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களுக்கு இப்போது மறந்திருக்கக் கூடும். இப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட ராஜாஜி முதல்வராக இருந்து அவையிலே முதன் முதலாக ஆளுநர் பிரகாசா உரையாற்ற வந்தபோது நடைபெற்ற நிகழ்ச்சியை - எழுந்த எதிர்ப்பை விவரித்து அண்ணா அவர்கள் 11-5-1952 தேதியிட்ட திராவிட நாடு இதழிலே நரி பரியாகும் படலம் என்ற தலைப்பிலே எழுதியிருந்ததைப் படித்துப் பார்த்தாலே சட்ட விரோதமான செயல்களுக்கு ஒரு ஆளுநர் துணை போவது ஜனநாயக விரோதம் என்பதையும், அத்தகைய ஆளுநர் உரை நிகழ்த்தும் போது கலந்து கொள்ளாமல் இருப்பது தவறல்ல என்பதையும் புரிந்து கொள்ள முடியும். கம்யூனிஸ்டுகள் தலைமையிலான ஐக்கிய முன்னணிக் கட்சி 1952இல் கவர்னருக்கெதிராக காட்டிய எதிர்ப்பு கண்டன முழக்கம்! வெளி நடப்பு!

நாம் இப்போது வெளி நடப்புச் செய்யவில்லை, கண்டன முழக்கமிடவில்லை கவர்னர் உரையின்போது! கலந்து கொள்ளாமலே இருந்து விட்டோம். இவற்றுக்கெல்லாம் கடந்த கால முன்மாதிரிகள் உண்டு என்பதற்காகவே இந்தப் பழைய செய்திகளையும் தொகுத்தளித்துள்ளேன்.

அன்புள்ள,

மு. க.,

(13-06-2001)

2607. காவிரிப் பிரச்சினையும் கர்நாடகத்தின் பொறுப்பும்!

உடன்பிறப்பே,

கழக அரசு எடுத்த முயற்சிகள் காரணமாக அமைக்கப்பட்ட காவிரி நதி நீர் கண்காணிப்புக் குழு கூட்டம் கடந்த வாரம் டெல்லியில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட முடிவினை முக்கியத்துவம் வாய்ந்தது என்றும், இதனை ஒரு இதமான திருப்பம் என்றே கூறலாம் என்றும் கடுமையான மோதலைத் தவிர்க்கக் கூடியதென்றும் நடுநிலை தமிழ் நாளிதழ் ஒன்று (தினமணி) நேற்று தலையங்கம் எழுதியுள்ளது. மேலும் அந்தத் தலையங்கத்தில்,

இக்கூட்டத்தில் இரண்டு முக்கிய அம்சங்கள் எடுப்பாகத் தென்பட்டன. முதலில் குழுவின் விவாதங்கள் சுமுகமாக, நட்புறவுச் சூழலில் நடைபெற்றன. அடுத்து, காவிரி நடுவர் மன்ற முடிவுக்கு முழு அளவில் கட்டுப்படத் தயாராக இருப்பதாக கர்நாடகப் பிரதிநிதி அளித்த உறுதிமொழி மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. இதை ஓர் இதமான திருப்பம் என்றே கூறலாம். இது கடுமையான மோதலைத் தவிர்க்கக் கூடியதும்கூட. இன்னும் சொல்வதென்றால், ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன், நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பு ஒரு புறமிருக்கட்டும். நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பையே ஏற்பதா இல்லையா என்பதைக் கர்நாடகம் தீர்மானிக்கத் தயங்காது என்று வீராவேசமாகக் கருத்துத் தெரிவித்த முன்னாள் முதல்வர்களும் கர்நாடகத்தில் இருந்திருக்கிறார்கள். அப்படியிருக்க, நடுவர் மன்ற தீர்ப்பு எப்படியிருப்பினும் அதற்கு கர்நாடகம் கட்டுப்படும் என்று ஆக்கபூர்வமான பார்வையே இப்பிரச்சினையில் சுமுகத் தீர்வுக்கு வழி வகுக்கக் கூடியது என்று எழுதியுள்ளது.

காவிரிப் பிரச்சினைக்கு இன்றைய வயது 32. 1968இல் அண்ணா முதல்வராக இருந்த போது ஆரம்பித்த பிரச்சினை

இடையிலே ஆட்சிகள் மாறி மாறி வந்த போதிலும், தொடர்ந்து கொண்டேயுள்ளது.

இந்தப் பிரச்சினை குறித்து தீர்வு காண முப்பது முறைக்கு மேல் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டும், எந்த முடிவும் ஏற்படாததால் 17-2-1970 அன்று தி.மு.கழக ஆட்சியிலே முதன் முதலாக மத்திய அரசுக்கு காவிரிப் பிரச்சினையில் நடுவர் மன்றம் ஒன்று அமைக்க வேண்டுமென்று கடிதம் எழுதப்பட்டது.

8-7-1971 அன்று நடுவர் மன்றம் அமைத்திட வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்தி தமிழகச் சட்டப் பேரவையிலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது - அதுவும் கழக ஆட்சியிலேதான்.

திரு. வி.பி. சிங் மத்தியிலே பிரதமராக இருந்த போதும் மீண்டும் தமிழகச் சட்டப் பேரவையில் 24-4-1990 அன்று இனியும் எங்களால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. எனவே ஒரு நடுவர் மன்றத்தை நியமித்து அதன் தீர்ப்பை வழங்கச் செய்யுங்கள் என்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைத்தோம்.

இதனை பிரதமர் வி.பி. சிங் மத்திய அரசின் வழக்கறிஞர் மூலமாக, உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்ததையடுத்து உச்ச நீதிமன்றம் நடுவர் மன்றத்தை அமைக்க உத்தரவிட்டது. நடுவர் மன்றமே வராது, வர விட மாட்டோம், தடுப்போம் என்றெல்லாம் சொன்ன நிலையை மாற்றி நடுவர் மன்றத்தைக் கொண்டு வந்ததே தி.மு.கழக ஆட்சிதான்.

28-7-1990 அன்று தி.மு.கழக ஆட்சியின்போது நடுவர் மன்றத்தை அணுகி, முழுமையாக விசாரித்து முடிவு தெரிவிக்க ஏழெட்டு ஆண்டுகளாகும், எனவே அதுவரை காவிரியில் தமிழகத்திற்கு எவ்வளவு தண்ணீர் விடலாம் என்பதற்கு ஒரு இடைக்காலத் தீர்ப்பு வழங்குங்கள் என்று கேட்டுக் கொண்டோம். நடுவர் மன்றம் 5-1-1991 அன்று இடைக்காலத் தீர்ப்பு வழங்க எங்களுக்கு அதிகாரமில்லை என்று கூறிவிட்டது. இடைக் காலத் தீர்ப்பு வழங்க அதிகாரம் உண்டா இல்லையா என்பது குறித்து தி.மு.கழக ஆட்சியில் வழக்கு போட்டு, 26-4-1991 அன்று உச்ச நீதி மன்றம் இடைக்காலத் தீர்ப்பு வழங்க நடுவர் மன்றத்திற்கு அதிகாரம் உண்டு என்று தீர்ப்பளித்தது.

இதன்படி நடுவர் மன்றம் 25-6-1991இல் ஆண்டு ஒன்றுக்கு 205 டி.எம்.சி. தண்ணீரை கர்நாடகம் தன்னுடைய நீர்த்தேக்கத்திலிருந்து தமிழ்நாட்டுக்கு விட வேண்டுமென்றும், எந்தெந்த மாதத்தில் எவ்வளவு அளவிற்கு நீரை விட வேண்டுமென்றும் இடைக்கால ஆணை ஒன்றை வழங்கியது. இந்த இடைக்காலத் தீர்ப்பு வந்த பிறகு அதனை நிறைவேற்ற முடியாது, நடைமுறைப்படுத்த முடியாது என்று கர்நாடகம் கண்டிப்பாகச் சொன்ன பிறகு, 8-7-1991 அன்று ஜெயலலிதா அரசு நடுவர் மன்றத்தின் ஆணை முற்றிலும் மதிக்கப்பட வேண்டும் என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. தீர்மானம் நிறைவேற்றிய போதிலும் கர்நாடக அரசு அடுத்த ஏழாண்டு காலம் அந்தக் கோரிக்கையை ஏற்கவில்லை.

1998ஆம் ஆண்டு 7.8.1998 அன்று மீண்டும் தி.மு.கழக ஆட்சியிலேதான் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் முன்னிலையில் டெல்லியில் 9 மணி நேரம் பேச்சுவார்த்தை நடைபெற்று, மத்திய அமைச்சர்களும் நான்கு மாநில முதல்வர்களும் கலந்து பேசி அதன் பின்னர்தான் இதமான திருப்பம் என்று கூறக்கூடிய ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது. அந்தப் பேச்சு வார்த்தையின் போதுதான் கர்நாடக அரசு நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை ஏற்றுக் கொள்வதாக முதன்முதலாகத் தெரிவித்தது. அதன் தொடர்பாக அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு :-

1. There shall be a scheme for giving effect to the Interim Orders of the Tribunal and all related subsequent orders. As per the Interim Orders, 205 TMC of water will be delivered at Mettur.

(நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையையும் அதன் தொடர்பான ஆணைகளையும் நிறைவேற்ற ஒரு திட்டம் அமையும். இடைக்கால ஆணைப்படி மேட்டூரில் 205 டி.எம்.சி. தண்ணீர் வழங்கப்படும்.)

2. Under this scheme there shall be an Authority which will comprise of the Prime Minister and the Chief Ministers of the States concerned.

(இத்திட்டத்தின்படி பிரதமரையும் சம்பந்தப்பட்ட மாநில முதலமைச்சர்களையும் கொண்ட ஒரு ஆணையம் அமையும்.)

3. The Authority shall frame rules and regulations for the conduct of its business.

(ஆணையத்தின் விதிமுறைகள் நடவடிக்கைகள் குறித்து அதுவே முடிவு செய்யும்.)

4. Under this Authority there shall be a Monitoring Committee consisting of designated officers of the State concerned and the Central Government.

(இந்த ஆணையத்தின் கீழ் மத்திய மற்றும் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் அதிகாரிகளைக் கொண்ட கண்காணிப்புக் குழு ஒன்று அமையும்.)

காவிரி நதிநீர் ஆணையம் (Cauvery Authority) 11-8-1998 அன்று அமைக்கப்பட்டது. அந்த ஆணையத்துக்கு பிரதமர் தலைவராகவும், கர்நாடகா, தமிழ்நாடு, கேரளா மற்றும் புதுவை மாநில முதல் அமைச்சர்கள் உறுப்பினர்களாகவும் செயல்படுவார்கள். மத்திய நீர் ஆதார அமைச்சகத்தின் செயலாளர் இந்த ஆணையத்தின் செயலராகச் செயல்படுவார். இந்த ஆணையம் எப்பொழுதெல்லாம் அவசியமாகிறதோ அப்போதெல்லாம் கூடும். இந்த ஆணையத்தின் கீழே ஒரு கண்காணிப்புக் குழு (Monitoring Committee) இயங்கும். இந்தக் கண்காணிப்புக்குழுவின் செயல்பாடுகள் வருமாறு :-

1. The role of the Monitoring Committee will be to render assistance to the Authority to enable it to take decisions on issues under consideration (பரிசீலனைக்குரிய பிரச்சினைகளில் ஆணையம் ஒரு முடிவு எடுப்பதற்கு வகை செய்யும் வகையில் கண்காணிப்புக்குழு உதவி செய்யும்)

2. The Monitoring Committee shall assist the Authority in collecting information and data. (தகவல்களையும், புள்ளி விபரங்களையும் திரட்டுவதற்கு காவிரி ஆணையத்திற்கு கண்காணிப்புக் குழு உதவி செய்யும்)

3. The Monitoring Committee shall assist the Authority in Monitoring the implementation of the decisions of the Authority. In case, any difficulty arises in implementation, the Monitoring Committee shall report the position to the Authority (ஆணையத்தின் முடிவுகளை அமல்படுத்துவதைக் கண்காணிப்பதில் ஆணையத்திற்கு

கண்காணிப்புக் குழு உதவி செய்யும். அவ்வாறு அமல்படுத்துவதில் ஏதேனும் சிக்கல் ஏற்பட்டால் நிலைமையை கண்காணிப்புக் குழு ஆணையத்திற்கு தெரிவிக்கும்)

4. The Monitoring Committee shall assist the Authority in setting up a well designed hydra meteorological network in the Cauvery basin along with a modern communication system for transmission of data and a computer based control room for data processing to determine the hydrological condition. (காவிரிப் படுகையில் தண்ணீர் வானிலை நெட் ஒர்க் ஒன்றை தகவல்களை பரிமாறிக் கொள்வதற்காக நவீன தகவல் சாதனத்துடன் அமைக்கவும், தண்ணீர் நிலவரம் குறித்து முடிவு செய்ய தகவல்களை பரிசீலனை செய்யும் வகையில் கம்ப்யூட்டர் அடிப்படையிலான கட்டுப்பாட்டு அறை ஒன்றை அமைப்பதற்கும் கண்காணிப்புக் குழு ஆணையத்திற்கு உதவி செய்யும்)

இந்தக் கண்காணிப்புக் குழுவிற்கு மத்திய அரசின் நீர் வளத்துறை செயலாளர் தலைவராக இருப்பார். மாநில அரசுகளின் தலைமைச் செயலாளர்களும் தலைமைப் பொறியாளர்களும் அடங்கிய 11 பேர் உறுப்பினர்களாக அந்தக் கண்காணிப்புக் குழுவிலே இருப்பார்கள்.

இந்தக் கண்காணிப்புக் குழு அவ்வப்போது கர்நாடகம் தமிழகத்திற்குத் தண்ணீர் விடுவதை ஆராய்ந்து அத்துடன் நான்கு மாநிலங்களில் உள்ள பிரச்சினைகளையும் ஆராய்ந்து செயற்படுத்துவதில் ஏதாவது சிக்கல் வருமேயானால், அதை ஆணையத்திற்குத் தெரிவிக்கும் என்றும் உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது. கடந்த 7-6-2001 அன்று இந்த கண்காணிப்புக் குழுவின் கூட்டம்தான் டெல்லியிலே நடைபெற்று அந்தக் குழுவிலே தமிழக அரசின் சார்பில் பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளார்கள்.

தினமணி தனது நேற்றைய தலையங்கத்தில் நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பு ஒரு புறமிருக்கட்டும், நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பையே ஏற்பதா இல்லையா என்பதைக் கர்நாடகம் தீர்மானிக்கத் தயங்காது என்று வீராவேசமாக கருத்து தெரிவித்த முன்னாள் முதல்வர்களும் கர்நாடகத்தில் இருக்கிறார்கள் என்று எழுதியுள்ளது.

ஆனால் 1998ஆம் ஆண்டு இந்த ஒப்பந்தம் ஏற்பட்டபோது கர்நாடகம் எந்த அளவிற்கு நடந்து கொண்டது என்பதை இந்து இதழ் 10-8-1998இல் எழுதிய தலையங்கத்திலே குறிப்பிடும் போது காவிரி நடுவர் மன்றத்தின் 1991ஆம் ஆண்டு இடைக்கால உத்தரவை அமல்படுத்துவதற்கான திட்டம் குறித்து முதலமைச்சர்கள் கூட்டத்தில் ஏற்பட்டுள்ள விரிவான ஒப்பந்தம் பிரச்சினைக்குரிய மாநிலங்கள் எதார்த்த உணர்வுடன் செயல்பட்டுள்ளன என்பதைக் காட்டுவதால் பாராட்டுக்குரியது. குறிப்பாகக் கர்நாடக மாநிலம் தேவையில்லாமல் ஏழு ஆண்டுகளாக நீடித்து வந்த மோதலுக்குத் தீர்வு காண்பதில் எதார்த்த உணர்வை வெளிப்படுத்தியுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் மிகவும் ஆக்க பூர்வமான அம்சம், இதுவரை அங்கீகரிக்க மறுத்து வந்த நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணைக்கு மதிப்பளிக்க கர்நாடகமே உறுதி அளித்துள்ளது. இதற்கு நடைமுறை அர்த்தம் தமிழ்நாட்டுக்கு ஆண்டு தோறும் 205 டி.எம்.சி. தண்ணீர் தருவதற்கு கர்நாடகம் ஒத்துக் கொண்டுள்ளது என்பதாகும். தமிழ்நாட்டின் தரப்பில் இது பலனளிக்கக் கூடிய அம்சமாகும் என்று எழுதியிருந்தது.

அதே நாளில் எக்ஸ்பிரஸ் தனது தலையங்கத்திலே காவிரி நதிநீர் தாவா நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை அமல்படுத்துவது தொடர்பான 7 ஆண்டு மோதலுக்கு ஒரு முடிவு ஏற்பட்டுள்ளது என்ற முக்கியத்துவத்தை அலட்சியப்படுத்தி விடக் கூடாது. அதை அமல்படுத்துவதற்கு காவிரி தீர ஆணையம் அமைக்க ஒப்புக் கொண்டதன் மூலம், கர்நாடகம் கடைசியாக அந்தத் தீர்ப்புக்கான கொள்கை ரீதியான ஒப்புதலை வெளிப்படுத்தியுள்ளது என்று எழுதியது. தினமணி நாளேடு காவிரிப் பிரச்சினையில் முதல் முறையாக ஆக்கபூர்வமான முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. பிரதமர் தலைமையில் நான்கு மாநில முதல்வர்கள் கூடி நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்துவதற்கான திட்டத்தை இறுதி செய்தது பாராட்டத்தக்க சாதனை. தமிழகத்துக்கு 205 டி.எம்.சி. நீர் அளிக்க கர்நாடகம் சம்மதித்திருக்கிறது என்று அப்போதே எழுதியது. தமிழக ஏடுகள் மாத்திரமல்ல; டைம்ஸ் ஆப் இந்தியா ஆங்கில இதழ் நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை அமல்படுத்துவதற்காக காவிரி ஆணையம் அமைப்பது பற்றி கர்நாடகா இறங்கி வந்த காரணத்தால் நீண்ட நாட்களாக முடிவுறாமல் தெற்கேயுள்ள

விவசாய மாநிலங்களுடைய ஏழாண்டு காலமாக விடை தெரியாமல் நிலவி வந்த பிரச்சினைக்கு ஒரு முடிவு காணப்பட்டது என்று எழுதியது.

தி ஏசியன் ஏ3 என்ற ஆங்கில ஏடு, 7 ஆண்டுகளுக்கு முன்பு வழங்கப்பட்ட நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையில் சொல்லப்பட்ட 205 டி.எம்.சி. நீர் தமிழகத்திற்கு வழங்க கர்நாடகாவை ஒப்புக் கொள்ள வைத்தது, தமிழக முதலமைச்சரைப் பொறுத்தவரை பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணலாம் என்ற முடிவிற்கு எதிர்ப்புத் தெரிவித்த அவரது அரசியல் எதிரிகளை வெற்றிக் கொள்ள உதவியிருக்கின்றது என்று எழுதியது.

முன்னாள் ஆளுநர் சி. சுப்பிரமணியம் :- காவிரி நதிப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன். அரசியல்வாதிகளால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்ற என் கருத்தினை பொய்ப்பித்து விட்டார்கள். இந்த முடிவின்மூலம் லட்சக்கணக்கான விவசாயிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுள்ளார்கள்.

ஜி.கே. மூப்பனார் :- காவிரி நதி நீர்ப் பங்கீடு குறித்து, பிரதமர் வாஜ்பாய், சம்பந்தப்பட்ட மாநிலங்களின் முதல் அமைச்சர்களோடு நடத்திய பேச்சுவார்த்தையின் விளைவாக நல்லதொரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக எவ்வித உடன்பாட்டிற்கும் வர முடியாத தமிழக மற்றும் கர்நாடக அரசுகள், சில அடிப்படையான விஷயங்களில் மனமொத்த கருத்துக்களை ஏற்படுத்திக் கொண்டிருப்பது இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகளில் முக்கியமான மைல்கல்.

சங்கரய்யா :- காவிரிப் பிரச்சினை தொடர்பாக இப்போது ஏற்பட்டுள்ள உடன்பாடு மற்ற மாநிலங்களுக்கு இடையிலேயான நதி நீர் தாவாக்களை தீர்க்கவும் ஒரு முன்மாதிரியான உடன்பாடாக விளங்குகிறது. இந்த உடன்பாட்டின்படி நடுவர்மன்ற இடைக்காலத் தீர்ப்புக்கேற்ப தமிழகத்திற்குக் காவிரியில் 205 டி.எம்.சி. தண்ணீர் திறந்து விட கர்நாடகம் ஒப்புக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டிற்கு 205 டி.எம்.சி. தண்ணீர் திறந்து விடக்கூடாது என்று கர்நாடக சட்டமன்றத்தில் இரண்டு முறை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்பதை மனதில் கொண்டு பார்த்தால் இதன் முக்கியத்துவம் புரியும்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி :- மிகக் கடுமையான பிரச்சினையாக இருந்துவரும் காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில் அனைத்துத் தரப்பினர் கருத்தறிந்து, இடைவிடாத முயற்சி மேற்கொண்ட தமிழக முதல்வர் கலைஞரின் அக்கறையும், தமிழ்நாடு அரசின் செயல்பாடும் இந்த உடன்பாடு ஏற்பட முக்கியக் காரணமாகும்.

எம்.ஏ. லத்தீப் :- எத்தனையோ வகையில் தமிழ் நாட்டிற்குத் தொண்டாற்றியுள்ள பொன்னியின் செல்வர் கலைஞர் அவர்கள், விடா முயற்சியும் விவேகமும் நிறைந்தவர் என்பதற்கு காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் தமிழ்நாட்டிற்கு அவர் தேடித் தந்துள்ள இந்த வெற்றி வரலாற்றில் இடம் பெறக்கூடிய ஒன்று.

திண்டிவனம் ராமமூர்த்தி :- தமிழக கர்நாடக மாநிலங்களுக்கு இடையே நீண்ட நாட்களாக நிலவி வந்த காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வு கிடைத்திருப்பது தமிழகத்திற்கு மகிழ்ச்சியான செய்தி. இந்த விஷயத்தில் முதல்வர் கலைஞர் நமது பாராட்டுக்குரியவர்.

இல. கணேசன் :- நீண்ட காலமாக உள்ள காவிரிப் பிரச்சினை பிரதமர் வாஜ்பாயினால் தீர்ந்துள்ளது. முதல்வர் கருணாநிதி வெற்றி பெற்றார். இது தமிழகத்திற்குக் கிடைத்த வெற்றி. இதைப் பிரதமர் வாஜ்பாய் செய்து சாதனை படைத்துள்ளார்.

இவ்வாறு தமிழகத்தின் தலைவர்கள் மாத்திரமல்ல; அனைத்திந்திய ஏடுகளும் பாராட்டி எழுதியிருந்தன.

தமிழகத்தின் இத்தனை தலைவர்களும், இத்தனை ஏடுகளும் பாராட்டியிருந்த அந்த காவிரி ஆணையம் எனும் அறிவிப்பை; அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா, ஒரு ஏமாற்றுத் திட்டம் என்று அப்போது விமர்சித்தார். புதிய ஆணையம் என்பது தமிழ்நாட்டுக்கு எள்ளளவும் நன்மை பயக்காத ஏமாற்றுத் திட்டமே என்றும் கூறினார்.

ஆனால் இப்பொழுது அந்த ஆணையத்திற்குட்பட்ட கண்காணிப்புக் குழுவின் கூட்டம்தான் கடந்த வாரம் டெல்லியில் நடைபெற்றிருக்கிறது. அதில் தமிழக அரசு அதிகாரிகள் கலந்து கொண்டுள்ளனர்.

நம்மைப் பொறுத்தவரையில் இந்தப் பிரச்சினையில் கர்நாடக மக்களுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் குறிப்பாக இரு மாநில விவசாயப் பெருமக்களுக்கிடையே சுமுகமான உறவு ஏற்படவும். கசப்பு உணர்ச்சிகள், காழ்ப்புணர்வுகள் ஏற்படாமல் இருக்கவும் வேண்டும் என்பதுதான் அன்றும் இன்றும் என்றும் நாம் கொண்டுள்ள எண்ணமாகும். அந்த எண்ணம் ஈடேறும் வகையில் காவிரிப் பிரச்சினையில் இடைக்கால தீர்ப்புக்கு கட்டுப்படுவோம் என்று 1998ல் ஒப்புக் கொண்டு காவிரி ஆணையத்திலும் உறுப்பினராக பொறுப்பேற்றுள்ள கர்நாடகம் அந்தப் பொறுப்பை எக்காரணம் கொண்டும் தட்டிக் கழிக்காமல் முழுமையாகவும் சரியாகவும் செம்மையாகவும் நிறைவேற்றித் தர முன்வரவேண்டுமென்று விழைகிறோம்.

அன்புள்ள,

மு. க.

(14-06-2001)

2608. நல்லதைப் பாராட்டாத கல்நெஞ்சம் நமக்கில்லை!

உடன்பிறப்பே,

தமிழ்நாட்டின் செய்தியாளர்களே, நாளையதினம் வாருங்கள்! புதிய செய்தி தருகிறேன் என்று முன்னறிவிப்பு முதல்நாளே கொடுத்து, ஒவ்வொரு பத்திரிகையாளரும் ஒவ்வொரு விதமாக யூகம் செய்து அதனை வெளியிட, கடைசியாக சஸ்பென்ஸ் கலைந்து ஜெயலலிதா, விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களுக்கான வட்டியையும் அபராத வட்டியையும் தள்ளுபடி செய்வதாக அறிவித்துள்ளார். விவசாயிகளுக்கு நன்மை தரக்கூடிய அனைத்து சலுகைகளும் வரவேற்கக் கூடியதுதான். அந்த வகையிலே திராவிட முன்னேற்றக் கழகமும் விவசாயிகளுக்காக அறிவிக்கப்பட்டுள்ள இந்தச் சலுகையை மனப்பூர்வமாக வரவேற்றுப் பாராட்டுகின்றது.

ஆனால் இந்த அறிவிப்பினால் எந்த அளவிற்கு விவசாயிகள் பயன் அடைவார்கள் என்பது கேள்விக் குறியாக உள்ளது. 311 கோடி ரூபாய் வட்டி தள்ளுபடி என்று அறிவிக்கப்பட்ட போதிலும், உண்மையாக எவ்வளவு தொகை என்பதை இப்போதே உறுதியாகக் கூற முடியாது. ஏனென்றால் 31-8-2001க்குள் 30-6-2000 அன்றைய தேதியில் தவணை கடந்த அசல் தொகையையும், 31-8-2001வரை கட்ட வேண்டிய தவணைத் தொகையையும் கட்டுபவர்களுக்கு மட்டுமே அவர்கள் கட்ட வேண்டிய முழு வட்டி மற்றும் அபராத வட்டியை அரசாங்கம் செலுத்தும். கடன் பெற்ற அத்தனை விவசாயிகளும் 31-8-2001ஆம் தேதிக்குள் அசலைக் கட்டினால் மட்டுமே இந்த வட்டியும், அபராத வட்டியும் ரத்து செய்யப்படும். எல்லா விவசாயிகளும் அசல் தொகையை கட்டினால்தான் 311 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு செலவு ஏற்படும். 31-8-2001க்குள் அசல் தொகையை கட்டா விட்டால் அப்படிக் கட்டத் தவறிய விவசாயிக்கு இந்தச் சலுகை கிடைக்காது. 31-8-2001க்குப் பிறகுதான் எத்தனை விவசாயிகள் இந்தச்

சலுகையைப் பெற அசல் தொகையைக் கட்டினார்கள், அதன்மூலம் எந்த அளவிற்கு சலுகை தரப்பட்டுள்ளது என்பதை அறியலாம். எனவே 311 கோடி ரூபாய் ரத்து என்பது மொத்த மதிப்பாகக் கூறப்பட்டுள்ளதே தவிர உண்மையில் எந்த அளவிற்கு இருக்கும் என்பது இறுதியில் தான் தெரியும்.

ஆனால் அ.தி.மு.க. ஆட்சி நடந்தபோது கடந்த முறை 1994ல் நபார்டு நிறுவனத்தோடு செய்து கொண்ட ஒப்பந்தத்திலே குறிப்பிட்டிருப்பதைப் போல இந்த வட்டித் தொகையை ரத்து செய்ததின் காரணமாக அடுத்த ஆண்டு விவசாயிகளுக்கு கடன் கொடுக்க நபார்டு நிறுவனம் முன்வராது என்ற நிபந்தனை என்னவாகும் என்பதற்கு விளக்கம் தெரியவில்லை. ஜெயலலிதா நபார்டு நிறுவனத்தோடு பேசிவிட்டதாகவும், அவர்கள் ஒப்புக் கொண்டு விட்டார்கள் என்றும்தான் கூறியிருக்கிறாரே தவிர, வரும் ஆண்டில் நபார்டு நிறுவனம் தொடர்ந்து விவசாயிகளுக்குக் கடன் வழங்குமா என்பதைத் தெளிவாக்கவில்லை. அதையும் தெளிவாக்குவது நல்லது.

311 கோடி ரூபாய் ரத்து என்பதில் வட்டித் தொகை ரூ. 241.47 கோடியும், அபராத வட்டி ரூ. 69.04 கோடியும் ஆகும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கடந்த ஆண்டு 31-7-2000 வரை தவணையை தவறிய வேளாண்மை சார்ந்த கடன்களை, வட்டியுடன் திருப்பிச் செலுத்திய 3,40,727 சிறிய, பெரிய விவசாயிகள் அனைவருக்கும் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அதன் வாயிலாக 13 கோடியே 20 இலட்சம் ரூபாய் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டது. கடன் பெற்ற சுமார் 7 இலட்சம் விவசாயிகளில் சுமார் மூன்றரை லட்சம் விவசாயிகள்தான் கடன்தொகையைக் கட்டி இந்தச் சலுகையைப் பெற்றார்கள். இந்தச் சலுகையை அனைத்து விவசாயிகளும் கடன் தவணை தொகையைக் கட்டி பெற்றிருப்பார்களேயானால் அப்போதும் அபராத வட்டி சுமார் 69 கோடி ரூபாய் அளவிற்கு வந்திருக்கும். ஆனால் உண்மையில் அந்தக் கடன் தொகையைக் கட்டி இந்த அபராத வட்டி சலுகையை அடைந்தவர்களுக்காக அரசு ஏற்றுக் கொண்ட இழப்பீட்டுத் தொகை சுமார் 13 கோடி ரூபாய்தான். எனவே கடந்த ஆண்டு அளவிற்கே இந்த ஆண்டும் இந்தச் சலுகையை விவசாயிகள் அனுபவிப்பார்களேயானால், அவர்களுக்காக அரசு ஏற்றுக் கொள்ள வேண்டிய இழப்பு 13

கோடி ரூபாய் அளவிற்குத்தான் இருக்குமே தவிர, தற்போது அறிவித்திருப்பதைப் போல 69 கோடி ரூபாய் என்பதாக இருக்காது.

அதைப்போலவேதான் வட்டித் தொகையைப் பொறுத்தவரையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 1998-99ஆம் ஆண்டிலேயே குறுகிய காலப் பயிர்க் கடன்களை முறையாகத் திருப்பிச் செலுத்திய விவசாயிகளுக்கு வட்டி ஊக்குவிப்புத் தொகை என்ற அளவில் வட்டித் தொகையில் 6.25 விழுக்காடு அரசினால் வழங்கப்பட்டது. அதாவது விவசாயிகள் செலுத்த வேண்டிய 12 விழுக்காடு வட்டித் தொகையில் 6.25 விழுக்காடு வட்டித் தொகையை அரசே முன்வந்து ஏற்றுக் கொண்டது. கடன்பெற்ற சுமார் 7 லட்சம் விவசாயிகளில் 1,47,654 விவசாயிகள்தான் கடன் தொகையைக் கட்டி வட்டி சலுகையினால் 6 கோடியே 58 லட்சம் ரூபாய் அளவிற்கு பயன் அடைந்தனர்.

அதைப் போலவே கழக ஆட்சியில் கடந்த ஆண்டும் 1999-2000இல் வட்டி ஊக்குவிப்புத் தொகை 7 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. கடன் பெற்ற சுமார் 7 லட்சம் பேரில் 2,42,817 விவசாயிகள் மட்டுமே கடன் தொகையைக் கட்டி 19 கோடியே 72 இலட்சம் ரூபாய் அளவிற்கு ஊக்குவிப்புத் தொகை அரசினால் வழங்கப்பட்டது.

இந்த அளவிற்கு தி.மு.கழக அரசிலே 12 விழுக்காடு அளவிற்கு வட்டித் தொகை செலுத்த வேண்டியதில் 7 விழுக்காடு அளவிற்கு வட்டித் தொகையை அரசு செலுத்தி மீதி 5 விழுக்காடு தொகையைத்தான் விவசாயிகள் செலுத்தினார்கள். தற்போது ஜெயலலிதா அரசு அந்த வட்டித் தொகையில் 7 விழுக்காடு கழக ஆட்சியிலே தந்ததைத்தான் 5 விழுக்காடு அளவிற்கு மேலும் உயர்த்தி முழு வட்டித் தொகையான 12 விழுக்காட்டை அதுவும் 31-8-2001க்குள் தவணைத் தொகையைக் கட்டுபவர்களுக்கு மட்டும் ரத்து செய்வதாக அறிவித்துள்ளது. ஓரளவு வட்டித் தொகையை உயர்த்தி 12 விழுக்காடு ரத்து என அ.தி.மு.க. அரசு அறிவித்துள்ளது உண்மை என்ற போதிலும், ஏற்கனவே தி.மு.க. ஆட்சியில் 7 விழுக்காடு வட்டி ரத்து செய்யப்பட்டதை மறைத்து விட முடியாது.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது விவசாயிகளின் நலன்களுக்காக இதுமாத்திரமல்ல, வேறு பல சலுகைகளும்

வழங்கப்பட்டுள்ளன. அவைகளையும் இந்த நேரத்தில் நினைவூட்டுவது தேவையென நினைக்கிறேன். அவையாவன :-

விவசாயிகள் பெற்ற பயிர் கடன்களுக்கு 13 சதவிகித வட்டி வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியிருந்ததை ஒரு விழுக்காடு குறைத்து 12 விழுக்காடு அளவிற்கு வட்டி செலுத்தினால் போதுமென்று ஆக்கியது 1997இல் தி.மு.கழக ஆட்சியிலேதான்.

1996-97ஆம் ஆண்டு வறட்சியாலும், 1997ஆம் ஆண்டு நவம்பரில் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு குறுகிய காலக் கடன்கள் மத்திய காலக் கடன்களாகவும், மத்திய காலக் கடன்கள் நீண்ட காலக் கடன்களாகவும் மாற்றப்பட்டதால் அபராத வட்டித் தொகை ரத்தாகி, அதனால் 50 கோடி ரூபாய் அளவிற்கு விவசாயிகள் பயனடைந்தனர்.

அதைப்போலவே 1997-98ஆம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் குறுகிய காலக் கடன்கள் மத்திய காலக் கடன்களாக மாற்றப்பட்டதால் 63 கோடியே 35 லட்சம் ரூபாய் அளவிற்கு விவசாயிகள் பயனடைந்தனர்.

இந்தியாவிலேயே முதன் முதலாக 1990இல் கழக அரசு விவசாயிகளுக்கு வழங்கிய இலவச மின்சாரத் திட்டம் இடையில் வந்த ஜெயலலிதா ஆட்சியால் கைவிடப்பட்டு, தி.மு.க. நடத்திய போராட்டத்தின் காரணமாக தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு சுமார் 16 லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் பயனடைந்து வருகிறார்கள்.

கடந்த கால அ.தி.மு.க. ஆட்சியை விட நெல் குவிண்டால் ஒன்றுக்கு மோட்டா ரகத்துக்கு 150 ரூபாயும் சன்ன ரகத்துக்கு 165 ரூபாயும் விலை உயர்த்தப்பட்டு 1-9-2000 முதல் குவிண்டால் ஒன்றுக்கு மோட்டா ரகம் 510 ரூபாய் என்றும், சன்ன ரகம் 540 ரூபாய் என்றும் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது.

மேலும் இடைநிகழ் செலவாக குவிண்டால் ஒன்றுக்கு 40 ரூபாய் அளிப்பதோடு, தரவெட்டுத் தொகை 15லிருந்து 5 ரூபாயாகவும், 20லிருந்து 10 ரூபாயாகவும் குறைக்கப்பட்டது.

அதிக விளைச்சல் காரணமாக நெல் விலை குறைந்து, வியாபாரிகள் விவசாயிகளிடம் கட்டுப்படியான விலைக்கு நெல்லை வாங்க மறுத்த காரணத்தால் இணைக் கொள்முதலில்

அரசாங்கமே நெல்லை வாங்கி, அதன் காரணமாக சுமார் 14 இலட்சம் டன் அளவுக்கு அரிசி கையிருப்பு இருக்கும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த கால தி.மு.க. ஆட்சியில் மட்டும் 32 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டன.

1995-96ல் அ.தி.மு.க. ஆட்சியில் 2.45 லட்சம் டன் நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டதற்கு மாறாக, 1999-2000ல் 12.13 லட்சம் டன்னும், 2000-2001ல் சுமார் 18 லட்சம் டன்னும் நெல் கொள்முதல் செய்யப்பட்டது.

மைய அரசு நிர்ணய விலையைவிட கரும்பு டன் ஒன்றுக்கு 50 ரூபாய், 60 ரூபாய் என்ற அளவிலேயே அ.தி.மு.க. ஆட்சியில் விலையை உயர்த்தி பரிந்துரை விலை நிர்ணயிக்கப்பட்டதற்கு மாறாக கழக ஆட்சியில் டன் ஒன்றுக்கு 180 ரூபாய் கூடுதலாக பரிந்துரை விலை நிர்ணயிக்கப்பட்டது.

8.5 விழுக்காடு சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பு டன் ஒன்றுக்கு அ.தி.மு.க. ஆட்சியில் 1995-1996ல் பரிந்துரை விலை ரூ. 560. கழக அரசு 1999-2000ல் நிர்ணயம் செய்த பரிந்துரை விலை ரூ. 740. 10 விழுக்காடு சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பு டன் ஒன்றுக்கு 1000 ரூபாய் வழங்கப்பட்டதும் கழக அரசில்தான்.

கரும்பு விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை வழங்க 1997-1998ல் கழக அரசு வழங்கிய முன்பணம் ரூ. 76.41 கோடி. 1998-99ல் ரூபாய் 210 கோடி. 1999-2000 ஆம் ஆண்டில் ரூ. 30 கோடி.

டிசம்பர் 96ல் ஏற்பட்ட வெள்ளச்சேதம் காரணமாக விளைபொருள் இழப்புக்காக கழக அரசில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை ரூ. 55.15 கோடி. இதன்மூலம் பயன் பெற்ற விவசாயிகள் 10,05,166 பேர்.

மீண்டும் 1997ல் ஏற்பட்ட வெள்ளச்சேதம் காரணமாக வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை 59 கோடி ரூபாய். பயன் பெற்ற விவசாயிகள் 2,50,297 பேர். இதே ஆண்டு கழக அரசினால் ரத்து செய்யப்பட்ட நிலவரி ரூ. 44 கோடி.

1999ல் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட திருச்சி, கரூர், தஞ்சை, நாகை, புதுக்கோட்டை, திருவாரூர் மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகை ரூ. 33.28 கோடி.

மூன்று குதிரைத்திறன் கொண்ட ஆயில் என்ஜின்களுக்குப் பதில் ஐந்து குதிரைத் திறன் கொண்ட ஆயில் என்ஜின்கள் வாங்க சிறு விவசாயிகளுக்கு 25 சதவிகிதமும், மிகச்சிறு விவசாயிகளுக்கு 30 சதவிகிதமும், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த விவசாயிகளுக்கு 50 சதவிகிதமும் மானியத் தொகை கழக அரசினால் வழங்கப்பட்டது.

1995-96ல் அ.தி.மு.க. ஆட்சியில் கூட்டுறவு வங்கிகள் மூலம் ஒருவருக்கு வழங்கப்பட்ட நகைக் கடன் தொகை 25 ஆயிரம் ரூபாய் என்பது தி.மு.க. ஆட்சியில் 6.9.96 முதல் 50 ஆயிரம் ரூபாய் என்றும், 27.5.98 முதல் ஒரு லட்ச ரூபாய் என்றும் உயர்த்தப்பட்டது.

யூரியா உரத்திற்கு விவசாயிகளுக்கு விற்பனை வரி 4 விழுக்காடு என்பது கழக ஆட்சியில் 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

நிலமற்ற விவசாயிகளுக்கு வயதின் அடிப்படையில் வழங்கப்பட்ட மாத ஓய்வூதியம் ரூ. 100 என்பது கழக ஆட்சியில் 1997ல் ரூ. 150 எனவும், 2000-2001ல் ரூ. 200 எனவும் உயர்த்தப்பட்டது.

விவசாயிகள் பாசன நீரை எடுத்துச் செல்ல அரசு நிலங்களில் பதிக்கும் குழாய்களுக்காக விதிக்கப்பட்டு வந்த பாதைக் கட்டணம் (Track Rent) கடந்த ஆண்டு கழக ஆட்சியில் ரத்து செய்யப்பட்டது.

விவசாயத் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்க கழக ஆட்சியில் திரு. கோலப்பன் ஐ.ஏ.எஸ். தலைமையில் குழு அமைக்கப்பட்டு அவரின் பரிந்துரைகளையேற்று சொந்த ஏர் மாட்டுடன் உழவு செய்யும் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 100 ரூபாய் என்றும், சொந்த ஏர் மாடு இல்லாத தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 54 ரூபாய் என்றும் கூலி உயர்த்தப்பட்டதோடு வேளாண்மைத் தொழிலில் ஈடுபடும் மற்ற தொழிலாளர்களுக்கும் இதுபோன்று கூலி உயர்த்தப்பட்டது.

விவசாயிகளும், வாங்கி நுகர்வோரும் பயனடைய வேண்டுமென்ற உன்னத நோக்கத்தோடு கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட உழவர் சந்தைகளின் மூலம் லட்சக்கணக்கான விவசாயிகளும், நுகர்வோரும் பயனடைந்தனர்.

விவசாயத் தொழிலாளர்களுக்கென்று தனியாக நல வாரியம் ஒன்று கழக ஆட்சியில் தொடங்கப்பட்டது.

கிராமப்புற மாணவர்களுக்கு தொழிற்கல்வியில் 15 சதவிகித இட ஒதுக்கீடு என தி.மு.க. அரசு அறிமுகப்படுத்திய திட்டத்தை 25 சதவிகிதமாக இந்த அரசு உயர்த்தியுள்ளதை சட்டப்பேரவையில் கழக உறுப்பினர்கள் வரவேற்றிருப்பது போலவே,

விவசாயிகள் கடனில் தி.மு.கழக அரசு 7 சதவிகிதம் சலுகை அளித்துள்ளதாக இப்போதைய அரசு 5 சதவிகிதம் உயர்த்தி 12 சதவிகிதமாக அறிவித்துள்ளதையும் வரவேற்கிறோம்.

இதைப் பாராட்டுகிற நேரத்தில் 13,000 மக்கள் நலப் பணியாளர்களை வேலையிலிருந்து விரட்டி வீட்டுக்கு அனுப்பிவிட்டதையும் - சாலைப் பணியாளர்கள் 10,000 பேருக்கு சீட்டுக் கிழித்திட சிந்தித்துக் கொண்டிருப்பதையும் - இதற்குள்ளாக இரண்டு மூன்று மக்கள் நலப்பணியாளர்கள் வேலையிழந்த காரணத்தினால் வேதனை தாங்காமல் தற்கொலை செய்து கொண்டனர் என்பதையும் - பாராட்டவோ, வரவேற்கவோ கூடிய அளவுக்குக் கல் நெஞ்சம் பெற்றவர்களாக நாமில்லை என்பதையும் கூறிக் கொள்கிறோம்.

அன்புள்ள,

மு. க.

(15-06-2001)

2609. தெளிவடையாத நெஞ்சங்கள் தெளியட்டும்!

உடன்பிறப்பே,

விவசாயப் பெருங்குடி மக்களும், வாங்கிப் புசிக்கும் நுகர்வோரும் பயன்பெறும் பொருட்டு 1999ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14ஆம் நாள் மதுரை மூதூரில் உழவர் சந்தை திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. அந்தத் திட்டத்தின் அடிப்படை, இடைத்தரகர்கள் இல்லாமல் உழவர்கள் விளைவித்த காய்கறிகளை மலிவான விலையில் நுகர்வோர் வாங்கிப் பயன்படுத்த உதவக்கூடியது என்று அறிவித்தேன். அரசாங்கமே சந்தைக்கான வசதி வாய்ப்புள்ள கட்டிடங்களை அமைத்துத் தருமென்றும், கடைகளுக்கு உழவர்கள் வாடகை தரவேண்டியது இல்லையென்றும், கிராமங்களிலிருந்து நாள்தோறும் காய்கறிகளைக் கொண்டு வருவதற்கு பேருந்துகளுக்கு லக்கேஜ் கட்டணம் வாங்கப்படமாட்டாது என்றும், எடை போடும் தராசுகள் உழவர்களுக்கு ஒவ்வொரு கடைக்கும் இலவசமாக வழங்கப்படுமென்றும், ஒவ்வொரு நாளும் சந்தைக்கு பொருள் கொண்டு வரும் உழவர்களிலே ஒரு சிலர் குழுவினராக அமர்ந்து அன்றைய தினம் காய்கறிகளின் விலைக் குறியீட்டை நிர்ணயிக்க வேண்டுமென்றும் அதை மீறி யாரும் விற்பனை செய்யக்கூடாதென்றும், வியாபாரிகளின் தலையீடு இல்லாமல் தடுத்திட அதிகாரிகளின் கண்காணிப்பு தொடர்ந்து இருக்குமென்றும், அதிகாலை முதல் பிற்பகல் வரையில் சந்தைப் பணிகளைத் தொடங்குவதற்கும், கவனித்துக் கொள்வதற்கும் மக்கள் நலப் பணியாளர்கள் ஈடுபடுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டு அவ்வாறே தொடர்ந்து 100 உழவர் சந்தைகள் திறக்கப்பட்டு ஒன்றிரண்டு சந்தைகளைத் தவிர மற்ற சந்தைகள் அனைத்தும் வெற்றிகரமாக நடைபெற்று சுமார்

ஒன்றரை ஆண்டுக் காலத்தில் 200 கோடி ரூபாய்க்கான காய்கறிகள் விற்பனையாகி இருக்கின்றன என்ற மகிழத்தக்க கணக்குகள் பதிவாகி இருக்கின்றன.

ஆனால் நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுக்குப் பிறகு வெளிவந்த கவர்னர் உரையில் உழவர் சந்தைகளால் உழுவோருக்கோ, பொதுமக்களுக்கோ யாதொரு பயனுமில்லை என்று குறிப்பிடப்பட்டு, எனவே இந்த செயல்படாத உழவர் சந்தைகளை மூடிவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டது. இது கேட்டு உழவர்களும், பொது மக்களும் ஆங்காங்கு கொதித்து எழுந்து கிளர்ச்சிகளில் ஈடுபட்டார்கள். அந்த கிளர்ச்சிகளைச் சந்திக்க துணியாத ஜெயலலிதா, உடனடியாக சாமர்த்தியமான முறையில் செயல்படாத சந்தைகளைத்தான் மூடுவதாக சொன்னோம் என்று சமாளித்து மற்ற சந்தைகள் நடைபெறும் என்றும் உறுதியளித்தார். செயல்படாத சந்தைகளைத்தான் மூடுவதென்று கவர்னர் உரையிலே தெளிவாக இல்லை. அந்த உரையிலே உள்ள வாசகம் மொத்த சந்தைகளுமே பயனற்றவை என்றுதான் ஆரம்பமாகிறது. எனவே இந்த அரசு நினைத்தது ஒன்று; பிறகு வியாக்கியானம் செய்வது வேறு. இருந்த போதிலும் இந்த உழவர் சந்தைகளை உளமார நடத்துகின்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையில்தான் காரியங்கள் நடைபெறுகின்றன.

ஆங்கிலத்தில் Slow Poison கொடுப்பது என்பார்களே; மெல்ல மெல்ல ஊசி போட்டு விஷத்தை இறக்குவதைப்போல என்று சொல்வார்களே; அதைப் போல உழவர் சந்தைக்கான வசதி வாய்ப்புகளையெல்லாம் ஒவ்வொன்றாக குறைத்துக் கொண்டு வருகிறார்கள். பேருந்துகள் வந்தால்தானே காய்கறி மூட்டைகள் வரும் என்பதற்காக கூடுமான வரையில் பேருந்துகளை நிறுத்திவிடுகிற முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். பல இடங்களில் உழவர் சந்தைகளைப் பொறுத்தவரையில் பேருந்து வசதியை நிறுத்தியே விட்டார்கள். உழவர் சந்தைகளினுடைய கண்காணிப்புக்காக காலை முதல் கஷ்டப்பட்டு பணியாற்றிக் கொண்டிருந்த மக்கள்நலப் பணியாளர்கள் அனைவரும் வேலையிலிருந்து ஒழிக்கப்பட்டுவிட்ட காரணத்தால் உழவர்

சந்தையிலே அந்தப் பணிகளை கவனிக்கின்ற ஆட்களையும் இல்லாமல் செய்து விட்டார்கள். ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் மற்றும் அவர்களால் ஆங்காங்கு தூண்டப்படும் இடைத்தரகர்களான வியாபாரிகள் ஆகியோரது அனுமதியற்ற ஆக்கிரமிப்புகள் பல உழவர் சந்தைகளைக் கொஞ்சம் கொஞ்சமாக சீரழித்துக் கொண்டிருக்கின்றன.

எனவே ஒரே மூச்சில் உழவர் சந்தைகளை நெஞ்சு வெடித்துச் சாகும் நிலைக்குள்ளாகாமல், காய்ச்சல், கபம், உடல் நலிவு, இருமல் தொல்லை, கோமா நிலை இப்படி படிப்படியாக இந்த சந்தைகளைச் சாவூருக்கு அனுப்ப ஜெயலலிதா அரசு போட்டுள்ள திட்டத்தை இன்னமும் பாமரர்களாக இருப்பவர்கள்தான் கவனிக்காமல் இருக்க முடியும். தி.மு.க. அரசு கொண்டு வந்த காரணத்தால் உழவர் சந்தைகளை மூடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளுங்கட்சித் தரப்பில் சொல்லப்படுகிற அல்லது ஆளுங்கட்சி ஆதரவு ஏடுகள் சிலவற்றால் எழுதப்படுகிற பதில் என்னவென்றால்; அ.தி.மு.க. ஆட்சியிலே அம்மா கொண்டு வந்த தொட்டில் குழந்தைகள் திட்டத்தைத் தி.மு.க. ஆட்சியில் அகற்றிவிடவில்லையா என்பதுதான். இது அறியாதோர் பேசுகிற பேச்சும் எழுதுகிற எழுத்தும் ஆகும். 1992ல் ஜெயலலிதா ஆட்சியில் கொண்டு வரப்பட்ட தொட்டில் குழந்தைகள் திட்டத்தில் பல சீரமைப்புகள் தி.மு.க. ஆட்சியில் செய்யப்பட்டனவே தவிர அத்திட்டம் கைவிடப்படவில்லை என்பதற்குச் சான்றாக ஜூன் 17 ஆம் தேதி வந்துள்ள பத்திரிகைச் செய்தியை படிப்பது நலம்.

இன்றைய அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரே சேலம் தொட்டில் குழந்தைகள் இல்லத்தில் ஒரு வாரத்திற்கு முன்பு கலந்து கொண்ட நிகழ்ச்சியில் 1992 அக்டோபர் முதல் 2001 மே மாதம் முடிய இந்த இல்லத்திற்கு 110 குழந்தைகள் வந்துள்ளன என்று கூறியிருக்கிறார். இவற்றில் தாம்பரம் எஸ்.ஓ.எஸ். அமைப்பில் 40, சேலம் அன்னை தெரசா இல்லத்தில் 6, சேலம் டேனிஷ்பேட்டை பெத்தேல் இல்லத்தில் 5, திருநெல்வேலி டோனாவூர் இல்லத்தில் 5, சென்னை பாலவிஹாரில் 1, சென்னை கில்டு ஆப் சர்வீஸில் 27, ஓசூர் ஆனந்த ஆஸ்ரமத்தில் 4, கோவை குழந்தைகள் குடும்பத்தில் 1, திருச்சி சாக்கீடில் 3 என்ற எண்ணிக்கையில் இந்த குழந்தைகள் ஒப்படைக்கப்பட்டன என்றும் அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்.

இதிலிருந்து இந்தத் திட்டம் கழக அரசில் கைவிடப்படவில்லை என்பது தெளிவாகிறது.

தொட்டில் குழந்தை திட்டத்தில் மேலும் பல சீரமைப்புகள் கழக ஆட்சியிலே செய்யப்பட்டதே தவிர அத்திட்டம் கைவிடப்படவில்லை. அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், காவல் நிலையங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள், மாவட்ட சமூக நல அலுவலகங்கள், தொண்டு நிறுவனங்களில் பெண் சிசு வேண்டாம் என்பவர்கள் தகவல் தந்தால் அச்சிசுவை வாங்கி, தொண்டு நிறுவனங்களில் வளர்த்து பின் தத்துக் கொடுக்க வகை செய்யப்பட்டது. தத்துக் கொடுக்கும் தொண்டு நிறுவனங்கள் எல்லா மாவட்டங்களிலும் அமைய ஏற்பாடு செய்யப்பட்டது.

சேலத்தில் ஜப்பானிய உதவியுடன் தொட்டில் குழந்தை திட்டத்திற்கென கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு மாவட்ட சமூக நல அலுவலகப் பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது.

உசிலம்பட்டியில் இந்தியக் குழந்தைகள் நலச் சங்கம் மூலம் வரவேற்பு இல்லம் ஒன்று தொடர்ந்து அரசு உதவியோடு நடைபெற்று வருகிறது. இந்த இல்லத்தை நானே நேரில் சென்று பார்வையிட்டுப் பாராட்டியிருக்கிறேன். என்னுடன் பேரவைத் தலைவராக இருந்த பி.டி.ஆர். அவர்களும், சமூக நலத்துறை அமைச்சராக இருந்த சற்குணப் பாண்டியனும் மற்றும் பல அமைச்சர்களும் உடன் வந்திருந்தனர். அப்போது ஐந்து பெண் சிசுக்கள் காப்பாற்றப்பட்டிருப்பதை நேரில் நான் கண்டேன்.

தத்துக் கொடுக்கும் நிறுவனப் பணியாளர்களுக்கு மூன்று நாள் பயிற்சி தரப்பட்டது. தத்து எடுக்க நினைப்போருக்குச் சட்ட வழிமுறைகள் பற்றிய விழிப்புணர்வு தரப்பட்டது. மேலும் மக்கள் இத்திட்டத்தைப் பரவலாக அறியும் பொருட்டு மாவட்டங்கள்தோறும் கருத்தரங்கம், பேரணி நடத்தப்பட்டது. தன்னார்வுத் தொண்டு நிறுவனங்கள், பெற்றோர் சங்கம், அரசு அலுவலர் ஆகியோர் இவற்றில் பங்கேற்றனர். 17 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டன. 8 நிறுவனங்கள் வெளிநாட்டிலும் தத்து தர அனுமதியளிக்கப்பட்டன.

தமிழ், ஆங்கில சுவரொட்டிகள் பொது இடங்களில் அரசு அலுவலகங்களில் ஒட்ட ஏற்பாடு செய்யப்பட்டது. 2 லட்சம் அஞ்சல் அட்டைகளில் ஆதரவற்ற குழந்தைகள் நம் உடைமை; அவர்களைத் தத்தெடுத்தல் நம் கடமை போன்ற வாசகங்கள் அச்சிட்டு வெளியிடப் பட்டன. ரூ. 3 லட்சம் செலவில் இன்டர்நெட் சேவை மையமும் தத்து கொடுக்கும் திட்டம் பற்றிய தகவல் சேகரிக்க ஒதுக்கப்பட்டது.

தொட்டில் குழந்தைகள் திட்டம் மாத்திரமல்லாமல் இந்தத் திட்டத்தின் தொடர்ச்சியாக பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் என்ற பெயரால் ஜெயலலிதாவின் கடந்த கால ஆட்சியிலே ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். அத்திட்டத்தின்படி இரண்டாவது பெண் குழந்தையை மட்டும் மாவட்ட சமூக நல அலுவலர் பதிவு செய்து கொள்வார். அந்தக் குழந்தையின் தாயார் இரண்டாவது பெண் குழந்தைக்குப் பிறகு குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டிருக்க வேண்டும். இரண்டாவது பெண் குழந்தை மூன்று வயதிற்குள் பதிவு செய்யப்பட வேண்டும். அவ்வாறு பதிவு செய்து கொண்ட குழந்தைக்கு ஓராண்டு முடிந்தவுடன் 2 கிராம் எடையுள்ள (ரூபாய் 800 மதிப்புள்ள) தங்க மோதிரம் இலவசமாக வழங்கப்படும். பதிவு செய்த குழந்தையின் பெயரில் 5000 ரூபாய் முதலீடு செய்ததாக அறிவித்து பாஸ் புத்தகம் ஒன்றை அந்தக் குழந்தையின் பெற்றோரிடம் கொடுத்தார்கள். 5000 ரூபாய் அந்தக் குழந்தையின் பெயரில் முதலீடு செய்யப்படுவதாகக் கூறி, அதில் வட்டித் தொகையிலிருந்து அந்தக் குழந்தை முதல் வகுப்பிலே சேர 250 ரூபாயும், 6ஆம் வகுப்புக்கு 500 ரூபாயும், 9, 10, 11, 12 ஆகிய வகுப்புகளுக்கு 500 ரூபாய் வீதம் 2000 ரூபாய் வழங்கப்படும் என்று அன்றைய ஜெயலலிதா ஆட்சியிலே அறிவிக்கப்பட்டது. ஆனால் எந்தக் குழந்தையின் பெயரிலேயும் 5000 ரூபாய் முதலீடு செய்யப்படவே இல்லை. அதனால் எந்தவொரு குழந்தைக்கும் கல்வி உதவி நிதி வழங்கப்படவும் முடியவில்லை. வெறும் பாஸ் புத்தகங்கள் மட்டும் கொடுத்ததோடு சரி.

இலவச மோதிரங்கள் வழங்கப்படுவதைப் பொறுத்தவரை 20,183 மோதிரங்கள் வாங்கப்பட்டு, அவற்றில் 19,437 மோதிரங்கள் குழந்தைகளுக்குத் தரப்பட்டன.

இந்தத் தங்க மோதிரங்கள் டெண்டர் விடப்படாமலேயே அன்றைய துறை அமைச்சர் இந்திரகுமாரியே நகைக்கடைக் காரர்களை வீட்டுக்கு அழைத்து நேரில் பேசி, இயக்குநர் மூலமாக மாவட்ட சமூக நல அலுவலர்களிடம் ஒப்படைக்கச் செய்து வழங்கக் கூறினார்கள். வழங்காமல் இருந்த மோதிரங்களை சோதனை செய்தபோது அவை சுத்த தங்கமும் இல்லை, 2 கிராம் எடையும் இல்லை. சில 1.4 கிராமும், 1.6 கிராமும்தான் இருந்தன.

எனவே 1996ல் கழக அரசு ஏற்பட்டவுடன் இத்திட்டத்தை அப்படியே தொடர்ந்தால் கெட்ட பெயர் வரும் என்று உணர்ந்து இத்திட்டத்தில் மாற்றம் செய்திட முடிவெடுக்கப்பட்டது. அந்தப் புதிய திட்டத்திற்குத் தி.மு.க. ஆட்சியில் சூட்டப்பட்ட பெயர், அன்னை சிவகாமி அம்மையார் இரு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்.

அத்திட்டத்தின்படி ஒரு பெண் குழந்தை மட்டும் பெற்று, குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டால், அந்தக் குழந்தை மூன்று வயதாவதற்குள் பதிவு செய்தால் அந்தக் குழந்தையின் பெயரில் 3 ஆயிரம் ரூபாய் தமிழக அரசு போக்குவரத்து நிதி நிறுவனத்தில் முதலீடு செய்யப்படும். அதற்கான ரசீதினை அந்தக் குழந்தை பெயரிலேயே எழுதி பெற்றோருக்கு அவை அனுப்பி வைக்கப்பட்டன. இந்த ரசீதினை அவர்கள் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பித்துக் கொள்ள வேண்டும். 20 ஆண்டுகள் நிறைந்த பின் அந்தக் குழந்தைக்கு முழுமையாக ரூ. 58,000 கிடைக்கும். இதிலே மற்றும் ஒரு திட்டமாக இரண்டு பெண் குழந்தை இருந்தால் இரண்டு குழந்தைகளுமே பதிவு செய்யப்பட்டனர். ஒவ்வொரு குழந்தையின் பெயரிலும் 1,500 ரூபாய் முதலீடு செய்யப்பட்டு, அவர்களுக்கு 20 ஆண்டுகளுக்குப் பிறகு தலா 29 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அ.தி.மு.க. ஆட்சியிலே அறிவிப்போடு நின்றதைப் போல அல்லாமல், தி.மு.க. ஆட்சியிலே 1 லட்சத்து 26 ஆயிரத்து 625 குழந்தைகளுக்கு இவ்வாறு முதலீடு செய்யப்பட்டுள்ளது.

ஜெயலலிதா ஆட்சியிலே இரண்டாவது குழந்தையை மட்டுமே பதிவு செய்து வெறும் பாஸ் புத்தகத்தை மட்டுமே

கொடுத்தார்களே தவிர யார் பெயரிலும் முதலீடு செய்யவே இல்லை. ஆனால் தி.மு.கழக ஆட்சியிலே பதிவு செய்து கொண்ட அனைத்து குழந்தைகள் பெயரிலும் போக்குவரத்து நிதி நிறுவனத்திலே முதலீடு செய்யப்பட்டுள்ளது.

எந்த அரசு கொண்டு வந்த திட்டம் என்று பாராமல் நல்ல திட்டமெனில் அதனை மேலும் செம்மைப்படுத்தி, மேலும் பயன் விளையும் விதத்தில் தொடர்ந்து அதனை நடத்தும் பண்பு கொண்ட அரசாக தி.மு.க. அரசு விளங்கியதற்கு மற்றுமொரு சான்றுதான் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். கொண்டு வந்த சத்துணவுத் திட்டத்தை விரிவுபடுத்தும் வகையில் வாரம் ஒரு முட்டை வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தியதுமாகும். தெளிவற்றுப் பேசுவோர் எழுதுவோர் சிலர் தெளிவடையட்டும் என்பதற்காகவே இந்த விளக்கம்.

அன்புள்ள,

மு. க.

(20-06-2001)

2610. மனித நேயமும் மத நல்லிணக்கமும்!

உடன்பிறப்பே,

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இஸ்லாமியப் பெருமக்களுக்கும் இடையே ஏதோ ஒரு பெரிய பிளவு ஏற்பட்டு விட்டதைப் போலத் திட்டமிட்டு ஒரு பிரச்சாரத்தைச் சில பேர் செய்து வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் விளக்கமாகவும் விரிவாகவும் பொதுச் செயலாளர் பேராசிரியர் பதிலளித்து இரண்டு நாட்களுக்கு முன் ஓர் அறிக்கை விடுத்துள்ளார். தொடர்ந்து 20-6-2001 அன்றையதினம் ஓர் ஆங்கில இதழில் (எக்ஸ்பிரஸ்) இந்தப் பிரச்சினை தொடர்பாக நீண்ட கட்டுரையொன்று வெளி வந்துள்ளது. அதில் அ.தி.மு.க. தன்னை மதச்சார்பற்ற கூட்டணி என்று கூறிக்கொள்வது பற்றியும், தி.மு.க.வை முஸ்லிம்களின் விரோதிகள் என்பதைப் போலப் படம் பிடித்துக்காட்ட அ.தி.மு.க. முயலுவதைப் பற்றியும், திராவிட இயக்கத்திற்கும் இஸ்லாமிய சகோதரர்களுக்கும் இடையே ஆண்டாண்டுக் காலமாக இருந்து வரும் உறவு குறித்து தொடக்கத்திலே எழுதி விட்டு, தேர்தல் நேரங்களில் முஸ்லிம்களின் வாக்குகளுக்காக அவர்களோடு தோழமை கொள்வதற்காகச் செய்யப்படும் முயற்சிகள் குறித்தும் எழுதப்பட்டுள்ளது.

தொடர்ந்து அதிலே விரைவில் வரவிருக்கும் உள்ளாட்சி மன்றத் தேர்தலை மனதிலே கொண்டு அ.தி.மு.க. சாமர்த்தியமாக குண்டு வெடிப்பு வழக்கிலே சிக்கி சிறையிலே உள்ளவர்களுக்காகப் பரிந்து பேச முற்பட்டுள்ளது என்றும், தி.மு.க.விற்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையே தொடர்ந்து நீடித்து வந்த உறவில் மாற்றம் ஏற்பட தொடர் வெடிகுண்டு சம்பவங்கள் ஒரு திருப்பம் என்றும் எழுதப்பட்டுள்ளது.

பொருளாதாரக் கேடுகள் காரணமாக பாதிக்கப்பட்ட சில இஸ்லாமிய இளைஞர்கள் தீவிரவாதிகளாக மாற வேண்டிய நிலை ஏற்பட்டதையும், அதன் விளைவுதான் வெடிகுண்டு

நிகழ்ச்சிகள் என்றும் அதிலே அரசுப் பொறுப்பிலே இருந்த தி.மு.க. தீவிரவாதிகள் மீது எடுத்த நடவடிக்கை இஸ்லாமிய சமுதாயத்தவரைக் கோபம் அடையச் செய்தது என்றும், அதன் காரணமாக தி.மு.க. கணிசமான இஸ்லாமிய வாக்குகளை இழக்க நேரிட்டது என்றும், பா.ஜ.க.வுடன் கொண்ட உறவு காரணமாக மீதியிருந்த இஸ்லாமியர்களின் உறவையும் இழக்க நேரிட்டது என்றும் அந்தக் கட்டுரையாளர் எழுதி விட்டு, இறுதியாக தமிழக முஸ்லிம் முன்னேற்றக் கழகத் தலைவர் நூற்றுக்கணக்கான நிரபராதிகளான முஸ்லிம் இளைஞர்கள் சிறையிலே இருக்க தி.மு.க. தான் காரணம் என்று குற்றஞ்சாட்டியிருப்பதையும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் தமிழகத் தலைவர் காதர் மொய்தீன் அவர்கள் நீண்ட நாட்களாக இஸ்லாமிய சமூகத்தின்பால் தி.மு.க. கொண்டிருந்த உறவைப் பற்றி விளக்கி, அந்தச் சமுதாயத்தினருக்கு தி.மு.க. செய்த சலுகைகளையும் விவரித்து, கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் விடுத்துள்ள அறிக்கை மீண்டும் இஸ்லாமியர்களின் ஆதரவைப் பெற உதவிடுமா என்று கேட்டிருப்பதையும் குறிப்பிட்டிருக்கின்றார்.

கோவை தொடர் வெடிகுண்டு சம்பவம் குறித்து அப்போது என்ன நடைபெற்றது என்பதை மூன்றாண்டுகள் இடையிலே ஓடி விட்ட நிலையிலே மீண்டும் நினைவிற்குக் கொண்டு வந்தால், உண்மை உள்ளங்கனி நெல்லிக்கனி போல தெளிவாகும் என்பதால் அப்போது நடைபெற்ற நிகழ்ச்சி குறித்து விருப்பு வெறுப்பின்றி இங்கே விளக்க முற்படுகிறேன்.

29-11-1997 அன்று கோவையில் அலுவலிலே இருந்த செல்வராஜ் என்னும் காவலர், அல்-உம்மா தீவிரவாதிகளால் குத்திக் கொலை செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து கோவையில் மதத்தீவிரவாதிகள் நடத்திய வன்முறைச் சம்பவங்களில் 18 முஸ்லிம்களும், 4 இந்துக்களும் உயிரிழந்தனர். சட்டம், ஒழுங்கைக் காப்பாற்ற உடனடியாக ராணுவம் வரவழைக்கப்பட்டு 24 மணி நேரத்திற்குள் வன்முறை கட்டுப்படுத்தப்பட்டது.

தொடர்ந்து 14-2-1998 அன்று அத்வானி அவர்கள் கோவை வந்தபோது கோவையில் பல இடங்களில் வெடிகுண்டுகள் வெடித்ததில் 49 பேரும், குண்டுகள் தயாரித்தவர்கள் 6 பேரும், விபத்துக்களில் 4 பேரும் ஆக மொத்தம் 59 பேர் - (இதிலே 46 பேர் இந்துக்கள், 13 பேர் முஸ்லிம்கள்) மரணமடைந்தனர். இந்தச்

சம்பவங்கள் காரணமாக இதுவரை 167 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளனர்.

கோவையிலே இந்த வெடிகுண்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றவுடன் மறு நாளே நானும் திரு. மூப்பனார் அவர்களும் கோவைக்குச் சென்று பாதிக்கப்பட்ட இடங்களையெல்லாம் பார்த்த பிறகு செய்தியாளர்களிடம் கூறும்போது மத வெறி காரணமாகவோ அல்லது இது போன்ற வன்முறைச் செயல்களில் ஈடுபடுகின்ற வெறி காரணமாகவோ இத்தகைய கொடூரங்கள் விளைவிப்பவர்கள் யாராக இருந்தாலும் எந்த மதத்தைச் சேர்ந்த தீவிரவாதிகளாக இருந்தாலும் அவர்களை மிகக் கடுமையாக அடக்குவதற்கு சட்டரீதியில் முனைப்பான முயற்சிகள் தொடர்ந்து எடுக்கப்படும் என்றுதான் தெரிவித்தேனே தவிர எந்தவொரு தரப்பினரையும் குறிப்பிட்டு நான் குற்றஞ்சாட்டவில்லை.

இந்தச் சம்பவம் குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் திரு. நல்லகண்ணு அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் இந்தச் சம்பவத்திற்குப்பின் இரு தீவிரவாத அமைப்புக்களைத் தமிழக அரசு தடை செய்துள்ளது. நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டும், பல்வேறு இடங்களில் குண்டுகளையும் ஆயுதங்களையும் கைப்பற்றியுள்ளனர். கோவை நிகழ்ச்சியைக் காரணம் காட்டி தமிழக முதல்வர் பதவி விலக வேண்டும் எனச் சிலர் கேட்டிருப்பது அரசியல் ஆதாயங்கருதிப் பேசுவதாகும் என்று குறிப்பிட்டிருந்தார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் அந்தப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்த அந்தக் கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் விடுத்த அறிக்கையில் குண்டு வெடிப்புகளுக்குப் பிறகு நடந்த தாக்குதல்கள் சமூக விரோதிகளால் நடத்தப்பட்டது என்பது பொருத்தமாகத் தெரியவில்லை. நிலைமையைப் பயன்படுத்தி நகரத்தில் இருக்கும் அ.தி.மு.க.வினரும், அதன் தோழமைக் கட்சியினரும் வன்முறை சூறையாடல்களில் இறங்கியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. சிறுபான்மையினருக்கு எதிராக தங்களது வெறியைத் தீர்த்துக் கொள்ள பல சொத்துக்களைச் சேதப்படுத்தியிருக்கிறார்கள். தங்களது காழ்ப்புணர்ச்சியை வெளிப்படுத்துவதற்காக தி.மு.க., மார்க்சிஸ்ட் கட்சி ஆதரவாளர்களின் சொத்துக்களைச் சேதப்படுத்தியதையும் நேரில் பார்த்தேன். மாநில அரசு குண்டு

வெடிப்பில் சம்பந்தப்பட்ட அனைவரையும் புலன் விசாரணை மூலம் கண்டுபிடித்து போதிய ஆதாரம் காட்டி அவர்களுக்குச் சட்டத்தின் அதிகபட்ச தண்டனையை நீதிமன்றத்தின் மூலம் அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறியிருந்தார்.

அது மட்டுமல்ல; இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இயக்கத்தின் பெருந்தலைவர்களில் ஒருவரான திரு. அப்துஸ் சமது அவர்கள் விடுத்த அறிக்கையிலே அண்ணல் காந்தியடிகள் சொல்லியதையெல்லாம் மறந்துவிட்டு எல்லா மதத்தினரையும் சமமாகப் பாவித்து வாழக்கூடிய நிலைக்கு உலை வைக்க நினைக்கும் சக்திகளைத் தடுப்போம் என்று குறிப்பிட்டிருந்தார். 21-2-1998 அன்று திரு. சமத் அவர்களே வெளியிட்ட மற்றொரு அறிக்கையிலே, பிப்ரவரி 14ஆம் தேதி கோவையில் நடந்த குண்டு வெடிப்புகள் தமிழகத்தின் பாரம்பரிய பண்பாட்டிற்கு வெடி வைத்ததாக நிகழ்ந்திருக்கிறது. கோவை மாநகரம் இன்றைக்கு கொலை வெறிக்கு உதாரண பூமி போல நாடும் ஏடும் பேசும் அளவிற்கு தமிழகத்திற்கே தலை குனிவை ஏற்படுத்தி விட்டிருக்கிறது. இத்தகைய கொடூரமான செயலை ஒவ்வொருவரும் கண்டித்தாக வேண்டும். குற்றவாளிகளைக் கண்டறிந்து அவர்களைத் தண்டிக்க அரசு முற்பட்டிருக்கிறது. குண்டு வெடிப்புக்குக் காரணமானவர்கள் எவராயினும் அவர்கள் அனைவரையும் கைது செய்து உரிய தண்டனை வழங்க வேண்டுமென நாட்டு மக்கள் அனைவரும் வற்புறுத்தியுள்ளார்கள். ஒட்டு மொத்தமாக முஸ்லிம் சமுதாயத்தினரும் திட்டவட்டமாகக் கண்டித்திருக்கிறார்கள். அப்பாவி மக்கள் கொன்றொழிக்கப்படக் காரணமான குண்டுகளை வைப்பவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் மனித குலத்தின் விரோதிகளென இனம் காட்டப்பட வேண்டும். சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் தீங்குகளைத் தேடித் தரும் எத்தகைய தீவிரவாதங்களுக்கும் கொஞ்சமும் இடம் தராமல் எல்லா சமுதாய மக்களோடும் தமிழ்நாட்டிற்கே உரிய நட்புணர்வுடனும் பந்த பாசத்துடனும் சகஜ வாழ்வு நடத்த ஒத்துழைக்குமாறு அனைவரையும் வேண்டுகிறேன் என்று கேட்டுக் கொண்டிருந்தார்.

கோவை குண்டு வெடிப்பு சம்பந்தமாக தமிழக அரசின் சார்பில் வெள்ளை அறிக்கை ஒன்று 23-4-1998 அன்று அவையிலே வைக்கப்பட்டு அதன் மீது அவையிலே விவாதம் ஒன்று நடத்தப்பட

வேண்டுமென்ற கோரிக்கையையும் ஏற்று 11-5-1998 அன்று அந்த விவாதம் நடத்தப்பட்டது. அந்த விவாதத்தின்மீது சில கட்சிகளின் தலைவர்கள் பேசிய பேச்சுகளின் முக்கியப் பகுதிகள் வருமாறு :-

த.மா.கா.வைச் சேர்ந்த திரு. ச. அழகிரி :- 1992ஆம் ஆண்டிற்குப் பிறகுதான் வெடிகுண்டுக் கலாச்சாரம் தமிழகத்தில் பரவியது. பாபர் மசூதி இடிக்கப்பட்ட பிறகு இங்கிருக்கின்ற இஸ்லாமியர்களின் மனதிலே அது ஒரு மிகப் பெரிய வேதனையை ஏற்படுத்தியது. சிந்திக்க முடியாத இஸ்லாமியர்கள், வெகுண்டு எழக்கூடியவர்கள், எளிதில் உணர்ச்சிவசப்படக் கூடியவர்கள் என்ற வகையில் அதிலே இருக்கிற ஒரு சிலர் தீவிரவாதத்தைக் கையிலே எடுத்துக் கொண்டார்கள். அதன் தொடர்ச்சியாக ஜெயலலிதா ஆட்சி செய்த காலத்திலே பல்வேறு விதமான வன்முறைக் கலாச்சாரங்கள் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கின்றன. தி.மு.க. அரசாங்கம் வந்த பிறகுதான் வெடி குண்டுக் கலாச்சாரம் வந்திருக்கிறது என்று சொல்ல முடியாது. 1992இல் இருந்தே அது தொடர்கிறது என்பதற்குச் சான்று உள்ளது. கோவை குண்டு வெடிப்பிற்குப் பிறகு இரண்டு மணி நேரத்திலேயே அல்-உம்மா இயக்கம் தடை செய்யப்பட்டது. ஜிகாத் கமிட்டி தடை செய்யப்பட்டது. அதற்காக முதலமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு டி. மணி (மார்க்சிஸ்ட் கட்சி) :- கோவை குண்டு வெடிப்புக்குப் பிறகு அரசு வேகமாகச் செயல்பட்டு தீவிரவாதிகளைக் கண்டுபிடித்து கைது செய்ததையும் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டுகளைக் கண்டுபிடித்து மேலும் அதைத் தேடுதல் செய்வதில் தீவிரப் பணிகள் நடத்தி வருவதையும் வரவேற்கிறேன். தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு மத வெறியர்கள் குண்டு கலாச்சாரத்தை அமல்படுத்த ஆரம்பித்தார்கள் என்பது சரியல்ல. ஆர்.எஸ்.எஸ். அலுவலகம் குண்டு வைத்து உடைக்கப்பட்டதும் இந்து முன்னணி அலுவலகம் குண்டு வைத்து உடைக்கப்பட்டதுமான இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடந்தவைதான்.

திரு. அப்துல் லத்தீப் :- வெள்ளை அறிக்கையிலே ஆர்.எஸ்.எஸ். தீவிரவாதிகள் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் முஸ்லிம்களைச் சொல்லும் போது முஸ்லிம் தீவிரவாதிகள்

என்று சொல்லப்பட்டுள்ளது. இது நாட்டிலே ஒருவிதமான எண்ணத்தை உருவாக்கியிருக்கிறது. வேண்டுமானால் அல்-உம்மா தீவிரவாதிகள் என்று சொல்லுங்கள். யார் இதிலே சம்பந்தப்பட்டவர்களோ அப்படிச் சொல்லுங்கள். அல்-உம்மா தீவிரவாதிகள் அல்லது மற்ற தீவிரவாதிகள் என்று சொல்லுங்கள். முள்ளிலே துணி பட்டாலும், துணியிலே முள் பட்டாலும் துணிக்குத்தான் அது கேடு என்பதை இஸ்லாமியச் சகோதரர்கள் எண்ணத்தில் வைத்து நிதானமாகவும், விவேகமாகவும், பொறுமையாகவும், மற்ற சகோதரர்களோடு உடன்பிறப்புக்களாகவும், விட்டுக் கொடுப்பவர்களாகவும், சகித்துக் கொள்ளக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டுமே தவிர தீவிரவாதிகள் என்ற பெயரை எந்த முஸ்லிம் பெற்றாலும் அவன் பெருமானாருடைய வாழ்க்கை முறையிலிருந்து மாறியவன் என்பதை எண்ணத்தில் கொண்டு அமைதிக்காகப் பாடுபட்டு அமைதியானவன் என்ற நற்பெயரை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. சுப்பராயன் (சி.பி.ஐ.) :- தீவிரவாதம் திடீரென்று தி.மு.க. ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால் தோன்றியதாகக் கருதுவது அடிமனதில் ஏற்பட்டிருக்கின்ற அரசியல் அரிப்பின் காரணமாக வலிந்து சொல்லப்படுகிற ஒரு குற்றச்சாட்டே தவிர வேறொன்றும் அல்ல.

திரு. சோ. பாலகிருஷ்ணன் (எதிர்க்கட்சித் தலைவர்) :- அநியாயமாக குண்டுகளை வைத்து இந்துக்கள் என்றும் பாராமல், முஸ்லிம்கள் என்றும் பாராமல், கிறித்தவர்கள் என்றும் பாராமல் அப்பாவி மக்களைக் கொலை செய்வதற்காக இந்த மோசமான செயலில் பாட்ஷா ஈடுபட்டதை ஆண்டவன் மன்னிக்க மாட்டான். **குரானில் எவர் மக்களுக்கு அநியாயங்கள் செய்து மிதமிஞ்சி பூமியில் அட்டூழியங்கள் செய்கிறார்களோ அவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஒரு கொடுமைக்காரனுக்கு அவன் கொடுமைக்காரன் என்பதை அறிந்திருந்தும் துணைபுரிந்து வலிவூட்டுகிறவன் இஸ்லாத்தை விட்டு வெளியேற்றப்படுவான் என்று நபிகள் நாயகம் (சல்) அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.** ஆகவே நம்முடைய அரசு இந்தக் கொடுமைக்காரனுக்கு எவ்வளவு கடுமையான தண்டனை கொடுக்க முடியுமோ அவன் யாராக இருந்தாலும் சரி, எவ்வளவு

பெரிய மனிதனாக இருந்தாலும் சரி, அவ்வளவு கடுமையான தண்டனை அவனுக்குக் கொடுக்க வேண்டும்.

வெள்ளை அறிக்கை மீதான விவாதம் அன்று முடிவுற்ற பிறகு இறுதியில் நான் நீண்ட விளக்கம் அளித்து என் உரையை முடிக்கும்போது இங்கே இந்து என்றோ முஸ்லிம் என்றோ சொல்லக் கூடாது. அந்த தீவிரவாத இயக்கத்தின் பெயரை மட்டும் சொன்னால் போதும் என்று சொன்னார்கள். அப்படி ஏதாவது தவறாகக் குறிப்பிடப்பட்டிருந்தால் திருத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். குண்டு வெடிப்பு போன்ற தீவிரமான காரியங்களால் சட்டம் ஒழுங்கு அமைதியைக் குலைப்பதற்கு யார் முன் வந்தாலும், அவர்கள் முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அல்லது இந்து சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சட்டம் ஒழுங்கு அமைதியைக் கெடுப்பதற்காகத் திட்டமிட்டு யார் அந்தக் காரியத்தைச் செய்தாலும் அவர்கள் மீது அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்று உறுதி அளித்தேன்.

உடன்பிறப்பே,

இவ்வாறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் மாத்திரமல்ல; சென்னை வளர்ச்சி ஆய்வுக் கழகத்தின் ஆலோசகராகப் பணியாற்றி வந்த திரு. ஜெயரஞ்சன் தமிழ்நாட்டில் இஸ்லாமிய தீவிரவாதம் என்ற தலைப்பில் ஓர் ஆங்கில இதழில் (இந்து) 30-4-1998இல் ஒரு கட்டுரையே எழுதியிருந்தார். அதில் சில குறிப்பிட்ட பகுதிகள் வருமாறு :-

"தமிழ்நாட்டில் இஸ்லாமிய தீவிரவாத இயக்கம் வளர்ந்ததற்கான அரசியல் காரணத்தை அறிவதற்கு கோவை குண்டு வெடிப்பு சம்பவங்களுக்காக கைதானவர்களின் வயது உதவி செய்யும். கைதானவர்களில் பெரும்பாலோர் 20 வயதை நெருங்கியவர்கள். அல்லது 20க்கு ஓரிரு வயது அதிகமானவர்கள். வேறு வார்த்தையில் சொல்வதென்றால் நெருக்கடி காலத்திற்குப் பிறகு உருவான முஸ்லிம் சந்ததியைச் சேர்ந்தவர்கள். 1980களின் இறுதியிலும் 1990 தொடக்கத்திலும் அரசியல் உணர்வு பெற்றவர்கள். அ.தி.மு.க. தான் இந்தக் காலகட்டத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தது.

இந்தக் காலகட்டத்தில்தான் திராவிட இயக்கத்தின் சமயச் சார்பற்ற அரசியல் நிலை தொடர்ந்து சிதைக்கப்பட்டது.

இந்தச் சிதைவை அ.தி.மு.க.வே உறுதி செய்தது. சி.என். அண்ணாதுரை, மு. க. போன்ற தி.மு.க. தலைவர்கள் தங்களுக்கு எந்த மதத்தின்பாலும் ஒட்டுதல் இல்லை என்று கூறி, பல்வேறு மதங்களைச் சார்ந்தவர்களைத் தமிழர்கள் என்ற பரந்த உணர்வின் கீழ் ஒன்றுபடுத்தினார்கள்.

ஆனால் அ.தி.மு.க.வினர் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களாக காட்டிக் கொண்டனர். அ.தி.மு.க. தலைவர்கள் தி.மு.க.வின் முஸ்லிம் ஆதரவு, கிறித்தவ ஆதரவு கொள்கைக்காக தி.மு.க.வை விமர்சிக்கத் தொடங்கினார்கள். தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் அயோத்தியில் கரசேவை நடைபெறுவதற்கு ஆதரவாக ஜெயலலிதா வாதாடினார். முஸ்லிம்களுக்கு ஆதரவாக அவர் பேசவில்லை. ராமர் கோயிலைக் கட்டியே தீர வேண்டும் என்று வலியுறுத்தினார்.

நாட்டில் உள்ள அரசியல் கட்சித் தலைவர்களில் ஜெயலலிதா ஒருவர் மட்டுமே அயோத்தியில் கரசேவை நடைபெறுவதற்கு ஆதரவு தந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. சட்டம் ஒழுங்கு சீர்குலைவுக்காக அல்லது இஸ்லாமிய தீவிரவாதம் தலை தூக்கியதற்காக தி.மு.க. அரசப் பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்று வலியுறுத்துகிறவர்கள் அ.இ.அ.தி.மு.க. செய்த பாவங்களுக்கான விலையை தி.மு.க. கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள்" என்று அந்த நீண்ட கட்டுரையிலே எழுதப்பட்டிருந்தது.

கழகப் பொதுச்செயலாளர் பேராசிரியர் அறிக்கைக்குப் பிறகும் என்னைப் பற்றியோ, என் தலைமையில் உள்ள தி.மு.க.வைப் பற்றியோ திட்டமிட்டு வேண்டுமென்றே பழி கூறுபவர்களைத் தவிர வேறு எவரும் எங்களுக்கு சிறுபான்மையோர் விரோதி என்ற முத்திரையைக் குத்த முன்வரமாட்டார்கள்.

இன்னமும் ஐயப்பாடு உடையவர்களுக்கு இக்கடிதத்தில் குறிப்பிடப்படும் கருத்துக்களும், செய்திகளும் அவர்களின் ஐயம் போக்கிடப் பயன்படும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

எக்ஸ்பிரஸ் கட்டுரையாளர் தேர்தல் நேரங்களில் முஸ்லிம் வாக்குகளுக்காக அவர்களோடு தோழமை கொள்ள செய்யப்படும் முயற்சி குறித்து விமர்சித்துள்ளார்.

அத்தகைய ஆதாயத்துக்காக தி.மு.கழகம் இஸ்லாமியர் அல்லது கிறித்தவர்களது நட்பையோ உறவையோ கொண்டிருக்கவில்லை

என்பது; இக்கழகம் தேர்தலுக்கு நிற்காத காலத்திலிருந்தே அவர்களிடம் கொண்டிருந்த அன்பையும், ஆதரவையும் வைத்துத் தீர்மானித்துவிடலாம்.

1972ல் கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்கள் மறைந்த காலத்திலிருந்து இந்த முப்பது ஆண்டு காலமாக தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 5ஆம் தேதி காலையில் இடைவிடாது ஆளுங்கட்சியாக இருந்தபோதும் இல்லாதபோதும் - தவறாமல் அவரது நினைவிடம் சென்று மலர் அங்கி போர்த்துகிற ஒரு கட்சியின் தலைவன் நான் மட்டுமே என்பதை அறிந்தவர்களுக்கு எனக்கும் என் தலைமையில் உள்ள கழகத்திற்கும் இஸ்லாமியச் சமுதாயத்திற்கும் இடையே உள்ள உறவு தெரியும்! மனித நேயம் - மத நல்லிணக்கம் எனும் மாசற்ற கொள்கைக்கு தி.மு.கழகம் ஒரு பாசறை என்ற உண்மையும் புரியும்!

அன்புள்ள,

மு. க.

(22-06-2001)

2611. அம்பலம்! அம்பலம்!
அரிசியை வைத்து ஆடிய கூத்து!

உடன்பிறப்பே,

தேர்தலுக்குப் பிறகு பேரவையில் ஆளுநர் ஆற்றிய உரையின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு ஜூன் 1 ஆம் தேதி முதலமைச்சர் ஜெயலலிதா பதிலளித்தார். அப்போது அவர் குறிப்பிட்ட வாசகத்தை அவருடைய கட்சிப் பத்திரிகையில் வந்ததையே குறிப்பிடுகிறேன். அது பின்வருமாறு :-

முன்னாள் முதலமைச்சர் நாங்கள் பற்றாக்குறையை வைத்து விட்டுப் போகவில்லை, ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள அரிசியை வைத்து விட்டுப் போயிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார். இது தமிழ்நாடு அரசாங்கத்திலிருந்து கொடுக்கப்பட்ட பணம் அல்ல. ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவிடமிருந்து தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் 1,512 கோடி ரூபாய் கடன் பெற்றிருக்கிறது. அதிலே அரிசி வாங்கி வைத்திருக்கிறார்கள்.

இது ஜெயலலிதாவின் சட்டப்பேரவை பேச்சு. ஜெயலலிதா சொன்னது தவறான விவரம் என்பதை விஷயம் அறிந்தோர் புரிந்து கொள்வார்கள். ரிசர்வ் வங்கிக்கும், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கும் எந்தவிதமான நேரடி சம்பந்தமும் கிடையாது. ஜெயலலிதா சட்டப்பேரவையில் தெரிவித்ததைப்போல சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு ரிசர்வ் வங்கி நேரடியாக கடன் தருவதில்லை. இந்தத் தொகையை அரசாங்கம்தான் ரிசர்வ் வங்கியிலிருந்து கடனாகப் பெற்று சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு அவ்வப்போது மானியமாக வழங்கி வருகிறது. இதனை ஜெயலலிதா நிதித்துறைச் செயலாளரைக் கேட்டு தெளிவு பெறலாம்.

நான் கூறியதெல்லாம் அரசின் கையிருப்பிலே சுமார் 5 லட்சம் டன் அரிசியும், 9 லட்சம் டன் அரிசிக்குரிய நெல்லும் இருக்கிறது என்பதுதான். ஆனால் ஜெயலலிதா ஆளுநர் உரையாற்றிய

அன்றைய தினமே பேரவை தாழ்வாரத்தில் நிருபர்களைச் சந்தித்தபோது கருணாநிதி சொல்வதுபோல அரிசி கையிருப்பு இல்லை. அவர் சொல்வது தவறான தகவல் என்று கூறிவிட்டு பிறகு சட்டப்பேரவையில் அரிசி இருக்கிறதென்பதை அவரே ஒத்துக்கொண்டு ஆனால் அது புளுத்துப் போன அரிசி, உளுத்துப் போன அரிசி, பூச்சி புழு பிடித்த அரிசி, அழுகிப்போன அரிசி, யாரும் சாப்பிட முடியாத அரிசி என்று; அந்த வார்த்தைகளைக் கேட்டாலே கேட்பவர்களுக்கு வாந்தி வரக்கூடிய நிலையில் வர்ணனை செய்தார்.

பின்னர் ஜூன் 8ஆம் தேதி நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் அரிசி கையிருப்பு பற்றி ஒரு பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதில் வழங்கக்கூடிய (ISSUABLE) அளவிற்குள்ள அரிசி 4,85,116 டன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தப் பட்டியலின் படிவத்தை இந்தக் கடிதத்துடன் இணைத்திருக்கிறேன்.

அதே பட்டியலில் வழங்க இயலாத (NON-ISSUABLE) அரிசி 64,339 டன் என்பதற்கான விவரங்களும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த 64,339 டன் அரிசியைத்தான் ஜெயலலிதா 65 ஆயிரம் டன் புழுத்த அரிசி, 65 கோடி ரூபாய் ஊழல் என்றெல்லாம் செய்தியாளர்களிடம் கூறி அந்தச் செய்தி கொட்டை எழுத்துக்களில் ஏடுகளில் வெளியிடப்பட்டது. வழங்க இயலாத (NON-ISSUABLE) அரிசிக்கான விவரப் பட்டியலையும், அந்த இலாகா தயாரித்ததை அப்படியே இந்தக் கடிதத்தில் இணைத்துள்ளேன்.

இந்த வழங்க இயலாத (NON-ISSUABLE) அரிசி பட்டியலில் T.K.M.9-FAQ என்ற அரிசியின் அளவு 44,451 டன் என்று குறிப்பிடப்பட்டிருப்பதை அதனை மட்டும் கூட்டிப்பார்த்தால் தெரிந்து கொள்ளலாம். இந்த அரிசி உள்ளிட்ட 65 ஆயிரம் டன் வழங்க இயலாத (NON-ISSUABLE) அரிசியைத்தான் புழுத்துப்போன அரிசி என்று ஜெயலலிதா தெரிவித்து அது குறித்து விசாரணை நடத்தப் போவதாக அறிவித்தார்.

இதைப்பற்றி நான் சொல்வதும் உன் போன்ற உடன்பிறப்புகள் புரிந்து கொள்வதும் பிறகு இருக்கட்டும். முதலில் சம்பந்தப்பட்ட ஒரு அதிகாரி என்ன சொல்கிறார் என்று பார்ப்போம்.

A Quantity of around 45.000 MTs. of TKM-9 Red Colour variety of good quality of F A Q (Fair Average Quality) standard rice (Boiled

Rice-Common-32,000 MTs. and Raw Rice-Common-13,000 MTs.) is available in our State என்று சொல்கிறார்.

இது ஜெயலலிதா சொன்ன புளுத்துப் போன அரிசி, உளுத்துப் போன அரிசி, பூச்சி புழு பிடித்த அரிசி, அழுகிப் போன அரிசி, யாரும் சாப்பிட முடியாத அரிசி என்ற வர்ணனைக்கு முற்றிலும் மாறான அறைகூவல் போன்ற பதிலாகும்.

இப்படி சொன்ன அதிகாரி யார்? மன்னிக்கவும். அந்த அதிகாரி சொல்லவில்லை; அந்த வாசகங்களை கடிதமாக எழுதியிருக்கிறார்? கேரள அரசுக்கு எழுதியிருக்கிறார். சஸ்பென்ஸ் வைக்க விரும்பவில்லை. அந்த அதிகாரியின் பெயர் திரு. வி. குணாளன் ஐ.ஏ.எஸ். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக ஜெயலலிதாவினால் அண்மையில் நியமிக்கப்பட்டவர். அவர் கேரள அரசுக்கு அண்மையில் 12-6-2001 அன்று எழுதிய கடிதத்தை முழுமையாக இத்துடன் இணைத்துள்ளேன்.

A Quantity of around 45,000 MTs. of TKM-9 Red Colour variety of good quality of FAQ (Fair Average Quality) standard rice (Boiled Rice-Common-32,000 MTs. and Raw Rice-Common-13,000 MTs.) is available in our State. Since we are having sufficient stock of rice in storage, we propose to sell this variety of rice to Kerala State Civil Supplies Corporation, since this variety of rice is preferred in the State of Kerala. We request you to depute your official to verify the quality of the stock of rice and also to discuss regarding the terms and conditions and the rate at which you will propose to purchase of the above stock of rice from us.

(45 ஆயிரம் மெட்ரிக் டன் அளவுக்கு டி.கே.எம். 9 ரக சிகப்புக் கலர் கொண்ட நல்ல தரமுள்ள - Fair Average Quality அரிசி, (புழுங்கல் அரிசி 32 ஆயிரம் டன், பச்சரிசி 13 ஆயிரம் டன்) எங்கள் மாநிலத்திலே உள்ளது. எங்கள் கையிருப்பில் போதுமான அளவிற்கு அரிசி இருப்பதால், இந்த ரக அரிசியை கேரள மாநிலத்திலே உள்ளவர்கள் விரும்புவார்கள் என்பதால் இந்த அரிசியை கேரள மாநில நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு விற்று விடலாம் என்று எண்ணுகிறோம். எனவே உங்கள் அதிகாரியை இந்த அரிசியை சரிபார்க்கச் செய்வதோடு இந்த அரிசியை என்ன

விலைக்கு நீங்கள் வாங்கிக் கொள்வீர்கள் என்பது பற்றிய மற்ற விவரங்களையும் பேசுவதற்காக அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்)

இவ்வாறு கடந்த 12ந்தேதியன்று கேரளவிற்கு கடிதம் எழுதியிருக்கிறார்.

கடந்த 8ஆம் தேதி வழங்க இயலும் அரிசி, வழங்க இயலாத அரிசி என்று பட்டியலிட்டு அதிலும் 45 ஆயிரம் டன் T.K.M.-FAQ அரிசியை வழங்க இயலாத அரிசி என்று பட்டியலிட்டு காட்டப்பட்டுள்ள - ஜெயலலிதா பாஷையில் சொன்னால் புழுத்துப்போன அரிசியை கேரளாவிற்கு நல்ல அரிசி என்று கூறி விற்பதற்கு கேரள அரசின் சம்மதத்தை ஜெயலலிதா அரசின் அதிகாரி கேட்கிறார் என்றால் ஜெயலலிதா யாரை ஏமாற்றுகிறார்? என்ற கேள்விக்கு யார் பதிலளிப்பது?

வழங்க இயலாத அரிசி என்று சொன்னபோதிலும் வழக்கமாக இதே தரமுள்ள அரிசி கேரள மாநிலத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட காரணத்தால்தான் இப்போது அந்த அனுபவத்தைக் கொண்டு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் 45 ஆயிரம் டன் அரிசியை கேரளாவிற்கு விற்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு கேரள அரசிற்கு அதிகாரியினால் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

பொதுவாக மழைக் காலங்களில் விவசாயிகளிடம் நெல் கொள்முதல் செய்யும்பொழுது எல்லா மாநிலங்களிலுமே அவர்களுடைய வேண்டுகோளையும், வற்புறுத்தல்களையும் மதித்து ஈரப்பதம் அதிகமுள்ள நெல்லை கொள்முதல் செய்ய வேண்டிய நிலை அரசுக்கு ஏற்படுகிறது. 1998ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27ஆம் நாள் அப்போது மத்திய அமைச்சராக இருந்த சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் எனக்கு எழுதிய கடிதம் ஒன்றில் வட மாநிலங்களில் அறுவடைக் காலங்களில் பெருமழை காரணமாக அதிக ஈரப்பதம் உள்ள நெல்லை கொள்முதல் செய்வது பற்றியும், அப்படிச் செய்தால் ஓரளவிற்கு அரிசி தரம் குறைந்து விடுவதாகவும், அப்படிப்பட்ட அரிசியை மற்ற மாநிலங்களைப் போலவே தமிழக அரசும் மக்களிடையே விநியோகிப்பதற்காக பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டிருந்தார் என்பதைப் பார்க்கும்போது இத்தகைய ரக அரிசியை கையிருப்பிலே

வைத்திருப்பது தமிழகத்திற்கு மாத்திரம் உரிய பிரச்சினை அல்ல; அகில இந்திய அளவிலே உள்ள பிரச்சினை என்பதும் தெளிவாகும்.

தமிழகத்திலே 1982ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியிலும், 1992ஆம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சியிலும்கூட 25 விழுக்காடு வரையில் ஈரப்பதம் உள்ள நெல்லை கொள்முதல் செய்யலாம் என்பதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

அவற்றைத் தொடர்ந்து மேலும் பார்த்தால் 21-1-1993 தேதியிட்ட ஜெயலலிதா அரசின் ஆணை ஒன்றிலே தெரிவிக்கப்பட்ட விவரம் வருமாறு :-

> தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்குப் பிறகும் 1992ஆம் ஆண்டு குறுவைப் பருவ காலத்தில் கொள்முதல் செய்யப்பட்ட அதிக ஈரப்பதம் உள்ள நெல்லை பாதுகாப்பாக கையிருப்பில் வைத்திருந்ததில் அதிக ஈரம் காரணமாக குறுகிய காலத்திலேயே அதன் நிறம் மாறியதோடு, அதனை அரவை செய்து கிடைத்த அரிசியின் கலரும் அதிக அளவிற்கு மாறி விட்டது. நல்ல தரமுள்ள நெல்லோடு சேர்த்து இதனை அரவை செய்த போதும்கூட இதில் எந்த முன்னேற்றத்தையும் காண இயலவில்லை. மக்களுக்கு பொது விநியோக முறையில் தரப்படும் அரிசியோடு 15 விழுக்காடு அளவிற்கு கலர் மாறிய அரிசியையும் சேர்த்து வழங்குவதற்கு சிறப்பு நேர்வாக அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் கேட்டுள்ளார். இந்தத் திட்டத்தை சிவில் சப்ளைஸ் கமிஷனர் அவர்களும் ஏற்றுக் கொண்டுள்ளார். குறுவை நெல்லிலே கலர் மாற்றம் என்பது ஒரு இயற்கையான நிகழ்வு என்பதால் அரசாங்கம் இந்தப் பரிந்துரையை ஆராய்ந்து ஒப்புக் கொண்டு 15 விழுக்காடு அளவிற்கு கலர் மாறிய அரிசியை ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி பொது விநியோகத் திட்டத்தின் வாயிலாக விநியோகிக்கலாம் என ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

உடன்பிறப்பே,

இவ்வாறு கலர் மாறிய அரிசியை பொது விநியோகத் திட்டத்தின் மூலம் மக்களுக்கு சாப்பிடுவதற்காக வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது எந்த ஆட்சியில் தெரியுமா? 1993 ஆம் ஆண்டு சாட்சாத் ஜெயலலிதாவின் ஆட்சியிலேதான். இதையெல்லாம் அப்படியே மறைத்து விட்டு மக்களை முட்டாள்களாகக் கருதி தற்போது அரிசி கொள்முதலிலே ஊழல் என்றும், விசாரணை என்றும், புழு பூச்சி என்றும் முழங்குகிறார் என்றால் என்ன நியாயம்?

புழுத்த அரிசி என்று பொதுவில் கூறிவிட்டு; அந்தப் பொய்யை மெய்போலக் காட்டுவதற்காக; அமைச்சர்களின் சோதனை ஊர்வலம் - அதிகாரிகளுக்கு மிரட்டல் - தொழிலாளர்க்குத் தொல்லை - இந்த நாடகமெல்லாம் நாடாள வந்த நாயகிக்குத் தேவைதானா? அம்பலம்; அம்பலம் - அரிசியை வைத்து ஆடிய கூத்து! அம்பலம்; அம்பலம் எனப் பாடிடத் தோன்றுகிறது அல்லவா!

அன்புள்ள,

மு. க.

(23-06-2001)

2612. மனம் திறந்து சொல்லுகிறேன்; மறு பதிப்பு?

உடன்பிறப்பே,

அ.தி.மு.க. அரசுக்கு ஆலோசனை சொல்லும் அருகதை கருணாநிதிக்கு இல்லை என்கிறார் திருமதி ஜெயலலிதா!

இன்னொரு நடிகையோ அந்த அருகதை ஆட்டோ சங்கருக்குத்தான் உண்டு, முன்னாள் முதலமைச்சருக்குக் கிடையாது என்பதுபோல அறிக்கை விட்டிருக்கிறார்.

முதலமைச்சராகக் கொம்பிலேறி நிற்கும் ஜெயலலிதாவின் குற்றச்சாட்டை முதலில் கவனிப்போம்.

நான் ஒருமுறைகூட ஆந்திர முதலமைச்சரை நேரில் சந்தித்து கிருஷ்ணா தண்ணீர் பற்றிப் பேசியதே இல்லையாம்; அப்படிப்பட்ட நிலையில் ஜெயலலிதாவைப் பார்த்து ஆந்திர முதல்வரிடம் நேரடியாகத் தண்ணீர் பற்றிப் பேசிட ஜெயலலிதா முயற்சி செய்யவேண்டும் என்று தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்ததினால் அம்மையார் அவர்களுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்துவிட்டதாம். அதனால் எனக்கு அருகதை இல்லை என்கிறாராம்! குடிதண்ணீரில் அரசியல் செய்கிறேன் என்று குதிக்கிற அரை வேக்காட்டுத்தனத்தை வேறு என்னவென்று விமர்சிப்பது?

ஆணவம், மமதை, செருக்கு, கர்வம், அலட்சியம், எடுத்தேன் கவிழ்த்தேன் பேச்சு, ஏனோ தானோ போக்கு - இவையனைத்துக்கும் ஒரே அர்த்தம்தான் எனினும்; இவை ஒவ்வொன்றின் தாக்கமும் பெற்றுத் தாண்டவமாடுகிற தகுதியும் உரிமையும் அருகதையும் அந்தஸ்தும் திருமதி. ஜெயலலிதா ஒருவருக்கே உண்டு என்பதை நானும் மறுக்கவில்லை; நடுநிலையுடன் சிந்திப்போர் எவரும் மறுக்க முடியாது.

ஆந்திர முதல்வர்களை நான் நேரில் சந்திக்கவே இல்லையென்பது எவ்வளவு பொய்மைச் சகதியில் தோய்த்தெடுத்த

குற்றச்சாட்டு என்பதை நாடு அறியட்டும்! நல்லோர் உணரட்டும்!

1976ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களால் அறிவிக்கப்பட்டு, 1983ஆம் ஆண்டு முதலமைச்சர்கள் எம்.ஜி.ஆர்., என்.டி. ராமாராவ் ஆகியோர் முன்னிலையில் சென்னையில் அடிக்கல் நாட்டப்பெற்ற கிருஷ்ணா நதி நீர் திட்டம் 1989ஆம் ஆண்டு வரையில் ஏறத்தாழ கிடப்பிலே போடப்பட்டிருந்த சூழ்நிலையில்; 1989ல் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்புக்குவந்த நான் ஆந்திர மாநிலம் ஐதராபாத்துக்கு 18.6.89 அன்று சென்று ஆந்திர முதலமைச்சர் என்.டி. ராமாராவ் அவர்களைச் சந்தித்தேன். என்னுடன் தம்பி முரசொலி மாறன், அமைச்சர்கள் ஆர்க்காடு வீராசாமி, தம்பி துரைமுருகன் ஆகியோரும் வந்திருந்தனர். ஐதராபாத்தில் ராமாராவ் இல்லத்திலேயே கிருஷ்ணா நதி நீர் திட்டத்தைக் கிடப்பிலே இருந்து விடுவித்து; அதனைப் புதுப்பித்துத் தொடர்ந்து நடத்துவதற்கான வழிமுறைகள், நிதிப் பங்கீடுகள் அனைத்தும் இணைந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து பணிகள் ஆரம்பமாயின. சென்னையிலும் ஆந்திர முதல்வரை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டதுண்டு.

மீண்டும் ஒருமுறை கிருஷ்ணா நீர் திட்டத்துக்கான சில பிரச்சினைகளில் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வு காண ஆந்திர மாநிலம் சென்று முதலமைச்சர் இராமாராவ் அவர்களுடன் விவாதித்திருக்கிறேன்.

அடுத்து 1990 பிப்ரவரியில் முதலமைச்சராக இருந்த சென்னாரெட்டி அவர்களிடமும் ஐதராபாத் சென்று கிருஷ்ணா நீர் குறித்து விவாதித்திருக்கிறேன். அப்போது அருகதையற்ற (உபயம் : ஜெயலலிதா) என்னை ஆந்திர முதலமைச்சர் திரு. சென்னாரெட்டி அவர்கள் அவருடைய அமைச்சரவை சகாக்கள் அத்தனை பேருடனும் விமான நிலையம் வந்திருந்து வரவேற்றார்.

1989 முதல் 1991 தி.மு.க. ஆட்சி கலைக்கப்படும் வரையில் நான் ஐதராபாத்துக்குப் பயணம் சென்றதெல்லாம்; கம்புக்கும் களை வெட்டித் தம்பிக்கும் பெண் பார்த்து என்பார்களே; அது போல ஐதராபாத்தில் திராட்சை தோட்டம் பராமரிப்புக்காகவோ; அங்கு உல்லாசத் தங்குதலுக்காகவோ அல்ல!

எனவே, இப்படி 1976ல் அறிவிக்கப்பட்டும் - ஆரம்பிக்கப்படாமலே சுணங்கிவிட்ட கிருஷ்ணா நதி நீர் திட்டத்தை மீண்டும் தொடர முயற்சி மேற்கொண்டு அதற்காகவே நானே இரண்டு தடவைக்கு மேல் நேரிலும் முதல்வர்களுடன் விவாதித்து கழக அரசின் அமைச்சர்களை மூன்று நான்கு தடவை கிருஷ்ணா நீர் வரத்துக்கான பணி நடைபெறும் இடங்களுக்கு சோமசீலாவிலிருந்து பூண்டிவரையில் பத்திரிகையாளர்களுடன் செல்லுகிற நிலையை உருவாக்கினேன்.

வேலைகள் வேகமாக நடைபெற ஆக்கமும் அதற்குரிய நிதி ஏற்பாடுகளும் செய்த எனக்கு கிருஷ்ணா நதி நீர் பற்றி யோசனை சொல்ல அருகதை கிடையாது என்று திருமதி ஜெயலலிதா கொட்டி முழக்குவது கொல்லைக் காட்டு நரியின் ஊளையாகத்தான் எனக்குத் தெரிகிறது. என் செய்வது; கொல்லைக் காட்டு நரிகளைப் பார்த்துக் பல்லைக் காட்டும் பிராணிகளும் உள்ளனவே!

1989, 1990 ஆகிய இரண்டு ஆண்டுகளில் தி.மு.க. அரசு, ஆந்திர அரசுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு - இரு அரசுகளின் தொடர்புடைய அமைச்சர்களின் கலந்துரையாடல் கூட்டங்கள் - இரு அரசுகளின் பொறியாளர்கள் கூட்டங்கள் - அதிகாரிகள் கூட்டங்கள் நடைபெற்று; வாரம் ஒரு முறையாவது ஆந்திர முதல்வருடன் நான் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசி; ஆந்திரப் பகுதியில் அவர்கள் ஏற்றுக் கொண்ட பணியை அவர்கள் முடிக்கவும் - தமிழகப் பகுதியில் நாம் ஏற்றுக்கொண்ட வாய்க்கால் அமைக்கும் பணியை நாம் முடிக்கவும் முடிவு செய்து கொண்டு அவற்றில் பெரும் பகுதிப் பணிகள் நிறைவேறிய நிலையில் - 1996 பொதுத் தேர்தலுக்கு முன்பே 1995 டிசம்பரில் கிருஷ்ணா நீரை திறந்து விட வேண்டுமென்று அன்றைய முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா ஆந்திர முதல்வருக்குக் கடிதம் எழுதினார். அந்தக் கடிதம் எழுதிய தேதி 18-12-1995 என்பதாகும். அதாவது ஐந்தாண்டு கால ஜெயா ஆட்சியில் ஒரே ஒரு கடிதம். ஆனால் தி.மு.க. ஆட்சியில் கிருஷ்ணா நீர் பற்றி ஐந்து கடிதங்கள் ஆந்திராவுக்கு எழுதப்பட்டுள்ளன.

ஜெயலலிதா எதிர்பார்த்தபடி 1996 பொதுத் தேர்தலுக்கு முன்பு கிருஷ்ணா நீர் சென்னைக்கு வரவில்லை.

1996ல் தி.மு.க. ஆட்சி, நான்காவது முறையாக பொறுப்பேற்றவுடன் கிருஷ்ணா திட்டத்துக்கு ஆந்திரத்திலும், தமிழகத்திலும் எஞ்சியுள்ள பணிகளை முடிப்பதற்கு மின்னல்

வேகத்தில் செயல்பட்டு; (நீதிமன்றத்தில் சிலர் தடையாணை பெற்றதின் காரணமாக 13 கி.மீ. தூரம் ஆந்திரப் பகுதியில் கால்வாய் வெட்ட முடியாமல் போனது தவிர) மீதமுள்ள எல்லாப் பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன.

இவ்வளவுக்கும் பிறகு தி.மு.க. ஆட்சியில் 1996 செப்டம்பர் முதல் திறந்துவிடப்பட்டு வருகின்ற கிருஷ்ணா நீரை ஒத்துக் கொள்ள மறுத்து அது கிருஷ்ணா நீரே அல்ல என்று சட்டசபையில் பெருங்குரலெடுத்துப் பேசிய ஜெயலலிதா;

இப்போது கிருஷ்ணா நீர் ஜூலை 12 முதல் மீண்டும் வருகிறது என்கிறார். மகிழ்ச்சி.

மோசடிக்கு உடந்தையானவர் ஆந்திர முதல்வர் என்று சட்டப்பேரவையிலேயே அர்ச்சித்த வாயால் நாயுடுகாரு அவர்களுக்கு நன்றியும் தெரிவிக்கிறார். எனவே மறப்போம்; மன்னிப்போம்! (அண்ணா வாழ்க)

கிருஷ்ணா நீரே வரவேயில்லை என்றவர்களுக்கு ஆந்திர அரசு அளித்த விளக்கம் பின்வருமாறு :-

1997இல் 2.87 டி.எம்.சி. தண்ணீர் சென்னைக்கு வந்தது.
1998இல் 2.87 டி.எம்.சி. தண்ணீர் சென்னை நகருக்கு வந்துள்ளது.
1999இல் 1.83 டி.எம்.சி. தண்ணீர் சென்னைக்கு வந்தது.
11.5.2000 முதல் 6.11.2000 வரை 2.101 டி.எம்.சி. தண்ணீர் சென்னைக்கு வந்துள்ளது.

இப்போது கூட சென்னை நகர மக்களின் தாகம் தணிந்திட, தவிப்பு நீங்கிட, நமக்கு பொறுப்பு உண்டு என்ற உணர்வின் அடிப்படையில்தான் தமிழக தேசிய ஜனநாயகக் கூட்டணியின் அவசரக் கூட்டத்தில் ஆந்திர முதல்வரைத் தமிழக முதல்வர் நேரடியாகச் சந்திப்பது நல்லது என்ற கருத்து வெளியிடப்பதே தவிர; சில அவரசக் குடுக்கைகள் சொல்வது போல அரசியல் செய்வதற்காக அல்ல! இதனை எனக்கு அருகதை இல்லை என்று அர்ச்சனை செய்த அருகதை(?) அனைத்தும் நிறைந்த ஜெயலலிதாவும் உணர்வது நலம். இல்லையேல் ஒவ்வொருவரின் அருகதை குறித்து மனம் திறந்து சொல்லுகிறேன் என்று மறுபதிப்பு வெளியிட நேரிடும்.

அன்புள்ள,

மு. கருணாநிதி (29-06-2001)

2613. மருத்துவமனைக்குச் சென்று வருகிறேன்!

உடன்பிறப்பே,

கைவலிக்க வலிக்க இந்தக் கடிதம் எழுதுகிறேன். வலிக்க வலிக்க ஏன் எழுத வேண்டும் என்று நீ கேட்பாய்! வலிக்கு வைத்தியம் செய்து கொள்ளத்தானே மருத்துவமனைக்கு இன்று செல்கிறேன்!

ஒன்றை யோசித்துப் பார். உடன்பிறப்பே! நடைபெற்று முடிந்த தேர்தலில் நாம் தோற்றுவிட்டோம்.

பூனை இளைத்து விட்டால் எலிகள்கூட மச்சான்முறை கொண்டாடும் என்பதுபோலச் சில எலிகள் மாமா முறை கொண்டாடுகிற மதமதப்பு எப்படி ஏற்பட்டது? யாரால் ஏற்பட்டது? ஆம்! நம்மால் - நமது அலட்சியத்தால் - நம்மை நாமே தோற்கடித்துக் கொண்டதால் ஏற்பட்டதுதானே!

வெற்றி வாய்ப்பை இழந்தோம், அதற்காக வெறிகொண்டு அலையவில்லை! ஜனநாயகத்துக்கு மதிப்பளித்து சட்டப்பேரவையிலே பேராசிரியர் தலைமையில் கடமையாற்றத் தொடங்கினோம்.

வேண்டாத வம்புகளை இழுத்து நம்முடன் வீணாகப் போர் தொடுத்தது யார்?

நம்முடன் மட்டுமல்ல, எல்லோரிடமும் ஏட்டிக்குப் போட்டியாக எதிரும் புதிருமாக நின்று, "எரியட்டும் நெருப்பு" என்று தூண்டிவிட்டவர்கள் யார்?

சட்டப்பேரவையில் கிருஷ்ணா நதிநீரைப் பற்றிப் பேசி, அந்த பிரச்சினையில், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு அவர்களும் மோசடிக்கு உடந்தை என்று கூறி, கிருஷ்ணா நீர் திட்டத்தைக் கெடுக்க முனைந்தது யார்? அப்போதுகூட "அந்தப் பேச்சைப்

பொருட்படுத்தாமல் பெருந்தன்மையுடன் தண்ணீர் திறந்து விடுங்கள்" என்று ஆந்திர முதல்வருக்குத் தீர்மானம் போட்டு கடிதம் எழுதியது நான்தான் என்பதையும், அதை மதித்து ஆந்திர அரசு கிருஷ்ணா நீரைத் திறந்து விட்டது என்பதையும் எண்ணிப் பார்த்தால், மக்கள் நலப் பிரச்சினையில் நமது கழகம் அரசியலை நுழைக்க விரும்பவில்லை என்பதும் புரியும்.

வெளிப்படையாக இல்லாவிடினும் பெருந்தன்மையாக நமக்கு நன்றி கூறவேண்டிய தமிழக அரசினர் அதிலும் அரசியலே நடத்தினர்.

வரப்போகிற ஆட்சி எந்தக் கட்சி ஆட்சியெனினும், மக்களுக்கான உணவு தட்டுப்பாடு வரக்கூடாதென்று தி.மு.க. அரசு, பதினாலு லட்சம் டன் அரிசியை வைத்துவிட்டு வந்திருக்கிறது என்று நாம் தெரிவித்தபோது,

"14 லட்சம் டன் என்பது பொய்" எனக் கூறியது ஜெயலலிதா அல்லவா?

ஆமாம், 14 லட்சம் டன்தான் என்று ஆர்க்காடு வீராசாமி கணக்கு காட்டியதும் "அத்தனையும் புழுத்த அரிசி" என்று புளுகியது ஜெயலலிதா அல்லவா?

தான் கூறிய பொய்யை மெய்போல் ஆக்குவதற்காக ஜெயலலிதா எடுத்த முயற்சிகளைத் தூளாக்கும் வண்ணம் தம்பி பொன்முடி அரசின் அரிசிக் களஞ்சியத்துக்குச் சென்று அங்குள்ள அரிசி நல்ல அரிசிதான் என்பதையும், புழுத்த அரிசி அல்ல என்பதையும் பொதுமக்களுக்குக் காட்டியதை ஒரு குற்றமாகக் கூறி, அக்காட்சியைப் படமெடுத்த சன் டி.வி. நிருபர் மீது கொலை முயற்சி வழக்கு போட்டது ஜெயலலிதாதானே!

செய்தியாளர்கள் சுதந்திரத்தைப் பறிப்பதாக பத்திரிகையாளர்கள் போராடியதும், அவர்கள் மனுவை ஏற்றுக்கொள்ள மறுத்ததும், அதனால் அவர்கள் கோட்டை வாசலில் போராடித் தடியடி பெற்றதும் ஜெயலலிதாவின் குரூரமான நடவடிக்கைகளால் தானே!

எனவே தமிழகத்தில் தமது அரசுக்கு எதிராகத் தாமே பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்ட குற்றம் ஆளுங்கட்சித்

தலைவி ஜெயலலிதாவினுடையது தானே தவிர, நம்முடையதல்ல என்பது பாமர மனிதனுக்கும் புரியும்!

எத்தனையோ பிரச்சினைகள் இருக்க - ஊழல் வழக்கு ஒன்றில் என்னை சேர்க்க வேண்டுமென்று ஆசை! அதைச் சட்டபூர்வமாகவோ, திட்டவட்டமாகவோ செயல்படுத்த வழி காண முடியாத காரணத்தால் எப்படியும் என்னைக் கைது செய்ய வேண்டுமென்ற ஒரே குறிக்கோளுடன், முயற்சி மேற்கொண்டவர்கள், என்னைக் கைது செய்ய நள்ளிரவைத் தேர்ந்தெடுத்து - வீட்டுக் கதவை உடைத்து - படுக்கையறைக்குள் பண்பாடற்ற முறையில் நுழைந்து - குடும்பத்துப் பெண்களை மானபங்கப்படுத்தும் நோக்கத்துடன், காட்டுமிராண்டி தர்பார் நடத்தி - தமிழகமும், அகில இந்தியாவும், அனைத்து நாடுகளும் அதிர்ச்சி அடையும் வண்ணம் அராஜகம் நடத்தத் தூண்டுதலாக - கட்டளையிடுபவராக - இருந்தது யார்? ஜெயலலிதா அல்லவா?

இந்தக் கொடுமையை - சர்வாதிகார வெறியை - மினி எமர்ஜன்சியை எதிர்த்துக் கருத்துத் தெரிவிக்காத நல்லவர்கள் யார்? பகிரங்கமாக தெரிவிக்க சிலருக்கு அரசியல் குறுக்கிட்டாலும், அவர்களது மனச்சாட்சிக்கு அவர்களால் பதில் கூற முடியவில்லையே!

ஒருசிலர்தான் எனக்கு மட்டுமல்ல, மனித உரிமைக்கே இழைக்கப்பட்ட மிருகத்தனமான இந்தக் கொடுமையை மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றனர்!

வாழ்க அவர்கள்! என்று மனமார வாயார அவர்களை வாழ்த்திக் கொண்டு - அதே நேரம் இந்தக் கொடுமையை மிகக் கடுமையாக எதிர்த்துக் கண்டனக் கனல் பொழியும் இதயமுள்ளோர் கோடிக்கணக்கானோர் என்பதால், மனிதநேயம் - மனித உரிமை போற்றும் அவர்களை எண்ணி ஆறுதல் பெற்றவனாக, இன்று மருத்துவ மனைக்குச் செல்கிறேன்.

கைவலிக்காக ஒரு மருத்துவ நண்பர் என் வீட்டுக்கு வந்து எண்ணெய் தடவி மின்சார ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்தார். அப்போது என் வளர்ப்பு நாய் என் அருகில் வந்து உருக்கத்துடன் என்மீது படுத்துக்கொண்டு என்னைப் பரிதாபமாகப் பார்த்தது.

அப்போது அந்த மருத்துவ நண்பர் “நாயைப் போல நன்றியுள்ள பிராணி எது இருக்கு? பாவம் வாய்தான் இல்லை!”

என்றார். நான் உடனே சொன்னேன், "நல்லவேளை வாயிருந்தால், நன்றியிருக்காது!" என்று.

உண்மைதானே உடன்பிறப்பே! வாய்பேசும் சில மனிதப் பிறவிகளுக்கு இல்லாத நன்றியுணர்வை வாய்பேசாத பிராணிகளுக்கு, அதிலும் குறிப்பாக நாய்களுக்கு வழங்கியுள்ள இயற்கைக்கு என் வாழ்த்தினையும் வணக்கத்தையும் தெரிவித்தவாறு உன்னிடம் விடைபெற்றுக் கொண்டு மருத்துவமனை சென்று வருகிறேன்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

(06-07-2001)

2614. அண்ணாவின் 6342ம் ஆயிரம் நன்றியும்!

உடன்பிறப்பே,

எவரிடத்திலும் எப்போதும் தலை நிமிர்ந்து நிற்கும் நாணய வாழ்க்கையாளன் என்பதாகத் தன்னைத் தானே சிலாகித்து விமர்சித்துக் கொண்டு - நண்பர் வீரமணி அவர்கள் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார். கடந்த 29-ந் தேதி நள்ளிரவு என் வீட்டுக் கதவை உடைத்து, படுக்கையறையில் நுழைந்து, என் மனைவியின் கரம்பற்றி இழுத்தெறிந்து, என்னையும் மேலும் கீழும் உருட்டித் தள்ளிப் பந்தாடிக் கைது செய்தார்களே, அந்தக் காவல்துறை அதிகாரிகளின் காட்டுமிராண்டித்தனத்தைக் கடுமையாகக் கண்டித்து அறிக்கை வெளியிட்டவர்கள் அ.தி.மு.க. அணியிலே இருந்த கூட்டணிக் கட்சியினர் என்றாலும்கூட, இப்படியொரு காரியம் நடைபெற வேண்டுமென்று கண்ஜாடை காட்டியவரே வீரமணி என்பதால் அவரிடமிருந்து எந்தக் கண்டன அறிக்கையும் வரவில்லை, வராது. அதற்கு மாறாக, அவர் காவல்துறை அதிகாரிகளுக்குக் காப்பரணாகச் செயல்பட்டுக் கழகத்தையும் என்னையும் தாக்குவதற்கென்றே கையில் பேனா பிடித்துள்ளார்.

பல்வேறு எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த இதயமுள்ள நண்பர்களும், வெளிநாடுகளில் இருப்போரும், வெளி மாநில முதல்வர்களும், பத்திரிகையாளர்களும், பொதுமக்களும் இங்கு நடைபெறுகிற சாடிஸ்ட் சர்க்காரின் போக்கினை ஆத்திரமுடன் சாடினர். இன்னமும் சாடுகின்றனர். அதிர்ச்சியில் நாற்பதுக்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதனை நாடகமென்று அறிக்கை விடுமளவுக்கு நச்சுமனத்தினர் சிலருக்கு நாத்தழும்பு ஏறியிருக்கிறது.

பல கோடி ரூபாய்ச் செலவில் கட்டப்பட்ட நேரு ஸ்டேடியத்துக்கு ஜெயலலிதா ஆட்சியில் டெண்டர் (ஒப்பந்தப்புள்ளி) கோரப்படாமலே பணி

நிறைவேறியிருக்கும்போது, முறையாக டெண்டர் விடப்பட்டு மாநகராட்சியில் கட்டப்பட்டுள்ள மேம்பாலங்களின் பணிகளில் ஊழல் என்றோர் நொண்டிக் கதையைக் கூறி எப்படியாவது அந்த வழக்கில் என்னையும் சேர்த்து கைது செய்து சித்ரவதை செய்ய வேண்டுமென்றும், என் குடும்பத்துப் பெண்களை மானபங்கப்படுத்த வேண்டுமென்றும் திட்டமிட்டு, அந்தத் திட்டத்தையும் "அவசரக் கோலம் அள்ளித் தெளி" என்ற பாணியில் சட்டதிட்ட விதிமுறைகள், உச்சநீதிமன்ற வழிகாட்டுதல்கள் அனைத்தையும் மீறி நிறைவேற்றத் தொடங்கி, அனைத்து நாடுகள் அளவில் அவமானத்தைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

இதில் ஜெயலலிதாவும் முக்கிய ஆலோசகராக செயல்பட்டுவரும் திரு. வீரமணி அவர்கள், அந்த அம்மையாரின் தொண்டரடிப் பொடி ஆழ்வாராகவே மாறி விட்டார்.

என்னைத் தாக்கிய போலீஸ் அதிகாரிகளை நான் மிருகங்கள் என்று சொன்னதாக என்மீது சீறி விழுகிறார், பிராண்டிக் குதறுகிறார்!

"போலீஸ் இலாகாவில் கறுப்பு ஆடுகள் உள்ளன" என்று கடுஞ்சினத்துடன் முதலமைச்சர் ஜெயலலிதா சட்டப்பேரவையில் முழங்கியபோது முடங்கிக் கிடந்துவிட்டு, இப்போது காவல்துறையில் உள்ளவர்களில் சிலர் மிருகங்களாக மாறிவிட்டனர் என்று நான் கூறினால் மட்டும் வீரமணி அவர்களுக்கு ஆத்திரம் கொப்பளிப்பானேன்?

கறுப்பு ஆடுகள் என்று முதல்வர் ஜெயலலிதா சொன்னாரே, அந்த ஆடுகளும் ஒருவகை மிருகந்தானே! அதற்கு வராத ஆத்திரம் நான் சுட்டிக் காட்டும்போது மட்டும் வருவானேன்?

போலீசாருக்கு வக்காலத்து வாங்கக் கிளம்பி, தனது வாதத்திற்கு அறிஞர் அண்ணாவின் கருத்து ஒன்றைத் தனக்குத் துணைக்கு அழைத்து, பாவம்! தன்னை அறியாமலே தனது ஒப்பற்றத் தலைவியைக் காட்டிக் கொடுத்திருக்கிறார்.

இன்று அவர் விடுத்துள்ள அறிக்கையில் ஒரு முக்கியமான பகுதியை மட்டும் உன் பார்வைக்கு வைக்கிறேன். ஆம்! வீரமணி அவர்கள் குறிப்பிடும் பகுதி இது - 1938ல் அண்ணா, இந்தி எதிர்ப்பில் கைதானார். 1964லும் கைதானார். கைதி எண் 6342

என்பது அண்ணாவின் கடிதங்கள் அடங்கிய தொகுப்புப் புத்தகம் ஆகும். அதில் அண்ணா எழுதியுள்ளதில் ஒரு சிறு பகுதி இதோ :-

> "இந்த அதிகாரிகள் என்ன செய்வார்கள்? நெஞ்சில் இருப்பதை நாவுக்குக் கொண்டு வர முடியாமல் தத்தளிக்கிறார்கள். என்னை மட்டுமா அவர்கள் லாக்அப் செய்தார்கள்? தங்களுக்கு இயற்கையாகத் தோன்றக் கூடிய பரிவு, பச்சாதாபம், உணர்ச்சி எல்லாவற்றையும் சேர்த்துத்தான் லாக் அப் செய்து விடுகிறார்கள்"

என்று அண்ணா எழுதியுள்ளார் என்பதாக திரு. வீரமணி குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து என்ன உண்மை தெரிகிறது. உனக்கும், எனக்கும் உடன்பிறப்பே! போலீஸ் அதிகாரிகள் முத்துக்கருப்பனோ, முகம்மது அலியோ, முருகேசனோ, ஜார்ஜோ மற்றவர்களோ என்ன செய்வார்கள் பாபம்!

ஏவியவர், ஏவுவதற்குத் தூண்டிவிட்டவர் அதாவது ஒருவர் பகுத்தறிவு பரிணாம வளர்ச்சி - இன்னொருவர் பகுத்தறிவின் பணியாள் வளர்ச்சி - இந்த இருவர் இட்ட கட்டளையால் எங்களுக்கு இயற்கையாகத் தோன்றக் கூடிய பரிவு, பச்சாதாபம், உணர்ச்சி எல்லாவற்றையும் சேர்த்து லாக் அப் செய்துவிட்டு இருபது நாட்களுக்கு முன்பு எங்களுக்கு முதலமைச்சராக இருந்தவரை, எங்களுக்காக இரண்டு போலீஸ் கமிஷன்கள் நியமித்து பரிந்துரைகள் பலவற்றை நிறைவேற்றி எங்களின் பாசமிகு பாதுகாவலராக விளங்கியவரை, எங்களுடன் தோழமையுடன் எளிமையாகப் பழகியவரை வீடு புகுந்து - படுக்கையறையில் நுழைந்து - இழுத்தும் தள்ளியும், கை கால்களை முறுக்கி விலா நோக, விழி பிதுங்க, வேட்டையாடிக் கொண்டு வந்தோம் என்கிறபோது - எங்கள் நெஞ்சில் இருப்பதை நாவுக்குக் கொண்டு வர முடியாமல் தத்தளிக்கிறோம் - பரிவு, பச்சாதாபம், உணர்ச்சி அனைத்தையும் லாக் அப் செய்துவிட்டுத்தான் இந்த காட்டுமிராண்டித்தனமான மிருகச் செயலில் இறங்கினோம். இதற்குக் காரணம் ஆத்திரத்தின் உச்சியில் இருந்த அம்மனும் - அம்மனை உசுப்பிவிட்ட பூசாரியும்தான் - என்பதை அந்த அதிகாரிகள் சொல்லாமல் சொல்லுவதாக எனது பழைய நண்பர் வீரமணி அவர்கள் உண்மையை தனது அறிக்கையின் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஆம்! அவரது கூற்றுப்படியே எவரிடத்தும், எப்போதும் தலைநிமிர்ந்து நிற்கும் நாணய வாழ்க்கையாளரும் - சொந்தக் கட்சிக்காரர்களான ஏழை வீட்டுப் பிள்ளைகளுக்குக் கூட தனது சுயநிதிக் கல்லூரிகளில் நன்கொடையின்றி நுழைய முடியாத கண்டிப்புடன் சமூகப் பணியாற்றுபவருமான அந்த உத்தமர், அதிகாரிகள்மீது குற்றமில்லை, அவர்களை உசுப்பிவிட்ட அரசுத்தலைமையின் மீதுதான் குற்றம் என்பதை நமது அண்ணாவின் வாசகத்தையே துணையாகக் கொண்டு அறிக்கை மூலம் தெரிவித்திருப்பதற்கு ஆயிரம் நன்றிகள் கூறலாம்.

பெரியாரும் அண்ணாவும் கைது செய்யப்படுகிற சமயங்களில் சண்டித்தனம் செய்யாமல் உடனடியாகப் போலீசாருடன் புறப்பட்டு விடுவார்கள் என்று வீரமணி தனது அறிக்கையில் என்னை விமர்சித்துள்ளார். நான் பெரியார், அண்ணா வழியைப் பின்பற்றவில்லை என்கிறார். அரசியல் காரணங்களுக்காகப் போராட்டங்களில் ஈடுபட்டபோது கல்லக்குடியானாலும், பாளையங்கோட்டையானாலும் பெரியார், அண்ணா வழியைப் பின்பற்றியவன்தான் நான் என்பதை வீரமணி ஏனோ மறந்துவிட்டார்.

இது, காரணமில்லாமல் அல்லது காரணம் சொல்லாமல் நடைபெற்ற கைதுப்படலம் என்பதை இந்த சட்டமேதை ஏனோ புரிந்து கொள்ளவில்லை - பாவம்! பெரியார் வழியிலே (?) ஜெயலலிதாவைத் துதிபாடும் வீரமணி அவர்கள் பெரியார் என்றால் வைக்கம் வீரர் என்பது மறந்துபோய், குருவாயூர் குருக்கள் என்று சொன்னாலும் சொல்வார். அவ்வளவு பக்தியும் பணிவும் அவருக்கு அந்த அம்மா மீது!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(13-07-2001)

2615. ஒரு வரிகூட விடாமல் வரலாறு பதிய வைக்கும்!

உடன்பிறப்பே,

ஓரிரு நாட்களுக்கு முன்பு சென்னையில் இந்திய தொழில் கூட்டமைப்பு தேசிய கவுன்சில் கூட்டத்தில் (C.I.I.) ஜெயலலிதா கலந்து கொண்டு பேசினார்.

> அ.தி.மு.க. அரசினால் தொழில்துறை உட்பட அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாட்டை முதல் இடத்துக்குக் கொண்டு வர முடியும் என்று மக்கள் தீர்ப்பு வழங்கியுள்ளனர். எங்களுடைய முயற்சிகள் எல்லாம் தமிழ்நாட்டைத் தொழில் துறையில் முதல் இடத்திற்குக் கொண்டு வருவோம். தகவல் தொழில் நுட்பம், வர்த்தகம் போன்ற அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாட்டை முன்னணி மாநிலமாக உருவாக்குவோம்

இது அந்தக் கூட்டத்தில் ஜெயலலிதாவின் பேச்சில் முக்கியப் பகுதியாகும்.

தொழில் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளை இந்தியாவிலேயே தமிழகத்தில் முதலிடத்திற்குக் கொண்டு வந்த தி.மு.கழக ஆட்சிக்கு மக்கள் வழங்கியுள்ள தீர்ப்பை இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது. ஜெயலலிதா ஆட்சியின் ஊழல்களை அம்பலத்திற்குக் கொண்டு வந்து அவர்களுக்குத் தண்டனை வாங்கித் தரவேண்டுமென்று மக்கள் மட்டுமல்ல; மக்களின் தலைவர்கள்கூட 1996ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கினார்கள் என்றாலும் கூட பின்னால் எதற்காக அந்தத் தீர்ப்பு ஏன் வழங்கினார்கள் என்பது உனக்குத் தெரியும்.

வேண்டுமென்றே திட்டமிட்டு நான்கு இடங்களில் வேட்பு மனுத்தாக்கல் செய்ததால் சட்டப்படி எந்த மனுவும் செல்லாமல் போய்விடுமென்பதைத் தெரிந்து வைத்துக் கொண்டே

அவ்வாறு மனுச் செய்து, அந்த மனுக்கள் சட்ட விதிப்படி நிராகரிக்கப்பட்டவுடன் நிராகரிப்புக்குக் காரணம் தி.மு.க.வும், அதன் கூட்டணிக் கட்சிகளும்தான் எனப் பொய்ப் பிரச்சாரம் செய்து ஜெயலலிதா ஆட்சிக்கு வந்துவிட்டார்.

வந்தபிறகும்கூட தமிழ்நாட்டின் வளர்ச்சி தன்னால்தான் ஏற்படும் என்பதைப் போல பேசி வருகிறார். எல்லாத் துறைகளிலும் தமிழ்நாட்டை முதலிடத்திற்கு கொண்டு வரமுடியும் என்று மக்கள் தனக்கு தீர்ப்பு வழங்கியிருப்பதாகச் சொல்கிறார். இதோ பட்டியல் தருகிறேன். இதிலிருந்து எந்தெந்தத் துறைகளில் 1996 முதல் 2001 வரையிலாக ஐந்தாண்டுக் காலத்தில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

குறிப்பாக தொழில் துறையில் இன்னும் ஓராண்டு காலத்தில் முதல் இடத்திற்கு வருவோம் என்கிறார் ஜெயலலிதா. 1989-1991 காலகட்டத்தில் தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்கு தி.மு.கழக அரசு அளித்த ஊக்கத்தின் காரணமாக தமிழ்நாடு இந்தியாவில் தொழில் வளர்ச்சியில் மூன்றாம் இடத்தினைப் பெற்றது. அதற்குப் பிறகு நடைபெற்ற ஜெயலலிதா ஆட்சியின் போது 1991 முதல் 1996 வரையில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் பின்தங்கி ஐந்தாம் இடத்திற்குச் சென்றுவிட்டது. 1996இல் தி.மு.கழக அரசு மீண்டும் பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாடு மீண்டும் தொழில் வளர்ச்சியில் தொடர்ந்து முன்னணியிலேதான் இருந்து வருகிறது. குறிப்பாக 22-5-2000 அன்றைய நிலையில் இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம் (Centre for Monitoring Indian Economy - C.M.I.) வெளியிட்ட அறிக்கையின்படி 1 லட்சத்து 56 ஆயிரத்து 893 கோடி ரூபாய் முதலீடுகளைப் பெற்று தொழில் முதலீடுகளில் இந்தியாவிலேயே முதலாவது மாநிலமாக தமிழகம் முன்னேற்றம் கண்டது. பின்னர் 21-7-2000 அன்று அதே C.M.I.E மையம் இந்திய மாநிலங்களில் செய்யப்பட்டுள்ள முதலீடுகளை எல்லாம் தொகுத்து வெளியிட்ட அறிக்கையில் தமிழ்நாடுதான் தொழில் முதலீடுகளில் இந்தியாவில் முதலிடம் என்ற நிலையை மீண்டும் உறுதி செய்தது.

தொழில் வளர்ச்சியில் மட்டுமல்ல; தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாடு வேறு பல துறைகளிலும் முதலிடத்தைப் பெற்று

இருந்தது என்பதற்கு ஓரிரு எடுத்துக்காட்டுகளை மட்டும் கூறுகிறேன்.

அரிசி உற்பத்தித் திறனில் ஒரு எக்டேருக்கு 3,579 கிலோ என்ற அளவிற்கு தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் இடத்திலே இருந்தது.

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் எக்டேர் ஒன்றுக்கு 1,650 கிலோ என்ற அளவிற்கு இந்தியாவிலேயே தமிழ்நாடு முதல் இடத்தில் இருந்தது.

மரவள்ளிக் கிழங்கு உற்பத்தியில் ஒரு எக்டேருக்கு 37 டன் என்ற அளவிற்கு உலகிலேயே தமிழ்நாடு முதல் இடத்திலே இருந்தது.

தேங்காய் உற்பத்தியில் ஒரு எக்டேருக்கு 11,620 காய்கள் என்ற அளவில் இந்தியாவிலே தமிழகம் முதலிடத்தில் இருந்தது.

தொழிலதிபர்கள் கூட்டத்தில் ஜெயலலிதா ஆற்றிய உரையில், தகவல் தொழில்நுட்பம் (Information Technology), வர்த்தகம் என்று அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாட்டை முன்னணி மாநிலமாக உருவாக்குவோம் என்று கூறியிருக்கிறார்.

உடன்பிறப்பே, இனிமேல்தான் தகவல் தொழில் நுட்பத்தில் தமிழகத்தை முன்னணி மாநிலமாக இவர் உருவாக்கப் போகிறாராம். தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்காகத் தனிக் கொள்கை வகுத்து அதைச் செயல்படுத்திய முதல் மாநிலம் கழக ஆட்சி நடைபெற்ற தமிழ்நாடு தான் என்பதை மக்கள் மறந்து இருப்பார்கள் என்ற எண்ணம் ஜெயலலிதாவிற்கு! தகவல் தொழில் நுட்பத்தில் தமிழகத்தை முன்னணி மாநிலமாக ஆக்குவோம் என்று விவரம் புரிந்த தொழிலதிபர்கள் மத்தியில் பேசிய ஜெயலலிதாவினுடைய கடந்த கால ஆட்சியில் 12 கோடி ரூபாய் அளவிற்குத்தான் மென்பொருள் ஏற்றுமதி செய்யப்பட்டது என்பதையும், 1998-99ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சியில் 1,246 கோடி ரூபாய் அளவிற்கு இது உயர்ந்து, 1999-2000ஆம் ஆண்டில் 1,914 கோடி ரூபாய் அளவிற்கு தமிழ்நாட்டிலிருந்து மென்பொருள் ஏற்றுமதியாயிற்று என்பதும், கடந்த 2000-2001ஆம் ஆண்டில் 3,116 கோடி ரூபாய் அளவிற்கு கழக ஆட்சியில் மென்பொருள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது என்பதும் கழக ஆட்சியில் ஏற்பட்ட இந்த வளர்ச்சியின் தாக்கம் எதிர்காலத்திலும் இருந்தே தீரும்

என்பதும், அந்தக் கூட்டத்தில் குழுமியிருந்த தொழிலதிபர்கள் அறியாத ஒன்றல்ல. அறிந்து என்ன செய்ய? முதலமைச்சர் அல்லவா பேசுகிறார்! குறுக்கே உண்மையைச் சொல்லி முணுமுணுக்க முடியுமா?

மென்பொருள் வல்லுநர்கள் அதிக அளவில் பணியாற்றுவதில் தமிழகம் முதல் இடத்திலே உள்ளது. அமெரிக்கா செல்ல விசா பெறும் மென்பொருள் வல்லுநர்கள் எண்ணிக்கையிலும் தமிழ்நாடுதான் முதல் இடத்திலே உள்ளது. ஜெயலலிதா ஆட்சியில் மென்பொருள் செய்யும் நிறுவனங்கள் 10 மட்டுமே இருந்தன. கழக ஆட்சியின் முயற்சியினால் அந்த நிறுவனங்களின் எண்ணிக்கை 764 என்று ஆயிற்று.

இந்தியாவுக்கான பிரான்சு நாட்டின் தூதுவராக இருக்கும் பொன்னார்டு டி. மான்ட் பெர்ரண்ட் என்பவர் கடந்த மாதம் சென்னை தொழில் வர்த்தக சபைக் கூட்டத்தில் பேசும்போது,

> "1996-2000 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் தமிழகத்தின் மென்பொருள் ஏற்றுமதி 5 ஆயிரம் சதவிகிதத்திற்கு மேல் அதிகரித்து உள்ளது. முன்னேற்றப் பாதையில் இந்தியா பீடு நடை போட தமிழகம் போன்ற மாநிலங்கள் அதிக அக்கறை காட்டி வருகின்றன. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தமிழகம் கண்ட வளர்ச்சிக்கு இது இன்னொரு சான்றாகும். தி.மு.க. தமிழகத்தை ஆட்சி செய்த போது பல்வேறு நலத் திட்டப் பணிகள் செம்மையாகச் செயல்படுத்தப் பட்டன. ஒரு புறம் மக்கள் நலத் திட்டங்கள், இன்னொரு புறம் தமிழகத்தை தொழில் வளம் நிறைந்த மாநிலமாக உருவாக்கும் அரிய திட்டங்கள் என தி.மு.க. அரசு பல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தியது. இதன் பயனாக தமிழகம் இந்தியா விலேயே தலைசிறந்த மாநிலமாக உருவானது. தொழில் முதலீட்டாளர்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து தரப்பட்டதால் அவர்கள் ஆர்வத்துடன் புதிய தொழில்களைத் துவக்கினர். போக்குவரத்து வசதிக்கு நல்ல சாலைகள், தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் மின்சாரத்தைத் தடையின்றி வழங்க புதிய மின் திட்டங்கள், தொழில் வளத்தைப் பெருக்க புதிய தொழிற் சாலைகள், வன்பொருள், மென்பொருள்

தொழிற்சாலைகள், தகவல் தொழில் நுட்பத்தை மேம்படுத்த டைடல் பூங்கா போன்றவைகள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு உரிய அனுமதி அளித்து அவர்கள் தொடங்கிய மிகப் பெரிய தொழிற்சாலைகள், இதனால் ஆயிரக்கணக்கானோர்க்கு வேலை வாய்ப்பு என தி.மு.க. அரசு பல சாதனைகளைப் படைத்தது"

இவ்வாறு பிரான்சு நாட்டுத் தூதுவர் தமிழகத்தைப் பரிபாலனம் செய்த நமது கழக அரசுக்கு நற்சான்று கூறி உரையாற்றினார்.

இந்த உண்மைகளையெல்லாம் ஜெயலலிதாவினாலேயே மறைக்க முடியாமல் அவருடைய பேச்சிலே ஒரு பகுதியிலே குறிப்பிடும்போது இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாடு தொழில்துறையில் மிகப் பெரிய வளர்ச்சி பெற்றது என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவருடைய பேச்சில் தமிழ்நாட்டின் உள் கட்டமைப்பு வளர்ச்சி மற்ற மாநிலங்களைவிட உயர்வாக உள்ளது. மின் உற்பத்தியில் அடுத்த ஆண்டிற்குள் தமிழ்நாடு தன்னிறைவு பெறும் என்று நம்புகிறேன். உயிரியல் தொழில் நுட்பத் துறையிலும் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது என்றெல்லாம் குறிப்பிட்டுவிட்டு, அமெரிக்காவிலுள்ள கார்னல் பல்கலைக் கழகத்துடன் தமிழக அரசு இணைந்து சென்னையில் உயிரியல் தொழில் நுட்பப் பூங்கா அமைக்க ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது என்று ஏதோ அவருடைய ஆட்சியில் இப்படிப்பட்ட பூங்காவை அமைக்க புதிதாக ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டதைப் போல தொழிலதிபர்கள் மத்தியில் ஜெயலலிதா கூறியிருக்கிறார். ஆனால் உண்மையென்ன?

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும் (டிட்கோ), அமெரிக்காவின் கார்னல் பல்கலைக் கழகமும் இணைந்து தமிழகத்தில் சென்னையில் உயிரியல் தொழில் நுட்பப் பூங்கா அமைப்பதற்காக 15.1.2001 அன்றே ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமையவிருக்கும் இந்தப் பூங்காவில் 1,000 கோடி ரூபாய் அளவிற்கு உயிரியல் தொழில் நுட்பத் தொழில்கள் அமையும். கழக ஆட்சியில் செய்து கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தத்தை ஏதோ

ஜெயலலிதா ஆட்சியில்தான் போடப்பட்டுள்ளது என்பதைப் போல அந்தக் கூட்டத்தில் கூறியிருக்கிறார்.

உயிரியல் தொழில் நுட்பத்திற்கு (Bio-technology) தனிக் கொள்கை வகுத்த முதல் மாநிலமும் தமிழ்நாடுதான். மகளிருக்கான உயிரியல் தொழில் நுட்பப் பூங்காவை அமைத்த முதல் மாநிலமும் தமிழ்நாடுதான். டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களைத் தலைவராகக் கொண்ட நிபுணர் குழு ஒன்று உயிரியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்காக கழக ஆட்சியிலே அமைக்கப்பட்டு, அந்தக் குழு வழங்கிய பரிந்துரைகள் அடிப்படையில், உயிரியல் தொழில் நுட்பக் கொள்கை ஆவணம் ஒன்று 12.9.2000 அன்று சென்னையில் நடைபெற்ற உயிரியல் தொழில் நுட்ப மாநாட்டில் என்னால் வெளியிடப்பட்டது.

தகவல் தொழில் நுட்பத்திற்கென்றே சென்னை தலைமைச் செயலகத்திலே தனியே ஒரு துறை ஐ.ஏ.எஸ். அதிகாரியின் தலைமையில் 5-10-1998 அன்று தி.மு.கழக ஆட்சியிலே உருவாக்கப்பட்டது. தேசிய மென்பொருள் மற்றும் பணி நிறுவனங்களின் சங்கம் (நாஸ்காம்) சென்னையை, தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் எல்லாம் நாடித் தேர்வு செய்யும் முதல் நிலை நகரம் என்றே அறிவித்திருக்கிறது.

தி.மு.கழக ஆட்சியில்தான் தமிழ்நாட்டில் தகவல் தொழில் நுட்பம் வேகமாக வளர்ச்சி அடைவதற்காக முதல் அமைச்சர் தலைமையிலே ஒரு பணி முனைப்புக் குழு (I.T. Task Force) உருவாக்கப்பட்டது. பள்ளிக் கல்வியிலே தகவல் தொழில் நுட்பத்தை இணைப்பதற்காக அண்ணா பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் அனந்தகிருஷ்ணன் அவர்கள் தலைமையிலே ஒரு துணைக் குழுவும் கழக ஆட்சியிலே உருவாக்கப்பட்டது. 340 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டைடல் மென் பொருள் பூங்கா சென்னை தரமணியிலே நிர்மாணிக்கப்பட்டு 4-7-2000 அன்று பாரதப் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களை அழைத்து வந்து திறப்பு விழா நடத்தியதும் தி.மு.கழக அரசு தான்.

மாநிலம் முழுவதும் உள்ள 1,200 மேல்நிலைப் பள்ளிகளிலும் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் கணினியை விருப்பப் பாடமாக வழங்கும் திட்டம் 187 கோடியே 66 இலட்ச ரூபாய் செலவில் தொடங்கப்பட்டது. இதனால் ஒவ்வொரு பள்ளியிலும் 40 மாணவர்கள் என்ற அடிப்படையில் சுமார் 48 ஆயிரம் மாணவர்கள்

ஆண்டுதோறும் மென்பொருள் துறையில் வேலை வாய்ப்புப் பெறுகின்ற அளவிற்கு தகுதியுடையவர் ஆவார்கள். இத்திட்டம் பிறகு அனைத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், மருத்துவம் மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகள், வேளாண்மை மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரிகள் ஆகியவற்றிற்கும் 34 கோடியே 48 இலட்ச ரூபாய்ச் செலவில் கழக ஆட்சியில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்த கணினிக் கல்வித் திட்டம் இந்தியா விலேயே முதன்முதலாக தமிழகத்தில் கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட மிகப் பெரிய திட்டமாகும்.

இத்திட்டத்தை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கை தள்ளுபடி செய்த உயர்நீதிமன்ற நீதிபதி 23.4.99 அன்று அளித்த தீர்ப்பில், அரசின் இந்தப் பொன்னான நோக்கத்தால் அடுத்த ஆண்டு 48 ஆயிரம் மாணவர்கள் கணினிப் பயிற்சி பெறுவார்கள் என்பதை இந்த நீதிமன்றம் பாராட்டுகிறது. தமிழக அரசின் மீது இந்த நீதிமன்றம் நம்பிக்கை வைத்திருக்கிறது. சமூக நீதி காவலனாகப் பாடுபடும் அரசு கிராமப்புற மற்றும் நடுத்தர மக்களிடையே படிக்க வருகிறவர்களின் நலனில் கவனம் செலுத்தும் என்று நம்பிக்கை கொள்கிறது என்று தெரிவித்துள்ளார்.

நீதிபதி மாத்திரமல்ல; 28.4.99 தேதியிட்ட எகனாமிக் டைம்ஸ், தாராளமயமாக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பின் முழுவதும் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட தொழில் நிறுவனங்களை (100% Export Oriented Units) நிறுவுவதில் தமிழகம் முதலிடத்தைப் பெற்றுள்ளது என்று பாராட்டியுள்ளது. 6.7.1998 தேதியிட்ட டைம்ஸ் ஆப் இந்தியா, கடன் வைப்புத் தொகை விகிதாச்சாரத்தில் (Credit Deposit Ratio) அகில இந்திய அளவில் தமிழகம் முதலிடத்தைப் பெற்றிருக்கிறது என்று பாராட்டியுள்ளது.

லண்டனிலிருந்து வெளிவரும் பைனான்சியல் டைம்ஸ் என்ற பத்திரிகை 1997 ஏப்ரல் மாதத்தில், சென்னை இந்தியாவின் டெட்ராய்ட் என்று வர்ணித்திருந்தது. அதே பத்திரிகையில் 10.4.1997 அன்று தலைசிறந்த பத்திரிகையாளர் மார்க் நிக்கல்சன் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்து புதிய தொழில்களை உருவாக்கி வளர்ப்பதில் மாநிலங்களுக்கு இடையேயான போட்டியில், தமிழ்நாட்டின் கார் தொழில் வியக்கத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளது என்று எழுதியுள்ளார்.

இண்டஸ்ட்ரியல் ஹெரால்ட் (ஏப்ரல் 2000) என்ற ஆங்கில நாளிதழ், வாகன உற்பத்தி, வாகன உதிரி பாகங்கள் உற்பத்திப் பிரிவுகள் அமைப்பதில் மிகுந்த கவனம் செலுத்திடும் சென்னை மாநகரம் இந்தியாவின் டெட்ராய்ட் என்று குறிப்பிட்டுப் பாராட்டியுள்ளது.

உடன்பிறப்பே, ஆரவாரமின்றி - ஆர்ப்பாட்டக் கூச்சலின்றி - ஆக்கப் பணிகள் பல புரிந்து ஆட்சி நடத்திய கழக அரசின் சாதனைகள் ஆயிரமாயிரமென இருக்கும் போது, அவற்றை யார் சொன்னாலும், சொல்லாவிட்டாலும்; வரலாறு, ஒரு வரிகூட விடாமல் பதிய வைத்திடும் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய உண்டு.

அன்புள்ள,

மு. கருணாநிதி

(15-07-2001)

2616. அந்த ஒரு நாள் வருவதற்கு வழி பிறக்குமா?

உடன்பிறப்பே,

பாகிஸ்தான் அதிபர் முஷாரப், தனது துணைவியாருடன் இந்தியாவுக்கு வந்தார். தாஜ்மஹால் கண்டார். இடையிடையே வழங்கப்பட்ட விருந்துகளில் கலந்து கொண்டார். இந்தியப் பிரதமர் வாஜ்பய் அவர்களுடன் ஐந்து சுற்றுகள் பேச்சு நடத்தினார். பேச்சுவார்த்தை வெற்றி பெறும் என்றும் பேச்சு வார்த்தையில் பின்னடைவு ஏற்படுமென்றும்; செய்திகள் மாறிமாறி வரத் தொடங்கின. இறுதியாக வந்த செய்தி பின்னடைவு என்றே முற்றுப்புள்ளி வைக்கப்பட்ட செய்தியாக வந்துவிட்டது. கவலை தரக்கூடியதுதான் எனினும், காஷ்மீர் பிரச்சினையில் இந்தியாவின் உரிமையை நிலை நாட்டியிருக்கிறோம் என்ற பெருமிதம் ஏற்படாமல் இல்லை.

திறந்த மனதுடன் இந்தியாவுக்கு வருகிறேன் என்றுதான் கூறிவிட்டு முஷாரப் தனது பயணத்தைத் தொடங்கினார். ஆனால் காஷ்மீர் எனும் கதவைத் திறந்து விட இந்தியா தயாராக இல்லை. இப்போது மட்டுமல்ல; ஏற்கனவே எத்தனையோ பேச்சு வார்த்தைகளும் ஒப்பந்தங்களும் இரு நாடுகளுக்கிடையே ஏற்பட்ட போதிலும் உரிய பலன் கிடைக்கவுமில்லை - உறவுப் பாலமும் உணர்வுபூர்வமாக அமையவில்லை. மாறாக மனமாச்சர்யங்களும் - குறும் போர்களும் - இருதரப்பிலும் வீரர்கள் மட்டுமின்றி; அப்பாவி மக்கள் உயிர் இழக்கும் நிகழ்ச்சிகளும் தொடர்கதையாகவே ஆகிவிட்டது என்பதே நடந்து விட்ட உண்மை நிகழ்ச்சிகள் மட்டுமல்ல; இனியும் நடக்கக் கூடுமே என எண்ணி வருந்தக்கூடிய நிகழ்ச்சிகளாகும்.

1947ஆம் ஆண்டு இரு நாடுகளாக இந்தியாவும், பாகிஸ்தானும் சுதந்திரம் பெற்ற ஆகஸ்ட் 15ஆம் தேதிக்குப்

பிறகு அதே ஆண்டிலேயே அக்டோபர் 27ஆம் தேதியே இரு நாடுகளுக்கும் இடையே போராட்டம் தொடங்கி விட்டது.

1960ஆம் ஆண்டில் இந்தியப் பிரதமராக இருந்த ஜவகர்லால் நேரு அவர்களும், அன்றைய பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் அவர்களும் சந்தித்து அமைதிப் பேச்சு நடத்தினர். ஆனால் அமைதி ஏற்படவில்லை. பின்னர் 1965ஆம் ஆண்டு செப்டம்பர் 6 முதல் 22ஆம் தேதி வரை இந்தியா - பாகிஸ்தான் இடையே முழு அளவிலான போர் நடைபெற்றது. பிறகு ஐ.நா. சபை கேட்டுக் கொண்டதற்கிணங்க போர் நிறுத்தம் ஏற்பட்டது. அதற்கடுத்த 66ஆம் ஆண்டு ஜனவரி 3ந்தேதியன்று ரஷ்ய நாட்டின் சமரசத்தோடு பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் அவர்களை தாஷ்கென்ட் நகரிலே சந்தித்து உரையாடியதின் விளைவாக தாஷ்கென்ட் ஒப்பந்தம் ஏற்பட்டது.

ஒப்பந்தம் செய்து கொள்ளச் சென்ற இந்தியப் பிரதமரின் உயிரற்ற உடல்தான் இந்தியாவுக்கு திரும்பி வந்த சோகமும் நிகழ்ந்தது.

1971ஆம் ஆண்டு இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் முழு அளவிலான போர் நடைபெற்றது. அதன் விளைவாகத்தான் முஜ்பூர் ரஹ்மான் தலைமையில் வங்கதேசம் உதயமாயிற்று. பாகிஸ்தான் எல்லை குறுகியது. அதன் தொடர்ச்சியாக 1972ஆம் ஆண்டு ஜூலை 2ஆம் தேதியன்று இந்திரா காந்தி அம்மையாருக்கும், பாகிஸ்தான் அதிபர் பூட்டோ அவர்களுக்கு இடையிலே சிம்லாவில் பேச்சு வார்த்தை நடைபெற்று அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது.

1985ஆம் ஆண்டு நவம்பர் 1-ந் தேதி; பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களும், பாகிஸ்தான் அதிபர் ஜியா உல் ஹக் அவர்களும் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. 1997 ஆகஸ்ட் 26-ந் தேதி காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண சமரசம் செய்து வைப்பதாக அமெரிக்கா அறிவித்தது. அப்போது இந்தியா - பாகிஸ்தான் பிரச்சினைக்காக இரு தரப்பு நாடுகளுமே பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணலாம் என்று இந்தியா அறிவித்தது.

இதையெல்லாம் விட 1999ஆம் ஆண்டு பிப்ரவரி 21ஆம் தேதியன்று ஒரு நல்லெண்ணப் பயணமாக வாஜ்பய் அவர்கள்

லாகூருக்குப் பேருந்துப் பயணம் ஒன்றை மேற்கொண்டார். லாகூர் பிரகடனம் வெளியிடப்பட்டது.

அதே ஆண்டு மே திங்களில் கார்கில் பகுதியில் பாகிஸ்தான் படைகள் ஊடுருவல் நடத்தின. 6 நாட்களுக்குப் பிறகு பாகிஸ்தான் படைகள் மீது இந்தியா விமானத் தாக்குதலைத் தொடர்ந்தது. ஜூலை 26இல் பாகிஸ்தான் படைகள் பின்வாங்கியதால் போராட்டம் ஓய்ந்தது.

அதே ஆண்டு அக்டோபரில் பிரதமர் நவாஸ் ஷெரீப் அரசைக் கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்றினார் ராணுவத் தளபதியாக இருந்த ஜெனரல் பர்வீஸ் முஷாரப்.

இந்த ஆண்டு மே திங்கள் 24ஆம் தேதி இந்தியப் பிரதமர் வாஜ்பய் அவர்கள் இருதரப்புப் பேச்சு வார்த்தைக்காக இந்தியா வருமாறு முஷாரப் அவர்களுக்குக் கடிதம் எழுதினார். அதன் விளைவாகத்தான் மூன்று நாள் பயணமாக முஷாரப் அவர்கள் இந்தியாவிற்கு வருகை தந்தார்.

இந்தச் சந்திப்பின்போது காஷ்மீர் பிரச்சினைக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து விவாதிக்க வேண்டுமென்று பாகிஸ்தான் அதிபர் கருத்து தெரிவித்தது இந்தியாவில் கடும் எதிர்ப்புக்கு உள்ளாகிவிட்டது. இது இயற்கையாக எழக்கூடிய எதிர்ப்புதான்!

எல்லை கடந்த பயங்கரவாதம், பரஸ்பர வர்த்தகம், பொருளாதார உறவுகள் ஆகியவை குறித்தும் விவாதிக்கப்பட வேண்டும் என்று இந்தியப் பிரதமர் வாஜ்பய் அவர்கள் தெரிவித்தார்.

மேலும் ஏ.பி.பி. செய்தி நிறுவனத்திற்கு பேட்டியளித்த வாஜ்பய், இரு நாடுகளும் தங்களது மக்களின் அதிமுக்கியப் பிரச்சினைகளை முன்னெடுத்து, அவற்றுக்குத் தீர்வு காண அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். இரு நாட்டின் நல்லுறவை முன்னெடுத்துச் செல்வதற்கான அனைத்து ஆக்கபூர்வமான வழிமுறைகளைக் காண இந்தியா தயாராகி வருகிறது. இரு நாடுகளுக்கும் இடையில் அமைதி, நட்புறவு ஆகியவற்றைக் காண வேண்டும் என்ற பின்னணியின் அடிப்படையில் பாகிஸ்தானுக்கு நட்புக் கரம் நீட்டினோம். பேச்சுவார்த்தைக்கு அழைப்பதற்கு எந்த வெளிநாடும் நிர்ப்பந்திக்கவில்லை. காஷ்மீர் விவகாரத்தைப் பொறுத்தவரையில்

குறுகிய அணுகுமுறைகள் கடந்த காலங்களில் பலன் தரவில்லை. காஷ்மீரில் வன்முறை நீங்கி, அமைதி உருவாக எல்லா அமைப்புகளுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தயாராக இருக்கிறோம் என்று அறிவித்தார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க பேச்சுவார்த்தை குறித்து செய்தி சேகரிக்க ஆக்ரா நகரிலே 500க்கும் மேற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் குழுமியிருந்தார்கள்.

இந்தப் பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முடிந்து இரண்டு தலைவர்களும் கையெழுத்திட்டு பிரகடனம் வெளிவரலாம் என்று அனைவரும் எதிர்பார்த்திருந்த நிலையில் வெற்றிகரமாக நிறைவேறாததற்குக் காரணம் இந்தப் பிரகடனத்திலே காஷ்மீர் பிரச்சினை முக்கியமாக இடம் பெற வேண்டுமென்று பாகிஸ்தான் வற்புறுத்த, எல்லை தாண்டும் தீவிரவாதத்தை நிறுத்தும் நடவடிக்கையை பிரகடனத்தில் சேர்க்க வேண்டுமென்பது இந்தியாவின் உறுதிமிக்க நிலையாக இருந்தது.

16-7-2001 பகல் 2.30 மணிக்கே பேச்சுவார்த்தை முடிந்து பாகிஸ்தான் அதிபர் ஆஜ்மீர் செல்வதாகத்தான் பயணத் திட்டம் வகுக்கப்பட்டிருந்தது. ஆனால் பேச்சுவார்த்தை நீடித்ததால் முஷாரப் தன்னுடைய ஆஜ்மீர் பயணத்தை ரத்து செய்தார். பயணம் ரத்து செய்யப்பட்ட செய்தி வந்த போது எப்படியும் பேச்சுவார்த்தை சுமுகமாக முடிந்து ஒப்பந்தத்திலே இரண்டு தலைவர்களும் கையெழுத்திடுவார்கள் என்ற நம்பிக்கை அனைவருக்கும் இருந்த நிலையில் இறுதியில் எந்த விதமான தகவலும் இல்லாமல் இந்த வரலாற்று சிறப்புமிக்கச் சந்திப்பினால் எந்தப் பயனும் இல்லாமல் போய் விட்டது.

இது இரண்டு நாட்களும் சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து நீடித்து வரும் பிரச்சினை. அதற்கு ஓரிரு நாட்கள் பேச்சுவார்த்தையிலே முடிவு வந்துவிடும் என்று எதிர்பார்க்க இயலாது.

இதுபற்றிய செய்திகள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் நிலையில் ஒன்றுபட்ட இந்தியாவுடன் சேர்ந்திருந்த பாகிஸ்தான், தனி நாடாக அமைவதற்குப் பாடுபட்ட பாகிஸ்தானின் மாபெரும் தலைவர் முகமது அலி ஜின்னா அவர்களைப் பற்றிய எண்ணங்கள், அவருடைய வாழ்க்கைச் சரித்திரம் குறித்து சற்றுப் பின்னோக்கிச்

சென்று பார்ப்பது இளைய சந்ததியினருக்கு ஒரு வாய்ப்பாக அமைந்திடும்.

யார் இந்த முகமது அலி ஜின்னா? இந்திய முஸ்லிம்களுக்கு இஸ்லாம் அடையாளத்தைத் தந்தது. மொகலாயப் பேரரசு அவர்களுக்கு நிலப்பரப்பைத் தந்தது. அல்லாமா இக்பால் போன்ற கவிஞர்கள் அவர்களுக்கு இலட்சியத்தைத் தந்தனர். பாகிஸ்தான் இயக்கத்தை நடத்தி தனி பாகிஸ்தானைப் பெற்றுத் தந்ததின் மூலம் முகமது அலி ஜின்னா இந்த மூன்றையுமே இஸ்லாமியர்களுக்குத் தந்தவராவார்.

பாகிஸ்தானியர்களுக்கு ஜின்னா ஒரு மாபெரும் தலைவர், காயிதே ஆஸாம் என்று அவர்களால் வர்ணிக்கப்படுபவர். பாகிஸ்தானியருடைய அரசியல் தொடர்புகள் எப்படியிருந்தாலும், ஜின்னாவைப் போன்ற ஒரு தலைவர் அவர்களுக்கு வேறு எவரும் இல்லை. இந்தக் கடிதத்தில் அந்த மாபெரும் மனிதரின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்து சுருக்கமாக தெரிவிக்கிறேன்.

ஜின்னா மிகச் சாதாரணமான ஒரு குடும்பத்திலே கராச்சிக்கு அருகே பிறந்தவர். அவர் பிறந்த தேதியும், பிறந்த ஊரும் இன்னமும் பிரச்சினையிலே உள்ளவைகளாகும். அவருடைய தந்தை ஜின்னாபாய் பூஞ்சா, குஜராத்திலிருந்து கராச்சிக்குச் சென்றவராவார். ஜின்னா அவருடைய பெற்றோருக்கு பிறந்த 8 பேரில் ஒருவர். 16 வயதாக இருந்தபோதே அவருக்கு திருமணமாயிற்று. மணப்பெண் ஒரு குழந்தை. ஜின்னா லண்டனுக்கு ஒரு கம்பெனியிலே பணியாற்றிட சென்றிருந்தபோது, அவருடைய மனைவியைப் பற்றிப் புரிந்து கொள்வதற்கு முன்பாகவே மனைவி மறைந்து விட்டார்.

லண்டனில் ஜின்னா அவர்கள் முதல் இந்திய நாடாளுமன்ற உறுப்பினரான தாதாபாய் நெளரோஜி அவர்களோடு இணைந்து பணியாற்றுகிறார். 1896ஆம் ஆண்டு இந்தியா திரும்பி பம்பாயில் வழக்கறிஞராக பதிவு செய்து கொள்கிறார். பம்பாயில் அப்போதிருந்த ஒரேயொரு இஸ்லாமிய பாரிஸ்டர் ஜின்னா அவர்கள்தான், பலமுறை ஆங்கிலேய அதிகாரிகளிடம் எதிர்ப்பினைக் காட்டத் தொடங்கினார். ஆங்கிலேயர்கள் ஜின்னாவை கைது செய்து சிறையிலே அடைத்து விடுவோம் என்றெல்லாம் மிரட்டிப் பார்த்தனர்.

ஜின்னா 1896ஆம் ஆண்டுதான் இந்திய தேசிய காங்கிரசிலே உறுப்பினராக ஆனார். அப்போது காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த தாதாபாய் நெளரோஜியின் செயலாளராக கல்கத்தா மாநாட்டிலே கலந்து கொண்டார். காங்கிரசில் தீவிரமாகப் பணியாற்றிய ஜின்னா 1913 ஆம் ஆண்டு வரை முஸ்லிம் லீக்கில் சேரவில்லை. இருந்தாலும் இஸ்லாமிய மக்களின் உரிமைக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வந்தார்.

1913 ஆம் ஆண்டு முஸ்லிம் வக்ஃப் மசோதாவை அறிமுகப்படுத்தியதின் மூலம் இஸ்லாமிய மக்களின் ஒருமித்த பாராட்டுக்கு உரியவரானார். 1920ஆம் ஆண்டு முதல் 1930 ஆம் ஆண்டு வரையிலும், மீண்டும் 1937ஆம் ஆண்டு முதல் 1947ஆம் ஆண்டு பாகிஸ்தான் உருவாகின்ற வரையிலும் முஸ்லிம் லீக்கின் மாபெரும் தலைவராக - அசைக்க முடியாத தலைவராக வீற்றிருந்து வெற்றி கண்டவர்.

காங்கிரசையும் முஸ்லிம் லீகையும் ஒரே மேடையிலே அழைத்து லக்னோவில் ஒரு மாபெரும் மாநாட்டினை நடத்தினார் ஜின்னா. இஸ்லாமியர்களுக்கு பிராந்திய கவுன்சில்களில் 30 விழுக்காடு ஒதுக்கப்படவேண்டும் என்றும் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து இருதரப்பினரும் இணைந்து போராட வேண்டுமென்றும் அந்த மாநாட்டிலே ஜின்னா வலியுறுத்தினார்.

இந்தக் காலகட்டத்தில் ஜின்னா அவர்களுக்கும் காதல் ஏற்பட்டது. இவருடைய காதலுக்கு இலக்காகியவர் ஒரு பார்ஸி பெண்ணாவார். ரத்தன்பாய் என்பது அவரது பெயர். ஜின்னா வேறு மதத்தைச் சேர்ந்தவர் என்பதாலும், தன் மகளைப் போல இரண்டு மடங்கு வயதுடையவர் என்பதாலும் ரத்தன்பாயின் தந்தை திருமணம் செய்துவைக்க சம்மதிக்கவில்லை. அப்போது ரத்தன்பாய் திருமண வயதை எட்டவில்லை என்பதும் ஒரு தடையாக இருந்தது. இருந்தாலும் அவருக்கு 18 வயதாகும் வரை காத்திருந்து 1918 ஆம் ஆண்டு ரத்தன் பாயை ஜின்னா மணந்து கொண்டார். 1919 ஆம் ஆண்டு தீனா எனும் பெண் மகவிற்கு ஜின்னா தந்தையானார்.

ஆங்கிலேயே படைத் தளபதி ஒருவரின் துணைவி சிம்லாவில் வைஸ்ராய் மாளிகையில் நடைபெற்ற இரவு விருந்திலே ஜின்னாவைப் பார்த்த அளவிலேயே அவருடன் பேச வேண்டிய

ஆர்வம் தனக்கு ஏற்பட்டதென்றும் அவர் ஒரு மாபெரும் மனிதரென்றும், அருமையான ஆங்கிலத்தைப் பேசினாரென்றும், அவர் உடைகள், பாவனைகள் அனைத்தும் புகழ்பெற்ற ஆங்கில நடிகர் ட்யூ மரியர் போன்று இருந்ததென்றும் ஜின்னாவின் ஆங்கிலப் பேச்சு சிறந்த நாடாளுமன்றவாதியான எட்மண்ட் பர்க் அவர்களின் பேச்சைப் போல இருந்ததென்றும் ஆங்கில அரசாங்கம் நீடித்தால் எதிர்காலத்தில் இந்தியாவின் வைஸ்ராயாக ஜின்னா விளங்குவாரென்றும், அவரை மீண்டும் மீண்டும் சந்தித்துப் பேச வேண்டுமென்ற ஆர்வம் தனக்குள்ளதென்றும் தன் தாயாருக்கு எழுதிய கடிதத்திலே குறிப்பிட்டுள்ளார்.

இது போலவே கவிக்குயில் சரோஜினி நாயுடு, ஜின்னா பற்றி குறிப்பிடும்போது, எதிர்காலத்தின் நம்பிக்கை நட்சத்திரம் என்றும் இந்து - முஸ்லிம் ஒற்றுமைக்குத் தூதுவராக விளங்குபவர் என்றும் பாராட்டியிருக்கிறார்.

ஜின்னா அவர்கள் தனது ஆடைகளுக்காகப் பெரும் பணம் செலவு செய்பவர். அதைப்பற்றி அவருடைய மகள் தீனா ஒருமுறை குறிப்பிடும்போது, பத்து ரூபாய் ஒரு இஸ்லாமியரிடம் கிடைத்தால் உடனடியாக ஒரு தொப்பியும் சாப்பிட ஒரு பிளேட் பிரியாணியும் வாங்கிவிடுவார். ஆனால் ஒரு இந்துவிடம் அதே தொகை கிடைத்தால் அதனை உடனே சேமித்து வைத்து விடுவார் என்று தெரிவித்தாராம்.

1930 ஆம் ஆண்டிலேயே ஜின்னா அவர்கள் மாதம் ஒன்றுக்கு 40 ஆயிரம் ரூபாய் அளவிற்கு வழக்கறிஞர் தொழில் மூலமாக சம்பாதித்திருக்கிறார். தான் சம்பாதித்த தொகையை கவனமாக முதலீடு செய்து அரண்மனை போன்ற மாளிகைகளை லண்டனிலும், பம்பாயில் உள்ள மலபார் ஹில் பகுதியிலும், டெல்லியில் ஔரங்கசீப் சாலையிலும் வாங்கி வைத்திருந்தார்.

1930ஆம் ஆண்டு துவக்கத்தில் லண்டனில் இருந்த ஜின்னாவை அணுகி பலர் இந்தியாவிற்குத் திரும்பி மீண்டும் முஸ்லிம் லீக்கின் தலைமைப் பொறுப்பை ஏற்க வேண்டுமென்று வற்புறுத்தியதின் பேரில் 1935இல் ஜின்னா இந்தியாவிற்குத் திரும்பினார். முஸ்லிம் லீக்கின் திருப்புமுனையான 1937இல் நடைபெற்ற லக்னோ மாநாட்டில் இஸ்லாமிய மக்களின் எழுச்சியோடு அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

இந்தக் கால கட்டத்தில் ஜின்னா அறுபதை நெருங்கிக் கொண்டிருந்தார்.

இந்த நிலையில் ஜின்னாவின் சகோதரி பாத்திமாவை தன்னுடைய அரசியல் தளபதியாகவும் லியாகத் அலிகானையும் அவரது வழக்கறிஞரையும் தன் சொத்துக்களுக்குப் பாதுகாவலர்களாகவும் நியமித்தார்.

ஜின்னாவின் அழகான ஆடைகளும் தோற்றமும் அவருக்குள் இருந்த நோய்களை மறைக்க உதவிடவில்லை. அவர் அடிக்கடி நோய்வாய்ப்பட்டு மக்களிடமிருந்து ஒதுங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 1945ஆம் ஆண்டின் மத்தியில் அவர் மிகவும் நோயுற்ற நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டிய நிலைக்காளானார்.

பெரும்பாலானவர்களால் புகழப்பட்ட, பாராட்டப்பட்ட ஜின்னாவிற்கு எதிர்ப்பு இல்லாமல் இல்லை. அவருக்கெதிரான பல விமர்சனங்களும் எழுந்தன. அவர் மேற்கத்திய பழக்க வழக்கங்களோடு இருக்கின்றார் என்று கூறப்பட்டது. ஒரு முறை 26.7.1943 அன்று அவரை கத்தியுடன் கொலை செய்ய ஒருவன் ஜின்னாவின் பம்பாய் இல்லத்திற்கு சென்ற போது சிறு காயங்களோடு தப்பிவிட்டார். கொலை செய்ய வந்தவனை ஜின்னாவின் ஆதரவாளர்கள் தாக்கிட முற்பட்டபோது அதைத் தடுத்து அமைதி காக்க வேண்டுமென்று ஜின்னா கேட்டுக் கொண்டார்.

1940ஆம் ஆண்டு நடைபெற்ற முஸ்லிம் லீக் மாநாட்டில் லாகூர் தீர்மானமான தனி முஸ்லிம் நாடு வேண்டுமென்ற கோரிக்கை முன்மொழியப்பட்டது. 1945ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் முஸ்லிம் லீக் பெரும் வெற்றி பெற்று இந்தியாவில் ஒரு மூன்றாவது அணியாக பரிமளித்தது.

ஜின்னாவின் அரசியல் எதிரிகள்கூட அவரை மாபெரும் அரசியல் தலைவர் என்று அங்கீகரித்தனர். காந்தியடிகளும் ஜின்னாவை ஒரு மாபெரும் அரசியல் தலைவர் என்று அழைத்தார். இந்தியாவில் உள்ள இஸ்லாமியப் பெருமக்கள் ஜின்னாவின் பின் அணிவகுத்து ஜின்னாவை இஸ்லாமியர்களுடைய பாதுகாவலர் என்று கருதினர்.

இந்நிலையில் லார்டு மவுண்ட்பேட்டன் இந்தியாவின் வைஸ்ராயாக 1947ஆம் ஆண்டு வந்தார். அப்போது ஜின்னா மரணப் படுக்கையில் நாட்களைக் கழித்துக் கொண்டிருந்தார். பல ஆண்டுகளுக்குப் பிறகு மவுண்ட் பேட்டன் ஒரு முறை ஜின்னாவைப் பற்றிக் குறிப்பிடும்போது, ஜின்னா இறந்து விடுவார் என்று தெரிந்து சற்று காலதாமதம் செய்திருந்தால் பாகிஸ்தான் மலர்ந்திருக்காது என்று தெரிவித்தாராம்.

பாகிஸ்தான் தோன்றுவதற்கிடையில் இறுதிக் கட்டத்தில் பலவிதமான முட்டுக்கட்டைகள் தோன்றிய போதிலும் ஜின்னா திறமையான பேச்சுவார்த்தைகளின் மூலம் முட்டுக்கட்டைகளையெல்லாம் சரி செய்தார். பாகிஸ்தானைப் பெறுவதற்கு மாபெரும் ஊன்றுகோலாக இருந்த ஜின்னா இறுதியாக பாகிஸ்தான் விடுதலை பெற்றபோது அதன் முதல் கவர்னர் ஜெனரலாகப் பொறுப்பேற்று இரண்டு புகழ் பெற்ற உரைகளை அந்த நாட்டின் அரசியல் அமைப்பு அவையில் நிகழ்த்தினார்.

இந்தப் புகழ் உச்சியில் திடீரென்று ஜின்னா முஸ்லிம் லீக்கின் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகினார். இந்நிலையில் படுத்த படுக்கையானார். நாள் ஒன்றுக்கு 50 சிகரெட்டுகள் புகைத்ததின் காரணமாக இறுதி நிலையில் அவருக்கு எலும்புருக்கி நோயும் ஏற்பட்டு, 1948ஆம் ஆண்டு செப்டம்பர் 11ஆம் தேதி தனது 71வது வயதிலே மறைவெய்தினார். அவருடைய இறுதி நல்லடகத்தில் 10 லட்சத்திற்கும் மேலான மக்கள் கலந்து கொண்டனர் என்பதிலிருந்தே அந்த மாபெரும் தலைவரின் புகழ் எத்தகையது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

அவருக்கும், அண்ணல் காந்தியடிகளுக்கும் இடையில் எவ்வளவோ கருத்துப் போராட்டங்கள் நடைபெற்ற போதிலும் ஒருவரையொருவர் மிகுந்த கண்ணியத்துடன் நேசித்தனர்.

அந்த ஜின்னா அவர்களின் செல்வாக்கு மிக்க போராட்டத்தினால் அமைந்த பாகிஸ்தானின் அதிபர்கள் யாரும் இதுவரையில் நமது தேசத் தந்தை காந்தியடிகளின் நினைவிடத்துக்கு வந்து மலர் தூவி மரியாதை செலுத்தியதில்லை. முஷாரப் ஒருவர்தான் அந்த மரியாதையை மிகுந்த பவ்யமுடன் செலுத்தியுள்ளார்.

மேலும் முஷாரப் இந்திய நாட்டுக் கலை, கலாச்சாரம் ஆகியவற்றினால் கவரப்பட்டவராகவும் காணப்பட்டார். அவரது கனிவான பேச்சும், நடத்தையும் அவரது கண்டிப்பான கருத்துக்களுடன் முரண்பட்டு இருந்தாலும்; இறுதியில் இருநாடுகளின் நிலையான அமைதிக்கும், நல்லுறவுக்கும் கண்டிப்பான பிரச்சினைகளைக் கைவிட்டு ஒத்துழைப்பு தரும் அந்த ஒரு நாள் வருவதற்கு வழி பிறக்கும் என்று நம்புவோமாக!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(18-07-2001)

2617. பச்சை பூசிக் கொண்டால் கழுகு கிளியாகுமா?

உடன்பிறப்பே,

மே திங்கள் 13ஆம் தேதி தேர்தல் முடிவுகளின் அறிவிப்பு வெளியான மறுநாளே அவசர அவசரமாகத் திருட்டுக் கல்யாணம் செய்து கொள்வதைப் போல கவர்னர் பாத்திமா பீவி அவர்களின் ஆலோசனைப்படி முக்கியப் பிரமுகர்களுக்கு மரபுப்படி அழைப்புகள்கூட அனுப்பாமல் 14ஆம் தேதியே முதலமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார் ஜெயலலிதா. அன்று மாலையே செய்தியாளர்களைச் சந்தித்தபோது பழி வாங்குவது எனது நோக்கமல்ல; யாரையும் பழி வாங்கும் எண்ணம் எங்களுக்கு இல்லை என்று தெரிவித்தார்.

அ.தி.மு.க.விற்கு புதிய வரவான ஒரு கராத்தே வீரர் மறுநாளே சென்னை மாநகராட்சி மன்ற வளாகத்திற்குள் நுழைந்து அங்கேயிருந்த என்னுடைய படத்தையும், மேயர் மு.க.ஸ்டாலின் படத்தையும் எடுத்துப் போட்டு உடைத்துவிட்டு அதற்குப் பரிசாகத் தன் தலைவியிடமிருந்து மாவட்டச் செயலாளர் பதவியைப் பெற்றுக் கொண்டார்.

மாநகராட்சிகள், நகராட்சிகளில் முதலமைச்சரின் படத்தை தீர்மானம் நிறைவேற்றி தான் வைக்கவேண்டும் என்ற விதிமுறைகள் இருக்கும்போதே அவற்றை மீறி இந்தப் படம் வைக்கிற பிரச்சினையையே பெரிதாக்கி பல நகராட்சி மன்றங்களில் கலவரம் செய்த பெருமை அ.தி.மு.க. கூட்டணிக் கட்சிகளுக்கு உண்டு. இந்தச் செய்தி தினந்தோறும் ஏடுகளில் வெளி வந்து கொண்டிருக்கின்றன.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும் பேரவை மண்டபத்தில் இதுவரையில் எந்த முதலமைச்சருடைய படமும் இடம் பெறவில்லை. ஆனால் அங்கே

முதலமைச்சர் ஜெயலலிதா படத்தை வைக்க வேண்டுமென்று ஒரு படத்தை கையிலே தூக்கிக் கொண்டு அ.தி.மு.க.வினரும், த.மா.கா.வினரும் ஆடிய ஆட்டத்தையும், நடத்திய ஆர்ப்பாட்டத்தையும், கூட்டம் தொடர முடியாமல் கூச்சல், குழப்பம் விளைவித்ததையும் ஏடுகள் பக்கம் பக்கமாக செய்திகளாக வெளியிட்டிருக்கின்றன.

மே 14ஆம் தேதியன்று பதவியேற்றவர்கள் ஆட்சியில் பழி வாங்காத படலம் எப்படித் தொடருகிறது தெரியுமா?

மே 16ஆம் தேதி எழும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தம்பி பரிதி இளம்வழுதி மீது கொலை முயற்சி வழக்கு ஒன்று பதிவு செய்யப்படுகிறது. இதனை அறிந்த பரிதி இளம்வழுதி முன் ஜாமீன் மனு ஒன்றைத் தாக்கல் செய்தபோது, ஜெயலலிதா அரசின் வழக்கறிஞர் இளம்வழுதிக்கு ஜாமீன் வழங்கக் கூடாது என்றும், அதே நேரத்தில் இளம்வழுதியை பயங்கர ஆயுதங்களைக் கொண்டு தாக்கி, கையும் களவுமாக காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு சிறையிலே இருந்த ஜான் பாண்டியனை ஜாமீனில் விட ஆட்சேபணை இல்லை என்றும் கருத்துத் தெரிவித்தார். அதைக் கேட்ட நீதிபதி அவர்களே, ஆட்சி மாறியதும் தடம் புரள வேண்டாம். காலம் மாறினாலும் மக்கள் மாறினாலும் சட்டம் மாறாது என்று கூறியதை யாரும் மறந்திருக்க முடியாது. ஆனால் அதற்கு மறுநாளே பரிதி இளம்வழுதி மீது ஐந்து பிரிவுகளில் குற்றம் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டு அன்றே அவர் வேலூர் சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

பின்னர் இளம்வழுதி ஜாமீன் மனுத் தாக்கல் செய்து ஜாமீனில் விடுதலையானபோது ஜெயலலிதா அரசு அவசர அவசரமாக சென்னை உயர்நீதி மன்றத்திற்குச் சென்று இளம்வழுதிக்கு தரப்பட்டிருந்த ஜாமீன் விடுதலைக்கு இடைக்காலத் தடையைப் பெற்று தனது பழி வாங்காத தன்மையைக் காட்டிக் கொண்டது.

அடுத்து மே 26ந்தேதியன்று தி.மு.கழகத்தின் பொருளாளர் ஆற்காடு வீராசாமியின் தம்பி தேவராஜ் மீது கொலை முயற்சி வழக்கு ஒன்றினை யாரோ தந்த புகாரின் மீது பதிவு செய்து, அவரைக் கைது செய்து சிறையிலே அடைத்தனர்.

இதனைத் தொடர்ந்து நாடாளுமன்றக் கழக முன்னாள் உறுப்பினர் பரசுராமன் அவர்கள் தெய்வசிகாமணி என்ற ஒரு ஒப்பந்தக்காரர் கொடுத்த புகாரின் மீது கைது செய்யப்பட்டார்.

அந்தப் புகாரில் எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் மேயர் மீது, முன்னாள் அமைச்சர் தா. கிருஷ்ணன் மீதும் அண்மையில் குடும்பத்துடன் தற்கொலை செய்து கொண்டு மாண்ட அண்ணா நகர் ரமேஷ் மீதும் பழி போடப்பட்டது. இந்த வழக்கைச் சந்திப்பதாக மேயர் ஸ்டாலினும், முன்னாள் அமைச்சர் தா. கிருஷ்ணனும் வெளிப்படையாக அறிவித்து விட்டனர்.

இந்த வழக்கிலே ஸ்டாலின் நண்பர் ரமேஷை அப்ரூவராக ஆக்கி ஸ்டாலினை சிறையிலே அடைத்திடப் படாதபாடுபட்டனர். ஆனால் அந்த நண்பர் ரமேஷ் இந்த ஆட்சியினரின் காவல் துறையினரின் சித்திரவதைப் படலங்களை எண்ணிப் பார்த்து சிந்தை மிக நொந்து, இந்த ஆட்சியின் பழி வாங்கும் நடவடிக்கைகளை எதிர்த்துத் தன்னால் உயிர் வாழ்ந்திட இயலாது என்று கூறி கடவுளின் மீது ஆணையிட்டு தன் கைப்பட கடிதம் எழுதி வைத்து விட்டுத் தன் மனைவியோடும், மூன்று இளம் பிஞ்சுகளுடனும் தற்கொலை செய்து கொண்டு மறைந்து விட்டார்.

ஆனால் இந்த அரசின் காவல் துறையினர் அந்தக் கடிதம் ரமேஷ் எழுதியதாகச் சொல்லப்படும் கடிதம் என்றும், அவர் மற்றவர்களின் தூண்டுதல் காரணமாக இறந்திருக்கக் கூடுமோ என்றும் வீண் சந்தேகங்களை எழுப்பிக் கொத்தோடு செத்தொழிந்த அக்குடும்பத்தினரின் மறைவைக் கொச்சைப்படுத்தி அறிக்கை விடுத்து இந்த ஆட்சியின் அராஜகங்களை மறைத்திட முயலுகின்றனர்.

அந்த ரமேஷ் தனது கடிதத்தில் முதலமைச்சருக்கே இப்படிப் பழி வாங்கும் செயல்களை இனியும் மேற்கொள்ள வேண்டாமென்று தன் சாவின் இறுதிக் கட்டத்திலே உருக்கமாகக் கேட்டு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பரசுராமனைத் தொடர்ந்து புரசைவாக்கம் சட்டமன்றத் தொகுதியில் கழகக் கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற நண்பர் புரசை ரெங்கநாதனையும், அவருடைய உதவியாளர் கவுரிசங்கர் மற்றும் நண்பர்கள் சந்திரன் யாதவ், ஜெயப்பிரகாஷ், குமரேசன் ஆகியோரையும் இந்த அரசு கைது செய்து இன்று வரை ஜாமீனிலேகூட விடாமல் ஒன்றரை மாத காலமாக சிறையிலே வைத்துள்ளது.

எம்.ஜி.ஆர். காலத்திலிருந்து அ.தி.மு.க.விலே இருந்தவரும், திருவில்லிப்புத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகச் இருந்தவருமான தாமரைக்கனி தி.மு.கழகத்திலே உறுப்பினராகச் சேர வேண்டுமென்று விருப்பம் தெரிவித்தார். அதன் காரணமாக அவரைப் பழி வாங்கத் துடித்த இந்த ஆட்சியினர் அவர் மீது அவருடைய மகனிடமிருந்தே புகார் மனு ஒன்றைப் பெற்று அவரை சென்னையிலே கைது செய்து, உடல் நலக் குறைவோடு இருந்தவரை திருவில்லிப்புத்தூருக்கு அழைத்துச் சென்று ரிமாண்ட் செய்தார்கள். அவர் ஜாமீன் மனு தாக்கல் செய்து, விடுதலையாகின்ற நேரத்திலே விடுவிக்காமல் மீண்டும் ஒரு புகார் மனு ஆளுங்கட்சியினரால் தரப்பட்டு அதன் மீது தொடர்ந்து கைது செய்யப்பட்டார். காவல்துறையின் தாக்குதல் காரணமாக அவர் எலும்பு முறிந்து தற்போது மருத்துவ மனையிலே கிடக்கிறார்.

நீலாங்கரை தி.மு.க. ஊராட்சி மன்றத் தலைவர் வி. எட்டியப்பன், துணைத் தலைவர் ரவி, ஒன்றியக் குழு உறுப்பினர்கள் வெங்கட்ராமன், எஸ்.கே. ரவி ஆகியோர் மீது ஆளுங்கட்சியினர் கொடுத்த புகார் மனுவின் அடிப்படையிலே பொய் வழக்குப் பதிவு செய்து அவர்களும் கைது செய்யப்பட்டனர்.

ஜெயலலிதா 100 கோடி ரூபாய் செலவு செய்து மணவிழாவை நடத்தி வைத்த அவரது வளர்ப்பு மகன் சுதாகரன் மீது 14.6.2001ல் அவருடைய நண்பரான கோபு ஸ்ரீதரன் என்பவரிடமிருந்தே புகார் மனு ஒன்றினைப் பெற்று - சுதாகரனை கைது செய்ததோடு, அவரது வீட்டிலே ஹெராயின் இருந்ததாகவும் வழக்குத் தொடுத்து பாளையங்கோட்டை சிறையிலே அடைத்தார்கள். மேலும் அவருடைய தந்தை விவேகானந்தனும் அன்றைய தினமே கைது செய்யப்பட்டார். சுதாகரனின் நண்பர் மொய்னுதீன் என்பவரும் இந்த வழக்கிலே கைது செய்யப்பட்டார். சுதாகரனின் மற்றொரு நண்பரான பாஸ்கரன் என்பவரும் சில நாட்களுக்கு முன் இதே வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளார். ஹெராயின் வழக்கில் ஜாமீனில் வெளிவரமுடியாது. மேலும் ஏறத்தாழ பத்தாண்டுக் காலம் தண்டனையும் பெற்றுத் தீரவேண்டும். அப்படிப்பட்ட பிரிவைத் தேர்ந்தெடுத்து சுதாகரன் மீதும், பாஸ்கரன் மீதும் வழக்குத் தொடுத்திருப்பதற்கு என்ன காரணம் என்பதை மக்கள் அறியாமல் இல்லை.

26-6-2001 அன்று விழுப்புரம் அரிசி களஞ்சியத்திற்கு அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் தம்பி பொன்முடி, செய்தியாளர்களுடன் சென்று அங்கே புழுத்த அரிசி எதுவும் இல்லை என்றும், அதற்கு முதல் நாள் புழுத்த அரிசி இருப்பதாக இரண்டு அமைச்சர்கள் கூறியது தவறான செய்தி என்றும் நிரூபித்துக் காட்டிய காரணத்திற்காக, அன்றையதினம் நள்ளிரவில் அவர் பொதுக்கூட்ட மேடையிலே பேசி விட்டு இறங்கிய போது கைது செய்யப்பட்டார்.

அவருடன் மாநில கொள்கை பரப்பு இணைச் செயலாளர் எஸ்.எஸ். பன்னீர்செல்வம் மற்றும் நகரச் செயலாளர் பஞ்சநாதன் ஆகியோரும் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மீது ஐந்து பிரிவுகளில் வழக்குப் போடப்பட்டுள்ளது. இந்தக் கைதைக் கண்டித்து மறியல் செய்த 500 பேர் தொடர்ந்து கைது செய்யப்பட்டனர்.

விழுப்புரத்தில் பொன்முடி அரிசி சோதனையிடச் சென்ற போது அவருடன் பல செய்தியாளர்கள் சென்றிருந்த போதிலும் அவர்களையெல்லாம் விட்டுவிட்டு சன் தொலைக்காட்சியின் நிருபர் சுரேஷ் என்பவரை மட்டும் இந்த அரசு கைது செய்தது. இவரை விடுவிக்கவேண்டுமென்று கோரி மனு கொடுக்க கோட்டைக்குச் சென்ற செய்தியாளர்களை அனுமதிக்காததோடு, பெண் நிருபர்கள் உட்பட பலரை காவல் துறையினர் தூக்கி எறிந்தனர். இதனைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்திய செய்தியாளர்கள் சுமார் 150 பேர் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு வேப்பேரி காவல் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு ஒரு நாள் முழுவதும் அங்கு வைத்திருந்து பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

பெரியார் திராவிடர் கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி தேசத்துரோகக் குற்றஞ்சாட்டப்பட்டு 27-6-2001 அன்று கைது செய்யப்பட்டார்.

29-6-2001 அன்று நள்ளிரவில் என் வீடு புகுந்து, முதலில் தொலைபேசியைத் தூண்டித்துவிட்டு, அடுத்து மாடிப்படிகளில் ஏறி அங்கேயிருந்த கதவை உடைத்துக் கொண்டு, பின்னர் கூடத்தைக் கடந்து வந்து படுக்கை அறைக்குள்ளேயே நுழைந்து என்னைக் கைது செய்த காட்டுமிராண்டித்தனமானச் செயலும்

என்னை பாதுகாப்பதற்காக வந்த மத்திய அமைச்சர் தம்பி முரசொலி மாறனையும், பின்னர் நான் வைக்கப்பட்டுள்ள இடத்தைத் தெரிந்து கொள்வதற்காக என் குடும்பத்தினருடன் வந்த மத்திய அமைச்சர் டி.ஆர். பாலுவையும் அடித்துத் துவைத்துத் தூக்கியெறிந்து, அந்த இரு மத்திய அமைச்சர்களையும் கைது செய்த நிகழ்ச்சிகளையும் நீயும் அறிவாய், நாடும் அறியும்.

சென்னை நகரத்தின் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கும், சென்னை நகரச் சாலைகளை அழகுபடுத்துவதற்கும் பத்து மேம்பாலங்களை எழுப்பிய குற்றத்திற்காக, அந்த மேம்பாலங்கள் முறைப்படி ஒப்பந்தப்புள்ளிகள் அடிப்படையிலே கட்டப்பட்டிருந்த போதிலும் ஊழல் வழக்கு ஒன்றைப் பதிவு செய்து சென்னை மாநகர மேயர் மு.க. ஸ்டாலின், முன்னாள் அமைச்சர்கள் கோ.சி. மணி, பொன்முடி, முன்னாள் தலைமைச் செயலாளர் கே.ஏ. நம்பியார், கட்டிடக்கலை ஆலோசகர் ஸ்ரீனிவாசன், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆர்.எஸ். ஸ்ரீதர், ஜெகதீசன் உட்பட பலரைக் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

29, 30 ஆகிய நாட்களில் நடைபெற்ற சம்பவங்களையடுத்து தமிழகம் முழுவதும் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்டோர், கழக உடன்பிறப்புகள் கைது செய்யப்பட்டனர்.

ஜெயலலிதா அரசு நடத்திய இந்த அநியாயங்களைக் கண்டு சகிக்க முடியாமல் உயிர் துறந்தோர் எண்ணிக்கை மாத்திரம் நாற்பதைத் தாண்டியது.

ஆட்சிக்கு வந்து ஆக மொத்தம் 60 நாட்கள்தான் ஆகியிருக்கின்றன. இதற்கிடையே மக்கள் நலன் என்ற பெயரால் அறிவிக்கப்பட்டவைகளெல்லாம் ஏட்டிலே எழுதிய திட்டங்களாகத்தான் இருக்கின்றன. ஆனால், அடக்குமுறைச் செயல்களோ அம்பலத்தில் ருத்ரதாண்டவம் ஆடிக் கொண்டிருக்கின்றன. இதற்குப் பெயர்தான் பழி வாங்காத அரசா? அரசாங்கச் செலவில் அரசு அதிகாரிகளைக் கொண்டு காவல்துறை எடுத்த போலி கேசட்டுகளை பட்டி தொட்டியெல்லாம் பிரச்சார வெளியீடாக காட்டிக் கொண்டிருக்கிறார்கள். நல்லாட்சி நடத்துகின்ற ஒரு அரசு தன்னுடைய சாதனைகளை, மக்களுக்குத் தெரியவேண்டிய திட்டங்களை செய்தித் துறை மூலமாக

பரப்புவதுதான் வாடிக்கை. இவர்களுக்கோ எதிர்க்கட்சிகளை பழிவாங்குவதும், அவற்றை மறைத்து, மக்களை ஏமாற்றுவதும்தான் இந்த போலி கேசட் விளம்பரத்தின் மூலமாக விளக்கப்படுகிற சாதனையாகும்!

உடன்பிறப்பே,

தி.மு.கழகம் தோன்றுவதற்கு முன்பே, அண்ணா அவர்களால் உதயசூரியன் நமது தேர்தல் சின்னமாக அறிவிக்கப்படுவதற்கு முன்பே, கட்டப்படும் வீடுகளாயினும், மண்டபங்களாயினும் வேறு வகையான கட்டிடங்களாயினும் சூரியக் கதிர் வடிவமைப்பு ஒன்று இடம் பெற்றிருக்கும். இன்றைக்கும் அத்தகைய வடிவமைப்பு பதிக்கப்பட்ட பழைய காலக் கட்டிடங்களைக் காண முடியும்.

இந்த அரசின் பெருந்தன்மைக்கும் (?) பண்பாட்டுக்கும் (?) அடையாளமாக ஜெயலலிதா முதலமைச்சராக பொறுப்பேற்றதற்கு மறுநாளே அந்த சூரியக் கதிர் பெயர்த்தெடுக்கப்பட்டு வெள்ளை பூசப்பட்டது.

இவர்களிடம் தொடர்ச்சியாக இதுபோன்ற பழி வாங்கும் படலங்கள், இழிதகை போக்குகளேயன்னியில் மக்கள் நலச் செயல்பாடுகளை எதிர் நோக்குதல் என்பது முடிகிற காரியமா? சாத்தியமாகுமா? பச்சை நிறம் பூசிக் கொண்டால் கழுகு, கிளியாகி விடுமா?

அன்புள்ள,

மு. கருணாநிதி

(19-07-2001)

2618. உண்மை கசக்கிறது, நாமென்ன மருந்து தர முடியும்?

உடன்பிறப்பே,

இந்தியத் தொழில் கூட்டமைப்பு தேசிய கவுன்சில் கூட்டத்தில் கடந்த வாரம் பேசிய ஜெயலலிதா "எங்களுடைய முயற்சிகள் எல்லாம் தமிழ்நாட்டை இன்னும் ஒரு வருடத்தில் தொழில் துறையில் முதல் இடத்தில் கொண்டு வருவோம். தகவல் தொழில் நுட்பம், வர்த்தகம் என்று அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாட்டை முன்னணி மாநிலமாக உருவாக்குவோம்" என்று பேசியிருந்தார். அதற்கு விளக்கம் அளிக்கும் வகையிலேதான் முரசொலி இதழில் கழக ஆட்சியிலே தொழில் துறையில் என்னென்ன சாதனைகள் செய்யப்பட்டன என்று விரிவாக எழுதியிருந்தேன்.

ஆனால் ஜெயலலிதா ஆட்சியிலே அவர்களைப் பற்றி செய்யப்பட்ட சில விமர்சனங்களையெல்லாம் நாகரிகம் கருதி எழுதாமல் விட்டு விட்டேன். ஆனால் அ.தி.மு.க. அரசின் தொழில் அமைச்சர், பதில் என்ற பெயரால் எதையோ எழுதி, ஜெயலலிதா அரசைப் பற்றிய சில கருத்துக்களையும் எழுதுமாறு என்னைத் தூண்டிவிட்டுள்ளார்.

ஜெயலலிதா ஆட்சிக் காலத்திலே தொழில் துறைக்கு எந்த அளவிற்கு ஆக்கம் தரப்பட்டது என்பதற்கு ஒரேயொரு உதாரணம் மட்டும் கூறுகிறேன். 1994 ஆம் ஆண்டு பிசினஸ் இந்தியா என்ற ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவந்த ஒரு கட்டுரையின் ஒரு சிறு பகுதி வருமாறு :-

> "சென்னையைச் சேர்ந்த தொழில் அதிபர் கூறியதாவது என்று குறிப்பிட்டு, குப்பன், சுப்பன், முனியனை எல்லாம் நீங்கள் தாஜா செய்ய வேண்டிய அவசியமில்லை. மூல விக்கிரகமான ஜெயலலிதாவை தாஜா செய்து விட்டாலே போதும், உங்களுடைய நலன்கள் பாதுகாக்கப்படும். அதிலிருந்து தவறி விட்டாலோ உங்கள் வாழ்க்கை

முழுவதுமேகூட குழப்பம்தான். ஜெயலலிதாவின் நிர்மூலமான குணாம்சங்கள் பல பெரிய தொழிலகங்களை வரவிடாமலேயே செய்து விட்டன"

இவ்வாறு பிசினஸ் இந்தியா எழுதியிருந்தது.

மேலும், அப்போது தொழில் துறை எப்படி இருந்தது என்பதைத் தெளிவாக்க மற்றுமோர் எடுத்துக்காட்டு அ.தி.மு.க. ஆட்சியிலே கிரானைட் உரிமம் வழங்குவதிலே ஊழல் மலிந்திருந்தது என்பது குறித்த வழக்கிலே, உயர்நீதி மன்ற நீதியரசர் 12-3-1994 அன்று வழங்கிய தீர்ப்பிலே அரசுக்குப் போய்ச் சேர வேண்டிய பணத்தைக் குற்றஞ்சாட்டப்பட்டோர் (தொழில் அமைச்சராக இருந்த திரு. சின்னசாமி) உறிஞ்சி எடுத்துக் கொண்டதன் மூலம் பல கோடி ரூபாய் அளவிற்கு இலாபம் அடைந்துள்ளார் என்று தெரிவித்திருந்தார்.

அது மாத்திரமல்ல, 1995ஆம் ஆண்டு நவம்பரில் பொருளாதார நுண்ணறிவு அமைப்பு (Economics Intelligence Unit), தெற்கே உள்ள வாய்ப்புகள் (Seeking opportunities in the South) என்ற தலைப்பில் வெளியிட்ட அறிக்கையில், ஏதாவது ஒரு மாநிலம் ஊழலிலே சிறந்து விளங்குகிறது என்று சொல்ல வேண்டுமானால், அந்தச் சிறப்புள்ள மாநிலம் தமிழ்நாடுதான் என்றும், ஒவ்வொரு திட்டத்தினுடைய மதிப்பீட்டிலேயும் 10 முதல் 15 விழுக்காடு வரையில் இடைத்தரகர்களுக்குக் கமிஷன் கொடுக்க வேண்டும் என்று எழுதியிருந்தது. புதிதாகத் தொழில் அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும் நண்பருக்கு அந்த ஏடுகளையெல்லாம் படித்திருக்க அப்போது நேரம் இருந்திருக்காது.

இவைகள் எல்லாம் 1991 முதல் 1996 வரை ஜெயலலிதா தலைமையிலே நடைபெற்ற அ.தி.மு.க. அரசிற்கு வழங்கப்பட்ட சான்றிதழ்களாகும்.

15-7-2001 தேதி முரசொலி கடிதத்தில் நான் எழுதும்போது, 1989-1991 காலகட்டத்தில் தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்கு தி.மு.கழக அரசு அளித்த ஊக்கத்தின் காரணமாக தமிழ்நாடு இந்தியாவில் தொழில் வளர்ச்சியில் மூன்றாம் இடத்தினைப் பெற்றது. அதற்குப் பிறகு நடைபெற்ற ஜெயலலிதா ஆட்சியின்போது தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் பின்தங்கி ஐந்தாம் இடத்திற்குச் சென்று விட்டது. 1996இல் தி.மு.கழக

அரசு மீண்டும் பொறுப்பேற்றதற்குப் பிறகு, தமிழ்நாடு மீண்டும் தொழில் வளர்ச்சியில் முன்னணியிலேதான் இருந்து வருகிறது. 22-5-2000 அன்றைய நிலையில் இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம் (Centre for Monitoring Indian Economy - C.M.I.E) வெளியிட்ட அறிக்கையின்படி 1 லட்சத்து 56 ஆயிரத்து 893 கோடி ரூபாய் முதலீடுகளைப் பெற்று தொழில் முதலீடுகளில் இந்தியாவிலேயே முதலாவது மாநிலமாக முன்னேற்றம் கண்டது. பின்னர் 21-7-2000 அன்று அதே மையம் இந்திய மாநிலங்களில் செய்யப்பட்டுள்ள முதலீடுகளை எல்லாம் தொகுத்து வெளியிட்ட அறிக்கையிலே தமிழ்நாடு தொழில் முதலீடுகளில் இந்தியாவில் முதலிடம் என்னும் நிலையை மீண்டும் உறுதி செய்தது என்று எழுதியிருந்தேன்.

ஆனால் இதிலே ஏதோ தவறு இருப்பதைப் போல அ.தி.மு.க. தொழில் அமைச்சர் அறிக்கை விடுத்துள்ளார். நான் எழுதிய புள்ளி விவரம் உண்மையானது என்பதை நிரூபிக்க 9-8-2000 அன்று நடுநிலை நாளிதழான **தினமணி** எழுதிய தலையங்கத்தை அவருக்கும், அவருடைய தலைவிக்கும் தெரிவிக்கின்றேன். அந்தத் தலையங்கத்தின் தலைப்பே **முதலீட்டில் தமிழகம் முதலிடம்** என்பதாகும். அதன் முக்கியப் பகுதிகள் வருமாறு :-

> "கடந்த சில ஆண்டுகளாக மாநிலங்களுக்கிடையே தொழில் முதலீட்டை ஈர்ப்பதில் போட்டி ஏற்பட்டிருப்பது ஆரோக்கியமான அம்சம். அதிலும் குறிப்பாக மகாராஷ்டிரம் மற்றும் தமிழகத்துக்கு இடையே, அண்மைக் காலமாக, இந்தப் போட்டி கடுமையாகவே இருந்து வந்துள்ளது. கடந்த ஏப்ரல் மாத நிலவரப்படி, தொழில் முதலீட்டில் மகாராஷ்டிரத்தை விட தமிழகம் வெறும் 318 கோடி ரூபாய்தான் குறைவு என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் விரைவில் மகாராஷ்டிரத்தை தமிழகம் மிஞ்சி இந்தியாவில் முதல் இடத்தை வகிக்க உள்ளது என கடந்த மே மாதம் தமிழக முதல்வர் கருணாநிதி சட்டப் பேரவையில் அறிவித்திருந்தார். அவர் கூறியதற்கு இணங்க தற்போது வெளிவந்துள்ள இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையத்தின் அறிக்கைபடி ரூ. 1 லட்சத்து 60 ஆயிரத்து 804 கோடி முதலீடு திரட்டி, நாட்டில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது தமிழகம்.

தொழில் வளர்ச்சியில் தமிழகத்தின் இவ்வரலாற்றுச் சாதனை மனநிறைவு தருவதாகும். ரூ. 1 இலட்சத்து 58 ஆயிரத்து 410 கோடி முதலீடு திரட்டியுள்ள மகாராஷ்டிரம் இரண்டாம் இடத்துக்குச் சரிந்துள்ளது. குஜராத் மூன்றாம் இடத்தையும், ஆந்திரம் நான்காம் இடத்தையும் தக்கவைத்துக் கொண்டுள்ளன. குறைந்த செலவில் நல்ல கட்டமைப்பு வசதிகள், மேம்பட்ட மனித வளம், புதிய திட்டங்களை உடனுக்குடன் பரிசீலித்து அனுமதி வழங்கிடும் அரசின் முனைப்பான செயல்பாடு ஆகிய அம்சங்கள் - தமிழகம் இச்சாதனை புரிந்திட உதவியுள்ளன என்பது வெளிப்படை."

இதற்குப் பிறகாவது தொழில் அமைச்சர் உண்மையை ஒப்புக் கொள்வார் என்று நம்புகிறேன்.

தொழில் வளர்ச்சி பற்றிக் குறிப்பிடும் போது அதிலே திரட்டியுள்ள தொழில் முதலீடுகளின் அடிப்படையில் எந்த மாநிலம் முதலிடம், உத்தேசிக்கப்பட்டுள்ள முதலீடுகளின் அடிப்படையில் எந்த மாநிலம் முதலிடம், செயல்பாட்டிலுள்ள திட்டங்களின் அடிப்படையில் எந்த மாநிலம் முதலிடம், சமூகக் கட்டமைப்பு அடிப்படையில் எந்த மாநிலம் முதல் இடம் என்று பல்வேறு அம்சங்களைப் பொறுத்து இந்த விவரங்கள் கணக்கெடுக்கப்படும்.

அந்த வகையில் கடந்த ஆண்டு **பிசினஸ் டுடே,** வெளியிட்ட ஆய்வு அறிக்கைப்படி, தமிழ்நாடு சமூகக் கட்டமைப்பில் இரண்டாவது இடத்திலும், வெளிப்புறக் கட்டமைப்பு வசதிகளில் நான்காவது இடத்திலும், துறைமுகத்திற்கு அருகில் என்ற வகையில் 3வது இடத்திலும், தொழிலாளர் இருப்பளவு என்பதைப் பொறுத்து இரண்டாவது இடத்திலும், தொழிலாளர்க்கான செலவு என்பதில் இரண்டாவது இடத்திலும் மின்சக்தி இருப்பு மற்றும் விலை என்ற அடிப்படையில் மூன்றாவது இடத்திலும் உள்ளது.

புதிய முதலீடுகளைப் பெறுவது குறித்து தமிழ்நாடு எந்த நிலையிலே இருக்கிறது என்பதைப் பற்றி நான் கூறுவதை விட ஆங்கில நாளிதழ் **எகனாமிக் டைம்ஸ்,** கடந்த மாதம் 15-6-2001 இதழிலே வெளியிட்ட கட்டுரையின் ஒரு பகுதியை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

இந்தியப் பொருளாதார மேற்பார்வை மையம் ஜூன் திங்களில் இதற்கான புள்ளி விவரத்தை அளித்துள்ளது. இந்திய ரிசர்வ்

வங்கியின் ஆய்வுப்படி திட்டங்கள் செயல்படும் இடங்களை மாநில வாரியாக பரிசீலிக்கும்போது தமிழ்நாடு 24.3 சதவிகிதத்துடன் அதாவது 13,017 கோடி ரூபாய் 1999-2000ஆம் ஆண்டில் பெற்று முதலிடம் பெற்றுள்ளது. 20.5 சதவிகிதத்துடன் அதாவது 10,987 கோடி ரூபாய் 1999-2000ஆம் ஆண்டில் பெற்று மகாராஷ்டிரம் இரண்டாவது இடம் பெற்றுள்ளது. அடுத்த மூன்று இடங்களை 6,707 கோடி ரூபாய் (12.5 சதவிகிதம்) பெற்று குஜராத்தும், 5,927 கோடி ரூபாய் (11.1 சதவிகிதம்) பெற்று ஆந்திரப் பிரதேசமும், 3,926 கோடி ரூபாய் (7.3 சதவிகிதம்) பெற்று ஒரிசாவும் வகிக்கின்றன. தொடர்ந்து கர்நாடகம், மேற்கு வங்காளம், பஞ்சாப் ஆகியவை வருகின்றன. கேரளாவின் பங்கு 1.1 சதவிகிதம்தான். இதில் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், மொத்தத் திட்டச் செலவுத் தொகையில் மற்ற மாநிலங்கள் எல்லாம் கடுமையான வீழ்ச்சியைச் சந்தித்திருக்கும் போது தமிழ்நாடு மட்டும்தான் தடை செய்ய முடியாத அளவிற்கு உருவாகி அதற்கு முந்தைய ஆண்டில் இருந்த 11.3 சதவிகிதத்தைவிட இரு மடங்கிற்கு மேலாக 24.3 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. உள்கட்டமைப்புத் திட்டங்களில் தனியார் துறையினரை ஈர்ப்பதில் தி.மு.க. அரசு மற்றவர்களை விட முன்னணியில் உள்ளது.

இவ்வாறு எகனாமிக் டைம்ஸ் எழுதியுள்ளது.

கருணாநிதி அரசு திட்டங்களை மட்டும் அறிவித்து விட்டு அதனைச் செயல்படுத்த எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்று அமைச்சர் குற்றஞ்சாட்டியிருக்கிறார். ஜெயலலிதா தமிழகத்தை ஆண்ட 1992-93ஆம் ஆண்டிலே தமிழகத்திலிருந்து செய்யப்பட்ட ஏற்றுமதியின் மதிப்பு 6,808 கோடி ரூபாயகும். ஆனால் திட்டங்களை செயற்படுத்தாத சாதாரண இந்தக் கருணாநிதியின் ஆட்சியிலே 1999-2000ஆம் ஆண்டு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு எவ்வளவு தெரியுமா? 21,387 கோடி ரூபாய்.

மென்பொருள் ஏற்றுமதியை மட்டும் எடுத்துக் கொண்டால் அ.தி.மு.க. ஆட்சியிலே 1994-95இல் 12 கோடியே 17 இலட்சம் ரூபாய்தான். ஆனால் செயல்படாத இந்தக் கருணாநிதியின்

ஆட்சியிலே 2000-2001இல் மென்பொருள் ஏற்றுமதி 3,116 கோடி ரூபாய்.

இந்தியாவிலே உள்ள மக்கள் தொகையில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் தொகை 1994ஆம் ஆண்டில் 35.97 விழுக்காடு. அதே ஆண்டில் தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் தொகை 35.03 விழுக்காடு. 1999-2000ஆம் ஆண்டில் இந்தியாவில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் தொகை 26.10 விழுக்காடு. ஆனால் தமிழ்நாட்டில் அது 21.12 என்ற அளவிற்குக் குறைந்தது. கழக அரசில், செயல்படாத இந்தக் கருணாநிதியின் ஆட்சியில் நடைபெற்ற சாதனை இது.

11வது நிதிக் கமிஷன் தலைவர் திரு. குஸ்ரோ அவர்கள் 1.11.1999 அன்று சென்னையில் உரையாற்றியபோது,

"எழுத்தறிவு, பிறப்பு - இறப்பு மற்றும் சிசு மரண விகிதங்களில் தேசிய சராசரி அளவைவிட மிகச் சிறப்பான குறியீடுகளைப் பெற்றுள்ள தமிழ்நாடு, சமூகப் பணிமுனையில் (Social Service Sector) முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது.

அனைத்து கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கி ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட அனைத்துக் கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகள் அமைத்து, தமிழ்நாடு அடிப்படை கட்டமைப்பு வசதி முனையில் (Infrastructure Sector) அளப்பரிய சாதனையை நிகழ்த்தியுள்ளது" என்றும் பாராட்டியுள்ளார்.

சர்வதேச வளர்ச்சிக்கான ஹார்வார்டு மையத்தின் இயக்குநர் பேராசிரியர் ஜெஃப்ரி சேக்ஸ் தனது வீடியோ உரையில்,

"சமூகப் பரிமாணங்கள் (Social dimensions), வர்த்தகச் சூழல்கள் (Business environment) என்ற இரு பெரும் அம்சங்கள் இன்றி, உயரிய வளர்ச்சி விகிதங்களை எய்துவது என்பது இயலாத ஒன்றாகும். தமிழ்நாடு இந்த இரண்டு அம்சங்களையும் கொண்டுள்ளதால், மிகச்சீரிய வகையில் இயங்கிடும் ஆற்றலைப் பெற்றுள்ளது" என்று பாராட்டினார்.

இந்திய தொழில் வர்த்தக நிறுவனங்களின் கூட்டமைப்பின் (Federation of Indian Chambers of Commerce and Industry) பொதுச் செயலாளர் டாக்டர் அமித் மித்ரா,

"தமிழ்நாடு, மற்ற மாநிலங்கள் பார்த்து பின்பற்றத் தக்க முன்னுதாரணமாக இன்று விளங்கி வருகிறது" என்று பாராட்டியுள்ளார்.

இந்து பத்திரிகையின் வர்த்தக ஆசிரியர் பேராசிரியர் எஸ். சுவாமிநாதன்,

"அரசியல், பொருளாதார ரீதியான பிரச்சினைகளை எல்லாம் மீறி, முன்னேற்றம் கண்டு, தலைசிறந்த மாநிலமாகத் திகழ்ந்திட முடியும் என்பதைத் தமிழ்நாடு நிரூபித்துக் காட்டியுள்ளது" என்று பாராட்டியுள்ளார்.

12.2.2000 நாளிட்ட Economic and Political Weekly இதழ் "தமிழ்நாட்டின் பல பகுதிகளில் இயற்கை வள அமைப்பில் வேறுபாடுகள் காணப்படினும், பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டை உருவாக்குவதில் மாநிலத்தின் பகுதிகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகளைப் பெருமளவிற்குக் குறைத்து, வெற்றி கண்டுள்ள ஒரே மாநிலம் தமிழ்நாடு" என்று பாராட்டியுள்ளது.

2000, ஜூலை 16-31 தேதிய "Computers Today" இதழ், "தமிழகம் இன்று, அந்த மாநிலத்திலுள்ள மிகப்பெரிய வள அமைப்புகளையும், அடிப்படை கட்டமைப்பு வசதிகளையும், சிறப்பான மனித வளத்தையும், சர்வதேச நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்வதற்கேற்றபடி நிலைமைகளை மாற்றியுள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கியுள்ள இந்த மாற்றத்தினால் தகவல் தொழில் நுட்பத்தில் அனைவரும் விரும்பித் தேர்ந்தெடுக்கும் இடமாக தமிழகம் உருமாற்றம் பெற்றுள்ளது" என்று பாராட்டியுள்ளது.

இவ்வாறு கழக ஆட்சியில் தமிழகத்தின் பல்துறை வளர்ச்சி குறித்து அறிஞர்கள் பாராட்டியுள்ளனர் - புகழ்ந்து போற்றியுள்ளனர் - புதிய அமைச்சருக்கு மட்டும் உண்மை கசக்கிறது! அதற்கு நாமென்ன மருந்து வழங்க முடியும்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(22-07-2001)

2619. எங்கள் நட்பின் ஈரம் காயப்போவதில்லை!

உடன்பிறப்பே,

நடிகர் திலகம் சிவாஜி மறைந்த செய்தியை என்னால் நம்பத்தான் முடியவில்லை. நானிருக்கிறேன், எனக்கு இளையவர் போய்விட்டாரே என்ற துடிப்பும் துயரமும் என்னை வாட்டி வதைக்கின்றன.

ஒரு மாபெருங்கலைஞர் இருந்தார், அவர் மறைந்தார் என்பதற்கான இரங்கல் செய்தியோடு முடிவதல்ல எங்கள் நட்பின் இறுக்கம்!

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு சுவாமிமலையில் நடைபெற்ற அவரது மணவிழாவை முன்னின்று நடத்தி வாழ்த்துரைத்தவன் நான் என்பதை இன்று கணவனை இழந்து கதறித் துடித்துக் கொண்டிருக்கும் நிலையிலும் சகோதரி கமலா நினைவூட்டி என் கரம் பற்றி அழுதபோது என் நெஞ்சு நொறுங்கிப் போயிற்று.

"சென்னையில் வந்து என்னைச் சந்திக்கவும்" என்று நான் தந்தி கொடுத்தால்கூட இரண்டு வார்த்தைகள் அதிகமாகின்றனவே என எண்ணாமல், Dear Sivaji (அன்புள்ள சிவாஜி) என்றே அழைத்து அந்தத் தந்தியை அனுப்புவேன்.

அப்படி ஒரு நட்பு மொட்டவிழ்ந்திருந்த அந்த இளமைக் காலத்தையும் - கல் மேல் எழுத்தாகப் பதிந்து விட்ட எங்கள் கலையுலகப் பயணத்தையும் - நினைத்து நினைத்து ஏங்குகிறேன்.

"நெஞ்சுக்கு நீதி" இரண்டாம் பாகத்தில் நடிகர் திலகத்திற்கும் எனக்குமுள்ள நட்பு பற்றி நான் எழுதியுள்ள அத்தியாயத்தையும் அடிப்படையாகக் கொண்டு இந்தக் கண்ணீர்க் கடிதம் எழுதுகிறேன்.

"நான் பிறந்த வீடும் புகுந்த வீடும் ஒன்று சேர்ந்தது கண்டு என் உள்ளம் மகிழ்ச்சியால் பொங்குகிறது." இப்படிச் சொன்னவர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன். சொன்ன இடம் சென்னைக் கடற்கரைக் கூட்டம். சொன்ன ஆண்டு 1979 அண்ணா பிறந்தநாள் விழாவுக்கு, ஆம் - தி.மு.கழகத்தின் சார்பில் கொண்டாடப்பட்ட விழாவுக்கு திருமதி இந்திரா காந்தி வந்திருந்தார்.

திடீரென்று 1979-ஆம் ஆண்டுக்கு வந்து விட்டேனேயென்று யாரும் வியப்படையத் தேவையில்லை. இப்போது நான் 1950-ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே சில நிகழ்ச்சிகளை நிழலாட விடப் போகிறேன். சிவாஜி அப்படிச் சொன்னதை இந்திரா காந்தி அவர்களுக்கு மொழி பெயர்த்துச் சொல்லப்பட்டது. அப்போதுதான் அந்த அம்மையாருக்கு நடிகர் திலகம் சிவாஜி கணேசன் திராவிடர் கழகக் காலந்தொட்டு இந்த இயக்கத்திலே இருந்து வளர்ந்தவர் என்ற தகவலே தெரியும்!

பிறந்த வீடான திராவிடர் இயக்கமும், புகுந்த வீடான காங்கிரஸ் கட்சியும் தேர்தல் உறவு கொண்டதைத்தான் சிவாஜி அப்படிச் சுவைபடச் சொன்னார் என்பதுணர்ந்த லட்சோப லட்சம் மக்கள் அடங்கிய அந்தக் கூட்டம் ஆரவாரம் செய்து கையொலி முழங்கியது.

திராவிட முன்னேற்றக் கழகம் 1949-ல் தொடங்கப்படுவதற்கு முன்பே திராவிடர் கழகத்தில் ஈடுபாடு கொண்டவர் சிவாஜி! மராட்டிய மாவீரன் சிவாஜி ஒரு மாபெரும் ராஜ்யத்தைத் தனது வாள் முனையால் உருவாக்கினான்; என்றாலும்கூட மன்னனாக மகுடம் புனைய அவனது குலம் இடம் தரவில்லையென்று பழமைவாதிகளும் அவர்கட்குப் பாதுகாவலரான காகபட்டரும் தடுத்துரைத்து நின்ற வரலாற்றை அண்ணா அவர்கள் **சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் அல்லது சந்திர மோகன்** என்ற ஒப்பற்ற நாடகமாகத் தீட்டியிருந்தார்.

அந்த நாடகத்தில் அண்ணா அவர்களே காகபட்டர் வேடம் தாங்கி நடித்தார். காவியுடை, கமண்டலம் இவற்றுடன் அண்ணா காகபட்டராகத் தோன்றிப் பேசியதையும், நடித்ததையும் பாராட்டிப் புகழாத நடிகர்களே இல்லை! அந்த நாடகத்தில் சிவாஜியாக "எம்.ஜி. ராம்சந்தர் நடிப்பார்" என்று அண்ணாவின் "திராவிட நாடு" பத்திரிகையில் விளம்பரங்கள் தொடர்ந்து வந்து கொண்டிருந்தன.

எனினும், இடையில் ஏற்பட்ட சில பிரச்சினைகளால் நாடக மேடையில் புகழ் பெற்று விளங்கியவரும், திராவிடர் கழக ஈடுபாடுடையவருமான நண்பர் வி.சி. கணேசனை சிவாஜி வேடம் தாங்குமாறு அண்ணா அழைத்தார். அண்ணாவின் அழைப்பையேற்று சிவாஜி வேடத்தில், கணேசன் நடித்தார். அந்த நாடகத்திற்குத் தலைமை தாங்கிய பெரியார் அவர்கள் வி.சி. கணேசனை சிவாஜி கணேசன் என்று அன்பொழுக அழைத்துத் தட்டிக் கொடுத்தார். அன்று முதல் வி.சி. கணேசன் சிவாஜிகணேசன் ஆனார்.

"சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்" என்ற அந்தப் புரட்சிகரமான வரலாற்று நாடகம் தமிழகத்தில் பல இடங்களில் நடைபெற்றது. திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து 1949-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கண்ட அண்ணா அவர்களின் கலைத்துறை அணியில் சிவாஜியும் வீறுநடை போட்டார்.

கலைவாணர் என்.எஸ்.கே. அவர்கள், திராவிட முன்னேற்றக் கழக மாநாடுகள் அனைத்திலும் தனது வில்லுப் பாட்டு நிகழ்ச்சியைத் தொடக்க நிகழ்ச்சியாகக் கொண்டு கழகக் கொள்கை பரப்பிடும் பணிபுரிந்தார். நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி அவர்கள், நடிகர் திலகம் சிவாஜி, இலட்சிய நடிகர் இராசேந்திரன், நடிகமணி டி.வி. நாராயணசாமி ஆகியோர் திராவிடர் கழகத்திலும் பின்னர் தி.மு.கழகத்திலும் கொள்கை பரப்பும் கலை முரசுகளாகத் திகழ்ந்தார்கள்.

1953-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில்தான் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

1952-ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் வீசிய புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கழகத்தின் சார்பில் நிதி திரட்டி அந்தப் பணத்தைக் கொண்டு கைத்தறி வேட்டி, சேலைகள் வாங்கி ஏழை, எளியோர்க்கு வழங்குவதெனவும், இருபத்து ஐயாயிரம் ரூபாய் நிதி திரட்டுவதென்றும் அந்தப் பணிக்கு என்னைத் தலைவனாக இருக்குமாறும் கழகம் தீர்மானம் நிறைவேற்றியது.

நிதி திரட்டும் முயற்சிக்குப் பல இடங்களில் நான் எழுதிய "தூக்கு மேடை" நாடகம் நடத்தப்பட்டது. அந்த நாடகத்தில் பாண்டியன் என்னும் பள்ளி மாணவன் வேடத்தில் நானும்,

அபிநயசுந்தரர் என்னும் வேடத்தில் சிவாஜியும், பரமார்த்திகர் வேடத்தில் நண்பர் சி.வி.எம். அண்ணாமலையும் மற்றும் கழக முன்னணியினரும் நடித்தோம். மகாலிங்கம் என்ற இளைஞர் நடிப்பாற்றல் மிக்கவர். அவர்தான் கதாநாயகி வேடத்தில் நடித்தார். ஆடவர்கள் "ஸ்த்ரி பார்ட்" போட்டு நடிக்கும் கால கட்டம் 1952 வரையிலே கூடி நீடித்தது எனலாம்!

பழங்கால நாடக உலகில் எஸ்.ஜி. கிட்டப்பா வள்ளியாகவும், கே.பி. சுந்தராம்பாள் வேலன், வேடன், விருத்தனாகவும் நடித்ததாக நிகழ்ச்சிகள் உண்டு! சக்தி நாடக சபை என்ற பெயரால் சக்தி. கிருஷ்ணசாமி அவர்கள் நடத்திய நிறுவனத்தில் வி.சி. கணேசன், "நூர்ஜஹான்" வேடம் தாங்கிச் சபையோரை மயக்கத்தில் ஆழ்த்துவாராம்.

அழகுக் கிளி நூர்ஜஹானாகவும் நடிக்கத் தெரியும் - ஆத்திகப்புலி அபிநயசுந்தரக் கிழவனராகவும் நடிக்கத் தெரியுமென அறைகூவல் விடுத்த அந்த நடிகர் திலகம், கழக நிதிக்காக நடைபெற்ற எந்தவொரு நாடகத்திற்கும் தனக்கென ஊதியம் எதுவும் பெற்றதுமில்லை, கேட்டதுமில்லை. நான் கொடுத்ததுமில்லை.

கோயில்பட்டி வள்ளிமுத்து என்பவர் நெல்லை மாவட்டத்தில் சங்கரன்கோயிலில் எங்களின் நாடகத்தை நடத்தி நிதியளிப்பதாகக் கூறி வசூலான நாலாயிர ரூபாய் பணத்துடன் காணாமலே போய் விட்டார். நான், சிவாஜி, சி.வி.எம். அண்ணாமலை, அரங்கண்ணல், காஞ்சி சம்பந்தன், காஞ்சி கிருஷ்ணமூர்த்தி, எம்.என். கிருஷ்ணன், நம்பிராஜன், டி.என். கிருஷ்ணன் மற்றும் நாடகத்தில் பங்கேற்ற கழகத்தினர் பட்டினி கிடந்தது மாத்திரமல்ல; ரயிலில் திரும்பி வருவதற்கு வழிச் செலவு பணமும் இல்லாமல் திண்டாடித் தெருவில் நின்றோம்.

எங்கள் நிலையைக் கண்ட தூத்துக்குடி கே.வி.கே. சாமியும் தங்கப்பழமும் எங்களின் வழிச் செலவுக்காகத் தூத்துக்குடியில் அவசரமாக ஒரே நாள் விளம்பரத்தில் ஒரு நாடகத்தை நடத்தி அதில் கிடைத்த மிச்சப் பணத்தில் என்னையும் சிவாஜியையும் மற்றவர்களையும் வழி அனுப்பி வைத்தார்கள்.

அப்போதுதான் பராசக்தி படத்தில் நடிக்க சிவாஜிக்கு வாய்ப்புக் கிடைத்தது. பகுத்தறிவு இயக்கத்தில் ஈடுபாடு கொண்ட

நேஷனல் பிக்சர்ஸ் பெருமாள் அவர்கள் "பராசக்தி" திரைக்கதை வசனம் எழுதும் பொறுப்பை நான் ஏற்க வேண்டுமென்று வலியுறுத்தினார். இயக்குநர்கள் கிருஷ்ணன் - பஞ்சு இருவரும் ஒருவராக இருந்து என்னிடம் அன்பு காட்டுகிறவர்கள். அவர்களும் என்னை வலியுறுத்தினர். முதலில் நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமிதான் நடிப்பதாக இருந்தது. அவருக்கு வேறு படங்கள் இருந்த காரணத்தால் பராசக்தியில் குணசேகரன் வேடத்தில் நடிக்க சிவாஜியை ஒப்பந்தம் செய்தார்கள்.

அந்தப் படம் ஏ.வி.எம். நேஷனல் பிக்சர்ஸ் கூட்டுத் தயாரிப்பு! சிவாஜி இரண்டொரு காட்சிகளில் நடித்ததைப் போட்டுப் பார்த்து விட்டு, ஏ.வி. மெய்யப்ப செட்டியார் அதிருப்தி தெரிவித்து நடிகரை மாற்ற வேண்டுமென்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். நேஷனல் பெருமாள் அவர்களும், நானும், இயக்குநர்கள் கிருஷ்ணன் பஞ்சுவும் - ஏ.வி. மெய்யப்ப செட்டியார் கருத்தை ஏற்கவில்லை. "ஒரு அற்புதமான நடிகரை அவசரப்பட்டு இழந்துவிடக் கூடாது!" என்று திட்டவட்டமாகக் கூறினோம்!

தொடர்ந்து பராசக்தி படப்பிடிப்பு நடந்தது! எனக்கும் சிவாஜிக்கும் இருந்த நட்பு, யாராலும் விலக்க முடியாத பாசமாக உருவெடுத்தது! அந்தப் பாசம் எப்படிப்பட்டது என்பதை 1963-ஆம் ஆண்டு என் தாய் அஞ்சுகம் அம்மையார் மறைந்தபோது வெளியிடப்பட்ட ஒரு மலரில் சிவாஜியே வெளிப்படுத்தியிருக்கிறார்.

"சிறு வயது முதல் எங்களுக்குள் நெருக்கமான பழக்கம் உண்டு. இதற்கு எத்தனையோ காரணம். கலையோ, அன்போ, கொள்கையோ, குணமோ, எதுவோ எங்களை உயிராக இணைத்து வைத்திருந்தது. நாளடைவில் அது வளர்ந்து வலுப்பெற்றது! அவர்! அது யார்? வாய் நிறைய மூனா கானா - நான் இனிமையோடு அழைக்கும் அவர்தான்.

அந்தக் காலங்களில் இந்த இரண்டு பிள்ளைகளுக்கும் அஞ்சுகம் அம்மையார் அநேக நாட்கள் ஒன்றாகவே உணவு படைப்பது உண்டு. அப்போதெல்லாம் அவர்கள் பரிமாறுவதில் கொஞ்சம் பாரபட்சமாக நடந்து கொண்டதை நான் கவனிப்பதும் உண்டு. நல்ல பண்டங்களை ஒருவருக்கு அதிகமாகவும், ஒருவருக்குக் குறைவாகவும் போடுவார்கள்.

இப்படிச் செய்யலாமா? இது நீதியா? என்று நான் கேட்பேன்.

நீ செல்லப்பிள்ளை - உனக்கு அதிகம்தான் என்பார்கள் அந்தத் தாய்.

அந்தச் செல்லத்தை மறந்து விட்டுப் போய்விட்டார்கள். நான் என்றும் அந்த அன்புச் செல்லத்தை மறக்க முடியாது. எனக்கு அஞ்சுகம் அம்மையாரும் ஒரு தாய்!"

இது அந்த மலரில் சிவாஜி எழுதிய கட்டுரையில் ஒரு பகுதி.

பராசக்தி படம் வெளிவந்தவுடன் அதை எரிச்சலுடன் விமர்சித்துக் கண்டனம் எழுதிய தினமணிக் கதிர் ஏட்டில் **பரப்பிரம்மம்** என்ற தலைப்பில் அந்தப் படத்தை ஏகடியம் செய்து கார்ட்டூனும் வெளியிட்டார்கள்.

உடனே நான் "பரப்பிரம்மம்" என்ற தலைப்பிலேயே ஒரு நாடகம் எழுதி நாடு முழுதும் நடத்த ஏற்பாடு செய்தேன். அதில் நானும், நடிகர் திலகம் சிவாஜியும் கழக நண்பர்களும் நடித்தோம். அந்த நாடகத்தில் "சேரன் செங்குட்டுவன்" வேடத்தில் சிவாஜி நடித்தது இன்னமும் என் கண்முன்னால் நிற்கும் காட்சியாகும்!

கல்லக்குடி போராட்ட நிதி திரட்டுவதற்காக அந்த நாடகத்தைப் பயன்படுத்தினோம். இவ்வாறு கல்லக்குடி போராட்டம் 1953-ஆம் ஆண்டு நடைபெற்று நான் ஆறுமாதக் கடுங்காவல் தண்டனையைப் பெற்று சிறை புகும் வரையில் சிவாஜி கணேசன், கழகத்தின் வளர்ச்சிக்காகத் தனது கலைப் பணியை ஆற்றி வந்தார்!

அதற்கிடையே இருபத்து ஏழாயிரம் ரூபாய் புயல் நிதி திரட்டப்பட்டு அதற்குக் கைத்தறி ஆடைகள் வாங்கி வழங்குகிற விழா சென்னையில் நடைபெற்றபோது, அந்த நிகழ்ச்சிக்கு சிவாஜி கணேசன் அழைக்கப்படவில்லை. அவர் வெளியூரில் இருந்தபோது அவருக்குத் தெரியாமலே அந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டது. நிதி திரட்டும் பணியில் என்னுடன் பெரும் பங்கேற்றிருந்த சிவாஜி அந்த நிகழ்ச்சிக்கு வரவேண்டுமென்பதில் நான் கண்ணுங்கருத்துமாக இருந்தேன் என்றாலும் சிவாஜியை வராமல் செய்ய வேண்டுமென்பதில் அக்கறை காட்டியவர்கள் வெற்றி பெற்றுவிட்டார்கள்.

கல்லக்குடிப் போராட்டத்தில் ஈடுபட்டு திருச்சி சிறையில் இருந்த என்னை வந்து சிவாஜி பார்த்துவிட்டுப் போனார்.

என்னையும் அவரையும் சிறைச்சாலை ஆறுமாத காலம் பிரிந்துவிட்டதைப் பயன்படுத்திக்கொண்டு கழகத்திற்கு உள்ளே இருந்த சிலரும், கழகத்திற்கு வெளியே இருந்த சிலரும் தங்கள் முயற்சிகளை முடுக்கிவிட்டு - அவரைக் கழகத்திலிருந்து பிரித்துவிட்டார்கள்!

அவர் கழகத்திலிருந்து வெளியேற திருப்பதிக்குச் சென்று சாமி கும்பிட்டார் என்பதே பெரும் குற்றச்சாட்டாக அப்போது வெடித்தது! அந்தக் குற்றச்சாட்டுக்கு அன்றைய கனம் ஏற்றிப் பேசியவர்கள், கொள்கைப் பற்றால் கூட அல்ல, சிவாஜியின் மீதிருந்த பொறாமையால் அவரை வெளியேற்ற வெகுண்டெழுந்தனர்!

கட்சியிலிருந்துதான் வெளியேறினாரே தவிர, அண்ணாவின் அன்பு உள்ளத்திலிருந்து அவர் வெளியேறவில்லை! எங்களின் பாசம் மிகுந்த நட்பு, அந்த வெளியேற்றத்தால் வெட்டப்படவில்லை! அது தொடர்ந்தது - தொடர்ந்து கொண்டேயிருக்கிறது! இப்போது அவர் இல்லை; அந்தக் கலையுலக இமயம் சாய்ந்துவிட்டது - நானிருக்கிறேன். நானுள்ள வரையில் அந்த நட்பின் ஈரம் காயப்போவதில்லை.

அன்புள்ள,

மு. கருணாநிதி

(23-07-2001)



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

செப்டம்பர் 2022